No. 1001.

ஓம்

வேத புருஷாய நம

The Rig-Veda-Samhita.

இருக்கு வேத சங்கிதை.

இது

குன்னூர், ஆநந்தாச்ரமத்து,

சிவஞ்தியாநாநந்த மஹரிஷி

மொழிபெயர்த்தியற்றியது.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றின்
மிகைநாடி மிக்க செயல்—திருக்குறள்.

'What can be more tedious than the Veda, and yet what can be more interesting, if once we know that it is the first word spoken by the Aryan man?'.—MAX MULLER.

'The great interest of the Rig-Veda is, in fact, historical rather than poetical.'—GRIFFITH.

'True and honest scholars whose conscience tells them that they have done their best, and who care for the subject on which they are engaged more than for the praise of benevolent or the blame of malignant critics, ought not to take any notice of merely frivolous censure.'—MAX MULLER.

PRINTED AT THE

FRASER PRESS, COONOOR.

1918.

All Rights Reserved.

புத்தகம் வேண்டுவோர், வேதபிரசாரகர், ஆநந்தாச்ரமம்,
குன்னூர், நீலகிரிமலை, பென்று எழுதிக்கேட்கவும்.

PREFACE.

M. R. Ry,

Rao Bahadur, T. Sundara Row Avl.,

B. A. I. S. O.,

(Retired Deputy Collector,)

BEULA, COONOOR.

This Samhita comprises the first eight Ashtakams of the Rig-Veda, each Ashtakam consisting of 8 chapters. Others will follow in due course.

The book supplies a longfelt want and enables a Tamilian who is not a Sanskrit scholar to read the Vedas. It contains a literal metrical translation of the hymns as well as a prose rendering of the same with explanatory remarks by the author on the different readings of the Sanskrit Text and on the commentaries, Indian and European. The work is appreciated by Tamil Scholars and the verses are easy and free from conventional pedantry. There are no signs of difficult labour and the author appears to work by inspiration if he can be said to *work* at all. Though these verses do not conform to the Vedic tunes, they can be chanted like the Thevaram and the Thiruvaimoli prabandhams.

The collection will be a great help to those who are religiously inclined and will exercise their devotional instincts, while it may have the opposite effect of disillusion on the critical reader who is cosmopolitan in his taste. In either case the book will be a valuable acquisition to any library.

It must be very interesting to the Historian and philosopher to trace the evolution of the Hindu Religion and philosophy from these hymns onward to the Upanishads and to find out whether there is any connection between them and the old Egyptian, Chaldean, and Jewish records. It is also interesting to note how far our present customs, social and religious, were extant in the period of the Rig-Veda.

It is often thrown out as a reproach by other religionists that the non-Brahman is debarred from reading the Vedas and acquiring the spiritual merits infused by them. But how little of the Veda does the average Brahman read and how much less does he understand of what he reads! At this time when the study of Sanskrit is so much neglected, both the Brahman and the non-Brahman must welcome a work like this.

An attempt was made in Bombay some time ago to give prose translations of the Vedas in Mahratti, Hindi, Guzarati and English. But the attempt appears to have been given up after a time. Those translations did not reflect the personality of the translators, while this does, and it is by no means improbable that it will eventually obtain rank as a classic like Kamba-Ramayanam.

Beula, Coonoor,
29th October, 1918.

T. SUNDARA ROW.

Janopakari—வேதங்கள் சம்ஸ்கிருதத்திலேயே யிருப்பதால் அவற்றை நம்தமிழர்கள் படித்தறிவதில்லை. இக்குறையை நீக்கும் பொருட்டுக் குன்னூர் ஆநந்தாச்சிரமத்திலுள்ள சிவத்தியாகநந்த மஹரிஷிஎன்பவர் இப்போது இருக்குவேதத்தைத் தமிழ்ச் செய்யுள்ரூபமாக எழுதி வெளியிட்டு வருகிறார். செய்யுளுக்குப் பொருளும் குறிக்கப்பட்டிருக்கின்றது. வேதத்தைத் தமிழில் படிக்க விரும்புவோருக்கு இப்புத்தகம் மிகப்பயனுள்ளதாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

Janabhimani—வேதங்கள் ஸம்ஸ்கிருதத்திலிருப்பதால் ஜனங்கள் வாசித்துப் பயனடைவது முடிவதில்லை. இங்கிலீஷில் அவை மொழிபெயர்க்கப்பட்டிருப்பது இங்கிலீஷ் படித்தவர்களுக்கு ஸாதகமாயிருக்கிறது. தமிழ்மட்டும் தெரிந்தவர்கள் வேதத்தை யறிய முடியாமலிருக்கும் குறையை நீக்கவேண்டிக் குன்னூர் ஆநந்தாச்சிரமத்திலுள்ள சிவத்தியாகாநந்த மகரிஷி பென்பார் இப்போது ரிக்வேதத்தைத் தமிழில் செய்யுள்ரூபமாக மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறார். செய்யுளில் தேர்ச்சியில்லாதவர்கள் அதை வாசிப்பதில்சிரமம் அடையாதபடி வசனநடையில் செய்யுளுக்குப்பொருளும் எழுதியிருக்கிறார். தமிழில் வேதம் வாசிக்க விரும்புகிறவர்களுக்கு இந்தப்புஸ்தகம் பயன்படும்.

NOTICE.

The Rig-Veda-Sambita, Ashtaka I in Tamil verse with an elaborate and useful commentary can be had in calico marble binding for Rs. 10, postage Extra. For Subscribers Rs. 8. As only 50 copies are available, thosethat indent for the book are requested to order for it early.

Please apply to :—

THE MANAGER,

The Vedic Bureau, Anandasrama,

Coonoor, Nilgiris.

முன்னுரை

மலர்தலே யுலகிற் பல்கலேயுணர்ந்த புலவர்களும் நாவலர்களும் நிறைந்த இப் பரதகண்டத்து, இவவேதப்பணி எஞ்சிநமேற் பொருந்தியது யாஞ் செய்த புண்ணியத்தாலன்று. எங்குடி செய்த புண்ணியத்தாலெனின் ஒரு வாறு ஒக்குமாயினும, நந்தமிழ் மக்களின் தவப்பயனே பெரியதாம்.

மேலும, இவவேதக்கிளவியைத் தமிழ்ப்படுத்துமாறு ஊக்கிய எமது குரு நாதனே வணங்குவது எம் முதற்கடமையாகும். பின்னர் இப்பணிகொத்த ஸாயணபாஷ்யமின்மையைக் குறிப்பாலுணர்த்த உணர்ந்து வாங்கியளித்த மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ்பஹதூர் V. கிருஷ்ணஸ்வாமி நாய்க்கரவர்களது கால வுதவி என்றும் போற்றத்தருந்தது. வேதமொழிப்பெயர்ப்புக்கு உதவிசெய்யுஞ் சக்தியின்மையைக் குறித்தும்வழிகாணுமையைக்குறித்தும்மி சனப்பதிவாகை,மைசூர் பூதக்கோட்டை யென்னும் இரண்டு ராஜாங்கங்களும் முறையே யெழுதி விடுதலாகவும், வேதத்தை மாதப்பிரசுரமாக வெளியிடக கருதியுள்ளதை வெளிப்படுத்தியனான்றே தமிழ்நாண்டு பிரதியெடுத்துக் கொள்வதாக வெழுதி, எமது நன்முயற்சிக்குப் பின்னு முற்சாக மூட்டியருளிய, கொடை மடக் கல்வியாளராயிருந்த பரஸ்கரஸேது மன்னனின் புத்திரரும், சட்டநிருபண சபை மெம்பரும், தமிழுக்குத் நாயகம்போன்றவருமான ஸ்ரீமான் ராஜராஜேசுவர முத்துராமலிங்கவேதுபதியவர்களின் அன்பிற்குத்தமிழுலகம் பெரிதுங் கடப்பாடுடையது.

'நிகம்மாறு வேண்டாகடப்பாடு,' என்னும் முதுமொழிக்கிணங்க உதவியனுப்புவதாக வுதாரசிந்தையோடெழுதிய மதுரை ஸௌராஷ்டிரகனவான் மகா-ரா-ரா-ஸ்ரீ L. K. துளஸிராம் அவர்கள் B. A. B. L. இன் உதவியுரையும் போற்றத்தகுதாம்.

பின்னர் எம்மை நேரிலறிந்தும் பேர்மாத்திரையானறிந்தும் எமது முயற்சியைப் போஷித்து எம்மைக் கவுரவித்த கல்வியபிமானிகளின் அன்பிற்கு யாம் எழுமையும் நன்றி யறிவுடையேம். எம் வேதப் பிரசுரத்துக்குச் சந்தாதாராராகச் சேர்வதாக ஆர்டர் அளித்துப் பின்னர் வி. பி. க்களை மறுதளித்தவர்களும் எமது மனவுறுதியைத் திரப்படுத்தியவர்களாதலின் அவர்களுக்கும் எமது அன்பார்ந்த வந்தனம். நூற் பெருமையை யுணர்ந்து நூனித்துக்கூறி பதினை யாஙகாங்கு சீர்ப்படுத்துஞ் சிறப்பிற் பெரியாரையும் பெரிதும் வாழ்த்துவாம். எம்மை யபிமானித்து எமது புத்தகத்துக்கு மதிப்புரை பெழுதிய, லோகோபகாரி, செந்தமிழ், ஜனபிமானி, ஜனோபகாரி, வர்த்தகமித்திரன். பெண்கல்வி, இவற்றின் பத்திராசிரியர்களுக்கும், தனியபிப்பிராயங்களளித்த பல வித்வசிரோமணிகளுக்கும், எமது அன்பார்ந்த வந்தனம்.

கடைசியாக, இவ்வூரின்கண் எம்மோடு பலகாலும் பழகியும் எம்மிடத்துள்ள குறைகளை முற்றுங் கவனித்துணர்ந்தும் எம்மைப்பற்றிய கவுரவமான அபிப்பிராயத்தை வெளியிட்டு ஆங்கிலத்தில் ஒரு முகவுரை எழுதித்தந்தவரும், தென்னிந்தியாவில் கல்விக்களஞ்சியமெனக் கீர்த்தியோங நிறுவிய ராவ்பஹதூர் கோபாலராவ அவர்களது ஜேஷ்ட புத்திரரும், ரிடையர்ட் டிப்டி கலெக்டரும், உலகவல்லலகளாகிய சுமையையிறக்கிய இடமெ

னப் பொருள்படும் பியூலா (Beula) என்னும் ஆச்சமவாஸ யோகியுமாகிய
மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ்பஹதூர் T. சுந்தரராவ் அவர்கள்,
B. A. I. S. G., வினிட்டத்து யாம் என்றும் கன்றி பாராட்டற்குரியேம்.

இந்நூல் எமது பல பணிகளில் ஒன்றாக விருப்பதாற் பல பிழைகள் எற்படா நின்றன. அவற்றைக் காணும்போதெல்லாம, புத்தகத்தினிடையிடையே பிழை திருத்தமெனக் காட்டியுள்ளேம் அவற்றைக்கண்டு இந்நூலப்படிப்பவர்கள் அங்காங்கு திருத்திக்கொள்வார்களாக.

எல்லாம் வல்ல கடவுள் இவ்வேதத்தை நம் இந்தியமொழிகளெல்லாவற்றிலும் மொழிபெயர்த்து வெளிக்கொணருமாறு அங்காங்குள்ள வித்வத் பக்தசிரோமணிகளைத் தூண்டி ஏவுவாராகவென்ற பிரார்த்தனையைச் செய்து இம்முன்னுரையை முடிப்பாம்.

வேதம் வாழ்க. வேதத்தைப் பின்பற்றிய ஆகமம் வாழ்க. வேதாகமத்துணிபிரண்டல்ல வொன்றென்ன வுணர்ந்து அநுபூதி வாய்ந்த ஸமரஸம் பெற்ற அடியார் வாழ்க. எம்மையும் இவ்வேதப்பணுவலையும் ஆதரிக்கும் பெரியார் என்றென்றும் வாழ்க.

வேத பீரோ, ஆநந்தாச்ரமம்,
குன்னூர், நீலகிரி.
சாலிவாகனசகம், 1841,
காளயுக்தி-ஞ ஐப்பசி-மீ 16-உ,
1—11—1918.

சிவத்தியாநாநந்த மஹரிஷி.

ஸ்ரீ லோகமாதா.

புனலூரிலிருந்து காளயுக்தி-ஞ சித்திரை-மீ முதல் வெளியாகிறது மாந்தருக்குவேண்டிய அருமையான விஷயங்களும், பிறபாஷை மொழி பெயர்ப்புக்களும், நாவல்களும், விவேகம், அநுபவம் முதலியவற்றில் தேர்ந்தவர்களால் எழுதப்படுகிறது. அழகான தமிழ் நடையும், புதுமையான விஷயங்களும், ஸ்ரீலோகமாதாவில் அன்றி வேறெந்தப் பத்திரிகையிலும் பார்க்க முடியாது. நாள்தோறும் நல்ல அபிப்பிராயங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

வருஷ சந்தா ரூபாய் ... 1—8—0

விலாசம் :—மானேஜர்.
ஸ்ரீலோகமாதா,
புனலூர். (திருவாங் கூர்.)

ரிக்வேதம் (தமிழ்ச்செய்யுள்) மூலமும், **'நவநீதம்'** என்னும் உரையும் மாத ஸஞ்சிகையாக வெளிவருவது. வருஷசந்தாரூபாய் 6. பல பெரியார்களுடைய முகவுரை யபிப்பிராயங்களுடனே கூடிய முதலுவ்ட்டகம் தயாராய் விட்டது.

காலிகோ மார்பில் கட்டட்டம் விலை ரூபாய் ... 10—0—0
வருஷ சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் ... 0—8—0
50 காப்பிகளே யிருப்பதால் உடனே யார்டர் செய்யவும்.

மேல்விலாசம் :—மானேஜர்,
வேதபீரோ, ஆநந்தாச்ரமம்,
குன்னூர், நீலகிரி.

V

வேத உரைகாரர் வரலாறு.

நிகண்டுவேதத்துக்கு வடமொழியில உரை யெழுதினவர் இருவர் அவர்களில் முந்தியவர் யாஸ்கராம். இவரது நூற்று நிருக்தம் என்ற பெயர் வழங்கும். இவரே, வேதப்பதங்களுக்குள் இடுதறி காரணங்களோ விளக்கி வேதமானது நிர்த்தகக் கினவி யாகாதபடி முதன்முதற் காத்தவர். இவருக்குப்பின் பெரும்பாஷ்யஞ் செய்து சிறந்தவர் ஸாயணராம். இவர், மாதவ ரென்ற பெயருடன் விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்து அவ்வரசர்களுக்கு மந்திரியாயிருந்து பின்னர் சிருங்கேரி மடாதிபதியாகி இரண்டாவதுசங்கரர் என்னும்படி சிறந்து நின்ற வித்தியாரண்யஸ்வாமிகளின் தம்பியாவர். இவர் வீரபுக்க மகாராஜாவின் மந்திரியாக விருந்தாரென்று ஸாயணபாஷ்யம் கூறும். இவர் கி.பி. 1387-ஞ் இறந்தவரென்னும் செந்தமிழ்ப் பத்திரிகை. இவர் எல்லா வேதத்துக்கும் உரை யெழுதியவர். மேனாட்டில் வேதத்தைப் பரிப்பித்த மோட்ச மூலர், 'ஸாயணருரை யில்லாவிடில் மேனாட்டு வடமொழிப் புலவர்கள் வேதத்தை யறிவது ஒரு சிறிதும் இயன்றிராது.' என்று எழுதுவாராயின் இவர் பெருமை யாம் கூறுந்தரத்ததன்று. வேதத்துக்கு ஆர்யஸமாஜ ஸ்தாபகரான தயாநந்தஸரஸ்வதி ஸ்வாமிகள் எழுதிய ஸத்யார்த்தப்பிரகாசிகை என்ற வுரைவிளக்கமுமுண்டு.

மேனாட்டாரைகளில் இந் நூலாசிரியர்க்குப் பெரிதும் பயன்பட்டது, (Griffith) கிரிபித்தென்பவர் செய்யுள்ரூபமாக ஆங்கிலத்திற் செய்துள்ள மொழி பெயர்ப்பேயாம். இந்நூலாசிரியராகிய Ralph. T. Griffith, M. A. C. I. E., என்பவர் ஆங்கிலதேசப் பிறந்து இந்தியாவுக்கு வந்து முதலில் வடவிந்தியாவிலுள்ளவாராணஸி கல்லூரிக்குத் தலைவராயும், பின்னர் ஆக்ரா அயோத்தி நிலையமாகாணங்களின் கலவி யிலாகா விசாரணைத் தலைவராயுமிருந்து உபகாரச்சம்பளம் பெற்றுத் தென்னிந்தியாவிலுள்ள நீலகிரி ஜில்லாவிற் கோத்தகிரி யென்னுமிடத்தில் வசித்துத் தமது வாழ்நாளைப் போக்கிய மகாஞானி. இவர் மதத்திற் கிறிஸ்தவராயிருந்தும் இவரது இந்து மதநூலபிமானம் வியக்கத்தக்கது. அவருடலைத் (Cremation) தஹநஞ் செய்விக்கச் சொன்னதன்பேரில் தஹநஞ் செய்வித்தார்களென்ப. இவர் குடும்பத்தார் இன்னு மிங்குளர். மோட்ச மூலர் (Maxmuller) பொறுக்கியெடுத்த சில சூக்தங்களுக்கு விஸ்தாரமான வுரை யியற்றியுள்ளார். அதுவுமன்றி யவர் எழுதிய புராதன ஸம்ஸ்கிருத பாஷையின் சரித்திரமென்னும் நூல், எல்லாக்கல்வியாளரது புத்தக சாலையிலுமிருக்கவேண்டியது அவசியமாம்.

பின்னர் (Muir) மூர் (Renfev) பென்வே, (Ludwig) லட்விக், (Reigaigne) பெர்கேன், இவர்கள் வேதவிஷயமாகச் செய்த வியாக்கியானங்கள் கருதத்தகவை. (Wilson) என்பவர் ஸாயணபாஷ்யத்துக்குச் சரியான மொழிபெயர்ப்பொன்று எழுதி யிருக்கிறதாகத தெரிகிறது. அப்புத்தகம் இப்பொழுது அச்சிலில்லை இவ்வில்ஸனே கிரிபித்துக்கு வேத உபாத்தியாயனத்தெரிகிறது. இந்நூலில் (Griffith) கிரிபித்து என்று சொல்லாமல் மேனாட்டாசிரியரென்று இவர் பெயர் அடிக்கடிகுறிக்கப்பட்டுள்ளது. அதன் காரணம் தமிழ் எழுத்துக்களில் அவரது பெயரெழுத்தின் ஓர் ஒலி யமைக்திராமையாம். உண்மையில், இம்மேனாட்டாசிரியரின் வியாக்கியானங்களிற் சிற்சில இந் நூலாசிரியருக்கு அத்தணை பொருத்தமினமையுண்டெனினும், அவரது சொல்லகாதியும், சந்தஸகாதியும், சூக்த வட்டவணையும் செய்த வுதவி செப்புந்தரத்தன்று.

இவ்வேதத்துக்கு அநுக்கிரமணிகைச் செய்தவாகள், சௌநகர் காத்தி யாயனர் என்னுமிருவர்களாம். அவர்களது பாகுபாட்டு முறைகள் இதன்டி யிற் குறிக்கப்படுகின்றன.

சௌநகர் அநுக்கிரமணி.

மண்டலம்.		அநுவாகம்.	சூக்தம்.
1-வது	சதர்ச்சிமண்டலம் ...	24	191
2-வது	கார்த்ஸமதமண்டலம் ...	3	43
3-வது	விச்வாமித்திரமண்டலம்	5	62
4-வது	வாமதேவமண்டலம் ...	5	58
5-வது	ஆத்திரேயமண்டலம்	6	87
6-வது	பாரத்வாஜமண்டலம் ...	6	75
7-வது	வாஸிஷ்டமண்டலம ...	6	104
8-வது	ப்ராகாதமண்டலம்	10	92
9-வது	பவமான ஸௌம்யமண்டலம்..	7	113
10-வது	(பேர்தெரியவில்லை) ...	12	191
	ஆக மண்டலம் 10-க்கு அநுவாகம் ...	85	சூக். 1016

காத்தியாயனர் அநுக்கிரமணி.

அஷ்டகம்.		சூக்தம்.
1-வது	... ...	121
2-வது	... ...	119
3-வது	... ...	122
4-வது	... ...	140
5-வது	... ...	129
6-வது	... ...	124
7 வது	... ...	116
8-வது	... ...	145
	ஆகஅஷ்டகம் 8-க்குச் சூக்தம் ...	1016

இன்னெரு பன்னிரண்டு சூக்தங்களும் உண்டு. அவற்றைச் சேர்த்து 1028 ஆகும். இவற்றின் வரலாற்றைப் பின்னர் விவரிப்பாம். காத்தி யாயனர் பாகுபாட்டின்படி அஷ்டகம் அத்தியாயம், வருக்கம் என 3 பிரிவு களுண்டு. அவற்றின் அட்டவணை ஒவ்வொரு அஷ்டகத்தோடும் சேர்க்கப் படும். சூக்தம் ரிக்கென்னும் வகுப்பு இரண்டு அநுக்கிரமணிக்கும் பொது வாம். சூக்தம் பதிகம் போன்றது. ரிக் அப்பதிகத்திலுள்ள தனிசெய் யுள். போன்றது ஆதியில் ரிஷிகள் பாடிவைத்த பல ரிக்குக்கள் அடங்கிய சூக்தங்களைத் திரட்டியே, சௌநகரும் காத்தியாயனரும் அநுக்கிரமணி செய்தார்களென்க.

இந் நூலின் உரை, வடமொழி மதத்தைப்பற்றி, இந்நூலாசிரிய ராலேயே எழுதப்படுகிறது. பல உரை நூல்களையுமாராய்ந்து அவற்றி லுள்ள ஸாரங்களை வெண்ணைபோலதிரட்டி இவ்வுரை யெழுதப்பட் டிருப் பதால், இதற்கு 'நவநீதம்.' என்று பெயரிட்டுள்ளார்.

சிறப்புப் பாயிரம்.

I. காசி வாசி–ஸ்ரீமத். ஆதிமூர்த்தியவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

1. கமல மலரோ னில்வுலகிற் கதிக்க வுதித்தோர் முனிவரனும்
அமல மொழுகு நற்றமிழுக் கனிமை பளிப்பா னருமறைகள்
தமைநற் செந்தேன் கற்கண்டு தனிமுப் பழங்க ளொடு சமைத்திட்
டமையப் படைத்தா னருட்பாவா லறிஞ ரருந்த வதுதினமும்.

2. புவியிற் பலவாங் கலைகளெலாம் புரிட வடிவாய்ப் புனை யோகத்
தவமுற் றுயரு மலையேறித் தமிழுக் கருமா மறையனைத்துங்
கவியிற் சுவையிற் பொருளமைப்பிற் கடலி னமிழ்திற் கணித்தனனால்
உவமைக் கொருவ ரெனப்பில்லா ரெளிராசந்தத்துறு சிவனே.

II. சென்னை புரிவாசியாகிய திருக்கோண மலை ஸ்ரீமத். த. கனக சுந்தரம் பிள்ளை யவர்கள் B. A., இயற்றியது.

சந்த விருத்தம்.

1. முத்து புக ழாரியர் மொழிந்த முதுவேதம்
நற்று தமிழாக நனி யாத்து நமக்கீந்தான்
இத்து வளர் சற்று செறி எகன் மிகு குன்றூர்
வற்றுசிவ த்யாகனென மிழு முனி வரனே.

2. தக்க பொருண் மிக்க வுயர் சந்த செனு முணமை
நிகரு முதல் வேத மிது காறு மெமர்க்காகா
தொக்க வொளித் தோறுவது மின்று டெந் தொல்கிப்
புக்க புலம் பின்று முதற் பொன்றிவிடு மன்றே.

3. அத்தணரு மாரியரு மன்று முதலின்று
மத்தனமா வைத்திரு மாமறையி னுள்ளம்
சததனவு குன்றைமலை வத்த சிவதயனி
தந்த தமிழ்நூற் புலனுர் தாமு மறிவற்றே.

III. குன்னூர் S.M.R. Bank ராமலிங்கம் பிள்ளை யவர்கள் இயற்றியது

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

1. சுந்தரஞ் சேர் மொழிபெயர்ப்புஞ் சுவைதிகழு மொழியமைப்புஞ்
சொற்க ளெல்லாங்
கொந்தலர்க்கம் பகரணப் பலபொருளைக் கொடுத்தொளிருங் கூறு
பாடும்

முந்துமொரு நூலிதைப்போ லில்லையென வெல்லாரு மொழிந்து
நிற்பச்
செந்தமிழ்ச்சிந் தாமணியாய்ச் சிறப்பித்தான் சிவத்யாநா நந்தச்
செல்வன்.

2. பரம்பரையாய்த் தமிழ் படித்தார் மனமிகவுங் களிகூரப் பண்பு நாட்டிப்
பெரும்புவிக்கோ ரணிகல்மாய்த் தமிழ்ப்பாவால் வேதமதைப் பிறங்க
வைத்தான்
நரம்பெறுமன் மதுரமொழிச் சல்லாபன் சொற்பலிதந் தழைந்து
நிற்போன்
பொருந்துறுமோ வேதமது மற்றவருக் கென்றிருந்தார் போக்கைத்
தீர்த்தோன்.

3. இன்னநாட் டினிலெவரே யிதுகாறும் வேதமதை யெமக்குச்
சொன்னர்
முன்னதது முன்னதெனும் வெளிற்றுரையே பலநாளும் மொழிந்து
நின்றோரும்;
அன்னதோ ரவிவேகக் கோதுரையின் முட்டறுத்தா னறிஞர்யாரும்
உன்னரிய பாக்கியத்தை யிருகரத்தாற் பெற்றனரென் றுரைக்க
மாதோ.

Opinions :

1. Swami Vedachallam, Samarasasanmarga Nilayaguru, Pallavaram, writes:—

Received with thanks your Vaingkataramanam and The Rigveda Parts, 2, 3, 4, & 5. Really your Tamil Poems are admirable and you seem to be a good Siva Bakta for whom I have the greatest veneration and regard. You have also a very good command of the Tamil Language: as such you can render a great service to our sweet Tamil.

2. Mr. P. Subrahmanya Aiyer, Lake-side, Madras, writes:—

To-day when the Vedic literature, though venerable as ever, has ceased to offer solace and inspiration to suffering millions, ignorant as they are of its language; when the western Scholars alone—all honour be to them—have taken the trouble of explaining our religious literature, imperfectly of course owing to their lack of faith in it, and still more because of their defiance for such accredited scholars as the great Sayana and others; when the weight of controversial religious literature and meaningless babbling for reforms, embarass every sensible man, your translation of a literature which needs no expatiation upon it, marks, I say with truth, a red-letter day in our national history.

3. Vartaka Mitran: வேதத்தைத் தமிழர் படிக்கக் கூடாதென்றிருந்த தடை யிதன்மூலம்மா யொழிந்தது.

ரிக் வேதஸம்ஹிதை.

உ

ஓம்! வேத புருஷாய நம :

இருக்குவேத சங்கிதை.

காப்பு.

வேதப் புருடன தடியிணை தொழுபவர்
ஏதப்படுவதி லெனு மறைமொழியே.
ஓதப்பிரணவ மறையினை யுணர்பவர்
மேதைப் புலவர்க ளெனுமிறைமொழியே.

(இ-ள்.) வேதபுருஷனது உபயபாதாரவிந்தங்களையும் வணங்குவோர் துன்படையாரென்று மறைமொழிகூறும். யாவராலும் ஓதப்படும் பிரணவ மந்திரத்தினுண்மையை யுணர்ந்தவர்கள் ஞானவான்களாகிய தேவராவாரென்று நிறைமொழியாகிய வேதங்கூறும். அதனைப் பிரணவத்தையும் வேத புருஷனையும் இந்நூல் இனிதின் முடியுமாறு கருதுவாம்.—(எ-து.) பிரணவ மறையினுண்மையினை அஷ்டாதசரஹஸ்யம், உபதேசவுண்மை உபநிடதம் ஆகியநூல்களிலும் இவ்வாசிரியரது திருஞானமணிமாலை 9-வது பாட்டிலும் நோக்குக. அ, பண்டறிசுட்டு.

நூன்முகம்.

1. நீது பயிலாத குரு வோது மொழி கொண்டே
யாதமிலி யாஞெருவ ஞர்ந்து வலியாலே
வேதமெனு ஞானமொழிக் குன்றை விரைந்தேற
லோதுவது கையறையன் வான்றெடுத லொக்கும்

(இ-ள்.) குற்றமற்ற அருட்குருவின்மொழிப்படி ஆதாவில்லாத யான் மனோவலியினால் வேதத்தைப்பாடுவேனென்றெண்ணித் தொடங்குவது கையிலாதான் வான்றெடுவதனையொக்கும்—(எ-து.) நீதுபயிலாதகுரு வென்றார் அப்பிராகிருதகுருவானதுபற்றி. என்? குருவெனத்தூலத்துள் வாழ்கின்ற பேரைக்குறிக்கொள்ளுமியல்பு, இந்நூலாசிரியர்க்கின்மையால்.

2. பண்டிதர்கள் விண்டுபுகழ் சாயணரைப் பண்டு
மண்டி யுரைகூற விடைதந்தவர்க ளியாரென்
றண்டியுரை மண்டில மிதைய விதில்யானுங்
கொண்ட துணிவென்னை? யெனைக் கோதெனக்கொளாரே.

(இ-ள்.) பண்டிதர்கள் உயர்வாகக் கொள்ளும் சாயணசாரியாரையே உரையெழுதியதற்காகக்கடிந்துகொள்ளுவார்கள் இப்பாரதவருடத்தோராயின் எனதுணிபுதான் என்னை? ஆயினும் என்னையும் தள்ளிவிடார்கள் —(எ-து.) பாரதவருடம், பரதகண்ட மென்பன, இந்தியாவின் பரியாயநாமங்கள்.

நூன்முகம்.

3. மேற்குறையுந் தாட்டிகர்கள் வேண்டி யகராதி
யேற்கவமைத் தெம்மறையை யெங்கணும் விரித்தார்
பாற்கா ணுத்தே யொளிருஞ் பாரதவருடத்
தார்க்கு வல்லப் பன்மொழியி லாக்குத லகாதே!

(இ-ள்.) மேஞட்டார் (St. Petersburg Lexicon.) வேத அகராதி யமைத்து நம்வேதங்களை இங்கிலீஷ், லத்தீன் முதலிய பாஷைகளிற் பா டியுள்ளபோது இப்பாதகண்ட பாஷைகளில் செய்யக்கூடாதென்ப தென்? இது பெருங்கைப்பை விளக்கின்றது—(எ-று.)

4. கம்பனெனும் வம்புன்மொழிக்கண்ணும் பலருற்ற
மம்புவி யுரைத்தகவி யார்ந்த விடமீதாற்
றெம்பு சிறிதேனு மின்றித் தீயசொற் புகுத்தி
வம்புபெறக் கூறுமென்றன் வார்த்தை யிது வொன்றே?

(இ-ள்.) கம்பன் கவிக்கும் நூறுகுற்றங்காட்டிய கவிகள் பழகிய வித்தேசத்தே ஒருயோக்கியதையு மில்லாதான் யான்சொல்லும் இம்மொழி யை ஒருபொருட்டாக வெண்ணி அதனைப் பெரியோர் பரிசிலிப்பார்களா? மாட்டார்.—(எ-று.)

5. குற்றமுணர் மாந்தர்தமக் குற்றகுணந் தோன்று
வற்றெனி லென்மாற்றம திலற்பமெலா நீக்கி
முற்று குணமுள்ளவையே மூதறிஞர் கொள்ளு
ஞற்ற வெனதிச்செயலுக் கொத்தபலன் முற்றும்.

(இ-ள்.) தோஷக்ஞர்களுக்குக் குணந்தோன்றுது. அதனாற் பெரி யோர் இதிலுள்ளகுணத்தை மாத்திரங் கிரகிப்பார்களாயின் எனது இவ்வே லை ஸபலமாகும்—(எ-று.)

6. அந்தணரோ டல்லவர்க ளாடியு ணுணர்ந்தே
நந்துறும் வேதப்பொருளோ ன்மையி னடைவான்
முந்துற வுரைத்த கவியார் நிறைமொழியை
யிந்த வுலகத்தவர் விருந்தென நுகர்வார்.

(இ-ள்.) அந்தணரு மல்லாதவரும் தெளிவாகவுணர்ந்து வேதப்பொ ருளோ ன்கடையும்பொருட்டுப் பாட்டும் வசனமுமாகச் செய்த விந்நிறை மொழியை, இவ்வுலகத்தவர் விருந்துண்ணுவதுபோலப்படிப்பார்—(எ-று.)

வேதமானதுபற்றி நிறைமொழியென்றார். நுகர்வாரென்றது செவி யுணவாகையால்.

நூன்முகம்.

7. அங்கிலநா டென்றதவ மன்றுயிர்த்த தென்ன
மங்கலிலா நற்புகழிற் கிரிபித்தெவு ஞானி
தங்கியுறை நல்லிடத்தின் வாடையெனத் தாக்கிச்
செங்கலி விப்பணி தருகிற் செப்புவது மென்னே!

(இ-ள்.) ஆங்கிலதேசஞ் செய்ததவம் பலித்த தென்னும்படி தோன்றி, வடமொழிநன்குணர்ந்து வேதங்களையெல்லாம் மொழிபெயர்த்துள்ள கிரிபித் (Griffith.) தென்னும் ஞானி வசித்திருந்த கோத்தர்கிரி யானுறையும் நன்னூருக் கடுத்ததாதலால், அவ்விடத்துக்காற்றுவீசி என்னை இத்தொழில் செய்யுமாறு தூண்டிற்று—(எ-று.)

8. செந்தமிழு மாரியமுஞ் சேகரன தன்பி
னந்துமொழி யென்பதுல கோரும்வகை நந்தத்
தந்தவென தித்தமிழக் கேள்வியினைச் சந்த
முந்துறு முழுமுதலு மோரணியா மோயும்.

(இ-ள்.) தமிழும் ஸம்ஸ்கிருதமும் கடவுளுக்கு ஒத்த அன்புவாய்ந்த பாஷைகளென்பதை யுலகோர் அறியும்படி யான்செய்த இந்தத் தமிழ்வேதத்தை முழுமுதற் கடவுள் ஒரு ஆபரணமாகத்தரிப்பார்.— (எ-று.) மோயும் தாங்கும், திசைச்சொல். தமிழக்கேள்வி, தமிழிற் செய்யப்பட்ட வேதம்.

நூல்.

முக்கிய குறிப்பு:— வேதத்தின் பொருள் கூறுமானவரையிற் கெட்டாமற் பாட்டின்கண்ணமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு நூலை யொருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு கொண்டுவரும்போது அந்நூலின் முழுப்பொருளும் வருவதுதூர்லபம். ஆனதுபற்றி உரை பெரும்பான்மை வடமொழி வியாக்கியானங்களுக்கிணங்கவும், வடநூலின்மூலபதங்களை யங்ஙனேயமைத்தும், எழுதப்படுகிறது. இவ்விரண்டையும் ஒத்துநோக்கிப்படித்தால் வடமொழிரிக்குக்களின்பொருள் நன்குவிளங்கும். பலபெரியோரின் இச்சையிவ்வகையிருந்தகால் இப்படிச்செய்யலாயிற்று.

இருக்குவேத சங்கிதை.

முதல் மண்டலம்.

இருக்குவேதத்தில் 10 மண்டலங்களுண்டு ஒவ்வொரு மண்டலத்திலும் பல அநுவாகங்களும் ஒவ்வொரு அநுவாகத்திலும் சில சூக்தங்களுமுண்டு. இம் மண்டலத்திற்குச் சதர்ச்சீமண்டல மென்று பெயர். இம்மண்டலத்தில் 24 அநுவாகங்களும் 191 சூக்தங்களுமுண்டு.. ஒவ்வொரு சூக்தமும் பல இருக்குக்கள் (தனிப்பாடல்கள்) கொண்டது. இவ்வகை, மண்டலம, அநுவாகம், சூக்தமெனப் பாகுபாடு செய்தவர் சௌநகராம். இவர் ஒரு அநுக்கிரமணிகை செய்தவர்.

முதலஷ்டகம்.

இருக்குவேதத்தில் எட்டு அஷ்டகமுண்டு. ஒவ்வொரு அஷ்டகமும் எட்டு அத்தியாயங்கள் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பலவருக்கங்களுண்டு. ஒவ்வொரு வருக்கத்துக்கும் பெருமபான்மை 5 இருக்குக்களிருக்கும். இவ்வகை, அஷ்டகம், அத்தியாயம், வருக்கமெனப் பிரித்தார் காத்தியாயனர். இவர் ரிக்வேதலர்வானுக்கிரமணிகைக்கு ஆசிரியர்.

முதலத்தியாயம்.

இவ்வத்தியாயத்தில் 19 சூக்தமும், 37 வருக்கமும், 194 இருக்குக்களுமுள்ளன.

1. மண்டலம் 1 அநுவாகம் 1 சூக்தம் 1.

9 இருக்குக்கள்கொண்டது.

ரிஷி: விசுவாமித்திர வம்சத்துமதுச்சந்தஸ்;
வடமொழிச் சந்தம்: காயத்ரி; (தமிழிற்கலிவெண்பா.)
தேவதை: அக்கினி.

1. போற்றி யங்கி புரோகித னியாகத்தே
வாற் றிருத்துவிக் கழகிய தூதனே
டேத்தரதந மேற்றம்பெற விவட
பாத்தனிக்கு நற்பண்பினி லுத்தமன்.

(இ-ள்.) புரோகிதனும், யாகத்தேவனும், இருத்துவிக்கும், ஹோதாவும், உத்தம ரத்நதாதாவுமாகிய அக்கினிக்கு நமஸ்காரம்—(எ-று.) ஹோதா, தூதன்.

மண்டலம் 1 சூக்தம் 1.

2. பண்டைக்கால விருடிக ளன்றிப்பார்
மிண்டுமிற்றைய மேன்மையருஞ் சிறந்
தண்டி யேத்தத் தருந்தவ னக்கினி
கொண்டுவந்து பஃறேவரைக் கூட்டுவான்.

(இ-ள்,) இவ்வக்கினி, பூர்வகாலத்து ரிஷிகளால் மாத்திரமேயன்றித் தற்காலத்துப் பெரியோராலும் துதிக்கப்படும் பெருமை வாய்ந்தவன். பல தேவர்களையும் எக்கியதலத்தேகொண்டுவந்து சேர்ப்பான்—(எ-று.)

3. அங்கி யிங்ன னளவறு செல்வமும்
பொங்கு கீர்த்தி பொருந்திய வீரரு
மங்குறாது வளர்ந்திட நாட்குநாட்
பங்கமின்றிப் பகருந் தகையனே.

(இ-ன்.) இவ்வக்கினி, (பின்னும்) அளவற்ற செல்வத்தையும், கீர்த்தியையும், வீராகியமக்களையும், நாளுக்கு நாள் விருத்திசெய்யும் பெருமையன்—(எ-று.) வீரர் வீரியத்திற்பிறந்தவர், புத்திரர் என்றபடி.

4. அங்கி யிப் பரிபூரண வெக்கியம்
பங்கநீங்க வெப்பக்கமு மோங்குவாய்
துங்க வின்னது தேவர்கடந்திசை
யங்கமாக வணையு மிஃதுண்மையே.

(இ-ள்.) அக்கினி! இவ்வெக்கியத்தை எல்லாப்பக்கமும் நீ சூழ்ந்து காப்பாய். அதுவும் தேவர்களிடத்து அவசியமாகச் செல்லும்—(எ-று.)

5. உண்மை ஞான முயர்ந்திடுந் தூதனுந்
தின்மை தங்கிய சித்திரக் கேள்வியாய்!
வண்மை யங்கி மகிழ்பிற தேவரோ
டெண்மையாக விவண் வந்தருள்கவே.

(இ-ள்.) ஹோதாவும், கவியும், ருதுவும், சத்தியனும். சித்திரக் கேள்வியனுமாகிய அக்கினிதேவன், பிறதேவரோடு வருக—(எ-று.)
கவி=திவ்ய ஞானமுள்ளவன், தூரதிருஷ்டியுள்ளவன்.

வருக்கம் 1.

6. எத்தகைச் சுக மாயினு மேத்துவோற்
கொத்தளிக்கு முற்றி யடைந்தின்
சித்தமுண்மையைச் செப்புவ; ரங்கிரா
சத்திய மிதனிற் பிறிதில்லையே.

(இ-ள்.) தாசுடனுக்கு எல்லாச் சுகங்களையும் கல்யாணகரமாக அளிக்கிறாய். அங்கிரா! இது உனது உண்மைக்குணம்—(எ-று.)
தாசுடன்; யாகஞ்செய்பவன். அங்கிரா=அக்கினிக்கோர் பெயர்.

அஷ்டகம் 1 அத்தியாம் 1.

7. இருளகற்றி யியையு முன்கட் டினந்
தெருள்பொருந்து நின் றிப்பிய நாமத்தின்
பொருள்செறிந்த தியினைப் போற்றியே
யருள் பொருந்துற வங்கி யணைவமால்.

(இ-ள்.) இருட்டினையோட்டுமக்கினியே! தினந்தோறும் ஞானம் பொருந்திய உனது திருவடிகளுக்குப் பிரணமந்தாங்கி யுன்மாட்டணைகு வோம்—(எ-று.)

8. அக்வார்களுக் கான்ற வரசனுய்த்
தத்துவத்தைத் தள்ர விடாதுகாத்
தொத்த காந்தி யொளிர்ந்திட வோங்குவா
யுத்த மாங்க முளவுன் னறையினே.

(இ-ள்.) யாகஞ்செய்வோருக்கு ராஜாவாய்த், தத்துவங்களை வளர்ப் பவனுன சுயஞ்சோதியே! உனதுதிரகத்தில் வளர்பவனே! (எ-று.) ரிதம்=தத்வம்.

9. தந்தை தன்மகற் சார்ந்து நெருங்கியே
சொந்தமாக வுறைவது தூக்க யாம்
வந்தனைகள் புரிந்து வளம்பெற
வந்தமாக வுடனுறை வாற்றலே.

(இ-ள்.) பிதாவினது வீட்டிற் புத்திரனைப்போல எங்களுக்கு இல குவாகத்தோன்றுக. அக்கினி! சுகத்தையளித்துக் கொண்டெம்மோடிருப் பாயாக—(எ-று.)

வருக்கம் 2.

2. மண்டலம் 1 அநுவாகம் 1 சூக்தம் 2.

ஒன்பது இருக்குக்கள்கொண்டது.

ரிஷி: விச்வாமித்திர வம்சத்து மதுச்சந்தஸ்.

வடமொழிச்சந்தம்: காயத்திரி.

தேவதை. 1-3 வாயு; 4-6 இந்திரவாயுக்கள், 7-9 மித்திரா வருணர்கள்.

1. தோற்றஞ் சான்ற வனில! துகளற
வாற்றி யாமளி சோமத்துளிகளே
பேற்றமாகக் குடித்தெம் பிரார்த்தனைக்
கூற்றஞ் சேரச் செவிதந் தருளவே.

(இ-ள்.) அழகியவாயுவே! உனக்காகச் சோமம் தயாராயிற்று, அதனைக்குடித்து எங்களது பிரார்த்தனையைக் கேட்பாயாக—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 2.

2. பொழுதறிந்து புகழ்மறை கூறிப் பின்
றெழுது சோமத் துளிகளை யூற்றியே
விழுமியோர்கள் விழைந்து வந்திப்பராற்
பழுதில் வாயு நின்பண்பினை யோர்ந்துமே.

(இ-ள்.) வாயுவே! பகற் பொழுதையறிந்து, சோமமூற்றித் தமது உக்தங்களால், ஓதுவார் உன்னை வணங்குவர்—(எ-று.)

3. பவஞ்சமூடு பாவிடு முன்கர
நவஞ்செய் சோமக்குடியின் நாடியே
தவஞ்செய் தாசுடன் சாரிடஞ் சார்குமாற்
பவனதேவ பரந் ததிதூரமே.

(இ-ள்.) வாயுவே! பிரபஞ்சமெல்லாம் பாவு முனதுகரம் சோமபானத்தை யெண்ணி யாகஞ்செய்வோனிடத்திற்கு அதிதூரத்திலிருந்து பார்த்துசெல்லும்—(எ-று.)

4. வாயுவீந்த்ர வழங்கு மிச்சோமமு
மேயு முங்களுக் கென்ன வியைந்ததான்,
மேய நீவி ரிருவிரு மேவியே
தோய, மீக்களி தூங்குந் துளிகளே.

(இ-ள்.) வாயு வீந்திரர்களே! இந்தச் சோம முங்களுக்காகச் செய்யப்பட்டது. உங்களதுவரவிற் சந்தோஷிக்கும்—(எ-று.)

5. சோமங் கூட்டிச் சுவைபெற வாக்கிய
நேம வுண்டி யவிநினைக் தொண்பொரு
ளேம விந்திர வாயு விருவிரு
மோம நோக்கி யுடனே வருகவே.

(இ-ள். செல்வமிக்க வாயு வீந்திரர்களே! எங்களது அவியையெண்ணி உடனே இங்குவருக—(எ-று.)

வருக்கம் 3.

6. சோமசாட்டை சுவைபெற வாற்றிய
வேமமான மதுவினை வீரர்காள்!
சேமமார்ப் பருகத் திரும்புவீ
ரோம சூக்த முரைத்த தற்கென்றே.

(இ-ள்.) வாயு வீந்திரர்களே! சோமசாட்டையிற் செய்த மதுவை பருக வருக. அதற்கென்றே உண்மையிற் சூக்தஞ் சொல்லப்பட்டது—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

7. திவ்ய சக்தி சிறந்திடு மித்திர!
தெவ்வழித்துச், சிறப்புட னெய்சொரிந்
தெவ்வ நீங்க வியற்று கிரியையைச்
செவ்வை யாக்கும் வருண! செபிப்பலே.

(இ-ள்.) தூயவலியுள்ள மித்திரனே! ஓமக்கிரியைகளைப் பூரணஞ் செய்யும் ரிசாதஸனுகிய வருணனே! உங்களே யான்அழைக்கிறேன்—(எ-று.) ரிசாதஸன்=பகைவரையழிப்பவன்.

8. ரிதத்தின் றன்மையா லோம்புவதால் ரித
மிதத்தின் வேண்டுவோ ரெணினைதாற் பகல்
விதத்த மித்திரன் மேவிய வாருணன்
கதித்து நின்ற வலியினைக் கைக்கொண்டார்.

(இ-ள்.) மித்திராவருணர்கள், ரிதத்தின் சுபாவத்தாலும், அதனை விருத்தி செய்வோராலும், ஒழுங்கை விரும்புவோரது நினைப்பினாலும் பெரு வலிபெற்றனர்—(எ-று.) ரிதம்=தத்வம், ஒழுங்கு, உண்மை, யாகம் என்னும் பொருளுடைத்து.

9. தோற்றஞ் சான்று துகள்று மாட்சி சால்
பேற்ற மித்ர வருணரை யேத்திடி
னூற்றஞ் சான்ற நடைக் குயர் வீகின்ற
வாற்றல் சார்த்த லறைவர் கவிகளே.

(இ-ள்.) உயர்ந்த பிறப்போடு கூடி விசாலமான ஆளுகையையடைந்த வங்களேத்துதிப்பின், மித்திராவருணர்களே! ஆசாரசீலமுயருமென்று நமது ரிஷிகள் சொல்லுகிறார்கள்—(எ-று.)

வருக்கம் 4.

3. மண்டலம் 1 அநுவாகம் 1 சூக்தம் 3.
12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: டீ மதுச்சந்தஸ்.
வடமொழிச் சந்தம்: காயத்திரி.

தேவதை: 1—3 அசுவினிகள், 4—6 இந்திரன், 7—9 விசுவதேவர்கள், 10—12 ஸரஸ்வதி.

1. நன்மை தந்தரு ணுயகர் செல்வராம்
வன்மை தங்கு கரம்விரி யச்வினீ
யென்மை தேவர்கா ளெங்கள் பலியையெ
மின்மை நீங்க வெடுத்துப் புசியுமே.

(இ-ள்.) சுபப்பதிகளும், யாகதனமுள்ளோருமான அச்வினிகாள்! விரும்பிய அன்னத்தைப்புசியுங்கள் உங்கள் விரிந்தகாகுகளால் எமது இல்லாமைகெட—(எ-று.)

இன்மை நீங்கவென்பது முதனூலிலில்லை. என்மை, எல்லின்றன்மை.

மண்டலம் 1. சூக்தம் 3

2. சொற்பெறத் துதித்தேத்தத் தகுந்தநல்
லற்புதம் புரி யச்வினி தேவர்நும்
மற்பெறும் பொறிவன்மையைச் சாற்றுமெ
மெற்பெறுங் கவி யேற்றுக்கொண் டாள்கவே.

(இ-ள்.) பலவித அரியசெயல்களையும் புரியும் அசுவினியரே! உமது வல்லமையைக்கூறு மெம்போற்றை யேற்பீராக—(எ-று.) இச்செயல்களிற் சிலவற்றை மண். 1. சூ. 112-ல் காண்க.

3. வய்யகத்து வழிக்கட் பகையழப்
பொய்மை யின்றி யிங் கற்புத மாற்றுவீர்!
கொய்தருப்பையிற் கூடுஞ் சுதையினைக்
கய்யி னேற்கக் கடிதின் வருகவே.

(இ-ள்.) வழிதோறுமுள்ள பகைவரை யழுவித்துப், பொய்மையில்லாமல் அரியசெயல்களைச் செய்யும் வீரர்காள்! நறுக்கின தருப்பையிற் சொரியும் சோமத்தை யேற்க வருவீர்களாக—(எ-று.) நாஸத்யா, தஸ்ரா என்பன அசுவினியரின் நாமங்கள்.

4. சித்ர காந்தி திகழ்ந்திடு மிந்திர
மெத்த நன்கு வடிக்கட்டி மேவிய
சுத்த மான் வமிழ் தூனக்காகவே
சித்தமாயிற்றுச் சிக்கிரஞ் சேர்கவே.

(இ-ள்.) சித்திரபானுவாகிய விந்திரனே! இங்கே சோமம் (ரித்விக்குக்களது வீரல்களினால்) உனக்காகப்பிழிந்து சுத்தமாக்கப்பட்டுள்ளது; விரைவின் வருக—(எ-று.)

5. பாடல் தூண்டிடப் பண்ணிசைப்போர் தூண்டக்
கூடி யிங்குள விப்பிரர் கூவிடத்
தேடி யீயு மவியுணவைச் சீரி
னுடி யேகுக விந்திர நன்கினே.

(இ-ள்.) மறைபாடுவோரும், மறையும், மற்றைய விப்பிரர்களும் அவியுணவோடு கூவுவதைக்கேட்டு, இந்திரனே வருவாயாக—(எ-று.)

6. வருக வென்றுனை வாலிதிற் கூப்பிடு
மரிவ வெங்கண் மறையினை யாதரித்
தொரு கணமெனுந் தாழ்த்திடா திங்குற்றுப்
பெருகு மெங்க ளமிழ்தின் மகிழ்கவே.

(இ-ள்.) குதிரையோடுகூடிய விந்திரனே! எங்களது மறைகளைக் கேட்டு விரைவின்வந்து சோமச்சுதையில் மகிழுவாயாக—(எ-று.) அரிவ, மகிழ்: குதிரைநாயகன், இந்திரன்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

7. மக்க டம்மை வளர்த்துப் பலன்றந்து
மிக்க நற்பரி சீந்து விளங்குவோர்
தக்க தாசுடன் முங்கிய சோமத்தை
நக்கத், தேவ ரியாவரு நாட்டலே.

(இ-ள்.) மனிதர்களைப் பாதுகாத்துப் பலனை யளித்துக் காக்கும் விச்வ தேவர்கள் எக்கியகர்த்தாவினது சுதையை உண்ண வருக—(எ-று.)

8. சட்டெனத், தொழில் சாதிக்குந் தேவர்காள்
கொட்டில் செல்லுங் கற்றுக்களை மானவே
யொட்டி யும்மை யுளத்தமைத் தாக்கிய
தட்ட நற்சுதை சாப்பிடச் சாருமே.

(இ-ள்.) காரியசாதனத்திற் சிறந்தவிச்வ தேவர்களே! கற்றுக்கள்தந்தம் கன்றுகளை நாடிக் கொட்டிலுக்குப் போவதுபோல் விரைவாகச் சுதையை யுண்ணவாருங்கள்.—(எ-று.) காலமழைபெய்விக்கும் விச்வதேவர்காள் சூரியக்கிரணங்கள் பகலேநோக்கிவிரைவதுபோலச் சோமம் பருகவாருங்கள் என்பது யாஸ்கர்மதம்.சாயணருரை—தேவர்காள்என்றது அதிகாரத்தால் விச்வதேவர்களைக் குறித்தது.

9. சூற்ற மற்றுக் குறைவொன்று மில்லவர்
பற்று சிந்தைத் துரோகம் பயிலாதா
ருற்ற ஞானிய ரொண்டிருக் கூட்டுவோர்
தெற்றென் விச்சுவ தேவ ரவிகொள்ல்.

(இ-ள்.) அட்சயரும், துரோகமற்றவரும், செல்வமளிப்பவரு ஞானியருமான விச்வதேவர்களை அவிகொண்டு சேவிப்போமாக—(எ-று).

10. தூயவள் பொரு டோய்க்குங் கருத்தினள்
மேய வண்டி வினைத்திடும் வாணி, யெம்
பாய நல்லவி பாரிக்கும் யாகத்தை
யேய விச்சை மகிழ்வி னியைகவே.

(இ-ள்.) பாவகியும், வசுவைக்கூட்டுபவளுமாகியஸரஸ்வதி, அவி பொதிந்த வெமதுயாகத்தை விரும்பிவருக.—(எ-று.) வசு=செல்வம்.

11. நற்கவிக்கு நடையை யளிப்பவ,
ளெற்றருபவ ளேற்றம் பெறுமன
முற்றவர்க், கவளுன்னித் தருமவி
முற்று மெக்ய மொழிமக ளேற்பளே.

(இ-ள்.) சத்தியவாக்விகளாகிய கவிகளை உற்சாகப்படுத்துபவளும் நனமனமுள்ளாருக்குக் காந்தியளிப்பவளுமாகிய ஸரஸ்வதி, அவளைக்குறித்துச்செய்யும் இவ்வெக்கியத்தைக்கைகொள்வாள்—(எ-று.)

மண்டலம் 1 சூக்தம் 4.

12. எல்லையில் பெருக்கேன்ற மொழிமகள்
பல்லுணர்வையும் பாரித் துயர்த்துவோ
னல்ல தன்னொளி கொண்டு நடையெலா
மெல்லுறச் செயும் வன்மை யியைந்தவள்.

(இ-ன்) கரையற்ற வெள்ளத்தினளும் உணர்வையுயர்த்துபவளும் தனதொளியிலுல்ஞானநடைகளையெல்லாம் பிரகாசிப்பிப்பவளும் ஸரஸ்வதியாம்—(எ-று.)

வருக்கம் 6.

4. மண்டலம் 1 அநுவாகம் 2 சூக்தம் 1.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: டீர்கதமச்சந்தஸ்.
வடமொழிச்சந்தம்: காயத்திரி.
தேவதை: இந்திரன்.

1. ஆயன் பால்கறப்பான் பசுதன்னையே
கூய்ழைத்தலிற் கூர்நல் லுருவத்தின்
மேய நற்றெழில் வேந்தனை நாடொறுந்
தோயு மெந்துணை யாக வழைப்பமே.

(இ-ன்.) பால்கறக்கும்இடையன் பசுவை யழைப்பதுபோல் தினந்தோறும் யாம் நற்கருமகாரியகளுன விந்திரனைத் துணைக்காக வழைப்போம்—(எ-று.) வேந்தன்என்னுஞ்சொல் பெரும்பான்மை யிந்திரனையே சுட்டிநிற்குமிந்நூலில்.

2. சோமபானியே சோமங் குடிக்கவெஞ்,
சோம மாற்றுஞ் சவனந் தூதைக; பின்
சோம மாந்துக; வான்களிச் செலவவா
னேம நன்மத மாக்களை யீயுமே.

(இ-ள்.) சோமபானியாகியஇந்திரனே! எங்களதுசோமம் பிழியுஞ் சவனத்தக்குவருக; சோமத்தைப்பருகுக. செல்வவான்சந்தோஷப்பட்டால் பசுத்தானஞ் செய்வான் (அதுபோல்வேயீயும்எங்களுக்குத்தருவாய்.)—(எ-று.) செல்வவானது மதம் ஆக்களை யீயுமென்க.

சவனம் யாதப்பொது. வேற்றுப்பொருள்வைப்பணி, மதம்குடிவெறியன்று.மதமென்பது சோமத்தைக்குடிப்பதால் நற்காரியத்தைச் செய்யுவெழும்ஊக்கம்என்றும் அதற்குச்சமமானபதம் வேறுபாஷைகளில் இல்லையென்றும் (Max muller.)மோட்சமூலர் கூறுவர்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

3. பின்ன ருன்ற னருகிற் பிறங்கிடு
நன்னய மதி வாய்ந்தவர் நாப்பணெம்
மன்னு புந்தி வயங்கிட வுன்னுவோர்
துன்ன வீண்டெமைத் தோய்வா தொழிகலே.

(இ-ள்.) சோமபாநாநந்தரம் உன்னருகிலுள்ள சுமதிகளுக்கு மத்தியில்எங்களுக்கு நற்புத்தியுண்டாகும் வண்ணம்உன்னைநினைப்போம். நீ எங்களைஉல்லங்கனம்செய்யாது நண்டுவெருவாயாக—(எ-று.)

4. பண்டிதன் மெய்ப்பராக்கிரமன் பகை
கண்டகன் கடலேயெனுங் கல்வியான்
மிண்டு நண்பரின் மீச்சிறந்தோங்கு மா
கண்டலனைக் கடுகிப் பிரார்த்திப்பாம்.

(இ-ன்.) பண்டிதனும், பராக்கிரமசாலியும், பகைவதைப்பவனும், மேதாவியும், நண்பரிற் சிரேஷ்டனுமான இந்திரனை யணுகிக்கேட்போமாக —(எ-று.) கடலே யெனும் என்றவுவமை மூலத்திலில்லை.

5. னம்மவர்க ளரியினை யேத்தல்;பி
னெம்மை நிந்தித் திகழு மெதிரிகள்
செம்முக பிறதேய ;மரிதனை
நம்பி யூழிய நாட்டுவோர் நிற்கவே.

(இ-ன்.) . எங்களைச்சார்ந்தவர்கள் இந்திரனை யேத்தட்டும்; எங்களை நிந்திப்போர் பிறதேயம் போகட்டும்; இந்திரனை நம்பிப் பணிசெய்வோர் தங்கட்டும் —(எ-று.)

6. பகைவதைப்பவ வுன்னருளாற் றெவ்வர்
மிகுதனத்தை விழைந்து பெற்றுரெனத்
தகுமெந் நண்பர்கள் சாற்றுகிரு; ரரி
சுகமளிக்கப் பொருந்திச் சுகிப்பமே.

(இ-ள்.) சத்துருக்களை வதைப்பவனே! பகைவரும் உன்னருளாலேயே செல்வவான்களாயினரென்று எந்நண்பர்கள் சொல்லுகிறார்கள் அத்தகைய இந்திரன் சுகத்தையளிக்க யாம் அதனையநுபவிப்போம்—(எ-று.) வேதத்திற் படர்க்கையும் முன்னிலையும் அடிக்கடிசேர்ந்துவரும். முதலில் முன்னிலையாகக் கூறிப் பின்னர்ப் படர்க்கையாக அம்முன்னிலையையேமாற்றிக் கொள்ளுவார்.

7. எக்கியத் திரு வேய்ப்பது வேகமார்ந்
தொக்க மாந்தர்க் குவப்பை யளிப்பது
தக்க கன்மந் தருவது நண்பனை
யெக்களிப்பி னிருத்துவ தேய்க்கலே.

(இ-ன்.) எக்கியத்துக்குக் கீர்த்தியைத்தருவதும், விரைவில் சவனத்திரயங்களில் பாவுவதும் நரர்களுக்குக்களிப்பைத்தருவதும், சற்கருமங்களைக்கொண்டுவருவதும், நண்பனை (இந்திரனை) அதிக மகிழ்ச்சிப் படுத்துவதுமாகிய சோமத்தை விரைவிற் சேர்ப்பீர்களாக—(எ-று.) நண்பன் = இந்திரன்.

மண்டலம் 1. சூக்தம் 5.

8. மகங்க ணூறிழைத் தோங்கு மொருவனே!
சுகங் கொடுத்துயர் சோமங் குடித்தபி
னகந்தை யார்ந்த விருத்திரர்ச் செற்றனை:
யகங்கொள் போரினர்க் காற்றினை வன்மையே.

(இ-ள்.) சதக்கிருதுவே! சோமத்துளிகளைப்பருகி விருத்திரனுடையைக் கொன்றாய்; போரிற்பொருதரைக் காத்தாய்—(எ-று.)

9. மகங்க ணூறு மருவிய விந்திர
வகங் களிக்கத் தணத்தினை யாம்பெற
வுகந்த போரி லுறுதி மலியுனை
மிகுந்த வல்லப மேவுறச் செய்குவோம்.

(இ-ள்.) சதக்கிருதுவே! யாம் செல்வம்பெறுமாறு யுத்தகளத்தில் வலிமை பொருந்திய வுனக்குப்பின்னும் வலியூட்டுவோம்—(எ-று.) சதக்கிருது=வெகுகர்மத்தோடு கூடியவன் என்பார் சாயணர்.

10. மகம் புரிபவர்க் குற்ற மறுவில்நண்
பிகம் விளங்கு மகா னிருஞ் செல்வத்தை
யுகந்தளிக்கு மொருவ னரிபுகழ்
பகர்ந்தொளிருங் கவியினைப் பாடலே.

(இ-ள்.) யக்ஞஞ் செய்வோருக்கு நண்பனும், மகானும், செல்வத்திக்கு நாயகனுமாகிய இந்திரனது கீர்த்தியைக்கூறும் கவிகளைப்பாடுகை—(எ-று.) இருத்துவிக்குக்களே நீங்கள் பாடுங்களென்க.

வருக்கம் 8.

5. மண்டலம் 1 அநுவாகம் 2 சூக்தம் 2.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மதுச்சந்தஸ்; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை; இந்திரன்.

1. *தோழர்கா ளிவண் டோமங்க டாங்குவீர்
வாழி நீவிர் வருக விரைவின், உம்
பீழை நீங்க வமர்ந்து பிறங்கியே
கேழி னிந்திரன் கீதங்கள் பாடுமின்;

(இ-ள்.) ஸ்தோமங்களைத் தாங்கும் தோழர்களே! உடனே வந்து அமர்ந்து இந்திரனது கீதங்களைப்பாடுமின்—(எ-று.) வாழி, பீழை நீங்க, கேழின், இவைஎதுகை நோக்கிவந்தன. ரிக்வேதத்தில் மோனை எதுகை முதலியணகிடையா. * இக்குறியுள்ளன குளகமாம்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 1.

2. *பலர் விரும்பிடும் பண்புடை யுத்தமன்
பலவிதப்பொரு டம்மைப் பரிந்துகாத்
திலகு நாயக னிந்திரனுக் கெனக்
குலவி யாவருஞ் சோமச் சுதைகொடே.

(இ-ள்.) பலரும்விரும்புமுத்தமனும், பலவித தனங்களுக்கும் ஈசான னும் ஆகிய இந்திரனுக்காகச் சோமச்சுதையைப் பிழிந்துகொண்டு—(எ-று.) இதங்களைப்பாடுமின் எனமேற் பாட்டோடு கூட்டுக.

3. அன்னவ னெமக் காக லறமுத;
லன்னவ னெமக் காகல் பொருண்முத;
லன்னவ னெமக் காகல் பெருமதி;
யன்னவ னெமைச் சார்க வுணவொடே.

(இ-ள்.) அத்தகைய விந்திரன் எங்களுக்குப் புருஷார்த்தமாகவோங் கட்டும்; பொருட்காரணனுகவாகட்டும்; எமக்குப் பேரறிவளிக்கட்டும்; உண வுப்பொருள்களோடு எம்மாட்டுவரட்டும்—(எ-று.) அறம் ஈண்டு புருஷார்த் தங்களைக்குறித்து நின்றது.

4. கொற்ற வாசி குலவு நற்றேரினி
னிற்றலோடு நெருங்கிப் பகைவர்கள்
சற்றும் வந்தெதிர் சாற்றலாக் கொற்றத்தைப்
பெற்ற விந்திரன் பேச்சினைப் பாடலே.

(இ-ள்.) தேரில் (இரண்டு) குதிரைகளைப்பூட்டி நிற்குங்கால், சத் துருக்கள் பயந்தோடும் வல்லபத்தையுடைய இந்திரனது துதியினைப் பாடுங் கள்.—(எ-று.) துவி வசனமாக ஹரீயென முதனூலிலுள்ளது. ஹரி=குதி ரை, வாசி.

5. தயிர் கலந்து தயங்கிய சோமத்தின்
செயிரகன்ற சிறப்புத் துளிகளு
முயிரடைந்த வுடல் களியெய்துவான்
வயிறு முற்றப் பருகிட வந்தவே.

(இ-ள்.) தயிர்கலந்த பரிசுத்தமான சோமத்துளிகள் சோமபானியின் பானத்துக்கெனவமைந்தன—(எ-று.)

வருக்கம் 9.

6. நன்மை செய்பவ விந்திர நாடியே
நன்னர் சோம நலக்கக் குடிக்கவு
மென்மை தங்கு முதன்மையை மேவவு
மன்னி னு யோர்கணத்தின் வலியையே.

(இ-ள்.) நற்காரியங்களைச் செய்யு மிந்திரனே! சோமங்குடிக்கவும், (தேவர்களுக்குள்) முதன்மை பெறவும், ஒரு நிமிஷத்தில் உற்சாகத்தோடு வலியைப் பெற்றனை—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 6.

7. பண்ணின் மீக்களி யிந்திர வொல்லையிற்
பண்ணுஞ் சோமப் பருந்துளி யுன்னகத்
தொண்ணி நிற்க; வுனதரு ஞானத்தின்
வண்ண நன்மை யுருவின் வயங்குக.

(இ-ள்.) பண்ணிற் களிக்கும் இந்திரனே! விரைவாகப்பரவுமிச் சோமம், உனக்குள் தழையட்டும்! உனக்குச்சிறந்த ஞானத்தைத் தரும் பொருட்டு நல்லவுருவோடு தோன்றட்டும்—(எ-று.)

8. சதமக வூனச் சாற்றிடுந் தோமமு
மிதமு றுக்தமு மீடில் வலியளித்
தெதிரற வூனச் செய்தனவா லெந்தந்
துதியு மத்தொழி றுன்னின வின்றுமே.

(இ-ள்.) சதக்கிருதுவே! உனைப்புகழுந் தோமங்களும் உக்தங்களும் உன்னை யாவர்க்கும் பெரியவனுக்கின. எங்கள் பண்களும் அப்படியே உன்னைச் செய்யட்டும்—(எ-று.) ஸ்தோமம் ஸாமகளால் பாடப்படுவது. உக்தம் சஸ்திரங்கள், பேசப்படுவன—சாயணர்.

9. என்று மாறு வுத்வி யியைப்பவ!
வொன்று மாண்மை யெலாம்பொதிர் தோங்கியே
துன்று மிப்பலி யூணுனக் கிந்திர
வொன்று நூற்றுப்பத்தான துதவுக

(இ-ள்.) அட்சயமான வுதவியைத்தரு மிந்திரனே! வீரியமெல்ல நிறைந்த இப்பலியுணவு, ஆயிரக்கணக்காகப்பரவியது (சோமமென்றபடி) உனக்கு அளிக்கப்படட்டும்—(எ-று.)

10. பண் செவிமடுத் தாநந்தம் பாவிய
விண்ணி னீசனு மிந்திர வெம்மெய்யை
மண்ணின் யாரும் வருத்தா தெடுத்தெம
கண்ணினும் வதை காணுது காக்கவே.

(இ-ள்). கிர்வணனே! இந்திரனே! எம்முடலை ஒரு மர்த்தியனும் வருத்தாமற்காப்பதுடன் வதையினின்று எங்களை நிவர்த்திப்பாயாக—(எ-று) கிர்வணன் பாட்டுக்கேட்டு மகிழ்பவன்.

வருக்கம் 10.

6. மண்டலம் 1 அநுவாகம் 2 சூக்தம் 3.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி; மதுச்சந்தஸ்: வடமொழிச்சந்தம்: காயத்ரி;
தேவதை 1, 2, 3, 10, இந்திரன்; 4, 6, 8, 9, மருத்துக்கள்; 5, 7, இந்திரா மருத்துக்கள்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

1. தன்று சூரிய னங்கி சுலவுகா
லென்றெரிரு முவனே யியைந்து சூழ்ந்
தென்று மோங்கிய சீவர்க டந்தொழி
னன்றிணைப்பர்; நபத் தொளிருந் நாளை.

(இ-ள்.) சூரியன், அக்கினி, வாயு என்னும் உருவங்களின் விளங்கும் இந்திரனைச்சூழ்ந்துநிரியும் (மூவுலகத்துச்) சீவர்களும், தந்தொழில் களைத்தெய்வச்செயலோடு சேர்ப்பார். (இந்திரனுடைய மூர்த்தி விசேஷங் களில் ஒன்றாகிய) நட்சத்திரங்களும் வானிற் பிரகாசிக்கும் (எ-று.) மேனூட் டார் வடமொழிப்பதங்களுக்கெல்லாமுள்ள பொருள்களை ஒரேமாதிரியாக்கி எங்கும் அப்பதங்களை யப்பொருள்களிலேயே உபயோகிப்பர். அதற்குச்சட் டாக இப்பாட்டைக்காட்டுதும்.

"அவனைச்சூழ்ந்து நிற்பவர், அவன் செல்லுங்கால், ஒளிபொருந் திய சிவந்த மாவிற்குக்கலினம் பூட்டுவர். வானில் வெளிச்சங்கள் பிர காசித்துக்கொண்டிருக்கும்." சுற்றி நிற்பவர் மருத்துக்களாயிருக்கலாம். அக்குதிரை சூரியனுகவுமிருக்கலாம்.—(Griffith) மேனூட்டாசிரியர்.

இந்நூலில் மேனூட்டாசிரியர் என வந்த இடங்களிலெல்லாம் கிரி பித்தென்பவரையே கொள்க. ஏனைய மேனூட்டாசிரியர்களதுபெயர் தனித் தனியே சொல்லப்படும். இம்மேனூட்டாசிரியருக்குச் சாயணருரையில் நம் பிக்கை குறைவு.

2. சிவந்து தீரத்தின் வீரரைத் தாங்கிடு
மூவந் தெவரும் விரும் பிரு மாவின
நிவங்கொ டேரிரு பக்கமு நேடியே
தூவம் பெறவே தொடுத்து விடுப்பரால்.

(இ-ள்.) அவனது தேரினிருபக்கத்திலும் விரும்பத்தக்க இரண்டு சிவந்த குதிரைகள், சாரதிமுதலிய வீரரைத்தாங்கும் தீரம்பொருந்தியவற் றை யிணையாகப்பூட்டுவார்—(எ-று.) சாரதிகள் தோன்ரு எழுவாய். நிவங் கொள், எதுகைபற்றிச்சேர்த்தது.

3. களங்க மாரிடங் கண்ணி யொளிர்ந்துரு
விளங்கலாத் தல மக்காள் விளங்கவிட்
டுளங்கொள் காந்தி யுஷசுக்க ளோடவை
னிலங்கு தோற்ற மெடுத்தன னன்குமே.

(இ-ள்.) மரணதர்மம் பொருந்தியவர்களே! (ஒரு ஆச்சரியம் கேளு ங்கள்) இருட்டினிறைந்தவிடமெல்லாம் உருவைக்காட்டி வைகற்பொழுதுக ளோடு பிறந்தான் (சூரிய ரூபமான) அவ்விந்திரன்—(எ-று.) சூரியனையும் இந்திரனையும் ஒன்றாய்க்கருதுவது வேதமரபு.

மண்டலம் 1. சூக்தம் 6.

4. பின்னர்த் தோன்றிடு நீரொ டுணவெணி
நன்ன செக்கிய நாட்டுறு நாமத்தைத்
துன்னி நிற்பவர் மீட்டுங் கருப்பத்தை
யுன்னி யன்னதைத் தூண்டிட லுற்றனர்.

(இ-ள்.) (வருஷகாலந்தீர்ந்தபின்) இனியுண்டாகவேண்டிய நீரையும் உணவுப்பொருள்களையும் எண்ணி, யக்ஞத்துக்குகந்த (தேவ) நாமந்தரித்தவர் (மருத்துக்கள்) மறுபடியும்(ஒவ்வொரு வருஷமும், (மேகமத்தியில்)ஜலகர்ப்பத்தைத் தூண்டி விடுவார்கள்—(எ-று.) மருத்துக்கள், புயல்கள்; இப்பொருளிலிருந்த இச்சொல் தேவ கணங்களைப்பின்குறிக்கலாயிற்று. அதனால் மருத்துக்களும் ரிபுக்களைப்போலப் பின்னர்த்தெய்வமாக்கப்பட்டவர் என்பது மோட்சமூலர் மதம்.

5. உறுதி வாய்ந்தவை யேனு முடைப்பவ
ரறுதி வாய்வுற வொன்றினைப் பேர்ப்பவ
ருறு துணையெனக் கொண்டிடு மிந்திர
குறுகி நற்குதை யாக்களைக் கண்டனை

(இ-ள்.) பலமானவற்றையுங்கெடுத்து ஒன்றை இலேசாக இடம் மாற்றவல்லவர்களை (மருத்துக்களை)த்துணையாகக்கொண்ட இந்திரனே! குகைக்கண் வைக்கப்பட்ட கறவைகளை (யும்) நீ கண்டாய்—(எ-று) இதற்கு ஒரு கதையுண்டு பணிகளால் தேவலோகப்பசுக்கள் கவரப்பட்டு இருட்டிலடைக்கப்பட்டன: அவ்வசுராகளைக்கொன்று மருத்துவருடைய துணையினால் இந்திரனே அப்பசுக்களை மீட்டான் என்பது—சாயணர். மேஞ்சட்டாசிரியர் இக்குகை காளமுகிலைக் குறிக்குமென்றும் பசுக்கள் நீர்த்தாரைகளாகுமென்றும் கூறுவர். அற்றேல் "கருமுகில்களி னீர்வரக் கண்டனை" என்னல் தகும்.

6. தேவர் வேண்டும்பண் செம்மையி னேதுவார்
பாவு ஞானியைப் போற்றுதல் போலத்தம்
மேவு மேன்மையைத் தோற்றிடுஞ் செல்வத்திற்
றுவுசிர்ப் பெரியார் வரப் பாடுவார்

(இ-ள்.) (மருத்துத்) தேவர்கள்விரும்பும் பண்களைப் பாடும் இருத்துவிக்குக்கள், ஞானியை (இந்திரனை) ப்பாடுவதுபோலவே, தமது மகிமை விளக்குந் தனம் வாய்ந்து கீர்த்தி பரந்த மகான்களை (மருத்துக்களை) யும் பாடித்துதிப்பார் (எ-று.) ஒதுவார், பாடுவாரெனமுடிக்க.

7. அச்சமில் வலியிந்திர ணண்ணியே
பொச்சமில் களியோடு பொருந்தியே
தற் சமான வொளியொடுஞ் சார்ந்துநின்
றிச்சகத்தவர் கண்மூ னெதிர்கவே.

(இ-ள்.) பயமில்லாத இந்திரனோடு பெருங்கி யென்று முற்சாகத்தோடு விளங்கும் (மருத்துக்கூட்டம்) (இந்திரனுக்குச்) சமான்மாக தீர்ந்தியோடும் எங்கள் கண்ணிற் பட்டும் (எ-று.) முன்பு இந்திரன் விருத்திரனை வதைத்த காலத்து அவனுக்குத் துணை நின்ற எல்லாத் தேவரும் விருத்திரனது சுவாசம் பட ஓடிப்போயினர். அப்போது விருத்திரனது சகல சேனையையும் வெற்றி கொள்ளுமாறு மருத்துக் கணம் சேர்ந்தது என்பது கதை—சாயணர்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

8. மாசகன்றவர் வானத் தெழுபவர்
பேசெவரும் விழைதரு பெற்றிய
ராசி லிந்திரற் கான வலிக்கண
நேசத் திம்மக நேடி யின்பூட்டுமே.

(இ-ள்.) தோஷரஹிதரும் வானலோகத்தை நோக்கிச் செல்லுபவரும், (பயனளிக்குந்தன்மையால்) யாவராலும் விரும்பப்படுவரும், இந்திரனுக்குப்பலம் போலக்கூடினவருமான மருத்துக்கூட்டத்தாருக்கு, இம்மகமும் (பலத்தையும்) இன்பத்தையுமளியா நின்றது.—(எ-று.) மகஞ் செய்வோன் அளியா நின்றான் என்று இலக்கணையாற்கொள்ளுக.

9. எங்கு மேகுவீ ரேயு மூமதிடந்
தங்குரு திவட் சாருக விண்ணின்றும்
பொங்கொளிக்கதிர் தன்னிட நின்றுமே,
யிங்குறு பண் ணத்தீன யிச்சித்ததே.

(இ-ள்.) எல்லாவிடமுஞ் சூழ்ந்து செல்லுவீர், (மருத்துக்களே!) (இவ்விடத்துக் கூறப்படும் பாட்டுக்கள் உமது வாவைமிகவும் விரும்புகின்றதால்,) நீர் உமது (அந்தரிட்ச) உலகத்திருப்பினும், வானத்திலிருப்பினும், அல்லது சூரியலோகத்திலிருப்பினும், (எங்கிருப்பினும்) வருவீர்களாக.—இங்குரைக்கப்படும் பண் அதனை விரும்புகின்றது—(எ-று.) துணிவுப் பொருளில் வந்த இறந்தகாலம். இச்சிக்கின்றது என்பது பொருள்.

10. இவவி லிந்திரன் விண்ணிருந்தோ விங்குக்
குவலயத்தினி னின்றுகொண்டோ வன்றி
யுவமை யற்றக லந்தரத் தோங்கியோ
தவலுந் துணையாக விரப்பமே.

(இ-ன்.) விசும்பிலிருந்தோ வல்லது பூமியின்கண்ணிருந்தோ, இந்திரன் நமக்குத் துணைசெய்யவேண்டுமென்று (பொருளளிக்கவென்று) யாசிப்போம்—(எ-று.) இவவு=இழிவு.

வருக்கம். 12.

7. மண்டலம் 1. அநுவகாம் 2. சூக்தம் 4.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி : மதுச்சந்தஸ் ; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: இந்திரன்

மண்டலம் 1. சூக்தம் 7.

1. தலைவ னிந்திரனே யெனச்சாற்றுவார்
கலைவல் வாக்கினத்வர்யு வாதியரு
நிலை யிருக்கு நிறுவு மோதாக்களுந்
தலைமை கான வுற்காதாக்க டாமுமே.

(இ-ள்.) சாமகானத்திற் சிறந்த உத்காதாக்களும், இருக்கோதுவதிற் சிறந்த ஹோதாக்களும், (கலைவல்ல) வாக்கோகூடிய அத்வர்யுமுதலியவர் களும், இந்திரனேபெரியவனென்று புகழ்வார்—(எ-று.) உத்காதா சாம வேதமும், ஹோதா இருக்குவேதமும், அத்வர்யு யஜுர்வேதமும் தெரிந்தவர் கள், யாகத்துக்கு உதவி செய்வோர்.

2. பொன் னணிந்த குலிசப் புலோமசித்
துன்னு சொற்பெறத் தேரி னியைவுற
மன்னு பிங்கல மாக்க ளொக்காலமுந்
துன்னு தன்கடைத் தோய்வுறப் பெற்றவன்.

(இ-ள்.) பொன்னுபரணமும் வச்சிராயுதமுந்தரித்த இந்திரன் தன் சொற்கேட்டவுடன் தேரிற் பூண்டுகொள்ளும் பிங்கலநிறக் குதிரைகள் எப்போதும் தன்னருகேயிருக்கப் பெற்றவன்—(எ.று.)

3. நீண்ட தூர நிமிர்ந்து கண்டோன்ற மார்த்
தாண்டனை விண் டயங்க வுயர்த்திரு
னீண்டெதிர் முகிலுகத்தை யிந்திரன்
பூண்ட நீர்ப்பசு காணப் புடைத்தனன்.

(இ-ள். சூரியன் நன்றாய் யாவர்கண்ணிலும் படும்படியாக அவனை இந் திரன் உயரத்தூக்கினனென்; மேலும் இடைப்பட்டு நின்ற மேகமாகிய மலை யைத்தான் கொண்ட நீராகிய பசு வெளித்தெரியும்படி புடைத்தனன்—(எ-று) அத்ரி,மேகத்துக்கும் மலைக்கும் பொதுப்பெயர். உஸ்ரியா, மழைநீருக்கும் பசுவுக்கும்பெயர்! இவ்வுஸ்ரியாவென்பது சூரியகிரணமென்ற பொருளிலும் வருவதுண்டு. மண் 1. சூக்தம் 3. இருக்கைட்டினுரையிற்காண்க

4. தடையி லாயிரஞ் சூறையெனுந் தரு
முடுகு போரின் முழங்கிட, விந்திர,
கடுமை தங்கிய காவல, நின்பெருங்
கடுமைவாய் துணை யெம்மைக் கடுகவே.

(இ-ள்.) இந்திரனே! (பகைவரைக்) கடுமையாக நடத்துங் காவ லனே! ஆயிரக்கணக்கான பொருள்களைத் தரும் பெரிய யுத்தத்தில் உனது பலமான உதவியை நீ யெங்களுக்களிப்பாயாக—(எ-று) சூறை யெனினு மென்றபடி.

அஷ்டகம் 1 அத்தியாயம் 1.

5. நச்சு மீத்தன நல்கு சமத்திறு
நிச்சலுஞ் சிறு பூசலினுங் கணை,
வச்சிரத்தை விருத்திரற் கென்னவே,
வைச்சிருக்கு மரியை வழுத்துவாம்.

(இ-ள்) மிக்க செல்வத்தைத் தரும் பெரும்போரிலும், அற்பப் பூசல்களிலும், வச்சிரத்தைத்துணையாகவுடைய இந்திரனை யழைத்துக் கூவுவோமாக—(எ-று.)

வருக்கம் 13.

6. காளை யீண்டு கழல்வரு மாண்மையோய்!
நாளு மெங்களை நாடிக் கொடைதரு
மீளி, யப்புனன் பேணிய மேகத்தைக்
கோளுறுத்தித் திறந்து கொடுக்கவே.

(இ-ன்.) காளையே! தவறுத ஆண்மையனே! வள்ளலே! அம்மேகத்தைப்புடைத்து நீரையளிப்பாயாக—(எ-று.) விருஷன் என்னும் பதத்திற் குக்காளையே என்னுது மழை பெய்விப்பவனே யென்பார் சாயணர். கழல்வு அரும் எனப்பிரிக்க.

7. வச்சிரத்தை வழங்கு கை யிந்திரற்
குச்சிக் கூப்பி யுரைத்திடுந் தோமங்க
ளுச்ச மொன்றி னுனன் றேங்குவத்தன்றி மற்
றிச்சகத் தவற்கேற்றன காணிலேன்.

(இ-ள்.) தேவர்க்கென்று கூறப்படும் ஸ்தோமங்களில் உத்தமமான்வையெல்லாம் வச்சிராயுதமாகிய இந்திரனது புகழை மேலும் மேலும் உயர்த்துவனவேயன்றி அவனது பூரண வல்லமையையுங் காட்டுவனவற்றை என்னலறியமுடியவில்லை—(எ-று.)

8. துதிக்குங் காளை யாக்கூட்டந் துளைதலின்
எதிர்க்கலாக் கலி யீசன், கொடையினன்,
மதிக்கு மாண்மை வலத்தின், மனிதரைக்
கதிப்பிற் கூடுவன் கண்டு ரியுமே.

(இ-ள்.) பகைவர் எதிர்க்கமுடியாத வலியுள்ளவனும், ஈசானனும், இச்சைகளைவருஷிப்பவனுமான (இந்திரன்,) அழிய நடட் பொருந்திய காளைமாடு பசுக்கூட்டத்தைச் சாருவதுபோலத், தன் பலத்தினால் (அதுக்கி ரகிக்க) மனிதரையடைவான்—(எ-று.) மேல் ஆறுவது பாட்டில் விருஷா வென்னும் பதத்துக்கு மழைவருஷிப்பவனென்றவர் ஈண்டுகாமியங்களை வருஷிப்பவனென உரை கூறினர். மேலுட்டாகிரிய செப்போது மச்சொல்லைக் காளையென்றே மொழிபெயர்ப்பார்.

மண்டலம் 1 சூக்தம் 8.

9. * ஒருவனுக வெவ்விந்திரன் மாந்தரைத்,
திருவபர்நூறு செல்வத் தொகுதியை,
மருவு மைவகை மானவர் வம்சத்தைப்,
பருவ மோர்ந்து பரித்திடுந் தன்மையன்?

(இ-ள்.) எந்த இந்திரன் ஒருவனுகின்று மக்களையும், தனங்களையும், (குடியிருப்பதற்கு அருகமான) ஐவகைமானவர் வம்சங்களையும் காப்பவன்—(எ-று.) அவனைத்துணைக் கழைப்போமெனப் பத்தாம்பாட்டோடு கூட்டுக. ஐவகைமானவர்வம்சம், ஐந்துவருணத்தவரைக் குறிக்குமென்று சாயணரும், தர்வசர், யதுக்கள், அநுக்கள், துருஹ்யுக்கள், புருக்கள் என்னும் ஐந்து ஆரியர் குடியேற்றவகுப்புக்களைக் குறிக்குமென்று மேனுட்டாசிரியருங் கூறுவர்.

10. * உங்களுக்கென வுன்னி, யெல்லாரினுந்
துங்கனைப், பிறமக்களைத் தோயுறு
தெங்குகின்று மெ மிந்திரற் கூவுவே ;
நங்கட்கே யவ னற்றுணை யாகவே.

(இ-ள்.) இருத்விக் யஜமானர்களே! எல்லா ஜனங்களுக்கும் மேலான விந்திரனைப் (பிறரைச் சாராதபடி) உங்களுக்காகவழைப்போம் ; அவன் கேவலம் எம்மையே யடைந்து துணை நிற்கட்டும்—(எ-று.)

வருக்கம் 14.

8. மண்டலம் 1 அநுவாகம் 3 சூக்தம் 1.

10. இருக்குக்கள் கொண்டது.

ரிஷி : மதுச்சந்தஸ் ; வடமொழிச்சந்தம் : காயத்ரி ; தேவதை: இந்திரன்.

1. * முற்று மின்ப மளிப்ப, தொன்னூர்களை
வெற்றி கொள்வது, வெற்றிகொள்வோனது,
மற்று மேலும் வளர்வதா மொண்ணிதி
யிற்ற யிந்திர வேந்த நுணையென.

(இ-ள்.) பரிபூரண இன்பத்தையளிப்பதும், பகைவர்களைவெற்றிகொள்வதும், ஜயசீலனுடையதும், மேலும் மேலும் விருத்தியாவதுமான செல்வத்தை, இந்திரனே, இன்று (எங்களுக்குத்) துணையாகத் தருவாயாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

2.* கொற்ற வெம்பரி யோடு குறித்து நீ
முற்றவெஞ்சார் முழுத்துணையா நிற்கப்,
பற்றலர்தமைப் பற்றி யெம் முட்டியா
லெற்றி வெம்புரிந் தேற்றம் பெறுகவே.

(இ-ள்.) குதிரை (முதலிய சேனை) யோடு நீ எங்கள் துணையாக நிற்கையில், எதிரிகளோடு முஷ்டியுத்தம் செய்து அவர்களை யாங்கள் தோற்கடிக்கவும்—(எ-று.) உதவி செய்யுந்தனத்தைத் தருவாயாக வென மேற் பாட்டோடு கூட்டுக.

3. மெச்சு நின்றுணை மேவியிங் கிந்திர
வைச்ச நற்றிட வச்சிரந்தன்னை யா
நச்சிக் கையகத் தேந்திப் பகைவரை
நிச்சலு மொறுத்தாற்றிச் சயிப்பமே.

(இ-ள்.) இந்திரனே! உன்றுணையை யடைந்து உனது உறுதியான வச்சிராயுதத்தை ஸ்வீகரித்துப் பகைவரை வெல்வோமாக—(எ-று.)

4. அத்திரங்க ளடைந்திடு சூரர்க
ளொத்த நற்றுணை யாக, விங் கிந்திர
யுத்த பூமியி லுற்ற பகைவரை
மெத்து நின்றுணை கொண்டு விரட்டுவோம்.

(இ-ள்.) இந்திரனே! அஸ்திரங்களோடு கூடிய சூரர்களை எங்களுக்குத் துணையாகக்கொண்டு, யுத்தத்தை விரும்பி நிற்கும் பகைவரை யுன்னுவியாலோட்டுவோம்—(எ-று.)

5. தேக வன்மையு மிந்திரற் குள்ளத்தி
னேக வன்மையு மென்று முறைந்திடல்;
மாக மென்ன வலியுங் குளிசத்தின்
வாகை யுள்ளவற் கென்று மருவலே.

(இ-ள்.) இந்திரன் சரீரதிடத்தோடு குணச்சிறப்பு முள்ளவன். இவ்விருவகை வலியும் அவனுக்கு அமையட்டும். வச்சிரியாகிய அவனுக்கு விசும்புபோற் சேனபலமும் பரந்து நிற்கட்டும்—(எ-று.)

வருக்கம் 15.

மண்டலம் 1. சூக்தம் 8.

6. போரில் வெங்கொடாப் புத்திரர் கூடவு
மேரி னல்லறி விச்சிக்கு மேதையர்
சாரு மாறுந் தயக்கிடு மவ்வலி
கூர வேண்டுவோ ரன்னவற் கூப்புவார்.

(இ-ள்.) யுத்தத்தில் பலம்பொருந்திய புத்திரர்களையாவது, பிரக்ஞாகாமிகளாயுள்ள மேதாவிகளையாவது பெற விரும்புவோர் அவ்விந்திரனை த்துதிப்பார்—(எ-று.)

7. மட்டில் சோமத்தை மாந்தி யவன்வயி
றெட்டலாத விடங்கொள் பரவையின்
வட்டமாகப் பருத்து வளர்ந்ததோ
டொட்டி வாயுறு நீரினையொத்ததே.

(இ-ள்.) சோமத்தை யுத்தமமாகக்குடிக்கு மவன்வயிறு கடலைப் போல் உருவில் வளர்ந்ததுமன்றி வாய்நீ ரூற்றுப்போல (வற்றுமலும்) இருந்தது—(எ-று.) மேனுட்டாசிரியர் 'வானின்றிழியும் பல நீர்த்தாரைகளைப் போலவுமாயிற்று.' என்பார். அற்றேல் 'ஒட்டி வான்பெருக் கொத்துச் சிறந்ததே.' என்க.

8. பெருமை வீரியம் பேசுறு நன்னல
மிருமை யானி தி யாவும் பொருந்தியே
யருமை வாய்ந்த வவன்குணந தாசுடார்க்,
குரிய தீங்கனிச்சாகையி னீங்குமே.

(இ-ள்.) பெருமையும், வீரியமும், முதலிய பலநலங்களும், பசுச் செல்வமும், சார்ந்த அவன்து குணம் யாககர்த்தாவுக்குப் பழநிறைந்த மரக் கிளையையொத்துநிற்கும்—(எ-று.) தாசுடன்=யஜமானன், யாகஞ்செய் வோன் இவ்வேதத்தில் யஜமானன் என்னும் சொல் யாககர்த்தாவென்னும் பொருளிலேயே வரும்.

9. இந்திர வுன்விபூதிக ளென்னெத்தத்
தந்து போற்றுறுந் தாசுடற்குத் தினை
நந்து மாறிவ் ணைக்கு முண்மையின்
வந்து நிற்கு மிவ்வண்ணம் நிலைக்கவே.

(இ-ள்.) இந்திரனே! உன்து விபூதிகள் (ஐசுவரியவீசேடங்கள்.) என்போன்ற யஜமானனுக்குத்தினையாக இன்றைக்கும் வரும்—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

10. அற்றே யன்னவ னன்புக் கொடைகளும் ;
உற்ற சோம முவப்பிற் பருகுவான்
முற்று நல்லிசைத் தோமமு மிந்திரன்
வெற்றி கூறு முக்தங்களு மோங்குக.

(இ-ள்.) அவனது விரும்பத்தக்க கொடைகளும் அத்தன்மையன வாம்; சோமங்குடிக்கும்வண்ணம் இந்திரன் பொருட்டு ஸ்தோமங்கள் பாடப் படட்டும்; உக்தங்களுரைக்கவும் படட்டும்—(எ-று.) ஸ்தோமம்=சாமகன் பாட்டு, உக்தம்=ரிக்வேதி யுரைக்கும் சஸ்திரம் என்பார் சாயணர். விரும் பும் வண்ணமாகவும், புகழும்வண்ணமாகவும் இந்திரனுடைய சோம்பானத் தின்பொருட்டு ஸ்தோமங்கள் பாடப்படட்டும். சஸ்திரங்கள் உரைக்கப் படட்டும் என்பார் சாயணர்.

9. மண்டலம் 1. அநுவாகம் 3. சூக்தம் 2.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மதுச்சந்தஸ்; வடமொழிச்சந்தம்; காயத்ரி; தேவ தை: இந்திரன்.

1. வருக விந்திர சோம மகம்புரி
பருவம் யாவும் பருகிக் களிகொள்க
திருகு மொன்னலர்த் தீமை விலக்கிடும்
பெருகு மாற்றற் பிரபல மோங்கவே.

(இ-ள்.) இந்திரனே! சோமம் பிழியுங் காலந்தோறும் அதனைக்குடித் து மதம்பெறுவாயாக; சத்துருக்களை வதைக்கும் பெருமையுடை விருப்பா யாக—(எ-று.)

2. உலகில் யாவு முறு முதலாகிய
வல மருவிடு சக்கிரி யுள்ளத்தி
னிலவ வின்ப நிரப்பிடுஞ் சோமத்தை
யுலவு மிந்திரற்கா விழைத் தூற்றலே.

(இ-ள்.) எல்லாக்கர்மங்களையுந் தூண்டும் பலவானுகிய சக்கிரியினது உள்ளத்தில் களிப்பூற மதமூட்டுஞ்சோமத்தை யிந்திரனுக்காகப் பிழிந்து ஊற்றுங்கள்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 9.

3. அழகுசார் கதுப் பன்பர்த நாயக
பழகு மின்பம் பரிக்கு மிப்பண்களில்
விழைவி னுநந்த மேவிச் சவனத்தி
னுழை மகிழ்ந் தமர்பிற சோடுறல்.

(இ-ள்.) கன்னவழகுள்ளவனே! யஜமானர் யாவர்க்கு நாயகனே! (எல்லா யாக கர்த்தாக்களாலும் துதிக்கப்படுபவனே!). இன்பவேதுவாகிய தோமங்களில் மகிழ்ந்து மற்றைத்தேவரோடும் வருக—(எறு.)

4. எந்த மெண்ண மியைத்திடு நாயக
விந்திர வுன் னெழிலுரை கீர்த்தனே
வந்தனையின் வயக்கினெ னன்னவை
நந்து முன்றனே நாடி யின்பாற்றுமே.

(இ-ள்.) இச்சைகளே யளிப்பவனே! யஜமானர்களுக்குப் பதியாகியவிந்திரனே! உன்னிடத்து மேலோங்கிச் சேவிக்கும் வண்ணந் துதிகளை யாற்றினேன். அவை யுனக்குச் சந்தோஷத்தையளித்து நின்றன—(எ-று.) வடமொழி ரிக்கிலுள்ள அஜோஷா: என்பது தவறென்றும், சாமவேதத்தில் இந்தரிக்ஸஜோஷா: என்றிருப்பதேசரியென்றும், லுட்விக்கென்னும் மேனாட்டார் கூறுவர். அஜோஷர் என்பது சரியாயின் அவை உன்னைப்பிரீதியோடு சேவித்துந் திருப்தியடைவதில்லை, என்னல் வேண்டும்.

5. சிறப்பி னேங்கிய சித்திரச் செல்வத்தை
யிறப்ப விந்திர வீந்தரு, ளெவ்வகைச்
சிறப்பு மார்ந்த விபுவ னின்வேறிலர்
வறப்பரும் பொரு ணுயகன்ரு னுநீ.

(இ-ள்.) இந்திரனே! சிரேஷ்டமும் (மணி முத்துக்களோடு கூடிச்) சித்திரமுமான தனத்தை எம்பொருட்டுத்தருவாயாக; பிரபுவும் விபுவும் நீயேயாவாய்—(எ-று.) விபு போகபரிபூரணத்தையுணர்த்துமென்றும், பிரபு அதற்குமேலுமுள்ள ஐசுவரியமுடைமையை யுணர்த்துமென்றும் சாயணர் கூறுவர்.

வருக்கம் 17.

6. அளவில் செல்வத் தரி யிங்கருந்தொழில்
பழகிக் கீர்த்தி பரவிய வெங்கண்மாட்
டொழிலிலாப் பொருளுற்றிட வவ்விடத்
தளமருவித் தொழில்வயி னூக்கலே.

(இ-ள்.) அளவில்லாத செல்வமுள்ளவிந்திரனே! அருந்தொழிலைச் செய்து கீர்த்தி பரவிய வெங்கனிடத்துப் பெரும்பொருள் சேரும்வண்ணம் எம்மை எங்களெங்களது தொழிற்கண் ஊக்கப்படுத்துவாயாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

7. பூன்ற வாயுள் பொருத்துவ, தாக்களோ
டான்ற தன்மை யளவும் பெருத்தது,
தோன்று மட்சயம் வன்மை துதைந்ததா
யேன்ற செல்வ மெமக்களி யிந்திர.

(இ-ள்.) தீர்க்காயுளைத்தருவதும், ஆக்களதிகமாகவுள்ளதும், குணத்திலும் பரிமாணத்திலும் பெரியதும், விநாசரகிதமானதும், வல்லமையுள்ளதுமானசெல்வத்தை எமக்கு நன்கு தருவாக, இந்திரனே! (எ-று.)

8. பண்டி கொண்டு பரந்து களத்தினின்
மண்டி யேற்றி மடக்கி யில்லந்தரு
முண்டி யாயிர மொண்ணிதி, யிந்திர,
மிண்டு சீரும் விளங்க வளிக்கவே.

(இ-ள்.) வண்டிகளின் மேலேற்றிவரும் யவமாதிதானிய ரூபமான வண்டியையும், ஆயிரக்கணக்கான தானத்தோடு கூடிய செல்வத்தையும், பெருங்கிய மகத்தான கீர்த்தியையும் எங்களுக்குத்தருவாயாக—(எ-று.)

9. எங்க ளாக்கத் தியன்று துணைசெயுஞ்
சங்க மென்னு நிதிபதி யிந்திர
னங்க மாக வருபவ னென்று, பாப்
பொங்க நல்லிசைப் போற்றி னழைப்பமே.

(இ-ள்.) எங்களுடைய செல்வப்பாதுகாப்புக்குதவி செய்யும் வஸு பதியாகிய விந்திரனே யாகசாலைக்கு வருபவனென்று பாட்டுக்கள் பாடிக் கூவுவோம்—(எ-று.)—வஸு=செல்வம். சங்கமென்றது மூலத்திலில்லை.

10. சுதை யளித்திடு தோறு மமர்ந்திடும்
மதிமகத்துவ வாகண்டலன் பெரு
மதுகை மந்திர மோதி யர்ச்சிப்பரா
கதிதரு மகங் காண்பவர் யாருமே.

(இ-ள்.) எல்லா யஜமானர்களும், (இந்திரனுக்காகச்) சோமம் பிழிந்து தரும்போதெல்லாம், நியமிக்கப்பட்டவிடத்தில் அமரும் பெரியவனாகிய இந்திரனது பெரும் பலத்தை யர்ச்சிப்பார்கள் (புகழ்வார்கள்)—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 10.

10. மண்டலம் 1. அநுவாகம் 3. சூக்தம் 3.

12 இருக்குக்கள்கொண்டது.

ரிஷி: மதுச்சந்தஸ்; வடமொழிச்சந்தம்: அநுஷ்டுப் (தமிழிற் கலிநிலைத்துறை); தேவதை; இந்திரன்.

1. ஓங்கு நூறியாகத்தினி னுயர்ந்தவ னுனது
தேங்கு தூய்மறை செப்புவோர் சிறப்பெடுத் துரைப்பா
ரீங்கு பண்ணிசைத் துன்புக ழேத்துவோர் பலராற்
றூங்கு தங்குடி யுயர்த்தலொத் துயர்த்தினர் மறையோர்.

(இ-ள்.) சதக்கிருதுவே! உன்னைக்காயத்திரியோதுவார் காய்த்திரியாலும், அர்ச்சிப்போர் பண்ணினாலும், புகழ்ந்து பேசுவார். பிராமணர்கள் தங்கள் குலத்தையுயர்த்துவதுபோல (இச்செய்கையால்) உன்னை உயர்த்துகின்றார்கள்—(எ-று.) தூய்மறை=காயத்திரி. "வம்சமிவ" வென்பதற்கு மூங்கில்போல எனப்பொருள்கொள்வது மொன்று. கழைக்கூத்தன் மூங்கின்மேலாடும்போது அதனை நிமிர்த்திப்பிடித்தல்போல் என்க. அற்றேல், "மூங்கில்போல மாகம் பெற வுயர்த்தினர் முதியோர்" என்று படிக்க. சதக்கிருது வெது தன்மமுள்ளோன், பேறிவள்ளோனென்பார் சாயணர்.

2. சிகர மொன்றினின் றொன்றினைச் சேர்ந்து தன்சிர மிகவு நோக்கிடா தாற்று மேம்படு தொழி லுணர்ந்து
தகைகொ ளப்பணித் தகுதியை மனங்கொளும் வள்ளல்,
தொகைகொ ளீட்டமோ டேகுவன் சுவைக்க விந்திரனே.

(இ-ள்.) (ஸோமலதை, ஸமித்து, முதலியவற்றைச் சேகரிக்க) ஒரு மலையுச்சியிலிருந்து மற்றொருமலையுச்சிக்குத் தன்சிரமத்தைப் பாராமற்சென்று அவற்றைக்கொண்டுவந்து செய்யும் (சோமயாகக்) கருமத்தின் பெருமையையறிந்து அதற்காக அவனுக் களிக்கவேண்டிய பிரயோஜனத்தையும் மனதிலெண்ணி, வள்ளலாகிய இந்திரன் தன் (மருத்துக்) கூட்டத்தாரோடு (யாகபூமிக்கண்) வருவான்—(எ-று.)

3. கல்லணைக்குளே நிறை பரு முடலினி னிளைய
புல்லு நெட்டுளைப் புரவியி னிணையினைப் பூட்டி
யெல்லும் யாமமுஞ் சோமமே பருகு மிந்திரனே
சொல்லும் பாவினைக் கேட்டுள மகிழ்ந்திட வரலே.

(இ-ள்.) சோமம்பருகுமிந்திரனே! கல்லணைக்குள் நிறைந்து புஷ்டியானவுடலோடுகூடி, யிளம்பவாய்ந்து, நீண்ட கழுத்துமயிரோடு கூடிய குதிரையிரண்டையும் (தேரிற்) பூட்டி யாங்கள் சொல்லும் கீதங்களைக்கேட்டு மகிழ வருவாயாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

4. எகி யிங்ஙன மெமதுபாக் கேன்ற நற்குரலி
னேகை யோடெதி ரோமென வுரத்திசை பாடி
வாகை யிந்திர வழங்கு மெந்தோத்திரம் பயனுற்
றேகை யெய்த விவ்வெக்கிய மோங்கிட வளர்ப்பாய்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய (செல்வகாரணனை) இந்திரனே! இவ்விடத்து வந்து, (உத்காதாக்களுடைய) ஸ்தோத்திரங்களோயும் (அத்வர்யுக்களினுக்தங்களோயும், ஹோதாக்களின் சஸ்திரங்களோயும்) நோக்கிச் (சந்தோஷசித்தனுய் எல்லா ரித்விக்குக்களோயும் புகழ்ந்து) எதிர்க்குரல் கொடுப்பாயாக; பின்பு எங்களுடையம்மறைகளோயும் யாகத்தையும் வளர்ப்பாயாக—(எ-று) பிரஹ்ம=மறை, அன்னமென்பார் சாயணர். சஸ்திரமெனினும் உக்தமெனினும் ஒக்கும்.

5. சத்துருக்கள் பல்லோரையுந் தடிபவ னெமது
மித்திரர்களுஞ் சுதர்களு மேம்படுமாறு
சித்தம் வைப்பவன் சக்கிரன் பெருமையி னேங்க
வுக்த மிந்திரற் கெங்களா லுரைபெற றகுமே.

(இ-ள்.) பகைவர் பலரையும் வாட்டுபவனும் எமது புத்திரமித்திரர்களே மேம்படச்செய்பவனுமான சக்கிரன்து பெருமை யோங்குமாறு இந்திரன் பொருட்டு நாங்கள் உக்தங்கள் கூறவேண்டும்—(எ-று.) சக்ர:=சக்கிரன்=சக்திமான்.

6. தோழ னெகென வவனையே விழைகுவர், தோன்று
மாழை யீகென விளிக்குவம், வீரியம் வாய்ந்த
பாழிவெம்புய வலியினை யாசிப்ப, மவனே
காழில் செல்வத்தை யுதவிடுஞ் சக்கிரனதனுல்.

(இ-ள்.) குறைவில்லாத செல்வத்தை யளிக்குஞ் சக்திமானவனுதலால் அவனையே தோழனுகவென்றும், பொன்னளிக்கவென்றும், பலந்தாலென்றும் கேட்டடைவோம்—(எ-று.) சக்கிரன்=சக்திமான்.

வருக்கம் 19.

7. நீயளிப்பவை யிந்திர விரைவினிற் றிறந்து
சேயகறவுவா னெளியவாச் செறிந்திடு மியல;
தூய கொட்டிலி னுக்களைச் சுறுக்கென வெளிவிட்
டேயுஞ் செல்வத்தை வச்சிரி யெமக்கென வியைப்பாய்.

(இ-ள்.) உன்னுல் அளிக்கப்படும் செல்வமானது இலகுவாகப் பலவிடங்களிற் போகக்கூடியதும், சுகமாய் மிச்சமில்லாமல் அடையக்கூடியதுமான தபற்றிக், கொட்டிலே (மேகத்தை) த்திறந்து வெளிவரும் பசுக்களாகிய (நீராகிய) செல்வத்தை யெங்களுக்குத் தருவாயாக—(எ-று.) மழையை யளித்து எங்களது பயிர்களை வளர்ப்பாயாக வென்பது பொருள்.

மண்டலம் 1. சூக்தம் 10.

8. கோப மூண்டபோ துன்னை யிக்குவலயத்தோடு
சோபை யுள்ள வர் னிரண்டுமே தாங்குத லரிதர்;
லாப மேகத்தி னுள்ளன வெமக்கென வணைந்து
தாப நீக்கவும், பசுக்குழு சருவ்வு மமைப்பாய்.

(இ-ள்.) சத்துருக்களை வதைக்கும்போது உன்னைப் பூமி வானமிரண்டும் தாங்கமுடியாது; நீயே ஜயிப்பாய்; மேகத்திலுள்ள மழையும், பால்தரும் பசுக்களும் எங்களைச்சேரச்செய்வாய்—(எ-று.)

9. கூர்ஞ்செவிப்புல னியைந்தவ, வெனதழைப்பினைக்கே
ளேய்ஞ்ச பாணினிற் செவிகொடு, விந்திர, வெண்ணாத்
தோய்ஞ்ச தோழமுந் தோமறு நண்பினு மருகில்
வாய்ஞ்சன் போதத்தி னுள்ளுற வாலித னமைக.

(இ-ள்.) எப்பொழுதுஞ் செவிகொடுக்கவல்ல விந்திரனே! யாண் கூப்பிடுவதைக்கேட்டு, என்பாட்டைச்செவிக்கொண்டு, எனதுதோம்மின்ற உனது நண்பர்களைக்காட்டிலும் அதிகமாக உன்மனதிற் பதியும்படி செய்வாயாக—(எ-று.)

10. போரிற் கூவி யாமழைப்பதைக் கேட்பவ, வுனையுஞ்
சீரின் யாரினும வலிசிறந்தவ னெனவறிவேம்;
பாரி ஞயிரக்கண்க்கினிற் பிரிந்தெமக் களிக்கு
மேரி னுத்தமக் காளையுன் றுணையினை விழைவோம்.

(இ-ள்.) போரினில் யாம் துணைகூவுவதைக்கேட்பவனே, நீ மிக வலியுள்ளவனென்று எங்களுக்குத்தெரியும்; ஆயிரக்கண்க்கான இடைகளைத்தருமுத்தமனே உன்றுணையை விரும்பியழைப்போம்.—(எ-று.) வருஷ்தமம்=உத்தமவள்ளல் என்பார் சாயணர். வருஷ சப்தம் வருமிடமெல்லாம் மேனட்டாரியர் காளையென்றும், சாயணர் காமாநாம்வர்ஷிதாரம் என்றும் உரை கூறுவர். அதனல் 'சீரின்யாவையுஞ் சிறந்தளிப்பவனெனவறிவேம்.' என்றும் பாடபேதம்.

11. கோசிகக் குடியுதித்த தெய்வம்மெனச் சாரு
நேச விந்திர மலர்முகத் தெமசுதை நேர்க,
வாசில் கன்மமா ராயுணீண்டுற வெமக்கமைக்க,
பேசு மாயிரம்பல னிந்த விருடிக்கும் பெருக்கல்.

(இ-ள்.) கோசிகக்குடியிற்பிறந்தவிந்திரனே! களிப்புடன் எமது சோமத்தையேற்க;சற்கருமத்தோடுகூடிய தீர்க்காயுளை யெங்களுக்குத்தருக; ஆயிரக்கணக்கான பல்கலை இவ்விருடிக்குத் தருவாயாக—(எ-று.) மதுச்சந்தஸ் விசுவாமித்திரவம்சத்திற்றோன்றியவன். குசிகன் இந்திரனுக்குச் சமானமானபிள்ளையை விரும்ப அவனே காதிபுத்திரனுகப்பிறந்தனென்று அநுக்ரமணியை கூறும்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 1.

12. பாக்க ணைந்தம் பரிந்துகொள்பவ வுனையெமது
பாக்க ணன்குபக்கத்திலும் வளைந்து சூழ்ந், துறுதி
யாக்கு மாயுணீட்டத்தினின் வலிபெற வமைத்துத்
தேக்கு மின்பத்தை யளிக்குமா றுன்வயிற் சேர்க.

(இ-ன்:) பாட்டுக்களிலுவப்பவனே! எமதிப்பாக்களுன்னைச் சூழ்ந்து எப்போதும் நிற்கட்டும்; தீர்க்காயுளைப்பொருத்தி உனது பலத்தை வளர்த்து எமக்குச்சுகத்தைத் தருமாறு உன்னிடத்திற் சேரட்டும்—(எ-று.)

வருக்கம் 20.

11. மண்டலம் 1: அநுவாகம் 3. சூக்தம் 4.
8 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மதுச்சந்தஸின் புத்திரன் ஜேதா; வடமொழிச்சந்தம்: அநுஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. மகதர்களி லுத்தமன், வலியினுக் கரசன்,
றகுபெரும்பதி, யிந்திரன், சமுத்திரஞ் சிவணக்
ககன மெங்கணும் பரவுவான், கதித்துறு மெல்லாத்
தகவு பாக்க ளிந்திரன்றனை யுயர்த்தின வன்றே.

(இ-ள்.) தேர் கடாவுவோரிலுத்தமனும், வலியுள்ளவர்களுக்குஞ் சன்மார்க்கர்களுக்கும்பதியும், சமுத்திரம்போல் எங்கும் வியாபிப்பவனுமாகிய இந்திரனது புகழை (எமது) பாக்களெல்லாம் விருத்திபண்ணின—(எ-று.)

2. கொற்ற நாயகனுன வுன்னண்பினைக் கூடி
முற்ற வீட்டுவ மிந்திர வெம்பய முழுதும்;
வெற்றிகொள் ளபராஜித விழைந்துனைத் துதியா
லற்ற நீங்கவே புகழுவ மிடைவிடா தழகே.

(இ-ள்.) வலிக்கு நாயகனும், (யுத்தத்தில்) வெற்றிகொள்ளும் அபராஜிதனுமாய உன்னை, இந்திரனே, எப்போதும் துதித்துப்புகழ்ந்து எமது பயமுழுவதையு மொழிப்போம்—(எ-று.)

3. மகத்தினைநது தோத்திரங்களே யியம்பிடு மகருக்
குகக்கக் கோக்கொடை யுறுத்திடும் பொழுதினி, லரியின்
றகைக்கொடைகள் பூர்வத்தினின் றுதவுறு துணைக
ளிகத்தி னென்றுமாறு வியலெய்திய வாமே.

(இ-ள்.) யாகப்பிரதேசத்துக்குச் சென்று ஸ்தோத்திரஞ்செய்வோருக்குப் பசுக்கொடையை யவன் ஆற்றும்போது அவனுற்றாப்பதும் தட்சிணைகளும், அநாதிகாலந்தொட்டு அவன் செய்யும் உதவிகளும் அவனுக்கு இயல்பாக வந்தன—(எ-று.) கொடைகளும் துணைகளு மெனவும்மை விரிக்க.

மண்டலம் 1. சூக்தம் 11.

4. வச்சிரப்படை யிந்திரன் ஞானவா னிளைஞ
னச்சலர்ப்புரம் பொடிப்பவ னனிதுதி யணைந்தோ
னெச்சமின்றி யெல்லாக் கருமங்களுந் தரிக்கப்
பொச்சமில் வலி யமிதமாப் பொருந்தியே பிறந்தான்.

(இ-ள்) வச்சிரப்படையைத்தாங்கினவனும், கவியும், (மூப்படையாத) இளையவனும், (அசுரராகிய) 'பகைவரது' கோட்டைகளையழிப்பவனும், பல விதமான துதிகளைப் பெற்றவனுமான இந்திரன் எக்கருமங்களையு நடத்துவதற்கேற்ற அளவில்லாத வலியோடேயே தோன்றினான்—(எ-று.)

5. வலனெனு மசுரன்றன தாநிறை மலையின்
பிலம் பிளந்திடத் தகர்த்தனை, தேவர்க ளுனது
நலம்பொருந்திய சார்பினி னெருங்கி நன்மனத்தே
யுலமரல் சிறிதும்பிலா தோங்கினர் குளிச.

(இ-ள்.) வச்சிராயுதந்தரித்தவனே! வலனென்னுமசுரன் பசுக்களையடைத்துவைத்திருந்த பிலத்தினைப்பிளந்தாய். அதனால் வருத்தமடைந்த தேவர்கள் மனக்கலக்கமில்லாம லுன்பக்கத்தே வந்து நின்றார்—(எ-று.) அதிவ: = மேலேபோன்ற வச்சிராயுதத்தை யேந்தினவன் என்பது பொருள். வலன் ஒருகாலத்துத் தேவரது பசுக்களையொரு பிலத்திலடைத்து வைத்தான். அவற்றை இந்திரன் கண்டு தன்சேனையோடு சென்று திறந்து விட்டானென்பது கதை.

6. கொடை நினைத்துனைச் சூரனே யணைதுவான் குறித்துன்
கொடை மடத்தினைப் புகழ்ந்துற்றேன்; சிந்துவை யீண்டு
மிடைந்து பல்லறிவாளரு மமர்ந், ததற்குறுதி
யடைந்த பன்மொழி விளமபினர் பண்ணுவப்பவனே.

(இ-ள். யுத்தத்திற் சௌரியம்வாய்ந்தவனே! நீகை பொருந்திய உன் (வரையாது கொடுக்கும்) வள்ளன்மையைப் புகழ்ந்தடைந்தேன்; பல அறிவாளரும் சோமத்தொட்டியை (சிந்துவை)ச்சூழ்ந்து இந்த சோமபான யாகத்தில் நீ தருங் கொடையைப் புகழ்ந்து பேசினார்கள், பண்கேட்டுமகிழ்பவனே!—(எ-று.) அதற்கு=அக்கொடைமடத்திற் கென்க.

7. மாயை யாவையுஞ் செய்பவல் சுட்டுணன்றனை யுன்
மாயை கூடிய சத்தியான் மடித்தனை யிந்தத்
தூய செய்கையை ஞானிக ணுணக்கியே துதித்தார்
நீயு மத்துதி பின்னுற வருஞ்செய னிறுவல்.

(இ-ள்.) மாயைகளெல்லாம் செய்யவல்ல சுட்டுணனை யுனது ஞான சத்தியாற்கொன்றனை; இச்செய்கையை ஞானிகள் அறிந்து துதித்தார்கள்; அத்துதியைக்காட்டிலு மதிகமான செய்கைளைச் செய்வாயாக—(எ-று.) சுஷ்ணன்=சுட்டுணன்: பூதங்களைச் சுஷ்கஞ்செய்வோன், மண். 1.சூக். 104. ரிக் 8. பார்க்க.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

8. வீலிபொருந்திய வீரகை ளாயிரக்கணக்கி
னிலே பொருந்துறப், பன்மடங் கின்னமு நீள,
வலி பொருந்து மீசானலு மிந்திரன்றனை யெம்
பலம் பொருந்திய தோமங்கள் மாண்புயர்த்தினவே.

(இ-ன்.) யாருடைய செல்வக்கொடைகள் ஆயிரக்கணக்காகவும், அதற்குமேலும் அமைந்துகிடக்கின்றனவோ அந்தராசனனுகிய விந்திரனைப் பலம்பொருந்திய எமது ஸ்தோமங்கள் எப்பொழுதும் துதித்துப்பெருமைப் படுத்தின—(எ-று.) ஸ்தோம: என்பதற்கு ரித்விக்குகள், ஸ்தோத்திரஞ்செய்வோர் எனப்பொருள்கொண்டு, துதிப்பார்களென முடிப்பார் சாயணர்.

வருக்கம் 21.

12. மண்டலம் 1. அநுவாகம் 4 சூக்தம் 1.
12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி : கண்ணுவபுத்திரன் மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்ரி ; தேவதை: அக்கினி.

1. வேதம் யாவையு மோர்ந்தவன், மேன்மைசால்
தூத; னேதர், சுவைபெற விம்மகத்
தீது நீக்கிடு மக்கினி தன்னைத் தேர்ந்
தாதரவென வார்ந்து துதித்தனம்.

(இ-ன்.) விச்வவேதஸனும், தூதனும், ஹோதாவும், இம்மகத்தை நன்மைப்படுத்துபவனுமான, அக்கினியைத்தேர்ந்து துதித்தோம்—(எ-று.) விச்வவேதஸன்=எல்லாவிதமான செல்வங்களுமுடையனென்றும், (ஓதா) ஹோதாதேவர்களைக் கூட்டிவருபவனென்றும் பொருள் கூறுவார் சாயணர்.

2. மிக்க வெந்துதி மீதுறக் கூவியே
யிற்கு நாயகன் மீயன் பியைந்தவன்
றக்க வொள்ளவி தாங்கிடு மக்கினி
பக்கல் சார வெப்போது மழைப்பரே.

(இ-ன்.) யாகவில்லங்களுக்கு (ஹோதா முதலியவர்களுக்கு) நாயகனும், மிகுந்தவன்பிற் கிருப்பிடமும், (யஜமானன் தரும்) அவியைத் (தேவர்கள் மாட்டுச்) சேர்ப்பவனுமாகிய அக்கினியைச், சதா (ஹோதாக்கள்) அழைக்கிறார்கள்.—(எ-று.) வடமொழி இருக்கில் அக்நிம் அக்நிம் என்றுள்ளது. உருவத்தால் ஒன்றாயினும் பிரயோகபேதத்தாலும், அகவநீயாக்நிஸ்தானபேதத்தாலும், பாவகாதி விசேஷணபேதத்தினுலும், பலவிதப்படுவதால், அக்நிம் அக்நிம் என்று சொன்னார் சாயணர்.

மண்டலம் 1. சூக்தம் 12.

3. உருப்பெற் றேங்கி யரணியெழு மங்கீ
தருப்பை கொய்குவோர்தந் தூணைக்காக விங்
கருப்பிற் றேவரை யாக்குக், தூதனீ
விருப்பி னெந்தூதிக் கேற்றவன் ருனுமே.

(இ-ள்.) அக்கினியே! அரணியிற்ரேன்றுபவனுகிய நீ தருப்பையை றுக்கிப் பரப்புவோருக்கு உதவியாகத் தேவரை யழைத்து வருவாயாக. ஹோதாவும், யாங்கள் போற்றத்தகுந்தவனும் நீயே.—(எ-று.)

4 நெய்யி னுவுதி நேடி யளிக்கக்கொள்
செய்ய வெஞ்சுட ரக்கினி தேவனே !
வெய் யரக்க ருதவெம் பகைவராங்
கையர்தம்மைக் கடிதி னெரிக்கவே.

(இ-ள்.) நெய்யாவுதியேற்கும் பிரகாசம் பொருந்திய அக்கினியே! கொடியஅரக்கர்களினுதவிபொருந்திய எம்பகைவரை யெரிப்பாயாக-(எ-று.)

6. மற்ரெ ரக்கினி மாட்டி யிவ்வக்கினி
யுற்ற தன்னெளி யோங்கி யொளிரு; மிவ்
விற்பதிக் கவிக் காளை யவிகொள்வோன்
பொற்புவாய் முகம்போந்த சுருக்கினன்.

(இ-ள்.) (ஆகவநீயமென்ற) விவ்வக்கினி (அரணிகடைந்த) நெருப்பினுல் மூட்டப்பட்டொளிர்கிறன்; இவனே கிரஹபதியும், (நித்தியயெளவனம்) காளைப்பருவம் வாய்ந்தவனும், கவியும் (மேதாவியும்), சுருக்கை (நெய்யூற்றுந்துடுப்பை) யழகியமுகமாகக் கொண்டவனுமாம்.—(எ-று.) ஜுஹ்ற வாஸ்ய : ஜுஹ்ஹுரூபமானமுகத்தோடு கூடியவன். சுருக்குமுகம் போன்வன் என்பது மேனுட்டாசிரியருரை.

7. சத்தியத்தைத் தருமத்தைப் பாலிக்கு
முத்தமக்கவி, துன்ப மொழித்திடச்
சித்தங்கொள் ளெரிதேவனே யாகத்தே
மெத்த வேத்திப் புகழ்ந்து விளம்பலே.

(இ-ள்.) சத்தியத்தையுந் தருமத்தையும் பரிபாலிக்கும், மேதாவியாகிய அக்கினிதேவனே, (சத்துருக்களாலும் ரோகத்தாலும்வரும்) துன்பத்தை யொழிப்பவனே,யாகத்தில் (ஸ்தோத்திரஞ் செய்பவர்) புகழ்ந்து கூறட்டும்—(எ-று.)

8. சுவைக்கத் தேவரைக் கூட்டிடு தூதனு
மவிக்கு நாயக வக்கினி தேவநீ
யுவக்கக் கைகுவித் தேத்து மொருவற்குப்
புவிக்க ணல்லாணுகப் பொருந்துக.

(இ-ள்.) அக்கினி தேவனே! அவிப்பதியே! தேவரைக் கொண்டு வருந் தூதனுகிய வன்னைப் போற்றுவோனுக்கு நீ அவசியமாக ரக்ஷகனுயிருப்பாயாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

9. தேவர் நல்விழாக் காலத் தவிசொரிந்
தேவனக்கினி யேகென் றழைப்பவன்,
பாவு தூய்மை பரப்பிடும் பாவக,
வாவ ஹோ டவனுக் களி செய்கவே

(இ-ள்.) தேவரது விழாக்காலத்து எவன் அவியைச்சொரிந்து உன்னையழைப்பவன் அவனைப், பாவகனே, சுகத்திலிருத்துவாயாக–(எ-று.

10. பாவகப் பெயர்ச் சோதி பாஹியோய்!
தேவர்தம்மைச், சிறப்பி னிவ்வெக்கிய
மேவி யெம்பலி யேற்க விழைந்திவட்
பாவும் வண்ணம் பரிந்து கொணர்கவே.

(இ-ள்.) மிகுதியான பிரகாசத்தோடு கூடிய பாவகனென்னு மக்கினியே! இவ்வெக்கியதலத்தின்கண் வந்து எமதுபலியையேற்க மெருங்கும் படித் தேவரைக் கொண்டுவருவாயாக—(எ-று.) பாவகன்=வஸ்துக்களைப் பரிசுத்தஞ்செய்பவன் அல்லது சோதிப்போன்.

11. மிக்க காயத்திரியை விழைந்திசை
தக்கதான நவீன மறைதரு
மெக்கியத்த, மெமக்கு, நல்வீரரோ
டொக்கமேவிடு முண்டி பொன்னீகவே.

(இ-ள்.) காயத்திரிச்சந்தவில் (புராதனராற் சொல்லப்படாத) புதிய சூக்தத்தால் துதிக்குமெமக்கு, வீரர்களோடு கூடிய உணவுஞ் செல்வமுஞ் தருவாயாக—(எ-று.) எக்கியத்தாராகிய வெமக்கென்க.

12. வெண்சுடர் விரி யக்கினி வேண்டியெத்
திண்பெறுஞ் சுரர்தம்மையுஞ் சேர்க்குறும்
பண் பழகிய நீயிங் கியாமிசை
யெண்பெறுந் துதி யேன்று களிக்கவே.

(இ-ள்.) வெண்மையான காந்தியோடு விளங்குமக்கினியே! எல்லாத்தேவர்களையும் கூட்டக்கூடிய தோத்திரங்களோடு கூடிய நீ, எங்களது இந்தப்போற்றியுங் களிகொள்ளுவாயாக—(எ-று.)

வருக்கம் 23.

13. மண்டலம் 1. அநுவாகம் 4. சூக்தம் 2.

10. இருக்குக்கள் கொண்டது.

ரிஷி : மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: அக்கினியின் பல ரூபங்களான, 1 ஸுஸமித்தன், 2 தனூநபாத், 3 நராசம்ஸன், 4 இளன், 5 பர்ஹி, 6 தவாரங்கள், 7 உஷாஸாநக்தா 8 தேவஹோதாக்களிருவர், 9 இளா, 10 தவஷ்டா, 11 வனஸ்பதி, 12 ஸ்வாஹா என்பவர்களாம்.

மண்டலம் 1. சூக்தம் 13.

1. நற் சமித்த னெனும்பெய ரங்கியே,
பொற்பி னல்லவியோற் கருள் போந்திட
வற்பிற் றாதுவ, தேவ ரணைத்திடல்
சொற்பெற மகம் பாகவ வாற்றலே.

(இ-ள்.) ஸுஸமித்தன் என்னும் பெயரையுடையஅக்கினியே! ஹோதாவே! அவிதருவோனுக் கநுக்கிரகிக்குமாறு தேவர்களைக் கொண்டுவருவாயாக. பாவகனே! யாகமுஞ்செய்வாயாக. (அவர்களை நீயும் வணங்குவாயாக)—(எ-று.)

2. தன்னுடலினிற் றானே யுதித்தவ !
மன்னு நற்கவி, மாகர்களுக் கின்று
தன்னு மெக்கிய மொன்சுவை தோய்குவா
னுன்னி யாற்றுக சாறய ருண்டியின்.

(இ-ள்.) தநூநபாத்தென்னும் பெயரையுடைய வக்கினியே! மேதாவியே, தேவர்களுக்காக வேற்பட்டுள்ள இவ்வெக்கியம் இன்று அவர்கள் உண்ணுதற்கு ரஸமுள்ளதாகச் செய்வாயாக—(எ-று.) தநூநபாத்=தன் சரீரத்திற் றானே தோன்றினவன் என்பது பொருள்.

3. நார்க ளேத்து நராசம்ஸ, னன்பிலேனன்,
பருகுசீர் மதுப்பண்புறு தாளுவான்,
பரிவி னெம்மவி பக்குவஞ் செய்பவன்
வருகவென் றிம்மகத்திடை யேத்துவாம்.

(இ-ள்.) நராசம்ஸனென்னும் பெயரையுடையவனும், அன்பிற்குக் காரணனும், தேன்றுளிக்கு நாவனும், எமது அவியைப் பக்குவஞ்செய்பவனுமாகிய (அக்கினியை) இவ்வியாகத்தின்கண் வருகவென்று அழைப்பேன்—(எ-று.)

4. எங்கள் போற்றுற் றிளனெனு மங்கியே !
தங்கு மிச்சுகத் தேரினிற் றேவரை
யிங்கு சேர்க்க, விதத்தின் மனுவென்பா
னங்க மாக வமைத்த நற்றாதனீ.

(இ-ள்.) இளன் (இட்) என்னும் பெயரையுடைய அக்கினியே! எங்களால் துதிக்கப்பட்டவனும், உத்தமமான சுகமமைந்த தேரினில் தேவரையேற்றி யவர்களை இங்கு சேர்ப்பாயாக. மனுவென்பான் அன்போடு அமைத்த (தேவ) ஹோதா நீயே—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

5. அமல புந்தி யடைந்த நன்மேதைகா
ளமுதந் தோன்றிடு மவ்வித்தந் தக்கதாக்
குமுத நெய்யொடு கூடியவற்றை நீ
ரமையும், வேண்டு மொழுங்கி னடுக்கியே.

(இ-ள்.) ஞானவான்களாகிய இருத்துவிக்குக்களே! மரணத்தன்மையில்லாத (பர்ஹி யென்னும்) அக்கினி காணப்படும் அந்தவிட்டத்தில், நெய்யோடு கூடிய தருப்பைகளே யடுக்கவேண்டிய முறைப்படி யடுக்கியமைப்பீர்களாக—(எ-று.) குமுதம்=தருப்பை, பர்ஹி யென்பதும் அது.

6. இன்று மிப்போ தியற்றிடு மிட்டியி
னின்று மெய்யொழுங் கோங்கு நிபமன
மொன்றி மாந்தருக் கோவல் வாயில்க
ணன்றெளியி னங்காந்து நலந்தரல்.

(இ-ள்.) ஸத்தியமாகிய நிதத்தினைக் காக்கும் துவாரங்கள், இன்றும் இப்போது நடக்கும் இஷ்டிகளுக்காகப் புருஷர்களே யுள்விடுவனவாய் திவ்வீய ஒளியோடும் (தங் கதவுகளைத்) திறந்து நலஞ்செய்யட்டும்—(எ-று.)

வருக்கம் 24.

7. சொல்லு மிப்புகழ் யாகந் துதைந்திவ
ணல்ல வஜ்னம் பரப்பிய நானலி
னல்லும் வைக ழைகினின் வைகுறப்
புல்லவென்று பொருந்தி யழைப்பமே.

(இ-ள்.) ஈக்தோஷஸ் என்னும் (இரவையும், உஷஸ்ஸையும் குறிக்கும்) பெயரையுடைய அக்கினி, எங்களுடைய (இந்த வேதியிற் பரப்பப்பட்ட) தருப்பையில் சோபன ரூபத்தோடு அமரும்வண்ணம் அழைக்கின்றேன்—(எ-று.)

8. தேவ வோதா விருவர் சிறந்தவர்,
மேவு தாஷின் மேன்மை வதிந்தவர்,
பாவு ஞர்னியர், பண்பி னிவ்வெக்கிய
மோவுறு தொளிர்ந் தோங்கிடக் கூவுவாம்.

(இ-ள்.) யாக்ப்பிரசித்தி பெற்ற தேவஹோதாக்களும், அழகான நாக்கோடு (நன்மொழியுள்ளவர் அல்லது அழகிய சுவாலையோடு கூடியவர்) கூடியவரும், கவிகளும், ஆகிய இருவர் இவ்வெக்கியத்தைநாங்கள்நன்கதுஷ்டிக்கும்படி வந்திருக்கவேண்டுமென்று கூவியழைப்போம்—(எ-று.) இவ்விருவரும் அக்கினியும் மாதரிச்வனுமோ, அன்றி அக்கினியும் வருணனுமோ, அன்றி வருணனும் ஆதித்தனுமோ, யாராயிருப்பார்களென்று ஐயமுற்று வினவுவர் மோட்சமூலர். (Maxmuller.)

மண்டலம் 1. சூக்தம் 13.

9. இளா ஸரஸ்வதி பாரதி யிம்மூவர்
இனிய மின்பச் சுகந்தரு தேவிமார்
தள முறவே பரப்பு தருபயில்
வளமருகா வகையினின் வைகலே.

(இ-ள்.) இளா, ஸரஸ்வதி, (மஹி) பாரதி (வன்னி மூர்த்தங்களாகிய) இம்மூவர் சுகத்துக்குக்காரணரான தேவியர்களும், அட்சயமில்லாத்வராய்த் தருப்பையில் அமர்வார்களாக—(எ-று.) மகியெனினும் பாரதியெனினு மொக்கும்.

10. எதற்கு முன்னுதித் தெவ்வகை ரூபமுங்
கதித்தணைந்து கணக்கில் பலதொழி
விதத்தி னுற்றுர் துவட்டா வெமக்கென்றே
யுதித்த நற்றுணை யாகவிங் கேத்துவாம்.

(இ-ள்.) சிரேஷ்டனும், விச்வரூபனும், (எவ்வகை யந்திரத்) தொழிலையுமாற்றுபவனுமான துவட்டா (என்னும்நாமம்வகித்த அக்னி) தேவலம் எமக்கே அதிகமாக அநுக்ரகஞ்செய்யட்டும்என்று இவ்வியாகசாலையிலழையாநிற்போம்—(எ-று.) துவட்டா சப்தத்துக்குப் பலவிதத்தொழிலாளிகளினது வேலைகளையும் செய்வதிற் சிறந்தவனென்பது பொருள்.

11. தேவ, தேவர் தமக்கென விவ்வவி,
யர்வலோடு வனபதி, யார்த்திபி
னீவு செய்தளி ; யிவ்வவி தந்தவன்
மேவு ஞான மிளிர்ந்து வளர்கவே.

(இ-ள்.) தேவனே! வனஸ்பதியே! (அவிபுசிக்கும்) தேவர்களுக்கு இவ்வவியைப் பங்கிட்டுத்தருவாயாக. இவ் வவிதரும் யஜமானனுக்கு (யாககர்த்தாவுக்குப்) (பரலோகவிஷய) ஞானம் (உன்னருளால்) ஓங்கி நிற்கட்டும்—(எ-று.)

12. அந்தமா யஜமான னகத்தினின்
மந்திரங்கள் சுவாகா வயக்கியே
யிந்திரற் குரைத்தீக விவ்வெக்கியம் ;
நந்து தேவரை நாடி யழைப்பெனல்.

(இ-ள்.) யஜமானனது யக்ஞ கிருஹத்தில் சுவாகா என்னு மீற்றே சூடிய மந்திரங்களைச்சொல்லி (ரித்விக்குகள்) இம்மகத்தைச்செய்யட்டும். யான் தேவர்களை ஈண்டழைப்பேன்—(எ-று.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 1.

14. மண்டலம் 1. அநுவாகம் 4. சூக்தம் 3.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி மேதாதி; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: விச்வதேவர்கள். அத்தியயனஸம்பிரதாயக் கிரமத்தோடுகூடியுள்ள மூலப்பிரதியில் இதனை விவரித்தெழுதியுள்ளதாவது: 1-ம், 2-ம், அக்கினி; 3 விச்வதேவர்கள்; 4 முதல் 12 முடிய மீண்டும் அக்கினி, என்பதாம்.

1. சோமபானஞ் சுவைக்கப் புரிந்திட
வோம வக்கினி, யொள்ளிசை நாடியே
யேம தேவ ரெல்லாரொடு மீண்டுறல்;
சேமஞ் சேர்ந்திட நீயும் வணங்குக.

(இ-ள்.) அக்கினியே! எங்களது பண்ணைக்கேட்டுச், சோமபானஞ் செய்யும் யாகத்திற்கூடும் எல்லாத்தேவர்களோடும் நீ வருக; வந்து நீயும் யாககருமஞ் செய்வாயாக—(எ-று.)

2. கண்ணுவக் குடியோ ருனை, விப்பிர!
வெண்ணி, யக்கினி, யாகக் கழைத்தன,
சொண்ணு முன்னெழில் கூட்டி யுரைத்தனர்,
திண்ண மாகநீ தேவரோ டுண்மவே.

(இ-ள்.) விப்பிரனே! அக்கினியே! கண்ணுவ வம்சத்தினர் உன்னை யாகத்துக்கு வருமாறழைத்தனர். உனது கருமங்களையெல்லாஞ் சொல்லுகிறார்கள். தேவரோடு வருவாயாக—(எ-று.) 'ஒண்ணு முன்னிசை கூட்டி யுரைத்தனர்' என்றும் பாடம் அற்றேல். உனது புகழ்க்கீர்த்தனங்களையு முரைக்கின்றார்கள் என்பது பொருள். தியா: கருமங்கள், இசைகள்.

3 வாயு விந்திரன் மா விருகற்பதி
யாயு மித்திர னக்கினி யாதித்த
னீயுஞ் செல்வப் பக னிரும்பூடனு
மேயு மாருத ரிட்ட மிவர்தமை.

(இ-ள்.) இந்திரவாயுவிருவரையும், பிரகஸ்பதியையும், மித்திரனையும், அக்கினியையும், ஆதித்யனையும், பகனையும், பூஷனையும், மருத்துக்கணங்களையும்—(எ-று.) 'அக்கினி! வணங்குவாயாக' என இரண்டுபதங்கூட்டுக வென்பார் சாயணர். 'கண்ணுவர்கள் வணங்கட்டும்.' என்பார் மேலுட்டாசிரியர். பிரகஸ்பதி, பிரம்மணஸ்பதி, தேவர்களிடத்து மனிதர்க்காகப் பிரார்த்தனை செய்து பயனைப்பெறுவிப்பவன், தேவபுரோஹிதன், பிராமணர்களுக்குத்தலைவன். பூஷன் சூரியாபிமானிதேவதை, கன்றுகாலி பயிர்பச்சைகளை விருத்தி செய்பவன். பகன், செல்வந்தருபவன், அதனாலேயே ஈயுஞ் செல்வப்பகனென்றார். ஆதித்தியர் அதிதியின் மக்கள் பன்னிருவர், அழியாத சோதியர். மருத்துக்கணங்கள், ருத்திரனுக்கும் பிருச்நி (பன்னிற மூள்ளபூமி)க்கும் புத்திரர்கள். புயலுக்கும் காற்றுக்கும் நாதர்கள்.

மண்டலம் 1. சூக்தம் 14.

4 வாகின் வள்ளத் திருக்கு மதுத்துளி
யோகை யோடு மதத்தை யுறுத்துவான்
பாகஞ் செய்தன சோமரசு மிவை
தாகந்தீரச் சமைந்த வுமக்கென.

(இ-ள்.) பாத்திரங்களிலுள்ள சோமத்துளிகள் மதத்தை விளக்குந் தன்மையோடும் உங்களுக்காகப்பக்குவஞ் செய்யப்பட்டமைந்தன—(எ-று.) இந்திராதி தேவர்களே! என்ற சொற்றொடரைத்தலைக்கண்வருவிக்க—சாயணர்

5 கண்ணுவர்கள் கடிதுணை வேண்டியே
யெண்ணுற விரிக்குங் குசைகத்தரித்
தொண்ணும் யாவு மூஞற்றி யவியொடு
வண்ணமாக வணங்கின ருன்னையே.

(இ-ள்.) கண்ணுவர்கள் காவல்பொருந்திய (தேவரது) துணையை விரும்பியவர்களாய், வேதிமீது பரப்புவதற்கு வேண்டிய தருப்பைகளைநறுக் கிக்கொண்டவர்களாய், அழகாக எல்லாக்கிரியைகளையும் செய்துகொண்ட வர்களாய், அவியை யேந்தியவர்களாய், உன்னை (அக்கினியை) வணங்கித் துதித்தார்கள்—(எ-று.)

6. நெய் யொழுகுவ நீடு மனத்தினு
லெய்புரு தொடுக்கு மெழிலின
வைய வுன்னுடை வன்னிக டேவரைச்
செய்ய சோமங் குடித்திடச் சேர்க்கவே.

(இ-ள்.) (அக்கினியே!) நெய்யொழுகுவனவும் மனத்தினால் நினைத்தவுடனே (தேரிற்) பூட்டிக்கொள்ளுவனவும், (தேவரைச்சுமந்து வருப வையுமான) உனது வாகனங்கள் (குதிரைகள்) சோமபானஞ்செய்வதற்காகத் தேவரைக்கூட்டிக்கொண்டு வரட்டும்—(எ-று.) வன்னிகள்—வாகனங்கள் என்பது பொருள்.

வருக்கம் 26.

7. அங்கி மெய்வளர்ப்பார் துதிக்கானவர்
துங்க சிக்குவை தோய்ந்தவ, கள்ளினை
யங்க மாக மனவியர் தம்மொடே
யிங்கருந்த வணங்கி யியைக்கவே.

(இ-ள்.) கல்லாக்கோடு கூடிய அக்கினியே! உண்மையை வளர்ப் பவரும், ஸ்தோத்திரபாத்திரமானவருமான தேவரைப் பத்தினிகளோடு கூடினவர்களாய்ச்செய்க. அவர்களுக்குச் சோமபாகத்தையூட்டுக—(எ-று.) பாட்டில், துதிக்கானவர், கள்ளினையருந்த அவரை மனைவியரோ டியைக்க, வென்றுள்ளது. இரண்டும் பொருள் ஒன்றுதான்.

8. எவரெவரவியேற்கத் தகுந்தவ
ரெவரேவ, ரங்கி, போற்றற்குரியவ
ரவரவ ருன்றன் சிக்குவையான்மனு,
சுவைபெற 'வஷட்' டோய்ந்ததை யுண்கவே.

(இ-ள்.) எவரெவர் யாகபலிக்குரித்தானவர்களோ, எவரெவர் போற்றத்தகுந்தவர்களோ, அவ்வத்தேவர்களெல்லாம், அக்கினியே, உனது நாக்கின்மூலமாக, 'வஷட்' என்னும் ஈற்றோடு கூடிய மறைகளைக்கூறும் இந்த யாகத்தில் மதுவையுண்ணட்டும்—(எ-று.) வஷட் அக்கினியில் ஆவுதி பெய்யும்போது சொல்லப்படுமோர் பிரயோகச்சொல்.

9. எல்லி னல்லொளி யேய்ந்த விண்ணின்றுமே
நல்ல விப்பிர னெம நடத்துவோன்
வல்ல தேவ ரெல்லாரையும் வைகறை
யெல்லுற விங்கழைத்துத் தருகவே.

(இ-ள்.) சூரியவொளிபரந்த விண்ணுலகத்தினின்றும், காலையில் விழிக்கவல்ல தேவர்கள் யாவரையும் உஷற்காலத்தில், விப்பிரனும், ஹோதாவுமாகிய அக்கினி கொண்டுவரட்டும்—(எ-று.)

10. வாயு தன்னொடு, மித்திரன் மாட்டுவாய்ந்
தேயு நல்லொளி தம்மொடு, மிந்திரன்,
றூய விச்சுவ தேவர் தொகையொடுந்,
தோயு மக்கினி சோமக்க ளார்கவே.

(இ-ள்) வாயுவினுடனும், மித்திரனது தேஜோவிசேஷ ரூபங்களோடும், இந்திரனுடனும், விச்வதேவர்களோடுங் (அல்லது எல்லாத்தேவர்களோடுங்) கூடிய அக்கினியே! (உனது பாகமாகிய) சோமமதுவைக்குடிப்பாயாக—(எ-று.) இந்திரனுடனென விரிக்க.

11. அங்கி நீ மனு வாக்கிய னூதனு;
மங்க மாகவே யாகத் தமர்கிறு;
யிங்கு தோன்று மிவ்வெக்கியந் தன்னையுந்
துங்க மாக்க வணங்கித் தொடங்குக.

(இ-ள்.) அக்கினியே! நீ மனுவினால் இதமாக வமைக்கப்பட்ட ஹோதாவாவாய், அழகாக யாகத்தோறு மமர்கிறாய். இங்கு நடக்குமிவ் வெக்கியத்தையும் பரிசுத்தப்படுத்தி யமைவாயாக—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 15.

12. ஆவலோடுங் கதிமதி யார்ந்தன,
மேவு மாந்தரைக் கொண்டு செலுத்துவ,
தேவ, தேரின் வடவையைப் பூட்டுக;
தேவரை யிங்கழைத்து வருகவே.

(இ-ள்.) நடையிற்சிறந்தனவும், ரதாரூடர்களைக்கொண்டுசெல்லுவனவும் ஆனவைகளை (குதிரைகளை)த் தேரிற்பூட்டுவாயாக. தேவர்களை இங்கு சுமந்துகொண்டு வருவாயாக—(எ-று.) இவ்வடவைகளுக்கு ரோஹிதர்க ளென்று பெயர், செந்நிறம் வாய்ந்துள்ளதாலென்க. கதிமதி=கதிக்கானமதி.

வருக்கம் 27.

15. மண்டலம் 1. அநுவாகம் 4. சூக்தம் 4.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: முதல் 6 இருக்குக்களுக்கு முறையே இந்திரன், மருத்துக்கள், துவஷ்டா, அக்கினி மித்ராவருணர், இவர்களாம்; அடுத்த 4 இருக்குக்களுக்கு செல்வகாரண னான அக்கினி; 11க்கு அச்வினிகளிருவர்; 12க்கு மீண்டும் அக்கினி.

இவர்களோடு இருதுவையுங் கூட்டுக. இவ்விருதுக்கள் (இரண்டு மாத) காலாபிமானி தேவதைகள்.

1. இருதுவோ டியைந் திந்திர சோமத்தைப்
பருகுக; நிறை வள்ள மளிப்பன,
சருவதா வு ணகட்டி லுறுவன,
பருகு மிந்துக்கள் பண்பி னுழைகவே.

(இ-ள்.) இருதுவினுடியைந்து, இந்திரனே, சோமத்தைப்பருகு வாயாக; திருப்தியைத்தருவனவும், என்றும் உன்வயிற்றில் தங்குவனவுமான இந்துக்கள் (சோமத்துளிகள்) உனக்குள் நுழையட்டும்—(எ-று.)

2. மருதரே நீர் மருவு மிருதுவோ
டரிதிற் போத னமைக்குங் கலங்கொடே
பருக; வெம்மகந் தூய்மைப் படுத்துக;
உரைதருவ ரித்தன்மையை, வண்மையீர்.

(இ-ள்.) மருத்துக்களே! இருதுவோகூடப்போதனது பாத்திரத் திலிருந்தே (சோமத்தைப்) பருகுவீராக; எமது எக்கியத்தைப்பரிசுத்தப் படுத்துக. சோபன தானத்தோடு கூடியவர்களே, உமது இப்பரிசுத்தப்படுத் துந்தன்மை உலகப்பிரசித்தம்—(எ று.) போதன், பரிசுத்தஞ்செய்பவன்: மருத்துக்களுக்கென்று சோமத்தைபூற்றி யாவுதி செய்பவன்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

3. அரதங்க ளழகி னளித்திடும்
வரத னுதலின் மன்னு மஹவியோ
டிரத மார்க விருதுவைக் கூட்டியே
சரத நேட்டா தரிக்க விவ்யாகமே.

(இ-ள்.) மனவியோடு கூடிய நேஷ்டாவாகிய் துவஷ்டாவே! இரத்தினங்களளிப்பவனுதலாற், சோமத்தை இருதுவோடு குடிப்பாயாக; —(எ-று.) நேஷ்டாவும் துவஷ்டாவும் ஒருபொருளன. துவட்டாவின் பொருளை ம. 1. சூ. 13. ரிக். 10. னுரையிற்காண்க.

4. அங்கி யிவ்விடந் தேவர் ணைத்திடா
யங்க மாக யமை மூவிடத்தினுந்
தங்குமாறு தபக்கி யிருத்துவா
டிங் கவரை யலங்கரித் தார்கவே.

(இ ள்.) அக்கினியே! இந்தயாகதலத்துக்குத் தேவரைக் கூட்டிக் கொண்டு வருவாயாக. மூன்று சவனங்களிலு மவர்களுக் கேற்பட்டவிடத்தி லவர்களை யமைப்பாயாக, அவர்களையலங்கரிப்பாயாக, சோமத்தை இருதுவி னோடு குடிப்பாயாக—(எ-று.)

5. பனவன் பொற்கலச் சோமம் பருகுக
வின விருது குடித்ததன் பின்னரே;
யினிதி னிந்திர நின்னிருந் தோழமை
துனிதராத குணத்திற் றுதைந்தமே.

(இ-ள்.) பிராஹ்மணனது தனகாரணமான பாத்திரத்திலிருந்து சோமத்தை இருதுக்கள் குடித்தபின்பு, இந்திரனே! நீயுங்குடிப்பாயாக; உன் தோழமை பிரியக்கூடியதல்ல—(எ-று.)

6. விரதங் கைக்கொளு மித்ர வருணர்காள்!
சரத மாக வளர்ந் தெப்பைவருங்
கருதி வாட்ட வியையாக் கடிமகத்
திருதுவோடு மியைந்நீரிருவரே.

(இ-ள்.) விரத்தத்தை மேற்கொண்டவர்களாகிய மித்திராவருணர் களே! நீங்களிருவரும், விருத்தியாவதும் பகைவரால் நாசஞ்செய்யமுடி வாத்துமான, இவ்வெக்கியத்தினிடத்து இருதுவோடுவந்து சேர்ந்தீர்கள் —(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 14.

7. நல்வகையினிற் சோம நசுக்கிடக்
கல்லினைக் கரத் தேந்தியோர் யாகத்தே
செல்வம் வேண்டி, யச் செல்வந்தரு மெனிக்
கெல்பெறுந் துதி யோமத் தெடுப்பரே.

(இ-ள்.) ஸோமலதையை நசுக்குங்கற்களைக் கைகளிலேந்திய இருத்துவிக்குக்கள் செல்வ ஆஸக்தியுள்ளவராய்ச் செல்வத்தைத்தரும் அக்கினி தேவனே அக்கினிட்டோமாதியாகங்களிற் றுதிப்பார்கள்—(எ-று.) ஆதி யென்றதனால் சோமயாகமாகிய உக்தியத்தையுங்கொள்ளுக:—சாயணர்.

8. ஆக்க மீபவ னுக்கும் புகழ் வளர்ந்
தோக்க மெய்தும் வசு வெமக்கிகவே;
யூக்கி யாங்க ளொளிபெறு தேவர்நின்
றுக்குவோ மித்தகைமைய செல்வமே.

(இ-ள்.) செல்வந்தருபவனுகிய அக்கினி, கீர்த்தி பெருகுகின்ற செல்வத்தை யெமக்குத்தரட்டும். யாங்கள் தேவர்களிடத்திலிருந்து இத்தகைய செல்வத்தையே பெறுகிறோம்—(எ-று.)

9. நிதி தருபவ னேர்ந் திருதுக்களோ
டதியுவப்பி னணைந்து துவட்டாவின்
றதியுறுங் கலஞ் சார்ந்து குடிப்பனுற்;
கதியொடு மவி தந்தபிற் செல்கவே.

(இ-ள்.) நிதிவிணேதா (செல்வந்தருபவன்) வாகிய அக்கினிதேவன் இருதுக்களோடு நேட்டா (துவட்டா) வினது பாத்திரத்திலிருந்து குடிக்க விரும்புகிறான். ஓமத்தலத்துக்கு வந்து ஓமஞ்செய்தபின்னர்ச் செல்லுங்கள் —(எ-று.)

10. செல்வ மீபவ! சீரினிருதுக்கள்
மல்க வுன்னை மதித்துத் துரீயமாய்ப்
பல்துதியாற் பரவு மெமக்கு, நீ
நல்வளந்தரு நாயக னுகுக.

(இ-ள்.) செல்வந்தருமக்கினி தேவனே! இருதுக்கள் வளம்பெற உன்னை நான்காமுறை பூரணமாக வணங்கினேம், அதனால் எங்களுக்கு நீ கட்டாயமாய்ப் பொருள் கொடுப்பவனுகுக—(எ-று.)—துரீயம்=சதுர்த்தம் பூரணம். இந்திரன், மருத்துக்கள், துவட்டா, அக்கினி, என நான்காவதாக வைக்கப்பட்டிருத்தலால் நான்காவனுக உன்னைத்துதிக்குமெமக்கு' என்றும் பொருள் கொள்ளலாம் என்பர் (Ludwig) லட்விக்கென்பவர்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

11. தூய செய்கை துதைந்த விரதரே!
பாயெரி யொளி ரச்வினி தேவர்காள்!
ஏயு மெக்கிய மேற்பீ ரிருதுவோ
டீயு மிம்மது வேன்று பருகவே.

(இ-ள்.) சுசியான விரதமுடையவர்களே! பிரகாசம் பொருந்திய அக்கினியோடுகூடிய அசவினி தேவர்களே! இவ்வெக்கியத்தை நிர்வகிப்பவர்களே! இருதுக்களோடு மதுரமான சோமத்தைப்பருகுங்கள்—(எ-று.)

12. இல்லி னேங்கிடு தீயி னிருதுவி
னல்ல வெக்கிய நாடி வளர்க்கிறாய்!
சொல்லும் பத்தி துதைந்தவற், கீகையோய்
மல்லற் றேவரைப் போற்றி வணங்கலே.

(இ-ள்.) தாதாவாகிய (அக்கினியே!) நீ காருகபத்திய அக்கினியாய் இருதுவோடு யக்ஞத்தை நிர்வகிக்கிறாய். அதனால் தேவகாரியப்பிரிய ஞன யஜமானனுக்காகத்தேவர்களை வணங்குவாயாக—(எ-று.) இருதுவின் இருதுவினோடு என்றபடி.

16. மண்டலம் 1. அநுவாகம் 1. சூக்தம் 5.
9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: இந்திரன்.

1. இச்சை தேர்ப்பத்திடு மிந்திர சோமத்தை
நச்சி நீகுடித் தாநந்த நண்ணுமா
றச்சுவங்க ளூனயிங் கணைக்கலே
பெச்சமில் லொளிக் கண்ணின ரேத்தலே.

(இ-ள்.) இச்சைகளையளிக்குமிந்திரனே, சோமபானத்தம் உனது குதிரைகள் உன்னையிங்கே சுமந்துகொண்டுவரட்டும். குறைவில்லாத ஒளியாகிய (சூரியனைப்போன்ற) கண்ணினையுடைய இருத்துவிக்குக்கள் (உன்னைத்துதிக்கட்டும்)—(எ-று.) ஏத்தலே என்ற பதம் வடமொழி மூலத்திலில்லை, சாயணருரையிற்கண்டது.

2. நெய்யுறையும் பொரி யிவணேர்ந்தன;
வைய மீச்சுகம் வாய்ந்தநி னேற்றியே
பைய விந்திரன் றன்னை ப்பரியிரண்
டையங் கூட்டி யழகி னமைக்கலே.

(இ-ள்.) நெய் கலந்த பொரி யிங்கே யுள்ளவற்றையுத்தேசித்துச் சுகதமமானதேரில் (இந்திரனது) குதிரைகளிரண்டும் அவனை யேற்றி (வேதிக்குச்சமீபத்தில்) கொண்டுவந்துவிடட்டும்—(எ-று.) பாட்டில்முதலடியினியே பொருண்முடிவோடு கூடியுள்ளது.

மண்டலம் 1. சூக்தம் 16.

3. இந்திரன்றனை யெல்லுறும் வைகலி,
னிந்திரன்றனை யாக நடக்கையி,
லிந்திரன்றனைச் சோமங் குடிக்கென,
வந்தமாக வழைப்ப மியாங்களே.

(இ-ள்.) இந்திரனைப் பிராதல் ஸவனகாலத்திலும், இந்திரனை ஸவன மத்தியிலும் (அல்லது மாத்தியான்ன ஸவனத்திலும்) (ஸவன முடிவிலும் அல்லது சாயங்கால ஸவனத்திலுங்கூட, அதாவது ஸவனத்திரயத்திலும்) இந்திரனைச் சோமங்குடிப்பதற்காகவழைப்போம்—(எ-று.) இவ்வடையாள மிட்ட கோடுகளுக்குளிருப்பன மூலத்திலில்லாமல் வியாக்கியான கர்த்தாக்களால் விரிக்கப்பட்டுள்ளன, இந்நூல் முழுமையும் இதுவே நடப்பு.

4. உளைகெடும்பரி யூர்ந்திவ ணிந்திர
களிதருஞ் சுவ்த காண வருகவே
துளிதரு மது தோய்ந்த பொழுதுனை
விளிதருங் குரலோடும் விளிப்பமே.

(இ-ள்.) நெட்டுளைகளோடுகூடிய குதிரைகளின்மேலேறி, இந்திரனே, சோமத்திற்கருகில் வருவாயாக. சோமாபிஷவகாலத்தே யுன்னை (உரக்க) வழைப்போம்—(எ-று.)

5. புகழியம்பிப் புரிந்திடும் யாகத்தி
னகனமர்ந் துவந் தாதரித் தாளுக;
மிகவும் வேட்கை மிகுத்த கவுரமா
விகல நற்சுதை யெண்ணிக் குடிக்கலே.

(இ-ள்.) (இந்திரனே!) உனது புகழ்த்துதிகளைக் கூறிப் புரிகின்ற இச்சோமங்கூடிய ஸவனத்தினிடத்து வருக: நீர் வேட்கைமிகுந்த கௌர மிருகத்தைப்போலச் சோமத்தைக்குடிப்பாயாக—(எ-று.) கௌரமிருகம்=மான்; ஒருவகையெருமை (Bos Gaurus) யென்பார் மேஜட்டாசிரியர்.

வருக்கம் 30.

6. இங்கு நீள வியைத்த தருப்பையிற்
பொங்கு வள்ளம் பொருந்து சோமச்சுதை
யங்க மாக வணைந்தன, விந்திர
மங்குரு வலி வாய்ந்திட மாந்தலே.

(இ-ள்.) இங்கு விரிக்கப்பட்ட தருப்பையின்மேற் சோமத்துளிகள் பாத்திரங்களிலமைந்துள்ளன; இந்திரனே! பலம்பொருந்துமாறு அவற்றைக் குடிப்பாயாக—(எ-று.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 1.

7. இவண் டலைமை யியைந்த வித்தோமமுஞ்
சுவையி னுன்னிதயந்தனைத் தோய்ந்து சி
ரெவையினும் மிகவேய்ந் தினைத்தோய்ந்தபிற்
சுவையிற் சோமச் சுதையினை மாந்தலே.

(இ-ள்.) (இந்திரனே!) இங்கு யாங்களுரைக்குந்துதிகள் தலைமை யையெய்தி உன்மனத்துக்கங்காரமாய் உத்தம ஸுகத்தைத்தரட்டும். அதற் குப்பின், பிழியப்பட்ட சோமதைப்பருகுவாயாக—(எ-று.)

8. சவனஞ் செய்த சுதைத்துளி யாவையுங்
கவனமாகக் குடித்துக் களித்திட,
வுவமையில் வலியோங்கு விருத்திரன்
றுவள வீட்டிடு மிந்திரன் றோய்வனே.

(இ-ள்.) விருத்திரவதஞ்செய்யுமிந்திரன், சோமங்குடிப்பதற்காதவும், ஸோமம்பிழியுஞ்சவனத்தில் எல்லாத் துளிகளையுங்குடித்து மதமடைவதற் காகவும் வருகிறான்—(எ-று.)

9. ஆவு மாவு யீனத்தெ மவாவெலா
மேவுமாறு வினைத்துத் திருத்திசெய்;
பாவு நன்மனப் பத்தியிலே டீனைக்
கூவி நின்சீர் சதமக கூறுவாம்.

(இ-ள்.) பசுக்களையுங் குதிரைகளையுந்தந்து, எமது ஆசையெல் லாம் நிறைவேறுமாறு செய்வாயாக. சதக்கிருதுவே! உன்னை யாங்கள் எப்போதும் அத்தியயனபராய் நின்று துதிப்போம்—(எ-று.)

வருக்கம் 31.

17. மண்டலம் 1 அநுவாகம் 4. சூக்தம் 6.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: இந் திரா வருணிருவரும்,

1. வருண னிந்திரர் வான்பெறு சோதியோர்
கருணையோடு மளித்திடப் போற்றுவேன்;
இருவரும் மெமைச்சார்ந்து புரந்துபிற்
பெருகு மின்பத்தை யூட்டிப்பிற்காலே

(இ-ள்.) மிக்க சோதியுள்ள இந்திராவருணர்கள் எம்மைக்காக்க வென்று துதிப்பேன்; அவர்களிருவரும் எங்களைக்காத்துப்பின் எங்களுக் குச் சுகந்தருவார்களாக—(எ-று.) வான்பெறுமன்னர்களென்பதும் பாடம். இந்திராவருணர்க ளிணைத் தெய்வங்கள். இதுபோலவே, அக்கினிசோமர், இந்திரவாயுக்கள், இந்திராக்கினிகள், இந்திரபிரஹஸ்பதி, இந்திரசோமர், மித்திராவருணர், இந்திரபூஷர்கள், இந்திரவிஷ்ணுக்கள், தியெஸ்பிருதிவி கள், சோமருத்திரர்கள், எனவரும்.

மண்டலம் 1. சூக்தம் 15.

2. போற்று மாந்தர்ப் புரக்கு மிருவிரும்
போற்று வோர்தங் குறிப்பிற் புரந்திடச்
சாற்று மென்னெஞ் தூரைத்திடும் விப்பிர
னேற் றழைத்த வுடனெழிர் தோன்றுவீர்.

(இ-ள்.) மனிதர்களது யோகக்ஷேமங்களைத் தாங்குபவர்களே! ஸ்தோத்திரஞ் செய்வோரைக்காக்குமாறு என்னெஞ்ச விப்பிரன் கூவவும் வருவீர்—(எ-று.)

3. இந்திரா வருணரெ னிருவர்கா
ளந்தமாக வெம்மாசைக் குரியபொன்
றந்தெமை மனப்பூரணத்தே யமைத்
தெந்த நல்லரு கேய விரப்பமே.

(இ-ள்.) இந்திரா வருணரென்னுமிருவர்களே! எம்மாசைக்கேன்ற பொன்னையளித்து எப்போதும் எம்மருகிலேயே யிருக்கும்படி பிரார்த்திப் போம்— (எ-று.)

4. யாமியற்றிடுஞ் சோமம் பலபொருள்
தோமறச் சிறந் தோங்குத றாக்கவே,
வாமம் பல்வகைத் தோன்றுஞ் சுமதியோர்
தோமழு; மும்மனக்கொடை தோய்க யாம்.

(இ-ள்.) எங்கள் கருமங்களில் உபயோகப்படுஞ் சோமமானது (தயிர், தண்ணீர் முதலிய) பலவகைப்பொருள்களாலானதுபோல, நல்லபுத்தி மான்களான ரித்விக்குக்களின் ஸ்தோத்திரமும்பலவிதமாயிருக்கும். அதனால் (இந்திரா வருணர்களே!) எங்களது அவிப்பாகத்தை ஸ்வீகரிக்கும் உமது பிரஸாதத்தினால் நாங்கள் அன்னப்பிரதர்களாயுள்ள புருஷர்களுக்கு மத்தியில் முக்கியர்களாயிருக்கட்டும்—(எ று.) இச்செய்யுள் சாயணருரைப்படி பாடியது. வரையிலாது வலியளிக்கும்மும, தூரைபெரும் வலி தன்னிலு மும்முடைப், புரையிறன்மம்பொருந்து குணத்தினுள், தரையிற்பங்கு தரித்தன மாகுக. என மேனட்டாசிரியர் மொழிபெயர்ப்பார். பிறர்க்குப் பலந்தரும் உமது பலத்திலும், தர்மகுணத்திலும் யாங்கள் பங்குபெறட்டும் என்பதாம். வாஜம் அன்னமென்பார்சாயணர் மொய்ம்பென்பார்மற்றவர். அதுபோலவே சச்சீ ஸோமமென்றுர் அவர் உரமென்றுர் இவர்.

5. ஆயிரக் கணக்காக வளித்திடுந்
தூய வீகையர் நாப்பட் கிருதுவா
யேய விந்திர; னெண்ணில் புகழ்பெறல்
மேய நற்றுதியோர்க்கண் வருணனே.

(இ-ள்.) இந்திரன் ஆயிரக்கணக்காகத்தானஞ் செய்வாரின் மத்தியில் (உத்தமதான) கர்மமுள்ளவனுயிருக்கட்டும்; வருணன் ஸ்துதிசெய்வாரது நடுவில் நல்ல கீர்த்தியை யடையட்டும்—(எ-று.)

6. அன்னவர் பரிபாலனத் தியாங்களு
முன்னதப்பொருள் பெற்றுக் குவிப்பமாற்
பொன்னு மெங்கட்குப போதிய வுண்டபிற்
பன்னு சேம நிதிக்கும் பாவவே.

(இ-ள்) அவ்விந்திராவருணர்களது காவலில் யாங்கள் வேண்டிய பொருளைப் பெற்றுச் சேர்த்துவைப்போமாக. நாங்கள் அனுபவித்தது போக மிகுதியாகச்சேமநிதிக்கும் பொன்விஸ்தாரமாக உண்டாகட்டும்—(எ-று.)

7. இந்திரனே டியைந்த வருணனே!
சுந்தரப் பல்விதப்பொரு டோய்குவா
னந்தமாக வுமையழைப்பே னெமைச்
சந்ததமுஞ் செயம்பெறச் செய்கவே.

(இ--ள்.) இந்திராவருணர்களே! (மணிமுத்தாதிபேதத்தோடு கூடிய) பலவிதப்பொருள்களையும் யாங்களடையும் வண்ணம் உம்மை யானழைப் பேன். எப்போதும் யாங்களே (யுத்தத்திற்) சயம்பெறுமாறு செய்க—(எ-று.)

8. துங்க விந்திரற் றேர்ப்ந்த வருனனே!
யெங்கள்பக்கலி னேய்கென வுங்களை
யங்க மாக வழைக்குங் கவிகள்கேட்
டிங்கெமக் கிறையிற் சுகமீகவே.

(இ-ள்.) இந்திரா வருணர்களே! எங்கள் பக்கத்திலேயேயிருங்க ளென உங்களைச் சேவித்துநிற்கு மெங்களுக்கு உடனே ஸுகத்தையளிப்பீர் களாக—(எ-று.)

9. பெற்று நீங்கள் பிறக்குறுஞ் சீர்மிரு
நற்றுதி மொழி நானுமக் காற்றின
முற்ற வும்மிடத் திந்த்ர வருணரே
யுற்றடைந் துமை யெய்துக வின்றுமே.

(இ ள்) நீங்கள் பெற்றுப் பெருமைப்படுத்துகின்ற சிறப்புமிருந்த துதிகளை யானுங்களுக்காகச் செய்தேன். இந்திரா வருணர்களே! அவை கள் முழுவதும் உம்மிடத்தில் வியாபித்து நிற்கட்டும்—(எ-று.)

18. மண்டலம் 1. அநுவாகம் 5. சூக்தம் 1.

9 இருக்குக்கள்கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: 1-3 பிரஹ்மணஸ்பதி; 4. இந்திரன், சோமன், பிரஹ்மணஸ்பதி; 5 இவர்களோடுகூடிய கட்சிணை, 6-9. ஸதஸஸ்பதி; கடைசிக்கு நராசம்ஸனுமாம்,

1. அந்தணர்த மருப்பதி சோமத்தை
நந்தும் வண்ணம் பிழிந்திடு நங்களே
யந்த வெளசிஜன்-கட்சிவா னென்னவே
சுந்தரப்புகழ் தோய்ந்தவ் ராக்கலே.

(இ-ள்.) பிரஹ்மணஸ்பதி யென்னுந் தேவனே! சோமாபிஷவஞ் செய்யும் யாங்கள் உசிஜபுத்திரனான கட்சீவானைப்போலக்கீர்த்தியடையுமாறு செய்க—(எ-று.) கட்சீவான் பஜ்ரகோத்திரத்தான்; உசிஜ புத்திரன்; பின்னர் மண் 1 சூக்தம் 116 முதல் 126 வரையிலுமுள்ள மறைகளைக்கண்டவன். இவ்வுசிஜை பெண்பாலென்றும், அங்காஜன் மனைவியின் தாசியென்றும், அவளுக்கும் (உச்சித்தியனுக்கும் மமதைக்கும் பிள்ளையாகிய) தீர்க்க தமஸனுக்கும் தோன்றல் கட்சீவானென்றும், தெரிகிறது. தீர்க்கச்ரவஸ் என்பவனையும் பெற்றவள் இவளே. அத்த, பண்டறிசுட்டு.

2. எவன் றனந்தரு செல்வவா, ஞெயினை
யெவன் பரிகரித் தீபவன் புஷ்டியை,
யெவன் றுரித பலனை யியைப்பவ,
னவ னன்மையடைந் தின்னு மருள்கவே.

(இ-ள்.) தனத்தைத்தருஞ் செல்வனும், நோயைப்பரிகரிப்பவனும், புஷ்டியை வளர்ப்பவனும், சீக்கிரத்திற்பலன்தருபவனுமாகிய பிரஹ்மணஸ்பதி இன்னும் நம்மாட்டுறைந்து அருள்செய்யட்டும்—(எ-று.) 'எவனிடத்துத் துரித மியைந்ததாம்' என்பதுமூலத்துக்கொத்த 3ம் அடி. பொருளொன்றே.

3. பற்றலர்தம் பழிமொழிச் சாபமு,
மற் றுலகின் மரிப்பா தெதிர்ப்பு, மெம்
முற்றடையா தருற்றுக; வந்தணர்க்
குற்ற நற்பதி காக்க வுவந்தெமை.

(இ-ள்.) பிரஹ்மணஸ்பதியே! பகைவரது பழிச்சொற்களும் சாபமும், மரணதர்ம முடையவரது பகையும் எம்மையடையாது செய்க. எம்மைக்காப்பாற்றுவாயாக—(எ-று.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 1.

4. யாருக் கிந்திர னந்தணர் தம்பதி
சீரிற் சோமன் சிறந்த விம்மூவரு
மேரிற் றம்மரு ளூட்டி யியைக்கிறூர்
பாரிற் கேடு படாத வவ்வீர்க்கே.

(இ-ள்.) இந்திரனும், பிரஹ்மணஸ்பதியும், சோமனும், எவனுக்கருள் செய்கிறூர்களோ அவனே வீரியம் வாய்ந்தவன்; அவனுக்கு நாசமேயில்லை—(எ-று.) சோமன்=சோமாபிமானி தேவதை.

5. அந்தணர் பதி நீயும் வலாரியுந்
தந்த தக்கிணை தானு நற்சோமனு
மந்த மெய்து மம்மானவன் றன்னையே
பந்த மூட்டிடும் பாவநின் றேம்பலே.

(இ-ள்.) பிரஹ்மணஸ்பதியும், இந்திரனும், ஸோமனும், தட்சிணையும், மரண தர்மமுள்ள (அதுபட்டதாவாகிய) அம்மனிதனைப் பாவங்களைட்டியதபடி காக்க—(எ-று.) தட்சிணை பிரஹ்மணர்களுக்குத்தருன்கொடை; சண்டி பெண் தேவதையாக உருவகப்படுத்தினர்.

வருக்கம் 34.

6. அவைத னற்புத நாயக, னிந்திரன்
சுவைபொருந்திய தோழன் றனத்தினை
நவையி லின்பொடு நல்குவோன்மாட் டியான்
றவ நெருங்கினென் சார்ந்த துதியொடே.

(இ-ள்.) இந்திரனுடைய நற்றேழனை ஸதஸஸ்பதியை (அக்கினியை); செல்வம்ளிப்பவனே, யான் அடுத்து நின்றேன்—(எ-று.) இருவருஞ் சேர்ந்து சோமங் குடிப்பதாற்றேழனென்றூர். ஸகி என்பதற்கு அறிவினே நல்குவோன் என்பொருள் கொள்ளுவார் மேனட்டாசிரியர். ஸ்தஸஸ்பதி ஸபைக்கு நாயகன்.

7. பாவு தூய மதிபரந்தோனுக்கும்
யாவ னின்றி யொழுங்கி னெவ்யாகமும்
மோவலின்றி நடைபெறு தன்வன்
ரூவு யோகந் தருகுவன் ஞானத்தே.

(இ-ள்.) கார்ய விவேசன ஞானம் மிகுந்தவனுக்கும், ஒழுங்காகக் காரியஞ்செய்வதற் கருள் செய்யும் அந்த ஸதஸஸ்பதி (அதிஷ்டான) ஞானத்தோடு கூடிய யோகத்தையளித்து (யாகஞ்செய்விப்பான்)—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 19.

8. அவிசொரியு மவனை வளர்ப்பனற்
சவிபெறு மக முற்றுறச் சார்த்துவான்;
சுவையிற் றேவர்ப் போற்றிடுந் தோத்திர
நவை யுரு நணுகு மவர்முனே.

(இ-ள்.) அவிதரும் யஜமானனை (ஸதஸஸ்பதி) வளர்ப்பான்; நல்ல வண்ணம் யாகம் முற்றுப் பெறுமாறு செய்வான்; தேவரை நோக்குந் தோத்திரங்களும் அத்தேவரை யடைந்து நிற்கும்—(எ-று.)

9. திட மிருத்தவன் சீர்மிகுத்துப் பரந்
திடமகன் றெளிர்ந்தோ னரசம்ஸனைப்
படிவம் வானெனப் பல்கிய தேசொடு
மடர் மகம்புரி யாசா னெனக் கண்டேன்.

(இ-ள்.) திடமிருந்தவனும், மிகவும் வியாபித்துள்ளவனுமாகிய நரா சம்ஸனை (அக்கினியை), விண்போன்ற தேஜஸ்ஸோடுகூடிய ஆசாரியனைக விருக்கப் பார்த்தேன்—(எ-று.) நராசம்ஸன். (மண்.1. சூ. 13. ரிக். 6. பார்க்க.)

வருக்கம் 35.

19. மண்டலம் 1. அநுவாகம் 5. சூக்தம் 2.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: அக்கினியு மருத்துக்களும்.

1. அழகி னற்று மகத்தை யணைந்து, பா
லொழுகு பான முவந்திட, லக்கினி,
ழைவு பெற்றரு, மருத்துவர் தம்மொடும்
பழகிக் கூட்டி யவரொடும் பாவவே.

(இ-ள்.) அழகாகவாற்றப்பெறும் இம்மகத்தின்கண் சோமங்குடிக்க வருவாயாகவென்று, அக்கினியே, அழைக்கப்பட்டாய். மருத்துவர்களைக் கூட்டிக்கொண்டு வருவாயாக)—(எ-று.)

2. தேவரா யினு மக்களே யாயினும்
யாவ ராயினு முன்றன் சவனத்தைக்
கேவலப் படுத் தோங்கு கிற்பா ரலர்;
நீவருக மருதசொடு மகான்.

(இ-ள்.) உனது ஸவனத்தை உல்லங்கனஞ்செய்யுந் தேவரும், மனிதரும், உத்கிருஷ்டர்களாவதில்லை. அதனால் மகானாகிய அக்கினியே, மருத்துக்களோடு நீ வருவாயாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

3. கேடுசூ ழுளங் கிஞ்சித்து மெய்துறுப்
பீடிற் பேரிரஜத்தல மோர்ந்தவர்
நாடு மெல்லா மருத்துவத் தேவரோ
டூடி லங்கி யணைந்துற லிங்குனே.

(இ-ள்.) கெரஞ்சமுந் துரோகசிந்தையில்லாதவரும், ரஜஸை (மழை பெய்யக்கூடிய அந்தரவிடங்களை) நன்கறிந்தவரும், ஒளிபொருந்தியவருமாகியவெல்லா மருத்துவர்களோடும் அக்கினியே, இங்குவருக—(எ-று.) எல்லாவென்றது மருத்துரெழுவானமைபற்றி. தேவர்=ஒளி பொருந்தியவர்.

4. உக்கிரத்த ருவந் துதகத்தினுற்
றக்கவா றருச்சிக்கப் படுபவர்
மிக்க தம்மை மிருவலியிற் பிற
சொக்கலாத மருதரோ டேய்க, தீ.

(இ-ள்.) உக்கிரமுள்ளவரும், தண்ணீரினல் அருச்சிக்கப்படுபவரும், (மழையினுற் சம்பாதிக்கப்படுபவரும்) திரஸ்காரஞ்செய்ய முடியாத வலியையுடையவருமான மருத்துக்களோடு, அக்கினியே, வருவாயாக—(எ-று)

5. ஒண்மையர் தமதோங்குமெய் கோரமார்ந்
திண்மை வாய்ந்தவர் செம்பொரு டோய்ந்தவ
ரெண்ணல்லை யெடுத்து விழுங்குவோர்
நண்ணு மாருதரோ டெரி நண்ணலே.

(இ-ள்.) சுப்பிரமான காந்தியுள்ளவரும், கோரரூபமுடையவரும், மங்கலப்பொருளுடையவரும், பகைவரையெடுத்து விழுங்குபவருமான மருத்துக்களோடு, அக்கினியே, வருவாயாக—(எ-று.)

வருக்கம் 36.

6. வட்ட வான்றலை வாய்ந்த பரிதிமீ
திட்ட மாகவே தேவரென வமர்ந்
தட்டகாச மடிக்கு மருத்துவ
ரொட்டி யங்கி யுவப்பின் வருகவே.

(இ-ள்.) சூரியனுக்குமேல் விண்ணுலகத்தே யொளிரும் தேவர்களாகிய மருத்துக்களோடும், அக்கினியே, வருவாயாக—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 19.

7. திரைகடற் சலமீ தலேசேரவும்
பருவதம் பல திக்குறவும் புரி
மருதரோடு மகத்தினே நாடியே
யெரிதயங்கிடு மக்கினி யிங்குறல்.

(இ-ள்.) சமுத்திரத்திலலேயுண்டாகவும், (மேகமாகிய) மலேகள் பலதிசையுமோடவும், புரிகின்ற மருத்துவரோடு, அக்கினியே, வருவாயாக —(எ-று.) பருவதம் ஈண்டு மேகமாகிய மலே. 'திரைகடற் சலமீது மழைமலே, திரிதரப் பலதிக்கு மியக்குமம், மருதரோடு' என மொழிபெயர்ப் பார் மேனுட்டாசிரியர்.

8. விரி சுடர்க் கிரணங்க ளகலிடம்
பரவுமாறும், பரிய தம் மொய்ம்பினுற்
றரமுறக் கடல் சார்ந் தலேமேவவும்,
புரியு மாருதரோடு மெரியுறல்.

(இ-ள்.) அம்பரத்தே சூரிய கிரணங்கள் பரவுமாறும், சமுத்திரத்தின் மீது அலே மூடுமாறும் புரியும் மருத்துக்களோடு, அக்கினியே, வருவாயாக —(எ-று.)

9. சோம சாரந் துதைந்த மதுவினை
நீமகிழ்ந்து முதற்கட் குடித்திட
வேமமோடு மியைத்தேன் மருத்தரைச்
சேம வக்கினி சேர்த்து வருகவே.

(இ-ள்.) சோமமதுவை நீ முதலிற்குடிக்கும்வண்ணஞ்சம்பாதித்தேன்; மருத்துக்களோடு, அக்கினியே, வருவாயாக—(எ-று.)

வருக்கம் 37.

ஆகச்செய்யுள் 194.

முதலத்தியாயம் முற்றும்.

———//———

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1.	34.	எனதுணிபு	என்துணிபு.
4.	24.	தமிழிற்கலிவெண்பா	தமிழிற்கலிவிருத்தம்.
16.	11.	அதற்குச்சட்	அதற்குச்சுட்.
16.	35.	சூரியனேயம்	சூரியனேயும்.
18.	29.	அதுவக்காம்	அதுவாகம்.
38.	4.	மேதாதி	மேதாதிதி.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

2-வது அத்தியாயம்.

இவ்வத்தியாயத்தில் 38-வது வருக்கமும், 13 சூக்தங்களும், 189 இருக்குக்களுமுள்ளன.

20. மண்டலம் 1. அநுவாகம் 5. சூக்தம் 3.

8. இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: கரயத்திரி; தேவதை: ரிபுக்கள்.

1. ஆவலின் மணியீந்து சிறக்குமிம்
மாவளத் திசை விப்பிரர் பாடல்கள்
தேவ சாதி ரிபுக்களைத் தேடியிங்
கோவறவே யுஞ்ற்றின வாகுமே.

(இ-ள்.) இரத்தினந்தருமுத்தமர்களாகிய ரிபுதேவர்களைக்குறித்து, விப்பிரர்கள்து ஸ்தோத்திரங்கள் செய்யப்பட்டன—(எ-று) ரிபுக்கள், அங்கிரா வம்சத்து ஸுதன்வனது பிள்ளைகள் மூவராம்; ரிபு, விபு, வாஜன் என்னும் பெயருள்ளோர்; உலகத்தில் மக்களாயிருந்து தபவினல் தேவத்துவமடைந்தனர்.

2. இந்திரற்கென வெண்ணிக் குதிரைகள்
மூன்று மாற்றத்தின் மூளுவ விச்சையாற்
பொந்த விட்டவர், புண்ணியச் செய்கையால்
வந்தனர் மகத்தோங்கு நிலைமைக்கே.

(இ-ள்.) இந்திரப்பிரீதியாக, வார்த்தைசொன்னவுடன் றேரிற்பூண்டு கொள்ளக்கூடிய குதிரைகளிரண்டையும் இச்சையினுற் சிருஷ்டித்தவர்களாகிய ரிபுக்கள், தங்கள் புண்ணிய கருமங்களால் யாகதேவராகுஞ்சிறப்பையடைந்தார்—(எ-று.) பொந்தல், பொருந்துதல்; (தேசியம்) திசைச்சொல்.

3. சத்தியமே புகலச்சுவினியர்க்
கொத்த கைத்தே ருறுதியி னெத்திக்குந்
தத்துவதை யிழைத்துப், பயங் கறந்
தொத்த தேது வுருவி னமைத்தனர்.

(இ-ள்.) ஸாஸ்த்தியருக்காக, எத்திசையும் சொல்லக் கூடியதும், ஏறுவதற்கெளிதாகவுள்ளதுமான தேரைச்செய்தார்கள்: பால்கறக்கும் பசுக்களையு முருப்படுத்தினர்கள்—(எ-று.) ந+அஸத்தியா பொய் சொல்லாதவர். அச்வினி தேவர்கள். கறக்க ஒத்த என்க; காலவழுவமைதி.

மண்டலம் 1. சூக்தம் 20.

4. உண்மை வாய்ந்த ரிபுக்க ளுழைப்பினு
ணுண்மை யாற்று முறுதி மறைகளால
வண்மை வான்புவி யென்னுங் குரவரைத்
திண்மை மீளவிளமை திகழ்த்தினர்.

(இ-ள்.) சத்தியகாமிகளும், சத்தியமந்திரங்களுள்ளவர்களுமாகிய ரிபுக்கள், உழைப்பினால் வியாபித்துத் தங்களது (வானம், பூமி, யென்னும்) பெற்றோரை மீண்டும் இளமை பொருந்தச்செய்தனர்—(எ-று.) மூலத்தில் 'பிதரௌ' வென்றேயுள்ளது. அத்தாய்தந்தையர் பூமி வானங்களென்பது மேனூட்டாசிரியர் குறிப்புரையிற்கண்டது.

5. மதந் தருமும் மதவு மருத்துவ
ரிதந்தரக் கெழு மிந்திரன் றன்னெடும்
விதந்தருஞ் சூட ராதித்தியரொடு
நிதந்தருஞ் சவனத்தினி னேர்ந்தவே.

(இ-ள்.) (ரிபுக்களே!) உமது மதத்தைத்தருஞ்சோமங்கள் மருத்துவரோடு கூடிய இந்திரனெடும், ஒளி வீசுகின்ற ஆதித்தியர்களோடும் (ஒவ்வொரு நாளுந்தரும் மூன்றுஞ்சவனத்திற்) கூடிநின்றன—(எ-று.) ஒவ்வொருநாளும் செய்யும் மூன்றுவதுஸவனத்தில் தரும் அவி, ஆதித்தியர், ரிபுக்கள் மூவர், (ரிபு, விபு, வாஜன் என்பவர்.) பிரஹஸ்பதி, விசுவதேவர்கள், என்னுமிவர்களோடு கூடிய இந்திரனுக்களிக்கப்படும் என்பார் ஆசுவலாயனர்—சாயணருரை.

வருக்கம் 1.

6. துவட்ட தேவன் சுவைக்க விழைத்திட்ட
நவச் சமலஞ் சுதைகொள வேன்றதை
யுவப்பி னன்கு வகைபெற மீளவு
நிவப்பி னீங்கள் வகுத்து நிறுத்தினீர்.

(இ-ள்) துவட்டாவென்னுந் தேவனால் தூதனமாகச் செய்யப்பட்ட மரப்பாத்திரவிசேஷத்தை நீங்கள் மீண்டும் நான்குவிதமாக வகுத்தமைத்தீர்கள்—(எ-று.) தச்சுவேலையிற் சிறந்தவன் துவட்டா, அவனது சிஷ்யர் ரிபுக்கள்—சாயணர். ரிபுக்கள் செய்த யாகத்துக்கு அக்கினிதேவன் வந்தபோது அவன் அவர்களோடு ஒருவனுகச் சேர்ந்ததனால் அவர்கள் அச்சமலத்தை நான்காக்கினரென்பது நிருமஞ்சரியிற் கண்டது.—மேனூட்டாசிரியர் குறிப்புரை.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

7. மூவெழுன்று முறையினிற் சோமத்தை
யாவுதிக்கென வாற்று மவர்க்குநீர்
மேவு மொவ்வொருவற்கு மணியினைப்
பாவு மெந்துதி கேட்டுப் பகிர்கவே.

(இ-ள்.) (அவிர்யக்ஞும், பாகயக்ஞும், ஸோமயக்ஞும்) எனமூன்று வக்யாகச் செய்யப்படும் எழுவித கர்மங்களிலும் சோமாபிஷவஞ்செய்யும் அவர்களுக்குத் தனித்தனி யொவ்வொருவனுக்கும், எங்கள் ஸ்தோத்திரங்களைக்கேட்டு இரத்தினங்களைத்தருவீர்களாக—(எ-று.) அக்கினியாதேயம், தர்சபூர்ணம் முதலாக அவிர்யக்ஞங்கள் ஏழு; ஔபாஸனம், ஹோமம், வைசுவதேயம் முதலாகப் பாகயக்ஞங்கள் ஏழு; அக்கினிஷ்டோமம் வாஜபேயம்முதலாக ஸோமயக்ஞங்கள் ஏழு; ஆக மூன்றுவிதமுங் கூறியபடி.

8. தேவகார்யம் வகித் தாயிர்தாங்கிப் பிற்
பாவு நன்மை பரந்த செயல்புரிந்
தோஷிலாது சிறந்ததனுன் மகத்
தேவரோ டொருபாக மடைந்தனர்.

(இ-ள்.) (இந்த ரிபுக்கள் தாங்கள் மனிதராயிருந்தபோது தேவகார்யங்களைவகித்துப் பிராணனைத்தரித்துப், பின்பு சற்கார்யங்களால் தேவர்களை வழிபட்டு, யாகத்தேவர்களோடொருவராகவிருக்கும் பெருமையையடைந்தனர்—(எ-று.) இந்த ரிபுக்கள் ஸுதன்வன் புத்திரர்களென்பதும், அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு இளமையைமீட்டுந்தருவித்தார்களென்பதும், காய்ந்தமோலக்கொண்டு ஒரு பசுவை யுருப்படுத்தினார்களென்பதுமாகிய இவைபோன்ற கதைகள்மேல் மண் 1 சூக்தம் 110-ல் கூறப்படுகின்றன.

வருக்கம் 2.

21. மண்டலம் 1. அநுவாகம் 5 சூக்தம் 4. 6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: இந்திராக்னிகளிருவரும்.

1. இந்திராங்கி யிருவரையு மிவ
ணன்தமாக வழைப்பெ னவர்துதிச்
சந்தம் பாடத் தழைத்தனுஞ் சோமத்தை
மூன்று மாந்தல் சுதைக்குடிச் சீரியர்.

(இ-ள்.) இந்திராக்கினி யிருவரையு மிவ்விடத்து வருமாறு கூவுவேன், அவர்களது ஸ்தோமங்களைப்பாடுவதே எமக்கு விருப்பம். சோமபானத்திற் சிறந்த அவ்விருவரும் சோமம் பருகட்டும்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 21.

2 இந்திராக்கி யிருவரை யேத்துமின்;
நன்று கூறிய வெக்கியத் தன்னவர்
நந்த வாழ்த்தி நரர்க டுதியுமின்;
சந்த காயத்தி யிசை சாற்றுமின்.

(இ ள்.) மனிதர்களே! இந்திராக்கினியிருவர்களையும் புகழுங்கள்; யக்ஞத்தில் நானுவிதஸ்தோத்திரங்களால் அழகுபடுத்துங்கள்க; ரயித்திரிமந்திரங்களாற் பாடுங்கள்—(எ-று.) ஸ்தோத்திரமெனினும் உக்தமெனினும் ஒக்கும்.

3. சோம பானிக ளிந்திரவங்கிக
ளேம மித்திர னிம்மக காரகன்
சேமமான புகழிற் சிறக்கவென்
ரோம சோமத் துவக்க வழைப்பமே.

(இ-ள்.) சோமபானிகளாகிய இந்திராக்கினிகள், இவ்வெக்கியமாற்றும் யஜமானனுய நண்பனது கீர்த்திபெருகுமாறு, சோமம்பருகவரும்படியழைப்போம்—(எ-று.) இவ்விடத்து, மித்திரன் என்பதற்குலககாவலனுகிய மித்திரனென்னுங் கடவுளெனப் பொருள்கொண்டு முட்டுப்படுவர் மேனுட்டாசிரியர். இது, சாயணருரையினிடத்து அவருக்குள்ள நம்பிக்கைக்குறைவா லேற்பட்டது.

4. உக்கிரத்துப் பகையை யொறுப்பவர்
தக்க வீச்சவனந் தருகள்விரை
யொக்க வுண்ண வழைப்ப, மிந்த்ராக்கினி
யிக்கணத் திவணெ யருள்கவே.

(இ-ள்.) சத்துருவதை முதலியவற்றில் உக்கிரமுள்ளவராகிய இந்திராக்கினிகளே சோமமுண்ணவழைக்கிறேம். (இந்தப்பிராதக்கால) ஸவனத்தில் தரும் சோமச்சுதையின் அருகேயமாட்டும். இந்திராக்கினிகளே! இங்குவாருங்கள்—(எ-று.)

5. அவைக்கு நாயகராய்க் குண மேம்படு
சுவர்க்க நாயக வங்கி யரக்கரை
யவிட்பதோ டுயிர்தின் னுமவர்களைத்
தவிக்க வாட்டுக சந்ததி யின்றியே.

(இ-ள்.) ஸபாபாலகரும், குணஞ்சிறந்த மகான்களுமாகிய இந்திராக்கினிகளே! இராட்சஸரை வலிகெடுப்பதோடு, உயிர்களைத்தின்னும் அவர்களுக்குச் சந்ததியில்லாமலுஞ் செய்க—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

6. இந்திராக்கினி யிற்றவு மூணமைகொண்
டந்தில் கன்ம வடைவை யுணர்த்துமச்
சுந்தரப்பதந் தோய்ந்து நிதானமாய்
நந்து மின்ப நமக்கென் றளிக்கவே.

(இ-ள்.) இந்திராக்கினிகளே! (செய்கையின் பலனைத்தவறுதளிக்கும்) உமது இந்த உண்மையினால், சற்கருமபலனிதுவென நினைப்பூட்டுஞ் சுவர்க்கத்திற்போய் ஸாவதானமாகவிருந்து, எங்களுக்குச் சுகத்தைத்தருவீர்களாக—(எ-று.) சுந்தரப்பதம்: சுவர்க்கம்; நமக்கு எமக்கென்பொருளில் வந்தது.

வருக்கம் 3.

22. மண்டலம் 1. அநுவாகம் 5. சூக்தம் 5.

21 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: 1-4 அசுவினிதேவர்கள்; 5-8 ஸவிதா; 9-10 அக்கினி; 11 தேவிமார்; 12 இந்திராணி வாருணி, ஆக்கிநேயி; 13, 14-தியாவாபிருதுவிகள்; 15-பிருதுவி; 16-21 விஷ்ணு.

1. காலையிற் செய்சுவனங் கலந்துறுங்
கோல வச்வினி தேவரைக் கூருணர்
வாலுமா றிங்கெழுப்புக; வன்னவ
ரேலு மிச்சுதை மாந்த விவணுறல்.

(இ-ள்.) பிராதஸ்ஸவன கிரஹத்திற் கூடும் அசுவினிகளே நல்லுணர் வுண்டாகும் வண்ணம் (தூக்கம் நன்றாய்த்தெளியும் வண்ணம்) (ஹோதாத் வர்யுக்களே!) எழுப்புங்கள். அவர்களிருவரும் இந்தயாகதலத்தில் பிழியுஞ் சோமத்தையுண்ணவரட்டும்—(எ-று.)

2. வான் றெடுபவர் சூதரி லுத்தமர்
வான் றிகிரி வகிக்கு முபயரா
கோன்பெறு மச்சுவினிப் புலவர்க
ளேன்று சார்ந்திட வெண்ணி யழைப்பமே.

(இ-ள்.) விண்ணுலகைத் தொடுபவரும் (விண்ணுலகில்வசிப்பவர்களும்,) தேர்கடாவுவோரிலுத்தமரும், நல்லதேரோடு கூடியவருமான உபய அசுவினிதேவரையும் யாங்களழைப்போம்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 22.

3. தோன்றுசி ரச்சுவினிப் புலவர்காள்!
ஆன்ற வன்பொடு மெய்புரை யாடுவீர்!
தேன்றுளிக்குந் கசையினே டேகியிங்
கேன்ற வன்னதின் யாகந் தெளிக்கலே.

(இ-ள்.) அசுவினி தேவர்களே! பிரியஸத்தியவாக்கோடு கூடிய நீர் தேன்றுளிக்கின்ற உமதுகசையினால் எக்கியதலத்தில் (ஸோமந்) தெளித்த ருளுவீர்களாக—(எ-று.)

4. சோம யாசியின் றெல்லகந் தூரமே
யாமென் றெண்ணிடு ரண்மையின் வாய்ந்தமே
சேமம் வாய்ந்த வந்தேரினி லச்வினி
நாமம் வாய்ந்துள தேவர்க ணண்ணலே.

(இ-ள்.) சோமமளிக்கும் யஜமானனது கிரகம் தூரத்திலில்லை, சமீபத்திலேயுளது. அசுவினிகளே! உங்கள் தேரிலேறி வருவீர்களாக—(எ-று.)

5. பொற்கரத் தொளிர் தேவன் சவிதாவை
யெற்குதவி யிழைக்கென வேண்டினேன்;
நற்கடவுள னுடி னவன்மறை
முற்றரும் பதமுன்னி யுணர்வனே.

(இ-ள்.) பொற்கையோடு கூடிய தேவனான ஸவிதா வெனக்குத் துணைசெய்யுமாறு அவனேவேண்டினேன். அந்த ஸவிதாதேவன் இம்மறையினாற் பிரதிபாதிக்கப்படும் பதத்தை (ஸ்தானத்தை) யறிவான்—(எ-று.) கௌஷீதகீப் பிராஹ்மணத்தில் பொற்கை ஸவிதாவுக்கு வந்தவகை சொல்லப்படுகிறது. தேவர்கள்செய்தயாகத்தில் ஸவிதாதானே பிராஹ்மணனாகவிருந்து நடத்தியபோது சில அத்வர்யுக்கள் 'பிராசித்ரம்' (தின்னக்கூடியது என்பது பொருள்) என்னும் பெயரையுடைய புரோடாசத்தை அவன் கையிலிட்டதாகவும், உடனே அதை வாங்கிக்கொண்டு அக்கையை வெட்டிவிட்டதாகவும், அவ்வத்வர்யுக்கள் பொன்னினால் ஒரு கைசெய்து பொருத்தியதாகவும், அதனால் ஸவிதாவுக்குப்பொற்கையனென்று பெயர் வந்ததாகவுங் கதை.

வருக்கம் 4.

6. வதியு நீரினை வற்ற வடிப்பவ
னுதவி வேண்டிச் சவிதாவினை யுற்றுத்
துதிமுழக்குவந்; தோயவ னேன்பினி
லதிவிருப்ப மடைந்துளம் யாங்களே.

(இ-ள்.) ஜலத்தை வற்றுவிப்பவனாகிய ஸவிதாவை உதவிக்காகத் துதிப்போம். அவனது விரதங்களை விரும்புவோம்—(எ-று.) இது ஹோதா, ஸாமகன், ரித்விஜன், சஸ்திரமுரைப்பவன் ஆகிய யாவரும் கூறுவது.

அஷ்டகம் 1 அத்தியாயம் 2.

7. மாறிலாது விளக்குவோன், மாந்தர்க்குக்
கூறுசெல்வ விசித்திர நன்கொடை
கூறுசெய் தளிக்குஞ் சவிதாவினைத்
தேற லுண்டிடத் தேடி யழைப்பமே.

(இ-ள்.) மனிதர்களுக்கு ஒளியளிப்பவனும், மணி, முத்து, பொன் முதலிய விசித்திர வர்ணமான பொருள்களைத்தருபவனுமான ஸவிதாவைக் கூவுவோம்—(எ-று.) தேறலுண்டிடவென்பது வடமொழி மூலத்திலில்லை. செய்யப்படுவது சோமயாகமான தபற்றி அச்சொற்றொடர்சேர்க்கப்பட்டது.

8. தோழர்கா ளிவண்டோய்க; சவிதாவும்
வாழி வல்லியிற் போற்றற்குரியவன்;
மாழை நந்தமை நாடி வழங்குவோன்
கேழுறுந் தனமீத்துக் கிளருவான்.

(இ-ள்.) தோழர்களே! இங்குவாருங்கள். ஸவிதா நம்மால் விரைவில் துதிக்கப்படத்தக்கவன். செல்வமளிக்கு மவன் பிரகாசிக்கிறான்—(எ-று.)

9. அங்கி யன்புறு தேவ மனைவியர்
தங்களை யிவட்சேர்க்க, துவட்டாவைப்
பொங்கு சோமம் பருக வருகினிற்
றங்குமாறு தயக்குக நன்மையின்.

(இ-ள்.) அக்கினியே! (இந்திராணி முதலிய) அன்புள்ள தேவ பத்தினிகளை இந்த யாகசாலைக்குக்கொண்டுவருக; துவட்டாவென்னுந்தேவ னையும் சோமம்குடிப்பதற்காகக் கூட்டிக்கொண்டு வருவாயாக—(எ-று.)

10. வன்னி யெளவனம் வாய்ந்தவ தேவர்தம்
பன்னியர்களாம் பாரதி ஹோத்திரை
துன்னுகின்ற வரூத்திரி தீடணை
மன்னுவித்திடல் மாரு வதவிக்கே.

(இ-ள்.) கட்டிளமைவாய்ந்தவக்கினியே! (அக்கினியின் பத்தினியாகிய, ஹோத்திரையையும், (ஆதித்தியன் மனைவியாகிய) பாரதியையும், (சிறந்த வளாகிய) வரூத்திரியையும், (வாக்குத்தேவியாகிய) திஷணையையும், எங்களைக் காப்பதற்காகக்கூட்டிக்கொண்டு வருவாயாக—(எ-று.) பாரதி பரதபத்தினி, பரதன் ஆதித்தியன், யாஸ்கர். திஷணை திடணை முதலீண்டு தீடணையாயிற்று.

மண்டலம் 1. சூக்தம் 22.

11. ஆருகின்ற தம்பத்திரர் தன்னமு
மேரிழந்து சின்னப்படா ரெமவயிற்
பேருதவியுங் காப்பும் பிறங்கிட
வீர பன்னியர் தேவியர் மேவுக.

(இ ள்.) கொஞ்சமும்வெட்டுப்படமுடியாத அழகிய (பத்திரம்) சிறகுள்ளதேவிமாராகிய வீரபத்தினிகள் எங்களுக்குஇரட்சணையையும் சுகத்தையுமளிக்குமாறு எங்களாற் சேவிக்கப்படட்டும், அதாவது இங்குவரட்டும்—(எ-று.) வீரபாலன தேவியர் மேவுக, வென்பதும் பாடம்; சாயணர் ந்ருபத்நய: என்பதற்கு நரர்களை (வீரர்களை)ப் பரிபாலிக்கும் தேவிமார் என்று பொருள்கொள்ளுவதால்.

12. இந்திராணியை யக்கினி தேவியை
மூந்து வாருணி மூவரையு மொரு
தொந்தரையுந் துதையா தழகின்யாம்
நந்த, நாடுவேன் சோமம் பருகவே.

(இ-ள்.) எங்களுக்கு ஒரு கஷ்டமும்நேராதபடிச் சுகமமையும் வண்ணம், இந்திராணி, அக்கினியி, வாருணி இம்மூவரையும் அழைப்பேன்—(எ-று.) இவர் முறையே இந்திரன் அக்கினி, வருணன் மனைவியர்.

13. எட்டும் வான் புவிவான மெனவீரை
யொட்டு மன்னவ ரொண்முர ணேய்ந்தவர்
புட்டி யீயும் பொருளெமக் கூட்டியெம்
மிட்டி தன்னைப் புரோக்கணஞ் செய்கவே.

(இ-ள்.) பெருமைவாய்ந்த வானதேவதையும் பூமிதேவதையும் எங்கள் யக்ஞத்தை தங்களது ஸ்ரம்பொதிந்த ரஸத்தால் புரோகஷிக்கட்டும் (தெளிக்கட்டும்.) பிற்பாடு எமக்குப்புஷ்டியைத் தரத்தக்க வஸ்துக்களை யளிக்கட்டும்—(எ-று.) புஷ்டி, இஷ்டியென்பன, புட்டி, இட்டி யெனத்திற் பவமாயின.

14. சோமங் காத்திடுங் கந்தருவன் பதத்
தேமமாக விசைகளே விப்பிரர்,
தோமஞ் செய்த பயனெனத், தோயத்தை
யோம நெய்போல் வளத்தி னுறுவரே.

(இ ள்.) கந்தருவனது நிச்சயபதமாகிய அந்தரத்தில் விப்பிரர்கள் இசைகளைப்பாடி அதன் பயனாக நெய்போலப் புஷ்டியுள்ள ஜலத்தைப்பெறுவார்கள்—(எ-று.) சோமங்காத்திடுமென்ற அடை மூலத்திலில்லை. கந்தருவனது பதம் அந்தரிட்சவுலகமாம். கந்தருவநகரம் என்ற சொல் மேகத்தின் பெயராயமைந்துள்ளதன்மை யீண்டு கருதற்பாலது. அது இங்கு விண்ணைக்குறித்து நின்றது. இக்கந்தருவனது தொழில் சோமத்தைக்காப்பாற்றுவதென்பார் மேனூட்டாசிரியர், யட்ச, கந்தர்வ, அப்ஸரகணங்களுக்கிடம் அந்தரிட்சம் என்றுதாபதீயசாகையிற்கூறப்படுகிறது.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

15. இடமகன்று பிருதுவி யேய்கவே;
யிடரிலாது சுகத்தி னியைந்துறத்
தடமகன்ற சரணுலய மெமக்
குடனளித் தருளாங்குக வின்றுமே.

(இ-ள்.) பிருதுவியே! நீ விஸ்தீரண குணஸம்பன்னனு யமைக. கஷ்டமில்லாது நாங்கள் சுகப்படும்படி ஒரு விஸ்தாரமான சரணுலயத்தை எங்களுக்குத்தருவாயாக—(எ-று.)

வருக்கம் 6.

16. விண்டு வேழெணும் வேதப்பண் பாடியே
யண்டலர் செறிபூமி யடக்கிய
மண்டலத்தின் மருவி யத்தேவர்க
ளண்டு நம்மை யழகி னருள்கவே.

(இ-ள்.) விஷ்ணு எழுவிதமான வேதவிசைகளைக்கொண்டு பூமியில் நடமாடின அந்தவிடத்திலிருந்துகொண்டு தேவர்கள் நம்மைக் காக்கட்டும் —(எ-று.) அ, பண்டறிசுட்டு. தேவர்கள் விஷ்ணுவைத்தலைமையாகக்கொண்டு (காயத்திரி முதலாகிய) எழுவித வேதப்பண்களையும்பாடிப்பூமியிலுள்ள பாபிகளின் தொந்தரவைநீக்கினர்கள்; பூமியைச்சயித்தார்கள் என்றது தைத்திரீயம்.இக்கதை திரிவிக்கிரமாவதாரத்தைச் சுட்டிப்பிப்பது என்பார் சாயணர்.

17. இவ்வுலகங்க ளெங்கணும் விட்டுணு
செவ்வை யாகத் தனதடி யோட்டியே
முவ்வடியின் முழுத்து மளந்தகாற்
கவ்வு தூளியின் யாவுங் கலந்ததே.

(இ-ள்.) இவ்வுலகமுழுதும் மூன்றடியாலளந்த விஷ்ணுவின் பாதத் தூளி சேர்ந்து இவவுலகமாயிற்று—(எ-று.)

18. ஏல யாரு மிடர்செயாத் தன்மையான்
பாலனஞ் செயும் விண்டு தன்மூவடி,
ஞால தன்ம நடைபெற வோம்புவான்,
மேலெடுத்து விளங்க நடந்தனன்.

(இ ள்.) ஒருவராலும் இம்சிக்கமுடியாத வலிமையுள்ளவனும், எல்லா ஜகத்துக்களையும் இரட்சிப்பவனுமாகிய விஷ்ணு பூமியில் நடக்கும் (அக்கினிஹோத்திராதி) தருமங்கள் நடைபெறுமாறு ஜகத்தை மூன்றடியாலளந்தான்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 23.

19. விண்டு பாலனந் தம்மை விருப்பொடு
மண்டி நோக்குமி னிந்திரனே டியைந்
தெண்டரு மதுசூ லிழைக்கு நட்
பண்டி நோன்பி னடைவ னவனுமே.

(இ-ள்.) (இருத்விக்குமுதலானவர்களே!) விஷ்ணு கருமங்களைப் பரிபாலிப்பதைக் கவனியுங்கள். இந்திரனோடு சேர்ந்த தோழனும் விரதங், களை நடத்துவிக்கும் யஜமானர்களிடத்தெல்லாம் வந்தருளுவான்—(எ-று.

20. அண்ட வான்றலை பைதி னமைந்திட்ட
மண்டு நல்லொளிக் கண்ணென வாய்ந்திடும்
விண்டுவி னப் பரம பதத்தினை
யண்டிச் சூரிகள் காண்குவ ரென்றுமே.

(இ-ள்.) ஆகாயத்தே எல்லாப் பக்கத்திலிருந்தும் தடைபடாமற் காணப்பட்டுக் கண்போலவிளங்கும் அவ்விஷ்ணுவினது பரமபதத்தை ஸூரிகள் என்றுங் காண்கிறார்கள்—(எ-று.) ஸூரிகள்=வித்வாம்ஸர்கள்.

21. விண்டுவி னப் பரமபதத்தைப பண்
கொண்டு பாடு மறையவர், சாக்கிரத்
தண்டி யென்று மணைந்த பெரியவர்,
மண்டு தம்மிசை கொண்டு வயக்குவார்.

(இ-ள்.) விசேஷமாக ஸ்தோத்திரங்கள் பாடும் விப்பிரர்கள், (சப்தார்த்தங்களில் பிரமாதம் விளைந்துவிடாதபடி யெப்பொழுதும்) ஜாகரூகராயிருக்கும் பெரியவர்கள், விஷ்ணுவினது அப்பரமபதத்தைத் தமது பண்களால் நன்றுகப்பிரகாசிக்கச்செய்வார்கள்—(எ-று.)

வருக்கம் 7.

23. மண்டலம் 1. அநுவாகம் 5. சூக்தம் 6.

24 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதாதிதி: வடமொழிச்சந்தம்: 1-18 காயத்ரி; 19 புரவுஷ்ணி (கந்தாதபூதிச் செய்யுள்.) 20 அநுஷ்டுப், 22 பிரதிஷ்டா (கலிவிருத்தம்) 22-24 அநுஷ்டுப் (கலி நிலைத்துறை).

தேவதை: 1, வாயு; 2, 3, இந்திரவாயுக்கள்; 4, 5, மித்திராவருணர்கள்; 7-9 மருத்துக்கள் 10-12 விச்வதேவர்கள்; 13-15, பூஷன்; 16-22; ஆபः (நீர்); 23; அக்நியும் நீரும்; 24, அக்நி.

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

1. பல முறைந்துள சோமமும்; பற்பல
நல முறைந்திடு மாகி நயத்தினித்
தல முறைந்த சுதையினை, வாயுவே!
வல முறைந்திட வந்து பருகலே.

(இ-ள்.) சோமங்கள் (நிறையவிருப்பதால்) பலத்தோடு கூடியிருக்கின்றன; ஆசீர்வசனத்தோடுகூடிய இச்சுதையினை, (உத்தரவேதிக்குக் கொண்டுவரப்பட்டதை) வந்து குடிப்பாயாக—(எ-று.)

2. வானினைத் தொடுந் தேவர்கள் வாயுவோ
டான விந்திர னென்றிருவர்தமைப்
பான சோமம் பருகுதற் கென்றியா
ஞான மோங்கு மறையி னழைப்பமே.

(இ-ள்.) வானத்தைத்தொடுந் தேவர்களாகிய இந்திரவாயுக்களிரு வரையும் இச்சோமத்தைக் குடிக்கக்கூவுவோம்—(எ-று.)

3. வாயுவிந்திரர் மன்னு மனோவேக
ராயு நன்மக நாயக ராயிர
மேயுங் கண்ணினர் தம்மை மறையவர்
தோயுநற் றுணை யாகெனக் கூவுவார்.

(இ-ள்.) மனோவேகமுள்ளவரும், கர்மத்தை (அல்லதுபுத்தியை)ப் பரிபாலிப்பவரும், ஆயிரக்கண்ணுடையவருமான இந்திரவாயுக்களைத்துணைக் காக விப்பிரர்கள் கூவுவார்கள்—(எ-று.)

4. நேர்ந்த தூவலி நீண்டவ ரென்று சீர்
வாய்ந்த தேவர்கள் மித்ர வருணர்க
ளேய்ந்து சோமத் துளியைப் பருகயா
மோர்ந்து கூவி யுவரை யழைப்பமே.

(இ-ள்.) பரிசுத்தமான வலிமையுடையவரான மித்திராவருணர்கள் சோமங் குடிக்கவாட்டுமென்று (அநுஷ்டாதாக்களாகிய) நாம் அவரைக் கூப்பிடுகிறோம்—(எ-று.)

5. ஒழுங்கி னல்லொழுங் கோம்புவ ரவ்வொழுங்
கழுங்குறு தொளியார்ந்த ஞபகர்
தழுங்கு மித்திர வாருணர் தக்கோ
யொழுங்கி னேக வழக்க வழைப்பனே.

(இ-ள்.) ஒழுங்கினால் (சத்திய வசனத்தினால்) ஒழுங்கை (விரத பலன்களை) வளர்ப்பவர்களும், ஒளியமைந்த அபவொழுங்குக்கு நாயகருமான மித்திராவருணர்களோ யான் அழைப்பேன்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 23.

6. வருண னெம்பெருங் காப்பா யமையுக,
தருண நற்றுணை யாவுந தயக்கிலே
யரண மாக லெமக்கு நன்மித்திரன்;
வருண மித்திரர் செல்வம் வயக்கவே.

(இ-ள்.) வருணனெமக்குப் பெரிய காவலாகவமையட்டும்; மித்திரனும் எமக்கு உதவியாகட்டும்; இருவரும் செல்வம் எமக்கு அளிக்கட்டும் —(எ-று.)

7. மருத்துவந்தனு மிந்திரன் றன்னையே
பொருதது சோமம் பொருந்திக் குடித்திட
வருதநியோடு மழைப்ப மவன் மிகத்
திருத்தி யெய்துக சேர்ந்த கணத்தொடே.

(இ-ள்.) மருத்துக்களோடு கூடிய இந்திரனைச் சோமங்குடிக்க அழைப்போம். அவன் (மருத்துக்) கணங்களோடு திருப்தியடையட்டும்—(எ-று.)

8. இந்திரற்கு மூதன்மை யியைப்பிர்காள்!
சுந்த பூடன் கொடைகளைப் பங்கிடு
மந்தம் வாய்ந்த மருத்துவ தேவர்காள்!
வந்தியாவரு மென்வினி கேட்கவே.

(இ-ள்.) இந்திரனை ஜேஷ்டனுகக்கொண்டவர்களும் பூஷனது தனக்கு கொடைகளை பங்கிடுபவருமான மருத்துவ தேவர்களே! எல்லாருமாக என் அழைப்பினுக்குச் செவிகொடுங்கள்—(எ-று.) பூஷன்=கன்று காலிகளை விருத்தி செய்யுந்தேவதை.

9. இந்திரனே டியைந்து விருத்திர
னந்த வாட்டுக நற்கொலைத் தேவர்காள்,
பொந்து மீவலிப் பூரிய தூட்டனு
மெந்தமைக் கெடுக்காவணம் யாமுறல்.

(இ-ள்.) நல்லதானங்களிற்சிறந்த (மருத்துவ) தேவர்களே! இந்திரனேடு கூடி விருத்திரனைக்கொல்லுங்கள். தூட்டனுகிய பகைவன் எம்மை யடக்கமுடியாத வண்ணம் யாங்கள் சிறந்திருக்கட்டும்—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 1.

10. மேவு சோமக் குடிக்கு மருதராந்
தேவர் யாக்ரயுந் தேடி யழைப்பமால்
யாவருக்குந் தெரிந்த பிருகினி
யோவி னன்மக ருக்கிர மெய்தினர்,

(இ-ள்.) மருத்துக்கணத்திற்சேர்ந்த எல்லாத்தேவர்களையுஞ் சோம பானத்துக்காகக் கூப்பிடுவோம்; அந்தப்பிரசித்திபெற்ற பிருச்னி மக்கள் உக்கிரத்தன்மை யடைந்தனர்—(எ-று.) பிருச்நிமாதர: பிருச்னியைத்தா யாக வுடையவர் மண். 1, சூ. 14, ரி. 3, பார்க்க.

வருக்கம் 9.

11. நரர்களே நீர் சுபமென நாடியே
மருவு யாகத் தலத்தை மருவும்போ
தாரமொடுஞ் செயவீர ருரையென,
வரமருத்துவர் வாக்கு மூரப்புமே.

(இ-ள்.) மருத்துவர்களே! நீங்கள் சுபகர்மமான தேவயஜனத்துக்கு வரும்போது உமதுகுரல் வெற்றியாளர்களாகிய வீராது குரலைப்போல் உரக்கச்சப்திக்கும்—(எ-று.) நரர்களீண்டு மருத்துவர்களையே குறித்து நின்றது.

12. நகைதரு மின்னெளி பெறு மாருதர்
மிகவு மந்தர மெங்களுந் தோன்றுவோர்
தகவுட னெமைக் காக்க, வெமதிடை
வெகுசுகத்தை விளைத்துச் சிறக்கலே.

(இ-ள்.) ஒளி மிகுந்த மின்னலினது பிரகாசத்தையுடைய மருத்துவ கள், அந்தர வெளியில் எல்லாப்பக்கத்தினுமுண்டாவோர் எமைக்காக்கட்டும், எமக்குச்சுகத்தையளிக்கட்டும்—(எ-று.)

13. சித்திரமாய்த் திகழ்ந்த தருப்பையி
னெத்தமர் மகந்தாங்கு மொருவனே
மெத்து காந்தி விரைகதிப் பூட வா
னித்தை நின்று மியைக்கல் கெட்டாவினே.

(இ-ள்.) பிரகாசத்தோடு கூடி நடைவிரைவுள்ள பூஷனே! சித்திர மாகவமைக்கப்பட்ட தருப்பையில் அமரும் யாகதாரண சோமனை (ஸோமனைக்) கெட்ட பசுவைக் கொண்டுவந்துசேர்ப்பது போல் வானத்தினின்றுங் கொண் டுவருவாயாக—(எ-று.) 'தேவர்களைத் தாங்குவோனுகிய ஸோமனைத் தருப்பையிலமரும் பூஷனே கெட்ட ஆடு மாடுகளைக் கொண்டுவருவது போலக் கொண்டுவருவாயாக; எனப் பொருள் கொள்ளுவர் மேனுட்டாசிரி யர். இச்ஷத முன்னிலையசைச்சொல். கெட்ட ஆவின் எனப்பிரிக்க.

மண்டலம் 1. சூக்தம் 23.

14. மின்னு சோதி விளங்கிய பூடனும்
வன்னம் பற்பல வாய்ந்திடு நாணலின்
மன்னு மன்னன் குகையினிற் கூடம்மாய்த்
துன்னுவாணத் துகளற வோர்ந்தனன்.

(இ-ள்.) பிரகாசம்பொருந்திய பூஷன் சித்திரமாகவமைக்கப்பட்ட தருப்பையிலுள்ள மன்னனுகிய ஸோமனைக்குகையினிடத்து வெகு இரகசிய மாயிருக்கக்கண்டு, அவனையடைந்தான்—(எ-று.) குகையென்றது ஈண்டு இலகுவில் அடைய முடியாத விடத்தைக்குறித்தது. இராஜா ஸோமனும்.

15. இத்துளிகளோ டென்பொருட் டன்னவ
னெத்தவாறிங் குறுத்துக மீண்டுமீண்
டித்தரையி னெருத்தி னுழுது நெல்
வித்தி யாண்டுதோ றுக்கும் விளைவென.

வருக்கம் 10.

(இ-ள்.) இந்தசோமத்துளிகளோடு எனக்காக அப்பூஷன் எருதுகொண்டு நிலத்தையுழுது நெல்விளைத்து வருஷந்தோறும் விளைவை யெடுப்பது போல் ஆறு பெரும் பருவங்களையும் மீள மீள அமைக்கட்டும்—(எ-று.) வட மொழிமூலத்தில் யவம் என்றுளது. யவம் கோதுமை போன்ற ஓர் தானியம்.

16. அத்துவர் ருடன் பிறப் பானவர்
நத்து மம்மையர் நாடி யவர்வழி
யொத்தொழுகுவ சொண் மதுரத்தினு
லொத்த பாலிற் சுவையினை யூட்டியே.

(இ-ள்.) அத்துவர்களது பந்துக்க (சகோதரிக)ளுந், தாயருமான (ஜலங்கள்) பாலிற் சுவை யூட்டிக்கொண்டு அவ்வத்துவர்களது பாதைக் கண்ணே செல்லும்—(எ-று.) தண்ணீரில்லாமல் யாகம் புரிவோர்க்கொரு வேலையும் நடவாதாதலின் அத்தண்ணீரைத்தாயென்றும் உடன்பிறப்பென் றும் உபசரித்தார்.

17. என் றருகி னிருக்குந் தணீ, ரன்றே
லென்றிவ்வெடு மிணபெற நிற்பவை
மன்ற யாங்க ளிழைத்திடு மிம்மகந்
துன்றி யுள்ளக் களியினைத் தோய்கவே.

(இ-ள்.) சூரியனுக்குச்சமீபத்திலிருக்கும் இத்தண்ணீர், அல்லது சூரியனென்று கூடத்தருதப்படுந்தண்ணீர் இம்மகத்தைச் சார்ந்துநின்று உவப்பையெய்தட்டும்.—(எ-று.) 'ஆபஸ் ஸூர் யோஸமாஹிதா' என்பது தைத்திரீய அரண்யகம் முதற் பிரபாடகத்திலுள்ளது.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

18. கோக்கள் சென்று தண்ணீர்குடி யாபமா
மாக்க தேவிக ளார்ந்தில ணண்மிடக்
கூக்குரலின் விளிப்பென்; குடிஞைகட்
காக்கவற் றிவணுகு மவியதே.

(இ-ள்.) பசுக்கள் சென்று குடிக்கும் தண்ணீராகிய தேவிகளைக் கூவுவேன். (ஓட்டத்திற்சிறந்த) ஆற்றுக்கு அவி தரத்தக்கது—(எ-று.) விந்துபி: என்பதற்கு ஓட்டத்திற்சிறந்த ஆபதேவதைகள் என்பார் சாயணர்.

(வேறு.)

19. நீர்க்கண் ணமுத நிலபெற் றெளிரு
நீர்க்கட் பலமூலிக்க ணின்றுலவு
நீர்க்கண் ணுரைசீர் நிமிடத்துரைதந்
தேர்க்கண் ணமைக தேவ ரிவரே.

(இ-ள்.) ஜலத்தினுள் அமிர்தமும், ஜலத்திற் பேஷஜமும் உறையும்; தேவர்களே! (பிராமணர்களே!) அதன் பெருமையையுரைக்க விரைகுவீர்களாக—(எ-று.) 'பிரமாணர்கள் பிரத்தியட்சதேவர்க' ளென்று தைத்திரீயஸம்ஹிதை கூறும்.

(வேறு.)

20. சோம னென்றனுக் குரைத்தனன் றேயத்தி னுப்பண்
வாம பேடசம் யாவுமே வளருமென், றவற்றே
டோம வங்கியு முறையுமென்; றொன்றுமே குறையாத்
தோமி னன்மருந் தூறுத்து நீ ருரைத்தது மதுவே.

(இ-ள்.) ஜலத்தின் மத்தியின் எல்லா மருந்துகளும், அக்கினியும் வசிப்பதுண்டென்று சோமன் எனக்குச் சொன்னன். ஸர்வபேஷஜ காரணனான ஆபனு மதனையே கூறினன்—(எ-று.) நீர், ஆபன், ஜலபிமானி தேவதை.

வருக்கம் 11.

வேறு.

21. நோ யொழித்திடு மௌடதத்தினை
மேய வென்னுட லுய்ய வேண்டியே
தூய வாபமே தோய்த் தருளுக
காயு மென்றை நீடுழி காணவே.

(இ-ள்.) என்னுடைய சரீரத்துக்குக் கவசம் போன்ற மூலிகைகளை நீரானது நிறைத்தருளட்டும், யான் சூரியனை நீண்ட காலம் பார்க்குமாறு—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 24.

(வேறு.)

22. நீர்க ளிவ்விடம் பாய்ந்து சேய்நெட்டுக யானும்
பார்தனி லறியாமையாற் செய்த பாவத்தைச்
சீர்கெடப் புரி துரோக கர்மங்களேப, பொய்யை,
யேர்கெடத் தந்த சாபங்க ளாதியவறறை.

(இ-ள்.) யான் அறியாமற் செய்த பாபத்தையும், (தெரிந்துசெய்த) துரோக கர்மங்களையும், பேசிய பொய்களையும் நீரானது இவ்விடம் பாய்ந்து அப்புறம் நெட்டித்தள்ளட்டும்—(எ-று.)

23. இன்று நீர்களே நேடினே; னேடிப்பி னிவற்றி
னின்று மல்கிடு மிரதத்தை நிவப்புற வடைந்தேந்;
துன்று நீர்பொருந் தக்கினி சுறுக்கென வருக,
வுன்றன் காந்தியா லென்றனே நிரப்புக வுடனே.

(இ-ள்.) இப்பொழுது (யாக முடிவிற் செய்யும் ஸ்நானத்துக்காக) ஜலத்தை நாடிச்சென்றேன்; அச்சல வாதத்தோடு நாங்கள் கலந்தோம். ஜலத்தோடு பொருந்திய அக்கினியே சீக்கிரம் வருக, உனது காந்தியை (அப்படி ஸ்நானஞ்செய்யும்) என் தேஜஸோடு சேர்ப்பாயாக—(எ-று.)

24. அங்கி யுன்னுடைத் தேசொடு மெனை யமைத்திடுக;
தங்கு மாயுளுஞ் சந்ததி தம்மையுந் தருக;
அங்கமா பெண்ணத் தேவர்க ளுள்ளவா றறிக;
பொங்கு மிந்திர னிருடி யருடன் புலன்கொளலே.

(இ-ள்.) அக்கினியே உன்னுடைய தேஜஸை எனதோடு சேர்ப்பாயாக; எனக்குத் தீர்க்காயுளும் சந்ததியும் தருவாயாக; தேவர்கள் எனது (யஜமான னுடைய) அபிப்ராயத்தையறியட்டும். இந்திரனும் ரிஷிகணங்களோடு அவ்வபிப்ராயத்தை யறியட்டும்—(எ-று.)

24. மண்டலம் 1. அநுவாகம் 6. சூக்தம் 1.

15 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சுநச்சேபன். வடமொழிச்சந்தம்: 1, 2, திருஷ்டுப் (அது சீர்க்கழி நெடிலாகிய திருஷ்டம்); 3-5, காயத்திரி; 6-15, திருஷ்டுப் தேவதை: 1, யாஃ; 2, அக்கினி; 3-5, ஸவிதா; 6-15, வருணன்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(வேறு)

1. அமர ரென்றுரைப்போர் தம்மி லநுகூலம் வாய்ந்த தேவன்
நமரென வுறைவோ னின்று சாற்றுதற் கியாவ னுள்ளான்?
அமைவலி யதிதி மாட்டு மீட்டெமை யமைத் தென்றுயை
யமல தந்தையீனைக் காணுமா றெனை யார் சேர்ப்பாரே?

(இ-ள்.) மரணதர்மமில்லாதவர்களில் அநுகூலத்தைத் தரக் கூடிய தேவன்யாரென்று தெரிந்து அவனுடைய சோபன நாமத்தை யான் யுச்சரிப்பது? எம்மை மறுபடியும் பூமியிலேயே வைத்து எனது தாய் தந்தையர்களைப் பார்க்கும்படி செய்யக்கூடிய (பிரஜாபதி) யார்?—(எ-று.)

இச்சுநச்சேபனது கதை ஐதரேய பிராஹ்மணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறது. 'பூர்வம் அரிச்சந்திரனென்று ஒரு அரசனிருந்தான். அவன் வருணனே வேண்ட ரோஹிதனென்ற புத்திரன் பிறந்தான். பிள்ளை பிறந்தால் அவனைப் பலியிடுவதாகவேண்டிக்கொண்டபடி ரோஹிதன் பெரியவனான பின்னர்த்தந்தை தன் நேர்த்திக்கடனைப்பற்றித் தெரிவிக்க ரோஹிதன் காட்டுக்கு ஓடிப்போனான். அங்கே அஜீகர்த்தர் என்ற ரிஷி துன்பப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு தனக்குப்பதிலாக அவரது புத்திரர்களில் ஒருவனை வருண பலியாகக்கொடுத்தால் யதேஷ்டமான தனங்கொடுப்பதாகக் கூறி இடைச்சலான சுநச்சேபனைப் பலிக்காகக் கொடுப்பித்தான். சுநச்சேபனை யூபஸ்தம்பத்தில் கட்டினார்கள். அவ் யாகப் பிராமணர்கள் பதினாறுவரில் விச்வாமித்திரர் ஒருவராயிருந்தார். அவர், வருணப்ரீதியாக ஸ்துதி பாடச்சொல்லிச் சுநச்சேபனைத் தூண்டினார். உடனே சுநச்சேபன் 97 இருக்குக்களடங்கிய 6 சூக்தங்களைப்பாடவே வருணன் திருப்தியடைந்துச் சுநச்சேபனைக் கட்டவிழ்த்து விடும்படி உத்தரவளித்தான்.' என்பது கதை. அதிதி=பூமி. இச்சொற்கு மேனாட்டைகாரர்கள், அகிலாண்டமென்றும், இயற்கையென்றும், மோட்சமென்றும் அகத்துவமென்றும் பற்பலவாறு திறப்பித்து உரை கூறுவர்.

2. அமரரின் முதன்மை வாய்ந்த வக்கினி தேவனும
நமவென நினைப்போம் யாங்க ணலந்தரு சுபத்தை நாடி;
யமைவலி யதிதிமாட்டு மீட்டெமை யவ ணமைப்பா
னிமையிலென் றந்தை தாயை யெண்ணி யான் காணுமாறே.

(இ-ள்.) தேவர்களில் முதன்மையான அக்கினியினது சோபன நாமத்தை நாம் சிந்திப்போமாக. அவன் நம்மை மறுபடியும் பூமியின்கணிருத்தி எனது தாய் தந்தையர்களைப் பார்க்குமாறு செய்வான்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 24.

(வேறு)

3 உரத்தி னென்று முதவி யியற்றிடும்
வரத்துயர்ந்த நல்வத்துவுக் கீசனுந்
தாத்துயர் சவிதா வன்றன் மாட்டியா
மருத்தியோடு பங் கீகென யாசிப்போம்.

(இ-ள்.) (அக்கினியினுற் பிரேரேபிக்கப்பட்டுப் பின்வரும் மூன்று, இருக்குக்களால் ஸவிதாவைத் துதிக்கிறான்.) எப்பொழுதுங் காப்பவனே! ஸவிதாவென்னுந்தேவனே, சிறந்த பொருள்கட்கு ஈசானனே (நாயகனே) செல்வந்தரும்படி உன்னை (யெப்பொழுதும்) யாசிப்போம்—(எ-று.)

4. நிந்தை யேற்படு முன்னர் நிலைத்திட்ட
வந்தனை புகழ் வாய்ந்திடு பாக்கிய
முந்து வெம்பகை முற்று மில்லாதது
தந்து நின்றதா முன்கரந் தன்னினே.

(இ-ள்.) (ஸவிதாவே!) நிந்தை யேற்படுவதற்கு முன்னரே உன்னிடத்து நிலைத்திட்டதும், அந்நிந்தைக்கு முன்னும் பகைக்கப்படாததும், எல்லாராலும் போற்றப்பெற்றுப் புகழ் வாய்ந்ததுமான செல்வம் உன் ஹஸ்தங்களில் கொடுக்கப்பெற்றது—(எ-று.) தந்து நின்றது தா நின்றதென்னும் பொருளில் வந்தது.

5. பொன் பொருந்திய வன்பெறுங் காவலின்
மன்னுவோஞ் சிறப்பெய்துற யாங்களுஞ்
சொன்னப் பேற்றினிற் றேயு முதன்மையை
நன்னரின் யாந் தொடங்குற நாடியே.

(இ-ள்.) (ஸவிதாவே!) உன்னைச்சேர்ந்த (சுநச்சேபனது நாமத்தோடு கூடிய) யாங்கள், தனம் பொருந்திய உனது இரட்சணையிற் சிறப்பாகப் பரந்து நிற்போமாக, தனம் படைத்தோரில் முதன்மையையடைய ஆரம்பிக்கும் வண்ணம்—(எ-று.) பக பக்தஸ்ய என்னுஞ் சொற்றொடருக்குப் பகன் என்னும் தேவன் பிரித்துக்கொடுக்கும் என்பார், மேனட்டார் சிரியர். பகன், விதி, ஊழ், அதிர்ஷ்ட மென்பன ஒரு பொருட்கிளவிக ளென்பாரவர். அவருரைப்படி, செய்யுள் பின் வருமாறு.

மன்னு தன்னை வணங்கினவர்கட்குப்
பொன்பகிர் பகன் பூரித்தளித்திட்ட
நன்னிதியிற் றலைமையை நண்ணுவ
முன் னிருந்துணை யுன்னி யடைந்துமே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(வேறு.)

6. வானத்துப் பறந்துசெல் லப்பறவை ஞனது மெய்யின்
மானத்தை யேனுங் கோபம் வல்லமை தம்மையேனு
மீனத்தி னீங்கப் பெற்றுச் சிறந்ததே யில்லை; யென்றுந்
தானத்தை மாற்று நீர் கா லுன்கதி சருவிடாவே.

(இ-ள்.) ஆகாயத்தில் பறக்கும்போது காணப்படும் (சேனம் முத லிய) பட்சிகள் உனது சரீர பலத்தையாவது, பராக்கிரமத்தையாவது (உனது கோபத்தையொத்த) கோபத்தையாவது அடைந்ததில்லை; நிமிஷந்தோறும் இடம்மாறும் ஜலமும் வாயுவும் உன் (வேகத்தையொத்த) வேகத்தையடைய மாட்டா—(எ-று.) இதுமுதல் இச்சுக்தங் கடைசிப்பாட்டு வரையில், ஸவிதா வால் பிரேரேபிக்கப்பட்ட சுநச்சேபன் வருணனைத் துதித்த இருக்குக்களாம்.

7. தூய்மையாம்வலியைத்தோய்ந்துதுகளறுவருணமன்னன்
சேய்மை வா னுறையும் வேரின் மருவிய மரத்தா ணேராய்
வாய்வுற நிறுத்துவா; னம்மரத் தொளிக்கற்றைக் கீழ்நோக்
கேய்ந்தொளிகாலு;மன்ன வெம்முனைகழுந்தித்தோய்க.

(இ-ள்.) சுத்த பலத்தோடு கூடிய ராஜாவானவருணன், அந்தரிட்சத் தில், மேற்பக்கத்து வேரோடுகூடிய மரத்தினது தாளை நேராக நிறுத்திப் பிடிப்பான். அம்மரத்தினது கிரணங்கள் கீழ்நோக்கிப்பிரகாசிக்கும்; அவை எமக்குள் நன்முகப் பொருந்தி மறைக—(எ-று.) இம்மரம் ஸர்வ ஜீவ்விருட் சம் போலும் என்பார் மேனுட்டாசிரியர். ஊர்த்துவ மூலமதச்சாகமச்வத்தம் ப்ராஹு ரவ்யயம் (அத் 15. ச்லோ. 1.) என்னும் கீதா வாசகத்தை இது நினைப்பூட்டுகிறது.—வேர்மேலுங் கிளைகள் கீழுமாகவுள்ள அரச மாமழியாத தன்மையை நென்ப—என்பது பொருள்.

8. மன்னனும் வருண னென்றாழ் வழுங்கவென் றகன்ற பாதை
துன்னுவித்திட்டான்முன்னர்வழியொன்றுந்தோய்ந்திலாது
மன்னிடந் தவன்றன் பாத மருவிடப் பணித்தா; னெஞ்சி
லின்னல்செ யிடரையெல்லா மெச்சரித் தோட்டினனே.

(இ-ள்.) மன்னனுகிய வருணன் சூரியனுக்கு அகலமான வீதியையேற் படுத்தினன். முன்புகால்வைக்கமுடியாதிருந்த விடத்தில் நடந்து செல்லக் கூடிய மார்க்கத்தை யேற்படுத்தினன். மனத்துக்குத் துன்பந்தருஞ் சத்துருக் களை யெச்சரித்து ஓட்டிவிட்டான்—(எ-று.) அகலமானவீதி ஊர்த்வாயனபட் தினுயனவீதியென்றும், என்றாழ்வழுங்கவென்பது சூரியன் உதித்து அத்த மிக்கவென்றும் பொருள்கொள்ளுக. யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்டுக்கீழே பூமியிற் கால் வைக்க முடியாமலிருந்த இடத்தில் பந்தவிமோசனஞ் செய்து காலை ஊன்றிநிற்கும் வண்ணஞ் செய்தானென்று சுநச்சேபன்சொன்னபடி.

மண்டலம் 1 சூக்தம் 24.

9. மன்ன! நூறன்று வாய்ந்த வாயிர மருந்து முன்மாட்
டுன்னியே யுறைவ; வுன்ற னுபகார நீண்ட கால
மன்னுவ; நிருதி யெம்மை மருவலா தகற்றுய் தூரம்;
தன்னமீம் பாவ மேனுந் தவிர்த் தெமை விடுவிப்பாயே.

(இ-ள்.) மன்னனே! (வருண) நூறல்ல ஆயிரம் மருந்துவகைகளும் உன்னிடத்துண்டு. உனதுஅநுக்கிரக புத்தியானது விஸ்தீரணமாக வமைந்துள்ளது. அதனால் நிர்ருதி (பாபதேவதை) எம்மையணுகாமல் அதனைத் தூரத்தோட்டுவாயாக; சொற்பப் பாபமென்றாலும் அதனை நீக்கி எம்மைவிடுவிப்பாயாக—(எ-று.)

10. இரவினி லுயர்ந்த வானி னிருந் தொளிகாலு மீன்க
டாவழ கிழந் தொளிந்து பகலினி லெங்ஙன் சாரும்?
வருணன தாணை தாண்டும் வலியுளா ரெவரே? யல்லில்
விரவிய வொளியிற் ரூரா வேந்தனு மொழுகுவானே.

(இ-ள்.) இரவில் ஆகாயமத்தியிற் காணப்படும் நட்சத்திரங்கள் பகலில் ஒளியிழந்து எங்கே செல்லக்கூடும்? வருணராஜனுடைய ஆக்ஞையை ஒருவராலுங் கடத்தல் முடியாது. இரவில் சந்திரனும் விசேஷப்பிரகாசத்தோடு வருகிறான்—(எ-று.) அதனால் நீங்கள் மயங்கவேண்டாம், நட்சத்திரங்களும் மீண்டுங் கண்ணுக்குப்புலப்படும் என்றுமுடிக்க. மீன்கள் சப்தரிஷிக் கூட்டமென்பது வாஜஸநேயி. ஆனால் நிருக்தக்காரர் பொதுவாக எல்லா நட்சத்திரங்களையுங் குறிக்குமென்பர். வருணன் இயற்கையில் நடக்குங் காரியங்களை யெழுங்குபடுத்துந் தேவதை யென்பார் வாலிஸ் (Wallis).

11. மறைகளை யுரைத்து நானும் வணங்கியே யிதனைக் கேட்பே
னுறைதனைக் கரங்கொண் டுன்னை யஜமானன்வேண்டுகின்ரு
னறை யநாதரவு கொள்ளா தறிந்திட்ரய் வருண! நீண்ட
தறைபுக ழரச! வெங்க ளாயுளைத் தடிந்திடாயே.

(இ-ள்.) பிரஹ்மணங்களைக்கூறிவந்தனஞ்செய்துகொண்டே நான் உன்னைக்கேட்பதொன்றுண்டு. கையிலவியை யேந்திக்கொண்டு யாககர்த்தா உன்னைப்பிரார்த்திக்கிறான், அநாதரவு செய்யாமல் எங்களது அபேட்சைகளை யறிக. பாந்தகீர்த்திவாய்ந்தவருணனே! எங்களது ஆயுட்காலத்தைக் குறைத்துவிடாதே—(எ-று.) இவ்விருக்கு தத்வாயாமி.....ஆயுப்ரமோஷி. என்றது.

அஷ்டகம் 1 அத்தியாயம் 2.

12. இரவினும் பகலுமிந்த வொருமொழி யெனக்குச்சொல்வார்,
தாமுற வதையே யென்ற னிதயமு மெனக்குச் சாற்றும்;
விரவுதூண் டலையின் வேந்தன் யாவனைச்சுநச்சேபன்று
னுரமொடு துதித்தா னந்த வருணனு மெமை மீட்பிக்கல்.

(இ-ள்.) இரவும் பகலுமாக இந்தவொருவார்த்தையையே எனக்குச் சொல்லுவார்கள்; எனதுஇதயமும் அதனையேயெனக்குச் சொல்லும். சுநச்சேபன் எந்தராஜாவைத்துதித்தானோ அந்தராஜாவாகியவருணன் எம்மை மீட்டுத்தரட்டும்-(எ-று.) எம்மை என்பதும் சுநச்சேபனையே குறித்ததென்று சாயணர் உரை கூறுவார்.

13. மும் மரங்களினிற் கட்டுப்பட் டிடர்மூழ்கி நின்று
விம்முறு சுநச்சேபன் ஞதித்தியன்றன்னை யிவ்வா
றிம்மென விரந்தான்; மாற்ரு ரெதிர்க்கலா வலியின் ஞானச்
செம்மலாம் வருணன் சேர்ந் தின்னுனைப் பாசத்தி னீக்கல்.

(இ ள்.) மூன்று (யூப) மரங்களிலுங் கட்டுண்டுவருந்துஞ் சுநச்சேபன் அதிதிபுத்திரனுகிய வருணனை யிவ்விதமாக யாசித்தான். பகைவரால் எதிர்க்கமுடியாத ஞானவரசனுகிய வருணன் இவனைப்பாசத்தினின்றும் நீக்கி விடட்டும் (எ-று.)

14. வருணனே யுன்னை யாமும் வணங்கி யாகம்புரிந்து
தருண நல்லவியைத் தந்து தாழ்க்க நின்சினத்தை யென்போ
மிருணிறை யா மிழைத்த பாவத்தைச் சிதில மாக்கி
யருளுக ஞான மார்ந்த வசுரனே யரசே யின்றே.

(இ-ள்.) வருணனே! உன்னையாங்கள் வணங்குவதோடு அவிர்ப்பாகத்தோடுகூடிய யக்ஞங்களால் உபசரித்து உனதுகோபத்தை மாற்றுகிறோம். ஞானநிறைந்தஅசுரனே, யரசே, எங்கள்செய்கைகளிலுள்ள பாபத்தை மாற்றுவாயாக—(எ-று.) அசுரன்=அநிஷ்டத்தை நீக்குவதிற்சிறந்தவன் என்பது பதப்பொருள். இப்பொருளில் இதுதேவனைக் குறிக்கும். வேதத்திற்பல விடங்களில் இந்திரனையசுரனென்பார். முற்காலத்துதேவாஸுரபதங்கள்பரியாயநாமங்களாயிருந்ததுண்டு. பிற்காலத்துத்தான் அவற்றின்பொருள்மாறினஜெண்ட்வேதக்காரர்கள் (பார்வீக்கள்) இன்னும் தேவனை அஹுர் என வேயழைப்பார்கள். சிதிலம்=ஜீரணம், தளர்ச்சி.

மண்டலம் 1. சூக்தம் 25.

15. தலையிடை தா ளிம் மூன்றி னெனைத்தலை பாசந் தம்மை
நிலை தளர்ந் தேகு மாறு நிறுவுக வதிதி பெற்றே!
யுலைவறு முன்ற னீதி யோதிய நெறியின் வைகி
மலைவறு பாவ நீங்கி யதிதியை மருவுமாறே.

(இ-ள்.) மேல் கீழ் நடுவென்னும்பக்கங்களில் கட்டப்பட்டிற்கும் எனதுகட்டுக்கள் தளருமாறு புரிவாயாக, அதிதிபுத்திரனுகிய வருணனே! உனது கேடில்லாத நீதியின் வழியே நடந்து எங்கள்பாபங்களை நீக்கிக் கொண்டு நாங்கள் அதிதியையடையும்வண்ணம்—(எ-று.) அதிதியையடை தலாவது துன்பநீங்கிச் சுயேச்சையடைந்து சுகப்படல்.

வருக்கம் 15.

25. மண்டலம் 1. அநுவாகம் 6. சூக்தம் 2.

21 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சுநச்சேபன்; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: வருணன்.

1. நாளு நாளு நரர்களே யாகலி
ளுளுந் தேவ வருண வு,னல்லறீர்
கோ ளுலவுறுங் கொள்கை விதியினை
மீள மீளக் கடந்து நடப்பினும்.

(இ-ள்.) வருணனே! எப்படி உலகத்தில் ஜனங்கள் பிரமாதம் புரிந்து விடுகிறார்களோ அதுபோல நாங்களும் அவர்களைப் போல மனிதர்க ளாதலால் தினந்தோறும் உனது விதாநுட்டானங்களில் தவறினபோதிலும் —(எ-று.) (எங்களை மன்னிப்பாயாக) எனக்கூட்டுக.

2. சிற்றஞ் கொண் டெமைச் சேதித் தழிக்கவும்,
வேற்றுத் தீநினை வுற்றவவ் வேளையின்
மாற்றலாத வெகுளி மடுக்கவுங்,
கூற்றி னல்லிரை யாகக் கொடுக்கலே.

(இ-ள்.) கோபங்கொண்டு எங்களை வதைக்கவும், அநாதாவு செய்ய வெண்ணம் வந்தபோது எங்களை உனது கோபத்தீயின் வீழ்த்தவும், விஷயா நுபவங்களுக்கு இரையாகக்கொடுத்து விடாதே—(எ-று.) கூற்று=ஈண்டு விஷயாநுபவத்தின் மேனின்றது.

மண்டலம் 1. சூக்தம் 25.

7. அந்தரத்துப் பறந்துசெல் வீக்களின்
சுந்தரம் பெறு பாதையை யோருவன்,
நந்து மாக்கட னுபக னுதலின்
அந்தி லோடு நாவாயு மறிவனே.

(இ-ள்.) இவ்வருணன், ஆகாசமார்க்கத்திற் செல்லும் பட்சிகளின் பாதையை யறிவான், கடலில் வசிப்பவனுதலின் கப்பல் செல்லும் நெறி களையுமறிவான்—(எ-று.) அவன் எங்களைக் கட்டவிழ்த்து விடுகவென முடிக்கவென்பார் சாயணர். வீ, பறவை. வருணன், கடலுக்கும் வானுக்கு நாயகன்.

8. அவன், விதிக்க ணைமைந்து, நடைபெறுந்
தவம்பொருந்து தம்புத்திரர் தம்மொடு
நிவம் பொருந்துறு மாறிரு திங்களோ
நவம்பொருந்து பின்றிங்களோ யோர்வனே.

(இ-ள்.) விதாநுட்டானத்திற் சிறந்து, அவ்வருணன், (நாள்களாகிய) புத்திரர்களோடு விளங்கும் பன்னிரண்டு மாதக்கணக்கினையும், அதனோடு புதிதாகவுண்டாகும் அதிகமாஸக் கணக்கினையும் அறிவான்—(எ-று.) சாந்திரமான மானதுபற்றித் திங்கள் என்றார். இச்சாந்திரமானம் தற்காலம் ஆந்திரதேசநடப்பு; தமிழர்களது ஸௌரமானமாம்.

9. உன்னதத்தி னுயர்ந்து விசாலமாய்
மன்னி நோக்கப் பெரிதாய் வயங்கி, யேர்
துன்னு காலினைத் தோய்வுறு பாதையை,
யுன்னி மேலுறை தேவரை யோருவான்.

(இ-ள்.) விஸ்தீரணமாயோங்கிப் பார்ப்பதற்குப் பெரிதாயுள்ள வாயு (காற்று) செல்லும் பாதையை யறிவான்; அதற்கு மேல் வசிக்குந் தேவர் களையுமறிவான்—(எ-று.) வருணன் தோன்ற எழுவாய்.

10. திண்மை நோன்பு சிறந்தவன் சோபன
கன்மம் வாய்ந்த வருணன் கடைத்தலை
யண்மித் தன்பிரசைக்க ணமருவா
னெண்பெறு மரசாட்சி யியையவே.

(இ-ள்.) திடவிரதனும், சோபன கர்மமுள்ளவனுமாகிய வருணன் தனது ஜனங்களிடத்து வந்து அவர்கள் மத்தியில் வீற்றிருப்பான் அவர்களை யாளும்பொருட்டு—(எ-று.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 2.

11. அங்கிருந் தெலா வற்புதமு முணர்ந்
திங்கு முன்னர் நடைபெற் றெழில்மிகப்
பொங்கு கன்மமும், போதும் புதுவது
மங்க மாகவே நோக்கி யணைவனுல்.

(இ-ள்.) அவ்விடத்திலிருந்து எல்லாவற்புத கன்மங்களையுமுணர்ந்து, இவ்விடத்து முன்பு நடந்தேறிய காரியங்களையும், இனி நடக்கவேண்டிய புதுக்காரியங்களையும் நன்முகப்பார்ப்பான்—(எ-று.)

12. என்று மெந்தமக், கெவ்வகை ஞானமுந்
துன்றி நிற்கப் பொலியு மாதித்திய
னன்று சாரு நெறிகளை நாட்டுக;
வொன்று மாயுளு மோங்க வமைக்கலே.

(இ-ள்.) சோபநப்பாக்களுயோடுகூடிய வவ்வதிதிமகளுகிய வருணன், எப்போதுமெங்களுக்கு நன்னெறியை யேற்படுத்தட்டும்; எங்களது ஆயுட்காலத்தை விருத்தி செய்யட்டும்—(எ-று.)

13. இரணியத்தி னியன்ற கவசத்தை
யரணெனப் புனைந் தாரும் வருணனுங்
கிரணம் வாய்ந்த வுடையிற் கிளர்ந்தன
னருண காந்தியு மெங்கு மமைந்ததே.

(இ-ள்.) ஸ்வர்ண கவசந்தரித்து வருணன் தன் பெருத்தவுடலைக் கட்டுகிறான். அதன்கிரணமும் எல்லாப்பக்கமும் வீசுகிறது—(எ-று.) 'வருணதூதருஞ் சூழ்ந்து மலிந்தனர்,' என்பது மேனுட்டாசிரியர் உரைப்படி நான்காமடியாம். அவர் மோட்சமூலரது புரதான ஸம்ஸ்கிருதபாஷா சரித்திரம் 536-வது பக்கத்தினைத்தம்மொழிபெயர்ப்புக்கு மேற்கோளாகக்காட்டுவர். வருணதூதனென்றது இதர அதிதிமக்கள்போலுமென்பார்.

14. அரிகள் யாரு மடையுமூர் தேவனை;
நரர் நடுங்கக் கொடுமை நடத்துவோர்
திருகு சிந்தைத் தொழிலரு மன்னனை
விரகு செய்து மெலிக்க வணைகுறும்.

(இ-ள்.) வைரிகள் எவரும் (வருணதேவனுக்கஞ்சி) அத்தேவனிடத்து வரமாட்டார்; மனிதர்களுக்கொடுமையாக நடத்துவோரும், பாபபுத்தியுள்ளவருங்கூட அவனைத்தொடமாட்டார்கள்—(எ-று.)

மண்டலம் 1 சூக்தம் 25.

15. மக்களுக்குக் குறைவின்றி மாண்டசீர்
மிக்க வுண்டியை மேன்மையி னீபவ
னெக்க வெம் முதரத்துக்கு மொல்லெனத்
தக்க பூரணத் தன்மையி னுக்குவான்.

(இ-ள்.) மனிதர்களுக்கு வேண்டிய கீர்த்தி பொருந்திய வன்னத்தைக் குறைவில்லாமல் எப்பொழுதுங் கொடுப்பவன் (வருணன்) அப்படியே எமது வயிற்றுக்கு வேண்டியவற்றையும் பூரணமாக விரைவிற்றருவான்—(எ-று.)

வருக்கம் 18.

16. ஆக்கள் கொட்டி லணைவது நோக்கவிங்
கூக்கு மென்னறி, வோங்கிய தூரநோக்
காக்கு மன்னவன் றன்னை யணையவென்
றேய்க்கு மீவிருப் போடு மியைவுறும்.

(எ-று.) கொட்டிலை நோக்கிப் பசுக்கள் போவதுபோல, (சுநச்சேப ஞகிய) என்னுடைய புத்திகள், தூரதிருஷ்டியோடு கூடிய அவ்வருணனிடத்துச் செல்கின்றன—(எ-று.) கவ்யூதி: மேய்ச்சற்றரை யென்பார் மேனுட்டாசிரியர், கொட்டிலென்பார் சாயணர். தீனியுள்ளவிடம் என்பதையது குறித்து நின்றது.

17. மீண்டு மோர்முறை மேவி யிளவளா
யீண்டுவோம், வரலேனெனி, னென்மது
வீண்டு கொண்டுதந் தேய்ந்தது யாகவான்
றூண்ட விச்சையிற் றோய்ந்ததை யார்குவை.

(இ-ள்.) என்னுல் மதுவானது இங்கே ஸம்பாதித்து வைக்கப்பட்டிருப்பதால், இன்னெருமுறை நாம் உரையாடுவோம். ஹோதாவைப்போல நீயும் உனக் கிஷ்டமானதை யுண்கிறாய்—(எ-று.) யாகவானென்றது ஹோதாவைக்குறித்து நின்றது. தூண்ட வுவமைப்பொருளில் வந்தது. யாகவான் பிரேரேபிக்கவென்னலுந் தகும்.

18. கண்டனெ னின்றியாவர்தங் கண்ணிலும்
விண்டு தோன்று மவனை யவனிமேன
மண்டு தேரின் மிசைந்து வருவதைக்;
கொண்டன னவ னென்றுநி யீதெலாம்.

(இ-ள்.) எல்லாருடைய கண்ணுக்குந்தோன்றுமவனை (வருணனை)ப் பூமியின்மேல் தேரின்மீது உண்மையாகவே கண்டேன். என்னுடைய இச்துதியையெல்லாம் அவன் ஏற்றுக்கொண்டான்—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

19. ஈண்டு கூவி யழைப்பதை யேன்றுகே;
ளாண் டெமை யருள்பாலிக்க லின்றுநீ;
வேண்டு மென்றுன் றுணையை விழைந்தநான்
வேண்டினே னுனை யெண்ணி வருணனே.

(இ ள்.) வருணனே! நான் கூவியழைப்பதனுக்குச் செவிகொடுப் பாயாக. எங்களையாட்கொண்டு எங்களுக்குச் சுகத்தைத்தருக. என்னைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையோடு உன்னை நோக்கித் துதித்தேன் —(எ-று.) 'இது இமம்மே வருணத்வாம வஸ்யுராசுகே என்ற இருக்கு.....

20. ஞான மார்ந்தவ பாகம் புவியொடு
மூனமி லெச்சகத்து மொளிர்கிறாய்;
ஈன மின்றி யா மின்பமடைய நீ
தானுங் கேட்டெதி ராசியைச் சாற்றலே.

(இ-ள்.) மேதாவியே! (வருணனே) ஆகாசம், பூமி முதலிய எல் லாச்சகங்களிலும் நீ விளங்குகிறாய். நாங்கள் க்ஷேமத்தையடையும்படி நீயுஞ் செவிகொடுத்து எங்களைக்காப்பதாகப் பிரதியுத்தரந் தருவாயாக—(எ-று.) ராஜஸி என்பதற்கு விளங்குகிறாயென்ஞதபடி அரசு செலுத்துகிறாயென் றும், யாமனி என்பதற்கு க்ஷேமமடையும்பொருட்டு என்ஞதபடி, வழியில் போகும்போது என்றும் மேஞட்டாசிரியர் உரை கூறுவார்—(எ-று.)

21. முடி வயங்கு முடியை யவிழ்க்கலே,
நடுவொளிருந் தனையை நசித்திட,
வடியி லென்றிடு கட்டை யகற்றுக,
படியில் யானும் பரிந்து சீவிக்கவே.

(இ-ள். உலகத்தில் யான் ஜீவித்திருக்குமாறு தலை, உடல், கால் இவற்றிலுள்ள கட்டுக்களை யறுத்து விடுவாயாக—(எ-று.)

வருக்கம் 19.

26. மண்டலம் 1. அநுவாகம் 6 சூக்தம் 3.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சுநச்சேபன்; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: அக்னி.

1. வஸிமை யுண்டி வளர்க்கு மதிபதி,
தலைமை சாரவி யேற்கத் தகுந்தவ,
சுலவு மூன்றன் சுவாலை யுடைதரித
திலகு மிவ்வெ மக நிறைவேற்றலே

மண்டலம் 1. சூக்தம் 26.

(இ-ள்.) ('அக்கினி தேவர்களுக்கெல்லாம் முகமாதலால் அவனைத் துதிப்பாயாக' வென்று வருணன் சொல்லச் சுநச்சேபன் இவ் விரண்டு-சூக்தங்களாலும் அக்கினியைத்துதிக்கிறான்.) எக்கியத்துக்கு யோக்கியமான வனே! வலிமைக்குக்காரணமான அன்னத்தை வளர்க்கும்பதியாகிய அக்கினியே! உன்னைச்சூழ்ந்துள்ள சுவாலையாகிய வஸ்திரத்தைக்கட்டிக் கொள்க (கொழுந்து விட்டெரிக). எங்களுடைய இந்த யக்ஞத்தைச் செய்து முடிப்பாயாக—(எ-று.) மேற்சொன்ன வருணன் கூற்றை ஐதரேயப் பிராமணம் 7-16ற்காண்க.

2. என்று, மங்கி, யிளமை சிறந்தவ
னன்று மேன்மையைத் தோய்ந்தவ, தேசொடு
மொன்றி யோம முஞற்றி யொளிபெற
நின்ற வாசகப் போற்றுற நிற்றலே.

(இ-ள்.) எப்போதும் இளமை சிறந்தவனே, சிரேஷ்டமானவனே, அக்கினியே, தேஜஸோடுகூடி, ஹோமம் வளர்த்துக் கீர்த்தி வாய்ந்ததுதிகள் உன்னைப்புகழ நிற்பாயாக—(எ-று.)

3. சுற்ற மானவர்க் கிந்திடுஞ் சுற்றமொத்
துற்ற நண்பற் குதவுறு நண்பனேய்ந்
தெற்றைக்குஞ் சுதராகு மெமக்குச்சீர்
துற்ற தந்தைநீ தோய்க்க லபீட்டமே.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய (அக்கினியே!) பந்துக்களுக்கு எப்போதுமுதவும் பந்துவைப்போலவும்,மற்றொரு நண்பனுக்கு என்றுமாறுத உதவி செய்யும் நண்பனைப் போலவும், எங்களுக்குப் பிதாஸ்தானத்திலுள்ள நீ உனக்குப் புத்திரஸ்தானமாகிய எங்களுக்கு எப்போதும் எங்களுடைய அபீஷ்டங்களை யளிப்பாயாக—(எ-று.)

4. வருணன் மித்திரன் வாய்க்கு மரியமான்,
றருணந் தன்னிற் றடுக்கும் பகைவரை
மரண மெய்த மடுப்பவ, ரெங்குசை
யரணமாய், மனுயாகத்தின், வைகலே.

(இ ள்.) (அக்கினியே!) எம்மகத்துக்கு இம்சை செய்பவரைக் கொல்லும் ரிசாதஸர்களாகிய வருணன், மித்திரன், அர்யமா, இம்மூவரும் மநுப்பிரஜாபதியின் யாகத்தில் அமர்ந்ததுபோல எங்களது தருப்பையின் மேல் அமரட்டும்—(எ-று.) மநுஷ: எனப்பன்மையிலுள்ளது. இது ஒருமைப்பன்மை மயக்கமாகக் கொள்வார் சாயணர். 'யரணமாக, மனிதரின், வைகலே,! மனிதரைப்போல அமரட்டும் என்று மொழிபெயர்ப்பார் மேலுட்டாசிரியர். அர்யமா, ஆதித்யர்களில் ஒருவன்; காலை மாலை ஸந்திகளுக்கு அதிதேவதை. மித்திரா வருணர்களோடு சேர்த்துக் கருதப்படுபவன்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

5. பண் டெமக்குமுன் றோன்றிய தூதனே
மண்டு மிம்மகக கண்ணெம தோழமை
யண்டி யுள்ளக் களியினி லாருக;
கொண்ட விவ்வெம கீதஞ் செவிக்கொளல்.

(இ ள்.) பண்டைக்காலத்தில், எங்களுக்கு முன் உற்பவித்தவனே, ஹோமத்தை நடத்துபவனே! (அக்கினியே) நாங்கள் செய்யும் யக்ஞத்தில் எங்களுக்கதுக்கிரகிக்குந் தோழமைகொண்டு சந்தோஷிப்பாயாக. எங்களால் உபயோகிக்கப்படும் இத்துதிப் பாட்டுக்களைக் கேட்பாயாக—(எ-று.) தூதன், ஹோதா, ஹோமநிஷ்பாதகன்.

வருக்கம் 20.

6. ஒவ்வு நித்திய மாக வித்தாரமா
யெவ்வெத் தேவரை யெப்பொழு தேத்தினு
மவ்வக் கால மெலா முனிடத்தினே
யிவ்வயி னவி யாவுதி யேயுமே.

(இ ள்.) சாசுவதமாகவும் விஸ்தாரமாகவும், (வருணன், இந்திரன் முதலிய) நானாவிதமான தேவர்களை எந்தெந்தக்காலத்திலேத்தினாலும், அப்பொழுதெல்லாம் அவர்களுக் களிக்கப்படும் அவியை உன்னிடத்திலே ஆஹுதி செய்வோம். (அதனால் தேவதாந்தர விஷய யாகங்களிலும் நீயே ஸேவிக்கப்படுகிறாய்.)—(எ-று.)

7. மன்பதைக்குப் பதி, மகத் தூதுவ,
னின்ப மெய்திச் சிரேட்ட மியைந்தவ,
னண்பனு மெமக்கிங் குறல்; யாங்களு
மன்ப ராகுக நல்லெரி யோம்பியே.

(இ-ள்.) பிரஜைகளை வளர்ப்பவனும், எக்கியத்தை நடத்துவோனும், இன்பமடைந்தவனும், வரேண்யனுமான (அக்கினி) எங்களுக்கு அன்பனாகவிருக்கட்டும். யாங்களு நல்ல அக்கினிகளை வளர்த்து அவனுக்கு அன்பர்களாகவிருக்கட்டும்—(எ-று.)

8. நற்சுடர்களினே டொளிர்தேவர்க
ணற்சிறப் பவி நாடித் தரித்தலி
னற்சுடர்களினே டிவணுங்களு
நற்சுட ருண நாடி யிரப்பமே.

(இ-ள்.) சோபன அக்கினியோடு கூடிய தேவர்கள் சிறப்பு வாய்ந்த அவியைத்தாங்குகிற காரணத்தால், சுடர்கள் விளங்கும் அக்கினியோடு கூடிய யாங்களும் (அக்கினி!) உன்னை யாசிப்போம்—(எ-று.) தேவர்கள் என்னும் பதத்திற்கு இருத்துவிக்குக்கள் என்று பொருள் கூறியுள்ளார் சாயணர்.

மண்டலம் 1. சூக்தம் 26.

2. நீண்ட காலடிச் சத்துவச் சூனுவா
மாண்டவ னெஞ்சுகத்தை யளித்திட
லீண் டெமக் கெமதிச்சைக ளோர்ந்தபின்
வேண்டுமாறு விழைந்து சொரிகவே.

(இ-ள்.) விசாலமான காலடியுள்ளவனும், பலத்தின் புத்திரனுமான வ்ன் எமக்குச்சுகத்தைத்தரட்டும். எம்மால்விரும்பப்பட்டவைகளையும் வருஷிப்பவனுகட்டும்—(எ-று.)

3. நடை பரந்தவ தூரத் தருகினி
னிடை பரந்திங் கனிட்டச் செயல்புரிந்
திடையு மர்த்திய ரெங்கள் பகைவரைத்
தடை புரிந்தெமைக் காத்திட லென்றுமே.

(இ-ள்.) வியாபிக்கு நடையோடு கூடியவனே! நீ, தூரத்தினின் றும் அருகினின்றும் வந்து பாபகாரியங்களைப் புரியும் எங்களது விரோதி களாகிய மர்த்தியர் (மனிதர்) எங்களையணுகவொட்டாதபடி தடுத்து எங் களை ஸர்வகாலமும் பாலிப்பாயாக-(எ-று.) விச்வாயுः, யாருக்கு எல்லாவிடத் துங் கமனமுண்டோ அவன், இதனையே நடபரந்தவனென்றுர்

4. தேவர்க் கங்கி சிறந்த வவியிதை
யாவ லோடு புதிதின் வகுத்தவிப்
பாவு கீர்த்தி பகரு மறையினை,
மேவுமா றவர்க் கன்பின் விளம்பலே.

(இ-ள்.) அக்கினியே! (எங்களால் முன்பதுவ்டிக்கப்பட்டதாயி னும்) தேவர்க்கென்று சிறந்தோங்கிய அவிக்கொடையையும், நூதனமாகச் செய்யப்பட்ட துதிரூபமான மந்திரத்தையும் பற்றித் தேவர்களுடைய முன் னிலையில் நன்ருயெடுத்துச்சொல்லுவாயாக—(எ-று.)

5. உத்தமத்து வாஜெங்கிய வண்டியின்
மத்திமத் தல மார்ந்த வளத்தினி
னித்தையி னியன்ற செல்வத்தினி
ஞெந்தெமக் கெவ்விடத்தும் பங் கீகவே.

(இ-ள்.) விண்ணில் வளரும் உத்கிருஷ்டமான அன்னப்பொரு ளில் எங்களுக்குப் பங்களிப்பாயாக. மத்திமத்தலமாகிய வந்தரத்தில் வளரும் உணவுப்பொருள்களிலும் எமக்குப் பங்களிப்பாயாக. அந்திமத்தலமான பூமி யிலுண்டாகுஞ்செல்வத்திலும் எங்களுக்குப் பங்களிப்பாயாக—(எ-று.)

வருக்கம் 22.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

6. சித்திரக் கிரணந் திகழ் காந்திபோய்!
தத்து சிந்து தயங்கிய வூர்மியை
யொத்த நின்கொடை பங்கிட் டுவக்கையி
னத்தி யெக்கிய ணுடிக் கசிவையே

(இ-ள்.) சித்திரபானுவாகிய அக்கினியே! சிந்து (ஆறு) வானது அலையாக (வாய்க்கால்களாக) ப்பிரிந்து தன் கணிறைந்த நீரைப்பங்கிடுவது போல உனது கொடைகளைப்பங்கிடுகையில், யாகஞ்செய்வோனுக்கு அவனது கர்மபலன்களையளிக்கிறாய்—(எ-று.) ஊர்மி அலை, யீண்டு கிளைக்கால் வாய்களைக் குறித்து நின்றது. கசிதல்—இளக்கிசொல்லுதல் ஈண்டு கர்மபலன்களையளித்தல்.

7. போரில் யாரை யுவந்து புரக்கிறாய்,
தாரின் யாரினைச் சண்டைக்குத் தூண்டுவா,
யேரி னக்கினி யம்மக னென்றைக்குந்
தீருறுத வனஞ் சிறந் தோங்குவான்.

(இ ள்.) அக்கினியே! யுத்தத்தில் உன்னுல் காப்பாற்றப்படுபவனும், சண்டைக்குத் தூண்டிவிடப்படுபவனுமாகிய மர்த்தியன் எப்பொழுதும் வற்றுத வுணவுப்பொருள்களோடு விளங்குவான்—(எ-று.) இஷ: அன்னமென்பார் சாயணர்; வலியென்பார் மேலுட்டாசிரியர். அதனுல் தீருறுதவலி சிறந்தோங்குவான். என்பதும் பாடம்.

8. மாற்றலரை யடக்கும் வலியுளோய்
போற்று மன்பினைப் போரினில் வெல்பவன்
சாற்றுதற் கிங் கிலை நனிகீர்த்திவா
யூற்ற மொய்ம் பிவ ணன்னவற் கோங்குமே.

(இ-ள்.) சத்துருக்களையடக்கும் வலியுள்ளவக்கினியே! உன்னுடைய பக்தனது வல்லமையைக் கடக்கும் சக்தியெவனுக்குமில்லை. மேலும் அவ்யஜமானனுக்குப் புகழ் நிறைந்த வலிமை விசேஷங்களுமுண்டு.—(எ-று.

9. எல்லவர்த மிடத்து மியைபவன்
செல்லும் போரிற் றிடம்பெற வெங்களை
வெல்லும் போர்ப்பரி மீது கடப்பித்தே
யொல்லும் விப்பிர ரோடு பலன்றரல்.

(இ-ள்.) எல்லா மனிதர்களோடுங் கூடியவனுன (அக்கினி,) யுத்தத்திற் குதிரைகளினுதவியைக்கொண்டு (போர்க்களத்தைக்) கடந்து செல்லுமாறு செய்க, (இருத்துவிக்குக்களான) விப்பிரர்களோடு களிக்கும் அக்கினி எங்களுக்கு யாகபலனையளித்தட்டும்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 27.

10. போற்றுணர்த்தவ வீடுதொறும் புகுந்
தாற்றும் யாக மதுச்சிரகத்துறப்
போற்றுவாய்; யஜமான னுருத்திரற்
காற்றுங், கண்ணுறத் தக்கநற் சேர்ம்மே.

(இ-ள்.) போற்றிலுலுணரப்படுபவனே! (அக்கினியே!) வீடுகள் தோறும் நடக்கும் யாகங்களையுனக்கிரகிக்குமாறு வீடுவீடாய்ப்புகுவாயாக. யஜமானனும் உருத்திரனுகிய வுனக்காக அழகிய ஸ்தோமங்களைப்பாடாநின்றுன்—(எ-று.)

வருக்கம் 23.

11. தன்மை யோங்கு மகான் பரிச்சின்னமே
தன்னமும் பெருத் தூமக் கொடியினன்
மன்னு சேர்ந்தி வளர்ந்து பெருத்தவ
னன்ன மெங்களுக் கேய மகிழ்கவே.

(இ-ள்.) குணஞ்சிறந்த மகானும், அபரிச்சின்னனும், புகைக்கொடியையுடையவனும் (புகையிலுலறியப்படுபவனும்,) மிகுந்த காந்தி யுடையவனுமாகிய அவன் (அக்கினி) எங்களுக்கு அன்னம் (அல்லது பலம்) பொருந்துமாறு ஸந்தோஷப்படட்டும்—(எ-று.)

12. தெய்வ மக்களைப் பாலிக்கு மக்கினி,
தெய்வ ஞாபக மூட்டும் பதாகை, தன்
செய்ய காந்தி பெருத்தவன், செல்வனின்,
றுய்ய வெந்துதி தன்செவி தோய்க்கலே.

(இ-ள்.) தேவ சம்பந்தமுள்ளவனும், பிரஜைகளைப் பாலிப்பவனும், தேவஞாபகத்தை மூட்டுங் கொடியும், பிரகாசமிகுந்தவனுமான அக்கினி, செல்வவான் (வந்தியரின் துதியைக்கேட்பது) போல எங்களது உக்தங்களைக் கேட்கட்டும்—(எ-று.)

(வேறு.)

13. பெருவலித் தேவர்போற்றி; பிறங்கு சிற்றிறைவர் போற்றி;
தருணநல் லினைஞர் போற்றி; தக்க மூத்தவர்கள் போற்றி;
யுரிய போற்றிழைப்பாஞ் சத்தி யுள்ளவவ் வரையுந், தேவ
சரிய விவ்வெமது போற்றை யன்றி யங்கீகரிக்கல்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(இ-ள்) (அக்கினியினுற் பிரேரேபிக்கப்பட்ட சுநச்சேபன் விச்வ தேவர்களோத்துதிக்கிறான்.) மகத்தாகிய (குணமும்) வலியுமுள்ளதேவர்களுக்கு நமஸ்காரம்; (குணக்குறைவுள்ள) சிறுதேவர்களுக்கு நமஸ்காரம்; வயதிற் சிறியவர்களுக்கு நமஸ்காரம்; வயதின் மூத்தவர்களுக்கு நமஸ்காரம்; சக்தியுள்ளவரையில் தேவர்களைஸ்தோத்திரஞ் செய்து வணங்குவோமாக; தேவர்கள் எங்களது இந்தஸ்தோத்திரத்தைக் காட்டிலுஞ் சிரேட்டமான வேறு ஸ்துதிகளை யெப்பொழுதும் அங்கீகரிக்காமலிருக்கட்டும்—(எ-று.) தேவ ரீண்டு விச்வ தேவர்களாம்.

வருக்கம் 24.

28. மண்டலம் 1 அநுவாகம் 6 சூக்தம் 5.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சுநச்சேபன்; வடமொழிச்சந்தம்: 1-6 அநுஷ்டுப்,7-9 காயத்திரி; தேவதை: 1-4 இந்திரன்; 5, 6, உலபிமானிதேவதை, 7, 8, உலுக்கும் உலக்கைக்குமுரியதேவதை: 9, பிரஜாபதியாகிய அரிச்சந்திரன்; அநிஷவணசர்மதேவதை யென்றுஞ் சொல்லலாம்.

(வேறு.)

1. தோய்ந்த பேரடி விசாலமாத் தோய்ந்த கல்லதனை,
யாய்ந்த சோமத்தை நசுக்க வென் றுயர்த்திய விடத்தி
னேய்ந்து தாகமோ டிந்திர வெழில்பெறு மூரலின்
வாய்ந்து கீழ்விழுஞ் சுதையினை வளமுறப் பருகல்.

(இ-ள்.) இந்திரனே! எந்தயக்ஞத்தில், எல்லாக்கருமங்களிலும் அபிஷவனஞ்செய்யும் பொருட்டுக்கல்லானது விசாலமான அடியோடு உன்னதமாகத்தூக்கிப் பிடிக்கப்பட்டுள்ளதோ அந்தக்கர்மத்தில் உரலினின்றுந்தாமே வழிந்து கீழொழுகுஞ்சோமத்துளிகளைக் குடிப்பாயாக—(எ-று.)

2. தோய்ந்த தட்டுக ளிரண்டு சாறேந்துதற் கென்று
வாய்ந்த நற்சகனத்தினின் வைத்த வவ்விடத்தி
னேய்ந்து தாகமோ டிந்திர வெழில்பெறு மூரலின்
வாய்ந்து கீழ்விழுஞ் சுதையினை வளமுறப் பருகல்.

(இ-ள்.) இந்திரனே! எந்தயக்ஞத்தில் தட்டுகள் சாற்றை யேந்துவதற்காகச் சகனம் (இடுப்புமூட்டு) போல வைக்கப்பட்டுள்ளனவோ அந்தக் கர்மத்தில் உரலினின்றுந்தானே வழிந்து கீழொழுகுஞ்சோமத்துளிகளைக் குடிப்பாயாக,—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 28.

3. ஏய்ந்து சாலியி னுட்புகல் வெளிவர லிவற்றை
யாய்ந்து டிக்கடி நாரியும் பழகு மவ்விடத்தி
னேய்ந்து தாகமோ டிந்திர வெழில்பெறு முரலின்
வாய்ந்து கீழ்விழுஞ் சுதையினை வளமுறப் பருகல்.

(இ-ள்.) இந்திரனே! எங்கே யாகபத்தினி உலக்கை கீழும் மேலு மாகச் செல்லும் முறையைக் கவனித்துச் சிகை கற்றுக் கொள்கிறளோ அங்கே உரலினின்றும் விழுந்து கீழொழுகுஞ் சோமத்துளிகளைக் குடிப் பாயாக—(எ-று.) இது, மேனுட்டாசிரியர் மதப்படி 'ஏய்ந்துலக்கை மேலெ ழுந்து கீழ் விழுவதையெண்ணி' யென்றிருத்தல் வேண்டும். அடித்தபாட்டிற் கயிற்றை கட்டியிழுக்கும் முறை வெளிப்படுவதால் அதனை யிழுப்பவள் யாகபத்தினியாயிருக்கவேண்டுமென்று ஊகிக்க விடமுண்டு. சாலையாகசாலை.

4. பாய்ந்து செல்லுறும் பரியினைக் கலினத்தாற் பிணிப்ப
தேய்ந்து மத்தினைக் கயிற்றினுற் பிணிக்கு மவ்விடத்தி
னேய்ந்து தாகமோ டிந்திர வெழில்பெறு முரலின்
வாய்ந்து கீழ்விழுஞ் சுதையினை வளமுறப் பருகல்.

(இ-ள்.) குதிரைக்குக் கடிவாளம் பூட்டுவது போல மத்துக்குக் கயிற்றைச்சுற்று மவ்விடத்தினுலினின்றும் வழிந்து கீழொழுகுஞ் சோமத் துளிகளைக் குடிப்பாயாக—(எ-று.) முதலேய்ந்து,உவமைப்பொருளில்வந்தது.

வருக்கம் 25.

5. கலுவமே யுனை யிற்றொறும் பணிக்கென வமைத்து
நிலவ விட்டன ரென்பது நிசமெனி னீயிங்
குலவு துல்லிய வுன்னெலி வுவப்பினிற் றருவாய்
சுலவு வெற்றியோர் முரசொலித் தொனியினைப் போன்றே.

(இ-ள்.) உரலே உன்னை (யாக) வீடுகடோறும் வேலைக்காக அமை த்து வைத்திருப்பது நிசமானுல், வெற்றிகொள்ளுவோரது துந்துபி வாத் தியம் சப்திக்கும் ஓசையைப் போன்ற அவ்வளவு உரத்த குரலோடும் சப்திப் பாயாக—(எ-று.) கலுவம் ஈண்டு உரல்: உரலபிமானி தேவதையைக் குறி க்கும்.

6. வனத்தி னற்பதிக் கலுவமே வாயுவு முனது
முனத்தின் மந்தமாய் வீசுறும் போதினி னீயும்
வனப்பி னிந்திரன் வளமுறப் பருகுவான் சேர்மங்
கனத்த பாரத்தி னசுக்கியே பிழிந்தளித்திடலே.

(இ-ள்.) வனபதியாகிய (விருட்சத்தினுலான) உரலே! உன் முன்பு வாயு மந்தமாய் வீசும்போது, நீயும் இந்திரன் குடிக்கும் வண்ணம், சோமத் தைப் பிழிந்து தருவாயாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

7. தன்னு நல்லனந் தோ யுத்தமென
மன்னு மெக்கிய சாதனங்கா, ளிரை
யுன்னி மெல்லும் பரியிரண் டொர்த்துநீ
ருன்னதத் துணவோங்க வுலாவுவீர்.

(இ-ள்.) அன்னப் பொருள்களை யெல்லாங் கூட்டிவைக்கும் உத்தமர்களென்னும்படியான யக்ஞ சாதனங்களே! (உரலுலக்கைகளே!) ஆகாரத்தைச் சப்தத்தோடு மெல்லும் (இந்திரனுடைய) குதிரைகளைப்போல, உணவுப்பொருள்கள் மிகவுஞ்சிறந்தோங்கும்படி உலாவுவீர்களாக—(எ-று.)

8. வனப் பதிகாள்! மருவு மிக் கன்மத்தே
வனப்பொழுகுங் கருவிக டம்மொடு
வன்ப் படைந் தெமக்காகு மதுச்சுதை
யினிப்பி னீகுவி ரிந்திர னுர்கவே.

(இ-ள்.) வனஸ்பதிகளே (மரத்தாலான உரலுலக்கைகளே!) இக்கருமத்தினிடத்தில் அழகு வாய்ந்த (சோமம் பிழியுங்) கருவிகளோடு அழகெய்தியவர்களாய், இந்திரபாலூர்த்தம், மாதுரியமான ஸோமரஸத்தை எங்களுக்காகப் பிழிந்து கொடுப்பீர்களாக—(எ-று.)

9. அபிடவுஞ் செப் தணைந்த மிருதியைத்
தபுவுறு வள்ளத்தினிற் றுங்குக;
வுபரி சோமத்தைத் தூய்மை யுறுத்துக;
விபுல மண்டி யாத்தோலின் விரிக்கவே.

(இ-ள்.) (இருத்விக்கு யஜமானனுகிய அரிச்சந்திரனே!) அபிஷவஞ்செய்து மிச்சமான ஸோமத்தை (மூக்கு)வள்ளத்திலேந்துக; மிகுந்த ஸோமத்தைப் பரிசுத்தமாகும் வண்ணம் வடிதட்டிலூற்றுக; சக்கைஞ்யப்ப்சுத்தோலின் மேல் விரிக்க—(எ-று.) அபிஷவஞ் செய்தல் அக்கினியில் ஆவுதியாகப்பெய்தல்.

வருக்கம் 26.

29. மண்டலம் 1. அநுவாகம் 6. சூக்தம் 6.

7. இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சுநச்சேபன்; வடமொழிச்சந்தம்: பங்க்தி (தமிழில் அறுசீர்க் கழி நெடிலடிசிரிய விருத்தம், ஓரடிமேல் வைப்பு.) தேவதை: இந்திரன்.

மண்டலம் 1. சூக்தம் 29.

(வேறு.)

1. சோமமார்பவனுயென்றுஞ் சுவைபெற வுண்மை பேசு
மேம விந்திர, யாஞ், சாற்றுமெண்பெரு நிழிந்தேமேலுஞ்,
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல்பசுவு மாவு
மோமென, வெகுதனத்தோ, யுவக்க வாயிர மளித்துத்
தீமைதீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) (விச்வ தேவர்களால் தூண்டப்பட்ட சுசச்சேபன் இந்திரனைத் துதிக்கிறான்.) ஸோமபானியும், உண்மை பேசுபவனுமாகிய இந்திரனே! யாங்கள் அப்பிரசஸ்தர்களாகப் போலுலும், எங்களுக்குப் பசுக்களுங் குதிரைகளும் ஆயிரக்கணக்காகவளித்து எங்களைக் கீர்த்தி யுள்ளவர்களாகச் செய்வாயாக—(எ-று.)

2. காமுறு முணவுக் கெல்லாங் காரண, வருளார், வன்மை
தாமுறு தாடை யேய்ந்த விந்திர, சத்தி வாய்ந்தோய்!
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல்பசுவு மாவு
மோமென, வெகுதனத்தோ, யுவக்க வாயிர மளித்துத்
தீமைதீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) சக்திமந்தனே! அழகிய கதுப்போடுகூடியவனே! (பலந்தரும்) அன்னப் பொருள்களுக்கதிபதியே! இந்திரனே! உனது அருளானது எப்போதுமுள்ளது. யாங்கள் கீர்த்தியற்றவர்களாய்ப் போயினும் 'எங்களை காத்துப் பசுச் செல்வத்தையுங் குதிரைச்செல்வத்தையு மாயிரக்கணக்காகத் தந்து எங்கள் கெடுதலை நீக்கி எங்களைக் கீர்த்தியுள்ளவர்களாகச் செய்வாயாக—(எ-று.)

3. பேமுறு கால தூத சொருவரை யொருவர் பேர்த்துத்
தாமுறக்காண்போர்த் தீர்க்க நித்திரை சார்த்தல் வேந்தே!
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல்பசுவு மாவு
மோமென, வெகுதனத்தோ, யுவக்க வாயிர மளித்துத்
தீமைதீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) இந்திரனே! ஒருவரையொருவர் நோக்கும் இரட்டையர்களைச் சேர்ந்த யம தூதர்கள் தீர்க்க நித்திரையில் விழுந்து எங்களைக் கொல்லா திருக்கும்படி செய்க. எனையவை முன்போலவே—(எ-று.) வேந்தன் இந்திரனென்னும் பொருளிலேயே வரும். மிதுத்ருசா என்பதற்கு மிதுன ரூபமாய் இணைந்து நின்று இவ்விருவராய்ப் பார்ப்பவரென்பது பொருள்—சாயணர்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 2.

4. காமுறும் வண்மை யில்லாக் கருதலர் குஞ்சல்; நன்மை
தாமுற வாற்று மூற்றோர் விழித்திடல்; சூர, வேந்தே!
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல்பசுவு மாவு
மோமென, வெகுதனத்தோ, யுவக்க வாயிர மளித்துத்
தீமைதீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) சூரனே! இந்திரனே! எங்களாற் காணப்படும் அதான சீலர் களாகிய பகைவர் நித்திரையையெய்தட்டும்; தான சீலர்களாகிய பந்துக்கள் விழித்துக் கொள்ளட்டும். (விழித்துக்கொண்டு எங்களை யறியட்டும்.) மற் றவை முன் போலவே—(எ-று.)

5. காமுறு மிந்திரா வெங் காதினி னிந்தை கூறித்
தோமுறுகூச்சற்போடிக்கழுதையைத்தோலித்துக்கொல்க
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல்பசுவு மாவு
மோமென, வெகுதனத்தோ, யுவக்க வாயிர மளித்துத்
தீமை தீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) இந்திரனே! யாங்கள் கேட்கும் வண்ணம் நிந்தையான மொழிகளைக் கூறிக் கூச்சலிடுகின்ற கழுதைபோல்வாளுகிய சத்துருவைக் கொல்லுவாயாக; எனையவை முன்போலவே—(எ-று.) கழுதை காதினும் கேட்க முடியாத கூச்சலைப்போடுகிறது; அதுபோலச் சத்துருவும் கேட்கத்த காதவார்த்தைகளைக் கூறுகிறான்; அதனாற் கழுதை யென்றார்.

6. தீமையேய் சண்டக் காலுந் தெரிவரும் வனத்துத் தூசுத்
தேமறச் சுழன்று வீசி யெதிர்ப்படா தேகல், வேந்தே!
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல் பசுவு மாவு
மோமென, வெகுதனத்தோ, யுவக்க வாயிர மளித்துத்
தீமை தீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) இந்திரனே! எங்களுக்குப் பிரதி கூலத்தைச்செய்யும் சுழல் காற்றும் எங்களை விட்டுத் தூரத்திலிருக்கும் காட்டிற்போய் வீசட்டும். மற்றவை முன்போல—(எ-று.)

7. தீமையே நாடிப் பேசுந் தீயனைக் கொல்க; தீங்கை
யாமென மறைவி லாற்று மவனையு மழிக்க; வேந்தே!
சேமமா யெமக்குச் சோபை சிறந்த பல்பசுவு மாவு
மோமென வுகுதனத்தோ யுவக்க வாயிர மளித்துத்
தீமைதீர்த் தெம்மை யீண்டுச் சிறப்புறச் செய்க வின்றே.

(இ-ள்.) இந்திரனே! எங்களைப்பற்றி அவதூறு பேசுமவனைக் கொல்லுவாயாக; எங்களுக்குக் கெடுதலை மறைவிற் செய்யும் பகைவனையும் வதைப்பாயாக. எனைய முன்போல—(எ-று.)

வருக்கம் 27.

மண்டலம் 1 சூக்தம் 30.

30 மண்டலம் 1. அநுவாகம் 6. சூக்தம் 7.

22 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சுநச்சேபன்; வடமொழிச்சந்தம்: காயத்திரி, 11 பாதநிச்ருத் (ஓர் வகைக்கலிவிருத்தம்) 16 த்ருஷ்டுப், தேவதை: 1-16 இந்திரன், 17-19 அசுவினியர், 20-22, உஷா.

(வேறு.)

1. வள்ள னூறு மகத்தொடு கூடிய
வெள்ளரு மும திந்திரன் றன்னையாங்
கொள்ளு நல்லன்ன வாசையிற் கூபத்தை
யெள்ளச் சோமத் துளியி னிரப்புவாம்.

(இ-ள்.) அன்னத்தை விரும்புகின்ற யாங்கள் (சுனச்சேபனுதியர்.) நூறு கர்மத்தோடு கூடித் தானத்தால் அதிசயமாக வளர்கின்ற இந்திரனை எப்போதும் கூபத்தை நிறைப்பது போலச் சோமத்துளிகளால் நிரப்புவோம் —(எ-று.) வாஜம் அன்னமெனது வலிமையென்பார் மேனுட்டாசிரியர்.

2. பள்ளத் தாழும் புனலெனச் சோமங்க
ளெள்ளருங் குணத் தேன்ற சதத்தொடு
கொள்ளும் புஷ்டி கொடுப்பவை யாயிர
மூள்ளிட் டன்னவன் மாட்டு விரைகவே.

(இ-ள்.) பள்ளத்தை நோக்கிச் செல்லும் தண்ணீர் போல, நூற்றுக் கணக்காகவாவது, தருந்த ரகுக குணத்தோடு கூடி யாயிரக்கணக்காகவாவது, சோமங்கள் அவனிடத்துப் போகட்டும். (அவன் எங்களை யநுக்கிரகிக் கட்டும்.)—(எ-று.)

3. பலம் பொருந்தவன், முன்சொலும் பண்பினி
னலம் பொருந்தி யுற்சாகம் பழகுதன்
சலங் கடலிற் பரவிச் சலிப்பதொத்
திலங்குறக் தன்வயி றிடமீந்தனன்.

(இ-ள்.) மதத்தைத்தரும்வண்ணம் முன் சொன்ன (நூறு, ஆயிர மென்னும்) கணக்குப்படிக் கூடும் சோமத்துக்குப், பலம் பொருந்தியவ னாகியவிந்திரன், சமுத்திரத்திற் சலம்பாவுவது போலப் பரவும்படி, தன் வயிற்றை யிடமாகத்தந்தான்—(எ-று.) தேன் ஈண்டு சோமம்.

4. இந்த சோமக்க ளுன்றனக் கேன்றதா
மந்தமாய்க் கருவேற்கும் பு ளுன்னியே
வந்து கூடுங் கபோதத்தை மானநீ
யந்தி லெஞ்சொ லடைந்தரு கெய்துவாய்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(இ-ள்) (இந்திரனே!) இந்த ஸோமமுனக்காகச் சம்பாதிக்கப்பட்டது. கருத்தரிக்கும் பேட்டை நாடிக் கபோதஞ் செல்வது போல நீ அதனிடத்து நன்கு அணைகிறாய். எங்களது வார்த்தைகளையுங் கேட்கிறாய்—(எ-று.)

5. எண்ணில் செல்வ மினையவு மீரனே!
பண்ணிற் றேன்றும் புகழைப் பரித்தவ!
நண்ணி யுன்னைப் புகழ்பவன் மாட்டு, மெய்,
யண்மி, யின்ப மளிக்க நின் செல்வமே.

(இ-ள்.) தனங்களுக்கு நாயகனும், பண்களாலுயர்த்தப் படுபவனுமான் வீரனே! உன்னை நாடி ஸ்தோத்திரஞ் செய்பவனிடத்து உனது விபூதி (செல்வம் அல்லது இலக்குமி) நெருங்கி புண்மையின்பங்களை யளிக்கட்டும்—(எ-று.) விபூதி, இலக்குமி, செல்வமு மதிகாரமும்.

வருக்கம் 28.

6. கதமுறவே தற்கால மெங்கட் கிவட்
டுதைசெருவி லுயர்ந்து துலங்கியே
யுதவ னூறு மகத்தினி னேங்கியாய்!
இதமுறப் பிற கன்மத்துங் கூவுவேம்.

(இ-ள்.) சதக்கிருதுவே! தற்கால நடக்கு முக்கிரமான போரில் நீ யுயர்ந்த வுதவியை யளித்து நிற்பாயாக. இதர காரியங்களிலும் உன்னையே நன்றாய் விசாரிப்போம். (உதவிக்கழைப்போம்)—(எ-று.)

7. வேண்டும் போதெலாம், விக்கின மாற்றுமித்
தூண்டு போர்க்க ணுதவத் துகளற
வீண்டு நல்வலி யிந்திரன் றன்னையே
வேண்டுறுவோஞ் சகாயனை நாடியே.

(இ-ள்.) வேண்டுமென்ற போதெல்லாம், காரியவிகாதத்தைச் செய்கின்ற இவ்யுத்தங்களிற் காப்பாற்றும்படி வலிசெறிந்தவிந்திரனைத் துணைக் கழைப்போம்—(எ-று.) வேண்டுறுவோம் வேண்டுவோம். சகாயனெனுஞ்சொல் இந்திரனையே குறித்தது.

8. ஏன்றெங் கூவிளி யேற்கு மக்காலத்தி
னுன்ற வாயிரம் பால்ன மார்ந்திவட்
டோன்று நல்வலி யன்னத் தொகையொடு
மேன்றருகி லவசிய மெய்தலே.

(இ-ள்.) எங்களுடைய அழைப்பினைக் கேட்டகாலத்து (அவ்விந்திரன்) ஆயிரக்கணக்கான உதவிகளோடும், பலத்தைத்தரும் அன்னத் தொகுதியோடும் அவசியமாக அருகில் வந்து நிற்கட்டும்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 31.

9. முந்தைநின் றெங் குடும்ப முழுவது
மந்தில் காக்கு மவ னர னிந்திர
னந்து பன்மக நாடுவோன் றன்னையான்
பொந்தக் கூவுவென் முன் பிதாப் போற்றியோய்.!

(இ-ள்.) யாரை என் பிதா முன்பு போற்றினாரோ, அந்த விந்திர னுடைய வன்மை, புராதன காலத்திலிருந்து (ஸ்வர்க்கம் போல விளங்கும்) எங்கள் குடும்பத்தைக்காப்பதனை, பல யஜமானர்களிடத்தும் போகும் புருஷனை, யான் முறைப்படி கூவியழைப்பேன்—(எ-று.) பொந்த அடைய, பெறுமாறு, நிசைச்சொல்.

10. பலரும் போற்றும் புருகுத பற்பல
நலமும் வாய்ந்த நிவாச நற்காரண
வெலுவ போற்றிசைப்போர்க் கருடந்திடத்
தலைவணங்கிப் பிரார்த்தனை செய்வமே.

(இ-ள்.) எல்லாராலும் போற்றப்படுபவனே)! சிறந்தனே, நிவாச காரணனே! உன்னைத்தோத்திரஞ் செய்வோர்களுக்கருள் புரியுமாறு பிரார்த்திப்போம்—(எ-று.) புருகூத இடைகுறைந்தது.

வருக்கம் 29.

(ஐடி வேறு.)

11. சுதையினை யார்பவ, தோழனு மாவாய்!
வதைகுலிசத்தவ மான்புறு தோழர்
சுதையினை யார்பவ ரெங்களின் மாடை
துதையுக நீண்ட கதுப்புறு மாவே.

(இ-ள்.) சோமத்தைக்குடிப்பவனே! தோழனே! வச்சிராயுதந் தரித்தவனே! (உனக்குத்) தோழர்கள் போன்றவருஞ், சோமங்குடிப்பவர்களுமாகிய வெங்கண் மாட்டு நீண்ட கதுப்போடு கூடிய பசுக்கூட்டம் (உனது அநுக்கிரகத்தால்) வந்து சேரட்டும்—(எ-று.) ஈண்டும் மேனுட்டரெல்லாரும் சிப்ரிணீநாம் என்ற பதப்பொருளின்கண் இடர்ப்படுவார். சிலர் பதத்தையே மாற்றவேண்டுமென்பார், சயாணருரைப்படி மொழிபெயர்த்தவர் (Wilson) ஒருவரே. எங்கள் அழகான ஸ்திரீகளுக்குத் தோழனே யெனப் பொருள் கொள்ளுவார் மேனுட்டாசிரியர்.

(வேறு.)

12. சோம மார்பவ வச்சிரி, தோழனே!
காம வாசையி னுன்னரு ளெவ்வகை
யேம மாக விழைகுவ மவ்வகைச்
சேம மாக வணைந்து சிறக்கலே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 2.

(இ-ள்.) சோமத்தைக் குடிக்கும் வச்சிரியாகிய தோழனே! ஆசைப் பட்டு உன்னுக்கிரகத்தை யெம்மாதிரி விரும்புவோமோ அம்மாதிரியே உனது அநுக்கிரகமும் எங்களையடையட்டும்—(எ-று.)

13. அன்னங் கூடிய யாங்களு மாக்களோத்
துள்ளி யின்பத் துதையுக விந்திரன்
மன்னி யெம்மாடு கூட மகிழ்ந்தளி
யன்னவை வலியார்ந்து பானெய் தரல்.

(இ-ள்.) அன்னப் பொருள்களோடு கூடிய யாம் பசுக்களை யடைந்து சந்தோஷிக்கட்டும். இந்திரன் எங்களோடு மகிழ்ந்திருந்து தரும் பசுக் கள், பால் முதலிய தனத்தோடு கூடி மிகுந்த வலி பொருந்தியவையாயுமிருக் கட்டும்—(எ-று.)

14. ஆண்மை வாய்ந்தவ வுன்னன தேவதை
கேண்மை வாய்ந்து னருளினுற் கிட்டியே
பாண்டில் சக்கர வாரெனப், பண்களோத்
தூண்டுவோர்க்குப் பொன் ரேய்க்க, வுருள்கவே.

(இ-ள்.) தைரியம் வாய்ந்த (இந்திரனே!) உன்னுடைத்த தேவதா விசேஷங்கள் உன்னநுக்கிரகத்தால் எங்களுடைய ஓதுவார்களுக்குப் பொ ருள் தருமாறு, சக்கரத்தின் ஆரங்களுருளுவது போலத் தாமாகவே கொண்டு வரட்டும்—(எ-று.) வடமொழியில் அகமென வுள்ளது. அதனால் 3-ம் அடியிற் 'சக்காவச்சென' வெனக்கொண்டு அச்சில் சக்கரம் போலவெனப் பொருள் கொள்ளலாம். பாண்டிலென்பது வடமொழி மூலத்திலில்லை. உருள்கவென்று தேவதைகளுக்குக் கூட்டியது, சக்கரத்தை யுவமைப்படுத்தி யதாலென்க: வருக வென்பது பொருள்.

15. சதமக வுனைச் சாற்றுவோர்க் கீகவென்
றிதமுற வுன தேற்றம்பெறுந் தனஞ்
சதமுறத் துதிப்போர்க்குப் பெயர்க்கிரும்
ரதமியங்கு மக்காலே யாரோடலின்.

(இ-ள்.) சதக்கிருதுவே! ஸ்தோத்திரஞ் செய்வோர் விரும்பும் பொன்னையவர்களுக்குத் தருவதற்காக உன்னுடைய செல்வத்தைத் தொ ழில்செய்யும்போது வண்டியின் ஆக்கால்கள் உருளுவது போல இடம் பெ யர்க்கிறாய்—(எ-று.) ரதமியங்கு மக்காலச் சகடதலின், என்றுங் கொள்ள லாம்.

வருக்கம் 30.

(வேறு.)

16. கலிபெறச் சப்பு மோட்டக் கனைகுரற் றுரகம் பல்கா
லொலியின் மூச்செறியு மாக்களொடுபெருந்தனங்கைக் கொண்டான்
வலிபெறு கன்ம வேந்தன்; மகிழ்வுறப் பொன்றேர் வள்ள
னிலைபெற வதனை யெங்கட் களிக்க வெஞ்சுகத்தை நாடி.

மண்டலம் 1 சூக்தம் 30.

(இ-ன்.) (புல்லைத் தின்றபின்பு) ஒஷ்டத்தாற் சப்தமுண்டாகும்படி வாயைச்சப்புவனவும், கனைக்குங் குரலோடு கூடியனவும், அடிக்கடி பெருமூச் செறிபனவுமான குதிரைகளோடு வேந்தன் (இந்திரன்) (பகைவர்களது) பெரிய செல்வத்தைச் செயித்தான். பெருங்காரியங்களோடு கூடிய தாதாவாகிய அவன் பொன்னினாற் செய்யப்பட்ட தேரை யாங்கள் சுகமடையும்படி தரட்டும்—(எ-று.)

17 அசுவினிகா டவப்பல மாக்களா
லிசையுறத் தரு பன்னத்தொடே யிவண்
நசைபொடும் வர; லற்புத நாடிச்செய்
நிசைகுவீர் பொன் பசுவெம நில்லுறல்.

(இ-ன்.) (இந்திரனுற் றூண்டப்பட்ட, சுநச்சேபன் அசுவினிகளோத் துதிக்கிறான்.) அசுவினி தேவர்களே! மிகப்பல குதிரைகளாற் சுமந்து வரப்படும் அன்னத்தோடுமெமது கர்மத்தை நோக்கி வருவீர்களாக. அற்புதமான காரியங்களைச் செய்பவர்களே! பொன்னும் பசுக்களுமெமது கிரகத்தில் நிறைந்திருக்கட்டும்—(எ-று.) தஸ்ரா=அற்புதமான காரியங்களைச் செய்பவர்.

18. இருவருக்கு மொன்றுமெனப் பூட்டியே
மருவு தேருமத் தச்வினிசாள் மரிப்
பொருவி நிற்கு; மச்சைய, மருஞ்செயல்
புரிருவி, ரது வந்தரத் தோடுமோ.

(இ-ன்.) அசுவினி தேவர்களே! இருவருக்கும் பொதுவாகப் பூட்டப்பட்ட உமது தேர் ஒருவராலும் நாசஞ் செய்ய முடியாததாம்; அரிய செயலைச் செய்பவர்களே! அதனால் அத்தேர் அந்தரிட்சத்திற் செல்லுகிறது—(எ-று.) சமுத்திரம் அந்தரிட்சமாம். எந்த பூதமானது உதகத்தோடு கூடி நிற்குமோ அது ஸமுத்திரமாம்—யாஸ்கர்.

19. அழிவிலா மலிமீ துமத் தாழியிற்
சமனுறு வொரு சக்கரங் கண் ணுறப்
பழுத விட்டனிர் மற்றொரு சக்கர
மழுகினந்தர வீதி யுருளுமே.

(இ-ன்.) (அசுவினிகளே!) நாசப்படுத்த முடியாத பர்உதத்தின் உச்சியில் உமது தேரின் ஒரு உருளை செல்லும்; மற்றொரு உருளை அந்தர மார்க்கத்தில் உருண்டு செல்லும்—(எ-று.)

20. துதியுவக்கு முஷை, மரிப்பில்லை
வதியுவப்பி னுன் சோக மனிதருட்
கதியின் யாவன் களிப்பி னுணர்பவன்?
சதுரன் யாரை நீசாநுவை சோதியே?

அஷ்டகம் 1, அத்தியாயம் 2.

(இ-ள்.) ஸ்துதிப்பிரியையும், மரண ரஹிதையுமான உஷாதேவியே உன் னுடைய போகஸுகத்தை மரண தர்மமுள்ள மனிதன் எவன் அறிபவன்? விபாவரியே! எப்புருஷனே நீ யடைகிறாய்? (உனக்குசிதமான போகத்தைத் தருவது எந்தப்புருஷனுக்கும் சாத்தியமில்லை; அதனால் நீ எவனையுமடைவ தில்லை என்றபடி.)—(எ-று.) விபாவரி=மிகுந்த சோதியுள்ளவள். உஷஃ: வைகறை யபிமானி தேவதை.

21. பன்னிறங்கள் பரந்து சிவப்புற
மன்னு காந்தி மருவு பாய்மாவெனத்
துன்னு முன்னிருத் தூரத் தருகினு
முன்னி போருத லெங்கட் கரியதே.

(இ ள்.) வியாபன சீலையே! சித்திரவர்ணத்தோடு சிறந்து சிவந்து விளங்கும் உன் சோதியுருவத்தை சமீபத்திலிருந்தேனும் தூரத்திலிருந் தேனு (மக்களாகிய) நாங்களறிய முடியாது—(எ-று.)

22. விண்ணின் புத்திரி வேண்டு மனப்பொருள்
கண்ணி யீண்டு களிப்பின் வருகவே
யொண்ணு றற்றன மெங்கட் குவப்பொடுந்
திண்ண மெய்திடச் சேர்த்திட லென்றுமே.

(இ-ள்.) திவியின் புத்திரியாகிய உஷையே! எங்களுக்கு வேண்டிய அன்னப்பொருளோடு வருவாயாக. எங்கட்கு வேண்டிய தனத்தையும் சேர்ப்பாயாக—(எ-று.)

வருக்கம் 31.—

31. மண்டலம் 1. அநுவாகம் 7. சூக்தம் 1.

18 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆங்கீரஸன் ஹிரண்யஸ்தூபன்; வடமொழிச்சந்தம்: 8, 16, 18, த்ருஷ்டுப் (தமிழில் அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.) மற்றவை, ஜகதி; (4 காய்ச்சீருள்ள அறுசீர்க்கழி நெடில்.) தேவதை: அக்கினி.

(வேறு.)

1. அங்கிரசன் குடிமுதலா யமைந்தபெரு மிருடிகீ; யங்கி நீயே
மங்கலிலாக் கடவுளாங்; கடவுளர்க்குச் சபமளிக்க மலிந்த தோழன்
றங்குமொளி ஞானமலி கவிகளாம், படையொளிரு மருதர் தாமு
மிங்குநீ தூவிய மாற்றினதன் பயனுக வெழுந்தா ரின்றே.

மண்டலம் 1. சூக்தம் 31.

(இ-ள்.) அக்கினியே! ஆங்கீரஸ வம்சத்து இருடிகளோடீ யுற்பத்தி செய்தவனும்; நீயே ஒரு தேவதை; மற்றத்தேவர்களுக்குச் சோபனமளிக்கின்ற தோழனுமாவாய்; உனது விரதாநுஷ்டானத்தின் பயனைப் பிரகாசத்தோடுகூடி ஞானமிகுந்த கவிகளாகிய ஆயுதந்தரித்த மருத்துக்கள் பிறந்தார்கள்—(எ-று.) மருத்துக்களின் ஆயுதம் மின்னலென்பார் மேனட்டாசிரியர் (Griffith.)

2. அங்கிராக் குடிமுதலா யுத்தமனுய்க் கவியாகி யகில லோகந்
தங்களுளின் விபுவாகு மக்கினியே தேவர்களின் றவஞ்சார் கன்மஞ்
சிங்கலறச் செய்வதுடன் பலவிதமா வமர்மேதை சேர்ந்த தாய்
ரிங்கமருமிருவருளோய், மனிதாகத்துறையுமுறையெவரோர்வாரே.

(இ-ள்.) அக்கினியே! நீ ஆங்கிரஸர்களுக்கு முதல்வன், உத்தமனுமாம். அகிலலோகாநுக்கிரகார்த்தம் (ஆகவநீயாதி) பலவிதமாக வரும் விபுவும், கவியும், ஞானியும், இரண்டு தாயரோடு கூடினவனுமாகிய நீ தேவர்களது விரதங்களை யலங்கரிக்கிறாய். எல்லா மனிதருடைய வீட்டிலும் நீ வீற்றிருக்கும் தன்மையை யாரால் அறிந்து சொல்ல முடியும்?—(எ-று.) இருதாயர் அரணிக்கட்டைகளிரண்டும்.

3. அக்கினிநீ மாதரிச்சு வானனுக்கு முதலாவா யனேகற் கன்ம
மொக்கவுனிப்பணிசெய்யும்யஜமானன்கண்ணெதிரினுறுக;வுன்றன்
றக்கதிறங் கண்டுபுவி வானங்க ளதிர்ந்தனவாற்; சமைந்த யாக
மிக்கதொழிற்பாரமதிற்சலிப்படையாய்,வசு,பெரியோர்விழைந்தேத்
தாயே.

(இ-ள்.) அக்கினியே! (அக்கினி, வாயு, ஆதித்தியனென்றெண்ணப்படுவதால்) நீ மாதரிச்வானுக்கு (வாயுவுக்கு) முதலாவாய். சற்கன்மங்களோடத்தேடித் தேவபூழியஞ் செய்யும் யாக கர்த்தாவுக்குப் பிரத்தியட்சமாவாயாக; உனது சாமர்த்தியத்தைப்பார்த்துத் தியாவாப்பிருதிவிகள் தம்பித்தன; வஸுவே! யாகபாரந்தாங்குவதிற் சலிப்படையமாட்டாய்; மகத்தான தேவர்களை நீ போற்றினவனுகிறாய்—(எ-று.) மாதா அந்தரிட்சம், அங்கே சுவாவிக்கும் பிராணி மாதரிச்வா அதாவது வாயு என்றபடி. மேனட்டாசிரியர் விவஸ்வதே என்பதற்கு பரிச்சரதே யெனப் பொருள் கொள்ளாது விவஸ்வான் எனப் பெயராகக்கொண்டு யமனுடைய தந்தை யென்பார். வசு நன்மை. நிவாஸகாரணன் என்று ஈண்டு பொருள்படும்.

4. அக்கினிநீ மானவருக் கருளுவா னகல்விண்ணை யார்க்க விட்டாய்
யுக்கிரநற்றவம்புரியும்புரூரவனுக்கருடொழிலேயுடையாயுன்றன்
றக்ககுரவர்க்கடைந்துவெளிக்கொணர்ந்தவுடனுனையுந்தகவாய்க்
கீழைத்
திக்கினுள வாகவநீயங் கொளுத்திப் பச்சிமத்துச் சேர்ப்பா ரன்றே.

மண்டலம் 1. சூக்தம் 31.

(இ-ள்.) மேலான ஞானத்தோடு கூடிய வக்கினியே! நல்லொழுக்கமில்லாத மனிதனையும் பழகுவதற்கு யோக்கியனுய் உன் கர்மத்தினிடத்துச் செய்து விடுகிறுய். (அதாவது கர்மாநுஷ்டான முள்ளவனுய்ச் செய்து விடுகிறுய்.) பொருள் சேருமென்ற ஆசையோடு வீரர் பலர் புரியும் யுத்தத்தில் அற்பப் பலவான்கள் சிலரைக்கொண்டு தொகையதிகமாயுள்ள பலாட்டியரான வீரரையும் முறியடிக்கிறுய். (இது உன் மகிமை)—(எ-று.)

7. அக்கினிசோனம்வேண்டிப்போற்றுமவற்கமர்பதமடைவித்தென்றுங்
தக்கமெலாந்தினந்தோறுநீக்குகிறுய்;இருவகையாத்தோய்ந்தசன்ம
மொக்க வடைந்திடொக்குத் தீவிர வாசையினோடு முற்ற யாகத்
தக்கபுகழ்ச்சூரிதனக்கெப்பொழுதுஞ்சுகத்தொடனஞ்சார்த்துவர்யே.

(இ-ள்.) அக்கினியே! உணவுப்பொருளை விரும்பி ஸ்தோத்திரஞ் செய்யும் புருடனுக்கு அமாத்துவ பதத்தை (மரணமில்லாத் தன்மையை, அழியாத கீர்த்தியை) யளித்து அவனுடைய துக்கத்தை நாள்தோறு நீக்குகிறுய். துவிப்த சதுஷ்பத ஜன்மங்களாகிய (மக்களையுங் கன்று காலிகளையும்) பெற விரும்பும் யாக ஸ்ரீரிக்கு எப்பொழுதுஞ் சுகத்தை யளிப்பதுடன் உண்டியையுங் கூட்டுகிறுய்—(எ-று.) ஸ்ரீரி யாக கர்த்தா யாக நடத்துவதற்கு வேண்டிய செலவுகளைக் கொடுத்து யாகத்தைநடைபெறச் செய்வோன். மேலுட்டாசிரியர் இருவகை ஜன்மங்கள் தேவரும் மனிதருமாமென்பார்.

(கூடி வேறு.)

8. தோத்திரம் பெறுவா யங்கி, தொகுபொரு ளெமக்கு வேண்டி
யீத்தருள் செய்வான், கன்ம மியற்றுவோர் களிக்கல் சீரின்;
வேற்றுறு ஈனை கன்மம் விளக்கல் யாமுனக்கென் றீண்டு;
சாற்றுறுந் தேவரோடு திவிபுவி யெமைப் புரக்கல்.

(இ-ள்.) போற்றப்பெறு மக்கினியே! எங்களுக்குப் பொருளளிப்பதற்காக யாககர்த்தாவுக்குப் புகழோடுந் தனத்தைத் தருவாயாக; புதிதாகக் கிடைத்த (நீயளித்த புத்திரர்களோடு) யாகதான முதலாகிய கர்மத்தை வளர்ப்போமாக; நியாவாபிருதுவிகள் பிற தேவதைகளோடு எங்களை நன்றுய்க் காப்பாற்றட்டும்—(எ-று.)

9. குற்றமறு மக்கினியே தேவர்நடுச் சாக்கிரத்தே கூடுந் தேவே!
பெற்றவர்தமருகிருந்தெத்தனுப்படைத்தேயநுக்கிரகம்பெறுவிப்பாயால்
மற்றுமிவண்டொழில்புரியும்யஜமானன்றனக்கருளுமதியேடேலாய்
முற்றுருவ மங்களனே, கிரியையனுக் கெவ்வசுவு முதல் சேர்ப்பாயே

(இ-ள்.) தோஷாஹித்தனுய், தேவர்களுக்கு மத்தியில் ஜாகரூகனுயம்மருந் தேவனே! உன்னைப் பெற்றவர்களாகிய (நியாவாப் பிருதுவிகளுக்கு) அருகேயிருந்து எங்களுடைய (புத்திர ரூபமான) சரீரத்தைச் சிருஷ்டித்து யாகங்கள் அநுக்கிரகம் பெறுமாறு செய்விப்பாய்; இங்கே கர்மம் புரியும் யஜமானனுக்கு அநுக்கிரகஞ்செய்யும் புத்தியோடிருப்பாயாக; மங்கள ரூபியே (கல்யாணனே)! எல்லாத்தனங்களையும் அவனுக்காகச் சேர்த்து வைக்கிறுய்—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

10. வினையூட்டு மக்கினி நீ; யெங்களுக்குப் பிதாவாக மேவு வாய் நீ;
பினையுமுன தருஞ்சுற்றமியாங்க;ளெமக்காயுளையும்பெருக்குவாய்நீ;
வினைதவரு வீருளாய! விரதமெலாங் காப்பவனே! மேவி யாரு
மினைதலரும்வலியுடையாய்!சதவிதியாயிரமு முன்சாரியையு.மன்றே.

(இ-ள்.) அக்கினியே! எங்களுக்குக் கருமபலனை யளிப்பதற்குச் சிறந்த அதுக்கிரக மதியுள்ளவன் நீ; எங்களுக்குத் தந்தை நீ; எங்களுக்கு ஆயுளைக்கொடுப்பவன் நீ; நாங்கள் உனது பந்துக்கள்; ஒருவராலும் இம்சிக்க முடியாத வலியை யுடையவனே! நல்ல வீரர்களோடு கூடியவனே! விரதங்களைக் காப்பவனே! நூற்றுக்கணக்கான திரவியமும் ஆயிரக்கணக்கான பொருளுங்கூட உன்னிடத்து நன்கமைந்துள்ளன—(எ-று.)

வருக்கம் 33.

11. மக்களாய் வாழ்வாரி னரூடனெனு மரசனது மனையிற் றேவ
ரொக்க முதன்முத லுனையு மக்கினி, சேனுபதியா வுறையவிட்டார்;
மிக்கபுக ழென்ருல மூதாதையினுக் கோர் மகவாய் மேவி நின்ற
வக்கணமே யினையினையுந் தருமோப தேசத்துக் கமர்த்தி னரே.

(இ-ள்) அக்கினியே! முன்பு தேவர்கள் மனித ரூபமாயிருந்த நருஷனென்னும் அரசனுடைய கிரகத்தில் சேனுபதியாய் மனித ரூபத்தோ டுறையும்வண்ணம் உன்னையமைத்தார்கள். எப்பொழுதன் குலத்து முன்னோனுகிய அங்கிரஸனுக்குப் புத்திரனுகப் பிறந்தாயோ அப்பொழுதே தருமோபதேசஞ் செய்பவளாகிய இளை யென்னும் புத்திரியையு மமைத்தார்கள்—(எ-று) நருஷன் மனுகுலத்துத் தோன்றல். இம்மறையைக் கண்டவன் ஹிரண்யஸ்தூபன். அவனது முன்னோன் அங்கிரஸ். இவனே முதன்முதல் அக்கினியை யாக கார்யங்களுக் கேற்படுத்தியவன். இளை இளா, பிரார்த்தனுரூப தேவி; யாகவிதிகளை முதலிற் போதித்தவள். இடா வைமாநவீயக்ஞாதுகாசிந்யாவதீத்.' என்று தைத்தீரியங் கூறும்.

12. போற்றுதற்குத்தக்கதொருதேவனுமங்கியெமைப்போற்றிச்செல்வ
மீத்தளிக்குஞ்சிறப்பினுறுமெங்களாயுஞ்சுரினையுமியைந்துகாக்க;
வாய்த்தவெமதரும்புதல்வர்ப்புத்திரைநிரந்தரமாவளர்த்துக்காப்பாய்
சாற்றுமுன தருணோன்பி; னுக்களையு நீ காத்துத் தயங்குவாயே.

(இ-ள்.) வந்திக்கத்தகுந்த அக்கினியே! உனது பாலனங்களால் செல்வம் மிகுந்துள்ள எங்களைக் காப்பாற்றுவாயாக; எங்களது புத்திரர் நம்மையுங் காப்பாற்றுவாயாக; புத்திரர்களது புத்திரர்களாகிய பேரர்களும் உனது கர்மங்களில் நிரந்தரமாகக் காப்பாற்றப்படத்தக்கவர்களாம்; ஸாவதானமாக வளரும் எமது பசுக்களையும் நீ வளர்க்கிறாய் (உன் பெருமையை என்ன சொல்வது?)—(எ-று. மகோந: செல்வவான்களாகிய எங்களது போஷகர்களையும் என்று பொருள் கூறுவார் மேனட்டாசிரியர் (Griffith.)

மண்டலம் 1. சூக்தம் 31.

13. அக்கினிநீயஜமானன்றனையோம்பியருகிருந்தேயரியகாவல்
புக்கமையாவெக்கியத்திற்கெனநான்குகண்ணெளியைப்பொருந்திக்
கால்வாய்;
யெக்கணமுநலிக்கவுறுப் போஷகளுமுனக் கவியையீவோன்,
போன்றே
முக்கியனுயினுமவன்றன்மறைத்துதியையுன்மனத்தின்முன்னேற்
பாயே

(இ-ள்.) அக்கினியே! நீ யஜமானனைப் பரிபாலிப்பவன்; ஸமீபத்திலிருந்து கொண்டு, காவலமையாத யக்ஞத்தின் பொருட்டு (நான்கு திக்கிலும் வளரும்) நான்கு கண்போன்ற சுவாலையோடு பிரகாசிப்பாய். இம்சிக்க முடியாத போஷகனுகிய உன்னிடத்து அவியையளிப்பவனையும், உன்னை ஸ்தோத்திரஞ் செய்பவனையும் நினைத்து அவனவனுடைய மந்திரத் துதிகளைப் பெறவேண்டுமென்று உன் மனத்தின் விரும்புகிறாய்—(எ-று.)

14. அக்கினிநீபலர்புகழுமிருத்துவிஜன்றனக்குதவுமலபொன்னைத்
தக்கதொழில்புரிவோனும்பெறுகவெனமிகவிரும்பிச்சம்பாதிப்பா;
யொக்கவலியிலனையுமாதரித்தருளும்பெருமதிசாருயர்பிதாநீ;
மிக்கபொருளுனர்ச்சிறந்தொளிராதசிறுவனையுமிளிர்த்துவாயே.

(இ-ள்.) அக்கினியே! நீ பலராலும் புகழப்படும் இருத்துவிஜனுடைய உபகாரார்த்தம், பரமோத்தமமான தனத்தை அதுஷ்டாதா பெறட்டுமென்று விரும்புகிறாய். வலியில்லாதவனையுமாதரிக்கின்ற பரிபாலகனும். சிறந்த ஞானமுள்ள நீ அற்ப அறிவுள்ள சிறுவனையுந் தயார் செய்து பெருமைப்படுத்துகிறாய்—(எ-று.)

15. இருக்கோதுமறையவர்க்குத்தட்சிணையையுவந்தளிக்குமியாகவானை
யுருக்கோடுங்கவசமெனவக்கினிநீயெவ்விடத்துமுவந்துகாப்பாய்;
திருக்கோடாவன்னமதாலதிதியினைப்பூசித்துச்செம்மைசாரப்
பெருக்கோமென்பினனுந்துறக்கமதிலோர்சுட்டாய்ப்பிறங்குவானே.

(இ-ள்.) அக்கினியே! நீ இருத்துவிக்குக்களுக்குத் தக்ஷிணையளிக்கும் யஜமானனை உருக்குக்கவசம் (யுத்தத்தில் உடலினைக் காப்பது) போல எப்பக்கத்திலும் காக்கிறாய்; சுகமளிக்கு மன்னத்தால் அதிதி சத்காரஞ் செய்து தனது கிரகத்தில் அன்போடும் ஜீவயஜனஞ் செய்யும் யஜமானன், சுவர்க்கத்தில் ஒரு திருஷ்டாந்தபுருஷனுக நிற்கிறான். (அல்லது ஸ்வர்க்கமானது அதுஷ்டாதாவுக்குச் சுகமளிப்பது போல நீ இருத்துவிக்குக்கள் முதலானவர்களுக்குச் சுகமளிக்கிறாய்—(எ-று.)

வருக்கம் 34.

கூடி (வேறு.)

16. நெறியினினீங்கித் தூரநெறிகடந்தொழுகெம்பாப
முறையினேற்பொறுக்கலங்கி; முறையினர்க்குறுஞனத்தோய்,
நெறியினைவளர்ப்போ, யுள்ளநிறைமதித்தந்தையாவா,
யிறையினின்மனிதர்தம்மையிருடி செய்தெதிருவாயே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(இ-ள்.) அக்கினியே! விருதலோபத்தோடு கூடி வெகு தூரம் நெறிகடந்தொழுகும் எங்களுடைய இந்தப் பாபத்தைப் பொறுத்துக் கொள்ளுவாயாக. ஸோமார்ஹமுள்ள அதுஷ்டாதாக்களுக்கு அதிக குணம் பொருந்தியவனுயிருக்கிறுய். லபிக்கக்கூடிய பிதாவும், விசேஷமான புத்தியுள்ளவனும், கர்மத்தை வகிப்பவனும் நீயே. மர்த்தியர்களோ ரிஷிகள்காக்கி விரைவில் அவர்களுக்கு முன் பிரத்தியட்சமாவாய்—(எ-று.)

ஷை (வேறு.)

16. மனுவினதுபக்கலினு மங்கிரஸன்பக்கலினுமாண்டதன்மை
மனிதர்பலர்முன்னேர்தம்பக்கலினுமங்கிரனே யயாதிமாட்டுங்
கனிதரவே செல்வதெனத்தூயங்கி யிவ்யாகங்காணுஞ் சாலைத்
தனேதா; னற்றேவர்தமைக்கொணர்க;குசையமர்த்தலவிசுவைத்தீ
வாயே.

(இ-ள்.) சுத்தமான வக்கினியே! அங்கிரனே (அங்கனசிலனே)! மநுவினிடத்தும், அங்கிரஸனிடத்தும், யயாதியினிடத்தும் மற்றும் பல முன்னேரிடத்தும் நீ சென்றதுபோல இந்த யாகசாலையினிடத்தும் வருக; தேவர்களைக் கொண்டு வருக; பரப்பிய தருப்பையிலவர்களை யமர்த்துக; அவருக்கு ருசியான வவியைத்தருக—(எ-று.) அங்கிரன், அங்கன சிலன், அக்கியளிக்குமிடங்கள் தோறுஞ் செல்பவன்.

ஷை (வேறு.)

18. ஓங்குக வலியி னங்கி யுயர்ந்தவெஞ் ஞானத் தெம்மாட்
டோங்கிய வலியி னுற்று மந்திரத் துவந்து; நித்தம்
வீங்குறு வசவி னெம்மை விழைந்து கூட்டுக; வன்னத்தைத்
தாங்குறு வளமும் புத்தி தானு மெங்கட்கமைக்கல்.

(இ-ள்.) அக்கினியே! எங்களது ஞானத்தினுதவியாற் சக்தியாநுஸாரமாக யாங்கள் துதிக்கு மந்திரங்களைக்கேட்டு வலியிற் பெருகுவாயாக. அநுட்டாதாக்களாகிய வெங்களுக்கு விசேஷமான செல்வத்தைச் சேர்ப்பாயாக; அன்ன மிருதியையும், அதுஷ்டான விஷயமான துல்லிய புத்தியையும் எங்களுக்கமைப்பாயாக—(எ-று.) வஸு=செல்வம்.

வருக்கம் 35.

32. மண்டலம் 1. அநுவாகம் 7. சூக்தம் 2.

15 இருக்குக்களுள்ளது.

ரிஷி: ஹிரண்யஸ்தூபன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை, இந்திரன்.

1. வச்சிரந் தாங்கும் வீர னிந்திரன் வலிமை யெல்லா
மிச்சையி னிறை யுரைப்ப், லகியீனே யதப்படுத்திப்
பொச்சமி னீரைத் தோற்றிப் பூமியில் விழுவான் செய்து
மிச்சனு மலைக்க னெல்லா நிறைவினு னதி வகுத்தே.

மண்டலம் 1 சூக்தம் 32.

(இ-ன்.) வச்சிராயுதந்தரித்த விந்திரன் முன் செய்த வீர்ய காரியங்களே யெல்லாம் உடனே சொல்லுவேன்; (முதன் முதல்) அகியை (மேகத்தை) அதப்படுத்தினன்; (இரண்டாவதாக) அம்மேகத்தின் நீரைக் கீழேவிழும்படி செய்தான் (மூன்றுவதாக) அந்நீரை மலைகளிலெல்லாம் பல ஆறுகளாக ஓடும்படி வகுத்தான்—(எ-று.)

2. மலைக்கணே யமைந்து நின்ற வகியினை மலைத்தானுக்குக்
கலக்குறு மொலிகலந்த வச்சிரந் துவட்டா வீந்தா
னெனிந்துப் பல்லாறு தங்கன் றுறையக முறுவதேபோற்
சலித்த,நீர் சமுத்திரத்தைச் சார்ந்திடக் கீழ்நோக் குற்றே.

(இ-ள்.) மலையையடித்து நின்ற அகியை (மேகத்தை) யடித்துக் கொன்றவனுகிய விந்திரனுக்குக், கேட்டவர் மனத்தைக் கலங்கச் செய்யும் மிருந்தவலிமையோடு கூடிய வச்சிராயுதத்தை விசுவகர்மன் செய்து கொடுத்தான். (அந்த வச்சிராயுதத்தைக்கொண்டு அவ்விந்திரன் மேகத்தை வாட்டியபோது) ஜலமெல்லாம் கீழ்முகமாக விழுந்து சமுத்திரத்தை நோக்கிச் செல்லுமாறு சலிக்கலுற்றன—(எ-று.) நீர்சலித்தவென்க.

3. காளே போன்மதர்த்துச்செல்வான்கண்டனன்சோமந்தன்னை
வேளே தா றருந்தினனன் மூவிதமா மகத்துந்
தாளுறு மசுவான் வச்சிரத்தினை மதித்துத் தாங்கிக்
கீளுறக் கிழித்தா னந்த வகியுத வகியைத் தானே.

(இ-ள்.) காளைபோல மதத்தொடு நடப்பவனுகிய இந்திரன் சோமத்தைத் தேர்ந்தெடுத்து, (ஜோதி, கௌர, ஆயு) என்னும் பேர்களையுடைய மூன்றுவித யாகங்களிலும் பிழிந்து ஆவுதிசெய்த சோமத்தைக் குடித்தான். அம்மகவான் (தனவானுகிய விந்திரன்) சாயகமாகிய வச்சிரத்தைக்கையி லெடுத்து அதனுல் மேகங்களுக்கு மத்தியில் முதற்றோன்றிய மேகத்தை யடித்து வீழ்த்தினன்—(எ-று.)

4. அகிகளின் முதற்கட் டோன்று மகியினைக் கொன்று மாயை
மிகவுள வசுரர் மாயை வென்றபோ தென்றூழ் வானம்
தகவுறு முஷசு மூன்று மொளிபெறச் சார்த்தினும் பி
னிகலுதற் கொருவரேனு மில்லைகா ணுனக்குவேந்தே.

(இ-ள்.) இந்திரனே! மேகங்களில் முதலிலுற்பவித்த மேகத்தைக் கொன்று மிருந்த மாயையோடு கூடிய வசுரர்களின் மாயையைச் சயித்தபோது, சூரியன், வானம், உஷஸ் என்னும் மூன்றுங் காந்தியோடு பிரகாசிக்கச் செய்தாய். அதற்குப்பின் உன்னோடு சண்டை செய்வதற்கு ஒருவருமில்லை—(எ-று.) அகியென்பது மேகத்துக்கும் விருத்திரனுக்கும் பெயர்.

5, கொலைவல் பேர் வச்சிரத்தாற் கொன்றன னிருள்போன் மூடி
மல விருத்திரனே வேந்தன் தையிற மலைத்து வீழ்த்தா
னிலைபெறு மடிமரங்க ணவியத்தால் வீழ்வ நேரத்
தலைமைதீ ரகியும் பூமி தழுவியே கிடக்கின்றனே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(இ-ள்.) இந்திரன் தனது வச்சிராயுதத்தினால், இருள்போல மூடிக் கொண்டு சத்துருக்களே வெல்லும் விருத்திராசுரனைக் கொன்றான். கோடாலியினால் மரமூலங்களைப் பிளந்தெறிவது போல அவ்விருத்திரனது கைகளை வெட்டித் தள்ளினான். அவ்வடிமரம் துண்டுகளோடு விழுந்து கிடப்பது போல விருத்திரனும் தன்னுடனும் கைகளுந் தனித்தனி கிடக்கத் தரையில் விழுந்து கிடக்கிறான்—(எ-று.) அதி விருத்திராசுரன் நீர் பொதிந்த கரு மேகமே விருத்திரன் என்க.

6. வெல்லுத லரிதன் றெண்ணி விருத்திரன் மதர்த்துப் பல்லோர்க்
கொல்லும் பேர் வீரன் மேற்கொள்ளரிய விந்திரனைக் கூவி
மல்லுற வழைத்தா னன்னான் குழுவினை வாட்டலாதான்;
சொல் லரிப்பகைமை யாரும்யக் கற்களைத் துகளாக் கிற்றே.

(இ-ள்.) தன்னை யொருவரும் வெல்லமுடியாதென்று மதங்கொண்ட விருத்திரன், பலரையுங் கொல்லுபவனும் பெரிய வீரனுஞ் சௌரியம் வாய்ந்தவனும் பகைவரால் சயிக்கமுடியாதவனுமாகிய விந்திரனைப் போர்க் கழைத்தான். அவ்விந்திரனது வீரர்கூட்டத்தை வெல்ல முடியவில்லை; அவ்விந்திர சத்துருவாகிய விருத்திரனது சரீரம் ஆறாய் விழுந்து பூமியிற் கிடக்கும் கற்களைத் துகள்படுத்திற்று—(எ-று.)

7. காலின்றிக் கையுமின்றிக் கடுமையாய்ப் பின்னும் யுத்தங்
கோலினான் விருத்திரன்றா; னிந்திரன் குலிசத் தன்னான்
மேலினிற் புடைத்தான்; வத்ரி யாண்மையை விழைத னோ
வேலுறு மங்கம் வேறாய்க் கிடந்தனன் புவியின் மீதே.

(இ-ள்.) காலில்லாமலும் கையில்லாமலும் கிடந்த விருத்திரன் இந்திரனோடு பின்னும் யுத்தஞ் செய்ய விரும்பினான். (அதாவது பொருமையினால் யுத்த முயற்சியை விடவில்லை என்றபடி.) இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அவனது சரீரத்தின் மேலடித்தான். அவ்விருத்திரன் யுத்தத்தை விரும்பியது வத்ரி ஆண்டன்மையை விரும்பியதை யொத்திருந்தது. அவன், தனது அங்கங்கள் வேறாகப், பூமியைத் தழுவிக்கிடந்தான்—(எ-று.) வத்ரி: (Vadhrih) சின்னமுஷ்கன், கோஜா, காயடிக்கப்பட்டவன்.

8. அணையினை யுடைக்கு மாற்றி, னவன் புவி விழுந்தகாலை
யணவுவா ருள்ள வோகை யணைக்கு நீ ரவன்மே லோடுந்
தணவறு மகிமையோடு விருத்திரன் றகைத்த தண்ணீர்
துணிவொடு பெருகக் கீழே தோய்ந்தகி கிடக்கு மாலோ.

(இ-ள்.) தன்னை நெருங்கிப் பார்ப்பவர்களின் மனத்தைக் கவர்கின்ற சலம், பூமியில் விழுந்து (செத்தக்) கிடக்கும் விருத்திரனைத்தாண்டி, அணையையுடைத்துச்செல்லுநதியைப்போலச் செல்லுகிறது. (உயிரோடிருந்தபோது) விருத்திரன் தனது மகிமையினால் அடைத்து வைத்திருந்தநீர் துணிந்து மேலோட்டக், கீழே அகி (விருத்திரன்) விழுந்து கிடக்கிறான்—(எ-று.)

மண்டலம். 1 சூக்தம் 32.

9. விருத்திரன் ரூயுஞ் சீர் கெட் டவன் புடை விழ வவட்கீ
ழுருத்துத்தன் படை யெறிந்தா னிந்திரன்; கன்றின் பக்க
லருத்தியோ டுறு மான்போல வடியிற் புக்திரனு மீது
வருத்தமு தாயுமாக மடிந்து தானவி கிடந்தாள்.

(இ-ன்.) விருத்திரனைப் பிள்ளையாகப் பெற்றவளும் அவனைக்காப் பாற்றும் வண்ணம் பெருமை தாழ்ந்து அவன்மே லடிவிழாதபடி அவனது சரீரத்தின் மேல் போய் விழுந்தாள். இந்திரனும் தனது படையாகிய வச்சிரத்தை அவளுக்குக் கீழேயிருந்த விருத்திரன் மேலெறிந்தான்; கன்றின் பக்கத்தில் படுத்திருக்கும் பசுவைப்போலக் கீழே புத்திரனும் மேலே தாயுமாக விருத்திர மாதாவாகிய தானவியுஞ் செத்துக்கிடந்தனள்—(எ-று.) தானு என்னும் வடமொழிப்பதத்தைக் கிறப்புப் பெயராகக் கொள்வார் மேனுட்டாசிரியர். தானவர் வம்சத்துதித்தவள் தானவி.

10. ஒருகிலே யோய்வு மில்லாக் கட்டைமே லோடல் மான
மருவுபே ரின்றி மன்னும் விருத்திரன் சரீரத்தின்மேற்
பெருகியே வெள்ளஞ் செல்லப் பேசுணர்வின்றி வேந்தன்
றருவு சத்துருவுந தீர்க்க விருளினிற் றோய்ந்திட்டானே.

(இ-ன்.) (தண்ணீர் மத்தியிலெறியப்பட்டு) நிலையில்லாமலு மோய்வில்லாமலுமிருக்கின்ற கட்டையின்மீதோடுவது போலப் பேரற்று விழுந்து மறைந்து கிடக்கிற விருத்திரனது சரீரத்தின் மேல் வெள்ளமான தருண்டோடும். இந்திர சத்துருவாகிய விருத்திரனும் பிரக்ஞையில்லாமல் தீர்க்கதமஸில் (தீர்க்க நித்திரையில்) விழுந்து கிடக்கிறான்—(எ-று.)

வருக்கம் 37.

11. பணியெனு மசுரன் பற்றிப் பிலத்தமை பசுவே போலப்
பிணியுற கின்ற, தாஸபன்னிக ளகியின் காவ
லணையு நீர்; விருத்ரன் றன்னை யிந்திர னழித்தபோது
தணியு நீர்கட்டி நின்ற பிலத்தினைத் திறந்தான் மாதோ.

(இ-ன்.) பணியென்னுமசுரன் பிடித்துப் பிலத்திலடைத்து வைத்த பசுவைப்போல, தாஸனது (விருத்திரனது) பத்தினிகளும், அகி (விருத்திரனது) யினது காவலிற்றங்கினவையுமான ஜலங்கள் கட்டுப்பட்டிருந்தன. இந்திரன் விருத்திராசுரனை யழித்தபோது நீர் கட்டுப்பட்டிருந்த பிலத்துவாரத்தையும் திறந்து விட்டான்—(எ-று.) தாஸன் விருத்திரன் எல்லாவற்றையுமழிப்பவன். அவனைப்பதியாகக் கொண்டவர்கள் தாஸபத்னிகள். சண்டு மேக நீர். பணியென்னுமசுரன் பசுக்களைப் பிலத்திலடைத்து வைத்த கதையை ம. 1. சூ. 6 பாட்டு ஐந்தின் உரையிற் காண்க.

12. துணையின்றிப்படையெலாங்கொண்,டிந்திரருஷிசத்தின்மேற்
பணை யவ னடித்தபோது பரியின்வா லென்ன நின்ரு;
யிணையிலி சூர, வானுஞ் சோமமு மிறையி னெய்தித்
தினியுறு சத்த கங்கை பெருகுறச் செய்வித்தாயே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

(இ-ன்.) ஏகலுய் ஆயுதங்களையெல்லாம்கைக்கொண்டு விருத்திரன் உனது வச்சிரத்தின் மேலடித்தபோது, இந்திரனே, நீ குதிரையினது வாலைப் போல நின்றாய். (அதாவது, குதிரையின்வால் மசகங்களை லக்ஷ்யஞ் செய்யாமல் அடித்துக் கொல்லுவது போல விருத்திரனை நீ யடித்து கொன்றாயென்றபடி.) சௌரியத்தோடு கூடினவனே! பிலத்தில் எட்டுப்பட்ட பசுக்களையுஞ் சோமத்தையும்விரைவில் பெற்றாய். சப்தகங்களைகளைப் பிரவாகமுறச்செய்தாய்—(எ-று.) அப்பரியின் வாலுவமை மண். 1. சூக். 27. பா. 1. ற்காண்க. ஸப்தகங்கைகளை அஷ்டகம் 8 அத்தியாயம் 3. வருக்கம் 6-ல் இம்மே கங்காளன்னும் இருக்கில் காண்க. கங்கை, யமுனை ஸரஸ்வதி, சுதுத்ரி, பருஷ்ணி, அஸிக்னி, விதஸ்தா என்பன.

13. மின்னலு மிடியும் வீழ்த்து மாலமும் பனியு மின்ன
வின்னநீர் மாயை யாவு மெழிலுறு தொழிந்த யுத்தங்
குன்னி யிந்திரனுந் தோய்ந்த வகையுமே பொருத காலே;
மன்னுறு வெற்றிகொண்டான் றனமுறு மகவான் மாதோ.

(இ-ள்.) இந்திரனும் விருத்திரனுமாகியவிருவரும் யுத்தஞ்செய்த போதுவிருத்திரனுப்பிய மின்னல், இடி ஆலங்கட்டிமழை, மூடுபனி முதலிய மாயைகளெல்லாம் இந்திரனையடையவில்லை. தனவானுகிய விந்திரன் நிலைபெற்றவெற்றியையடைந்தான்—(எ-று.) ஆலம்=ஆலங்கட்டி.

14. இந்திர வகியைக் கொன்ற பின் னெவன் பழியை வாங்க
வந்தனன் கண்டாய் நீயு மனத்துறு பயத்தை மேவி
யுந்துற வொழுகு மொன்று தொளைத்த நூறுற்று நிசை
யந்தர மோடுஞ் சேன மாமெனத் தாண்டினையே.

(இ-ள்.) இந்திரனே! விருத்திரனைக்கொன்றபின் மனத்திற்றோன்றிய பயத்தோடு எவன் பழி வாங்க வந்தவனைப்பார்த்தாய்? (ஒருவரும் வரவில்லையே யென்றபடி.) ஆகாயத்தில் பருந்து பறந்துசெல்லுவது போலத் தொண்ணூற்றொன்பது ஆறுகளின் தண்ணீரையும் ஏன் தாண்டினாய்? —(எ-று.)

15. தாவர மன்றிச் சாதுத் தன்மைசார் சங்கமக்கு
மேவுறு கொம்பின்மாக்கும் விளங்கிய விறையாம் வேந்த
னேவலு மாரம் வட்டை யுள்ளுற லேயக் கையிற்
பாவலுருளிசன்மாந்தர்பாவச்செங்கோன்மைகொள்வான்.

(இ-ள்.) தாவரங்களுக்கும் சங்கமங்களில் (கொம்பில்லாத) சாதுப் பிராணிகளுக்கும், கொம்புள்ள (எருமைமுதலிய) துஷ்டமிருகங்களுக்கும், அரசனும் வச்சிரபாகுவுமான விந்திரன், வட்டைக்குள்ளடங்கிய ஆரக்கால் போலுள்ள எல்லாமாந்தருக்குங்கூட அரசனனன்—(எ-று.)

வருக்கம் 38.

ஆகச்செய்யுள் 383.

2வது அத்தியாயம் முற்றும்.

மண்டலம் 1. சூக்தம் 33.

3வது அத்தியாயம்.

இவ்வத்தியாயத்தில் 35½வருக்கமும், 14 சூக்தமும், 173 இருக்குக்களுமுள்ளது.

33. மண்டலம் 1. அநுவாகம் 7. சூக்தம் 3.

15 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஹிரண்யஸ்தூபன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. பசுப்பெறு மாசை யோடு வருக; யாமடைவோம் வேந்த
னிசையுறு மிடத்தை; யன்ன னெமது நன்மதியைத் தூக்கி
யிசையுக; யிடர்ப்படாதா னவ னிருந்தனமா மாவின்
மிசையுறு பரம ஞான வுணர்வினை வளர்க்கின்றனே.

(இ-ள்.) (தேவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள்) (தேவர்களே!) (பணியென்னு மசரனுலபகரிக்கப்பட்ட நமது) பசுக்களை யடையு மிச்சையோடு வாருங்கள். (உங்களோடுகூடிய) யாங்கள் இந்திரனிருக்கு மிடத்தை யடைவோமாக. அவ்விந்திரன் ஒருவராலும் இம்சிக்கமுடியாதவனுய் நமது புத்தியை நன்றுய் ஒங்கச்செய்கிறன். பிற்பாடு அவன் செல்வமாகிய பசுவிஷயமாய் வேண்டிய சிறந்த ஞானத்தை நமக்கு அதிகமாகத்தருகிறன்.—(எ-று.)

2. போரினி லுதவிவேண்டித்துதிப்பவர்போற்றும்வேந்தன்,
யாரெனும்வெல்லவொண்ணு,னிசைப்பவன்றன,மின்னன்மாட்
டேருறு முவமை சாற்ற விசைந்த பல்லிருக்கினேடு
சீருற விசைவேன் கூட்டைத் தேடிச் செல் சேனமொத்தே.

(இ-ள்.) யுத்தத்தில்உதவியைவிரும்பித்துதிப்பவர்கள்ஸ்தோத்திரஞ் செய்பவனும், ஒருவராலும் வெல்லமுடியாதவனும், செல்வத்தைத்தருபவனுமாகிய இந்திரனிடத்து,எடுத்துக்காட்டாகக்கூறக்கூடிய பல மறைகளோப் பாடிக்கொண்டு, கூட்டைநோக்கிச்செல்லும் பருந்துபோலவிரைவாகப்போவேண்—(எ-று.)

3. சேனைகள் யாவுஞ் சூழச் சுவலினிற் றூணி யாத்துத்
தானனித்திடவே சாமி யென்னு மன்னன்மாட் டோங்கு
மானிசை; யோக்கம் வாய்ந்தோ யிந்திர வழகிற் பூரி
யானனித் தெம்மாட் டோரி யாடல் மூளியமும் வேண்டல்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 3.

(இ-ள்.) சேனைகளெல்லாஞ் சூழப் பின்பக்கத்தில் அம்புப்புட்டி லைக்கட்டிக்கொண்டு சுவாமியாகிய இந்திரன் யாருக்குப் பசுத்தானஞ்செய்ய விரும்புகிறானே அவனிடத்தில் பசுக்கூட்டந்தங்கும். விருத்தியோங்கின வனே! இந்திர, மிகுந்த பசுத்தனத்தை யெங்களுக்குச் சேர்ப்பாயாக. எம் மாட்டுவியவகாரஞ் செய்யற்க. பசுக்களுக்களுக்குப் பணமும் விரும்பற்க. — (எ-று.) ஒரியாடல் நிசைச்சொல்.

4. இனத்தவர் சூழ்ந்து நின்று மேகனை யிந்திரா நீ
கனத்தினல் வளமிகுதத கள்வனைக கண்டித்தா யுன்
றனத்தினை யழிக்க நானு திக்கினுஞ் சார்ந்த யாக
மினைத்தவர் சனகர் சாவை யெய்தியே மடிந்திட்டாரே.

(இ-ள்.) (சமீபத்தில் எப்போதும் போய்க்கொண்டிருக்கும்) இன த்தவர்கள் (மருத்துக்கள்) உன்னைச் சூழ்ந்து நிற்கவும், இந்திரனே, நீ தனி யாகவே உனது கடினமான வச்சிராயுதத்தினல் செல்வமிகுந்த தஸ்யுவாகிய விருத்திரனையடித்துக்கொன்றாய் உனதுசெல்வத்தைக்கெடுக்க நாலாபக்கத் திலும் வந்த யாகசீலமில்லாதவராகிய ஸநகர் (விருத்திரனது கூட்டத்தார்) மரணமடைந்தார்கள் (எ-று.) இனத்தவர்=இந்திரனைச்சூழ்ந்து எப்போ தஞ் செல்லுமருத்துக்கள். கனம்=வச்சிராயுதம் ஸநகர்கள், விருத்திராசு ரனுடைய தோழர்கள்.

5. நிலைத்துப் போர்நிறுத்தும் வேந்தே நீளரி யூர்திச் சூர!
மலைத்து நல்லோழுக்க மில்லோர் வான்புவி யந்தரத்தி
னிலைத்தறு தோட்டி விட்ட நிமிடத்தி லவர்தாங் கன்ம
வுலைப்பரும் பெரியார் தம்பான் முகங்கொடா தோடினரே.

(இ-ள்.) யுத்தத்தில் ஓடாமல் நின்று போர்செய்யும் இந்திரனே! ஹரியென்னும் பேரை வகித்த குதிரையிரண்டையும் வாகனமாகவுடையவ னே! உக்கிரனே! ஸ்வயமாக யாகவொழுக்கமில்லாதவர்கள் வானம் பூமி யந்த ரமென்னுமிடங்களில் நிலைத்துறுதபடியுத்தஞ் செய்து ஓட்டிவிட்ட அப் பொழுதே ஸத்கர்மிளாகிய பெரியோர்களிடத்து முகத்தைக்காட்டாதபடி யோடிப்போனர்கள்—(எ-று.)

வருக்கம் 1.

6. குற்ற மில்லவன்றன் சேனை குறித்தவ ரெழுந்த காலி
யித்தரை நவக்குவர்தாம் பலமறை யெடுத்திசைக்க
வற்றதை யோர்ந் தரியி னகன்றனர் குறுங்கு மார்க்க
முற்ற வாண்மையருக் காற்று தோடும் வந்திரிய சொத்தே.

மண்டலம் 1. சூக்தம் 33.

(இ-ள்) (விருத்திராநுசரர்கள்,) குற்றமற்றவிந்திரனது சேனையோடு யுத்தஞ்செய்யவெண்ணியபோது இப்பூமியிலுள்ள மனிதர்களாகிய ஆங்கிரஸ் வம்சத்து நவக்வர்கள் (இந்திரன் ஜயிப்பதற்குவேண்டிய) பலமந்திரங்களையும் எடுத்துப் பாடி யவனுக்கு உத்ஸாகத்தை மூட்டினர்கள். தாங்கள் வலியற்றுப்போனதை (அவ்விருத்திரனது ஆள்கள்) எண்ணி ஆண்மைக்கரீயர்களுக்காற்றாது ஓடும் சண்டர்கள்போல, (லகுவாக ஓடிப்போகக்கூடிய) குறுக்கு மார்க்கத்திலிரங்கி இந்திரனை விட்டு ஓடிவிட்டார்கள்-- (எ-று) நவக்வர்கள் ஒன்பதுமாதத்தில் ஸத்ராயாகத்தைச்செய்து அதன்பலனையடைவிப்பவர்கள். இங்ஙவக்வ, தசக்வ பேதத்தை மண்டலம் 5. சூக்தம் 29. ரிக் (செய்யுள்) 12ல் பார்க்க. வந்திரியர் சண்டர் மண். 1. சூக். 32. ரிக்(செய்யுள்) 7ல் பார்க்க. நிலர்க்கஷண்டோ வத்ரிச்ச' என்று ஸ்மிருதியில் உபயோகப்படுவதையுங் காண்க.

7. அழுதனர் நக்கா ரேனு மந்தரப்புறத் தன்னுர்தாம்
பழுதுறப் போரிற் ரோற்றுப் பறந்திட வடித்தாய் வேந்தே
தொழுது சோமஞ் சொரிந்து தோத்திர மியம்புவாரைப்
பழுதறக் காத்தாய் விண்ணிற் ருரனே நன்கெரித்தே.

(இ ள்.) இந்திரனே! விருத்திரனது பரிஜனங்கள் அழுதுகொண்டிருப்பினுஞ் சிரித்துக்கொண்டிருப்பினும், அந்தரிட்சலோகத்துக்கப்புறத்தில் யுத்தஞ் செய்தவர்களைத் தோற்ரோடும் வண்ணம் அடித்தாய்: விண்ணிடத்தில் தஸ்யு (கள்வன்) வாகிய விருத்திரனைக் கொன்ரூய்; பின்பு ஸோமாபிஷவஞ் செய்பவர்களையும் ஸ்தோத்திரஞ்செய்பவர்களையும் காப்பாற்றினாய்—(எ-று.)

8. பொன்னெடு மணியி னான நகையினைப் புனைந் தன்னுரு
மன்னுற வெங்கு மூடி மகிதலத்தனின் விரைந்தா
ரென்னினு மரியை வாட்டி மெழிலிலராகி நின்ரூர்;
துன்னிய தீமையோரைச் சூரனு லவ னுணர்ந்தான்.

இ-ள் பொன்னலும் ரத்நாபரணங்களாலு மலங்காரஞ் செய்துகொண்டுள்ள அவர்கள் (விருத்திரனது சேவகர்) எல்லாப்பக்கத்திலும் மூடிக்கொண்டு பூமியில்வந்து சேர்ந்தார்கள். என்ரு லும் இந்திரனச்சயிக்கும் ஆற்றலவர்களுக்கில்லை. அத்தீமையோர் வந்துள்ள சங்கதியை இந்திரன் சூரியனுற் றெரிந்துகொண்டான்— எ-று.) ஆதித்யோஹ்யேவோத்யந் புரஸ்தாத்ரக்ஷாம்ஸ்யபஹந்தி. தைத்திரீயப்பிராஹ்மணம்; சூரியன்கிழக்கேயுதிக்கும்போது ராக்ஷஸர்களைத்துரத்துகிரூன் என்பது.

9. இந்திர பூமி வான மிரண்டினும் பொருந்தி யுன்றன்
சுந்தர மகிமை யெங்குந் துலங்கவே புகிக்குங் காலை
மந்திரப் பொருளோ தாது பாடுவோ ருணர்ந்தோ ரின்னார்
மந்திரங் கொண்டு சோரன் மறைவுறக் கொன்ரு யன்றே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 3

(இ-ள்.) இந்திரனே! பூமி, வானம் என்னும் இரண்டிலும் பொருந்தி எல்லாப் பக்கத்திலும் உன்மேன்மை தோன்றும்படி யாவருங் கொடுக்கு மவிப் பாகத்தைப் புகிக்கும்போது (யாகத்தையழிக்கும்போது என்றபடி,) மறைப்பொருளை யுணராது பாடுவோரது மந்திரங்களையும் மறைப்பொருளையுணர்ந்து (இவ்யஜமானன் இம்மறையினாற் காக்கப்படத்தக்கவனென்றபிமானித்துக்கூறுவோரது மந்திரங்களையுங் கேட்டு தஸ்யு(கள்வன்)வாகிய விருத்திரனை நாசமாக்கினாய்—(எ-று.) அமங்யமாநா ஸபிமங்ய மாநைः என்பதற்கு வணங்குவாரோடு வணங்காதவரென வேறு விதமாக உரை கூறுவார் மேனாட்டாசிரியர். அது பொருத்தமின்மை யுணர்க.

10. விண்ணின்றும் பூமிமீது மேகநீர் பெய்யாதாக
வெண்ணின்ற செல்வப் பூமி யெங்கு மாயையினாற் சூழா
துண்ணின்று வாட வேந்த, னுடன் மழை தருவோன், சம்ப
மொண்ணின்றதெடுத்திருட்டுமேகநீர்க்கறந்தான் முற்றும்.

(இ-ள்.) விண்ணிடத்திலிருந்து பூமியில் (விருத்திரனால் தடைசெய்துவைக்கப்பட்ட) மேகநீர் பெய்யாததனால் செல்வந்தரும் பூமி (செடி கொடிகளாகிய) மாயையினாலெங்குந்தழைக்காமல் வாடிப்போயிற்று. விருஷ்டி சாமர்த்தியனான விந்திரன் பிரகாசமுள்ள சம்பத்தைக் (வச்சிராயுதத்தை) கையிலெடுத்து இருட்டுமூடியிருந்த மேகத்தின்நீரையெல்லாங் கொஞ்சங்கூடவிடாமற் (பசுவைப் பால் கறப்பது போலக்) கறந்துவிட்டான்—(எ-று.) இவ்விருக்கை மேனாட்டாசிரியர் வேறொருவகை மொழிபெயர்ப்பர். அதுவருமாறு.

உலகின திறுதிகாறு முலவிய வன்னர் செல்வ
மிலகுற வீகுவானை மாயையாற் றெறுத்தா ரல்லர்;
சலமுறு மசனி கூட்டி யிந்திரக் காளை சார்ந்த
வெளியினு லிருட்டி னின்ற வாகனைக் கறந்து வத்தான்.

இடியினால் மேகத்தைப்பிளந்து சலத்தைப் பிரவஹிக்கச் செய்கிறான் என்றபடி.

வருக்கம் 2.

11. அன்னவ னளிக்கு மன்னப் பயிரின்கண் மழையுமேகத்
தன்னுறு நாவா யோடு நீர்நிலைகளிற் பெருத்தான்;
மன்னிய வலிமிகுத்த வச்சிரந்தன்னால் வேந்த,
னன்னவற்றோடு செல்லுங் கருத்தனைக், கொன்றனன்றே.

(இ-ள்.) அவ்விந்திரன் நெல்லும் (நெல் முதலிய) அன்னப்பயிர்களை நோக்கி மழைநீர் செல்லத்தொடங்கிற்று. கப்பல்கள் நிறைந்து பெருமை வாய்ந்த நீர் நிலைகளில் விருத்திரன் (ஜலாபிவிருத்திரூபமாகப்) பெருத்து நின்றான். இந்திரனே வலிமையதிகமுள்ள வச்சிராயுதத்தினால், அந்நீரோட்டங்களோடு ஓடியுறையுங் கருத்தமைந்த விருத்திரனை அந்நாளிலேயே கொ

ன்று தீர்த்தான்—(எ-று.) மேனட்டாசிரியர் இவ்விருக்குக்கும், நீரைத் தந் நீர்மையோடு நிலையின்றி யொழுகிற்றுகத், தாருறு நதிகளுவாய் சார்வன நாப்பணேங்கி, யேருற வளர்ந்தான் பின்ன ரிந்திரனவனே யோர்மை, சே ருநன்மனத்தின் மிக்கவலிசெறி கனத்தாற் கொன்றான் என்று மொழி பெயர்ப்பார். கனம் வச்சிராயுதம்.

12. பிலமுறு மவன்றிடத்த நீரரண் பிளந்தே, வேந்தன்
பலமுறு கோட்டுச் சுட்டினன்றனப் பலதுண் டிட்டான்;
நலமுறு மகவா, னெவ்வெவ் வேகமும் பலமுஞ் சார்ந்த
வலனுளாய், போர்க்கண் வச்சிரத்தினுற் பகைவனைத்தாய்.

(இ-ள்.) பிலத்துத் தூங்கு மவ்விருத்திர னடைத்துவைத்திருந்த அளவுமிருந்த நீராகிய கோட்டையை இந்திரன் பிளந்து பலம் பொருந்திய கொம்போடு கூடியசுஷ்ணனைக்கண்டதுண்டமாக வெட்டினன். நல்லதனத் தோடுகூடியவனே! எல்லாவிதமானவேகத்தோடும் பலத்தோடுங்கூடியவிந்தி ரனே! யுத்தத்தில் வச்சிராயுதத்தினுல் பகைவனைக் கொன்றாய்—(எ-று:) இலீபிசன், பிலத்திற் படுத்திருப்பவனென்பார்யாஸ்கர். சாயணர் மதப்படி இலீபிசனென்னும் பதமும், சுஷ்ணன், என்னும் பதமும் விருத்திரனையே குறிக்கும். சுஷ்ணன் மேல் சூக்தம் 11. 7வது செய்யுளரையைப் பார்க்க. இவனுக்குப் பசு எருமையிவற்றிற்குப்போல கொம்புண்டு. இக்கொம்பு பலத் தின் அறிகுறியென்பார் மேனட்டாசிரியர் (Griffith.) இவ்வகை (Hebrew) ஹீப்ரூ கவிதைகளிலும் வருவதுண்டென்று கூறுவார். இப்பாட்டில் முத லிரண்டடி படர்க்கையாகவும் பின்னிரண்டடி முன்னிலையாகவும் கூறியுள்ள தைக் கவனிக்க.

13. இந்திரன் குலிச மொண்ணு ருட லிலக்கெய்திச் சென்ற
தந்தி லின்னுர் புரத்தைக் கூரிய விடைகொண் டன்னு
னந்தர மாக்கினுனல்; வச்சிரத்தா லடிததே
யுந்தினு னகியை யுள்ளக் கழிமகிழ்வோங்கினனே.

(இ-ள்.) இந்திரனுடைய சாதனமான வச்சிராயுதம் பகைவர்களு டைய உடலத்தனக்கிலக்காகக் கொண்டு சென்றது; இந்திரனும் அவனது கூர்மையான விருஷபம் (ஈண்டு வச்சிராயுதம்) கொண்டு விருத்திராதிக ளின் கோட்டைகளை யழித்தான்; பிறகு விருத்திரனைத் தனது குலிசத்தாற் கொன்று உள்ளத்தினிடத்துப் பெரு மகிழ்ச்சியையடைந்தான்—(எ-று.) விடை விருஷபம், வச்சிராயுதம்.

14. தந்தி விழைந் தேதத்துங் குற்சற் கிந்திர தூணையாய்நின்ரு;
யதிருணக் காளையான தசத்தியு போரைக் காத்தாய்;
கதிகொடு செலுமுன் பாய்மாக் காற்றுகள் வானளாவும்;
மதிகொடுசிவைத்திரேயனுண்மையோடெழுந்தானீர்மேல்.

(இ-ள்.) இந்திரனே! ஸ்தோத்திரஞ் செய்யுங் குத்ஸனென்னும் ரிஷிக்கு உதவி செய்தாய்; (பத்துத் திக்கிலும் பிரகாசிக்கும்) தசத்யுவென்

அஷ்டகம் 1. அத்தியாயம் 2.

னும் இருடியை யுத்தத்திற் காத்தாய்; வேகமாய்ச் செல்லும் உன் குதிரை களினது காலின் தூளி விண்ணை யெட்டும்; (முன்பு சத்துரு பயத்தினால் நீருக்குள் முழுகிக்கிடந்த (சிவித்திரையின் மகனுகிய) சிவைத்திரேயன் ஆண் மையோடு ஜயம்பெற மீண்டுந் தண்ணீரின் மேல் தோன்றினான்—(எ-று.) குத்ஸன் அங்காமம் பொருந்திய கோத்திரத்துக்கு முதல்வன். இந்திரனுக்கு அதிகப்பிரியமானவன் பின்னர் 94, 106, முதலிய சூக்தங்களைக் கண்டவன்.

15. சிவித்திரைமகனைச்சாந்தந்தோய்ந்தகானையினைச்,செல்வங் குவித்தவ, காத்தாய் நீர்க்குட் குவலயம் பெறுமா றன்னான்; றவித்தவ னீண்டகாலந் தங்கியே பொருதார், மற்று மவித்தணபகையைத்; துன்னார்க் கவதியையடைவிப்பாயே.

(இ-ள்.) தனமிகுந்த விந்திரனே! வெகு சாந்தஸ்வ ரூபம் பொருந் திய குணக்கானையாகிய சிவித்திரேயனைப் பூமியைப் பெறுமாறு தண்ணீ ருக்குள் நன்றுகக் காத்தாய்; வெகு காலம் அவ்விடத்தில் எங்களோடு அவர்கள் யுத்தஞ் செய்தார்கள் அச்சத்துருக்களைக் கெடுத்தாய்; பகைவர் களாகிய அவருக்கு வேதனையை யுண்டுபண்ணுவாயாக—(எ-று.) துக்ரியாஸு என்னும் வடமொழிப்பதத்துக்கு மேனுட்டார் பொருள் மாறுட்டஞ்செய்து இடர்ப்படுவர். எவவெச்சாதியாரது பாஷைக்கும் அவ்வச்சாதியாரே பிராம ணமாவாரென்னுஞ் சிறு, உண்மையை மறந்து, துக்ரியா, பர்புரமித், யுதகநாமஸு படிதத்வாத், என்னுஞ் சாயணருரையை நம்புவதற்கு இஷ்ட மில்லாமல், தங்களுக்குத் தோன்றியவாறு பொருள் கூறுவார். இவரது பெருமைதானென்னே! (Benfey) பென்வே யென்பவர் துக்ரியாஸு என் பதற்கு துக்ரானது பெண்களுக்கு மத்தியிலென்று பொருள் கூறுவர். ஸையின்ட் பீட்டர்ஸ்பர்க் லெக்ஸிகனில் (பக்கம் 2 பாட்டு 3 உரையை நோக்குக.) இப்பதத்துக்குத் துக்ரியர்களது குடும்பங்களில் என்று உரை யெழுதி யுள்ளது துக்ரன் வீடுகளில் என்பார் மேனுட்டாசிரியர். (Vide Griffith's Hymns of The Rig-Veda page 47.)

வருக்கம் 3.

34. மண்டலம் 1. அநுவாகம் 7. சூக்தம் 4.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஹிரண்யஸ்தூபன்; வடமொழிச்சந்தம்: ஜகதி, 9ம், 12ம், த்ருஷ்டுப்; தேவதை: அச்வினிகளிருவரும்.

1. மேன்மையுளஞானியராமச்சுவினித்தேவர்காள்! மேவி மூன்று பான்மையுறுமெக்கியத்தும்பரிந்துறுக;தேரீகைபரந்தோர்வீர்; சான்றகதிர்ப்பேர்க்கிழமையினையிரவோடொன்றுபெறச்சாற்றல் போலத் தோன்றுமுமதருந்தொடர்பு;மேதையமெம்முருகிலுமைத்தோய்விப் பாரே.

மண்டலம் 1. சூக்தம் 34.

(இ-ள்.) மேதாவிகளாகிய அச்வினி தேவர்களே! ஸவனத்ரயத்திலும் வருவீர்களாக. உங்களது தேரும், உங்களது தானசீலமும் மிகப் பெரிய வையாம்; சூரிய கிரணங்களே யுணர்த்தும் வாஸரம் என்னுஞ் சொல் பனி மிகுந்த விரவினையுந் தன்னோடு கூட்டியுணர்த்தல் போன்றது உம்மிருவரது பாஸ்பர ஸம்பந்தமும். மேதாவிகளாலமைக்கப்பட்ட நீங்களெமதருகில் அதிசிரகஞ்செய்யும்வண்ணம் எங்களுக்கு ஆதீனப் பட்டவர்களாயிருங்கள் —(எ-று.) நீவிர் தேர் பரந்தோர் ஈகைபரந்தோர் எனத் தனித்தனியே கூட்டுக.

2. சந்திரன்றன்மனைவியினாடியுறுமதுச்சகடச்சக்கரங்கள்
மந்திரங்களுணர்யாருமூன்றெனவேமதித்தோர்வார்; மற்றத்தேரி
னந்தறுதூண்மூன்றுளகீழ்வீழ்பயமுநோதே; நலக்கநீரு
மந்தமதா யூர்ந்திரவுமூன்றுபகன்மூன்றுமுறை யணைகுவீரே.

(இ-ள்.) மதுத்திரவியங்களைச் சுமந்து செல்லும் தேரினது (வச்சிரம் போற்றிடம் வாய்ந்த) சக்கரங்கள் மூன்றும். அம்மூன்று சக்கரங்களுள்ள தேரின் மீது அத்திரவியங்களோடு சந்திரனது மனைவியை நோக்கி அசுவினியர் செல்வதை எல்லாத் (தேவர்களும்) அறிவார்கள். அத்தேர் வேகமாகப் போகும்போது கீழ் விழுந்து விடுமோ வென்ற பயம் ஏற்படாதபடி அத்தேரில் மூன்று கம்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அசுவினிகளே! அதன்மேல் நீங்களும் மூன்று இரவும் மூன்று பகலும் ஊர்ந்து வருவீர்களாக. (பகலுமிரவுமாகத் தேரிலேறிக்கொண்டு மீண்டும் மீண்டுங் கிரீடியுங்கள் என்றபடி.)—(எ-று.) இம்மனைவியின் பெயர் ஜ்யோத்ஸ்நா அல்லது கௌமுதி யென்பார் மேனுட்டாசிரியர்.

3. அசுவினிர்நீரிருவீருஞ்சமமாகவொருநாளிலதசுமூன்றின்
வசையையெலாமகற்றிடுக; வித்தினத்துமகவவியைமதுரச்சாற்றே
டிசையும்வகையமைத்திடுக; விரவுபகல்வலிமைதனையென்றுமூட்டி
முசிதவுணவெந்தமக்குநனிவீளவினுறுமாறிங் குவந்தீவீரே.

(இ-ள்.) அசுவினி தேவர்களே! நீங்களிருவரும் சமானமாக வந்து மூன்று நாட்களிலுஞ் செய்த ஸவனத்திரயங்களி லேற்பட்ட குற்றங்களெல்லா மொருநாளிற்றீர்த்து விடுவீர்களாக; இந்நாளிற் செய்யும் யக்ஞஹவியை மதுரரஸத்தால் தெளியுங்கள்; இரவிலும், பகலிலும் எங்களுக்குப் பலத்தை விருத்திசெய்யும் அன்னப்பொருள்களை நன்றாகத் தருவீர்களாக —(எ-று.)

4. மூன்றுமுறையெம்மகத்தேவருக;நோன்பாற்றுவர்க்கண்மும்மை
செல்க;
மூன்றுமுறைமூன்றுதரமும்மருளுக்குகந்தவர்க்குமுயக்கல்சிட்சை;
மூன்றுமுறையெமக்குவப்பையளிப்பவற்றையசுவினிகாள்,
மூன்னரீக;
மூன்றுமுறையட்சரங்களென்னவுணவெங்களுக்குமொய்ப்பிப்பீரே.

(இ-ள்.) அசுவினி தேவர்களே! எமது கிரஹத்துக்கு மூன்று முறை வருவீர்களாக; விரதாநுட்டானஞ் செய்பவர்களிடத்து மூன்றுதரஞ்

அஷ்டகம் 1. அத்தியாயம் 3.

செல்லுவீர்களாக; உங்களால் காக்கப்படும் ஜனங்களுக்கு மூன்று தரம் மூன்று முறை (ஒன்பது முறை) சிட்சை சொல்லுவீர்களாக; எங்களுக்கு ஸந்தோஷத்தைத் தரக் கூடியவற்றை அளியுங்கள். பர்ஜன்யன் (மேசம்) திருப்தியைத்தரும் உதகத்தை (அப்சரங்களை) யளிப்பது போல நீங்களும் எங்களுக்கு உணவுப்பொருள்களை நிறையத் தருவீர்களாக—(எ-று.) அப்சரங்கள், உதகத்தைக் குறித்தது.

5. மூன்றுமுறையசுவினிகாளெங்களுக்காத்தனந்தாங்கிமுன்னே
தோன்றல்;
மூன்றுமுறைவரலமர்கன்மத்;தெம் மதிவளர்ப்பீர்மூன்றுநோரம்;
மூன்றுமுறைவாழ்வளிப்பீர்; மூன்றுமுறைச்சீருணவைமுயன்று
சேர்ப்பீர்;
மூன்றருளேமேலொழுகுமும்தேரிற்சூரன்மகள் மூந்துற்றாளே.

(இ-ள்.) அசுவினி தேவர்களே! மூன்று தரமெங்களுக்கு வேண்டிய செல்வத்தைச் சுமந்து கொண்டு வாருங்கள்; மூன்றுமுறை தேவர்களமர்ந்திருக்கும் கர்மத்தை நோக்கி வருவீர்களாக; மூன்று நோரமும் எங்கள் புத்தியை இரட்சிப்பீர்களாக; மூன்று தரம் எங்களுக்கு ஸௌபாக்கியத்தைத் தருவீர்களாக; மூன்று தரம் அன்னப் பொருள்களை எங்களுக்குச் சேகரித்துக்கொடுப்பீர்களாக; மூன்றுசக்கரங்களோடுகூடியுள்ள உமது தேரின்மேல் சூரியனது புத்திரி நன்றாக ஏறிக்கொண்டாள்—(எ-று.) சூரியன் தனது பெண் ஸூர்யையை ஸோமனுக்குக் கொடுக்க விரும்பினான். ஆனால் எல்லாத் தேவர்களும் அவளை மணக்க விரும்பினர்கள். அதனால் ஒரு பந்தய ஓட்டம் ஏற்படுத்தப்பட்டது. முதன் முதல் சூரியனிடத்து யார் செல்லுகிறாளவனே ஸூர்யையைக் கல்யாணஞ் செய்து கொள்வதென்றாயிற்று. அசுவினிகள் முதலிற் போகவே சூரியை சந்தோஷப்பட்டு அவர்களது தேரின் மேலேறிக் கொண்டாள். மண்டலம் 1, சூக்தம் 116 செய்யுள் ஏழிற்காண்க. இதன்மேல் பிரஜாபதி தனது மகளைச் சோமனுக்குத் தந்தான் என்ற விஷயம் ஐதரேயப் பிராஹ்மணத்தில் அதிகமாகச் சொல்லப்படுகிறது. அப்பிரஜாபதியின் புத்திரியின் பேரும் சூரியை யென்பார் மேஞ்ட்டாகிரியர். (Vide Griffith's Hymns of The Rig Veda second edition Vol. 1 page 154.) துஹிதா = துர்ஹிதா, தூரேஹிதா—யாஸ்கர் தூரவிருந்து நன்மை செய்பவள் பெண் என்பது பொருள்.

6. மூன்றுமுறையசுவினிகாள்வானுறையுமருந்துகளு, மொய்த்துப்பூமி
யூன்றிவளரௌடதமு, மம்புவினின்வினங்கிநோயொழிக்கும்பூடு
மேன்றெமக்குத்தருக;சுரர்குருபுதல்வன்சுகமதனேயையைக்க
வென்றன்
றேன்றலுக்குச்; சுபப்பதிகாள்! முத்தாதுமுறைகடவாச்சுகமீவீரே.

(இ-ள்.) அசுவினி தேவர்களே! எங்களுக்கு வானத்திற் காணும்பேஷஜங்களையும், பூமியில் வளருமௌஷதங்களையும் அந்தரிட்சத்தில் (தண்ணீரில்) உண்டாகும் மருந்துகளையும் மூன்று தரம் தருக; தேவ குருவின் புத்திரனாகிய சும்யு வதுபவிக்கும் சுகத்தை என்புத்திரனுமடையும்படி செய்க; சுபப்பதிகளே! வாதபித்த கிலேஷ்மங்கள் முறை கடவாதொழுகும் தேஹத்தை யளிப்

மண்டலம் 1. சூக்தம் 34.

பீர்களாக—(எ-று.) சம்யு தேவகுருவாகிய வியாழனின் புத்திரனின் பெயர் னன்பார் சாயணர்.

வருக்கம் 4.

7. மூன்றுமுறையசுவினிகாள், தினந்தோறுமெம் போற்றுறுவீர்,
மூன்றுதாது
தோன்றும் வகைவேதிகையிற் பிரித்தமைத்த தருப்பையினிற்
றேய்ந்துபள்ளி
யேன்றுறுவீர்;பொய்புகலீ,ராத்துமாவுடலுறுவாரெனன்றுஞ்செல்லுஞ்
சான்ற வுயிர்வாயுவெனத்,தேருடையீர்,முவ்வேதி சார்குவீரே.

(இ-ள்-) அசுவினிகளே! பிரதினமும் மூன்றுதரம் வணங்கத் தக்க நீர் எங்களது வேதிகையில் எல்லாப் பக்கத்திலுமடைந்து, மூன்று தாதுக்களைச் சிறப்பிக்கும் வண்ணம் பரப்பப்பட்டுள்ள தருப்பையிற் சயனஞ் செய்வீர்களாக. நாஸத்தியர்களே! ரதஸ்வாமிகளே! பிராணிகளுடைய சரீரத்தில் ஆத்மா வசிப்பதற்குக்காரணமான பிராணவாயு தூரத்திலிருந்து வருவது போல (ஔஷ்டிக, பாசுக, ஸௌமிக) வேதிகள் மூன்றினிடத்தும் சேருங்கள்—(எ-று.)

8. சிந்துக்களேழ்தாயர்மூன்றுமுறையசுவினிகாள்சேர்ந்துமூன்று
நந்துமுறைச்சுதைபிழிக;சோமமதையேற்பனவுநாடிற்கூபம்
பிந்தவொளிர்முக்கலமாம்;புவிமுதலாமிடமூன்றுப்பேசுந்தான
வந்தரத்துச் செல்லுவீரிரவுபகலாக்க வினனமைத்திட்டீரே.

(இ-ள்;) 'இமம்மேகங்கா' வென்ற மறையினற் கூறப்பட்டு ஓட்டத்திற் சிறந்த நதிகளாகியஏழு தாய்மாரோடுங்கூடி, மூன்றுமுறை, யசுவினி தேவர்களே! ஸோமாபிஷவஞ் செய்வீர்களாக; அச்சோமத்தை யேற்கும் பாத்திரங்கள் கூபங்களென்னும்படி பெருத்த மூன்று கலங்களாம்; பிருதிவி, வானம், நீர் என்னும் மூன்றிடத்தின்மேலுஞ் செல்லும் நீங்கள் இரவு பகல் பேதத்தை யுண்டு பண்ணச் சூரியனை யமைத்துக் காப்பீர்கள்—(எ-று.) இமம்மே கங்காவென்றதுமேல் மண். 1, சூ. 32, செய். 12ல் சொல்லப் பட்டது. இனன், சூரியன்.

(வேறு.)

9. மூலைமூன் றுடைய தேரின் முவ்வருளைகளு மெங்கே?
மூலைமூன் றமைத்த பீட மமர மூட்டியவை யெங்கே?
யேலுறப் பொய்சொலாதீ ரெக்கியஞ் சேர்த்தற் கும்மை
வாலுறத் தேரி லென்று வாலேபம் பூட்டு வீரே.?

(இ-ள்.) நாஸத்தியர்களே! மூன்று கோணங்களையுடைய உமது தேரின் மூன்று சக்கரங்களுமெங்கே? அம்மூன்று பக்கங்களிலு மூட்காரு வதற்கென்று அமைத்த மூன்று பீடங்களுமெங்கே? உம்மை யாகதல்த் திற்குக் கொண்டுவரும் தேருக்கு எப்போது கழுதைகளைப் பூட்டப்போகிறீர் கள்?—(எ-று.) இவ்விஷயங்கள் எங்களுக்குத் தெரியவில்லை என்றபடி.

அஷ்டகம் 1. அத்தியாயம் 3.

(ஷ வேறு.)

10. பொய்யாதநாவுடையீர்போந்தருள்க; வவியுமக்குப்புகட்டுகின்றேறு;
மெய்யாதுமதுப்பருகிச்சுவையுணரும்வாயிலுலித்தீம்பாலைத்,
தெய்யோரே,குடித்தருள்க;விடியுமுனர்விசித்திரத்துந்தூயதேரை
நெய்யோடுபூசியெமதெக்கியத்துக்கனுப்புகிறுன்சவிதாநேடி.

(இ-ள்.) நாஸத்தியர்களே! (இக்கருமத்தை நோக்கி) வருவீர்களாக. இங்கே ஹவி எங்களால் உமக்களிக்கப்படுகிறது. மதுவைப்பருகி ருசியறியும் வாயோடு இத்தித்திப்பான மதுவைக் குடியுங்கள்; ஸவிதாவானவன் விடிவதற்கு முன்னரே (மேல் 9ம் பாட்டிற்சொன்ன) விசித்திரங்களோடு கூடியதும், நெய் பூசப்பட்டதுமான தேரை எங்களது யக்ஞத்துக்கு வரும்படி பிரேரேபிக்கிறுன்—(எ-று.) எய்யாது; துய்யோரே எதுகை நோக்கிச் சேர்த்தன.

11. பொய்யாமூர்!புகன்மூன்றுபன்னென்றுதேவரொடுபொருந்தித் தேனை
யெய்யாதருகுடிப்பதற்குப்போந்தருளீர்;ரசுவினிரெம்மாயுணீட்டூர்;
பொய்யாதியெம்பாவமொன்றுமிலாதழிப்பீராற்;பூண்டகாய்ப்பி
னெய்யாரையோட்டிவீர்;ரெம்மாட்டுநிரந்தரமாயியைகுவீரே.

(இ-ள்.) நாஸத்தியர்களே! முப்பத்து மூன்று தேவர்களோடுஞ் சேர்ந்து ஸோமத்தைக் குடிக்க வாருங்கள்; அசுவினிகள், எமதாயுஷ் காலத்தை விருத்தி செய்வீர்களாக; துவேஷ புத்தியோடு காரியஞ் செய்பவர்களை யோட்டுவீர்களாக; எப்பொழுது மெங்களோடிருப்பீர்களாக-(எ-று.) மூன்றுடன் ஒன்று=முப்பத்து மூன்று. "இதுவே பின்னர் முப்பத்து மூன்று தேவர்களுக் காதாரமான வேதவாக்கியம். வசுக்கள் 8, உருத்திரர் 11, ஆதித்தியர் 12, பிரஜாபதி 1, வஷட்காரம் 1, ஆக 33."—வில்ஸன்.

(ஷ வேறு.)

12. மூவ்வுல கூருந் தேரி னசுவினீர் மூரிச் செல்வ
மொவ்வுற வாற்றுவி ரொண்மொய்ம்புள சுத சாளோடே;
யிவ்வயிற் றுதிகேட்பீர் நீ ரோமபுகென்றேத்துகின்றேறன்
வவ்வுறுசெல்வப்போரின்மிழ்ந்தமைவளர்பபீரன்றே.

(இ-ள்.) அசுவினி தேவர்களே! (நடைபடாமல்) மூன்றுலகங்களிலுஞ் செல்லும் தேரோடு எங்களை நோக்கி வீரத்தன்மையோடு கூடிய புத்திர பிருத்தியாதி ஜனங்களோடு நிறைந்த தனத்தைக் கொண்டவருவீர்களாக. எங்களுடைய ஸ்துதிகளைக் கேட்பவர்களே! எங்களைக் காக்க வென்று அழைக்கிறேன். மிகுந்த தனத்தைத்தரும் யுத்தத்தில் எங்களை யோங்கச் செய்யுங்கள்—(எ-று.) பிருத்தியர்=வேலையாட்கள் பாட்டில் ஆன்றென்று கூறியுள்ளார்.

வருக்கம் 5.

35. மண்டலம் 1. அநுவாகம் 7. சூக்தம் 5.

11 இருக்குக்கள் கொண்டது.

மண்டலம். 1 சூக்தம் 34.

ரிஷி: ஹிரண்யஸ்தூபன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப், 1, 9, ஜகதி; தேவதை: 1 அக்னி, மித்ராவருணர், இராத்திரி, ஸவிதா ஆகிய நால்வரும் 2-11 ஸவிதா.

(வெடி வேறு.)

1. அக்னியையவிநாசவாழ்வளிப்பான்முதற்கண்ணேயணைந்தழைப்பல்;
ஒக்கவெமைக்காக்கவெனமித்திரற்சார்வருணனையுமுடனழைப்பல்;
மிக்கவுயிரொடுங்குகின்றகாலமாமிரவினையும்விழைந்தழைப்பல்;
தக்கதுணையாகவெனச் சவிதாவாந்தேவனையுஞ்சார்ந்தழைப்பல்.

(இ-ள்.) விநாசரஹிதமான வாழ்வினையளிக்குமாறு முதலில் அக்கினியை நோக்கி யழைப்பேன்; எங்களைக்காக்கட்டுமென்று மித்திராவருணர்களையு மழைப்பேன்; பிராணிகளெல்லாந்தத்தமிடத்திற்குத் திரும்பிவந்து ஒடுங்கியிருக்கின்ற இராக்காலத்தினையுங் கூவியழைப்பேன்; ஸவிதாத் தேவனையும் உதவிவேண்டியழைப்பேன்—(எ-று.) ஸவிதா ஸூர்யன். இரவு என்றது இரவபிமானி தேவதையை.

(வெடி வேறு.)

2. அடிக்கடி யிருட்டு வாய்ந்த வாகாயந் தன்னிற் ரோன்றிப்
படிக்கணே யமரர் மாந்தர் பசவு மவ்வவ்விடத்தி
னடக்குற வமைத்துப் பொன்னி லுயதேர் தன்னி னேறிப்
படைத்தபார்முற்றும்பார்க்கவணைகிறுன்சவிதாத்தேவன்.

(இ-ள்.) சவிதா (சூரியன்) வாகிய தேவன், இருட்டு மூடிக்கொள்ளும் ஆகாசத்தில் அடிக்கடி உதயமாகிப், பூமியில் அமரர்களையும், மனிதர்களையும் அவரவர்களது ஸ்தானங்களில் அடங்கியுறும்படிசெய்து, இரணியத்தாற்செய்த தேரின்மேலேறிக்கொண்டு புவனங்களைப்பார்ப்பதற்காக வருகிறுன்—(எ-று.) அடக்குற அடங்குற வலித்தல்விகாரம்பெற்றது. அமரர் மாந்தரென்பதை மரணமில்லாத பிராணனையும், மரணதர்மத்தோடு கூடிய சரீரத்தையும் எனவும்பொருளுரைப்பார் சாயணர். கிருஷ்ணம், கிருஷ்ண தேனிக்ருஷ்டோவர்ண: (நிகிருஷ்டமானநிறம்—இருட்டு) என்பதுயாஸ்கர். இம்மறை கிருஷ்ணேன என்ற ஒருசொல்லைத்தவிர்த்து மற்றதெல்லாம்ஆ (ஸத்யேந) ரஜஸா.....புவநானிபச்யன்—என்றதாம்.

3. தேவன் மேலேறிப் பின்கீழ்ச் செல்கிறு னிரண்டு வெண்மை
மேவிய பரிகளோடுந் தொழற்குரியோன் விரைந்தே;
ஆவலிற் ரோலியினின்று மணைகிறுன் சவிதாத் தேவன்
பாவிய வெமது பாபம் யாவையு நலித்துக் கொண்டே.

(இ-ள்.) வணங்குதற்குரிய (பிரகாசத்தோடு கூடிய) தேவன் (உதித்ததன் பின், மத்தியானம் வரையில்) மேலேறியும் (அதற்குப்பின் அஸ்தமனம்வரையில்) கீழிறங்கியும் செல்லுகிறுன். இரண்டு வெள்ளைக்குதிரைகளோடு தேவயஜனதேசத்தை நோக்கி வருகிறுன். எங்களுடைய பாபங்களெல்லாவற்றையும் நாசப்படுத்திக்கொண்டு சவிதாவாகியதேவன் தூரப்பிர

அஷ்டகம் 1. அத்தியாயம் 3.

தேசத்தினின்றும் (அதாவது விண்ணுலகத்தினின்றும்) வருகிறான்—(எ-று.) தொலை=தூரதேசம். தேவ: தீப்யமான: பிரகாசத்தோடுகூடியவன் என்பது பதப்பொருள்.

4. மெத்த வல்விரைவிற் சென்று பொன்னெடி விவித ரூப
நத்திய பொன்னுகத்தி னடைபெறு பெருந்தேரி னேறிச்,
சித்திர பானுவோடு சிறந்தவன், சவிதா, போற்றிற்
குத்தம னிருட்டு வாய்ந்த வுலகெலா மொளிசெய்தானே.

(இ-ள்.) மிகவும் விரைவாகப் போகக்கூடியதும், ஸ்வர்ணமயமாய் (யானைப்பந்தி, குதிரைப்பந்தி, மனுஷ்யபந்தி, முதலிய) நாலுரூபத்தோடுகூடியதும், பொன்னுலான நகத்தடியோடு கூடியதும் ஆன தேரிலேறி, சித்திர காந்திசிறந்தவனும் உத்தம ஸ்தோத்தவ்யனுமான ஸவிதா இருட்பிரதேசங்களெல்லாம் பிரகாசமாக்கினான்—(எ-று.)

5. பொன்னுகம்பொருந்துதேரிற்பூண்டுளவெண்கால்மாக்கள்
மன்னுறு பிராணிகட்கா வொளியினை வயக்கி நின்ற;
துன்னிய சவிதாப் பக்க றேவர்தம் பிரசை யன்றி
யின்னதீர்புவனம்யாவுமென்றுமேயொளிபெற்றெய்தும்.

(இ-ள்.) பொன்னுலான நகத்தடியோடு கூடிய தேரில் கட்டப்பட்டு அத்தேரையிழுத்து செல்லும்வெண்மையானகாலோடு கூடிய (யாவங்கள் என்னும் நாமம் வகித்த) குதிரைகள் பிராணிகளுக்கு விசேஷவெளிச்சத்தைத் தந்தன; ஸவிதாவின் பக்கத்தில் இதர தேவர்களது பிரஜைகள் மாத்திரமல்லாமல் எல்லா வுலகங்களும் எப்போதும் நின்று பிரகாசத்தைப் பெறும்—(எ-று.) ச்யாவா: சூரியனது குதிரைகளின் பேரென்பது நிகண்டு. சாயணருரை.

6. ஒளியுள வுலக மூன்றி லிரண் டென்றாழ் பக்க லுள்ள;
வொளியிலாப் பிரேதஞ் சாரு முலக மொன் றியம லோக;
மொளிபெறு மமரம் யாவு மூடுசென் றமைந்த, தேரி
னழிவி லச்சாணி போல; வறிந்தவ னறைக வீதே.

(இ-ள்.) காந்திபொருந்திய வுலகங்கள் மூன்றினுள் இரண்டு சவிதாவின் பக்கத்திலுள்ளன (அவை விண்ணும் பூமியுமாம்). மத்தியிலுள்ள அந்தரிட்சலோகம் பிரேதங்கள் (உடலினீங்கியவுயிர்கள்) சாரும் யம (பிதிர்) லோகமாம். பிரகாசமுள்ள அமரங்கள் (மரணதர்மமில்லாத சந்திரன் நட்சத்திரம் முதலியவை) தேரினச்சாணியைப்போலச்சூரியனுக்கு ஊடேசென்று நிலைபெற்றன: இவ்விஷயத்தையறிந்தவர்கள் கண்டு சொல்லட்டும் (எவராலுஞ் சொல்லமுடியாதென்றபடி)—(எ-று.) ஆணி, வடசொல். அர்ச்சிராதி மார்க்க வுண்மை கூறியவாறு.

வருக்கம் 6.

7. அணிசிற குள்ளான்யாருங் காணருஞ் கம்பன ங்கொ
டினி கொணத்து நற்க ணைசர னந்தரஞ்சேர் மூன்றை

மண்டலம் 1 சூக்தம் 35.

யுனிபெறத் தூலக்கினனு; லவ்வென்றா ழிப்போ தெங்குற்
றணிகிறு? னறிந்தார் யாரே யவனெளி பரந்த லோகம்?

(இ-ள்.) அழகிய சிறகோடு கூடியவனும், யாருங் கண்டறியமுடியாத சனத்தோடுசேருங்கிய கிரணங்களைப் பெற்றவனும், (தான் குறித்த இடத்தை யடைக்கூடிய வொளிபொருந்திய) நல்ல கண்ணோடு கூடியவனும், எல்லாருக்கும் பிராணனைத்தருபவனும் (அஸுரனும்) ஆகியஸவிதா அந்தரிட்சத்தோடு சேர்த்து எண்ணப்படுகிற மூன்று உலகங்களையும் விசேஷமாகப்பிரகாசிக்கும்படிசெய்தான். அந்த ஸூர்யன் இந்த இராக்காலத்தில் எங்கே ஒழுகுகிறான்? அவனது ஒளிபரந்துள்ள உலகத்தையறிந்தவர்கள் யார்? (ஒருவருமில்லை)—(எ-று.) ஸுபர்ண: சூரியனுடைய 15 கிரணங்களில் ஒன்றின் பெயரென்பார் சாயணர். அஸுர: ஸர்வேஷாம் ப்ராணத: என்பது சாயணருரையிற்கண்டது. இதன் வேறுபொருளை மண். 1, சூக். 24 செய். 14 உரையிற்காண்க.

8. *புவியின் தட்ட திக்கும் புவிமூன்றுஞ் சிந்து வேழு*
மவியறு மன்னன் காந்தி யழகுறத் தூலக்கிற் றைய;
சவிபெறு சவிதாத் தேவன் பொற்கணன் முகூடற்கு
நவையறு மணிக ளீவா னுடியே யிங்கு தோன்றல்.

(இ-ள்) பூமியின் (இந்திர, அக்னி, யம, நிர்ருதி, வருண, வாயு குபேர, ஈசான்ய வென்னும்) எட்டுத்திக்குக்களையும், பூமி வானம் அந்தரிட்சம் என்னும் மூன்று உலகங்களையும், கங்கைமுதலிய ஏழுநதிகளையும் (அல்லது ஸப்தஸமுத்திரங்களையும்) அவனது ஒளி நன்முய்ப்பிரகாசிப்பித்தது. ஸவிதாவாகிய தேவன், பொன்மயமானகண்ணோடு கூடியவன், தாசுஷனுக்கு (யாககர்த்தாவுக்கு) உத்தமமான இரத்தினங்களைத்தருவதற்காக இங்கே வாட்டும்—(எ-று.)

(வேறு.)

9. *இரணியக்கைவாய்ந்தவனுஞ்சவிதாவும்பல்வகைநோக்கியைந்துவா*
னந்
தரணியெனுமிரண்டிற்குமிடைசென்றேயுயிர்க்குறுநோய்சாரா
தென்று
மரணைனவேகாத்துத்தீர்த்தென்றாழிற்கலந்திடுவா;னுர்ந்தெக்கா
லுங்
கிரணமுள சோதியினையிருடிணிந்தவிடமெல்லாங் கிளர்த்துவானே.

(இ-ள்.) பொன்மயமான கையோடு கூடியவனுகிய ஸவிதா பலவிதமான திருவ்டியோடுகூடி, வானம் பூமியிரண்டிற்கு நடுவிற்சென்று பிராணிகளுக்கு வருநோய்களையெல்லாந்தீர்த்து ஸூரியனோடு கலந்துவிடுவான். எப்பொழுது மொளியோடுகூடிய கிரணங்களால் இருட்டுநிறைந்த எல்லாப்பக்கங்களையும் பிரகாசிக்கச்செய்வான்—(எ-று.) பொற்கையன், மண். 1 சூக். 22 செய்யுள் 5 உரையை நோக்குக. யஜமானர்களுக்குத்தரவென்று பொன்னைக் கையிலேந்தியவனென்று சாயணர் உரை கூறுவர். ஸவிதாவும்

அஷ்டகம் 1. அத்தியாயம் 3.

ஸூர்யனும் மூர்த்திபேதமேயொழிய வேறில்லை. தேவதை ஒன்றே. கலப்பவன் கலக்கப்படுபவனென்னும் பாவத்தைக் காட்டி நின்றன அவை.

(ஷஷ்டி வேறு.)

10. பொற்கைவாயசுரன்கீர்த்திபொருந்துநாயகன்றனத்தோ
டுற்ற பல்சுகத்தை யீவோனுறுக விம்மகத்தை நோக்கித்;
துற்ற ராக்கதரைத் தோய்ந்த யாது தானவரை யோட்டி
மற்றுமெவ்விரவும்போற்றின்மகிழ்ந்துறைகின்றான்றேவன்.

(இ-ள்.) ஹிரண்ய ஹஸ்தனும், அஸுரனும், கீர்த்திவாய்ந்த நாயகனும், பலவிதஸுகங்களையளிப்பவனும், தனவானுமாகிய (ஸவிதா) இந்தக் கர்மம் நடக்குமிடத்துக்குவாட்டும். மேலும் இத்தேவன் ராட்சஸர்களையும், யாதுதான்வர்களையும் ஓட்டி எல்லா இரவுகளிலும் ஸ்தோத்திரங்களை யேற்றுக்கொண்டு தங்குகிறான்—(எ-று.) அஸுரன் பிராணனளிப்பவன் இச்சுக்தம் 7ம்செய்யுளுரையிற்காண்க. யாதுதானவர்கள் ஓர்வகையராக்ஷர்கள்.

11. ஆசிலாச் சவிதா, நித்த மழகுற நீ செல்பாக்குத்
தூசிலா வழிகள் பண்டே தோய்ந்துள வந்தாத்தின்;
ஆசி னிங்கணையத்தக்க வவ்வழி வந்து பாவித்
நாசிகள் புகலா யின்று கூடிய வெம்மக்குத் தேவே.

(இ-ள்.) ஸவிதாவே உனது வழிகள் முன்பே யேற்பட்டுள்ளன; தூசியில்லாதன; அந்தரிட்சத்தில் நன்கமைக்கப்பட்டுள்ளன. நன்றாய் நடந்துவரக்கூடிய அவ்வழிகளின் வழியாகவந்து இன்று எங்களைக் காப்பாயாக. தேவனே, இத்தினத்தில் எங்களை யாசீர்வதிப்பாயாக—(எ-று.)

வருக்கம் 7.

36. மண்டலம் 1. அநுவாகம் 8. சூக்தம் 1.

20 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கோரனது புத்திரன் கண்ணுவன்; வடமொழிச்சந்தம்: ஒற்றைப் படையிருக்குக்களுக்கு ப்ரஹதி (3ஆம் சீருமாறுஞ்சீருங் காய்ச்சீருள்ள அறுசீர்க்கழிநெடில்), இரட்டைப்படையிருக்குக்களுக்கு ஸதோப்ரஹதி (எழுசீர்க்கழிநெடில்.); தேவதை அக்கினி, 13, 14 இருக்குக்களுக்கு யூபம் (யாகப் பசுவைக்கட்டுந்தறி).

(ஷஷ்டி வேறு.)

1. தேவர்விரும்பும்பன்மைசெறிகுடிச்சீரியைந்தவெடக்கருள்வான்
பாவு மகிமை பரந்தவனைப் பாவிப் பிறகு மெவ்விடத்து
மோவலின்றித்துதித்தேத்துமுவன்கினியைச்சூக்தத்தின்
மேவும் வாசகங்களினுன் மேவி யாங்க ளிரப்போமே.

மண்டலம் 1. சூக்தம் 36.

கடையெய்தாத்தனத்தோனுமிந்திரனைஞானியர்கன்மவீரு
மிடைபுந்திகொண்டெழப்டேனனத்தையவன்பூரணமாய்மிடைப்பா
னன்றே.

மண்டலம் 1. சூக்தம் 52.

(இ-ள்.) தடை செய்து நிற்குஞ் சத்துருக்களைத் தடுப்பவனும், ஆகந் தித்துக்குக் காரணனும், மதம் வளர்ந்தவனும், மேகத்தின் மடியின்மேல் பாய்ந்து செல்பவனும், குறையாத செல்வத்தோனுமாகிய இந்திரனை, மேதா விகளாகிய ரித்விக்குக்களோடு கூடிக், கன்மத்துக்கு யோக்கியமான புத்தி யோடு கூவுவேன். (ஏனெனில்) அவன் அன்னத்தை (எங்களுக்கு)ப் பூர ணமாக நிறையச் செய்வான்—(எ-று.) வான்மடி யென்றது மேகத்தில் நிறைந்த நீரை. ஞானியரின், ஞானியரோடு.

4. சமுத்திரத்தையாக்குநதிக்கூட்டந்தந்நீர்கொண்டச்சமுத்திரத்தை
யமைத்தலெனக்குசையிடங்கொள்சோமமுமவ்வாகாயத்தமர்ந்த
வேந்தை
யிமைப்பொழுதினிரப்பு;மகிவதைப்போன்மாட்டணியங்கமியைந்
தோர்,யாருங்
குமைத்தலுறுதடையர்ளர்,பகைவாட்டுமுதவியினர்கூடிநின்றார்.

(இ-ள்.) ஸமுத்திரத்தை நதிக்கூட்டங்கள் தமது நீரைச்சமந்து கொண்டேட்டி நிரப்புவது போலத், தருப்பையிலொழுகுஞ் சோமத்துளிகள் ஆகாயத்துள்ள இந்திரனைப் பூரிப்பிக்கும். விருத்திரவதஞ்செய்யு மவன்பக் கத்தில், அழகான அவயவத்தோடு கூடியவரும், ஒருவராலுந் தடுக்கமுடியாத நடையுள்ளவர்களும், பகைவரை வாட்டுபவருமான உதவியாளர்கள் (மருத் துக்கள்) சேர்ந்து நின்றார்கள்—(எ-று.) வேந்து, இந்திரன்; உதவியினர் ஈண்டு மருத்துக்கள் ஊதயः என்பது வடமொழி. சமுத்திரம் நதிகளுக்கு நாயகனும். 'ஸமுத்ராய, வயுநாய, விந்தூநாம்பதயேநமः' என்பார் பிறரும்.

5. மழையுதவாவிருத்திரனைமதமணைந்துபோராடிமாய்த்தவேந்தை;
விழையுதவிபுரிவோர்கள்கீழ்நோக்கின்வேகவதிவிழையச்சேர்ந்தார்
கழுமலுறுசோமத்தாற்கழிதுணிவுகொண்டுவலன்கழியப்பேதித்
தெழுருலிசவிந்திரனுந்திரிதனெழுந்துபோலவெழுந்தபோதே.

(இ-ள்.) வச்சிராயுதத்தைக் கையேந்திய இந்திரன் சோமபானத்தால் துணிவுகொண்டு வலனென்னு மசுரனை வதைத்துத், திரிதன் அநாயாஸமாக வெழுந்ததுபோல வெழுந்தவப்பொழுது, மழைபெய்யாது தடுத்து நின்ற விருத்திரனை மதத்தையடைந்து கொன்ற வவ்விந்திரனுக்குப் பக்கத்தில், உதவியாளர்களர்கிய (மருத்துக்கள்) கீழ் நோக்கிச்செல்லும் நீரோட்டத்தைப் போல வேகமாயோடி அவனுக்குத் துணையாக நின்றார்கள்—(எ-று.) உதவி யாளர்கள் மருத்துக்களென்பது மேல் 4ம் செய்யுளினுரையிற் சொல்லப் பட்டது. வலன் ஓரசுரன். மண். 1, சூக். 11. செய். 5 நோக்குக. மேகங் களாகிய பசுக்களை ஒரு குகையிலடைத்து வைத்து வறட்சியை யுண்டுபண் ணும் அசுரனிவன். இவனைக் கொன்று இந்திரன் வலாரி யென்னும் பெயர் பெற்றான். திரிதன், த்ரிதன் ஒரு இருடி. நீர் வேட்கையால் ஒரு கூபத் திலிறங்கித் தண்ணீர் குடிக்கும்போது அசுரர்கள் இவனிறங்கியிருந்த கூபத் தைக் கல்லால் மூடிவிட அவன் அதனை லட்சியஞ் செய்யாமல் அநாயாஸமாக மேலே வந்தானென்பது கதை. மேல் மண். 1, சூக். 105 நோக்குக. விருத்திரன், அஹி, இரண்டும் ஒரு பொருளன. மண். 1. சூக். 33 நோக்குக. மேகநீரைப் பெய்யாமற் றடுத்துவைப்பவன் விருத்திரனென்னும் அசுரன். கழுமலுறல், நிறைதல்.

வருக்கம் 12.

அஷ்டகம் 1. அத்தியாயம் 4.

6. மாற்றலனெவென்றவொளியுனைச்சூழ்ந்த,துன்வலியுமாகமோங்கிற்,
றேற்றமழைசுருட்டியவ னந்தரத்தின்மேலிடத்தேயெய்ந்து
சாய்ந்தான்,
மாற்றரியவலியுடையோன்விருத்திரன்றன்வன்கதுப்பில்
வச்சிரத்தை
யேற்றெறிந்திங்கிடிமுழங்கி,யிந்திரனே,யவன்வலிநீயிறுத்தவன்றே

(இ-ள்.) இந்திரனே! தடுக்கமுடியாதவலியுள்ள விருத்திராசுரன்து கன்னத்தின்மேல் வச்சிராயுதத்தையெறிந்து பேரொலியோடு நீ யவ்விருத்திரனது வலியைக்கெடுத்தபோது, பகைவனைச்செயித்த் அந்தப் பிரகாசமானது உன்னைச்சூழ்ந்து நின்றது; உனது பலமும் வானிற் பரந்து நின்றது; மழை நிறைந்த மேகத்தைப்பெய்யாது தடுத்து நின்ற அவ்விருத்திரனும் அந்தரிட்சவுலகத்தின்மேல் சாய்ந்து விழுந்தான்—(எ-று.) சாய்ந்தானென்பதைச் சாய்ந்தோனென்ன மாற்றிச் சாய்ந்தவனும், வலியுடையோனுமான விருத்திரனது கதுப்பிலடித்து அவன் வலியை நீ முடித்தபோது, ஒளியுனைச் சூழ்ந்தது, உன்வலிமாகமோங்கிற்று எனக்கொளலும் ஒன்று.

7. இந்திரனேயுன்மகிமையோங்குவிக்கும்பிராமணர்கை,ளிழியுநீர்க்கால்
சுந்தரமாக்குளநிரப்புங்கணக்கெனவே,யுன்னிடத்துத்தோயு;மின்னு
மந்தரத்தோர்தங்கோல்லன்றுவட்டாவமதிகவ்வியார்ந்தசம்ப
ரந்துமுன்தொண்வலிமைக்கேற்றபடிகூராக்கினாட்டிஞனே.

(இ-ள்.) இந்திரனே! உனது பெருமையை யுயர்த்தும் பிராஹ்மணங்கள், (ஸ்தோத்திர சஸ்திர ரூபமாயுள்ள மந்திரங்கள்) நீர்க்கால்வாய்கள் குளத்தை நிரப்புவது போல, உன்னையடைந்து உன் பெருமையை நிறைக்கும். தேவர்களது கொல்லனாகிய துவட்டாவும் உனது வலிமைக்குத் தக்கபடி வச்சிராயுதத்தைக் கூராக்கிக்கொடுத்தான்—(எ-று) துவட்டா, தேவக் கொல்லன். மண். 1, சூக். 13, செய். 10 நோக்குக. சம்பம், குலிசம், வச்சிராயுதம். அந்தரத்தோர், தேவர்கள்.

8. படைத்தொளிருங்கிருதுவெழிலிந்திரனே,யரிகளுடன்பண்பார்நீ
மடைத்தொழுகும்விருத்திரனெயதஞ்செய்துமனிதருக்கென்றவை
யோடச்செய்
தெடுத்தனையாற்கரங்களினிலய்க்குலிச;மதுவன்றியாரும்பார்க்க
விடுத்தனையாற்குரியனெவானிடத்தேயொளியோடுமிளிர்வா
னின்றே.

(இ-ள்.) சம்பாதித்த கிருதுவோடு (ஞானத்தோடு அல்லது கர்மத்தோடு) கூடிய விந்திரனே! உன்னுடைய குதிரைக்ளோடு ஜலங்களையடைத்து வைத்த விருத்திரனெயதஞ்செய்து மனிதருக்குப்யோகமாகும்படி அச்சலங்களையோடவிட்டு இரும்பினாலான வச்சிராயுதத்தைக் கையிலெடுத்தாய். அதுவன்றி வானிடத்தில் எல்லாருங் காணும்படி சூரியனைப் பிரகாசத்தோடு நிறுத்தினாய்—(எ-று.) கிருது, கர்மம், அல்லது ஞானம். அரி, குதிரை, நீரம் ஸ்டமொழி, நீர் என்பது பொருள்.

9. பெருமையுளோர்சுயஞ்சோதிப்பலமைத்தவுக்தமதைப்பிறங்கு
வின்னூர்
யருமைபெறவேறுவ்தைப்பயமீர்க்கவெடுத்தனரால்சார்ந்தமாந்தர்க்

மண்டலம் 1. சூக்தம் 52.

குரிமைபெறநலமீயும்போ தனிலிந்திரனேடுற்று,மிக்குத்
தருமுதவிமருத்,நரர்த்துதிபெறுவோர்,மதத்தொடுவான்சார்ந்த
போதே.

(இ-ள்.) மனிதர்களுக்கு நன்மையைத்தரும்ஸங்கிராமத்தில் (யுத்தத்தில்) இந்திரனுக்குத் துணையாகவென்று, உதவியளிப்பவரும், மனிதராற் போற்றப்படுபவருமான மருத்துக்கள் மதத்தை யடைந்தவர்களாய் விண்ணிடத்திற் கூடி நின்றபொழுது, பெருமைவாய்ந்த ஸ்தோத்தாக்களாகிய யஜ்மானர்கள், விருத்திரனிடத்திண்டான பயமானது தங்களை வலித்திழுக்க, (ஸந்தோஷத்தைத்தரும்) ஜோதியோடு கூடியதும், (சத்துருக்களைக் கொல்லும்) பலத்தைப்பெற்றதும், விண்ணை நோக்கிச்செல்லுவதுமான உக்தத்தை யவனுக்காகச் செய்தார்கள்—(எ-று.) 'அவ்வுக்தத்தின்றுதியைக் கேட்டு இந்திரன் விருத்திரனைக் கொல்லவெழட்டும்' எனக்கூட்டுக. வென்பார் சாயணர்.

10. பலமாரும்வானுலகுமவன்முழக்கத்தலமந்துபயந்தோடிற்ற;
னலமாருஞ்சோமமதைநனிகுடித்தமத்தமதினடி,யப்போ,
லுலமாருந்தோள்வேந்தே,யுன்குலிசம்,புவிவானினுடற்றுந்துன்பப்
புலருமம்விருத்திரனைச்சிரம்பிளக்கமிகுவலியாற்புடைத்ததன்றே.

(இ-ள்.) வலிமை பொருந்திய வேந்தனே (இந்திரனே)! அவ்விருத்திரனது முழக்கத்தைக் கேட்டுப் பலம்பொருந்திய வானுலகமும் பயந்து வேறுக நின்றது. நலம் பொருந்திய சோமத்தைக்குடித்து நீ மதங்கொண்டிருந்தபோது, வச்சிராயுதம் பூமி வானமென்னு மிரண்டிடத்தினும் துன்பத்தைமூட்டுகின்ற விருத்திரனைத்தலைபிளக்கும்படி முழுவலியோடும்அடித்தது—(எ-று.)

வருக்கம் 13.

11. இந்திரனேயிப்புவிதானிற்றைவிடப்பதின்மடங்குகுணிதமேய்ந்து
நந்துறப்பன்னதோறுமனிதரெலாந்தவப்பெருகிடப்பாரேனு
மெந்தவகையினுமகவானுன்வெற்றிப்பிரசித்தமெய்தியோங்கு;
மந்தரமேயெனப்பாந்துன்மொய்ம்புமருஞ்செயலோங்கியணைந்த
தன்றே று

(இ-ள்.) இந்திரனே! மகவானே! இந்தப்பூமி இப்பொழுதிருப்பதைவிடப் பத்து மடங்கு விசாலமாக, நாளுக்கு நாள் அங்கே மனிதரது தொகை விருத்தியாயினும், உனது பலமானது எவ்வாற்றானும்பெயர் பெற்றேறுங்கும். உனது பலத்தினாலான (விருத்திரவதமாதிய) கருமங்கள் ஆகாசமென்னும்படி விஸ்தாரமாக வோங்கிப் பரந்தன—(எ-று.)

12. செருக்கார்ந்தமனத்தோயிவ்யோமவுலகத்தின்மேற்சேர்ந்துமெத்தப்
பெருக்கார்ந்தவலியுளநீயெமைக்காப்பான்பூவுலகம்பெருகவிட்டா;
யுருக்கார்ந்தவன்வலியினனவாகவப்பூமியுறுத்திப்பின்னர்
நெருக்கார்ந்தநீரோட்டவந்தரம்வானிவையேற்றுநிமிர்ந்தாயன்றே.

(இ-ள்.) (பகைவரையடக்கும்) கர்வம் வாய்ந்த மனத்தோடு கூடிய (இந்திரனே!) யாங்கள் காணும் இந்த அந்தரிட்சவுலகத்தின் மேற் பொருந்தி மிக வலிமையுள்ள நீ, எங்களைக் காக்கும் வண்ணம் பூவுலகத்தைச் சிருஷ்டித்தாய். மேலும் உனது வலிமைக்கு ஒரு அளவாக விருக்கும்படி அப்பூமி

யைக் கடினமாகச்செய்து பின் நீர் நிறைந்த அந்தரத்தையும் விண்ணையும் கைக்கொண்டு மேலேறினாய்—(எ-று.) உருக்கார்ந்த என்னுஞ்சொல் எதுகை நோக்கி வந்தது.

(வேறு.)

13. புவிக்கெதிர்நீ; யுயர்ந்து புகழுர வீரர் சார்ந்த
புவிக்கெசமான னீயே; புகலுமுன் மகிமைதன்னு
லவிக்கரு மந்தரத்தை யார்த்தினு; யுண்மையாகக்
குவிகினுன்னெதிராயாருங்கூறுதற்கில்லைமாதோ.

(இ-ள்.) (இந்திரனே!) பூமிக்கெதிராளவாக நீ நிற்கிறாய். கீர்த்தி வாய்ந்த வலிமையோடு கூடிய வீரர்கள் நெருங்கியுள்ள புவலோகத்துக்குத் தலைவனும் நீயே. உன் மகிமையினுல் (பூமிக்கும் வானத்துக்கும் மத்தியிலுள்ள) அந்தரம் முழுவதையும் நிறைத்தனை. உனக்குச் சமானமாகக் கூறத் தகுந்தவர் வேறு யாருமில்லை. இது சத்தியம்—(எ-று.) புவலோகம்: ரண்டி ஸ்வர்க்கலோகம்.

(வேறு.)

14. அவன்விரிவைப்புவிவானமடைந்ததில்லை;யவன்றேரினுருமெல்லைத்
திவமுமுதற்சலப்பெருக்குந்தோய்ந்ததில்லை;சோமமதைசசிறக்க
வார்ந்து
நவவலியின்மதர்த்துமழைதடுப்பவனைவலிக்குங்கானடியன்னுன்
தவவலியையார்படைத்தார்? பிறரலர்நீயேயகிலந்தகைசெய்தாயே.

(இ-ள்.) அவனது (இந்திரனது) வியாபனத்தைப் பூமி வானங்கள் அடைந்ததில்லை. அந்தரிட்சவுலகத்து ஓடும் ஜலத்துக்கள் (மேக நீர்கள்) அவனுடைய தேஜஸ் இருக்குமிடத்தை யடைந்ததில்லை. ஸோமத்தைக் குடித்துப் புதிய பலத்தை யடைந்து மதங்கொண்டு, மேகத்தைத் தடுக்கும் விருத்திரனை யவன் கொல்லும்போது, அவனுடைய பலத்தையொத்த பலத்தை யார் பெற்றார்கள்? (ஒருவரும் பெறவில்லை என்றபடி.) நீயே யெல்லா வுலகத்திலுமுள்ள பிராணிக் கூட்டங்களையும் ஒழுங்கு படுத்திவைத்தாய் வேறொருவருமில்லை—(எ-று.) படர்க்கை முன்னிலை மாற்றைக் கவனிக்க.

(வேறு.)

15. இப்போரின் மருத ருன்னை யேத்தினு ரெண்ணி யுன்பா
னப்போரிற் றேவரெல்லா நாடியே மகிழ்ந்தார் நீயுந்
துப்பேறுங் கொலைகூர் சம்ப மிந்திரா சுற்றி யோச்சி
யப்பேரு தடக்கு மந்த வகிமுகத்தடித்த காலை.

(இ-ள்.) இந்திரனே! வலிபொருந்திக் கொலை செய்வதிற் சிறந்த வச்சிராயுதத்தைச் சுழற்றி நீரை யொழுக விடர்தபடி தடுத்த அகியாகிய விருத்திராசுரனது முகத்தில் நீயடித்தபோது இப்பூமியில் மருத்துக்கள் உன்னை (ப்ரஹரபகவோஜஹிவீரயஸ்வ) என்பதாதிய வசனங்களாற்துதித் தார்கள். விசுவ தேவர்களெல்லாரும் உன்னிடத்து மகிழ்ச்சி யடைந்தார்கள் —(எ-று.) அகி விருத்திராசுரன். அகியினது முகத்தென்க, சம்பம், வச்சிராயுதம். ந உயர்வுப் பொருளில் வந்தது.

மண்டலம் 1 சூக்தம் 53.

53. மண்டலம். 1. அநுவாகம் 10. சூக்தம் 3.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: அங்கீரஸபுத்திரன் ஸவயன்; வடமொழிச்சந்தம்: ஜகதி, 10, 11 த்ருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

(வேறு.)

1. மகிமையொடுபொருந்தியவற்கெங்காளுமுயர்துதிகள்மதித்
தீவோமாற்;
றகுகிரியையமிகப்புரியும்யஜமானன்சதனமதிற்சார்ந்துபண்க
ளுகவொடுமிந்திரற்றுதிக்கும், தூங்குவார்நற்பொருளினுவனுங்
கைத்தை
மிகவிரஷினடைகுவதால்; தணந்தருவோர்தகவில்துதிவிழையா
ரன்றே.

(இ-ள்.) தூங்குவோருடைய பொருள்களை (த்திருட்டின் இலகுவிற் கைக்கொள்வது) போல அவன் (இந்திரன்) (அசுரரது) பொருளைக்கைக்கொள்வதால், யாக கார்யஞ் செய்யும் யஜமானனது யாக வீட்டிற் சொல்லும் பண்க்ளெல்லா மவ்விந்திரனே ஸ்தோத்திரஞ்செய்யும். தான கர்த்தாக்கள் தகவில்லாத (பெருமையற்ற) ஸ்துதிகளை விரும்பமாட்டார்கள். அதனால் மகிமையோடு கூடிய இந்திரனுக்கு எப்பொழுதும் நல்ல ஸ்தோத்திரங்களேயெண்ணிப் போற்றுவோம்—(எ-று.) விவஸ்வத: பரிசரத: என்பார் சாயணர். யாகஞ்செய்வோனென்பது பொருள். தூங்குகிறவர்களிடத்து ஒருநாளும் அவன் பொருளைக் கண்டதில்லையென்று மேனாட்டாசிரியர் உரை கூறியுள்ளார். தூங்குவோராகிய யாகமில்லாத சோம்பேறிகளிடத்து இந்திரன் ஒரு பயனையும் பெறுவதில்லை யென்று அதற்குப் பொருள் விரிப்பர்.

2. பரிதருவாயிந்திரனேபசுத்தருவாயவந்தருவாய்;பரிந்துசெல்வ
மிரிதருகாதெடுத்திடுவோனெவற்றினையுங்காப்பவன்பண்டிருந்து
மாந்தர்க்
குரிமையொடுமுதவுபவன்விழைவுகூராதொழியாதாயுவந்தெந்நண்பர்க்
கரியதுணையாவாயாலுனக்கெனவித்துதிவசனமார்ந்திசைப்பாம்.

(இ-ன்.) இந்திரனே! நீ குதிரையளிப்பாய்; பசுவந்தருவாய்; யவ மரிய தானியமுங் கொடுப்பாய். செல்வத்தைச் சேகரித்துவைக்கும் ஸ்வாமியாம். எல்லாரையும் பரிப்பவன்நீ. மக்களுக்குத்தானந்தருவோன்நீ. இச்சித்தவற்றைத் தாராவிடாய். எம் ஸகாக்களாகிய ரித்விக்குக்களுக்கு நல்ல தொழுவும். அத்தகைய (இந்திரனுகிய) உனக்கு இத்துதி வசனங்களைக் கூறுவோம்—(எ-று.) தம் என்று மூலத்திலுள்ளது. இத்தகைய இந்திரனுகிய அவனுக்கு என்றும் பொருள் கூறலாம்.

3. மதிமிகுத்தோ,யிந்திரனே,முரண்டோன்றுஞ்செயல்புரிவோய்மகத்
தாஞ்சோதீ,
யதிதூரஞ்சூழ்ந்துசெறியித்தனமுமுன்னதெனவறியின்ற;
வெதிர்வாரைவாட்டுபவ,வவற்றிலிருந்தெடுத்தெமக்கென்றீவாய்
நன்கே;
கதிகூறியுனைநினைப்போனிச்சையினைக்குறையாதுதோய்ப்பா
யின்றே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 4.

(இ-ள்.) நல்ல ஞானத்தோடு கூடியவனே! (விருத்திரவதம் முதலாகிய) பலத்தைத் தோற்றுவிக்கும் செய்கைகள் பலவற்றைசெய்பவனே! உத்தமமான சோதியே! எதிர்த்தவர்களையடக்குபவனே! இந்திரனே! வெகு தூரத்திற் பரந்து கிடக்கும் இச்செல்வங்கள் உன்னதென்று பலருமறியும் படிகிடக்கின்றன. இவற்றிலிருந்து எமக்குத்தானஞ்செய்வாயாக. ஸ்தோத்திரஞ்செய்து உன்னைக் கருதுவோனது ஆசைகளை யொன்றுங் குறையாமல் அளிப்பாயாக—(எ-று.)

4. எரிவளர்க்குமிப்பொருளில்யாமளிக்குஞ்சோமமதிலின்பங்கொண்டே
பரிவளர்க்குந்தன்தோடுபசுக்கூட்டம்பலவளித்துப்பரிந்தெமின்மை
யிரிதரச்செய்தொண்மனங்கொள்; இந்துவிழையிந்திரனுலிடுக்கணற்
றும்
பரிசனத்துத்தசியுவினையடக்கியவன்பகைநீங்கியனம்பொற்றேமே.

(இ-ள்.) (இந்திரனே!) எங்களாலளிக்கப்படும் இந்தச் சருபுரோடாசமாதிய பொருள்களிலும், யாங்கள் தருமிச்சோமத்திலும் சந்தோஷத்தையடைந்து, பசுக்களும், குதிரைகளும் நிறைந்த தனத்தை யெங்களுக்களித்து, எங்கள் தரித்திரத்தை நிவர்த்தித்து நன்மனத்தோடு கூடியிருப்பாய்ாக. சோமத்துளிகளை யிச்சிக்கும் இந்திரனது தூண்டுதலினால் (துன்பஞ் செய்யும் கூட்டத்தாரோடு கூடிய) தஸ்யுவையடக்கி அவனது பகை நீங்கி யன்னப்பொருள்களை யடைகிறேம்—(எ-று.) இடுக்கணறும் பரிசனத்து என்னும் அடை வடமொழி மூலத்திலில்லை. பெறுகிறேம் பெற்றேம் எனத்தூணிவுப் பொருளில் வந்த காலவழுவமைதி. சரு புரோடாசம். ஓமத்திரவியங்கள்.

5. இந்திரனேயன்னமொடுதனத்தினையுநனியேற்றத்தியாங்களெய்தல்;
சந்திரனேயெனப்பலருங்களிக்கின்றவலிவானந்தயங்கித்தோய்ந்த
துந்தளெளிமதியினுறல்; பகையடக்கும்வீரவலியுயர்ந்ததாக்கண்
முந்துறின்றதுகுதிரையொடுசெறிந்ததெமைச்சேர்கமுன்பின்
மற்றே.

(இ-ள்.) இந்திரனே! நல்லுணவையும், சிறந்த தனத்தையும் நாங்கள் நன்றாக அடையட்டும். சந்திரனைப்போல ஆஹ்லாதத்தைத்தருகின்றதும் வானத்தை யெட்டிநிற்பதுமான வலிமையை உன்னுடைய காந்தியோடு கூடிய புத்தியினால் நாங்களடையட்டும். சத்துருக்களை யடக்கியாளுவதும், பசுக்களும் குதிரைகளும் நிறைந்தது மான பலம் எம்மை வந்து சேரட்டும்—(எ-று.)

6. வலியூட்டுமருதருணமதர்ப்பித்தார்; உவப்பீந்த,வலிசாலுன்ற
னிலையேற்றவவிப்பொருள்கள்; சோமங்களுனக்குவப்பைநேடித்
தந்தது;
பொலிவூட்டுந்துதியாளன்குசைவிரிப்போன்றனக்காகப்புகலும்
பத்துத்
தலைகூட்டு மாயிரமாம்விருத்திரரைச்,சற்பதியே,தடிந்தவன்றே.

(இ-ள்.) சற்பதியே! (சாதுக்களைப் பாதுகாக்குமிந்திரனே! உன்) னை ஸ்தோத்திரஞ்செய்து தருப்பைகளைப் பரப்புவோனுகிய யாககர்த்தாவுக்காகப் பதினுயிரம் விருத்திரர்களையும் நீ கொன்றபோது, பலத்தை விருத்திபண்ணும் மருத்துக்கள் உன்னை மதமடையச் செய்தனர். வலிமையிற்,

மண்டலம் 1. சூக்தம் 53.

சிறந்த உனக்காகத் தர்ப்பிடும் அவிப்பொருள்களும் உனக்குக்களிப்பைத் தந்தன; சோமத்துளிகளும் உனக்கு ஸந்தோஷத்தை யூட்டின—(எ-று.) விருத்திரனென்றது ஈண்டு உபத்திரவகாரகர்களாகிய சத்துருக் கூட்டங்களை.

7. தீரமொடு,மிந்திரனே,யொருபோர்நின்றெருபோர்க்கட்செல்வாய்; மொய்ம்பி
ஞருமதிற்கோட்டைகளையொன்றொன்றுயழித்திடுவாய்;யணையார் தத்தங்
கூருமெழிலோய்ந்துதலைவணங்கச்செய்தோழனுகூடித்தூரத்
தேருடனே பலமாயையுரி நமுசி முழுநாச மெய்வித்தாயே.

(இ-ள்.) இந்திரனே! தைரியத்தோடு நீ யொருபோரைச் செயித்து மற்றொரு போர்க்குச் செல்லுகிறாய். பலத்தினால் சத்துருக்களினது கோட்டைகளை ஒவ்வொன்றாக யழிக்கிறாய்; சத்துருக்கள் தங்கள் பொலிவிழந்து தலைவணங்கும் படிசெய்கிற உனது தோழனாகிய வச்சிராயுதத்தோடு கூடத் தூரத்திலிருந்து பலவிதமாயங்களையுஞ் செய்கிற மாயாவியாகிய நமுசியை நாசமடையும்படி செய்தாய்—(எ-று.) அதனால் ஸ்துதிக்கு நீ யோக்கியன் என்றபடி. தோழன் ஈண்டு வச்சிராயுதத்தைக் குறித்து நின்றது. நமுசி (ch) மழை பெய்யாது தடுக்கும் ஓரசுரன்.

8. அதிதிக்குவன்சிறந்துமேற்சென்றகாலத்தேயவனுக்காகத்
துதிதிக்கெல்லாந்தோன்றக்காஞ்சனெடுபண்ணயனுஞ்சோரக் கொன்றாய்;
கதிதிக்கெங்குஞ்சூழ்ந்திங்கிரிஜிச்சுவான்முற்றுங்காவலிஞ்சிப்
பதிதிக்கென்றிகழாமல்வங்கிருதன்சதநகரம்பாழ்செய்தாயே.

(இ-ள்.) (இந்திரனே!) அதிதிக்வன் என்னும் அரசன் பெருமையோடு யுத்தத்திற்குப்போனபோது அவனுக்காக உன்புகழ் எல்லாப்பக்கத்திலும் விளங்கும்படி காஞ்சன், பர்ணயன்என்னும் அசுரர்களைக் கொன்றாய். ரிஜிச்வான்என்னும் அரசன் எல்லாப்பக்கத்திலும்சூழ்ந்து முற்றுகைபோட்டபோது வங்கிருதன் என்னும் அசுரனுடைய நூறுகோட்டைகளையும் கேவலமென்றெண்ணுமல் அழித்தாய் – (எ-று.) அதிதிக்வன் மேல் மண்.1, சூக்.51, செய். 6ல் பார்க்க. ரிஜிச்வான் மண். 1, சூக். 31, செய். 5 நோக்குக. காஞ்சன், பர்ணயன், வங்கிருதன் இவர்கள் அசுரர்கள்.. பர்ணயன், பண்ணயன், என்றுயிற்று. சதநகரம், நூறு கோட்டைகள்.

9. பிறர்நெருங்காச்சக்கரந்தோய்தேர்மீதுபேர்சாளீபிறங்கியாறு
திறம்பெருகுமாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மர்புடை சிறந்துசூழ
மறம்பெருகுமிருபதின்மர்நரபதிகடம்மையெதிர்மடங்கவென்று
யறம்பெருகுசுச்சரவன்றுணையின்றியமர்க்களத்தேநின்றவன்றே.

(இ-ள்.) (இந்திரனே!) பிரக்கியாதி பெற்ற நீ (சத்துருக்களாகிய) பிறர் கிட்டநெருங்கமுடியாத சக்கரத்தோடுகூடிய தேரிலேறித் தர்மம் சிறந்த ஸுச்ரவஸன் ஒரு துணையுமில்லாமல் உன்னைத்துதித்தபோது அவனைக் காப்பதற்காக, அறுபதினாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வீரர்கள் புடைசூழ யுத்தத்துக்கு வந்த இருபது நரபதிகளோடு சண்டை செய்து, அவர்களைக் கொன்றாய்—(எ-று.) ஸுச்ரவஸ், சுச்சாவன் ஓர் அரசன்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 4.

(வேறு.)

10. தூணையினை யளித்துச்சுச் சரவசனைக் காத்தா; யுன்ற
னிணையிலா வளியிற் றூர்வயாணனை யெடுத்தாய், வேந்தே;
திணைபெறும் வலி யிலாமை சேரு மவ்வரசனுக்கு
ளிணையுற வாயு குற்ச னதிதிக்வ னிவ ரேய்த்தாயே.

(இ-ள்.) வேந்தனே! (இந்திரனே!) உனது உதவிகளினால் ஸுச்ர விஸைக்காப்பாற்றினாய். ஒப்பற்ற உனது பலங்களால் தூர்வயாணனைக் காத்தாய். வலிமையும் இளமையுஞ்சிறந்த அவ்வரசனது (ஸுச்ரவனது) வசத்தில் ஆயு, குத்ஸன் அதிதிக்வன் இம்மூவருமடங்கும்படி செய்தாய். —(எ-று.) ஆயு புரூரவா வம்சத்து ராஜன். மண். 1, சூக். 91, செய். 2, நோக்குக. குத்ஸன் அதிதிக்வன் இவர்கள் முன்பே சொல்லப்பட்டார். ஸுச்ரவஸ், சுச்ரவன், சுச்சரவஸன் ஸுச்சரவஸன் எல்லாம் ஒருவனேயெச்சும். அவன் ஒரு அரசன். தூர்வயாணனும் ஓரரசனே. தூர்வயாணன் வேகமாய்ச்செல்லுவோன் என்பது பொருள். அதிதிக்வனும் திவோதாஸனு மொருவனே. ஸுச்ரவஸனும் தூர்வயாணனும் ஒருவனேயோவென்று ஸந் தேகப்படுவார் மேனுட்டாசிரியர். ஆயு, குத்ஸன், அதிதிக்வன் இந்திரனுக் குகந்த ராஜரிஷிகளாயினும், ஸுச்ரவஸன், தூர்வயாணன் இவர்களைக் கரு தும்போது, இந்திரன் இவர்களிடத்தே அதிக விசுவாஸமுள்ளவனென்று தெரிகிறது. இவ்விந்திரனுடைய பிரியத்தை மண். 2, சூக். 14, செய். 7லும் பார்க்கலாம்.

11. யாகமு முடிந்த பின்னர் வேந்தெமைத் தேவர் காக்க
வோகையோ டெராக்கத்தோ டெனதுநற் றோழராவேம்;
வாகை வீரம்பொருந்து மகார் ணனியாயுள் வாய்ந்தோ
ரேகமாச் சுகத்தினெங்கட் கேய்ந்தனர் வாழ்த்துவோமே.

(இ-ள்.) இந்திரனே! யாகம் முடிந்தபிற்பாடு இனி யெம்மைத் தேவர்கள் காப்பாற்றி நிற்க நாங்கள் சிவதமர்களாயும் தோழர்களாயுமா வோம். வீரர்களாகிய புத்திரர்கள் மிகுந்த ஆயுட்காலத்தோடு கூடியவர் களாய் எங்களிடத்துச் சுகமாகப் பொருந்தியிருக்க, யாங்கள் உன்னை வாழ்த்து வோம்—(எ-று.) சிவதமர்களாய் உத்தம கல்யாணர்களாய் என்று பொருள். இதனையே செய்யுளில் ஓகையோடெராக்கத்தோடு என்றார். எய்ந்தனராய் வாழ்த்துவோமென்க. வேந்து, அண்மைவிளி.

வருக்கம் 16.

54. மண்டலம் 1 அநுவாகம் 10. சூக்தம் 4.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி ஸவ்யன்; வடமொழிச்சந்தம்: ஜகதி, 6, 8, 9, 11, த்ருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. மகவானே! பாவமதின்முழுக்கிவிடும்போரினில்யாமருவாதாற்றாய்;
தகவாருமுனதுவலிமுழுதுமெவரறிந்திங்ஙன்சாற்றவல்லார்?
மிகவாருமுழக்கத்தினதியொழுகுநீரினீவிம்மவிட்டா
யிகமாருந்தரைநடுக்கிற்றடுமாறியோட்டந்திங்கியங்கலென்னே!

மண்டலம் 1. சூக்தம் 54.

(இ-ள்.) தனத்தோடு கூடிய விந்திரனே! எங்களைப் பாபச்செய்கைகளுக்குள்ளாக்கும் யுத்தத்தில் யாங்கள் சேராதபடி காப்பாயாக. (எனெனில்) உன்து பலமுழுவதும் ஒருவராலுமறிந்து சொல்லமுடியாது. அந்தரிட்சத்தில் மிகுந்த சப்தத்தோடு செல்லும் நீரைப் பேரிரைச்சற் போலிவித்தாய். பயத்தினுல் இப்பூமியேன் நடுங்கியோடுகிறது?—(எ-று.) மகவான், தனவான். எனெனில் என்னும் சொல் வருவிக்கப்பட்டது. நீ எந்தப் போரில் எவரோடு சேருவாய் என்பது நிச்சயமில்லாததனுல் சில சமயங்களில் நீ எதிரிகள் பக்கத்தில் நின்றுவிட்டால் உன்னுடேயே சண்டை செய்யநேரும். அதனுல் பாபம் எற்படும். ஆகையினுல் அப்போரில் எம்மை மூட்டிவிடாதே என்று கூறப்பட்டதென்பார் மேனுட்டாசிரியர். பூமி என்றதனுல் வானம் அந்தாங்களையும் இனத்தாற் கொள்ளுகவென்பார் சாயணர். மூவுலகும் நடுங்குவானேன் என்ற வினவுக்கு உன் வலியைக்கண்டு மூவுலகும் நடுங்குகின்றன என்ற விடை கொள்ளத்தக்கது என்பார் அவர்.

2. அர்ச்சிக்கலுரம்பொருந்துசக்கிரியைப்;பூசிக்கலார்ந்தேயுண்மை
யிச்சிக்குந்துதிகேட்குமிந்திரனைத்;துதிக்கல்புவிவானிரண்டு
நச்சித்தமின்மையினைத்தீர்க்கவெனவிரக்கின்றநாதன்றன்னைக்
கர்ச்சித்துக்கீழிழியும்வகைநீரைப்பெய்விக்குங்காளைதன்னை.

(இ-ள்.) (அத்வர்யுக்களே!) வலிபொருந்திய சக்கிரியை அர்ச்சிப்பீர்களாக. இது தகுதியான துதியென்று எண்ணி அதனை விரும்பிக் கேட்கும் இந்திரனைப் பூஜிப்பீர்களாக. பூமிவானமென்னு மிரண்டுக்கும் நாயகனை மழைபெய்விப்பவனைத் துதிப்பீர்களாக—(எ-று.) 'இச்சித்தவளித்தொழுகும் வலிமிகுந்த காளையா மிறைவன்றன்னை' என்பது பாடபேதம். வலியிற் சிறந்து மாந்தர் நினைத்தவற்றை யளிக்கும் பெருமை வாய்ந்த விருஷபத்தையென்பது பொருள்.

3. பகைவர்களையடக்குந்தன்வலியினிடத்தெவன்மனத்தேயுறுதிபாரித்
தகவுவனவ்வொளிசாரும்பெருந்தேவைநன்மொழியாலருச்சித்
தேத்தல்;
மிகுசீர்த்தியசுரனவனென்னுரைவாட்டுபவன்மேன்மைசான்றோன்
புகலரிகளிரண்டேத்துமிடபமொடுதேரெனவேபுகல்வாரன்றே.

(இ-ள்.) (ஸ்தோதாக்களே!) பகைவரையடக்கும் தனது வலியையெண்ணி யெவன் செல்லுவானே அவ்வொளிபரந்த பெருந் தேவனுகிய இந்திரனை நல்ல வார்த்தைகளைக்கூறி யருச்சிப்பீர்களாக. அவன் மிகுந்த கீர்த்தியுள்ள அஸுரனும். பகைவரை யடக்குபவனும். மேன்மை பொருந்தியவனும். இரண்டு குதிரைகளால் பூஜிக்கப்படுபவனும். (இழுக்கப்படுபவனும் என்றபடி). அவனே விருஷபமென்றும் ரதமென்றும் கூறுவார்கள்—(எ-று.) ஸ்தோதாக்கள் ஸ்தோத்திரஞ்செய்வோர். அஸுரன் ரண்டு இந்திரனைக்குறித்தது, பகைவரையடக்குவோன் அல்லது பலத்தோடு கூடியவன், அல்லது ஆஸவ ப்ராணு: தாந்ராதி ததாதிதி அஸுர: ப்ராணன்களைத் தருபவன், அல்லது ப்ரார்ணுவா ஆப' என்றதைத்நிரீயங் கூறுவதால் ஜலத்தைத்தருபவன், என்பது பொருள். அஸுரன் அநிஷ்டத்தை நீக்குபவன் தேவன் என்னும் பொருள் மண். 1, சூக் 24, செய். 14ல் சொல்லப்பட்டது. விருஷபம்: இச்சித்தபொருளை வர்ஷிப்பவன். ரத: ரம்ஹணசீல: வேகமாய்ச் சொல்லுபவன். இந்திரனைத் தேரெனவும் காளையென்றும் உபசாரப்படுத்திக் கூறினர்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

4. பெருந்திவியினுச்சமதிற்பிறங்கிடங்களைசந்ததிரப்பிறங்கினுய்நீ
யருந்திடத்திலெருவனுய்ச்சம்பரனேயுடல்பிளக்கவடித்திட்டாயே,
பொருந்துபலமாயாவிக்கூட்டமதைச்சுதைகுடித்துப்பொங்குழக்கத்
திருந்திறலிற்கூசனிகையேந்திமனத்துணிவோடெதிர்த்தபோதே.

(இ-ள்.) (இந்திரனே!) பல மாயாவிக் கூட்டங்களாகிய அசுரர்களைச், சோமபானஞ் செய்தெழுந்த ஊக்கத்தினுல், வலிமை பொருந்திய கூர்மையான அசனியை (வச்சிராயுதத்தை)க் கையிலேந்தி மனத்துணிவோடு எதிர்த்து வீசியபோது வானுச்சியிலுள்ள விடங்களைக் கம்பிக்கச் செய்தாய். மேலும் நீ யொருவனுக நின்று சம்பராசுரனைப் பிளந்தாய்—(எ-று.) கூரசனி கூரிய இடி அல்லது வச்சிராயுதம்.

5. மேகத்தைநனிமுழங்கவிட்டனையால்,வாயுவினுன்மெதுவையெய்தத்
தாகத்திற்பழஞ்சமைத்தாய்,வற்றுவிக்குமாதவன்மேற்றண்ணீர்
வைத்தா,
யேகத்தினெதிர்நின்றுபகைவனைதக்குமுள்ளமதையெய்துமுன்போற்
பாகத்திற்சமைப்பவர்களின்றேனுமுனக்குமேற்பகர்தற்கியாரே?

(இ-ள்.) (இந்திரனே!) நீ மேகத்தைக் கர்ச்சிக்கச்செய்தாய், வாயுவினுல் (புளி முதலாகிய) பழங்கள் மெதுத்தன்மையையடைந்து பழுக்கச் செய்தாய். வஸ்துக்களைச் சோஷிப்பிக்கும் சூரியனுக்கு மேலானவிடத்தில், தண்ணீரையமைத்தாய். பகைவரை வாட்டுகின்ற உள்ளத்தோடு கூடிய உன்னைப்போலக் காலபலனைத் (வெயிற்காலத்தில் வறட்சியையும், மழைக்காலத்தில் மழையையும்) தருபவர்கள் இன்றைக்காவது உன்னின் மேம்பட்டவர்கள் சொல்லுதற் கெவராவதுள்ளார்களா? (இல்லை யென்றபடி.)—(எ-று.) வாயுவினுல் சூரிய கிரணங்களையும், மழையினுல் நீரையும் மறுபடியும் நிலை நிறுத்துகிறார்கள். அப்படி நிறுத்துவது இந்திரனுடைய வேலையாக உபசரிக்கப்பட்டது. வநம் என்பதற்குச் சரணர் நீர் என்று உரை கூறுவர். ஆனுல் மேனட்டாசிரியர் வனம்: காடு என்பார். அவருரைப்படி செய்யுள் வருமாறு:—

வனமாரும்பெருமுழக்கத்திந்திரனேசுட்டினுமறைத்துவைத்த
தனமாரும்பொருட்குவையையவாயுவினினெற்றியின்மேற்
றன்னுங்காலை
மானமாரமுற்காலத்திழைசெயலையின்னமுமேமறித்துச்செய்யா
தனுயாரேதப்பவர்களுறுதியொடுபகைவனைதக்குமுள்ளம்வாய்ந்
தோய்.

(உ-ள்.) உறுதியும் பகைவனைத்தக்கு மனமும் பெற்ற விந்திரனே! காடுகளை நிறைக்கும் பேரொலியோடு விழும்படி சுட்டினுன் அடைத்து வைத்திருந்தவற்றை காற்றினது தலையில் தள்ளும்போது, நீ முற்காலத்துச் செய்த அத்தொழிலை இன்றும் திரும்பவும் செய்யாதவண்ணம் தடுக்கப் பலம் வாய்ந்தவர் யாவருளர்—(எ-று.) இந்திரனே என்பது அதிகாரத்தாற் சேர்த்தது.

வருக்கம் 17.
(வேறு.)

6. நரியனேத்துருவசன்னை நாடியே யதுவை வையற்
குரிய புத்திரன் துர்வீதி யோடு நால்வரையுங் காத்தாய்

மண்டலம் 1 சூக்தம் 54.

பரியொடு தேர் கெடாது பாலித்தாய், சதமகத்தோய்!
அரிய நற் புரங்க டொண் ணூற்றொன்பதை யழித்தா யன்றே.

(இ-ள்.) சதக்கிருதுவே! நர்யன், துர்வசன், யது, வையனுடைய புத்திரன் துர்வீதி, என்னும் நான்கு ராஜாக்களைக் காத்ததோடு அவர்களது தேர்குதிரைகள் கெடாது பாதுகாத்தாய், (சம்பரனது) 99 கோட்டைகளையும் அழித்தாய்—(எ-று.) துர்வசன், யது, துர்வீதி இவர்கள் யாக கர்த்தாக்களுக்கு உதவி செய்யும் ராஜரிஷிகள் என்பது மண் 1, சூக். 36, செய். 18ல் கூறப்பட்டது. நர்யனும் ஒரு ராஜரிஷியே. இத்தொண்ணூற்றொன்பது கோட்டைகளும் சம்பரனதென்பார் சாயணர்.

அவனேநற்சனங்களுக்குவேந்தனெசற்பதியுமாவானன்மா
வவனேயிங்கோம்புவனவிபொருந்திச்சாசனத்தையரிதிற்காப்போ
னவ்வனேநற்றுதிகூறுமவனுக்குவேண்டுமுணவள்ளிப்போன்மேக
மவனேற்றத்துக்கெனவேவானிழியுநீர்சொரியுமறிகமாதோ.

(இ-ள்.) அவனே (இந்திரனே) ஜனக்கூட்டத்துக்கு நாயகன்; ஸத்துக்களுக்கு (ஸாது ஜனங்களுக்கு)ப் பதி; அவனே ஆத்ம சக்தியை வளர்ப்பவன்; அவனே யவிப்பொருளோடு கூடி யாகவிதிகளைக் காப்பாற்றுபவன்; அவனே உக்தம் அல்லது சஸ்திரங்கூறும் ஹோதாவுக்குவேண்டிய உணவுப்பொருள்களைக் (கர்ம பலனை) த்தருபவன்; அவனுக்காகவே மானது ஆகாயத்திலிருந்து கீழ் விழும் மழை நீரைச்சொரிகிறது—(எ-று.) உக்தம் அல்லது சஸ்திரம் ஹோதா கூறுவது; ஸ்தோமம் அல்லது ஸ்தோத்திரம் ஸாமகன் பாடுவது. மண். 1, சூக். 47, செய். 10, பார்க்க. உபரம், உபலம் மேகமென்பது நிருக்தம்.

(வேறு.)

8. இணையிலை யவனுரத்துக்,கிணையிலையவன்ஞானத்துக்;
கனவுறுசோமபானமாற்றுவோர்கருமத்தோங்கல்,
தனவுறுவேந்தேயுன்றன்றகைமிகுபலத்தைத்தூலத்
தினையறுமாண்மைதன்னையேற்றஞ்செயவியீவோரே.

(இ-ள்.) அவனது (இந்திரனது) பலத்துக்கு வேறெவருடைய பலமும் மொவ்வாது. அவனுடைய ஞானத்துக்கு மற்றொருவனுடைய ஞானம் சிறிது மெவ்வாது. (இந்திரனே!) உன்னுடைய மகத்தாகிய பலத்தையும் ஸ்தூலம்போல்விருத்தியாய்நிலைத்த பும்ஸத்துவத்தையும் (ஆண்மையையும்) விருத்தி செய்யும் அவிதருவோராகிய சோமயாஜிகள் கர்மாபிவிருத்தியையடையட்டும்—(எ-று.) சோம யாஜிகள் சோமபான யாகஞ் செய்யும் யாக கர்த்தாக்கள். ஈவோர் கருமத் தோங்கல் எனக்கூட்டுக.

9. உனக்கென்றேயுண்ணுதற்காவுயர்கல்லிற்பிழிந்தசோம
மினிக்கவேமிகுதியாகவள்ளத்தினியைந்த;வேந்தன்
மனக்கினிவீயும்பானமண்டுகவாசைதீர்க்க;
பினர்ப்பொருளளிக்கவிச்சைகொள்ளுகபெரிதெமக்கே.

(இ-ள்.) (இந்திரனே!) நீ யுண்பதற்காகவே கல்லிற் பிழிந்த சோமங்கள் மிகுதியாகப்பாத்திரங்களில் நிறைந்துள்ளன. இந்திரனது மனத்துக்குச் சுகத்தைத்தரும் பானத்தை நீ குடிப்பாயாக. குடித்து ஆசைதீருவாயாக.

அஷ்டகம் 1. அத்தியாயம் 4

பின்பு எங்களுக்குச் செல்வந்தருமிச்சையை யடைவாயாக—(எ-று.) வேந்தன்மனக்கு இனிவு ஈயும் பானம் என்றது இந்திரபானமாகிய சோமத்தை வேந்தன் ஆறன்றுகை.

(வேறு.)

10. மழைநீரைத்தடித்தவிருணின்றதுவால்;விருத்திரன்றன்வயிற்றி
ஞப்பண்
மழைமேகமொளிந்தடைந்த:தவனடைத்தவாறுகளாமழைக்காற்
றண்ணீ
விழைவோடுந்தரையிலுளசரிவெல்லாம்வெள்ளப்பின் வெள்ளமாகக்
குழைவோடுமோடும்வகையிந்திரனுங்குறித்தடித்துக்குயிற்றினானே.

(இ-ள்.) மழை நீரைத்தடித்து வைத்திருந்த இருட்டும் இருந்தது. விருத்திரனுடைய வயிற்றில் மேகமானது ஒளிந்திருந்தது. அவ்விருத்திரன் அடைத்து வைத்த நதிகளாகிய மழைத்தண்ணீர் பூமியின் சரிவுகளிலெல்லாம் ஒன்றன்பினொன்றாய் வெள்ளமாக எல்லாப்பக்கமும் ஓடும்படி இந்திரன் அதனையடித்து யோட்டினான்—(எ-று.) நதிகள்; நீரையிலக்கணையாற்குறித்தது.

(வேறு.)

11. இந்திர வதனு லெங்கட் கிருமைநோய் தீர்க்குங் கீர்த்தி
யந்திலெம் மொன்னூர் தம்மை யடக்கும் பேருரமு மீக;
நந்து மெஞ் செல்வர் தம்மை ஞானியர் தமையு மோம்பாய்;
எந்தமக் களிப்பாய் பொன்னு மெழில்மகா ருணவு மின்றே.

(இ ள்.) இந்திரனே! நீ எங்களுடைய நோயை நீக்குங் கீர்த்தியையும் எங்களது பகைவரையடக்கும் மகத்தாகிய வலிமையையுந்தருவாயாக. உமது செல்வவான்களையும் ஸ்ரீகளையும் (வேதவித்துக்களையும்) பாதுகாப்பாயாக. எங்களுக்குப்பொன்னும், அழகியமக்களும், உணவுப்பொருள்களுமளிப்பாயாக—(எ-று.) எங்களைச் செல்வர்களாக்கிக் காப்பாயாக. ஞானிர்களாகிய ஸ்ரீகளையும் ரட்சிப்பாயாக எனப்பொருள்கொள்ளுவர். அற்றேல் 'நந்தெமைச் செலவராக்கிக் காத்திடாய் ஞானியோம்பாய்' என்று மூன்றாம் அடியைப் படிக்க. மகார், உம்மைத்தொகை.

வருக்கம் 17.

55. மண்டலம் 1. அநுவாகம் 10. சூக்தம் 5.

8 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷெ ஸவ்யன்; வடமொழிச்சந்தம்: ஜகதி; தேவதை: இந்திரன்

1. அவன்பெருஞ்சீராகாயந்தன்னினும்பேரிடமகன்ற;தவமேன்மைக்க
ணவனியெனுமிந்திரனேப்புடையொவ்வா;தரும்பலத்தோனச்ச
மூட்டு
மவன்,றுதிப்போர்க்காப்பதையைத்தவிப்பிப்போன்;காளைதனதரிய
கொம்பைக்
கவனமுறநீட்டுதலின்வச்சிரத்தைக்கூர்பெறவேகருக்கிற்பானே.

மண்டலம் 1. சூக்தம் 55

(இ-ள்.) அவனுடைய (இந்திரனுடைய) பிரபாவமானது ஆகாயத்தைக்காட்டிலும் விஸ்தீரணமாக நின்றது. அவனது மகத்துவத்தில் பூமியும் அவனை (இந்திரனை) ஒருவாறு ஒத்து நிற்காது. அரிய பலத்தோடு கூடி அவன் யமன் (பகைவர்க்குப் பயங்கரத்தைத் தருபவன்). ஸ்தோதாக்களாகிய மனிதர்களுக்காக அவர்களது பகைவர்கள் பரிதவிக்கும்படி செய்பவனும், காளமாடு (சண்டைக்காகக்) கொம்பைத் தீட்டுவதுபோல அவன் வச்சிராயுதத்தைக் கூராக்கும்படி சாணையிற் றீட்டுவான்—(எ-று.) கருக்கித் தீட்டுவான், தீட்டுவான்.

2. அந்தரத்திற்றடமகன்றுபரந்துள்ளதிகளினையர்ணவம்போற்
சந்தரமாயேற்றவற்றைப்பெய்விப்பா;னதுவன்றிச்சோமபானத்
தும்மணக்காளையைப்போன்டந்திவெர; னிந்திரனுமுதழும்போரின்
மூன்றுறுநல்வலியிருத்தவீரனென்னுஞ்சஹாதனமாமொழிவேட்டானே.

(இ-ள்.) இந்திரன், அந்தரிட்சத்தில் விஸ்தாரமாகப் பரந்துள்ள மழை நீரைச் சமுத்திர மேற்பதுபோல முன்பு தானேற்றுப் பின் பெய்விப்பான்; அமிதல்லாமல் சோமபானஞ் செய்யப் போரும்போது உற்சாகத்தோடு கூடிய விருஷபம் போல நடந்து போவான். யுத்தத்தில் இந்திரன் ஸஹாதனமான வலிமை பொருந்திய வீரனென்னும் ஸ்தோத்திர மொழியைக்கேட்டுக் விச்சிக்கிறான்—(எ-று) நதி நீரென்பதை யாருபெயராற் காட்டிற்று என்பதை மேல் மண். 1, சூக். 54, செய். 10ல் கூறினார்.

3. புசிக்கவெனவன்றுநீயிந்திரவப்பருப்பதத்தைப்பொழியுமாறு
நசுக்குவையா;ளவிறந்தசெல்வமதைத்தரிப்பவரைநாடியாள்வாய்;
இசைக்குரியகாரியங்களாற்றுவதிற்றேவர்களினென்றுமுன்வந்
தசைக்கரியவுக்கிரனுய்விளங்கியெலாத்தொழிற்குமுன
ரணைவானன்றே.

(இ-ள்.) இந்திரனே! அம்மேகத்தைப் புசிப்பதற்காக அல்ல, மழை பொழிவதற்கென்றே நசுக்குகிறாய். அளவில்லாத செல்வத்தைத் தாங்கிய (சூபோன் முதலாகியவர்களையும்) நாடியாளுகிறாய். அவ்விந்திரன் கீர்த்தி தரும் காரியங்களைப் புரிவதில் தேவர்களுக்கு முந்தின உக்கிரனுய் எல்லாத் தொழிற்கண்ணும் முன்னிற்கிறான்—(எ-று.) பர்வதம் மேகமென்பார் சாயணர், மலையென்பார் மேனுட்டாசிரியர். முன்னிரண்டடி முன்னிலையாகவும் பின்னிரண்டடி படர்க்கையாகவும் கூறினார். இது வேதத்தில் ஸஹஜம்.

4. இனத்துமனிதருக்கெதிரிலிந்திரமொய்ம்பவன்காட்டுமெல்லைச்
சார்ந்த
வனத்திலவனேவணங்குமவர்தங்கள்வசனத்தால்வாழ்த்துப்
பெற்றோன்;
மனத்தினியதேனுவைமகவாஞ்சேமமுனிமருவிக்குங்கா
னனற்கினியவிடபமாயாகத்தேருவப்பவனுயுதுகின்றானே.

(இ-ள்.) மனிதருக்கு முன் தனது இந்திர வலிமையைக் காட்டும் போது, காட்டில் அவனை (இந்திரனை) நமஸ்கரிக்கும் ரிஷிகளது வசனத்தினலவனே வாழ்த்தப்படுவன். யாக கர்த்தா (இந்திரன்தரும்) பாதுகாப்பையெண்ணித் தேனுவை (ஸ்துதி வசனங்களை)ச் சேர்க்கும்போது, யாகஞ் செய்வோன் விரும்பும் விருஷபமாக (இச்சைகளை யப்பளிப்பவனுக) இந்திரன்

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

எதிர்ப்படுகிறான்—(எ-று.) தேஜஸ் என்பதற்குப் பசுக்களென்று பொருள் கொள்ளின் விருஷபம் காளையென்னும் பொருளேயேற்கும். பின்னிரண்டடிக்குச் சாயணருரை வருமாறு:—"அந்தவிருஷன் (இச்சையை யளிப்பவன்) விரும்பத்தக்கவன், தன்னாலுகிய யஜமானன் இந்திரனுக் காக்கப்பட்டு எப்போது ஸ்துதிவாக்கியத்தைத் தூண்டுகிறானே அப்போது வருஷனும் (ஹவிப்பொருளை வருஷிப்பவனுகிய விந்திரனும்) எதிரொலி தருகிறான் அல்லது புருஷர்களுக்கு யாகத்தில் ருசியையூட்டுகிறான்." என்பது.

5. பெருஞ்செருவில்வனேதான்பிறர்பலத்தைச்சோதித்துப்பிறங்கு
மொய்ம்பி
னரும்பொருஞன்; றுதியாளர்பொருட்டாகக்கொலைக்கருவியாகுஞ்
சம்பங்
கிருந்தறவேயோச்சியபிற்,சோதியுனோனிந்திரன்றனிடத்துமாந்த
ரொருங்கினெவரும்விசுவாசத்தனேக்கையேற்றிட்டாருண்மை
தானே.

(இ-ள்.) பெரிய யுத்தங்களில் பிறர் பலத்தைச் சோதித்துப்பார்க்கும் பலத்தோடு சண்டை செய்பவன் அவனே (இந்திரனே). ஸ்தேர்த்திரஞ் செய்யும் ஜனங்களைக் காப்பாற்றுவதற்காகக் கொலைக்கருவியாகிய சம்பத்தை (வச்சிராயுதத்தை) வீசினபிறகுதான், சோதியோடு கூடியவனுகிய இந்திரனிடத்து மனிதர்கள் உண்மையான நம்பிக்கை வைக்கத் தலைப்பட்டனர்—(எ-று.) இந்திரன் பலவான் என்னும் நம்பிக்கையை மனிதர்கள் வைக்கத்தலைப்பட்டன்றென்க. சம்பம், வச்சிராயுதம்.

6. புகழ்விரும்பிப்புவியெனத்தன்வலிமிகுந்துநிருத்திமமாப்புரிவாள்
கோட்டை
யுகல்விரும்பியிடித்தழிப்பானனனினும் வான்முயங்குமொன்றல்
சோதித்
தகவெளிர்வான்றடைநீக்கி,யாகமதைப்புரிவோர்க்காத்தகைசால்
செய்கை
யிருமவனும்வெள்ளமதைச்சாளமதாயொழுகும்வணம்விடு
விப்பானே

(இ-ள்.) கீர்த்தியை விரும்பித், தனது பலம் பூமியைப் போற் பெருத்திருக்கானைக், திருத்திருமமாகச்செய்யப்பட்ட அசுரபுரங்களழியவேண்டுமென்றெண்ணி, யவற்றை யழிப்பானுனும், நற்செய்கைகளிற் சிறந்தவன் (இந்திரன்) யாக கர்த்தாக்களுக்காக வானத்தில் விளங்கும் பல சோதிகளையும் பிரகாசிக்கவிட்டு மழைவெள்ளமானது தாளம்போலிடும்படி செய்வான்—(எ-று.) நிருத்திமம், சூது, வஞ்சனை.

7. சோமம்மகுடிப்பவனேயுன்மனமுந்தான்மதிற்சுவையின்வைகல்;
வாமதுதிசெவிக்கொள்வோயுன்பரியையிம்மகத்தின்மார்க்கஞ்
சேர்க்கல்;
ஏமமுறவிந்திரனேமாவல்லோர்வினவினைவையென்றுமோர்வார்
சேமமுறுசாதிகளுன்னளவும்பகைவருனேச்செகுத்திடாரே.

(இ-ள்.) சோமபானியாகிய இந்திரனே! உன் மனம் தானஞ் செய்வதிற் பொருந்தட்டும். அழிய வச்சனங்களைக் கேட்பவனே! உன் குதிரை

மண்டலம் 1. சூக்தம் 56.

களிரண்டையும் இந்த யாகசாலையை நோக்கித்திருப்புவாயாக இந்திரனே! கடிவாளத்தைப் பிடித்துக் குதிரைகளையடக்கி நடத்துபவரும், செய்கைத் தவற்றினால் வரும் பிரதிகூலத்தை யுணர்பவருமாகிய சாரதிகள் உன் தேர்களோட்டுமளவும், ஆயுதந்தரித்த பகைவர் உன்னை இம்சிக்கமாட்டார் கள்—(எ-று.)

3. வற்றுதபொருளதனையிருகர்த்துங்கொடைவிமித்தமணியாக் கொண்டா,
யற்றுகவுன்னுடலும்,புகழ்பரந்தோ,யழிவில்வலியணைந்துகின்ற,
அற்றுரு,நீரெடுப்போர்சூழ்ந்திடுங்கூபங்களெனவுன்னங்கங்கள்
பெற்றுரும்பெருஞ்செயலாலிந்திரனேமிகப்பெருகிப்பிறங்குமாலோ

(இ-ள்.) கீர்த்தி மிகுந்தவனே! கூயாஹிதமான பொருளை இரண்டு கைகளாலும் தானத்தினிமித்தம் ஏந்துகிறாய். உன் சரீரம் பலகைவரால் அழிக்கமுடியாத வலிமையை யடைந்துள்ளது. தண்ணீரிறைப்பவர்கள் இணறுகளைச் சூழ்ந்து நிற்பதுபோல, இந்திரனே! உனது சரீரத்தின் அங்கங் களெல்லாம் விருத்திரவதம் போன்ற பெரிய காரியங்களால் நிறைந்திருக் கும்—(எ-று.)

வருக்கம் 20.

56. மண்டலம். 1. அநுவாகம் 10. சூக்தம் 6.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மெ ஸ்யன்; வடமொழிச்சந்தம்: ஜகதி; தேவதை: இந்திரன்.

1. வடவையொடுகிரீடிக்கவெழுங்குதிரையெனவிவணுமகத்தோன் வைத்த
விடமதிற்பெருண்கலத்தேயுளசோமங்குடிக்கமனமெழவே தூண்டி
யுடன்மயமாயரிபூட்டியையிரதமொளிவாய்ந்ததடனிறுத்தித்,
திடமுறவேபெருஞ்செயல்களாற்றும்வலிபெறச்சோமஞ்சிறந் துண்பானே.

(இ-ள்.) பெண் குதிரையோடு கிரீடிக்கவெழும் ஆண் குதிரை யைப்போல, இவ்விந்திரன், யஜமானன் சேகரித்து வைத்துள்ள பெரிய உண்கலங்களிலுள்ள சோமத்தைக் குடிப்பதற்குத் தன்மனமெழுகையாற், றன்னைத் தூண்டிப், பொன்மயமாய் இரண்டு குதிரைகள் பூட்டப்பெற்றுப் பிரகாசத்தோடு கூடிய தனது தேரை நிறுத்திப், பெரிய காரியங்களைச் செய்யும் வன்மையை யடையச் சோமத்தைக் குடிப்பான்—(எ-று.) உடல் பொன், தங்கமென்னும்பொருட்டு.

2- பொருள்கூட்டுமனமெழுந்தவாணிபர்கள்பரவையின்மேற்போவரார் நேரப்
பொருளேந்துதியாளரவற்சூழ்ந்துவணக்கமொடுபோற்றிற்பர்;
சுருளோதித்தோகையர்கள்மலையேறிப்பூத்தொகுக்கத்தேயவ தென்னைப்
பொருடோயுந்துநிபுரிவீர்யாகபதியுரம்விரைந்து புகழுவீரே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

(இ-ள்.) பொருள் சம்பாதிக்க விரும்பிய வியாபாரிகள் சமுத்திரத்தின் மேலும் போவதுபோல நல்ல ஸ்துதிகளைக் கூறுவோர் (தாங்கள் பொருள் பெறும் நிமித்தம்) அவனை (இந்திரனை)ச் சூழ்ந்து வணக்கத்துடன் ஸ்தோத்திரஞ் செய்வார்கள். காமினிகளாகிய ஸ்திரீகள் (தங்களுக்கிஷ்டமான) பூக்களைச் சேகரிப்பதற்காக மலைகளின்மே லேறுவதுபோல, ஸ்தோதாக்களே, யாகபதியாகிய இந்திரனது வலிமையை ஸ்துதியுங்கள்—(எ-று.)

3. அயகவசமணிந்தவன்முரணினரைமிகநலிப்போனூர்ந்தமாயை
மயவசுரன்சுட்டுணனைத்தாமணியாற்சிறையகத்தேமதத்தாற்கட்டுஞ்
சயமுடையனுனமகான்றுகள்கதுவாதெதிரிகளைச்சாட,நாகத்
துயர்சிகரமொளிர்வதென,வவனுண்மைபோரிட்டதேயொளிரு
மன்றே.

(இ-ள்.) இருப்புக்கவசத்தை யணிந்தவனும், சத்துருக்களை வாட்டுபவனும், மாயையிருந்த வசுரனுகிய சுஷ்ணனைக் கயிற்றுற் காராக்கிருஹத்திற் கட்டும் ஜயசீலனும், மஹானும் (ஆன இந்திரன்) தனக்குத்தோஷம் நேராதபடி பகைவர்களைச் சாடும்போது, அவனது ஆண்மை மலைச்சிகரம் விளங்குவது போல யுத்தத்தில் உன்னதமாகப் பிரகாசிக்கும்—(எ-று.)

4. வைகறைக்காலந்தன்னிற்குரியனுமுடன்செலல்போல்வண்மை
யென்னு
மெய்குலவுதேவியினதாமுழுனல்வளர்த்துற்றுவேந்தின்பக்கல்
வெகுடிமைக்காலமடங்காவலியோடிருள்சீத்துவானனனு
மொய்குலிற்பெருந்தூளியெழுப்புவான்பகைவனைத்தமொய்ம்பி
னுடே

(இ-ள்.) விடியற்காலத்திற்குப்பின் சூரியன்றோற்றுவது போலப் பலமென்னுந்தேவி உன்னுல் வளர்ச்சியடைந்து இந்திரனது பக்கத்தில் நிற்கும்போது அடங்காத வலிமையோடு இருளைக்கெடுத்துப் பெருமையின் வளருகின்ற அவனிந்திரன் சத்துருஸம்ஹாரஞ்செய்த உற்சாகத்தினுல் எழுந்த சப்தத்தோடு பெருந்தூளியைக் கிளப்புவான்—(எ-று.) உன்னுல் என்பதற்குச் சோமத்தால் என்று பொருள் கூறுவர் மேனட்டாசிரியர். உனது (ஸ்தோதாவினது) ஸ்தோத்திரத்தால் என்பார் சாயணர். இருள்சீத்து, அந்தகாரரூபமாயுள்ளவிருத்திரன் முதலானவர்களைக் கொன்று என்பது பொருள்

5. விருத்திரனுன்மறைக்கப்பட்டாருயிருக்காதரவா மெலிவினீரை
யிருத்திநீயசைவிலாதந்தரத்துப்பலநிக்குமியைத்துப்பின்னர்,
உரத்தின்மிகுமிந்திரனே,தனமெளிதிற்றரும்போரினுவந்துசோமம்
வருத்தியநன்மதவலியாலவற்கொன்றபோதுவெள்ளமழைதந்தாயே.

(இ-ள்.) வலிமிகுந்த இந்திரனே! விருத்திரனுல் மறைத்து வைக்கப்பட்ட பிராணிக்கூட்டங்களுக்கு ஆதாரமான தண்ணீரை யசையாதபடி அந்தரத்திற் பலதிக்குக்களில் நிறுத்திப், பின்பு செல்வமெளிதாகக் கிடைக்கக்கூடிய யுத்தத்தில் சோமங் கொடுத்த மதவலியினுல் இவ்விருத்திரனைக் கொன்றபோது, மழைநீர் வெள்ளமாகக்கீழிழியும்படி செய்தாய்—(எ-று.)

6. இந்திரவுன்மகத்துவத்தால்வானிருந்துபூதலத்தே,யெச்சகத்துஞ்
சுந்தரமாயுயிரோம்புமழைநீரைநிலப்பிப்பாய்;சோமமார்ந்தி

மண்டலம். 1 சூக்தம் 57.

நந்தமதக்களியெய்திமுகிலீரைவீழ்த்துங்காலுடிக்கல்லான்
முந்துறும்பல்காவலினேவிருத்திரற்குவாய்த்தவற்றைமொய்ம்மிற்
றீர்த்தாய்.

(இ-ன்.) இந்திரனே! உன்மகத்துவத்தினால் விண்ணிடத்திலிருந்து பூமிப்பிரதேசத்தில் எல்லாச்சகத்துமுள்ள உயிர்களுக்காதாரமான மழைத்தண்ணீரை நிலைக்கச்செய்வாய், சோமத்தைக்குடித்து மதத்தினால் ஸந்தோஷத்தை யடைந்து மேகரீரை வீழ்த்தும்போது விருத்திரனுடைய கல்லால்னாலான காவல்களை உன்னுடைய பலத்தினால் அழித்தாய்—(எ-று.)

வருக்கம 21.

57. மண்டலம் 1. அநுவாகம் 10. சூக்தம் 7.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி ஸவ்யன்; வடமொழிச்சந்தம்: ஜகதி; தேவதை: இந்திரன்.

1. பெருங்குணத்துப்பெருஞ்செல்வப்பெருந்தானஞ்சிறக்தோற்குப்
பிறங்குமுண்மை
யருந்திறலோற்கென்றுரையையாக்குவென்மெய்பெருத்தோற்கின்
கணையுமொய்ம்பிற்
பெருந்திறலும்பள்ளமிழிபுனலெனவேதக்கரிதாப்பெருக,
வெங்கும்
பொருந்துயிர்க்கட்பரவுநிழல்பலமளிப்பான்றிறந்துவிடும்
புகழினுக்தே

(இ-ன்.) சிறந்த குணத்தோடு கூடியவனும், பெரிய செல்வத்தோடு கூடியவனும், தானத்திற் சிறந்தவனும், உடலின்து ஆகிருதி பெரிதாகவுள்ளவனும், பள்ளத்திற்பாயும் நீரைப்போலத்தடுக்க முடியாத ஆற்றல் சிறந்து நிற்கப், பல ஜீவர்களிடத்து வியாபித்து நிற்கும் செல்வத்தைத் திறந்து விட்டுத் தானஞ் செய்பவனுமாகிய இந்திரனைக்குறித்து எனது (மண்ணியமான) ஸ்தோத்திரத்தைச் செய்வேன்—(எ-று.) நிழல், செல்வம் அல்லது தனம்.

2. வெள்ளஞ்சூழிவ்வுலகுமுழுதும்பிணிஞாத்தொடர்ந்த,வேள்வி
வேண்டிப்
பள்ளமுறும்புனலெனவேயவிதருவோன்சவனங்கள்பரந்துசூழ
மெள்ளருஞ்சீரிந்திரன்கட்பொன்மயமாவோங்கியெவரோனும்
தன்னே
யெள்ளினருக்கிடுக்கணளிவச்சிரந்தூங்காதசலத்திறுத்தபோதே.

(இ-ள்.) மிகுந்த கீர்த்திவாய்ந்த இந்திரனிடத்துப் பொன்மயமாய்ச் சத்துருவதஞ்செய்வதிற் சிறந்த வச்சிராயுதமானது (மேகமாகிய) மலையினுச்சியில் (அல்லது விருத்திரன்மேல்) ஜாக்கிரதையாயடித்த (மேகத்தைபினர்த்த) பின்னர் இவ்வுலக முழுவதும் (உன் சம்பந்தமான) யாகத்தின் பொருட்டு உன்னேப்பின்தொடர்ந்தன. ஹவிஷ்மந்தனது யக்ஞப்பொருள்கள் பள்ளத்திலோடும் நீரெனப்பரந்து உன்னேச்சூழும்—(எ-று.) ஹவிஷ்மந்தன் அவிப்பொருளோப்படைத்தவன்.

3. மீமனுக்குத்தம்பம்போற்றிற்குரியவனுக்கிம்மிகத்துப்பேசுமின்று
சேமமுறவியுணைவச்சேர்த்திடுவாயுஷேனீ; சீர்த்திவாய்ந்த

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

தாமனையிந்திரமொய்ம்பார்சோதியைத்தோத்திரம்புரிவோர்சால்புத்
தேரும்
வாமனையிங்கவிபெறுவான்குதிரையுனக்கதித்தேகவயக்கிஞ்ரே.

(இ-ள்.) உஷாதேவியே! பயங்கரமானவனும் உத்தம ஸ்தோத்திரத்திற்கு பாத்திரனுமான விந்திரன்பொருட்டு இந்தயாகத்தில் இப்பெரிழுது ஹவிர்லக்ஷண வன்னத்தை நீ சேர்ப்பாயாக. கீர்த்திமிகுந் தாமனும் (எல்லாவற்றையுந் தாங்குபவனும்) ஐந்திரவலி பொருந்திய சோதியும் ஸ்தோதாக்களால் நன்றாக அறியப்பட்டவனுமான அவனைக், குதிரைதான் கருதிய இடத்தைநாடி விரைவாகச் செல்லுவதுபோலக், குறித்த வலியுண்டியை நாடிச்செல்லும்படி, கதியுள்ளவனாகச்செய்தார்கள் —(எ-று.). பீமன், பயங்கரமானவன். தாமன்எப்பொருளையுந்தாங்குபவன். வாமன்என்பது னதுகைபற்றிச்சேர்ந்தது.

4. பலர்போற்றுமிந்திரனேவிபுலதன்னாயகனே,பண்புவாய்ந்து
நலம்போற்றுமுன்றுணையைநேமியாமுன்னவரோடிணைவேம்;
பொலன்போற்றுந்திவிழைவோயுனையல்லாரெம்பாவைப்
பொருந்தாரன்றே
நிலம்போற்றும்பொருள்களினைவிரும்பலினென்றுதிவசனநோக்கேற்
பாயே.

(இ-ள்.) பலராலும் துதிக்கப்படுபவனே! இந்திரனே! மிகுந்த செல்வமுள்ளவனே! உன்னை யாச்ரயித்து நடக்கும் யாங்கள் உன்னைச் சேர்ந்தவரேயாவோம். அழகிய துதியை விரும்புபவனே! உன்னையல்லாத பிறர் எமது பாக்களைப் பொருந்தி நிற்கமாட்டார். பூமியானது தன்னிடத்து ஓங்கும். வஸ்துக்களை விரும்புவதுபோல எங்களுடைய ஸ்துதிவசனங்களை நீ விரும்பிக்கைக்கொள்வாயாக—(எ-று.) நிலம் விரும்பலின் எனச்சேர்க்க. இன், உவமை யுருபு.

5. இந்திரவுன்வீரியமுமிகப்பெரிதா,முன்னவரேயாக்க;ளிந்த
நந்திறம்பரிறுதியாற்றுவோனெண்ண,மகவானேநாடிப்பூர்த்தி
பொந்தும்வகையாற்றுக;வுன்வீரியத்தைப்பின்பற்றிப்,புகல்பேர்
வாணும்
வந்தனைதரம்பெருக்கிற்,றிப்புவியுமுன்வலிக்கீழ்வணங்கிற்றன்றே.

(இ-ள்) இந்திரனே! உனது சாமார்த்தியம் மிகப்பெரியது..நாங்கள் உன்னைச்சேர்ந்தவர்கள்! மகவானே! இந்தஸ்தோதாவினது எண்ணத்தை நாடிப்பூர்த்திசெய்வாயாக பெரியவிண்ணும் உனது திறமையினலாக வே தனது பலத்தை விருத்திசெய்துகொண்டது. இத்தப் பூமியும் உனது பலத்துக்கு ளட்டங்கிநின்றது—(எ-று) வீரியம், சாமர்த்தியம், திறமை; பூர்த்திபொந்துதல், நிறைவுபெறல். பொந்துதல் நிறைச்சொல்.

6. வச்சிரத்தைக்கைப்பிடித்தலிந்திரனேயிடம்பரந்துவானர்ம்மேக
வுச்சிதப்பேர்மலியினைநீயொறுங்கும்வகையுன்குலிசத்தினைடத்தா
யங்கே
வைச்சதனைசூழ்ந்தளநீர்கீழ்நோக்கியோடும்வகைவயக்கியெங்கும்
பொச்சமிலாதோங்கும்வலிநீதனியேதாங்கினையாற்பொய்மை
யன்றே.

மண்டலம் 1 சூக்தம் 58.

(இ-ள்.) வச்சிரியே! இந்திரனே! விஸ்தீரணமான பெரிய அந்த மேகமாகிய மலையை (அல்லது விருத்திராசுரனை) நொறுங்கிப்போகும்படி உனது வச்சிராயுதத்தினலுடைத்தாய். அங்கே கட்டுப்பட்டுநின்ற நீர் கீழ் நோக்கியோடவிட்டாய்; ஓடவிட்டு எவ்விடத்தும் குறையாமல் பெருத்து நிற்கின்ற வலிமையை நீயே தனியாகப்படைத்தாய் (வேறொருவரும் பண்டக்க வில்லையென்றபடி.) இது சத்தியமாம்—(எ-று.)

வருக்கம் 22.

58. மண்டலம் 1. அநுவாகம் 11. சூக்தம் 1.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கோதமபுத்திரன் நோதஸன்; வடமொழிச்சந்தம் 1-5 ஜகதி, 6-9 த்ருஷ்டுப்; தேவதை: அக்கினி.

1. பலத்தினற்பிறப்படைந்தவ்மானவனுதித்ததுமேப்பாடீவாளல்;
நலத்தவோதாவாவர்ண்மகத்தவன்றன்றூதுவனுய்நடக்குங்காலை
வலத்தருளுசீர்மார்க்கத்தாலந்தரிட்சவுலகமதைமிக்கத்தோற்றித்
தலத்துறுமாமகமதனிலவிசுமந்து தேவர்பணிசாற்றுவானே.

(இ-ள்.) பலத்தினல் (அரணியைக்கடைவதால்) தோன்றும் மாண மற்றவன் அவன். அவன் பிறந்தவுடனேயே (தாயிடத்தற்கு மூடியாதவனுயிருப்பதால்) துன்பத்தைத் தருவான். ஹோமநிஷ்பாதகனுகிய அவன் யாக கர்த்தாவினது தூதனுகத் தேவர்களைக் கொண்டுவரச் செல்லும்போது அதற்குமுன் அமங்கலமாயிருந்த அந்தரிட்ச வுலகத்தைத்தான் செல்லும் மார்க்கத்தால் பலருக்கும் தெரியும்படிஒழுங்குபடுத்தோற்றி யாகத்தினிடத்திலுள்ள அவியைச்சுமந்து தேவர்களுக்கு பணிவிடைசெய்வான்—(எ-று.)

2. சரையடையான் சுவாலையாற்றான்வேண்டுஞ்சிறுதருப்பைச்சாப்
பிட்டுப்பி
னருகுறையும்பெருங்காட்டந்தனைப்பற்றிவிரைவினெரிநிலைக்கு
வேறும்;
மருவுபொருட்சுட்டழிக்கவெழுஞ்சுடர்கள்குதிரையெனமருவுங்
காற்றி;
யுரைதருமாகாயத்தினெழிலியெனப்பெருமுழக்கமோங்கிற்றன்றே.

(இ-ள்.) கிழத்தன்மையையடையாதவனுகிய அக்கினி தனது சுவாலைகளினல் தனக்கு வேண்டிய சிறு தருப்புகளைத் தின்று, பிறகு பக்கத்திலுள்ள பெரிய காஷ்டங்களைப் பிடித்துக்கொண்டு நிலத்திருக்கும் வண்ணமேறுவான். தம்மையடையும் பொருள்களைத் தவிக்கக் கருதும் சுவாலைகள் குதிரையைப்போலப் பளபளப்பாய்த் தெரியும். அப்பொழுது, ஆகாயத்திலுள்ள மேகமுழங்குவதுபோலப் பெரிய சப்தமான்து எழுந்தது—(எ-று.)

3. உருத்திரர்க்கும்வசுக்களுக்கும்புரோகிதனுய்த்தூதுவனுயுறைந்து
மிக்க
வருந்தியுடனிதாங்கித்தனம்பதிக்குமமரனுலகாயுட்காலம்

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

பெருத்தறையுமணிதரிடத்திரதமெனவிரைந்தோடிப்பேர்சால்
செல்வக்
கருத்தறுமன்னர்க்கேற்றவதைத்தேவன்சிறந்தீவான்கனகந்தானே.

(இ-ள்.) உருத்திரர்களுக்கும், வசுக்களுக்கும் புரோஹிதனுயும் ஹோதாவாகவுந் தங்கி அவர்களுக்காக அன்போடு அவிப்பொருள்களைச் சுமந்து (பகைவரது) தன்தைப் பறிக்கின்ற அமரனுகிய தேவன் (ஒளி பொருந்தியவன் அதாவது அக்கினி) ஆயுள் பெருத்த மனிதரிடத்து ரத மென்று சொல்லும்படி வேகமாய்ப்போய்ச், செல்வத்தை யெண்ணி ஸ்தோத் திரஞ் செய்யுமவர்களுக்குத் தக்கபடி சிரேஷ்டமான தனத்தை யளிப்பான் —(எ-று.)

4. வாயுவினுற்றூண்டப்பட்டக்கினியும்பெரொலியின்வளர்ந்துதன்னு
வேய்மொளிச்சுவாலையினுலெளிதாகப்பெருமரங்களேறுநிற்கும்;
பாயுமிடம்மெனநீமூப்படையர்யாவலெடும்,பாதபங்கள்
தீய,வொளியலைபாய்ந்தோய்,வனந்தாவுகெறிகறுப்பாய்ச்
சேருமன்றே.

(இ-ன்.) அக்கினியானது வாயுவினுற் பிரேரேபிக்கப்பட்டு மிகுந்த தொனியோடு வளர்ந்து தனது நாக்கிற்றேய்ந்த சேதியால் இலகுவாகப் பெரிய மரங்களில் ஏறிப் பற்றிக்கொள்ளும்; மூப்பையடையாதவனே! ஒளி பொருந்திய சுவாலையாகிய அலையோடு கூடியவனே! பாய்ந்து செல்லும் விருஷபத்தைப்போல (காளைமாட்டைப்போல) ஆவதோடும், மரங்கள் தீய்ந்து போகும்படி காட்டிற்றுவம்போது, நீ போன வழி கறுத்துப் போகிற்று—(எ-று.)

5. சுடர்ப்பல்லன்வாயுவினுற்சோதிக்கப்பட்டொளிர்வோன்றேயாக்
கூட்டத்
தடர்த்தொழுகுங்காளையெனவனமதனிற்சுடர்க்கூட்டமார
வென்றுந்
துடைக்கரியராஜத்தினிற்றன்றேசுவலியோடுமெதிர்தோன்றச்
செல்காற்
படைத்தபெருமச்சத்தாற்றுவரமுஞ்சங்கமும்பனிக்குமன்றே.

(இ-ள்.) சுவாலையே பல்லாகவுடையவனும், வாயுவினுற் பிரேரே பிக்கப்பட்டு வளர்பவனுமான அக்கினி, நிறைந்துள்ள பசுக்கூட்டத்தையடக் கித்திரியும் காளையைப்போலக், காட்டினிற்றனது சுவாலைக் கூட்டமானது நிறைய, என்றும் அழியாத (அசுத்தியமான) ராஜத்தினிடத்தே தன் தேஜோ பலந்தெரியும்படி செல்லும்போது, ஸ்தாவராஜங்கமங்கள் பயத்தினுல் நடுங்கு கின்றன—(எ-று.) ராஜம் ஆகாசம் என்பார் மேலுட்டாசிரியர். மரங்களி னின்றும் ஒழுகுங் கசிவு நீர் என்பார் சாயணர். தபுர்ஜம்பः சுடர்ப் பல்லன்.

வருக்கம் 23.

6. மக்களா லெளிதிற் போற்ற மருவுவோ யதிதி யோதா
பக்கமார் நண்பனென்னச் சுகத்தினைப் பகுப்போ யங்கீ,
யிக்கடலுலகின் மாந்தரிடத் தழகமைந்த பொன்னின்
மிக்குற வுனை யமைத்தார் மேன்மைசால் பிருகு வென்போர்.

மண்டலம் 1 சூக்தம் 58.

(இ-ள்.) மாந்தர்களால் எளிதிற் றுதித்தழைக்கக் கூடியவனே! யாத்தலத்துக்குவரும் அதிதியே! ஹோதாவே! பட்சத்தோடு கூடிய சிறு இதனைப் போலச்சுகத்தை யீபவனே! அக்கினியே! பிருகுக்கள் உன்னை மாந்தர்களுக்கு மத்தியில் அழகுவாய்ந்த பொன்னையமைப்பது போல (ஸம்ஸ் காரபூர்வமாய்) அமைத்தார்கள்—(எ-று.) பக்கம், பட்சம். ஒதா, ஹோதா வென்பதன் சிதைவு.

7. அங்கியையெழுநாவோனை யருமைவாய் மகஞ்செய்வோனைத்
தங்குறு மகத்தில் யாருஞ் சார்த்து முத்தமனைக் கீர்த்தி
பொங்கிய தூதனைப் புகல்வசு கூட்டுவோனை
யிங்குறு மவியின் வேட்டெற் கெனத் தனமிரப்பல்:

(இ-ள்.) அக்கினியும், ஏழு நாக்கோடு கூடியவனும், யாகம் செய்யும் ரித்விக்கும், எல்லாரும் யாகத்தில் பூஜிக்கும் உத்தமனும், ஹோதாவும், செல்வத்தை (வசுவை)க் கூட்டுபவனுமான அக்கினியை, இங்குள்ள அவியுணவோடு வணங்கித் தனமளிக்கும்படி வேண்டுவேன். (எ-று.) இச் செய்யுள் மேலுட்டாசிரியருரைப்படி செய்தது. ஆனால் மூலத்தில் ஸப்த ஜிஹ்வாவென்றுள்ளது. சாயணர், 'ஏழு ஹோதாக்கள், ரித்விக்குக்கள் யாகத்தில்வணங்கு முத்தமனும், தேவர்களைக் கூட்டி வருபவனும் ஆன அக்கினியை வணங்குகிறார்கள். எப்பொழுதும் செல்வத்தைக் கூட்டுபவனுகிய அவ்வக்கினியை ஹவிர்லக்ஷண அன்னத்தோடு வணங்கிக் கர்மபலனை ரக்ஷிக்கத்தை யாசிப்பேன்.' என்று உரை கூறுவர், அதற்குச் செய்யுள் வருமாறு:—

கேழுறுத்தம்ன மங்கி தேவரைச் சேர்ப்போன் றன்னை
யேழுபேர் மகத்தோர் யாக மிழைப்பவர் வணங்கா நிற்பர்;
மாழையை யென்றும் கூட்டி மவியை யுண்டியின் மதித்துத்
தாழுவே னரதங்க டருகென யாசிப்பேனே.

8. முன்பினிற் பிறந்த சூலு மொய்த்த பன்னட்பின் மிக்கோய்!
அன்பர் நிற்றுதிப்போர்க் கிற்றை யழிவிலாச் சுகமளிப்பாய்;
உண்பன பெற்றே யங்கி யுயரயத் திடமார் காப்பா,
லன்பொடு முனைத்துதிப்போன் பாபங்க ளகற்றிக் காக்கல்.

(இ-ள்.) வலியினால் (முறுகக்கடைவதனால்) உண்டான புத்திரனே! மித்திரர்களிற் சிறந்தவனே! (அல்லது அதுகூல சோதியோடு கூடியவனே!) உன்னைத் துதிக்கு மன்பர்களுக்கு இப்பொழுது அழியாத சுகத்தைக் கொடுப்பாயாக. உண்ணும் பதார்த்தங்களிற் றேன்றியவனே! அக்கினியே! இரும்புபோல் உறுதியாகவுள்ள காவலினால் உன்னைத் துதிக்கும் யஜமான்னது பாபங்களை நீக்கி யவனை இரட்சிப்பாயாக—(எ-று.) நாம் உண்ணும் உணவிலிருந்து ஜடராக்கினி வளர்வதால், 'உண்பன பெற்றோய்!' என்றார்.

9. ஒளிமிகு மங்கி யுன்னை யோம்புவோற் கில்ல மாகல்;
ஒளிமிகு தனத்தோ யாக முஞற்றுவோர்க் களிக்க லின்பம்;
ஒளிமிகு துதியாளர்தம் பாவத்தை யொறுத்துக் காக்கல்;
ஒளிமிகு செயற்செல்வத்தோ னுறுக வல்விரை விவ்வைகல்.

(இள்.) காந்தி பொருந்திய அக்கினியே! உன்னைத் துதிப்பவர்க்கு நீ (கஷ்டத்தை நீக்கும்) வீடாக விருப்பாயாக. ஒளி பொருந்திய தனத்

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

தோடு கூடியவனே! (மகவானே!) யாகஞ் செய்வோருக்குச் சுகத்தை யளிப் பாயாக. நல்ல ஸ்துதிகளைச் செய்பவர்களைப் பாபத்தினின்றும் நீக்கிக் காப்பாயாக. கீர்த்தி பொருந்திய செயலினுற் பெறுஞ் செல்வத்தோடு கூடிய அக்கினி இவ்விடியற்காலத்தில் விரைவாக வீங்கு வரட்டும்—(எ-று.) நான்காமடி முன்னிலைப் படர்க்கை மாற்று. மகவான், தனவான்.

வருக்கம் 24.

59. மண்டலம் 1. அநுவாகம் 11. சூக்தம் 2.

7. இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கோதமபுத்திரன் நோதஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அக்கினி.

1. அங்கியே யிதரத்தீக்களுன்கிளை; யமார்யாரு
மங்கலிலுன்வாய்ச் சாலமகிழ்வர்; மக்கட்கணுர்ச்தேய்!
தங்குறு தூணேபோலத்தாங்குவாய்தரணியோரை,
யங்கமாயவர்க்கு மத்தி யமைவுறு நாபி யாவாய்.

(இ-ள்.) அக்கினியே! மற்ற நெருப்புக்கள் உனது கிளைகளாம். மரணதர்மமில்லாத தேவர்கள் உன்னிடத்து மிகவும் மகிழ்வார்கள். மனிதர்களிடத்து (ஜடராக்கினி ரூபமாக) நிறைந்திருப்பவனே! (வீட்டைத் தாங்கும்) தூணைப்போல் பூமியிலுள்ளவர்களைத் தாங்குவாய். அவர்களுக்கு மத்தியில் நாபியைப்(கொப்பூழ்)போல நிற்கிறாய்—(எ-று.) வைச்வாநர, மக்கட்கணுர்ச்தேய். மனிதர்களிடத்து ஜடராக்கினி ரூபமாய் நிறைந்தவனே யென்பது பொருள்.

2. வானத்தின் சிரமாம்; வையம் வயங்கிய கொப்பூ ழாவான்;
வானத்தும் வையத்திற்கு மதிபதி யாஞ னங்கி;
ஞானத்தின் மலிந்த வார்யர்க் கொளிநலம் தருந் தேவாகத்
தானத்திற் படைத்தார்; வைச்சுவாநர தேவருண்னே.

(இ-ன்.) அக்கினி விண்ணின் சிரஸாம் (முக்கியமானவனும்). பூமியில் விளங்கும் ரகுகளும் (கொப்பூழாம்). வானம் பூமியிராண்டிற்கும் அதிபதியுமானன். வைச்வாநரனே! எல்லாத்தேவர்களும், ஞானவான்களாகிய ஆரியர்களுக்கு, ஒளி பொருந்திய தானசிலனுகிய தேவனுக உன்னை பிறப்பித்தார்கள்—(எ-று.) இடம் மாற்றைக் கவனிக்க. வைச்வாநரன் மனிதர்களிடத்து ஜடராக்கினி ரூபமாக நிறைந்தவன்.

3. அசைவிலாக் கிரண மென்றூழ்க் கமைந்தென வங்கிக் கண்ணே
யிசையொடு நரர்மெய் யுற்ற தீயினிற் செல்வ மேய்ந்தது;
உசிதமார் மலைக்க ணீர்க்க ணோடதிக்கண் மக்கட்க
ணிசைவுறு தனத்துக் கெல்லா மிறைவ னீயேயா மன்றே.

(இ-ள்.) சூரியனிடத்துச் சலனமில்லாத கிரணங்களமைந்ததுபோல அக்கினியாகிய வைச்வாநரனிடத்தில் செல்வம்அமைந்து நின்றது. பர்வதங்களிலும், ஜலங்களிலும், ஓஷதிகளிலும், மனுஷர்களிடத்திலுமிருக்கும் செல்வத்துக்கெல்லாம் நீயே ராஜாவாம்—(எ-று.) நரர் மெய்யுற்றதீ, வைச்வாநரன் ஏழனுருபுக ளும்மைத்தொகைக்கண்வந்தன.

மண்டலம் 1 சூக்தம் 59.

4. வான் புவிபரந்தாற் போல மகன்புகழ் வளர்ந்த தம்ம;
சான்பெறு வலிசா ரோதா, தகைமைசார் மனித னேர்வான்,
கோன்பெறு வீரன், மெய்யே கொள்ளுறு வலிமை சார்நதோன்
மேன்மைசா னடையோன் வைச்சுவாநரர்க் கேய்ந்த மீப்பா.

(இ-ள்.) ஆகாயமும் பூமியும் பரந்து நின்றது போல அவர்களது புத்திரனுகிய அக்கினியின் புகழும் பரந்து நின்றது. வலிபொருந்திய ஹோதாவும், ஸ்தோத்திரம்பெறும் பிரபுவையொத்தவனும், யாவரையும் நடத்தும் வீரனும், உண்மையானவலியோடு கூடியவனும், நடையிற் சிறந்தவனுமான வைச்வாநரனுக்குப் பலவித ஸ்தோத்திரப்பாட்டுகள் அமைந்தன—(எ-று) ஓதா, ஹோதா. அக்கினி, வானம் பூமிகளுக்குப் புத்திரன்.

5. வயிச்சுவாநரனே ஜாதவேதஸ பெரியவானுன்
சயிக்கொணு மகிமை தன்னைச் சார்ந்ததேயில்லை; நீயு
மயிர்க்கொணு வாசனுவா யணிமன வம்மாந்தர்க்கே;
செயிர்த்திடு போரிற் றேவர்க்காகவே சேர்த்தாய் பொன்னை.

(இ-ள்.) வைச்வாநரனே! ஜாதவேதஸனே! (ஸர்வக்ஞனுகிய அக்கினியே, யென்றபடி) பெரிய வானமும் உனதுமகிமையடைந்ததில்லை. நீயும் நன்மனமுள்ள மனிதக்கூட்டத்துக்கு அரசனும். யுத்தத்தில் தேவர்களுக்காகவே (அசுரர்களிடத்திலிருந்து பிடுங்கின) தனத்தைச்சேர்க்கிறாய்-(எ-று.) வான் உம்மைத்தொகை.

6. விருத்திரற் செற்ற னென்று விழைந்து பூரவர் சேவிக்கும்
அருத்து நீர் மழையளிக்கு மாண்மையோன் மகிமை யின்றே
பொருத்துவென்; தாசற் கொன்றன் புகனரர் மெய்புகுந் தீ
வருத்தினன் சம்பரன்னை மழைமுகி லொழுக்கினனே.

(இ-ள்.) விருத்திரனைக் கொன்றனென்று பூரவர்கள் (பூருவின் மக்கள், ஜனங்கள் என்றபடி) வணங்குகின்ற விருத்திரனுக்கு சரணமான காலையினது மகிமைகளைச்சொல்லுவேன். இந்தவைச்வாநரன், க்ரியவிகினஞ்செய்யும் தஸ்யுவைக்கொன்றன். சம்பரனைவாட்டி (யவன் அடைத்துவைத்திருந்த) மழைநீரை ஓடவிட்டான்—(எ-று.) பூரவாகள், ஜனங்கள்; பூரு மக்களுக்கு ஒருமூதாதையாக எண்ணப்படுபவன். வைச்வாநரன் ஈண்டு மேகமத்திய நெருப்பாகிய் மின்னலைக்குறிக்கும். அத்தனுல்தான் இந்திரனுக்குக்கூறிய பெருமையையெல்லாம் அக்கிக்குக் கூறியது. இத் தூதி அக்கியும் இந்திரனும் ஒருகடவுள் தம்சமென்பதைக் காட்ட நின்றதென்றும் கொள்ளலாம். அருந்தும் அருத்தும் என வலித்தல் விகாரம்பெற்றது.

7. வயிச்சுவா நரன், விசுவ மனிதர்க்கண் மகிமை வாய்ந்தோன்,
குயிற்றிடு மகப் பரத்துவாசன் கும்பிடுவோ, னன்கே
பயிற்றிடு மொளியோ, னஙகி, பழகுமன் புண்மையோற்கா
வயக்கினன் புருதீதன் சாதவனேய னூறபோற்றே.

(இ-ள்.) வைச்வாநரனும், எல்லா மனிதரிடத்தும் மகிமையோடு தங்கியிருப்பவனும், யாகத்தினிடத்து பரத்துவாஜன் வணங்குவோனும், நலல ஒளியோடு கூடியவனும், பிரிய ஸத்தியவர்க்கோடு கூடியவனுமான அக்கினிக்காகச் சதவனியின் புத்திரனுன புருதீதன் நூறு (நூண்டுபல) ஸ்துதி

அஷ்டகம் 1. அத்தியாயம். 4.

கோச்செய்தான்—(எ-று.) தூறுயாகம்புரிபவன் என்பது சதவனியென் பதன் பதப்பொருளாம். சாதவனேய்ன் தத்திதம். புருமீதன் அவன் மகன் ஓர் அரசன்—சாயணர்.

வருக்கம் 25.

60. மண்டலம் 1. அநுவாகம் 11. சூக்தம் 3.

5 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கெ தோதஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அக்கினி.

1. வன்னியைக் கீர்த்தி யோனை, வளர்மக கேது தன்னை,
யுன்னியே காப்பான் றூதன் றேவரோ டுறுவான் றன்னை,
மன்னிய மாதரிச்வான் வழங்கினன் கீர்சால் செல்வ
மென்ன; வத்துவிசன் றன்னைப் பிருகுவீ ரட்பேற்றனே.

(இ-ள்.) அவியைச் சுமப்பவனும் (வன்னியும்), கீர்த்தி வாய்ந்த வனும், யாக கேதுவும், நன்றாக காப்பவனும், தூதனும், அவியளிக்கும் போது தேவரோடொருவனாய் வருபவனும் ஆன அக்கினியைப் பிரசஸ்த மான செல்வத்தைப்போல மாதரிசுவான் கொண்டுவந்து கொடுத்தான். அந் தத் துவிஜனை (இருப்பிறப்பாளனான அகினியை)ப்பிருகுவும்ரட்பாளனைப் பெற்றான் (புத்திரனைப்பெற்றானென்பதும் ஒன்று)—(எ-று.) வஹ்நி வன்னிசுமந்துசெல்பவன்ஈண்டுஅவியைச்சுமப்போன்.மகனேது,யக்ஞத்தைப் பிரகாசிப்பிப்பவன்.துவிஜன் நியாவாபிருதிவி (வானம்பூமி) களுக்குப்பிறந்த வன், அல்லது இரண்டு அரணிக்கட்டைகளிற் றோன்றியவன். ரட்பு என்ப தற்கு வடமொழியில்ராதி:என்றுள்ளது. அதற்குமித்திரன் என்றுதைத்நிரீயத் நிற்பொருள்ளது. சிலர் புத்திரனென்றும்சொல்லுவார்கள். மாதரிச்வான்வாயு வென்பார் சாயணர். அரணியைக் கடைவதற்குமுன் மறைத்திருந்த அக்கினி யை, விவஸ்வனது தூதனாக நின்று ஆகாசத்திலிருந்து கொண்டுவந்தவன் என்பார் மேனாட்டாரிரியர். இவர்மதப்படி நிக்வேதத்தில் மாதரிச்வான் என்னும் பதத்திற்கு வாயுவெனப் பொருள்கொள்வது பொருந்தாதது.

2. அரிய நல்லவியோ டாரு ஞான மர்த்தியர்க டேவ
ரிருவரு மவன்றனைக் கிணங்கியே சேவை செய்வார்;
கிருகற்பதி வேதாவாம் பூசியன்றனே யோதாவாய்
மருவுவிப்பார் மகத்தோர் மத்தி யெல்லுதிக்குமுன்னே.

(இ-ள்.) அவியைக்கையிலேந்தியவர்களாய் மேதாவிகளாகிய மர்த் தியரும்(மனிதரும்)தேவருமாகிய விருவருமவனுடைய ஆக்ஞைக்கிணங்கிச் சேவிப்பார்கள். கிரஹபதியும், சம்பலனேத்தரும் வேதாவும், பூஜ்யனும் (பூசிக்கத்தகுந்தவனும்)ஆன அவனை ஹோதர்வாகச்சூரியோதயத்துக்குமுன் (உஷஸ்காலத்தில்) யஜமானர்களுக்கு மத்தியில் (அத்வர்யுக்கள்) ஸ்தாபிக்கி றார்கள்—(எ-று.) அத்வர்யுக்கள், யாகப்பிராஹ்மணரில் ஒருவருப்பினர் ஹோதா, ஓதா, தேவர்களையழைப்பவன், தூதன். வே (dhi) தா, விதாதா அபிமதபலஸ்யகர்த்தா.

3. புதியது, நல்ல கீர்த்தி பொருந்திய, தெங்கள்போற், றிங்
கிதய மார்ந்தெழுந்த, தாயுள்படைததவர் மனுவின்மக்கள்

மண்டலம் 1. சூக்தம் 61.

பொதியவி யுண்டியோடு போற்றுவோர்போர் நேர்ந்தாலும்
வதிவிக்கு மதுவின்ரு லுவாய்ந்தவன் றன்னைச்சேர்க.

(இ-ள்.) நவதரமர்ணதும், ஸத்கீர்த்தியோடு கூடியதும் இதயத்திலிருந்து வந்ததுமான எங்கள் ஸ்துதி, ஆயுள் பீடைத்தவரும், மனுமக்களுமான மாந்தர்கள், அவியன்னத்தோடு போற்றுவோர் யுத்தம் நடந்தாலும் உற்பத்திசெய்து வணங்குகின்ற களிப்புத்தரும் நாக்கோடு கூடிய அக்கினியை யடையட்டும்—(எ-று.) ரித்விஜ: ரிதெளகாலேயஷ்டார: காலத்தில் அக்கினி வளர்த்து வணங்குபவர் இருத்துவிக்குக்களாம்; துதியடையட்டுமென்க.

4. மனிதர்கள் விரும்பும் பாவகன் வசு வரேணியன் பொன்
இனிதளி மகத்தி னேதா வெனத்தெரிந்தோன் மாந்தர்க்கா
மனமுறு தமன னில்லின் மகப் பதி யங்கி செல்வ
வின்முயர் தனத்தி னுத னுக வென்றுஞ் சிறக்க.

(இ-ள்.) மனிதர்கள் விரும்புகின்ற சோதகனும், வசுவும், வரேண்யனும், செல்வந்தருபவனும் யாகஹோதாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டவனுமான அக்கினி, மனிதருக்காக ராட்சஸர்களோயடக்குபவனும், கிரஹபதியும் செல்வங்களிற் சிறந்த தனத்துக்கு நாயகனுமாகச் சிறந்து நிற்கட்டும்-(எ-று.) பாவகன், பொருள்களேச்சோதிப்பவன். வசு, செல்வன், வரேண்யன், சிறந்தவன்.

5. வேதியி லுன்னை த்தூர்ய்மை விழைந்து மாவெனைக் கிளர்த்துங்
கோதமக் குடி யுதித்த குமசர் யாந் தண்பதியர
மேதமி லவிதாங் குன்னை மதியினு லேத்துவோர்மாற்;
போதுக விரைவின் வைகல் புந்தியாற்பொருள் பெற்றேனே.

(இ-ள்.) (போய்ச்சேரவேண்டிய விடத்துக்கு விரைவாகச்செல்லுங்) குதிரையைத் துடைத்துவைப்பதுபோல வேதியிலுன்னைக் கிளறிப் பிரகாசிக்கஞ் செய்யும் கோதமவம்சத் துதித்தயாம் (நோதஸன் என்றபடி) தனத்துக்குநாயகனும்நல்லஹவிஸைத்தாங்குபவனுமானவன்னைப் புத்திபூர்வமானஸ்துதிகளாற்போற்றுவோம். தியாவஸு (புத்தியிலுற்பொருள் படைப்பவன்) வாகிய அக்கினி வேகமாக அதிகாலையில் வரட்டும்—(எ-று.) யாம் மரியாதைப்பன்மை.

வருக்கம் 26.

61. மண்டலம் 1 அநுவாகம் 11. சூக்தம் 4.

16 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: டி நோதஸன்; வ்ருஷ்டிப்; தேவதை: இந்திரன்.

1. வலிமிகுத்துயர்ந்தோன் வேக மருவியோ னெதிர்க்கலாதான்
சொலுமிருக்கதனுக் கேற்ற தூய்குணப்பெரியன் பின்னர்ச்
செலுமியல்பில்லாவேந்தற் குயர்துதி யனம்போற் செய்வேன்,
பொலனுற முன்னே ரீத்த பிரமங்களோடு மாதோ.

(இ-ள்.) பலமுள்ளவனும், விரைவுள்ளவனும், பகைவராலெதிர்க்கமுடியாதவனும், சொல்லும் இருக்குக்குச் சமானமான குணத்திற்பெரியவனும், பின்செல்லு மியல்பில்லாதவனுமான விந்திரன்பொருட்டு, அழகாக முன்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 4

னேர் தந்த பிரஹ்மங்க (அவிக்குரிய அன்னங்கள்) ளோடு கூடிய உயர்ந்த தானியை (ருசியான) அன்னத்தைப்போலச் செய்து போற்றுவேன்—(எ-று.) இருக்கு ஸ்தோத்திரப்பாடல். பிரஹ்மம் ஹவிர்லக்ஷணமன்னமென்பார் சாயணர்.

2. புவியினிற் பகைவதைப்போ னிந்திரன் றன்னைச் சூழ்ந்தே
யவியென வோங்கும் பாவை யளிப்பெரு லதனை மெத்தச்
சவிபெறு குரலினோடு சாற்றுவேன்; நெல்பதிக்குக்
கவிகளே மனத்தாலுந்தக் காரணத்தா லதிவாற் சொற்றார்.

(இ-ள்.) பூமியில் சத்துருக்களே யிம்சிக்குமிந்திரனைச் சூழ்ந்து அன்னம்போல வோங்குகின்ற பாட்டுக்களே யான் அவனுக்களிப்பேன். அந்த ஸ்தோத்திரத்தை உரத்துக் கூறுவேன். பழைமையான பதியாகிய (இந்திரனுக்கு,) இதயத்தாலும் அந்தக்காரணத்தாலும் அதிவாலும் கவிகளே யிழைத்துப் (பிறஸ்தோதாக்களும்) சொன்னார்கள்—(எ-று.)

3. சுட்டென நின்று செல்வங் கூட்டுஞ்சீர்ச் சூரிதன்னை
யொட்டியே வளர்க்கும் வன்மை யுள்ளவை மதியாலான
மட்டறு தெளிசொல் லோங்குந் துதிகளே யுரக்க வென்ற
னிட்டமா ரவன்பொருட்டே வாயினு லேத்து வேனே.

(இ-ள்.) உபமானமாக நிற்பவனும், நல்ல தனமளிப்பவனும், பிரசித்திபெற்றவனுமான ஸூரியை (இந்திரனை) யடைந்து விருத்திசெய்பவையும், திறமைவாய்ந்தவையும், புத்தியினுலானவையும், ஸ்வச்சமானவசனங்களாலானவையுமான துதிகளே (எனக்குப்பிரியமான) அவ்விந்திரன் பொருட்டே வாயினுல் உரக்கக்கூறுவேன்—(எ-று.) என்றன் இட்டமார் என்னும் அடைவடமொழியிலில்லை. ஸூரி, வித்வான், ரண்டு இந்திரனைக் குறித்து நின்றது.

4. ஊர்பவ னன்னம் வேண்டி யுற, வவன் வேண்டுகோளுக்
கேர்பெறச் சமைப்போன் செய்த தேரென வெடுப்பமேமஞ்
சீர்பெறு மிருக்குஞ் செய்ய துதிபொறுத்திடு மேதைக்குக்
கூர்சிறப்பவியு மீண்டு கூட்டுவ லிந்திரற்கே.

(இ-ள்.) ரதத்திலேறிச்செல்பவன் அன்னம்பெறும்படி அவனது வேண்டுகோளுக்கிணங்கித் தச்சன் செய்துகொடுத்த தேரைப்போல ஸ்தோத்திரங்களால் சுமக்கப்பெறும் மேதாவிக்கு (இந்திரனுக்கு) க்கீர்த்திவாய்ந்த ரிக்குக்களும் நல்ல சஸ்திரங்களும் எடுத்துக் கூறுவேன். இந்திரனுக்கு உத்கிருஷ்டமான அவியும் சேர்ப்பேன்—(எ-று.)

5. அன்னத்தை யடைவான் மாவையணியிற் றேர்ப்பூட்டியன்ன
வன்ன விந்திரற் கோரர்க்க நாவினுற் றகைப்படுப்பல்;
மன்னுசீர் பரந்தோன் வண்மை மருவிய நிலய, நேரார்
தன்னிய புரம்பொடிப் போன்றுகளறு வீரன்போற்றி.

(இ-ள்.) அன்னப் பொருள்களிடத்து இச்சையுள்ளவன், குதிரையைத் தேரிற் பூட்டியதுபோல. அத்தகைய விந்திரனுக்கு ஒரு அர்க்கத்தை (சஸ்திரரூபமான மந்திரத்தை) யுருப்படுத்துவேன். கீர்த்திபரந்தவனும்,

மண்டலம் 1. சூக்தம் 61.

ாகைக்கோரிருப்பிட்மும், சத்துருக்களுடைய கோட்டைகளையழிப்பவனும், குற்றமற்ற வீரனுமான இந்திரனுக்கு நமஸ்காரம்—(எ-று.) அர்க்கம் சஸ்திர ரூபமானமந்திரம்.

வருக்கம் 27.

6. வலிமிகு மீசானன்முன் வலியொடு விருத்திரன்றன்
பொலிவுறு மருமத்தானம் புடைத்த வப்பகை யொறுக்கு
மலிவுறு செயன்மிகுந்த வச்சிரந்தன்னைக் கூராய்க்
குலவுறச் செய்தான் றேவக் கொல்லனு மவனுக் கன்றே.

(இ-ள்.) வலிமிகுந்த ஈசுவரியகாரணனான (இந்திரன்) தனதுபலத்தினால் விருத்திரனுடைய மருமதலிலடித்த கருவியும், பகைவரைத்தண்டிக்கும் பல சிறந்த கர்மங்களோடு கூடியதுமான அந்த வச்சிராயுதத்தைத் தேவக்கொல்லனான துவட்டா அவ்விந்திரனுக்காகக் கூராக்கிக் கொடுத்தான்—(எ-று.) துவட்டா தேவக்கொல்லனும்.

7. தாய்மகச் சவனந் தம்மின் மகிமைசார் விண்டு சோம
மேய்ந்த நல்லனத்தை யுண்டா னேநிலர் சமைத்தவற்றை
வாய்ந்துறவவ்வினன்; மற்றொருவனும் பகைவதைப்போ
னேய்ந்த வச்சிரதோன் மேக் வராகம் பேர்த்தெறிந் தானன்றே.

(இ-ள்.) ஸர்வஜகத்தையும் நிருமிக்கும் தாய்செய்யும் இந்த யாகாவ யவமாகிய மூன்று ஸவனங்களிலும் மகிமைபொருந்திய விஷ்ணு ஸோமத்தையும் அழகிய அன்னத்தையும் உண்டான். உண்டதும் பகைவர்களாகிய அசுரர்கள் பரிபக்குவப்படுத்தி வைத்திருந்த தனங்களை அபகரித்தான். பகைவதைப்பவனும் வச்சிரத்தை யோச்சுபவனுமான இந்திரன் மேகமாகிய வராகத்தைப் பேர்த்தெறிந்தான்—(எ-று) தாய் அதிதி. மூன்று ஸவனங்கள், காலை; மாலை, நடுப்பகல் மூன்றுகாலங்களிலும் செய்யப்படுவன. மேகமாகிய வராகம் ரண்டு விருத்திரனைக்குறித்தது. மேனுட்டாசிரியர் வேறு மாதிரியுரைகூறுவர். மலையினூடே யடித்துக் காட்டுப் பன்றியைப் பிளந்தான் என்பார். மற்று, அசை.

8. அகியினைக் கொன்றகாலை யவனுக் கவ்விந்திரற்கு
மிகுநடையோரே யேனு நின்றவர் தேவமாதர்
வெகுதுதி யிசைத்தார்; அன்னன் றேசினுற் புவிவான் சூழ்ந்தான்;
மகிமையி லுனைப் பரந்த வான்புவி சேர்ந்தெவ்வாவே.

(இ-ள்.) இந்திரன் அகியைக் கொன்றபோது, தேவ பத்தினிகள் கமனஸ்வாப முள்ளவர்களாயினும் நின்று (அர்க்கங்களை) ஸ்தோத்திரங்களை அவ்விந்திரனுக்காகச் செய்தார்கள். இவன் தனது தேஜஸினாற் றியாவாப்பிருதுவிகளை (புவிவானங்களை)க் கடந்து வியாபித்தான். (இந்திரனே) உனது மகிமை கூறுமிடத்து விசாலமான வானம் பூமிகள் சேர்ந்தும் உனக்குச்சமானமாகா—(எ-று.) அகி, பாம்பு, விருத்திரன். தேவமாதர், தேவபத்தினிகள், காயத்திரி, முதலியோரென்பார் சாயணர். இடமாற்றைக்கவனிக்க.

9. அவனது மகிமை மெய்யே யந்தரம் புவி வானத்திற்
சுவிமிதத்தது; போர்வீரன் றன்னெளி மிகுந்தோன் வேந்த
னெவர் தொழிலெனுஞ் செய்வோ னுயுத மெல்லாங் கொண்டோன்
குஷிமுகில் மோத விட்டான் கொள்ளலர்த் தெறுப்போன் போரில்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 4.

(இ-ள்.) உண்மையாகவே அவனது மகிமை, வர்ண், அந்தரம், பூமி யென்னும் மூன்று லோகங்களிலும் ஒளியோடு பரந்தது. யுத்த வீரனும், ஸ்வயமான காந்தியோடு விளங்குபவனும், எல்லாக் காரியங்களையும் செய்பவனும், எல்லா ஆயுதங்களையும் தரித்தவனும், யுத்தத்தில் பகைவரைக் கொல்லுபவனுமான விந்திரன் மேகங்களை (ஒன்றோடொன்று) மோதவிட்டு (மழையைப் பெய்விக்கிறான்)—(எ-று.)

10. தன்ன தாறற லினு விந்திரன் குலிசத்தைத் தாங்கி
மன்னுநீர் வற்ற வாற்றும் விருதத்திரப் பொடித்,தடைத்துத்
துன்னுமா வென்னுநீரை யுலகளிப்பதனைக் தோய்க்தான்;
கொன்னுறுமகத்தோன்கொள்ளுமனத்தினிற்பலனீந்தானே

(இ-ள்.) தன்னுடைய வல்லமையினால் விந்திரன் வச்சிராயுதத்தைக் கையிலேந்தி, ஜலம் சுஷ்கமாகப் போகும்படி செய்யும் விருத்திராசுரனை சின்ன பின்னப்படுத்தி, அடைத்து வைத்திருந்த பசுவென்று சொல்லத்தகும் நீரை, உலகத்தை ரட்சிக்கும் தொழிலுள்ளதைப் பெய்வித்தான். அவியளிக்கும் யஜமானனிடத்து ஸமான புத்தியோடு பொருந்தியவனுக்குக் கர்ம பலனைத் தந்தான்—(எ-று) மகத்தோன்-யாக கர்த்தா, யஜமானன்.

11. அவனெளி வலனிற் சத்த வாறுக டம்மிடத்தே
யவனது குலிச மார்ந்து நியமிக்க வமைந்து நின்ற;
நவநிதி செய்ய தாசுடற்கதை நல்கி நாடா
ரவமுற வழிபடுபான் றுர்வீதிக்கு நீர்த்துறை செப்தானே.

(இ-ள்.) அவனது காந்திசிறந்த பலத்தினால், அவனது வச்சிராயுதமானது நியமிக்க, ஏழு கங்கைகளும் தங்கள் தங்களிடத்திற் பொருந்தி நின்றன; தன்னைத்தானே (விருத்திரவதம் முதலிய செய்கைகளால்) ஈசான (பெருஞ்செல்வம் படைத்தவ)னுக்குச்செய்துகொண்டு அச் செல்வத்தைத் தாசுஷனுக்கு (யாக கர்த்தாவுக்கு)க் கொடுத்துப் பகைவர்களை வதைக்கு மவ்விந்திரன் துர்வீதிக்கு (அவன் தண்ணீரில் முழுகிப்போகும் தருணத்தில்) கால் நிலைக்கும் துறையை ஏற்படுத்தினான்—(எ-று.) சப்த கங்கைகளை மண். 1, சூக். 32, செய். 12ற் பார்க்க. துர்வீதி, இவன் வய்யனது மகன். ஒரு காலத்துத்தண்ணீரில் மூழ்கிச் சாக நின்றபோது இந்திரன் அவனுடைய கால் நிலைக்கும்படியான நீரிலவனைச் சேர்த்தான். மண். 2, சூக். 13, செய். 12, நோக்குக. இவனது பெயரை மண். 1, சூக். 36, செய். 18லும் மண். 1, சூக். 54, செய்யுள் 6லும் பார்க்க.

12. எல்லையில் வலியை யீயு மீச்சுர வோர் கணத்தே
மல்லுறக் குலிசந் தன்னை விருத்திரன் மடிய வோச்சாய்;
செல்லினின் றிழிய வெள்ளஞ் சாய்ந்துசேர் வச்சிரத்தாற்
கொல்லுமாக்கிழிப்பார்போலக்கணுக்களைக்கிழிதிடாயே.

(இ-ள்.) எல்லையற்ற வலிமையைத் தரும் ஈசானனே! சிக்கிரத்தில் விருத்திரன் சாகும்படி வச்சிராயுதத்தை வீசுவாயாக. சாய்ந்து விழுகின்ற வச்சிராயுதத்தினால், மேகத்தினின்று மழை வெள்ளமானது பூமியை நோக்

மண்டலம் 1. சூக்தம் 61.

கிக் கீழிழியுமாறு, உலகத்தவர் தாங்கொன்ற மாட்டைத் தோலுரிப்பதற்குக் கணுக்களைக் கிழிப்பது போல, விருத்திரனது (மேகத்தினது) கணுக்களைக் கிழித்தெறிவாயாக—(எ-று.)

13. போரினில் விரைந்து சென்று பூருவ காலந் தன்னி
னேரினிற் செய்த வெல்லா மியமுக நவ வுக்தத்தாற்
போரினிற் படைக ளோச்சிப் பொருந்தலர் தம்மை வாட்டக்
கூரிய கோபத்தோடு மவர்களைக் குமைக்கும் போதே.

(இ-ள்.) யுத்தத்தில் வச்சிராயுதம் முதலிய ஆயுதங்களை யெறிந்து பகைவர்களைக் கொல்லத்தக்க கோபத்தோடு அவர்களை இம்சிக்கப் போகும் போது, அவன் பழைய காலத்து யுத்தத்தில் விரைவாகச்சென்று செய்த அரிய செயல்களையெல்லாம் சேர்த்து நவீனமாக உக்தமொன்று செய்து (ஸ்தோதாக்களே!) சொல்லுவீர்களாக—(எ-று.) உக்தம், சஸ்திரம், ஸ்தோத்திரம்.

14. அவனிடத் துற்ற வச்சத் தவனி வானடுங்கு மற்றப்
புவனிபிற்சிறைபோமென்றுபொருப்பசையாவாம்; அன்ன
னிவணுறு துக்க நீக்கு முதவியைப் பலசூக்தத்தாற்
கவனமாய்ப் போற்றிப் பின்பே வீர நோதஸன் பெற்றனல்.

(இ-ள்.) அவனிடத்து (இந்திரனிடத்து) உண்டான பயத்தினால் பூமியும் வானமும் கம்பிக்கும். மலைகளும் (தங்கள் சிறகுகள் போய்விடுமென்ற) பயத்தினால் அசையமாட்டா. அவ்விந்திரன் உலகத்தாருடைய துக்கங்களை நீக்கும் உதவியைப் பல சூக்தங்களால் கவனமாகத் துதித்த பிற்பாடுதான் நோதஸன் வீரியத்தை யடைந்தான்—(எ-று.) நோதஸன் இச்சூக்தத்தைக் கண்ட ரிஷி. மேனுட்டாசிரியர் இரண்டாமடியை 'புவனியினுறுதி பூண்ட பொருப்புமே விதிர்விதிர்க்கும்.'' என்று மொழி பெயர்ப்பார்.

15. ஏகனுய்ப் பகைவதைப் போனியைந்த பஃறனத் தீசான்
னேகை யினேற்கு மச்சிருறுதி வயக்கப் பெற்ற;
சோகமில்சுவச்சுவன் சேய் சூரியனெடு போராடி
வாகையி னவனுஞ் சோமம்வழங்கு மேதசனைக் காத்தான்.

(இ-ள்.) ஒருவனுகவே நின்று சத்துருக்களை வதைப்பவனும், பலவித தனத்துக்கும் நாயகனுமாகிய விந்திரன் விரும்புகின்ற அந்தச் சிறந்த ஸ்தோத்திரங்கள் அவனுக்காகச செய்யப்பட்டன. ஸோமத்தைப் பிழிந்து தரும் ஏதஸனோடு யுத்தஞ்செய்த, ஸ்வச்வன் மகன் சூரியனோடு யுத்தஞ் செய்து, அந்த ஏதஸனை இந்திரன் காப்பாற்றினுன்—(எ-று.) ஈண்டு ஒரு கதையுண்டு. ''ஸ்வச்வன் என்னுமரசன் பிள்ளைப்பேற்றிற்காக ஸூர்யனை யுபாவித்தான். சூரியனே அவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தான். ஒரு காலத்து அந்த ஸூர்யனுக்கும் ஏதஸனென்னும் ரிஷிக்கும் சண்டை நேர்ந்தது. அப்பொழுது ஏதஸனுடைய சோமத்தையேற்று இந்திரன் ஸூர்யனைத் தோற்கடித்தான்.'' என்பது. மண். 2, சூக். 19 செய். 5, நோக்குக.

16. கோதமக் குடியோ ருன்னைச் சூழுறு பிராமணங்க
ளோதி யேதுதித்தார்; ஓங்குமரியினை யுவப்பிற் பூட்டு

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

மேதமில் வேந்தே யின்னுர்ச் சீக பல்லுருவச் செல்வம்;
போதகவிரைவின்வைகல்புந்தியாற்பொருள்டெ பற்றேனே..

(இ-ள்.) கோதம வம்சத்தில் வந்தவர்கள் உன்னை நன்முய்ச் சூழும் மறைகளைத் துதித்தார்கள். இரண்டு குதிரைகளையும் தேரிற் பூட்டும் குற்ற மற்ற இந்திரனே! இக்கோதமவம்சத்தாருக்குப்பல உருவத்தோடு கூடியசெல் வத்தை யளிப்பாயாக. பிராதக்காலத்தில் (விடியற்காலத்தில்) தியாவஸ-ா வாகிய இந்திரன் விரைவாக வாட்டும்—(எ-று.) தியாவஸ-ா: கர்மத்தால் அல் லது புத்தியினுற் பொருள் சேர்ப்பவன், இந்திரன். 58, 60, 61, 62, 63, இவ்வைந்து சூக்தங்களின் கடைசிச் செய்யுள்களின் கடைசியடியொன்றே.

வருக்கம் 29.

ஆகச்செய்யுள் 708.

4-வது அத்தியாயம் முற்றும்.

5–வது அத்தியாயம்.

இவ்வத்தியாயத்தில் 31 வருக்கமும், 19 சூக்தமும், 185 இருக்குக்களுமுள்ளன.

62. மண்டலம் 1. அநுவாகம் 11. சூக்தம் 5.

13 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கோதம புத்திரன் நோதஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப் தேவதை: இந்திரன்.

1. அங்கிரன் போன்ற யாமு மணிமிகு வலியோன் கீதந்
தங்கிய வனப்பினற்குத் தகுசுகத் தோம கோஷ
மங்கமா வுன்னுவோம்; பல ரிருடிய ருரச்சித் தேத்தும்
பொங்குசீர் வீரற் கர்க்கம் பொருத்தியே பூசிப்போமே.

(இ-ள்.) நல்ல வலிமையுள்ளவனும் கீதங்களாலலங்கரிக்கப் படுபவ னுமான இந்திரனுக்காக, அங்கிரஸனைப்போல யாங்களும் சுகத்தைத் தரும் ஸ்தோத்திர கோஷத்தை விசேஷமாகச் செய்ய நினைப்போம் (செய்வோம் என்றபடி.) பல ரிஷிகள் அர்ச்சனை செய்து துதிக்கின்ற கீர்த்தி மிகுந்த வீரனுக்கு (இந்திரனுக்கு) அர்க்கத்தை (அர்ச்சனை ஸாதன மந்திரத்தை)ச் சார்த்திப் பூஜை செய்வோம்—எ-று.)

2. புண்டை யாங்கிரஸர் முன்னோர் பாதையையறிந் தர்ச்சித்துக்
கண்டு பல்லாவைப்பெற்று க்களிபெற வேது வான
மிண்டுசீர் மகிமைபூண்ட வெவ்வலி யவனுக் கென்று
பண்ட ருந்துதியிற் சாமம் பணிந் தொலியோடுசொன்றின்.

(இ-ள்.) (இருத்வியர்களே!) முற்காலத்து அங்கிரஸர்களது முன் னோர்கள் வழி தெரிந்து அர்ச்சித்துப் (பணியென்னு மகரனல் மூடி வைக் கப்பட்டிருந்த) பல பசுக்களையும் அடைந்து ஸந்தோஷத்தைப் பெற வேது வான சீர் நெருங்கிய மகிமையோடு கூடிய மிக்க வலிமையுள்ள இந்திரன்

மண்டலம் 1. சூக்தம் 62.

பொருட்டுப் பண்ணுகப் பாடப்படும் ஸாம ஸ்தோத்திரத்தைச் சத்தத்தோடு கோஷிப்பீர்களாக—(எ-று.) இருத்துவிஜர், காலமறிந்து தேவகாரியம் செய்து வணங்குவார்.

3. இந்திரன் விழைய வாங்கி ரஸனுமே யிட்டங்கொள்ள
வந்திறன் குழவிக்காக வன்னத்தைச் சாமை பெற்றுள்;
மந்திரப்பதி நாகத்தை மலைத்தனன் பசுவைக் கண்டான்;
சுந்தர வீர ராக்க டோன்ற வெற்றியி னுர்த்தாரே.

(இ-ள்.) (இவ்விடத்துப் பின் வருங்கதையறியத்தக்கது. சரமா (மை) இந்திரனது நாய். யமனுடைய காவல் நாய்களிரண்டிற்குந்தாய். இந்திரன் ஒரு காலத்தில் பணியென்னுமகார்கள் திருடிய பசுக்களை (மேகங்களை)க் கண்டு பிடிக்கச் சொன்னபோது, சரமை (சூரியனது ஒளியை மீட்டுத் தரும் விடியல்) அப்பசுக்களின் பாலைத் தன் குட்டிகளுக்குத் தருவதாயிருந்தாற் கண்டு பிடிப்பதாகச் சொல்ல, யிந்திரன் அவ்வரத்தை யீந்தான். உடனே மோப்பம் பிடித்து அப்பசுக்களைச் சரமை கண்டுபிடித்தது. இந்திரன் அப்பணிகளை (அசுரர்களை)க் கொன்று பசுக்களை மீட்டான்—சட்யாயனக் கதை.) இந்திரன் விரும்பியதனாலும் அங்கிரஸன் இஷ்டப்பட்டதனாலும் சரமை தன் குழந்தைகளுக்கு வேண்டிய உணவை (பாலை) யடைந்தாள். மந்திரத்தலைவனை யிந்திரன் மலையைப் பிளந்து பசுக்களைத் திறந்து விட்டான். அழகிய வீரர்களாகிய தேவர்கள் அப்பசுக்களைக் காணவே ஜய கோஷஞ் செய்தார்கள்—(எ-று. குழவிதினைவழுவமைதி; பெற்றுள் என்பதற்கேற்பக் குழவியெனக் கூறினர்; குட்டியென்பது பொருள். நாய்க்குட்டிகளுக்கல்ல அங்கிரஸன் குழந்தைகளுக்குக் கொள்ள வேண்டுமென்பார் (Ludwig) லுட்விக்கென்பவர்.

4. பண்ணெடு மியைந்த பாடல் பகருஞ் விப்பிரர் முழங்க
வெண்ணுறு மெழுவ ரங்கிரஸர் நவக்குவர்கள் போற்றத்
தண்ணுறு மலை சேதித்தாய்; சக்கிர, விடித்து வேந்தே!
யெண்ணினும் விரை தசக்வ ரேத்த நீ வலம் பிளந்தாய்.

(இ-ள்.) பண்ணெடு கூடிய பாடல்களைச் சொல்லும் விப்பிரர்கள் (மேதாவிகள்) உதாத்தஅநுதாத்தஸ்வரங்களோடு பாடவும், அங்கிரஸ் வம்சத்தைச்சேர்ந்த எழுநவக்குவர்கள் போற்றிசெய்யவும், கேட்டு நீரைவைத்திருந்த (மேக) மலையைப் பிளந்தாய். சக்ர! (சக்தியுள்ளவனே!) இந்திரனே! மனத்தினும் வேகமாகச் செல்லும் தசக்வர்கள் துதிக்க நீ இடித்து (வஜ்ரத்தாலடித்து) (நீரை யடைத்து வைத்திருந்த) வலனென்னு மசுரனைப் பிளந்தனை—(எ-று.) ஸத்ர யாகத்தை ஒன்பது மாதங்களிற் செய்து பலனடைவிப்பவர் நவக்குவரென்றும், அதனையே பத்து மாதங்களிற் செய்து பலனடைவிப்பார் தசக்(கு)வரென்றும் சொல்லப்படுவர். மண்: 1, சூக்தம் 33, செய். 6; பார்க்க. அங்கிரஸர் எழுவர் மேதாதிதி முதலியோர். மந்திர மத்திம ஸ்வரங்களோடு மென்றும் சொல்லலாம். வேகமாகப் பசுக்களைக் கண்டு பிடிக்கச் செல்லும் தசக்(கு)வரொன்பார் மேனுட்டாரிரியர். வலன் பசுக்களை (மேகத்தை) யடைத்துவைக்கு மோரசுரன்.

5. வைகலர்த் தெறுப்போ யங்கிரசர்களின் போற் றுவந்து
வைகலர்வன் கதத்தான் மலியிருள்வதைத்தாய், வேந்தே,

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

செய்கையிற் பூமிச்சாநு பரப்பினுய் திவோராஜந்தான்
வைகுறுமூலந தன்னை வயக்கினுய் திடமாய்த் தானே.

(இ-ள்.) சத்துருக்களை அதஞ் செய்பவனே! இந்திரனே! அங்கிரஸர்களின் ஸ்தோத்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து விடியற் காலத்தில் சூரிய கிரணங்களைக்கொண்டு இருட்டைக் கெடுத்தனை. உனது செய்கையின் பலத்தினுல் பூமியிலுள்ள (உன்னதப் பிரதேசங்களை) விஸ்தாரமாகச் செய்தாய். அந்தரிட்ச லோகத்தின் அடிப்பாகமாகிய (பூமியை) உறுதியாயிருக்கச் செய்தாய்—(எ-று.) வேந்து, இந்திரன். சானு, ஸாது, மலைப்பிரதேசம். திவோராஜம், திவம் அந்தரிட்சம் (Midair) ராஜம், உலகம்; அந்தரிட்சவுலகம்.

6. வரிஞந்க்வான் பூமி கூடு மவ்விட மதுர நீரோ
டரிஞநதொழுகாறுநரன்கைவெள்ளமார்ந்திடச்செய்தானற்
றரிஞந்த பேராற்றற் செய்கை செய்தவப்புதுமை யோனுல்
விரிஞந்த விவ்வதிசயந்தான் மிகவும் பாராட்டற்பாற்றே.

(இ-ள்.) வானம் வரிஞந்து பூமியைச்சேரு மவ்விடத்தில் மதுரமான நீரோடு கூடிய ஆறுகள் நான்கை வெள்ளம்பெருகி யோடும்படி செய்தான். அதிசயமான காரியங்களைச்செய்யும் அவனுற்செய்யப்பட்ட இந்த அழகிய வலிமை சிறந்த காரியமானது பாராட்டத்தக்கது (பூஜிக்கத்தகுந்தது) —(எ-று.) நான்கு நதிகள் கங்கை முதலிய முக்கிய நதிகள் என்பர் சாயணர்.

வருக்கம் 1.

7. துதிப்பவர் மறைக்கெளியோன் யோரினர்க் கரிய னித்தங்
கதிப்புறப்பிறப்போ,ரெதத்துக்கண்டவோரிடமிரண்டாய்
மதிப்புறச்செய்தான்;கோசசெய்கைய,னுரோதசியை,
யதிப்பரமாகாயத்துப புகனென, வளர்த்தானன்றே.

(இ-ள்.) ஸ்தோத்திரஞ் செய்பவர்களுடைய மந்திரங்களுக்கு எளிதில் அகப்படுபவனும், யுத்தஞ்செய்து ஜயிக்க விரும்புவோர்க்கு வெல்லுதற்கு அருமையானவனும், நித்தியமும் ஊக்கத்தோடு தோன்றுபவனுமான (இந்திரன்) சமானமாய்ச் சேர்ந்திருந்த ஓரிடத்தை இரண்டாகச் செய்தான். ஒஜஸ் ஸாரமாய் உயர்ந்த ஆகாசத்தில் ஒழுகும் சூரியனைப்போலச் சோபன கர்மத்தேர்டு கூடியவன் (இந்திரன்) ரோதஸிக்களை (வானம் பூமியென்னும் இரண்டு ஸ்திரீக்களையும்) வளரும்படி செய்தான்—(எ-று.) ஸஹஜா: நித்தியமும் உற்சாகத்தோடு பிறப்பவன் அல்லது காணப்படுபவன் என்பது பொருள். உரோதஸிக்கள், தியாவாபிருதுவிகள், வானம் பூமிகள். வடமொழியில் வார்த்தைகளுக்குப்பாலுண்டு. சில பதங்கள் அஃறிணைப்பெயர்களாகவிருந்தாலும், அவை ஆண்பால், பெண்பால் வசனங்களாகவிருக்கும். தமிழ்ப் பதங்களைப்போல வடமொழிப் பதங்கள் பொருள் பற்றிப் பால் கொள்ளுபவையல்ல. ரண்டு ரோதஸி ஸ்திரீ வசனமாம், அதனுற்ரு ரண்டு ஸ்திரீக்களையும் என்று பொருள் கூறினர். பகன்: சூரியன்.

8. ஒவ்வொரு நாளுந் தோன்று மூவதிகள் வேற்று ரூப
மொவ்வுறவோர்க டக்த முளபபடி மாறி மாறிக்.

மண்டலம் 1 சூக்தம் 62.

கவ்வையீ னீண்டகாலங் கம்மொடு புவியிற் செல்வார்
வவ்விய விருளிராவு மலியொளி வைகலும்மே.

(இ-ள்.) நாள்தோறுமுதிக்கும் யுவதிகளும், ஒருவருக்கொருவர் மாறுபட்ட வுருவத்தோடு கூடியவருமான, இருட்டோடு கூடிய இரவும், ஒளியோடு கூடிய பகலும், குற்றமற்ற நெடுங்காலந்தொட்டு ஆகாயத்திலும் பூமியிலுமாக மாறிமாறிச் செல்வார்கள்—(எ-று) யுவதி உவதி யென்றுயிற்று. யுவதி, தருணி, வயதுவந்த ஸ்திரீ. இரவையும், உஷஸையும் (விடியற்காலத்தையும்) ஸ்திரீகளாக உவமித்தார். அவை ஒன்றுபோக ஒன்று வந்துகொண்டேயிருக்கு மென்றபடி.

9. நற்றொழில் புரிவோ னுர்ந்த நல்வலி மகன் மகத்தோ
டுற்றுளி சொரிவான் யாகத்தோர் பழநட்பைக் காத்தான்;
மற்று நீ கறுப்புச் சேப்பு மருவியே சமையா வாக்கள்
பெற்றநன் மடியில்வெண்மைபிறங்கும் பக்குவப்பாலிட்டாய்.

(இ-ள்.) நல்ல தொழிலைச் செய்பவனும், பலத்தின் புத்திரனும் (மிக்க பலவானும்) மகத்தோடு கூடி விளங்குபவனுமான (இந்திரன்) யாகஞ் செய்பவர்களோடு பழமையாக வேற்பட்ட சிநேகிதத்தைச் சோரவிடாதபடி காப்பாற்றுகிறான். (இந்திரனே!) நீ கறுப்பும் சிவப்புமாய்ப் பக்குவமில்லாத பசுக்களின் மடியில் வெண்மையாய்ப் பக்குவப்பட்ட பாலை அமைக்கிறாய்—(எ-று.) பசுக்களின் நிறமும் பாலின் நிறமும் வேறுபட்டு நிற்பதும், பச்சையாய்ப் பக்குவமில்லாத பசுவில் கறந்தவுடன் உண்ணுதற்குப் பக்குவமான பாலைக்காண்பதும் முரணும். கறுப்புக்கோழி வெள்ளை முட்டையிடுவது என்னும் வசனம் போன்றது இக்கூற்று. காத்தான், இட்டாய் என்பன நிகழ்காலப் பொருளன.

10. சநாதன காலந் தொட்டுச் சமவிடத் தசைத லின்றி
வினுவுதலின்றியெண்ணில்விரதங்கள்மொய்ம்பிற்காக்கும்;
விநுதமாருடன்பிறப்பாம்விரல்கள்பன்னியர்தாய்மார்போல்
மனுபலமிருந்தோன்மாட்டுமருவிச்சேவிக்குமாதோ.

(இ-ள்.) விரல்கள் நெடுங்காலத்திலிருந்து சமானமான இடத்தில் அசைவில்லாமலிருந்து, கேட்பதற்கு முன் ஆலஸ்யமில்லாமல் (ஆயிரக்கணக்கான) கணக்கில்லாத விரதங்களைத் தங்கள் பலத்தினாற் காக்கின்றன. சகோதர பாவமுள்ள அவ்விரல்கள், பத்தினிகளைப்போலவும் தாய்மார்களைப் போலவும் மனுபல மிருந்தவனிடத்துப் பொருந்திச் சேவை செய்யும்—(எ-று.) வினுவுதலின்றி யென்பது வைமல் என்னும் பொருளில் வந்தது. அந்ரீதயானம் என்னும் வடமொழிப் பதத்துக்கு லஜ்ஜாரஹிதம் அல்லது ப்ரசஸ்தகமனம் என்பொருள் கூறுவார் சாயணர். மனுபல மிருந்தோன் என்பதும் மேனுட்டாஷியருரைப்படி மொழி பெயர்த்தது. எண்ணில் என்றிராமல் ஆயிரக்கணக்கானவென்று வடமொழி மூலத்திலுள்ளது. விரல்கள் விரதங்களோடுங் கூப்பத் தவறுவதில்லை யென்றபடி. சமானமான விடத்தில் அசையாமல் என்றது ஒரு கையிலிருந்து வெளித் தோன்றுவதால் என்பார் சாயணர்.

வருக்கம் 2.

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

11. பொலிவினெய்!வணக்கத்தோடும்பொருந்துபுத்தருக்கத்தோடும்
பொலிதனம் வேண்டி, யென்றும் புரியு நித்தியமும் வேண்டி
மலியு மேதைய ருன்மாட்டு வந்தனர்; வலிமிகுத்தோய்!
தலைவர் காதலிய் ரென்னச் சாரு மம்மனை யுன்மாட்டே.

(இ-ள்.) அழகு வாய்ந்தவனே! (இந்திரனே)! நமஸ்காரத்தோடும், புதிய அர்க்கங்களோடும் (சஸ்திர ரூபமான மந்திரங்களோடும்) மிகுந்த செல்வத்தையும், சநாதன காலமாக எப்போதும் செய்யும் நித்திய கர்மங்களையும் விரும்பி மேதாவிகள் உன்னிடத்து (மிகப் பிரயாசையோடும்) வந்தார்கள். பலவானே! அவர்கள் சொல்லும் ஸ்துதிகள், காதலிகளான மனைவியர் தங்கள் காதலர்களிடத்துச் சேர்ந்து நிற்பதுபோல, உன்னையடைந்து நிற்கும் —(எ-று.) அருக்கம், அர்க்கம், சஸ்திர ரூபமான மந்திரம்.

12. பண்டுதொட் டுன் கரத்துப பனம், பொலிவுள்ளோய், நாச
மண்டிய திலலை, யீத்துக் குறைவணைந்ததுமே யில்லை;
கொண்டனை தீரம் க்ருஷ்டி குலவு நற்கிருது, வேந்தே,
மண்டிய கருமத்தோய் பொன்வழங்க லுன்கருமத்தாலே.

(இ-ள்.) அழகுவாய்ந்தவனே! பழைய காலத்திலிருந்து உன் கரங்களிலுள்ள செல்வங்கள் நாசமடைந்ததுமில்லை; தானஞ்செய்து குறைந்து போனது மில்லை. வேந்தனே (இந்திரனே)! நீ தீரவான், காந்திமான், கிருதுமானுமாம். மிகுந்த கர்மத்தோடு கூடியவனே! உனது கருமங்களினால் எங்களுக்குப் பொன்னை வழங்குவாயாக—(எ-று.) கிருது லோக ரட்சணகாரணமாகிய கர்மம் என்பார் சாயணர். வேந்தன், இந்திரன். சச்சிவ: என்பதற்குப் பலவானென்று பொருள் கொண்டு, பலத்துக்கு நாயகனே! உனது பலத்தால் எங்களைப் பலப்படுத்துவாயாக.' என்று பொருள் கூறுவார் மேனுட்டாசிரியர்.

13. கன்றலி னேதாத், தேரிற் கபிலமாப் பூட்டா நிற்போய்!
என்று மூள்ளவ, வுரத்தோ, யிந்திர, வுனக்கு நோதன்
கன்று கோதம னிழைத்தா னவம்பெற விச் சூக்தத்தைத்;
துன்றுகவிரைவின்வைகல்மதியிஞற்றனம்பெற்றோனே.

(இள்.) உரம் (பலம்) பொருந்தியவனே! இந்திரனே! நன்றாக (மாந்தரை) நடத்துவோனும், தேரில் கபில நிறமுள்ள குதிரைகளிரண்டையும் பூட்டுபவனும், நித்தியமாகவுள்ளவனும், ஆன வுனக்காகக் கோதம புத்திரனாகிய நோதஸன் புதிதாக விந்தச் சூக்தரூபமான ஸ்தோத்திரத்தைச் செய்தான்: புத்தியினால் தனத்தைச் சம்பாதித்தவனான இந்திரன் பிராதஸ் (விடியற்) காலத்தில் வேகமாக வந்து சோட்டம்—(எ-று.) படர்க்கை முன்னிலைமாற்று. வடமொழி மூலத்துக்குத் தக்கபடி உரையை எழுதியது; எல்லா வினிகளையும் அப்படியே முன்னிலைப் படுத்தினாலும் படுத்தலாம். நோதனெனினு நோதஸனெனினு மொக்கும்.

வருக்கம் 3.

63. மண்டலம். 1. அநுவாகம் 11. சூக்தம் 6.

9 இருக்குக்கள் கொண்டது.

மண்டலம். I. சூக்தம் 63.

ரிஷி: மது சோதஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை இந்திரன்.

1. மகத்தவலீ, யசுரர் வலிமை கண் டிந்திரா வா
னிகத்துயர் புவி யச்சத்தை யெடுத்தபோ துன்பயத்தால்,
வருத்த வெவ்வுயிரும் வன்மை வாய்பருப்பதமு மென்றூழ்
மிருத்திடு கற்றை யென்ன நபத்தினிற் சலித்த போதே.

(இ-ள்.) இந்திரனே! அசுரருடைய பலத்தைக்கண்டு வானமும் பூமியும் பெற்ற நடுக்கத்தைத்தீர்த்தபோ துன்னிடத்திலுண்டான பயத்தினால் எல்லாச்சீவர்களும், வலிமை மிகுந்த மலையுங்கூட, சூரிய கிரணங்கள் ஆகாயத்திற் சலிப்பதுபோலச், சலித்த (நடுங்கின) போது, நீ குணத்திற் பெரியவனுயிருக்கிறாய்—(எ-று.) மேனுட்டாசிரியர், நீ மகான். பயத்தினால் அப்பொழுது, உன்னைக் கண்டு பயந்துறுதியான மலைகளும் பெரிய பிராணிகளும் தூளியைப்போலச் சலித்தன.' என மொழிப் பெயர்ப்பார் அது சாயணருரைக்கு மாறுவதன்றி வியப் பின்மையுங் கொண்டதா மென்க. சலித்தபோது நீ மகத்தவன் ஆமெனச் சேர்க்க.

2. தபுவில்சீர்க் கிருது வொன்னுர்த் தடிந்தவற்பல்புரங்கள்
விபலமா வடிக்க வாய்ந்த மிகுவலி வசிஷ்டத்தைக்,
கபிலமாத் திரிபவற்றைக் கட்டிய காலே, வேந்தே,
யபிமுகத் துதியோ னீத்தா னதகத்துப், பலரழைப்பாய்!

(இ-ள்.) கெடாது நிலைத்த கீர்த்தி பொருந்திய கிருது (கர்மம் அல்லது ஞானம்) வோடு கூடியவனே! புருஹூதனே! (பலராலும் அழைக்கப்படுபவனே) இந்திரனே! சத்துருக்களைக்கொன்று அவர்களுடையபலகோட்டைகளையும் அழிப்பதற்கு காரணமான வச்சிராயுதத்தை, நீ கண்டபடி திரிந்துகொண்டிருந்த குதிரைகளைத் தேரிற் கட்டியபோது உன்னைத் துதித்த ஸ்தோதா உன்கரங்களி லளித்தனன்—(எ-று.) ஸ்தோதா ஸ்தோத்திரஞ் செய்யப் பிரயத்தனஞ் செய்வதற்குள் உன் கையில் வச்சிராயுதத்தைக் காண்கிறன் என்பது கருத்து—சாயணர்.

3. இந்திர சிறந்தோ னீயே, யிவர்களைத் திக்கரிப்பாய்;
நந்திய ரிபுக்களுக்கு நாயக, நரர் நலத்தோய்,
யிந்துறு பகைவதைப்போ, யுயர்மதி யிளைஞன் குற்சற்
கந்தி லுற்றெறுக்கும வீர் வமரிற் சுட்டுணைக் கொன்றாய்.

(இ-ள்.) இந்திரனே நீ உத்கிருஷ்டமானவன். பகைவர்களாகிய இவர்களைத் திக்காரஞ் செய்வாய். நீ ரிபுகளுக்கு அதிபதி, நரர்களுக்கு நலஞ் செய்பவன், சத்துருக்களைக் கொல்லுபவன். சிறந்த புத்தியுள்ள வாலிபனுகிய குத்ஸனுக்காகச, சத்துருக்களை வதைக்கும் வீரர் பொருந்திய யுத்தத்தில், எல்லாவற்றையும் வற்றடிப்பவனுகிய சுஷ்ணன் என்னும் அசுரனைக் கொன்றனை—(எ-று.) ரிபுக்கள் மண். 1 சூக். 21 செய். 8 பார்க்க. சுட்டுணன்) சுஷ்ணன். மண். 1 சூக். 50 செய். 6ல் பார்க்க குத்ஸன், மண். 1 சூக். 51 செய். 6 பார்க்க.

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

4. தோழ னவற்கு நீயே தூண்டினுப் தனத்தை யாண்மைப்
பாழிவெஞ்செயல் மனத்தோய்! பழகு நற்குலிசச் சூர!
தாழலா வீரர் போரில் விருத்திரற் றடிந் தெனிதிற்
கீழெனப் பாந்த தாசர் கேடுற வடித்த போதே.

(இ-ள்.) காளைபோன்ற செய்கையையும் மனத்தையுமுடையவனே வச்சிராயுதத்தோடு கூடியவனே! சூரனே! பின்வாங்காத வீரர்கள் நிறைந்த யுத்தத்தில் விருத்திரனைக்கொன்று கீழ்மக்களாகிய தஸ்யுக்களைக் கேடடையும்படி யடித்தபோது, நீயே அவனுக்கு (குத்ஸனுக்கு)த்தன தை யளித்தாய்—(எ-று.) அவனுக்கு, அவற்கு, அக்குத்ஸரிஷிக்கு என்பது பொருள். வ்ருஷமந: காளைபோன்றமநமுள்ளவன். வ்ருஷகர்மன் காளை போன்ற செய்கையையுடையவன். இரண்டையும் சேர்த்துப் பாழிவெஞ்செயன் மனத்தோய் என்றுர் பாட்டில். காமாபிவர்ஷக மஹஸ்க என்றும் விருஷ்டியுதக ஸேச (ch) னரூப கர்மோபேத என்றும் சாயணர் பொருள் கூறுவர். இச்சித்தவற்றை யளிப்பவனே! மழை நீரைப்பெய்விக்கும் கர்மத்தோடு கூடியவனே என்பது அவற்றின் பொருள்.

5. இந்திர, திடமியைநதோ நென்னினு மவன்றன் கேட்டை
மூந்துறவிரும்பாய்; போற்றின்முரணினர்விரும்பாவெங்கள்
கந்துக மோடும் வீதி காணுக விரிவா, யங்கே
சிநதுக, வச்சிரத்தோய், பகையினைத் தண்டம் போன்றே.

(இ-ள்.) இந்திரனே! (பகைவன்) திடம் பொருந்தியவனுனும் அவனது கேட்டை நீ விரும்ப மாட்டாய். சத்துருக்களால் விரும்பப்படாத ஸ்தோதாக்களாகிய எங்களுடைய குதிரைகள்ஓடுகின்ற வீதி விஸ்தாரமாயிருக்கும்படி செய்வாயாக. மேலும், வச்சிரியே! அவ்வீதியில் எதிர்ப்படும் சத்துருக்களைத் தடியாலடிப்பது போல வச்சிராயுதத்தாலடித்துக் கொல்லுவாயாக—(எ-று.)

6. பொருநர் நற்றனத்தை வேண்டிப் பொருதிடு மாயோதத்தி
னரர்களு முதவிக்காக நாடியே யுனையழைப்பார்;
உரம்பெறு மிநதிரா விச்சமரு முனதெர்த்தாசை
திரம்பெறுசெயலோர்சசேர்வதெம்மையே சேர்க நன்கே.

(இ-ள்.) யுத்தஞ் செய்பவர் தனத்தை விரும்பி யுத்தஞ் செய்யும் சண்டையில், போர் வீரர்களாகிய புருஷர்கள் தமக்கு உதவிசெய்ய வேண்டியுன்னையே துணைக்கழைப்பார்கள். வலிமை பொருந்திய விந்திரனே! யுத்தத்தில்வீரர்களைச் சேருமுனது உதவி இந்த யுத்தத்தில் எம்மையே பொருந்தட்டும்—(எ-று.) அர்ணஸாதௌ என்பதற்கு உதகத்தையடைய விரும்பு வோரென்பதும் ஒன்று. உதக (தண்ணீர்) லாபத்தையடைய விருத்திரவதஞ் செய்யும் யுத்தத்தில் ஸ்தோதாக்களாகிய புருஷர்கள் உன்னையே உற்சாகப்படுத்துகிறார்களென்பது மற்றொரு பொருள். ஆயோதம், ஆயோதனம், யுத்தம், சண்டை.

7. வச்சிரம் படைத்த மன்ன, விந்திர, புருகுற் சற்கா
நச்சலர் போரி னேழு நகரத்தைப் பொடித்தாய்; அம்ஹூன்
வைச்சுன கிழியை நாணல் மதிப்ப நீய்றுத்தாய் பின்பு;
நச்சியஃ தவிபூரித்தோன் சுதாசற்கே நாடிக் கொண்டாய்.

மண்டலம் 1. சூக்தம் 64.

(இ-ள்.) வச்சிராயுதத்தைப் படைத்தவனே! ராஜனே! இந்திரனே! புருகுத்ஸனென்ற ரிஷிக்காகச் சத்துருக்களோடு செய்த யுத்தத்தில் அவர்களுடைய ஏழு நகரங்களையும் அழித்தனை. அவிப்பொருளால் உன்னை நிரப்புவோனுகிய ஸுதாஸனுக்காக, அம்ஹன் என்னும் அசுரன் வைத்திருந்த பணமுடிச்சை நாணலையறுப்பதுபோல அறுத்து அதனைக்கைக்கொண்டாய்—(எ-று.) புருகுத்ஸன், இவன் இந்திரனுக்கும் அசுவினிகளுக்கும் பிரியமான ரிஷி. மண். 1 சூக். 12 செய். 7 பார்க்க. சுதாஸன், ஸுதாஸன், பிஜிவனன் மதன். பிஜிவனனும் திவோதாஸனும், அதிதிக்வனும் ஒருவனே. இவன் கதையை மண். 7 சூக் 18 செய். 5, 25ல் பார்க்க. இவன் பருஷ்ணி (தற்காலம் ராவீ யென்று சொல்லப்படும் சிந்துவின் உபநதியாம்.) யென்னு மாற்றைத்தாண்டிச் சிம்யு வென்னும் காட்டுமனிதர்களைத் துரத்தின்தாகச் சொல்லப்படுவான். இவன்பெயரை மண். 1. சூக். 47 செய். 6லும் பார்க்க. பூரவே யென்பதற்கு பூருவுக்கு என்றுபொருளுரைப்பார் மேனுட்டாசிரியர். ஆனால் இக்கிரந்த கர்த்தா சாயணருரையையொட்டி அவி பூரித்தோன் என்று மொழிபெயர்த்துள்ளார்.

8. ஆவலிற் சூர வெங்க ளாத்தும வலியளிக்குந்
தூவிய லெதனை யெங்குஞ் சூழுநீ ரென நிறைப்பாய்,
தேவ விந்திர வெந்தம்மைச் சூழ்புவி சித்திரத்தின்
மேவிய வவ்வன்னத்தான் மழையென நிரப்புவாயே.

(இ-ள்.) சூரனே! தேவனே! இந்திரனே! எங்களுக்கு ஆத்மவல்லபத்தைத்தரும் எந்த வுணவை, எல்லாவிடத்தும் ஓடும் நீரை நிறைத்துவைப்பதுபோல, நிறைத்து வைப்பாயோ அந்தச் சித்திர (நானுவிதமான) அன்னப்பொருள்கள் எம்மைச் சூழ்ந்துள்ள பூமியில் மழை நீரைப்போல நிறையும்படி செய்வாயாக—(எ-று.) ஊர்ஜம்ந என்பதற்கு வலிமையைப்போல என மேனுட்டாசிரியர் பொருள் கொண்டு, 'எதன் உதவியால் வலிமையே எம்மாட்டு வந்துசேரும்படி செய்வாயோ, நீரைப்போல ஏராளமாயுள்ள, அந்த அன்னத்தால் எங்களைப் போஷிப்பாயாக.' என்று உரை கூறுவர்.

9. ஓதினுர் குதிரையோடு கூடிய வுனக்கு னன்பர்
கோதமர் மறைகளுரத்தங் குலிப்பொடு மலியிலேடுத்;
தீதில்பல் வ்டிவ வன்னஞ் சேர்த்துக வெமக்கு வேந்தே!
போதுக விரைவின் வைகல் புந்தியாற் பொருள் பெற்றேனே.

(இ-ள்.) இரண்டு குதிரைகளோடு கூடிய வுனக்கு உன்னன்பர்களாகிய கோதம வம்சத்தவர்கள் வணக்கத்தோடும் அவிப்பொருளோடும் பிரமங்களையும், உக்தங்களையும் செய்து கூறினுர்கள். பல உருவத்தோடு கூடிய அன்னத்தை, இந்திரனே! எங்களுக்குக் கொண்டு வருவாயாக. தியாவஸுவாகிய இந்திரன் வேகமாய் இவ்விடியற்காலத்தி லிங்கு வரட்டும்—(எ-று.) தியாவஸு, புத்தியினுற் பொருளைப் பெற்றவன்.

வருக்கம் 5.

64. மண்டலம் 1. அநுவாகம் 11. சூக்தம் 7.

15 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி நோதஸன்; வடமொழிச்சந்தம்: ஜகதி, 15, த்ருஷ்டுப்; தேவதை: மருத்துக்கள்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

(வேறு.)

1. வேண்டுபொருள்வருடிப்போர், நன்மகத்தோர், பூப்பழஞ்செய்மே
லோர், கூட்ட
மீண்டுமருத்துவர்க்காக, நோதசனே, சூழுறுபணீண்டுதாங்கல்;
தூண்டுகரங்கூப்பியதீரன்யானுமென்மனத்தேதொகையாத்
தோன்றி
மாண்டருபர்தூன்முறையாகத்தருதியுறமழையின்வருத்தேன்
மன்னே.

(இ-ள்.) நோதஸனே! இச்சைப்பட்ட பொருள்களை வருஷிப்பவர்களும், நல்ல யக்ஞகர்மத்தோடு கூடியவர்களும், பூக்களையும் பழங்களையும் செய்யும் பெரியவர்களும், கூட்டமாகப் பொருந்துவோர்களுமான மருத்துக்களுக்காக நன்றாகச் சூழ்ந்து கொள்ளும் பண்ணை (ஸ்தோத்திரத்தை)ச்சொல்லித் துதிப்பாயாக. கைகுவித்து வணங்கும் தீரனுகிய யான் எனது மனத்தில் கூட்டமாக உதித்து வெளிவரும் சிறந்த கீதங்களை, யாகத்தில் சாஸ்திர விதியோடு பொருந்தும்படி மழைதரைப்போலச் செய்தேன்—(எ-று.) முன்னிரண்டடியில் நோதஸன் தன்னையே படர்க்கைப் படுத்திக்கொண்டது. மழையானது எப்படி ஒரே சமயத்திற் கூட்டமாக விழுந்து பலபிரதேசங்களிலும் வெகு ஜலத்தைத்கொட்டுகிறதோ அப்படியே நானும் கீதங்களை ஒரே சமயத்திற் கொட்டுவேன் என்பது பொருள். மருத்துக்கள் மண். 1 சூக். 14 செய். 3 பார்க்க.

2. கட்கினியகாலையர்களுருத்திரன்றன்மக்கள்பகைகடிவோர்பாப
முட்குறவேயொழிப்பவர்கடேய்மைபுரிவோர்பகலிலெளிவாய்ந்துள்
ளோர்
வட்குவர்முட்பரமேசன்பூதகணமெனக்கோர வடிவத்தோர்கள்
மட்கினியமழைதெளிப்போர்மாருதர்கள்மாகமதிற்றேன்றினரே.

(இ-ள்.) கண்ணுக்கினிய காலைப்பருவம் வாய்ந்தவரும், உருத்திரபுத்திரரும், சத்துருக்களை வதைப்பவரும், பாபரஹிதரும், (எப்பொருளையும் பரிசோதித்துச்) சுத்தப்படுத்துபவர்களும், பகலைப்போற் (சூரியனைப்போல) பிரகாசம் பொருந்தியவர்களும், பகைவருக்கெதிரில் பரமேசுவரனது பூதகணங்களைப் போலக் கோரமான (பயங்கரமான) உருவத்தோடு எதிர்ப்படுபவர்களும், மண்ணுக்கினிய மழையைப் பெய்விப்பவர்களுமான மருத்துக்கள் ஆகாயத்தினுற்பவித்தார்கள்—(எ-று.) பகல், சூரியன். ஸத்வாஸோ ஜ என வடமொழி மூலத்திலுள்ளது. அச்சோற்றொடருக்கு பரமேசனது பூதகணங்களைப்போல வெனச்சாயணர் உரை கூறுவர். மண்ணுக்கினிய வென்றது மட்கினிய வென்றுயிற்று. வட்கல், கெடுதல், வட்குவர் கெடுவோர் பகைவரென்றபடி. பாபமுட்குறவே யொழிப்பவர்கள், பாபத்தை நடுங்கும்படி யழித்து விடுபவர்கள் என்பது பதப்பொருள். பாபமற்றவர்கள் அல்லது பாபரஹிதர்கள் என்றுரையிற் கூறப்பட்டது. மருத்துக்கள் ருத்திரபுத்திரரென்பதை மண். 1 சூக் 39 செய் 4ல் பார்க்க. வடமொழியிலுள்ள மர்யாஃ என்பதற்கு மநுஷ்யர் என்பது பொருள். ஈண்டு மருத்துக்களுக்கு மரணதர்மம் சொல்லுவது அஸம்பாவமானதாற் புத்திரரென்று பொருள் கொள்ளுகவென்பர் சாயணர். சத்துருக்களை வதைப்பவரென்பதற்கு வடமொழியில் அஸுராஃ என்றுள்ளது. மண். 1 சூக். 54 செய். 3 பார்க்க.

மண்டலம் 1. சூக்தம் 64.

3. தருணவயதுள்ளவர்க,ளுருத்திரன்புத்திரர்,சரையேசாரா;நீத்த
தருணவவிபுசியாரைக்கொல்லுபவ,ரெதிரினடைதழுவியோர்கள்,
பருவதஸல்வலியுள்ளோ,ரேத்தினர்தமெண்ணமதைப்பலிக்கச்
செய்வார்;
பிருதிவியானுறுதியுறும்பொருளேனும்பெருமொய்ம்பாலசையப்
பேர்ப்பார்.

(இ-ள்.) தருணமான வயதோடு கூடியவர்களும், ருத்திரனுடைய புத்திரர்களும், கிழத்தனமே யடையாதவர்களும், யவியுண்ணுதவர்களைக் கொல்லுபவரும், தமது நடைக்கெதிரில்லாத நடையை யுடையவர்களும், பர்வதம்போலப் பலமு முறுதியுமுள்ளவர்களுமான மருத்துக்கள் ஸ்தோத்திரஞ் செய்வோர்களுடைய எண்ணங்கள் பலிக்கும்படி செய்வார்கள். பூமியிலுள்ள உறுதிவாய்ந்த பொருளாயினும் அவற்றைத்தமது அரிய பலத்தினால் அசைத்து நடுங்கச் செய்வார்கள்—(எ-று.)

4. உடலதனைப்பலவகையவாபரணத்தலங்காரமுறுத்தி,மார்பில்
விடலருநல்லொளிகாலுமாரமதையணிபெறவேமிளிர்த்தித்,
தோளிற்
கெடலருமாயுதம்வெயில்வீசிக்கிடக்க,வந்தரத்தேதகிளர்ந்தமொய்ம்பி
னுடனுதித்தார்மாருதாசரர்களுமேகணமாகவொருங்கிற்றனே.

(இ-ள்.) தமது சரீரங்களைப் பலவிதமான ஆபரணத்தாலழகுபடுத்தித், தமது மார்பில் ஒளிவீசும் ஆரத்தைப்புனைந்து, தோளில் ஆயுதங்கள் பள பள வென்று மின்ன, மாருதர்களாகிய நேதாக்கள் (சேனாபதிகள்) கூட்டமாகச் சேர்ந்து அந்தரிட்சத்தில் தங்கள் பலத்தினோடும் உடனே தோன்றினர்கள்—(எ-று.) நரர்கள் நேதாக்களென்பார் சாயணர்.

5. ஈசானராக்குபவர்மேகாதியதிர்ப்பவர்களேலார்தம்மைக்
கூசாதேயழிப்பவர்கள்வாயுவையுமின்னலேயுங்கூர்பலத்தா
லேசாதேயமைக்கின்றார்;சூழ்ந்தசைப்போராகாயத்தியைந்தமேகத்
தேசாருமடிகறந்துபூமியினிற்பயநிறையத்தெளிக்கின்றாரே.

(இ-ள்.) ஸ்தோதாக்களை ஈசுவரியவான்களாய்ச் செய்பவர்களும், மேகம் முதலியவற்றைக் கம்பிக்கச் செய்பவர்களும், சத்துருக்களைக் கூசாமலழிப்பவர்களும், ஆன மருத்துக்கள் வாயுக்களையும் மின்னல்களையும் தமது பலத்தால் உண்டுபண்ணுகிறார்கள். வளைந்து சூழ்ந்து ஒருவஸ்துவையுமசைப்பவர்கள் ஆகாயத்திற் காணப்படும் மேகங்களின் மடியைகறந்து அந்த நீரினால் பூமியை நிறைக்கின்றார்கள்—(எ-று.) மேகத்தைக் கறவையாக் உவமித்து அதினின்றுவரும் நீரைப்பயமென்றார். பயம், பாலுக்கும் நீருக்கும் பொதுவான உரிச்சொல். பயம், ஸாரபுஷ்டியுள்ள நீரென்ப.

வருக்கம் 6.

6. இருத்துவிசர்யாகமதினெய்சொரிவதென்னலவீகையாளர்
மருத்துவர்கள்பாலெனவேவளம்பொதியுநீர்தெளிப்பார்;மாவைப்
போர்க்கு
வருத்தியடக்குதல்கடப்பவல்விரையுமேக்மதைவசப்படுத்தி
யிருத்திடத்தட்சயமதாவோங்குமுகின்மடிகறந்தேயொழுக்குவாரே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

(இ-ள்.) ரித்விக்குக்கள் யாகத்தில் நெய்யை யூற்றுவதுபோல, கல்லஞானத்தோடு கூடிய மருத்துக்கள் பால் போல ஸாரம் பொருந்திய நீரைத்தெளிப்பார்கள். யுத்தத்திற்காகக் குதிரையை வருத்தப்படுத்தி யடக்குவதுபோல அம்மருத்துக்கள்வேகமாகச்செல்லும்மேகத்தைத் தம்வசப்படுத்தி, இடித்துக்குறைவின்றி யோங்குமேகத்தின் மடியைக் குறைத்து நீரையொழுக விடுவார்கள்—(எ-று.) ரித்விக்குக்கள், இருத்விஜர், ரித்விஜர் எல்லா மொன்றே. காலத்தில் யாக கார்யங்களைச் செய்பவரென்பது முன்பே சொல்லப்பட்டது.

7. மிகுவலியோர்ஞானியர்கள்சித்திரஞ்சால்காந்தியுளோர்மேண்மை
தங்கு
நகமுறழுமொய்ம்புள்ளோர்விரைகதியோரென்போர்நீர், நால்வாய்
மானத்
தகளறுகானத்திடத்துச்சிவப்பேறும்வடவையினத்தோய்க்குங்
காலைத்
யிகலுவரைத்தெறுவலியைமேற்கொண்டுமரக்கூட்டமெரித்
துண்ணீரே.

(இ-ள்.) மிகுந்த வலியோடு கூடியவரும், ஞானவான்களும், சித்திர காந்தியோடு கூடியவரும் மலைபோல வலிமை பொருந்தியவரும், வேகமான நடையோடு கூடியவரும் என்று சொல்லப்படும் (மருத்துக்களாகிய) நீங்கள், யானையைப்போலக், குற்றமற்ற காட்டில் சிவப்பு நிறமுள்ள காட்டுத்தீயையோட்டும்போது, பகைவரை வதைக்கும்வலிமையைமேற்கொண்டு அக்காட்டிலுள்ள மரக்கூட்டங்களை எரித்து விடுவீர்கள்—(எ-று.) நகம், மலை. நால்வாய், யானை, யானைகாட்டையழிக்கும், வடவையும் காட்டையழிக்கும் அதனால் யானை உவமையாயிற்று. வடவை, காட்டுத்தீ.

8. பேரறிஞர்சிங்கமுழக்கவர், தெறுகோபத்தர், பொறிபிறங்குமான்போ
லாரணிசாரவயவத்தர், யாவுமுணர்ந்தவர், பகையையடக்குவோர்கள்
கூருமுயர்ந்திதியோரைமகிழ்விப்போர், மாஞர்திகடியுள்ளோர்,
சாரலரையாயுதத்தானல்வலியாலொறுத்தொருங்குசார்வாரீண்டே.

(இ-ள்) கல்ல ஞானத்தோடு கூடியவரும், சிங்கம்போல் கர்ச்சிப்பவரும், கோபம் வந்தபோது கொன்றழிப்பவரும், புள்ளியோடு கூடிய மானைப்போல அலங்கரிக்கப்பட்ட அவயவத்தோடு கூடியவரும், ஸர்வக்ஞரும், சத்துருக்களை யடக்குவோர்களும், ஸ்தோத்திரஞ் செய்வோரை ஸந்தோஷிப்பிப்பவரும், மானை வாகனமாக வுடையவருமான மருத்துக்கள் பகைவரை ஆயுதத்தினாலும், ஆத்ம பலத்தினாலும் தண்டித்துக், கூட்டமாக எல்லாருமொன்றாய் இங்கு வருவார்கள்—(எ-று.)

9. ரூணநிறைந்தீர்நரர்தொழுவீர்தெறுகோபச்சூரமுளீர்குவலயம்வாள்
நாணுகுரத்தானதிர்ப்பிப்பீர்சாரதிக்காம்பீடநிலைநாணுக்தேரி
னாணுகியமர்த்தொளிமிகுத்தமின்னலென்னநிர்மலஞ்சாரழிற்கோலத்
தாணிகதவ,மாருதர்காள்வீற்றிருக்கும்போதுமையெல்லாருங்.

• காண்பார்.

மண்டலம் 1. சூக்தம் 64.

(இ-ள்.) சற்குண நிறைந்தவர்களே! யாக கர்த்தாக்களாகிய நரரீத்களால் வணங்கப்படுபவர்களே! கோபம் வந்தாற் கொன்றழிப்பவர்களே! சூரர்களே! உங்களது வரவினல் பூமி வானங்களைச் சப்திக்க செய்பவர்களே! மருத்துக்களே! சாரதிக்கு உட்காருவதற்காகப் பீடம் வாய்ந்த தேரில் நீர் அழகாக வீற்றிருக்கும்போது, பிரகாசம் மிருந்த மின்னலைப்போலவும் நீர்மலமான ரூபத்தைப்போலவும் உம்மை யெல்லாரும் காண்பார்கள் —(எ-று.)

10. யாவமுணர்ந்தவர், தனத்துச்சமசதனம்படைத்தவர்களேய்ந்த
வன்மை
மேவியவர், பலவகையாமுழங்குபவர், பகையழிப்போர், வெருளுமாறு
யாவையெனும்வறள்விப்போர், நிந்திரனுயுதமாவா ரேர்சால்வீரர்
தூவலியேயம்புமுதலாயுதங்கள்கரந்தரித்தார்சோமமார்ந்தே.

(இ-ள்.) எல்லாமறிந்தவரும், தனத்திற் சமானமானவரும், பலம் பொருந்தியவரும், பலவித சப்தத்தைச் செய்பவரும், பகைவரை வாட்டுபவரும், எல்லாவற்றையும் வற்றடிப்பவரும், இந்திரனுடைய ஆயுதமாகவுள்ளவர்களுமான அழகு பொருந்திய வீரர்கள், பரிசுத்தமாகிய பலமிகுந்த அம்பு முதலிய ஆயுதங்களைச் (சோமத்தைக்குடித்துக்) கையிலெடுத்தார்கள்—(எ-று.) விருஷ கா (Kh) தய: என்னும் சொற்றொடருக்கு இந்திரனது ஆயுதமாவரென்றும்சோமத்தைக் குடிப்பவரென்றும் இரண்டு பொருளுள்ளதால் இரண்டையுந்தோற்றவே சோமமார்ந்தே என்றும் கடையடியிற் கூட்டினர். விரப்சிந: என்பதற்குப் பலவிதமாகச் சப்தஞ் செய்பவர்களென்றும், பலவித சப்தஞ்செய்யும் ஸ்தோதாக்களோடு கூடியவர்களென்றும் இருவகைப் பொருளுண்டு. அதனல் 'பலவகையா முழங்குபவர்' என்பதற்குப் பதிலாகத் 'துதியாளராற் சூழ்ந்தோர்' என்றும் மாற்றிக் கூட்டலாம். யாவையெனும் எனவெனினும், எல்லாவற்றையும் என்றபடி.

வருக்கம் 7.

11. மகமுடையோர், யாகதலந்தோறடைவோர், பகைநேடிவதைப்போர்,
திண்ணை
னகமுடையமலையேனுமசைப்பவர்கள், துட்டர்தமையடக்கு
வோர்கள்,
நகுமொளியாயுதமுடையோர், நடைவழியிற்றருமமழிநாகமென்ன,
வகுபயஞ்சார்மேகமலைகளின்மேற்பொற்றேருருளையுருட்டுவரோ.

(இ-ள்.) யாகத்தோடு கூடியவரும், யக்ஞப்பிரதேசங்களோறுஞ் செல்லுபவரும், சத்துருக்களிடத்தத்தாமே(தேடிப்)போய் அவர்களை வதைப்பவர்களும், திண்மை பொருந்திய மலைகளையு மசைப்பவர்களும், துஷ்டர்களையடக்குபவரும், பிரகாசிக்கின்ற ஆயுதத்தைத் தரித்தவர்களுமான (மருத்துக்கள்), நடக்கும் பாதையிலுள்ள மரங்களை யழித்துக்கொண்டு போகும்யானையைப்போல, நீர் நிறைந்த மேகங்களின் மேல் (அம்மேகநீர் பொழியும் வண்ணம்) பொன்மயமான தேருருளை யுருட்டுவார்கள்—(எ-று.)

12. பகைவலியையழிப்பவர்கள், பாவகர்கள், மழைதருவோர், பார்வை
கூர்ந்தோர்,
தகவுமகாருரத்நிரனுக், கவரைவிளிப்போற்றுகளாற்சார்கவென்பாம்;

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

மிகுதனங்கள்கருதுவீர்!மட்புழுதிதூண்டுபவர்,வேட்கையீவோர்,
தகுசவன்த்தேத்துவார்,மருதரதகணமதனைச்சார்குவீரே.

(இ-ள்.) பகைவரது பலத்தைக் கெடுப்பவரும், வஸ்துக்களைப்பரி சோதித்துப் பார்க்கும் பாவகர்களும், மழையைத் தருபவர்களும், தீட்சண்ய மான பார்வையையுடையவர்களும், மகாதேவ(ருத்திரன்)னுடைய புத்திரர்க ளும்ஆன மருத்துக் கூட்டத்தாரை அழைப்பதற்குக் கருவியாயுள்ள ஸ்தோத் திரங்களால் எம்மைச் சாரும்படி யழைப்போம். பெரிய ஐசுவரியத்தை விரும்பும் ரித்விக்குக்களே! மண் புழுதியைக் கிளப்பிவிடுபவர்களும், இச்சை யை யளிப்பவர்களும், மூன்றுவது ஸவனத்தில் ஸ்தோத்திரஞ் செய்யப்படு பவருமான மருத்துக் கணத்தை (மருத்துக் கூட்டத்தை) யடைவீர்களாக —(எ-று) உருத்திரன், மகாதேவன். விருஷ்ணம், வேட்கையை யளிப் பவர்களே. தகுசவனம் என்றது மூன்றும் ஸவனமாம். ஏன்? மூன்றுவது ஸவனத்தில் தான் மருத்துக்களைத் துதிப்பது.

13. மாருதர்காளும்முதவிகொண்டெவனைக்காப்பீரம்மனிதன்ருனுஞ்
சீரியதன்வலியினுற்பிறமனிதர்க்கடந்திறையிற்சிரேட்டனுவான்,
கோரமொடுமனக்குவையுமேவலருமிகுதனமுங்கூடிச்சில
மாருதின்றநற்கருமமடைந்துபசுமகப்பேறுமடைவானன்றே.

(இ-ள்.) மாருதர்களே! (மருத்துக்களே!) உங்கள் உதவியினல் எவனை ரக்ஷப்பீர்களோ அவன் தனது வல்லபத்தாற் பிற மனிதரைத்தாண்டி விரைவாகச் சிரேஷ்டத்தை யடைவான். அவன் பின்னும் குதிரையும், அன்னக்(உணவு)குவியலும், வேலையாட்களும், அளவற்ற திரவியமும் அ டைந்து, சீலம் பொருந்திய ஸத்கருமத்தோடு கூடிப், பசுக்களையும் பிள் ளைப் பேற்றையும்பெறுவான்—(எ-று.) கோரம், குதிரை.

14. மாருதர்காள்!மகம்புரிவோற்கெனச்சுதர்கள்,பவுத்திரரு,மாண்டகன்ம
மோருபவர்,யுத்தமதிற்றோல்வியுறு,ரொளிமிகுத்தோ,ரொன்னர்
தம்மை
நீரறவேவாட்டுபவர்,வலியுடையோர்,தனங்கொள்வோர்,நிறைந்த
ஞானங்
கூருபவர்,புகழ்க்கொருவர்,நெடுநோக்கர்,சதவிமவர்க்கூட்டுவீரே.

(இ-ள்.) மருத்துக்களே! யாககர்த்தாவுக்காக, அடிக்கடி செய்ய வேண்டிய கர்மங்களே யறிந்தவர்களும், யுத்தத்தில் தோல்வியடையாதவர் களும், ஒளி அதிகமாக்வுள்ளவர்களும், பகைவரைத் தன்மை கெடும்படி செய்பவரும், பலமுள்ளவர்களும், தன்த்தை விரும்புகிறவர்களும், பரிபூரண ஞானத்தோடு கூடியவர்களும், கீர்த்திக்குச் சுட்டாக நிற்பவர்களும், (ஆழ்ந்த யோசனை) தூர திருஷ்டியுள்ளவர்களும், (நூறு) (இமம்) பனிக்காலங் களைக் கண்டவருமான புத்திரர்களையும், பவுத்திரர்களையும் தருவீர்களாக —(எ-று) நீரற, நன்மைகெட; இமவர், ஹேமந்தரிதுவைக் கண்டவர்; நூறு வயதுள்ளவர் என்றபடி.

(வேறு.)

15. கன்றிய பகைவர் தம்மைக் கடியுறும் வீரர்மிக்குப்
பொன்றலிறன மெமக்குப் பொருத்துக, மருதீர், நூறே
யன்றிவணுயிரத்திணர்ந தொளிர்ந்தோங்கு பஃதைத்;
துன்றுக விரைவின் வைகல் மதியினுற்றனம்பெற்றேமே.

மண்டலம் 1 சூக்தம் 65.

(இ-ள்.) மருத்துக்களே! கோபித்த பகைவரைச் சயிக்கும் வீரராகிய புத்திரர்கள் மிகுதியாகக் கூடும் கெடுதலில்லாத செல்வத்தை, நூறல்ல ஆயிரக்கணக்காக விளங்குவதை எங்களுக்குச் சேர்ப்பீர்களாக. புத்தியினற் பண்த்தைக் கூட்டுபவர்களாகிய மருத்துக்கள் விடியற் காலத்தில் வேகமாய் இங்குவந்து சேருக—(எ-று.) இக்கடைசியடி நோதஸனுடைய பல்லவி யென்றே சொல்லலாம். முன் இந்திரனுக்குச் சொன்னதை இப்போது மருத்துக்களுக்கும் ஏற்றிக் கூறினன்.

வருக்கம் 8.

65. மண்டலம் 1 அநுவாகம் 12. சூக்தம் 1.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சக்தியின் புத்திரன் பராசரன்; வடமொழிச்சந்தம்: துவி பாதவிராஜ் (கொச்சகக்கலிப்பா); தேவதை: அக்கினி.

இம்மந்திரங்களைப் பிரயோகிப்போர் இவ்விரண்டாய்ச் சேர்த்து ஒதுவர். ஒற்றையாயிருப்பதை இரண்டுதரம் ஒதுதல் மரபு. வஸிஷ்டனது புத்திரன் சக்தி; சக்தியின் புத்திரன் பராசரன். இப்பராசரனே வியாஸரது பிதாசகப்பிரஹ்மத்துக்குப் பாட்டனுமாம். இவ்விரண்டாய், இரண்டு இரண்டாய்.

1 & 2. பசுவோடு குகையொளிக்கும் பட்டியினைப் பற்றுதலி
னிசைவோடு முளத்தீர, மீந்தவியோ டேத்துறியோய்,
நசையோடு மவ்வவியை நற்றேவர்க் களிபபவ, வுன்
மிசையோடி யுன்பக்கல் மேவின ரெம்மகத்தேவும். (1.)

(இ-ள்.) கையிற்றாங்கிய அவியுண்டியோடு போற்றுதற் குரியவனே! அந்த அவியுணவைத் தேவர்களுக்களிப்பவனே! (அக்கினியே!) பசுவைத் திருடிக்கொண்டு அப்பசுவோடு குகைக்குள் ஒளிந்துகொள்ளும் திருடனைத் தரத்திப்பிடிப்பதுபோல, ஒத்த மனத்தோடு கூடிய தீரர்களு(மேதாவிகள்)ம், யாகத்தில் வணங்குதற்குரியவருமான வெல்லாத் தேவர்களும் உன்னைத் துரத்திக்கொண்டு வந்து உன் பக்கத்தில் உட்கார்ந்தார்கள்—(எ-று.) பட்டி, கள்வன்; திருடன்; தீரர் மேதாவிகளென்பார் சாயணர். வடமொழி மூலத்தில் யஜத்ராந் என்றுள்ளது; அதற்கு யாகத்தில் வணங்குதற்குரிய தேவர் என்பது பொருள். அதையே மகத்தேவரென்றார் பாட்டில். குகையென்றது ஈண்டு அக்கினியோடி யொளிந்த நீரைபாம். இசைவு ஒடும் உளம் எனப் பிரிக்க.

3 & 4 தேவர்களு நல்லொழுங்கைச் சேர்ப்பவன்றன் விரதமைதை
யாவலொடு தேர்ந்தணைந்தா ரப்பா லிப்புவனியு மீம
தேவருல கெனலாயிற் றிருந்துதியிற் சிறந்துமக
மேவுசலந் தோன்றிய தியினி யங்நீர் வளர்த்துமே. (2.)

(இ-ள்.) ரிதத்தை (ஒழுங்கை அல்லது யாக விதிகளை)க் கூட்டுபவனுகிய (அக்கினியினது) விரதத்தைத் தேவர்கள் தெரிந்து அவ்வக்கினியினிடத்துப் பொருந்தினார்கள். அப்புறம் இப்பூமி தேவருலகு என்று சொல்லும்படியாயிற்று. ஸ்தோத்திரத்தினும் சிறப்படைந்து யஜ்ஞத்தில்

குக் காரண பூதமாய் யாகப்பொருள்களை வளர்த்து யாகத்தினிடத்துப் பொருந்தியுள்ள தண்ணீரின் கர்ப்பத்திலுண்டான அக்கினியை யந்த நீரை ணது வளர்த்தது—(எ-று.) தண்ணீருக்குள் நெருப்புள்ள சங்கதி மச்சங் கள் எடுத்துத் தேவர்களுக்குச் சொல்ல அவர்கள் அச்சங்கதியைத் தெ ரிந்துகொண்டார்களென்பது தைத்திரீய ஸம்ஹிதை 2-2-6.

5 & 6. ஆக்கமென வணியோடு மகவுபுவிபோல் விரிவாயுந்
தேக்கரியிற் புசிபபீந்துந் தெண்ணீரிற் சுகமளிதனுந்
தாக்குசுடர்ப் பரிவினைவிற் சாருவதென்றே கிழ்நோக்
கூக்கியநீ ரோட்டமெனச்சாருழனியார்தடுப்பார்? (3.)

(இ-ள்.) ஆக்கத்(பெருக்கம் அல்லது புஷ்டி)தைப்போல ரமணீய மாயும், விசாலமான பூமியைப்போல் விஸ்தீரணமாயும், பொருள் நிறைந்த மலையைப்போலக் (கருப்புக்காலத்திலும் கந்தமூல பலாதிகளான) உணவை யளித்தும், தெளிந்த நீரைப் போலச் சுகத்தையளித்தும், யுத்தத்தில் உயர்ந்த ஜாதிக்குதிரை சத்துருக்களைக்கொல்லுவதற்கு விசைவாகப் போவதுபோலக் கீழ்நோக்கிச் செல்லும் நீரோட்டத்தைத் தடுக்கமுடியாதது போலச், சுட் டெரிக்கத்தொடங்கிய உன்னையும் ஒருவரும் தடுக்க முடியாது—(எ-று.) ஆக்கம், புஷ்டி. அரி, மலை. சமர்ப்பரி, யுத்தக்குதிரை.

7 & 8. உடன்பிறந்தாட் குடன்பிறந்தா ளெப்பசீர்க் குறவாந்தீ
யிடம்புரக்கு மாசு தனதிறைஞர்தனம் பறிப்பதெனத்
தடவனத்தைத் தகித்துண்ணுங்; காலுரப்பப் பலவிதமாய்க்
கடமார்ந்தே யெரியூட்டிக் கண்டமயிர் கழித்திடுமே. (4.)

(இ-ள்.) சகோதரிக்குச் சகோதரனது உறவுபோன்று தண்ணீர்க் குப் பந்துவாகிய தீயானது, ஒரு தேசத்தரசன் அவனுடைய பகைவர்களது தனத்தைப் பறிப்பதுபோல, விசாலமான ஆரண்யத்தைச் சுட்டுச் சாப்பிட்டு விடும். காற்றுத் தூண்டப் பலவிதமாகக் காட்டில் பிடித்துக்கொண்டு நெருப்புக்கு வேண்டிய ஆகாரத்தை யூட்டிப் பூமியின்மேல் தோன்றும் புல், பூடு, செடி முதலிய மயிர்களை யழித்துவிடும்—(எ-று.) "ஆகாசாத்வாயு: வாயோரகநி: அக்நேராப: ஆப: பிருதவி" என்பது தைத்திரீய ஆரண்யகம் 8வது அத்தியாயத்திலுள்ளது. அதனால் அக்கினி தண்ணீர்க்குப் பந்துவாம். இறைஞர்; பகைவர். பூமியில் வளரும் புல் செடி முதலியவைகளும்பூண்டுகளைப் பூமியினது மயிராக உருவகப்படுத்தினர். மயிர் வினைஞன் மயிரைக் கழிப் பது போல அக்கினி தீத்தழித்து விடுமென்க.

9 & 10. துன்னுமொளியா னரசைத் துளக்கி யுதிகாலியெழுந்
துன்னுபயிர்சோமனெனவுட்படைத்தே,நிதந்தோன்றி
மன்னுசிசுச் சூலாவி னுருவோவாங்கி நீண்டொளிர்தி
யன்னமென நீருறைந்து நெட்டுயிர்ப்பு விட்டிடுமே. (5.)

(இ-ள்.) நிதத்தில் (நிதம் நண்டு தண்ணீர்) உற்பவித்துச், சிசுவை வயிற்றில் வைத்துள்ள பசுவைப்போல உருவத்தில் பருத்து விருத்தியாகின் ற அக்கினி, தன்னிடத்துப் பொருந்திய வெளிச்சத்தால் ஜனங்களுக்கு ஒளியையூட்டி, அதிகாலையில் (யாக கார்யங்களுக்காக) எழுந்து, தசையில் வளரும் ஓஷதிகளை (செடிகளை) சோமனைப்போலச் சிருஷ்டித்துவளர்த்துத்

மண்டலம் 1 சூக்தம் 66.

(தான் உற்பவித்த தண்ணீரின்மேல்) அன்னப்பட்சி போலத் தங்கிப் பெரு மூச்சுவிடும்—(எ-று.) சோமன், ஸோமாபிமான தேவதை. ஸோமம் ஓஷதிகளுக்கு (செடிகளுக்கு) ராஜாவென்பது தைத்திரீயப் பிராஹ்மணம். 3-9-19. இராக்காலத்தில் இருட்டில் அக்கினியின் வெளிச்சமே உபயோகப் படுவதால் நாரைத்துளக்கியென்றார். நிதம் ஒழுங்கு என்பது பொருள்; ஆனால் தண்ணீர் என்று ஈண்டு பொருள் கொள்ளுவர் சாயணர். அக்கினி ஸோமனைப் போலவே பயிர்களைச் சிருஷ்டித்து வளர்க்கிறான். அக்கினியே அன்னப்பொருள்களை யுண்பவனும், அவ்வன்னப் பொருள்களை வளர்க்கும் பதியுமாமென்று சுருதி கூறும்.

வருக்கம் 9.

66. மண்டலம் 1. அநுவாகம் 12. சூக்தம் 2.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி பராசரன்; வடமொழிச்சந்தம்: த்ரிஷ்டுபாதவிராஜ்; தேவதை: அக்கினி.

1 & 2. செல்வமெனப் பலவுருவிற் செங்கதிரோ னன்னேக்கிற்,
புல்லாயு ளுயிர்க்காவிற், பொன்னுச்சிர்ப் புத்திரனின்,
மல்லிலறும் பரிமாவின் மடிதருபாற் பசுவென்னத்
தல்லியநல்லொளியோடுந்தோய்ந்துவனத்தெரிகதுவும் 1

(இ-ள்.) சித்திரவருவோடு கூடிய செல்வத்தைப்போலவும், நல்ல பார்வையோடு கூடிய சூரியனைப்போலவும், ஆயுளை விருத்திசெய்யும் பிராண வாயுவைப்போலவும், நித்தியமாயுள்ள சுவர்க்கத்தைத் தரும் (ஔரஸ) புத்திரனைப்போலவும், சவாரி செய்பவனைச் சுமந்துசெல்லும் நடையிற் சிறந்த குதிரையைப்போலவும், பால் கொடுத்துச் சந்தோஷப்படுத்தும் பசு வைப் போலவும், காணப்படும் விசேஷமான பிரகாசத்தோடு கூடிய அக்கினி காட்டை யெரிப்பதற்காக அதனைச் சூழ்ந்துகொள்ளும்—(எ-று.) இன் உவமைப்பொருளில் வந்தன. ஒவ்வொரு உவமையையும் சாதாரணதர்மத் தோடு கூறினர். அக்குண விசேஷணங்களெல்லாம் அக்கினிகும் பொருந் தும்.

3 & 4. இல்லமென வழகுடையோர், நிழில்சேம மளிப்பான்; பி
னல்லலய்வப் பக்குவத்தோ, னண்ணலரைத் தெறுபவனுஞ்,
சொல்லிருடியெனத் துதிப்போன், றேய்மகரிற் சிறந்தவனுற்;
செல்பரியிற் களிமிகுதேதான் செறியண்தைச் சேர்த்திடலே: 2.

(இ-ள்.) கிரஹத்தைப்போல ரமணீயமான அக்கினி, க்ஷேமத்தைத் தருவான்; பின் பழுத்த யவதானியத்தைப் போலப் பக்குவமானவனும், சத் குரு ஜனங்களை யடக்குபவனும், மந்திரங்களைக் கண்ட ரிஷியைப்போலத் தேவர்களைத் துதிப்பவனுமான அவன் யஜமானர்களாகிய மனிதரிற் சிறர் (தவன். குதிரையைப்போலச் சந்தோஷமிருந்த வவ்வக்கினி எங்களுக்கு ஆகா ரத்தைச் சேர்க்கட்டும்—(எ-று.)

5 & 6. ஆரூத சோதி யுளோன் கன்மனென வழிவில்லான்
கூரூதே யில்லழகு கூட்டு மனையா ளொத்தோன்
மாரூத பல்சுடரி னெல்வெளுத்து மாந்தர்வயிற்,
றேரூர்தஞ் சமர்ச்சொலிப்பான், றேரெனப் பொற்சுடர்ப்ரந்தே(3)

(இ-ள்.) நெருங்கமுடியாதபடி அடங்காத சேர்திமிர்களினும், கர்மங்களைச் செய்பவனைப்போல நித்தியமாக (ஜ்வாலைகளுள்ளவனும்), வீட்டை யழகுபடுத்தும் மனையாளைப்போல் பக்ஷிகளிறகுகளை யழகுபடுத்துபவனும், கடோதபலவிதமான சுடர்களின் பிரகாசமானது வெளுத்துத்தோன்ற மனிதர்களிடத்துப் பொற்காந்தி பரந்த தேரைப்போலக் காந்தி வீசுபவனுமான அக்னி, சத்துருக்களோடு செய்யும் யுத்தத்தில் காந்தியோடு ஜ்வாலை வீசுவான்—(எ-து.) எல், சூரியவெளி, வெளிச்சம்.

7 & 8. நாயகன் றூண்டும் படையி, னச்சலர்க்குப் பயமூட்டுஞ்
சாயகங் கூர்வாய்ந்ததெனத் தவவலியன்; வரமளிப்பா
னேயமிகு பிறவிகட்கு மெடுத்தோற்றத் தறுபவர்க்கும்;
நாயகனும் வதுவையர்க்கு; நற்காந்தன் கன்னியர்க்கே. (4.)

(இ-ள்.) சேனை நாயகன் தூண்டும் சேனையைப்போலவும், பகைவர்களுக்குப் பயத்தைத்தரும் கூர்மை பொருந்திய அம்பைப்போலவும், (அக்னி) மிகுந்த வலிமை பொருந்தியவன். ஜன்மித்த பிராணிகட்கூடங்களுக்கும், இனி ஜன்மிக்கப்போகும் உயிர்களுக்கும் வரத்தை (இச்சித்த பொருள்களை)க் கொடுப்பான். கல்யாணமான மாதர்களுக்குப் புருஷனும்; கல்யாணமாகாத பெண்களுக்கு ஜாரனுவான்—(எ-து) கல்யாணமான மாதர்களுக்கு அக்னி நாயகனென்பதை மண். 10, சுக். 75, செய். 40, 41, பார்க்க. "கன்னிகையை முதலில் ஸோமன் அடைந்தான். பிறகு கந்தர்வன் அவளுக்கு நாயகனுனன். அக்னி உனக்கு (கன்னிகைக்கு) மூன்றுவது புருஷன். இப்பொழுது ஸ்திரீயினது கர்ப்பத்தில் தோன்றியவன் உனது நான்காவது புருஷனும். (40) ஸோமன் கந்தர்வனுக்குக் கொடுத்தான். கந்தர்வன் அக்னிக்குக் கொடுத்தான் அவ்வக்னி எனக்குச் செல்வத்தையும் புத்திரர்களையும், இந்த என் வதூவையும் (மனைவியையும்) கொடுத்தான் (41) என்பது. மேல் கந்தர்வனென்றது விசுவாவஸுவை. ஜாரன், காந்தன், விவாக காலத்தில் அக்னியினிடத்து லாஜம் (தானியம்) முதலிய ஹோமத்திரவியங்களோடு கூடவிருந்து அவளுடைய கன்னிகைத் தன்மையை நிவர்த்திப்பவன் (கழிப்பவன்) ஜாரனும்.

9 & 10. சோற்றமெலா நின்னுலாம்; தூய வவிப்பொருளோடும்
போற்றியொளிச்சுடர்ச்சேர்வாமவீடுபுகுமாலெனவே;
ஆற்றெழுக்குரீஇழார்ந்தொழுகலென்ன, சுடர்க்
கொழுந்தைத்
தூற்றமுறத்தூண்டுவன்றீ;யுயர்பகதிர்செறுமே(5)

(இ-ள்.) சராசரங்களாகிய (ஸ்தாவர ஜங்கமங்களாகிய) பிறப்புக்கள் எல்லாம் உன்னுலேயே உண்டாகும். பரிசுத்தமாகிய (புரோடாசம்) அவிப்பொருளோடு, ஸ்தோத்திரஞ்செய்து, காந்தி பொருந்திய அக்னியை, வீட்டை நோக்கிச் செல்லும் பசுக்களைப்போல (ஆவலோடு) பொருந்துவோம்; இந்த அக்னி ஆற்றிலோடுந்தண்ணீர் தாழ்ந்த பிரதேசங்களை நோக்கியோடுவது போலச், சுடர்க்கொழுந்துகள் சுற்றி வளைந்துகொண்டு எரிக்கும்படி அவற்றைத் தூண்டிவிடுவான். அவனுடைய கிரணங்கள் உயர்ந்த ஆகாசத்தை நோக்கிச்செல்லும்—(எ-து.) நபம், ஆகாயம். ஆன், பக.

மண்டலம் 1 சூக்தம் 67.

67. மண்டலம் 1. அநுவாகம் 12. சூக்தம் 3

10 இருக்குக்கள் கொண்டது.

அத்யயனம்-செய்பவர்களுக்கு ஹிதே.

ரிஷி: ஸிந்து பாசாசரன்; வடமொழிச்சந்தம்: த்ரிஷ்டுபாதவிராஜ்; தேவதை: அக்கினி.

1 & 2. வனத்திடத்துச் சயிப்பவனுய் மனிதருக்குத் தோழனுய்
மனத்திடஞ்சால் செய்கையனை மன்னனைப்போற் றேர்பவனு
யினச்சுகத்தைத் தருபவனு யெழில்கருமச் சுபனுகல்
வினைத்தலத்தே யவிசமக்கும் வெம்மனங்கொ ளோதாவே. (1.)

(இ-ள்.) காட்டினிடத்துச் சயங்கொள்பவனுயும், மரண தர்மத் தோடி கூடிய மனிதர்களிடத்திற் றோழனுயும், அரசன் திடகாத்திரமும் செய்கைத்திறமும் உள்ள வீரனைத்தேடுவது போலச், சிக்கிரத்திற் கர்மானுஷ்டானங்களைச் செய்யும் அநுவஷ்டாதாவைத் தேடுபவனும், க்ஷேமத்தைச் செய்யும் ரக்ஷகனைப்போன்றவனும், யக்ஞதலத்தில் தேவர்களுக்காக அவிப் பொருள்களைச் சுமந்துசெல்லும் நன்மனத்தோடு கூடிய ஹோதாவுமான (அக்கினி,) சோபன கர்மங்களோடு கூடியவனுயிருக்கட்டும்—(எ-று.) ஹோதா, ஹோதா, தேவகாம் ஆஹ்வாதா, தேவர்களை யழைப்பவன். வெம்மனம், நன்மனம்; வெம்மையீண்டு விருப்பம்.

3 & 4. எப்பொருளுங் கரத்தகத்தே யேந்தியொரு குகையொளித்துச்
செப்பருமோர் நடுக்கத்திற் றேவர்களை நிறுவினனு
லொப்பின்மறை யுள்ளத்தே யுருப்படுத்தித் துதித்தபேர்
திப்புவியிற் புத்தியுள நரரிவனைத் தெரிந்தாரே. (2.)

(இ-ள்.) (அக்கினி) எல்லா அவிப்பொருள்களையும் தனது கைகளி லேந்திக்கொண்டு ஒரு குகையினிடத்தொளித்துச், சொல்லமுடியாத நடுக் கத்தில் தேவர்களை யிருத்தினுன். ஒப்பில்லாத் மந்திரத்தை, மனதிலுல் உருப்படுத்தியதை, ஸ்தோதாதிர பூர்வமாகச் சொன்னபோது இப்பூமியி லுள்ள புத்திமான்களாகிய மனிதர்கள் இவ்வக்கினியைத் தெரிந்து கொண் டார்கள்—(எ-று.)

5 & 6. பிறப்பில்லான்போற் புவியைப் பிறக்குறுவா; னுண்மைசெறி
மறைப்புகழா லந்தரத்தை வானிடத்தே நிறுவினனுற்
றறைப்பகைக்கள் விரும்பிடத்தைத் தண்ணளியி, னுயிர்க்குயிரே!
கறைப்பற்றுத்தா தோம்ப லென்றுங் கடிதினுறல் குகைக்
குகைக்கே (3.)

(இ-ள்.) பிறப்பில்லாதவனுகிய சூரியனைப்போல் பூமியைத் தனது பிரகாசத்தினுல் தாங்குவான். ஸ்தோத்திய மந்திரங்களின் புகழ்ச்சியால் அந்த ரிட்சத்தையும் அதற்கு மேலுள்ள வானிடத்தையும் தூக்கி நிறுத்தினுன். உயிர்க்குயிரானவனே! (அக்கினியே!) பசுக்கள் மேயவிரும்பும் மேய்ச்சற் றலைகளாகிய விடங்களைக் கறுப்பாகத் தீய்த்துவிடாதபடி அவற்றைப் பாதுகாப்பாயாக: குகைகடோறும், நீ போய்த் தங்குவாயாக—(எ-று.) பிறப்பில்லானென்றது, சூரியனை. மந்திரத்தால் வானத்தையும் அந்தரத் தையும் அக்கினியுபர நிறுத்தினனென்று தைத்திரீயஞ் கூறும். குகைக்

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

குக் குகைக்கென்றது குகைக்குகைக்கு என்றுமிற்று. பசுக்கள்ஸஞ்சாரம் செய்ய யோக்கியமான இடங்கள் என்பது குகையென்பதன்பதப்பொருள்.

7 & 8. குகைவாசியா மிவனைக் கூர்ந்தணரு மவனுக்கும்,
மிகுரிதத்தைப் போற்றெரியை வேண்டி யுபாசிப்பாற்குந்,
தகுரிதத்துக் கென்றவனைத் தகைந்து கடைந்தெடுப்பார்க்கும்
வெகுதனங்க ளிவர்க்கெல்லாம் வேண்டுமெனக் கூறுவனே. (4.)

(இ-ள்.) குகையில் வசிப்பவனுகிய இவ்வக்கினியைத் தெரிந்து கொள்ளும் புருஷனுக்கும், ரிதத்தை (யாகத்தை, ஸத்யத்தை, ஒழுங்கை) வளர்க்கும் அக்கினியை விரும்பி உபாஸிப்பவனுக்கும், ரிதத்துக்காக (யாகத்துக்காக) அரணிகளைத் தனகந்து கடைந்து அவ்வக்கினியை யெடுப்பவர்களுக்கும் ஆகிய இவர்களுக்கெல்லாம் வெகு செல்வங்களைக் கொடுப்பான் —(எ-று.) குகை, நீரென்றும் பொருள் கொள்ளலாம். மண். 1, சூக். 65, செய். 1, பார்க்க. இவர்களுக்கெல்லாம் வேண்டுமென்று எடுத்துச் சொல்லுவான் என்பது பதப்பொருள். ஆனால் ரிதத்தை (உண்மையை)ப் போற்றுபவனுதலின் அவன் சொன்னது நிறைவேறும். அதனால் செல்வங்களைக் கொடுப்பானென்றார் உரையில். ரிதம், உண்மை அல்லது சத்தியம், யாகம், ஒழுங்கு என்னும் பொருளது.

9 & 10. வீரியஞ்சா ரோடதிக்கண் மேன்மையுற வோங்குவதோ-
டேரொழுகு பிரஜையொடு தாயிடத்து மிருந்துறைவான்;
பேரறிவோ னுயிர்க்குயிரோ னீர்நிலைக்கட் பிறங்குவனும்;
நீரர்மிகப் பூசித்துச் செயல்புரிவா ரிலம்போன்றே. (5.)

(இ-ள்.) பலம் பொருந்திய மருந்துச்செடிகளில் மேலாக விளங்குவதோடு, அழகாகிய (பூப்பழம் முதலிய) பிரஜைகளிடத்திலும், (அப்பூப்பழங்களைப்பெறும்) தாய்ச்செடியினிடத்திலும் கன்றுகவோங்கி நிற்பான். ஞானவானும், எல்லாவுயிர்களுக்கும் உயிரானவனுமான அக்கினி, தண்ணீருக்கு மத்தியில் விளங்குவான். மேதாவிகள், கிரகப்பிரவேசஞ் செய்வதற்கு முன் கிரகத்தைப் பூசித்துப்-பின் கிரகத்துக்குள் புகுந்து காரியங்களைப் புரிவதுபோல, அக்கினியை முதலிற் பூசித்துப்பிறகு அதனிடத்துக் கர்மங்களைச் செய்வார்கள் —(எ-று.) பிரஜை யென்பது பெறப்பட்ட வஸ்துக்கள் அது குழந்தைகளை யுணர்த்தும். தாய் என்றது அரணிணை உயர்திணைப்பொருள்களைப் பெறும் தாய்ச்செடிகளும், தாய்ப்பிராணிகளும், தாய்மரங்களும் ஆம். நீர் நிலையென்றது தண்ணீர் மத்தியைக் குறித்து நின்றது.

வருக்கம் 11.

68. மண்டலம் 1. அநுவாகம் 12. சூக்தம் 4.

10 இருக்குகள் கொண்டது.

ரிஷி: ஷ பாராசரன்; வடமொழிச்சந்தம்: துவிபாததவிராஜ்; தேவதை: அக்கினி.

1 & 2. மேவுமவி தாங்கி யவற்றிற்கலந்து விலங்கிஞெடு
தாவரத்தை யிரவதனைத் தன்னெளியாற் சூழ்ந்து, திவத்
தாவலொடு மேறுவனு, லன்னவற்றின் மகத்துவத்தைத்
தேவரெலார்க்கும் தேவன் றேர்ந்தணைந்த வப்பொழுதே. (1.)

மண்டலம் 1. சூக்தம் 68.

(இ-ள்.) யாகப்பொருள்களைச் சுமந்து அவற்றோடு கலந்து, தர்வா ஜ்யகமப் பொருள்களையும், இராக்காலத்தையும் தன்னொளியினற் சூழ்ந்து, ஆகாயத்திலுயர வேறிநிற்பான், இந்திராதி தேவர்களுக்குள் ஒப்பற்ற தேவ னாகிய அக்கினி அத்தாவசங்கமப் பொருள்களின் மகத்துவத்தை யுணர்ந்து அவற்றைச்சூழ்ந்து வியாபித்த அந்தக்காலத்தில்—(எ-று.) அந்தக்காலத்தில் ஏறி நிற்பான் எனக் கூட்டுக.

3 & 4. தேவ! வயிரோடு வறட்டாணியினிற் சேர்த்துதித்து
மேவியபின் யாவர்களு மேவுவ ருன்காரியத்தை;
தாவலிலுன் றெய்வீகத் தற்கிழமைப் பெயரெல்லா
மோவறப் பூண்பா ரமாமுறையு மூனேத்துநிப்பவரே. (2.)

(இ-ள்.) தேவனே! (அக்கினியே!) காய்ந்த அரணிக் கட்டைகளில் கிவப்பான நிறத்தோடும் ஒளியோடும் நீ தோன்றிய பின்னர் எல்லா யஜ மானர்களும் உன் காரியத்தைச் செய்வார்கள். மரண தர்மமில்லாத உன் னைத் துதிப்பவர்கள் கெடுதலில்லாத உனது தெய்வத்தன்மை பொருந்திய பெயரையெல்லாம் அடைவார்கள்—(எ-று.) உயிரோடு என்றதற்கு ஜ்வ லனத்தோடு ஒளியோடு என்பது பொருள். அமரம், மரணமின்மை.

5 & 6. நிதத் துறுவோன் றுதியிழைப்பார்; நிதமுமவன் றொழில்புரியும்;
மதிக்கி னெலாவுயிரு மவன்; மகம்புரிவா ரவற்கியாரும்;
இதத்தவியைத் தருபவர்க்கு மெண்ணியுனக் களிப்போமென்
றுதித்திடு மன்பினருக்கு முவர்செயலோர்க் துதவுகபொன். (3.

(இ-ள்.) நித்வீஜர்கள் தேவயஜன தேசத்தில் வரும் அவ்வக்கினியின் ஸ்தோத்திரங்களைச்செய்வார்கள். ஸோமபானஞ்செய்யும்அவ்யாகமும்அவ்வக் கினியினது காரியங்களைச் செய்யும். அவனே எல்லாவுயிர்களுக்கும் (உணவு போல) ஆதாரமாவான். அவன் பொருட்டே யாகங்களை (தர்சபூரணமாகிய கர்மங்களை) எல்லாருஞ் செய்கிறார்கள். அக்கினியே! உனக்குச் சருப்போ டாச முதலிய அவிப்பொருள்களைத்தருபவனுக்கும்,தருவோமென்றெண்ணி ஸ்தோத்திரஞ்செய்யும் பிரியவான்களுக்கும் அவர்களுடைய செய்கைகளை யறிந்து செல்வத்தைத் தருவாயாக—(எ-று) நிதம், யாகம் நிதத்துறுவான் யாகத்துக்கு வரும் அக்கினி. மகம் என்பது தர்ச பூர்ண மாஸம்முதலாகிய கர்மங்களைக் குறிக்குமென்பார் சாயணர். முன்னிரண்டடி படர்க்கையாகவும் பின்னிரண்டடி முன்னிலையாகவும் வந்தது. முதலடிக்கு மேலைட்டாகிரியர் (Griffith) "விதியினது நினைப்புப்பலமானது. அவ்வி தியின் கட்டளைகளுமப்படியே" என மொழி பெயர்ப்பார்.

7 & 8. மனுவின்று வம்சத்தோர்க் கோதாவாய் மன்னுற்று
மனிதர்பெறும் பல்வகைய வளந்தனக்குப் பதியாவாய்;
தனதுபெருங் குடிவளரத் தனயர்விழைந் தனதருளா
லினவலிகொண் மக்களைப்பெற் றிருப்பர் நெடுநாளிவணே. (4.)

(இ-ள்.) (அக்கினியே!) மனுவினது வம்சத்தவர்களாகிய மானவர் களுக்கு ஹோதாவாய்(தேவரை யழைத்துக்கொண்டு வருபவனாய்)ப் பொ ருந்தி, மனிதர்கள் பெறும் பசுமுதலிய பலவகையான செல்வங்களுக்கும்

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

நீயே ஸ்வாமியாவாய். ரித்விஜர்கள் தமது பழைய வம்சமானது வளருவதற் கெண்ணி யுன்னருளினாற் பலம் பொருந்திய மக்களைப்பெற்று நெடுநாள், ஜீவித்திருப்பார்—(எ-து.) தனது, தமது ஒருமைப்பன்மைமயக்கம்.

9 & 10. தந்தையின்சொற்கேட்டொழுகுந்தனயரெனவிரைவாகச்
சொந்தியோனுணைகளிற்செவிகொடுப்பார்பணிசெய்வோர்;
நந்துழுவோனு மவர்நற்கடையிற் றனங்கூட்டும்;
மந்திரநண்பன் வாணி பீன்களொடு வருக்கினமே.

(இ-ள்.) பிதாவின் வார்த்தையைக்கேட்டு அதன்படி நடக்கும் புத்திரர்களைப்போல, அக்கினிகார்யஞ் செய்பவர் அச் சிவந்தநீயோடு கூடிய வக்கினியினது உத்தரவுகளைக்கேட்டு அவற்றின்படி விரைவாகச் செய்வார்கள். மிக்க உணவுப்பொருள்களோடு கூடிய அவனும் அவர்களது வாசற் படியில், யதேஷ்டமான செல்வத்தைக் கொண்டுவந்து கொட்டுவான். யஜ்ஞக்கிரகத்துக்குச் சிநேகிதனுன அக்கினி வானத்தை நட்சத்திரங்களோடு உருப்பண்ணினான்—(எ-து.) மந்திரம், யஜ்ஞம் நடத்தும் வீடு, பூஜாக்கிரகம். யாககர்த்தாவின் வீட்டில் கிரகபதியாயுள்ள அக்கினியே லோகாதாரமான தெய்வமாக வானத்தைச் சிருஷ்டித்து அதில் நட்சத்திரங்களை யமைத்தானென் விளக்குவார் மேனட்டாசிரியர். புத்ரன் புத் என்னும் நரகத்தைச் சேதிப்பவன்.

வருக்கம் 12.

69. மண்டலம். 1. அநுவாகம் 12. சூக்தம் 5.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி. பராசரன்; வடமொழிச்சந்தம்: த்ரிஷ்டுபாதவிராஜ்; தேவதை: அக்கினி.

1 & 2. வெண்மையனுய் வைகலது காதலன்போல் வெஞ்சுடர்ப்பூட்டி
யொண்மையுள விண்மணிபோ லொளி நிறைப்பான் புலிவானிற்;
நிண்மையினிற் சேறன்றியுஞ் செறிந்தவற்றைச் சூழ்கின்றாய்;
ஒண்மையுள தேவர்சுதனுய்த் தந்தை யாவாயே. (1.)

(இ-ள்.) வெண்மையான நிறத்தோடு கூடியவனுய், (அக்கினி) உஷஸின் நாயகனைப்போல எல்லாவற்றிற்கும் பிரகாசத்தைத் தந்து, பூமி வானங்களில் சூரியனைப்போலக் காந்தியை நிறைப்பான். (அக்கினியே!) பிறந்தவுடன் உலகத்திலுள்ள வஸ்துக்களைச் சூழ்ந்து அவற்றில் வியாபிக்கிறாய். நீ ஒளி பொருந்திய தேவர்களுக்கு (ரித்விக்குக்களுக்கு)ப் புத்திரனுயமர்ந்து அவர்களது பிதாவாகிறாய் (அல்லது அவர்களைப் பரிபாலிக்கிறாய்)—(எ-து.) வைகலது காதலன். விடியற்கால தேவதையாகிய உஷஸ்-க்கு நாயகன், சூரியன் என்றபடி. விண்மணியென்றதும் சூரியனையே. முதலிரண்டடி படர்க்கையாகவும், பின்னிரண்டடி முன்னிலையாகவும் கூறினர். "ஒண்மையுளதேவர் பிதா, புத்திரனுயேங்குவையே." என்றும் கடைசியடியை ஓதலாம். 'பிரகாசம் பொருந்திய தேவர்களுக்குப் பிதா நீ. என்றாலும் அவர்களது புத்திரனைப்போல அவர்களுக்கு அவியுன்னவைச் சுமந்து அவர்களிடம் சேர்ப்பாய்." என்பது பொருள். தேவர் எண்

மண்டலம் 1. சூக்தம் 69.

பதற்கு ரித்விக்குக்கள் அல்லது பொழுதறிந்து மறைபுகன்று யாகஞ்செய்யும் பிராஹ்மணனென்று சாயணர் உரை கூறுவர். என்? பிராஹ்மணர்கள் பிரத்தியட்ச தேவர்களென்று தைத்திரீயம் கூறுவதால். மண். 1, சூக். 26, செய். 19 பார்க்க.

3 & 4. ஆதனது மடிசார மறிந்துகொளல்போ லங்கி
மேதையஞ மிடம்பமிலான் வெவ்வுணவ்வச சுவைப்புடுப்பான்;
வாதையறஞ் சுகமீவோன் மாந்தர் நடு வாழ்வதென
வோதுறவே யாகநடு வொளிர்ந்தகத்தே யுறைவானே. (2.)

(இ-ள்.) பசுவினது மடியானது பசுவுண்ணும் உணவுகளில் பாலுக்கு வேண்டிய சாரத்தையறிந்து எடுத்துக்கொண்டு பாலாகச்செய்வது போல, மேதாவியும், டம்பமில்லாதவனுமான அக்கினி தன்னிடத்திலுறும் உண்வுப்பொருள்களைப் பக்குவப்படுத்திச் சுவையுள்ளவையாகச் செய்வான். துன்பமில்லாத சுகத்தைத்தரும் புருஷன் ஜனங்களுக்கு மத்தியில் குடியிருப்பதுபோல, யாகத்துக்கு மத்தியில் அழைக்கப்பட்டு அக்கினி யக்ஞக்கிரகத்தில் தங்கியிருப்பான்—(எ-று.) ஆதனது, ஆவினது என்னும் பொருளில் வந்தது. ஸுககாரியான புருஷன் ஜனங்களுக்கு மத்தியிலிருப்பின் நற்பயனைத்தருவான். அதுபோலவே அக்கினியும் யாகவீட்டிற் பயன்படும் என்றபடி. ஒதுறல் ஈண்டு அழைக்கப்படுதல்.

5 & 6. இற்பிறந்து மகனைப்போ லின்பளித்துப் பரியின்மகிழ்ந்
தெற்றியடித் திறுப்பாரு லெதிர்த்திடு மொன்னுர்கடமை;
யெற்றை நரோடுமியா னினையந்த சமவுறையுளர்க் கூ
வுற்றழைப்பே னற்றை யெலாத்தேவருவு மெரிகொள்வான்.

(இ-ள்.) புத்திரனைப்போல வீட்டிற்பிறந்து (அக்கினி) இன்பத்தைத்தந்து; குதிரையைப்போலச் சந்தோஷத்தோடு கூடியவனுய்ப் பகைத்தெதிர்த்த ஜனங்களை நன்முகவடித்துக் கொல்லுவான். எப்போது ரித்விஜர்களாகிய புருஷர்களோடு யான் சமசதனமுள்ள தேவர்களைக் கூவியழைப்பேனே அப்பொழுது அக்கினி யவ்வெல்லாத் தேவருடைய உருவத்தையும் தானே யடைவான்—(எ-று.) சமவுறையுளர், ஸதீஸ: சமசதனமுள்ளவர். சமானமான வீட்டோடு கூடியவர். சமானமான பெருமையுள்ள வீடுகளிற் குடியிருக்கும் தேவர்.

7 & 8. ஈண்டுதொழி லாற்றுமகர்க் கீத்துதவ வொல்லெனநீ
மீண்டும்போ துன்னேனுன்பை யெதிர்த்தழிப்பா ரில்லையால்
மாண்டகுணத் தூணவரொடு மருவலர்கள் வெருண்டோடத்
தூண்டியுன தக்கருமந் துகட்படுப்போர்க் கொலுங்காலே. (4.)

(இ-ள்.) இவ்வீடத்துக் கர்மங்களைச் செய்யும் யஜமானர்களுக்குக் கர்மபலனைத்தர நீ வேகமாகச் செல்லும்போதும், பெருமை பொருந்திய உனது தோழர்களாகிய மருத்துக்கள் எழுவரோடு சத்துருக்கள் பயந்தோடும்படி தூண்டி உனது (யாக கர்த்தாக்களுக்குச் சுகமளிப்பதாகிய) அக்கர்மத்தைக் கெடுக்கும் ராட்சஸர்களைக் கொல்லும்போதும், உனது விரதங்களை இம்சிப்பவர்களொருவருமில்லை—(எ-று.)

9 & 10. வைகறையின் காதலன்போல் வளரொளிய னிற்றருவோன்
மைதுலவா வுருவத்தோ னென்மையறிந் தருளுகவால்;

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

மெய்குலவு மவிசுமந்து மேவுமக வாயில்வழி
யைகுலவு நபங்காண் வீணைவவன் கதிர்யாவும். (5.)

(இ-ள்.) உஷவின் காதலனுகிய சூரியனைப்போல விசேஷமான பிரகாசத்தோடு கூடியவனும், கிரகத்தை யுண்டுபண்ணுபவனும், குற்றமற்ற ரூபத்தோடு கூடியவனுமான அக்கினி யெங்களை (எங்கள் ஸ்தோத்திரங்களை) யுணர்ந்து எங்களுக்குப்பலனைத்தரட்டும். அவனுடையகதிர்க்கற்றைகளெல்லாம் தமது மெய்யிற் படும் அவிப்பொருள்களைச் சுமந்துகொண்டு யக்ஞக்கிரகத்தின் வாசற்படி வழியாக அழகு பொருந்திய ஆகாசத்திற் காணப்படும்படி செல்லும்—(எ-று.) மைகுலவா வுருவத்தோன் என்றது மற்றைத்தேவரைப்போல யக்ஞகர்த்தாக்களுடைய கண்களுக்குப் படாது எப்போதும் நிற்காத காரணத்தால்; அதாவது அக்கினியின் ரூபம் எப்பொழுதும் பிரத்தியட்சமாகத்தெரியும் என்றபடி. வைகறை உஷஸ் சூரியன் உஷஸுக்கு ஜாரனும்; ஜாரன், காதலன். மண். 1, சூக். 66, செய். 4, பார்க்க. 33, அழகு.

வருக்கம் 13.

70. மண்டலம் 1 அநுவாகம் 12. சூக்தம் 6.

11 இருக்குக்கள் கொண்டது.

ஒதுவார்க்கு 6 11வது இருக்கை இரண்டுமுறை யோதுதல் மரபு.

ரிஷி: ஷி பராசரன்; வடமொழிச்சந்தம்: த்ரிஷ்டுபதவிராஜ்; தேவதை: அக்கினி.

1 & 2. அனக்கூட்ட மெய்துகயா; மக்கினியுங் கருமமெலா
மினச்சோதியோடு மதி யியைவோனுய்ப் பாவுறுவான்;
கனத்தேவர் விரதமெலாங் கண்டறியுமவனே யிம்
மனுப்பூதர்க் கண்ணுதித்த மற்றவற்று நிறைகுவனே. (1.)

(இ-ள்) யாங்கள் மிகுதியான அன்னக்குவியலை யடைவோமாக அக்கினி எல்லாக்கருமங்களிலும் அழகான சோதியோடு புத்திமந்தனுய்ப் பரந்து நிற்பான். அவனே எல்லா தேவ விரதங்களையு மறிவதுமன்றி மனுஷ்யர்களது மத்தியிலுண்டான விரதங்களையும் கண்டறிந்து அவற்றில் நிறைந்து நிற்பான்—(எ-று.) மனுப்பூதர், மனிதர்கள்.

3 & 4. நீருறைவோன் வனமுறைவோ னெடுந்தாவரத்துறைவோன்,
ரூருறையுஞ் சங்கமத்துஞ் சடராங்கி யெனவுற்றவோன்;
மேருநனந்தலை யேனு மகவில்லத் தவி யவற்கே;
சாரமான், குடியோம்புந் தலைவனெனத் தொழிற் செய்வான். (2.)

(இ-ள்.) தண்ணீருக்குள் வசிப்பவனும், காட்டின் மத்தியின் வசிப்பவனும், தாவரங்களுக்கு மத்தியில் வசிப்பவனும், சங்கமத்தைச்சேர்ந்த பிராணிகளின் அகட்டில் ஜடராக்கினியாகத் தங்குபவனுமாகிய அக்கினிக்காக, மலைக்கு மத்தியிலிருப்பினும் யக்ஞக்கிரகத்தில் அவியை யளிப்பார்கள். மரணமில்லாதவனுகிய அவவக்கினி, ஜனங்களை ரட்சிக்கும் ராஜாவைப்போல இரட்சண கர்மங்களோடு கூடியிருப்பான்—(எ-று) மேரு, மலை; தார், பூமி; சடராங்கி வயிற்றிலுள்ள நெருப்பு, தேகச்சூடு.

மண்டலம் 1 சூக்தம் 70.

5 & 6. இரவொளிர்வோ னக்கினியு மேத்து நல சூக்தமுரை
யிரவலற்குப் பொருளளிப்பா; னெய்திய பேறிவுடையோய்!
வாமுயருந் தேவர்பிறப்போ டமரிப்போர் பவத்தின்
முரமுணர்வாய்; நீநிதமுஞ் தசைசார்யாவையுங் காக்க. (2.)

(இ-ள்.) இரவில் பிரகாசிப்பவனுகிய அக்கினி நல்ல சூக்தத்தைச் சூறும் யாசகனுகிய யஜமானனுக்குப் பொருளைத் தருவான். பேரறிவுடையவனே! சிறந்த (இந்திராதி) தேவர்களின் பிறப்பையும், மரண தர்மமுள்ள மனிதரின் பிறப்பையும் நீ யறிவாய். நித்தியமும் பூமியிலுள்ள பொருள்களையெல்லாம் காப்பாயாக—(எ-று.) படர்க்கை முன்னிலையாக மாறிற்று

7 & 8. பல்லிரவும் வைகலுமென் றுறருழுவிற் பாதபத்தோ
டில்லொழுகுஞ் சங்கமமு மேய்ந்து ரிதஞ்சூழ்பவனை
யெல்லமருங் தூதுவனு யாகமுறு மவற்றெழுதார்
பல்வகைய கன்மமெலாம் பட்டாங்கி னளிப்பதற்கே.

(இ-ள்.) ஒன்றல்லாத பல இரவுகளும், வீடியற் காலங்களுமென்ற வேறுபட்ட ரூபத்தோடு தாவர சங்கமங்களிற் பொருந்தி, ரிதத்தை (சத்தியத்தை அல்லது தண்ணீரை அல்லது யாகத்தை)ச் சூழ்ந்து நிற்பவனும்; பிரகாசம் பொருந்திய ஹோதாவாக யாகத்தில் வந்தடைபவனுமாகிய அக்கினியை வளர்த்துத் துதித்தார்கள், அவன் எல்லாக் கர்மங்களிலும் சத்திய பலன்களைத் தந்து காப்பதற்காக—(எ-று) காப்பதற்காகத் துதித்தார்கள் எனக் கூட்டுக.

9 & 10. துதிபெறு மெம்பசுக்களுக்குத் தோய்ப்பாயான் மாட்சிமையை;
மதிபெறு பேரொளிச் செல்வ மெமக்காக்கல் மாந்தரெல்லாம்;
பதிபலவிற் பலபேரும் பலவிதமா யுனைத்தொழுது
சுதர் வயதுசென்றபிதாச் சொத்துறலிற் றனம்பெறுவார். (5)

(இ-ள்.) பலராலும் துதிக்கப்படும் அழகாகிய எமது பசுக்களுக்குக் கீர்த்தியை உண்டுபண்ணுவாய். (அதாவது எமது பசுக்கள் மிக்க விலை மதிப்புள்ளவையாகச் செய்வாய் என்றபடி.) ஜனங்களெல்லாம் மிக்கவொளி பொருந்திய பெரிய செல்வத்தை எங்களுக்குக் கொண்டு வந்து தரட்டும். பல வீடுகளிலும் பல யஜமானர்கள் பலவிதமாக உனைத்தொழுது, வயது சென்ற தந்தையின்று செல்வத்தைப் புத்திரர்கள் பெறுவதுபோலத், தனத்தை யடைகிறார்கள்—(எ-று.)

11. சாதனஞ் செய்பவனிகரச் சட்டெனவே பலனடைவான்;
மாதனுலைக் கையேந்து மகன்பொருவுஞ் சூரனவன்;
வேதனைசெய் மிடுக்கனென மிருபயத்தை விளைப்பவன், சூ
யோதனத்தே யொளியோங்கி யுகமொடு முதவுகவே. (6.)

(இ-ள்.) ஒருவிஷயத்தை ஸாதகஞ்செய்பவன் அவ்விஷயத்தின் பலனையடைவதுபோல அக்கினியும் எல்லாப்பலன்களையும் விரைவில் அடைவான். பெரிய வில்லைக் கையிலேந்திய வீரனைப்போல விளங்குஞ் சூரனுவான் அவன். இம்மை செய்யும் மிடுக்குள்ளவன் பலருக்கும் பயத்தை யுண்டுவதுபோல அக்கினியும் பார்ப்போருக்குப் பயத்தை யுண்டு பண்ணுவான். (சூயோதனத்தில்) யுத்தத்திற் பிரகாசம் மிளிர்ந்து அவன் எங்களுக்

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

சூச் சகாயம் செய்யட்டும்—(எ-று.) ஆயோ்தனம், யுத்தபூமி. வடமொழித் துவிபாதவிராஜ் இரண்டு இருக்குக்களுக்கு ஒரு செய்யுளே யாயினும் இப்பதிஞெராமிருக்குக்கு மாத்திரம் தனியே ஒரு கொச்சக்கலிப்பா சொல்லப்பெற்றது. என்? ஒதுதற்கழகாயிருகுமாறு.

வருக்கம் 14.

71. மண்டலம் 1. அநுவாகம் 12. சூக்தம் 7.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி பராசரன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அக்கினி.

1. ஒரிடத் துதித்த நேச வுடன்வயி றநேக வன்ன
நேருறு மன்பைத், தாய்மார் நித்தியம் பதியைப்போற்று
மேரினிற், கூப்பிச் சேவை யியற்றுங், காரிருள் வெளுத்துச்
சேருறுஞ் செந்நிறத்து வைகலைப் பசுகள் போன்றே.

(இ-ள்.) ஒரிடத்தில் உற்பத்தியான நேசமுள்ள சகோதரிகளாகிய விரல்கள், இத்திர காந்தியோடு கூடிய அன்புக்குரியவக்கினியைத், தாய்மார் தமது உத்தம நாயகர்களிடத்து நித்தியம் பக்திசெய்யும் முறையாக, இருட்டு வெளுத்துச் சிவப்பு நிறத்தோடு கூடிய விடியற்காலத்தைச் (சூரியனது) கிரணங்களாகிய பசுக்கள் சூழ்ந்து சேவிப்பதுபோலக் கைகுவித்து வணங்கும்—(எ-று.) விரல்கள் கிரணங்களாப்போலக் கூப்பித், தாய்மார் கணவரைச் சேவிப்பதுபோல, அக்கினியைச் சேவித்து நிற்குமென்க. உடன்வயிறு, சகோதரம். அன்பு ஈண்டு அன்புக்குரிய அக்கினியைக் குறித்தது. பசுக்களென்றது சூரிய கிரணங்களை. செவ்வானங்களை யென்பார் மேனுட்டாசிரியர் (Griffith); செவ்வானம், செக்கர்மேகம்.

2. எம்முனே ரங்கிராக்க, ளேத்துரை யொலியால் வன்மை
கெம்மிய திடாங்க ணாகஞ் சேதித்துச் சிறந்து நின்றார்;
அம்மைசார் பாதை பேர்வா னமையவென் றெமக்காச் செய்தார்;
இம்மை, நாள், ஒளிக்கொடியை, யியைகதிர்ப் பசுவைக் கண்டார்.

(இ-ள்.) எமது பூர்வீகர்களாகிய அங்கிரஸர்கள், தமது ஸ்தோத்திர சப்தத்தினுலேயே வலிமை பொருந்திய திடாங்கமுள்ள மேகத்தை யுண்டத் துவைத்த அசுரனுகிய பணியென்னும் மலேபோன்று பெருத்த வுடலுள்ள வனைப் பிளந்து மேன்மைபெற்றனர். விண்ணிடத்தில் (இடைஞ்சலில்லாத) அழகிய பாதையொன்றை யெமக்காக உண்டுபண்ணினர்கள். இவ்வுலகத்து அஸ்லையும் (பகலையும்), அப்பகலே யுணர்த்தும் ஒளிபொருந்திய கேதுவாகிய சூரியனேயும், சூரிய கிரணங்கள் செறிந்த பசுக்களேயும் (செவ்வானங்களேயும்) அறிந்து பெற்றார்கள்—(எ-று.) ஒளிக்கொடியென்றது பகலே யுணரும்படிசெய்யும் சூரியனும். பசுக்கள் செவ்வானங்களென்று மேற்பாட்டிற் சொன்னர். நாகம் என்றது மேகமலேயென்பார் மேனுட்டாசிரியர், பணியென்னு மசுரனென்பார் சாயணர். நாள், பகல் இரண்டன்றெனக்.

மண்டலம் 1 சூக்தம் 71.

3. ஒழுங்கினே நிறுவிக் கன்ம மோங்கிட்டச் செய்தார்; செல்வர்,
வழங்குறு தனத்தா லங்கி காரியம் வகிப்போர், கன்மந்
தழங்குறப் புரிவோர், யாதுஞ் சார்திருட்டிணையே யில்லார்,
வழங்கவி தேவ சாதி வாழ்விப்போர் வருவா ரன்றே.

(இ-ள்.) ஆங்கிரஸர்களாகிய மஹரிஷிகள், காருகபத்தியமாகிய ஒழுங்குகளேஎற்படுத்தி அக்கினி ஹோத்திராதி கர்மங்களாகிய தனங்களைச் செய்தார்கள். தனஸ்வாமிகளாகிய செல்வவான்கள் தரும்செல்வத்தைக் கொண்டு அக்கினியர்தான காரியங்களைத் தாங்குபவர்களும், யக்ஞகர்மங்களைச்சிறக்கச் செய்பவர்களும், ஒரு விஷயத்திலும் திருஷ்ணை (ஆசை) யில்லாதவர்களும், அவிப்பொருள்களால் தேவர்களை வாழும்படி செய்பவர்களுமான அங்கிரஸர்கள் அக்கினியை யெதிர்முகமாகக் கொண்டுவருவார்கள்—(எ-று.) திருட்டிணை, திருஷ்ணை, ஆசை அங்கிரஸர் தோன்றி எழுவாய்.

4. கடைத்தபின் வியான னென்னக் கனலெழுந் தொளிவெளுத்துக்
கடைக்கடை யில்லந் தோறுங் காந்தியி னமர்ந்து, தோழ
னடைப் பெருமன்னன் வேற்றோன் றன்வயி னடப்பான் மானப்,
படைத்தனன் றூது தேவர் பக்க லப்பிருகு போன்றே.

(இ.ள்.) கடைந்தெடுத்தபின் அக்கினி வியானனென்னும் வாயுவைப்போல வெழுந்து வெளுப்படைந்து வீடுகடோறும் பிரகாசத்தோடும் வீற்றிருந்து, அப்பிருகு ரிஷியைப்போல யாக கர்த்தாவின் றூதனாக, வேறு பெரிய நாட்டுஅரசனிடத்துத் தூதுபோகும் ஒரு தேர்ழனைப் போலத் தேவர்களிடத்துச் செல்லுவான்—(எ-று.) அக்கினி தேவஹோதாவாகச் செல்லுவது சாஸ்திர மரியாதைக்காகவே யல்லாது யஜமானனது அதிகாரத்துக் கஞ்சியன்று. அதற்காகவே தோழனையுவமை கூறியது. அத்தோழன் ஒரு ராஜாவுக்காகத் தூதுபோவது மரியாதை நிமித்தமே. கடைந்தபின் என்றது கடைத்தபின் என வலிததல் விகாரம் பெற்றது. பிருகு ஒரு மஹரிஷி இவன் முதன் முதல் மாதரிச்வாஞ்சிய வாயு கொண்டுவர அக்கினியைப் பெற்றவன். மண். 1 சூக். 31 செய். 3யும், மண். 1 சூக். 60 செய். 1யும் பார்க்க.

5. பெரும்பிதாவாந் தேவர்க்குப் பெருகு மிச்சார மீயு
மரும்பொழு தூறுசெய்யு மரக்க ரோர்ந் தம்பெய்தே வெங்
தெரிந்திட வோட்டுந் தேவன, புத்திரி யுதைக்குச் சோதி
பொருந்து தன்கிரணத்தோ டெல்கதிரையுங் கூட்டா நிற்பான்.

(இ-ள்.) மகத்துவம் வாய்ந்த பிதாக்களாகிய தேவர்களுக்கு, நிறைந்த சார பூதமாகிய இவ்வவிப்பொருள்களே யூட்டும்போது, அக்கர்மத்தைத்தடுத்து இடைஞ்சல் செய்யும் ராட்சஸர்களே யுணர்ந்து அவர்களை முதுகு காட்டியோடும்படி யடிக்கும் (அக்கினியாகிய) தேவன் தன்புத்திரியாகிய உஷஸுக்கு (விடியற்காலாபிமான தேவதைக்கு அல்லது விடியற்காலத்துக்கு)த் தனது ஒளிபொருந்திய கிரணங்களோடு சூரியனுடைய கதிர்களையொன்று சேர்த்து அவளது காந்தியை ஸ்தாபிக்கிறான் (எ-று.) பிரா ஒருமைப் பன்மை மயக்கம். எல் சூரியன். தேவன் றண்டு அக்கினி தேவன். மேனுட்டார் சூரியர் இந்த ரிக்குக்குப் பொருள் விளங்க வில்லையென்பார். வெபர், முதலிய.

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

6. தன்னகத் தனக்கென் றென்றுந் தாங்கிய தணலுளோற்கும்
உன்னரு மகம் வணக்கத் தமைத்தவி யுதவு வோற்கும்
பன்னரு மீரிடத்தும் பரவியோ யனம் வளர்ப்பாய்;
உன்னி நீ பொருதத் தூண்டும் போரின னுறுவான் பொன்னே.

(இ-ள்.) தனது வீட்டில் உனக்கென்று எல்லாக்காலத்திலும் ஸமித்துக்களைக் கொண்டு மூட்டிவைத்துக்கொண்டிருக்கும் யாகாக்கினி யுள்ளோனுக்கும், யக்ஞத்தினிடத்து வணக்கத்தோடும் அவிப்பொருள்வைத்து உனக்கு உதவுவோனுக்கும் (உத்தம மத்திமஸ்தானங்களான) மேற் சொன்ன இரண்டிடத்திலும் வியாபிப்பவனுகிய அக்கினியே, நீ அன்னப்பொருள்களை விருத்தி செய்வாய். உன்னால் தூண்டப்பட்டு யுத்தத்துக்குச் செல்லும் தேரோடு கூடிய வீரன்செல்வத்தையடைவான்—(எ-று.)

7. போசன மெலா மெரிக்கட் பொருந்துறு மேழு பேரியா
ருசினிற் சமுத்திரத்தை யணைவது போல; வெங்கள்
போசன மொக்க லோர்ந்து பொருத்திய வல்ல; நீயே
மாசைசார் தேவரோடு மதித் தெமக்காகக் காண்க.

(இ-ள்.) ஏழு பெரிய நதிகளும் சமுத்திரத்தைப் பொருந்துவதி போலச் சருபுரோடாசம் முதலான போசன பதார்த்தங்களெல்லாம் அக்கினியினிடத்துப் பொருந்தும். எங்களுடைய உணவுப்பொருள்கள் எங்களுக்குச் சுற்றத்தார்கள் தந்தவையல்லவாம். (நீயே தந்தது என்றபடி.) அதனால் தன பதிகளாகிய தேவர்களோடு நீயே எண்ணி எங்களுக்குப் பொன்னை யறிந்து கொடுப்பாயாக—(எ-று.) ஒக்கல், சுற்றம்; வடமொழி மூலத்தில் ஜாம்யः என்றுள்ளது அதற்கு ஒரே பாத்திரத்தில் சாப்பிடுபவர்கள் என்பது பொருள்; சகோதரங்களாம். ஏழு நதிகளையும், மண். 1, சூக். 32, செய். 12ல் பார்க்க.

8. நரர்ப்தி யகட்டிற் றூயவன்னத்தைச் சமைத்து மெய்யிற்
ப்ரவுறுஞ் சுடர்கொள் சோதியாக்கிய விநது சூலுற்
றுரமுற,வங்கி,மொய்ம்பன் சோதிலான் கருமமுற்றுன்
தருணனு மகனுயந்தத் தநயனை யூக்குவானே.

(இ-ள்.) யாகஞ்செய்யும் ரித்விஜர்களாகிய மனிதர்களுக்குப் பதியாகிய யஜமானனது வயிற்றிற் பொருந்திய சுத்தமான உணவைப் பக்குவப்படுத்தி யவனது சரீரத்திற் பரவுகின்ற சுடர் பொருந்திய சோதியானது உருவப்படுத்திய அன்னரஸ ரூபமான வீரியம் கருப்பஸ்தானத்திற் பொருந்தி வலுவடைந்தபோது, அக்கினியே வலிமை பொருந்தியவனும், குற்றமற்றவனும், கர்மத்தோடு கூடியவனும், கட்டிளமை வாய்ந்தவனும் (இழத்தன்மையில்லாதவனுமென்றபடி) ஆன புத்திரனை உற்பவிப்பான். உற்பவித்த அந்தப் புத்திரனையும் யாகாதிகர்மங்களைச் செய்யத் தூண்டுவான்—(எ-று.) இச்செய்யுளுக்கு வேறொரு பொருளும் உண்டு. மேனட்டார் சிரியர் உரை இதற்கு முற்றும் வேறுபட்டதாம். அது பின் வருமாறு. "அபிவிருத்திக்காகப் பிரகாசமானது நரர்பதியை நிரப்பியபோது நேரே விண்ணிலிருந்து. தெளிவான விருஷ்டியுண்டாகிறது அக்கினியானவன்

மண்டலம் 1. சூக்தம் 72.

சூற்றமற்று நன்ரூய்ப் போஷிக்கிற இலைமைவாய்ந்த கூட்டத்தை வெளிக் காட்டி யுற்சாகத்தால் நீரப்பிவிட்டான்." என்பது. நரபதி யிந்திராணியிருக் கலாமென்றும், அவ்வீளஞர் கூட்டம் மருத்துக்களாக விருக்கலாமென்றும் அம்மேனட்டாசிரியர் ஊகிப்பார். வித்து ரேதஸ், சூல் கருப்பம். ரித் விஜர்கள் தரும் பரிசுத்தமாகிய அவியுணவை யாககர்த்தாவண்டதும் ஜாட ராக்கினி அதனைப் புத்திரர்களுக்குத் தாத்தக்க அன்ன ரூபமான ரேதஸாக மாற்றிப் புத்திரோற்பத்தியுண்டுபண்ணுகிறது என்பது பிண்டப்பொருள்.

9. ஏகனுய்ச் சூரன் மார்க்க மெய்தி வல்விசைவிற் சித்த
வேகமார்ந்தேதகிச்செல்வம்வேண்டியவற்றைச்சேர்ப்பான்;
ஓகை நற்கரத்து வேந்தர் மித்திரர் தருண ரோங்கும்
போகமா மமுத மெங்கள் பசுக்களிற் பொருத்திச் சேர்வார்.

(இ-ன்.) சூரியன்தனியாகவே ஒளிபொருந்திய மார்க்கங்களிற் பொருந்தி மனவேகத்தைப்போல வேகமாகச்சென்று பலவிடங்களிலும் உள்ள செல்வங்களில் வேண்டியவற்றை எடுத்துக் கொண்டுவந்து சேர்ப்பான். நல்ல காங்களோடு கூடிய ராஜாக்களாகிய மித்திராவருணர்கள் எல்லாருக்கும் பிரீதிகரமான அமிர்தத்தை (பாலை) எங்கள் பசுக்களிடத்திற் பொருத்தித் திரிவார்கள்—(எ-று.) 'அக்கினியே! நீயே சூரியனும், மித்திரா வருணர் களாயும் தோற்றுகிறுய்.' என்பது கருதத்தக்கது என்பார் சாயணர்.

10. எம்பிதிர் நட்பை யென்றுஞ் சேதிக்கல் யாவு மோர்ந்து
பம்பிய கவிரீ யங்கி பயோதர நபத்தைப் போல
வெம்பிய சரை யெம்மெய்யை மேவி யெம்முணர் வழிக்கு;
மம்புவி யதற்கு முன்ன ரமுதத்தை யளிப்பாய் மன்னோ:

(இ-ள்.) அக்கினியே! வஷிஷ்டர் முதலிய பிதிர்களது சிநேகத்தை யெப்போதும் நீக்கிவிடாதே. நீ எல்லாமுணர்ந்து தூர திருஷ்டி. வாய்ந்த கவியாவாய். நீர் தாங்கிய மேகம் சூரியனை மறைப்பதுபோலக் கிழத்தன் மையானது எங்களது சரீரத்தைப் பொருந்தி யெங்களுடைய புத்தியைக் கெடுக்கும். அதற்கு முன்பாகவே யெங்களுக்கு அமிர்தத்தை யளிப்பாயாக —(எ-று.) அமுதம், அமிர்தம், மரணமின்மையையளிப்பது.

வருக்கம் 16.

72. மண்டலம் 1. அநுவாகம் 12. சூக்தம் 8.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி. பராசரன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை-அக்கினி.

1. இத்தரை மீனிதர்க் கேற்ற வெகுதனங் கரத்தெடுத்தே
நித்தியற் களிக்குஞான காவிய மறையைத் தர்னேற்
றெத்த நல்லமுத மெல்லா மோதுவார்க் களிப்பா னங்கி
மெத்து நற்றனத்தின் மேவுந் தனபதி யானு னன்றே.

(இ-ள்.) அக்கினி இவ்வுலகத்துள்ள நரர்களுக்கு ஹிதஞ் செய்கின்ற மிகுந்த தனத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, நித்திய வஸ்துவாகிய சிருஷ்டி கர்த்தாவுத்தாகச் செய்த ஞான காவிய ஸ்தோத்திர ரூபமான மந்திரங்களைத்

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

தானேற்றுக்கொண்டு அந்த ஸ்தோதாக்களுக்கு நல்ல அமிர்தத்தை (பொன் னை)த்தருவான். உலகத்திலுள்ள செல்வங்களில் உத்கிருஷ்டமான செல் வங்களுக்கு அவன் பதியானான்—(எ-று.) அமுதம், அமிர்தமெண்டு பொன் னென்பார் சாயணர்.

2. நம்மக னம்மைச் சூழ்ந்து நலமுறக் கலந்தோன் றன்னை
யம்மையின் விரும்பு ஞான வமரர் யாவருமே யோரார்;
தம்மவி பெறுது சேர்ந்து தாங்கிய வணக்கத் தோடும்
பொம்மலி னங்கி யோங்கும் பொருவில் சார நடையினுற்றார்.

(இ-ள்.) நமக்குப் பின்னர்த்தோன்றுவதால் (அல்லது நாம் அசனி கடைந்து எடுப்பதால்) நமது மகனென்னத் தக்கவனும், நம்மைச் சுற்றியு முள்ள (அச்வத்தம், மூங்கில் முதலியவற்றிற் கலந்து நிற்பவனுமான) அக் கினியை இச்சித்த ஞானவான்களாகிய தேவர் யாருமே அவனைக் காண வில்லை. அக்கினி யில்லாததனால் தங்களுக்கு அவியுணவு கிடைக்காமல் வருந்தி மிகுந்த வணக்கத்தோடு அக்கினியை மூட்டி அக்கினி காரியங்களைச் செய்யும் உத்தமமான யாகப்பிரதேசங்களை நோக்கிக் காலால்அத்தேவர்கள் நடந்து வந்தார்கள்—(எ-று.) மகன் என்பதற்குப் புத்திரனைப்போல் பிரீதி கரமானவன் என்பதும் ஒன்று. அமூரா: பிழைத்தலில்லாதவர்கள் என்பது பொருள். ஞானவான்கள் என்றுரை உரையில். அச்சொல் மருத்துக்களைக்குறி மென்பார் சாயணர்.

3. சுசியுளோர் மூன்றுகூதிர் தூயுனக்கிழுதையூற்றி
யிசையுறு முன்போற் பேர்பெற்றெகிபத் தேவராகி
யுசிதமினுடலைப் போகட் டேசெழுதட்டுப்பெற்றே
பசியுரு வமராராகிப் பரகதி யடைந்தாரங்கே.

(இ-ள்.) அக்கினியே! சுத்தமுள்ளவர்களாகிய (மருத்துக்கள்) மூன் று பனிக்காலங்கள் (வருஷங்கள் என்றபடி) பரிசுத்தமான உனக்கு ஆஜ்யத் தை (நெய்யை) யூற்றி உன்போலத்தேவ நாமத்தையும் யக்கியதேவர்களாகவி ருக்கும் பெருமையையு மடைந்து தங்களுடைய ஊனம் பொருந்திய சரீரத் தைக் கழித்து அக்கினிச்சயனமென்னும் கர்மத்தில் ஏழு கபாலங்களைப் பெற்று அமரர்களாகி ஸ்வர்க்கத்தையடைந்தார்கள்—(எ-று.) மூன்று கூதிர் என்றது மூன்று பனிக்காலமாம். ஒரு வருஷத்துக்கு ஒரு பனிக்காலமே வருமானதால் அச்சொற்றொடர் மூன்று வருஷங்களைக் குறித்தது. மருத் துக்களுக்கு அக்கினி(ஸ்)சயனத்தில் ஏழு கபாலங்கள் வைப்பதென்பதும், அப்பொழுது அம்மருத்துக்களெழுவரையும் ஈத்ரி அங்யாத்ரி, தாத்ரி, ப்ர தித்ரி, மித: ஸபரா என்றழைப்பதென்பதும் தைத்திரீய ஸம்ஹிதை 4-6-5ல் சொல்லப்படுகின்றன. 3 வருஷம் அக்கினி காரியம் செய்து மருத்துக்கள் தேவவுடலைப் பெற்றார்களாதலால், இவர்களும் ரிபுக்களைப்போலவே மனி தராயிருந்து அமரர்களானவர்கள் என்பார் வில்ஸன். எழுதட்டுப்பெற்றே யென்பது வடமொழி மூலத்திலில்லை.

4. எக்கியக் குரிய தேவ ரிடமகல் புவிவான் றோன்றி
முக்கியமான போற்றை முயன் றுருத்திரர்க்குரைத்தார்;
சக்கிரி பாதி யாலுற் சார்ந்த மாருதக் கணங்க
ளக்கினி யுயர்ந்த தானத் தமர்ந்துள தோர்ந்தடைந்தார்.

மண்டலம் 1. சூக்தம் 72.

(இ-ள்.) யக்ஞத்துக்குந் தருந்தேவர்கள் இடம்பரந்த ரோதஸீயி (வானம் பூமிகள்)ல் வந்து, தேவ அசுரயுத்தத்தில் தேவரை நிலைப்பிக்கும் தனத்தை யபகரிக்கும் ருத்திரனுகிய அக்னியின் பொருட்டு அவனுக்கருகமான முக்கிய ஸ்தோத்திரங்களை யெடுத்துக் கூறினர்கள். தேவர்களிற் பாதியாகிய இந்திரனைச்சார்ந்து, மருத்துக்கள், அக்னியுயர்ந்தஸ்தானங்களாகிய அரசமரமாதிய இடங்களில் தங்கியிருப்பதைக்கண்டு அவனையடைந்தார்கள் —(எ-று.) ருத்திரன் ரண்டு அக்னியைக்குறித்தது. சக்னிரியென்ற சொல் வடமொழி மூலத்திலில்லை. எதுகை நோக்கிச்சேர்த்தது. தேவர்கள் ஒருபாதி இந்திரன் மற்றப்பாதி யென்றது தைத்திரீயம் 1-5-1.

5. நன்குனை யறிந்து தேடி நாடி யுன்பக்கல் சார்ந்து
கொன்பெறு வணகஞற் கேற்ற கோனுனை மனவி மாரோ
டன்புற வணங்கி யன்ப னுன கடைக்கண் காவ
வன்றிய தேவர் தம்மெய் சுக்குற யாகஞ் செய்தார்.

(இ-ள்.) உன்னை நன்றுகவறிந்து கண்டு, உனது பக்கத்திற் சேர்ந்து, நமஸ்காரஞ் செய்யத்தக்க உன்னேத்தங்கள் பத்தினிகளோடு நமஸ்கரித்துச், சகாயனான உனது கடைக்கண்ணினது பார்வையாலேற்படும் காவலையடைந்த தேவர்கள் தங்களது சரீரம் பட்டினியாலிளைத்து மெலிந்துபோக யாகத்தைச்செய்தார்கள்—(எ-று.)

வருக்கம் 17.

6. மூவெழு கூட யாக முற்ற வுன்னு னிலைத்து
மேவுறு மவற்றை யாகக் கேற்றவர் தெரிந்து மேன்மை
யோவறு மமிழ்தை யோம்பு முவரிடந் தாவரத்தைத்
தாவறு பசுவை மற்றைப் பிராணியைத் தயக்கிக் காப்பாய்.

(இ-ள்.) 21 இரகஸ்யமான யக்ஞங்கள் உன்னாலேயே முழுவதும் நிலையாக்கப்பட்டவற்றை யக்ஞஞ்செய்யும் யோக்கியதையோடு கூடிய யஜமானர்கள் தெரிந்து, மேன்மை கெடாமல், மரணத்தன்மையல்லாத உன்னை வளர்க்கிறார்கள். அவ்யஜமானர்களிடத்து ஸ்தாவரங்களையும், பசுக்களையும் மற்றும் உபயோகமான ஜங்கமப்பிராணிகளையுந் தயங்கவிட்டுக் காப்பாற்று வாயாக—(எ-று.) கூடம், இரகஸ்யம், குஹ்யம். மூவேழாவன: (மண். 1, சூக். 20, செய். 7.) அக்னியாதேயம், தர்சபூரணமாஸம், அக்னிஷ்டோத்ரம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூப பசுபந்தம், ஸௌத்ராமணி, ஆக ஏழவிர்யக்ஞங்கள் 7; பஞ்சமஹாயக்ஞம், அஷ்டகாசிராத்தம் பார்வண சிராத்தம், சிரவணை, கர்ம்பாத்தியவரோஹணம், சூலகவம், ஆச்வயுஜி ஆகப்பாகயக்ஞங்கள் 7; அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்தயம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், ஆப்தோர்யாமம் ஆக ஸோமயக்ஞங்கள் 7; ஆகமொத்தம் 21. இவற்றுள் பஞ்சமஹாயக்ஞமென்பது பிரஹ்மயகஞ்ம் (வேதமோதுதல்) தேவ யக்ஞம் (தேஹோமம் வளர்த்தல்), பூத யக்ஞம் (பலியீதல்), பிதிர் யக்ஞம், (தர்ப்பணஞ்செய்தல்,) மநுஷ்ய யக்ஞம் (இரப்போர்க்கீதல்) என்னும் பிரிவாம். பாக யக்ஞங்களில் காமப்பிரதிய வரோஹணம் சூலகவம் என்பவற்றிற்குப் பதிலாக ஆக்ரகாயணி, சைத்ரி என்ற இரண்டைச் சேர்த்துள்ளார் அகாரநிக்காரர். இவ்விருபத்தொரு யாகங்ஞும் வைதிக ரஹஸ்யங்களானது பற்றிக் கூடயர்கமென்னூர். இவற்றிற்கவினியில்லாமல் நடவாதானதுபற்றி 'முற்ற வுன்னல் நிலைத்து மேவுறும்' என்றஅடைகொடுத்தார்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

7. உணர்வன யாவு மோர்ந்து மனிதருக் குணவு சுத்தம்
புணர்வதைப் பிழைப்புக் கஞ்சி புணர்த்துக சததமோங்க;
இணங்கும் வான்புவிக்கட் டேவரேகு நன்னெறியைத் தேர்ந்து
வணம்பெறச் சோர்வி றாதாய் வயங்குவா யவி சுமந்தே.

(இ-ள்.) அக்கினியே! அறியவேண்டியவற்றையெல்லா மறிந்து மனிதர்களுக்குப் பரிசுத்தமான ஆகாரத்தைச் சீவன நிமித்தம் எக்காலத்திலு மோங்கும்படி கூட்டுவாயாக. கூட்டியபின் வானம், பூமிகளுக்கு மத்தியில் தேவர்கள் சொல்லும் பாகையை யறிந்து சோம்பலில்லாத தூதனைப்போல அழகாக அம்மனிதர்கள் தரும் அவிப்பொருள்களை அத்தேவர்களிடத்து சுமந்து செல்லுவாயாக(எ-று.)

8. மேன்மைசா னதிந ளேழு மேம்படுதொழிலின் வானின்
ரூன்றிழிபோது யாக மறிந்தவர் தனஞ்சார் மார்க்கம்
தோன்றுறக் கண்டா ருள்ளந் தோய்நர ருண்வொழு
மான்ற சீர்த் திடத்தாப் பாலையடைந்தது சரமை மாதோ.

இ-ள்.) சோபன கர்மத்தோடு கூடி மகத்துவம் வாய்ந்த கங்கை முதலிய ஏழு நதிகளும் விண்ணின்று இறங்கியபோது யாவரிடுகளையறிந்த ஆங்கிரஸர்கள் செல்வத்தையடையும் மார்க்கத்தைக் கண்டார்கள். மனத்தோடுகூடிய மனிதர் சாப்பிட்டுச் சீவிக்கின்ற சிறப்பும் திடமும் பொருந்திய பாலுணவைச் சரமை பெற்றது—(எ-று.) கங்கை முதலிய 7 நதிகளையும் மண். 1, சூக். 32, செய். 12ல் பார்க்க.சரமை (ஸரமா) யின்கதையை மண் 1 சூக். 62 செய் 3ல் நோகருக.

9. அதிதியின் மக்கள் சாவில் தன்மையை யடைவான் மார்க்கம்
விதியினிலுற்ற வெல்லாக் கன்மமு மியற்றி நின்றார்;
அதிபெரியோராக எந்த மகதொடு மதித்த் தாயும்
பிதுவியைத் தங்கவன்மை பெரிதுற்ரு; எவிகொண்டாயே.

(இ-ள்.) ஆதித்தியர்கள் மரணமில்லாத தன்மையை யடைவதற்கு வேண்டிய மார்க்கங்களைச் செய்யவெண்ணி அவற்றிற்குக் காரணமான சதுர்தசராத்ரம், ஷட்நிர்மத்ராத்ரம் முதலிய எல்லாக் கர்மங்களையுஞ் செய்தார்கள். அந்த மஹான்களான புத்திரரோடும் அவரது தாய்களாகிய அதிதி எல்லா ஜகத்தையும் தாங்கத்தக்க மகத்துவத்தைப் பெற்றுச் சிறந்தாள். (அக்கினியே!) அந்தவாதித்தியர் தந்த அவியுணவை நீ யடைந்தாய் (எ-று.), ஆதித்தியர் 14 இரவுகள் செய்யும் சதுர்தசராத்திரம், 36 இரவுகள் செய்யும் ஷட்திரம்சத் ராத்ரம் என்னும் விரதங்களை மேற்படுத்தினரென்று தைத்திரீயம் (7-4-6) கூறும். பிதுவி, பிருதுவி, இங்கு எல்லா ஜகங்களையும் குறித்தது. அக்கினியே என்ற ஒரு சொல் அதிகாரத்தை நோக்கி வருவிக்கப்பட்டது.

10. ரூண் டழுகமைந்த யாக விருத்தனம் பதித் தீரக்க
மாண்டவ ரமைத்த போது வானிடத் தமரர் வந்தார்;
தூண்டு தூய்சுடர்க டோய்ந்து நதியெனத் தூனவி ஞற்றிக்
ஞீண்டியே சுலித்த காலை யின்புற்ரூர் தேவ ரங்கே.

மண்டலம் 1. சூக்தம் 73.

(இ-ள்.) இவ்விடத்து அக்கினியில் (யஜமானர்கள்) அழகுவாய்ந்த யாகசம்பத்துக்களை ஸ்தாபித்து இரண்டு கண்களையும் அமைத்தபோது விண்ணிலிருந்து தேவர்கள் (யாகஸமயமதுதானென்று) வந்தார்கள். அவ்வக்கினியிற்றூண்டப்படும் நிர்மல ரூபமான சுவாலைகள் வேகமாயோடும் நதியைப்போல நாலு திக்கிலும் பரந்து சலித்தபோது, அக்கினியே, அத்தேவர்கள் ஸந்தோஷத்தை யடைந்தார்கள்—(எ-று.) தூனவின் நால்திக்கு ஈண்டியே எனப்பிரிக்க. கண்கள் யக்ஞத்தில் சொரியும், நெய்யாம். இவ்விரண்டு கண்களும் சூரிய சந்திரர்கள் என்பார் மேஞுட்டாசிரியர். அக்ஷீ யக்ஞஸ்ய ஆஜ்யபாகலக்ஷணேச்சக்ஷுஷீ யென்பார் சாயணர். மேஞுட்டாசிரியர், இந்த ரிக்குக்கே வேறுவிதமாகப் பொருளுரைப்பார்.

வருக்கம் 18.

73. மண்டலம் 1. அநுவாகம் 12. சூக்தம் 9.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷடி பராசரன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை அக்கினி.

1. பிதாவி னற்செல்வம் போலப் பேருண வளிப்போ, ஞூலை
நிதானத்தி னுணர்ந்தோ ஞூண நேர நல்வழிப் படுப்போ,
ஞுதாரண தில்லி னின்பத் துறைவிருந்தெனக் களித்தோன்,
சதா பரிசர னகத்தைத் தாங்குவா னெனா வொத்தே.

(இ-ள்.) பிதரார்ஜிதமான சொத்தைப்போல (யஜமானனுக்கு) மிகுந்தவன்னத்தை யளிப்பவனும், தர்ம சாஸ்திரங்களை நன்றாகக் கற்றவனுடைய ஆக்ஞைகளைப்போலக் கேட்பவனை நல்வழிப்படுத்துவோனும், தாதாவின் வீட்டுக்கு வந்த அதிதி(விருந்தாளி)யைப்போலச் சந்தோஷத்தோடு கூடியவனுமான அக்கினி (ஹோதா) ஹோம கர்த்தாவைப்போல எப்பொழுதும் தன்னைச் சேவிக்கும் யஜமானனுடைய வீட்டைக் காப்பாற்றி விருத்திசெய்வான்—(எ-று.) பிதரார்ஜித சொத்து ஒருவனுக்குச் சோறுபோடும், தர்ம சாஸ்திரங்களைப்படித்தவன் வார்த்தையைக் கேட்டு நடந்தால் ஒருவன் ஸந்தேகந்தீர்ந்து நல்வழிப்படுவான். ஹோதா: ஈண்டு ஹோம கர்த்தா. அவன் அத்வர்யுக்களாற் கர்மங்களைச்செய்வித்து யஜமானனுக்கு அவற்றின் பலனையளிப்பான்.

3. ஒளிச் சவிதாவைப் போல வுண்மையை யுணர்ந்தோ னெவ்வெச்
சுளிப்புற சமரின் கண் ணுங் தோய்ந்தென் றுங் காப்பான்; பல்லோர்
விளிப்புற நிற்போன் றுன்பில் மெய்யின ஞன்மா வென்னைக்
களிப்பளி சுக மீவோனை யாவருங் காக்கற் பாற்றே.

(இ-ள்.) எல்லாவற்றையுந் தெரியச் செய்யும் ஒளியை வீசுகின்ற ஸவிதா (சூரியன்) வைப்போல உள்ளவற்றை யறிபவனுகிய அக்கினி எந்த யுத்தத்திலும் பொருந்தி யெப்பொழுதுங்காப்பான். பல யஜமானர்களாலும் அழைக்கப்படுபவனும், வாதையில்லாத ரூபத்தோடு அல்லது சரீரத்தோடு கூடியவனும், ஒருவனுடைய ஆத்மா வவனுக்குச் சுகத்தைத்தருவது போலக் களிப்போடு கூடி சுகத்தைத்தருபவனுமான அக்கினியை யெல்லாரும் வணங்கத்தக்கவர்களாம்—(எ-று.) அக்கினி கார்யத்தை விட்டுவிட்டால்

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

ஸீரஹத்நிக்குச் சமானமான தோஷமுண்டாகின்றதென்று தைத்திரீய ஸம்ஹிதை (1-5-2) கூறும். தேவ: ந்யோதமான: ஸர்வஸ்யப்ரேரக: ஒளியோடு கூடியவன், சூரியன். அடுத்த செய்யுளையும் நோக்குக.

4. எவன் நிவாமணியைப் போல வெவ்வுலகினையுங்காப்பா
னவ னிதணபர் நாப்ப ணாசென மகத்திருப்பான்;
எவன்முனர்ச் சார்வார் தந்தை யில்லுறை வீரர் போல்வா
ரவன் பதிமகிழு நிந்தை யற்ற நாரியிற் நூயோனே.

(இ-ள்.) எவன் சூரியனைப்போல எவ்வுலகத்தையுந் தாங்குவானோ அந்த அக்கினி ஹிதமித்திரர்களுக்கு மத்தியிலிருக்கும் அரசனைப்போல யக்ஞக்கிரக முதலிய விடங்களிலிருப்பான். எவனுக்கு முன்வந்து அமர்பவர்கள் தகப்பனர் வீட்டிலிருக்கும் புத்திரர்களைப்போலச் சுகமாக விருப்பார்களோ, அந்த அக்கினி தனது நாயகனுக்குகந்த குற்றமற்ற நாரியைப்போலப் பரிசுத்தவான் அல்லது கர்ம்யோக்கியனுவான்—(எ-று.) தேவோத சூரியனைப்போல அல்லது நிவா மணியைப்போல. ஏன்? தேவன் பிரகாசிப்பவன் என்பது மேற்செய்யுளிற் சொன்னர். வீரர் வீரியத்திற்ருன்றியவர் புத்திரர் என்றபடி.

4. காவல்சா லூர்க்க ணுன்னே நார்களுங் கதிக்க நாட்டி
யாவலிற் றம்மகத்தே யாவரதமுஞ் சொலிக்கப்
பாவிஞ ரவியும் பூரி பரப்பினர்; உயிர்க்காதார்
மேவிய செல்வ மெல்லா மேன்மையிற் ருங்கா யங்கீ.

(இ-ள்.) நிச்சலமான விடங்களில் அதாவது உபத்திரவமில்லாத கிராமங்களில் தங்கள் யக்ஞக்கிரகத்தில் முனிதர்கள் உன்னை ஸ்தாபித்து எப்பொழுதும் சுடர்விட்டெரியும்படி (ஸமித்துக்களுட்டி) நிறுத்தினர்கள். அவ்வக்கினியில், வேண்டிய அவிப்பொருள்களையும் (பூரியாக) யதேஷ்டமாக அல்லது பலவிதமாகப் பரப்பிவைத்தார்கள். எல்லா ஜீவன்களுக்கு மாதாரமான செல்வங்களையெல்லாம், அக்கினியே! நீ எங்களுக்காகச் சுமந்துகொண்டு வருவாயாக—(எ-று.) காவல் சாருரென்றது காவலோடு கூடிப் பகைவர் உபத்திரவிக்க முடியாத கிராமங்களை. பூரி, ப்ரபூதம், மிகுதி.

5. அங்கி யன்பூசைச் செல்வ மடைந்தவர் பெறுக வண்டி;
பொங்கவிதருங் கர்த்தாக்கள் பொருந்துக வாயுளெல்லாம்;
எங்களுக் குறுக வொன்னு ரேந்திய தனம் போர்க்கண்ணை;
மங்கலில் புகழ்த்தேவர்க்கு வழங்க யா மவ்வற்றிற்பங்கே.

(இ-ள்.) அக்கினியே உனது பூசையாகிய செல்வத்தைப் பெற்ற யஜமானர்கள் அன்னத்தைப்பெறட்டும். உனக்கு அவியளிக்கும் (ஸ்ருக்குகள்) யாககர்த்தாக்கள் எல்லா ஆயுட்காலத்தையும் அடையட்டும். பகைவர்களுடைய செல்வம் யுத்தத்தில் எங்கள்பால் வந்து சேரட்டும். அவற்றில் யாங்கள் இந்திராதி தேவர்களுக்குப் பாகந்தருவோமாக—(எ-று.)

வருககம 19.

6. வாளெளித்தேசி னென்றும் வழங்குறு மடிய, வங்கி
தானடிக்கடி விரும்புந் தன்மய, நிதஞ்சேர்வோற்கே
தேனு கவ்வியத்தை யூட்டுஞ; செம்மன மிரக்குஞ் சீரி
னுன பன்னதி னுன்றின்வா யடைந்தன நூரதின்றே.

மண்டலம் 1. சூக்தம் 73.

(இ-ள்.) பிரகாசத்தோடு கூடியவையும், எக்காலத்திலும் தரும் பால்மடியோடு கூடியவையும், அடிக்கடி அக்கினியால் விரும்பப்பட்டவையும், ஆன தேனுக்கள் (பசுக்கள்) (ரிதம்) யாகப்பிரதேசத்துக்கு வரும் அக்கினிக்கே பால் முதலிய கவ்வியத்தை யூட்டும். அதுக்கிரக புத்தியை யாசிக்கும் பல விருத்திக்கள் (ஆறுகள்) தூரதேசத்திலிருந்து பர்வதத்தின்கண் வந்து சேர்ந்தன—(எ-று.) குன்று பர்வதம் அத்திரி இவை ஸோமம் பிழியும் பாறையைக்குறிக்குமென்றும் ஸோமம் பிழியவேண்டி, நீரைக் கால் வாய்கள் வழியாக அப்பாறைக்குக்கொண்டுவருவார்களென்றும் மேஞட் டாசிரியர் (Griffith) கூறுவர்.

7. அங்கி நன்மன மிரக்கு மகத்தினுக் கருவ ராவார்
பொங்கொளி யுன்மாட் டன்னம் புகழோடு நிறுத்தார் பின்னர்;
மங்குல் காசெனு நிறத்தின் மண்டொளி விளர்த்த நாளுந்
தங்குற வீரூபதேதோடு நயக்கியே சமைத்தா ரன்றே

(இ-ள்.) அக்கினியே! அதுக்கிரக வெண்ணம் வாய்ந்த புத்தியை யாசிக்கும் யக்ஞாருகர்களாகிய தேவர்கள் சோதி நிறைந்த உன்னிடத்து அவியன்னத்தைக் கீர்த்தியோடு ஸ்தாபித்தார்கள். பின்பு கறுப்பு நிறத்து இரவையும், பிரகாசமானது வெளுத்துக்காணும் பகலையும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வருவத்தோடு சிருஷ்டித்தார்கள்—(எ-று) காசெனு நிறத்தின் மங்குலும், ஒளிவிளர்த்தகாலும் எனக்கூட்டுக.

8. தனம்பெற, மர்த்யர் யாரைத் தூண்டுவா யவரும் யாமுந்
தனம்பெற லஞ்சி; வாஜைத் தரையை யந்தரத்தை யுன்ற
னினம்பெறு மொளியினுலே நிரப்பினுய், நிழல்போன் றெல்லா
வனம்பெறு முலகும் வாழும் வண்ண மன்னவை காப்பாயே.

(இ-ள்.) அக்கினியே! எந்த மர்த்தியர்களை(மனிதரை)த்தனத்தைப் பெறுவதற்காக அக்கினி ஹோத்ரம் முதலிய கர்மங்களைச் செய்யத்தூண்டிவிடுவாயோ அந்தமனிதர்களும் யாங்களும் செல்வத்தையடையட்டும். பூமி, வானம் அந்தர மிவற்றை உனது சோதியால் நிரப்பினுய். (குடை) நிழலைப்போல எல்லா அழகு பொருந்திய உலகங்களையும் காப்பாற்றுவாய்—(எ-று) வனம், அழகு. குடைநிழல் வெயிலினின்றும் ஒன்றைக் காப்பது போல என்பார் சாயணர்.

9. உன்றுணை கொண்டே, யங்கி, யொன்னலர் மாவை மாவாற்
றுன்னலர் நாரைத் தோய்ந்த நார்களால் வீரர் தம்மை
மன்னிய வீழ்ர் தம்மால் வாட்டுகேம்; பரவணிப் பொன்
னுன்னு மீசான நெங்கள் சூரிகளிமா றெய்தல்.

(இ-ள்.) அக்கினியே! உன்னுடைய உதவிகளைப் பெற்றுச் சத்துருக்களுடைய குதிரைகளை யெங்கள் குதிரைகளினுலும், சத்துருக்களுடைய படைஞர்களை எங்களுடைய படைஞர்களாலும அவர்களுடைய புத்திரர்களை யெங்கள் புத்திரர்களாலும் கொல்லுவோம். பிதிரார்ஜிதமாகத் தொன்று தொட்டுவந்த செல்வத்தையடைந்த ஈசானர்க (ஜசுரியவான்கள்) ளாகிய எங்கள் ஸூரிகள் (புத்திரர்களாகிய வித்வாம்ஸர்கள்) நூறு பனிக்

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

காலத்தை (அதாவது வருஷத்தை) யடையட்டும்—(எ-று.) வீரர் வீரியத்திற் பிறந்தவர் புத்திரர். பரவணி பிதிரார்ஜிதம். பரவணிப்பொன் பிதிரார்ஜித செல்வம்

10. மேதையா மங்கி, யெங்கூற் றிவணுனை நிதயத் தந்தத்
நீதிலாக் காணத் நோகை சேர்ப்பவாய்ச் செறிக; வின்மை
மோதுறு செல்வந் தாங்கு மொய்ம்புறல் நியமத் தியாங்கள்
வாதைதீர் தேவ நீந்த வவியுண்மே லடுக்கி வைப்போர்.

(இ-ள்.) மேதாவியாகிய அக்கினியே! எங்களுடைய வசனம் உனது இதயத்திலும், குற்றமற்ற அந்தக்கரணத்திலும், ஸந்தோஷத்தை விளைவிப்பன்வாகப் பொருந்தட்டும். தேவர்கள் தந்த வவிப்பொருள்களை யுன்மேலடுக்கி நோமஞ் செய்வோராகிய யாங்கள் தரித்திரத்தை நீக்குஞ் செல்வத்தை யடையும் நியமஞ் சார்ந்த சக்தியைப் பெறுவோமாக—(எ-று.) வாதைதீர் என்றது எதுகை நோக்கிச் சேர்த்தது, நீதிலா அந்தக்கரணத் தென்க.

வருக்கம் 20.

74. மண்டலம். 1. அநுவாகம் 13. சூக்தம் 1.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ரஹூகணன் புத்திரன் கோதமன்; வடமொழிச்சந்தம்: காயத்திரி; தேவதை: அக்கினி. இக்கோதமனே நோதஸன் றக்தையாவான்.

1. தூர நின்றுமெந் தோத்திரங் காதிலை
லோரு மக்கினிக் கோர்மறை போதுவோஞ்
சாரு நன்மகந் தன்னரு கியாங்களு
மேரி னெய்து மக்காலி பினிதினே.

(இ-ள்.) அக்கினிஷ்டோமாதி யக்ஞத்துக்கு யாங்கள் வரும்போது இன்பமாக ஒரு சூக்தரூபமான மந்திரத்தைத், தூர நின்றும் எங்களுடைய ஸ்தோத்திரத்தைக் கேட்டாநந்திக்கும் அக்கினிக்குப் பாடுவோம்—(எ-று.) எல்லாரிடத்திலும் அக்கினி செல்லுவானுயினும் எம்மிடத்தில் அதிகப்பிரியமுள்ளவன் என்பதை குறிக்கத், தூரநின்று மெந்தோத்திரங்காதிலைலோரு மக்கினி' என்றார்.

2. தொல்லை நின்று வரைபயிற் றுறைதந்தவர்
புல்லர் கூட்டம் பொருந்தியவர்களை
மல்லி னோட்டி மகம்புரிவான் றன
தில்லிற் செல்வமிரட்சணை செய்தவன்.

(இ-ள்.) பண்டைக்காலத்திலிருந்து, கொலை நிறைந்தவரும், அற்பரும், கூட்டமாகப் பொருந்தியவர்களுமான பகைவர்களைத்தூரத்திற் தாசூ (யக்ஞஞ் செய்வோன்) டையு செல்வத்தைக் காத்தவன் —(எ-று.)
அ ஜ ட ஞ ரு ப ஸ ஷ ய ர த வ ம் ஸ ன ல ண் ட ா ட ே கூ ட் ே க.

மண்டலம் 1. சூக்தம் 74.

3. விருத்திரனே வெகுண்டழியங்கிமிக்
குருத்தெதிர்ந்த வுறழ்வுதொறுந்தனம்
பொருத்துவோன்புறந்தோன்றினன்; பின்பெலா
விருத்துவிக்குக்களேத்தி யுரைக்கவே.

(இ-ள்.) விருத்திரவதஞ்செய்பவனும், கோபித்தெதிர்த்த யுத்தத்தில் பகைவர்தனத்தைக் கைக்கொண்டனிப்பவனுமாகிய அக்கினி, (அரணிகளிலிருந்து) வெளிப்பட்டனன். பின்னர் எல்லா விருத்துவிக்குக்களாகிய மனிதரு மவனைத் துதிக்கட்டும்—(எ-று.) விருத்திரவதத்தை அக்கினிக்குக் கூறினதால் அக்கினியையும் இந்திரனையும் அபேதப்படுத்தினர். உறழ்வு—யுத்தம், சண்டை. இருத்துவிக்குக்கள் பொழுதறிந்து புமழ்மறைக் கூறிப்பின் ரெழுது சோமத்துளிகளே யூட்டுவோர்.

4. *"எம்மகன் மகத் தேய்குவை தூதனு
யெடமக னவி தேவர்க் கியையுற
வம்மையாக வருந்துவை? யார்படகம்
பொம்மலின் மிகத்தோன்றப் புரிகுவாய்.?

(இ-ள்.) எந்தயாக கர்த்தாவினுடைய யாகவீட்டில் தூதனுக நீ நிற்கிறாய்? எந்தயாககர்த்தாவினது சருபுரோடாசமுதலிய வவிப்பொருள்களைத் தேவர்களுடைய வுணவாகப் பொருந்தும்படி நீ உண்கிறாய் அல்லது சேர்க்கிறாய்? யாருடைய யாகத்தை வீறுபெறும்படி செய்வாய்—(எ-று.) இப்பாட்டின்பொருள், அடுத்த பாட்டோடு முடிகிறது.

5. *"அம்மகனே! மூரண்மக, வங்கிர,
செம்மையா ரவி சேர்ந்தவன், றேவனிற்
செம்மை பெற்றவன், றேருந் தருப்பையி
லம்மையோ" னென் றறைகுவர் மாந்தரே.

(இ-ள்.) "பலத்தின் புத்திரனே! அங்கிரனே (அக்கினியே!) மேற் பாட்டிற் சொல்லப்பட்ட பெருமைகளோடு கூடிய அந்த யாக கர்த்தாவே நல்ல அவிப்பொருளைப் பெற்றவனும்; நல்ல தெய்வத்தை யடைந்தவனும்; நல்ல தருப்பை யழகையு மெய்தினவனும்." என்று எல்லா மனிதருஞ் சொல்லுவார்கள்—(எ-று.) 4, 5, இரண்டும் குளகமாம்.

வருக்கம் 21.

6. நன்னிலவெறி நாயக தேவரைத்
தன்னு தோத்திரந் தோய்செவி யேற்கவு,
மன்னு நல்லவி யுண்டு மகிழ்கவு,
மன்னவர்களே யிவ்விடத் தாக்கலே.

(இ-ள்.) ஆஹ்லாதத்தைத்தரும் நல்ல நிலவை வீசுமக்கினியே, ஸ்தோத்திரங்களைக் கேட்கவும், (அல்லது நாங்கள் ஸ்தோத்திரம் செய்வதற்காகவும்,) எங்களுடைய அவிப்பொருள்களே யுண்டு மகிழ வும், அந்தத்தேவர்களே யிங்குக்கூட்டிக்கொண்டு வருவாயாக—(எ-று.) வடமொழி மூலத்தில் ப்ரசஸ்தியே என்றுள்ளது; ஸ்துதியே என்று சாயணர் பொருள் கூறுவார்.

அஷ்டகம் 1. அத்தியாயம். 5.

7. அங்கி தேவர்க்கட் டூதர் யஜ்ஞயுமத்
துங்க நற்பொழு தெல்லாக துகளிலு
னங்கமா ரிசதத தசுவத் தொனி
பொங்கு மின்பம் புணர்ந்தவை கேளுறு.

(இ-ள்.) அக்கினியே! தேவர்களிடத்து நீ தூதனுய்ச் செல்லுங் காலமெல்லாமுனது அழகிய தேரின் குதிரைகளாலுண்டாகும் சிவனுர் ஹமான சப்தங்கள் கேட்கப்படமாட்டா--(எ-று.) வேகமாகச் செல்லுதி னுல் அச்சப்தங்கள் எங்கள் காதில் படுவதில்லை என்றபடி. ரதத்தொனியா வது அச்வத் தொனியாவது ஒன்றுங் கேட்பதில்லை யென்பார் மேனுட்டா சிரியர்.

8. முன்னிகழ்வுற நின்று முதிர்ந்தவன்
மன்னு கின்ற வவியை வழங்கியே
யுன்னருந் துணையிற் றன மெய்துவான்;
வன்னி நாணிலன் வாய்குவன் மேன்மையே.

(இ-ள்.) அக்கினியே! அவிவழங்குவதற்கு முன்னர் நிகிருஷ்ட மாயிருந்தவன்-உனக்கு அவியளித்து உன்னுலிரட்சிகப்பட்டவனுய் அள் னத்தையடைவான், வெட்கத்தை விட்டவனுய் மேன்மையைப் பெறுவான் —(எ-று.) வன்னி, அக்கினி.

9. இன்னுந் தேவ வவியினைத் தேவருக்
குன்னுந் தாசுடற் கங்கி யுயர்ந்திநி
தன்னு விப்பா யொளியொடு தோய்ந்தது
மன்னும் வீரம் வகைபெற வாய்நதே.

(இ-ள்.) தேவனே (ஒளி நிறைப்பவனே)! அக்கினியே! மேலும் நீ, தேவர்களுக்கு அவியைத்தரும் தாசுஷனுக்கு (யஜமானனுக்கு) ஒளிபொ ருந்தியதும், வீரியத்தோடு கூடியதுமான பெரிய செல்வத்தைக் கூட்டுவாய் —(எ-று.)

வருக்கம் 22.

75. மண்டலம் 1. அநுவாகம் 13. சூக்தம் 2.

5 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி. கோதமன்; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: அக்கினி.

1. எங்கு மோங்கிய வெங்கள் வசனத்தை
யங்க மாகவே தேவர் மகிழ்வதைத்
துங்க வெம்மவி தோயுன் முகத்தினிற்
பங்க நீங்கப் பரிந்துகொண் டேற்கவே.

மண்டலம் 1. சூக்தம் 75.

(இ-ள்.) எம்முடைய அவிப்பொருள்கள், வீணாதபடி யுனது முகத்தில் அவற்றை எற்றுக்கொண்டு, எல்லாப் பக்கங்களிலும் விஸ்தாரமாகப் பரந்த எங்களுடைய ஸ்தோத்திர ரூபமான வசனத்தைத், தேவர்களுக்கு அதி மகிழ்ச்சியை விளைப்பதை, ஒப்புகொள்வாயாக—(எ-று.)

2. அங்கிரத்தம வக்கினி பின்னர்யா
மங்களில் மதிவாய்ந்தவ வுன்றனுக்
கங்க மாகப பிரம மறைகுவந்
தங்கு கீர்த்தியோ டின்பந் தருபவே.

(இ-ள்.) அங்கிரோத்தமனே! அக்கினியே! உத்தம புத்தி வாய்ந்தவனே! கீர்த்தி பொருந்தியவையும் பிரியகரமானவையுமான பிரஹ்மத்தை (மந்திரத்தை) யாங்கள் உன்பொருட்டுச் சொல்லுவோம்—(எ-று) தருபவாயிய பிரமமெனக் கூட்டுக. அங்கிரா, மண். 1. சூக் 1. செய். 6ல் பார்க்க.

3. யா ருனக்குற வெண்ணு மனிதரில?
யா ருனக்கவி யாகத் தளித்துச் சீர்
தேர நிற்பவன்? யாரெரி செபபுக;?,
யாரிடத்து நீ யாசிரயஞ் சொலாய்.

(இ-ள்.) மனிதரில் (எல்லாக் குணங்களிலுஞ் சிறந்த) உனக்குப் பங்குவாகச் சொல்லத் தகுந்தவன் யார்? (ஒருவருமில்லையென்றபடி) உனக்கு யாகத்தினிடத்து அவிப்பொருளைச் சிறக்கத்தந்து பெருமையடையுந்திறமை வாய்பவன் யார்? (ஒருவருமில்லையென்றபடி) அக்கினியே! நீயார்? (இன்னவருவத்தோடு கூடியவனென்றும் உன்னை யொருவரும் சொல்லமுடியாது.) நீ எந்தஸ்தானத்தைப்பற்றி நிற்பாய்? (அதுவுமொருவருக்கும் தெரியாது.—(எ-று.)

4. அங்கி யாவற் சனங்களின் பந்துநீ;
தங்கு மன்பிற் றயங்கிய மித்திரன்;
எங்கு மூள்ள சகாக்களு மேத்துறுந்
துங்க நற்சகா வென்றுனைச் சொல்வரே.

(இ-ள்.) அக்கினியே! நீ யெல்லாஜநங்களுக்கும் பந்துவாவாய்; அன்புபொருந்திய மித்திரனுமாவாய். எல்லாத் தோழர்களாலும் வணங்கத்தகும் தோழனுமாவாய்—(எ-று.) உனைச் சொல்வரே யென்பது வடமொழி மூலத்திலில்லை. யாவத் ஜநங்கள் என்பது யாவற் சனமெனத்தற்பவமாயிற்று.

5. எங்களுக்கென மித்ர வருணரை
யங்க மாக வணங்குக; தேவரைப்
பொங்கு பேர்மகந் தன்னையும் பூசிக்கல்;
அங்கி யுன்னகத் தியாரையுஞ் சேர்க்கலே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

(இ-ள்.) அக்கினியே! மித்திரா வருணரை யெங்களுக்காக வகீப் பொருளோடு பூஜிப்பாயாக. தேவர்களையும் பெரிய யாகத்தையும் பூஜிப்பாயாக. உனது யகஞ்சுக்கிரகத்துக்கு எல்லாத் தேவரையும் அழைத்துக்கொண்டு வருவாயாக—(எ-று.)

வருக்கம் 28.

76 மண்டலம் 1 அநுவாகம் 13 சூக்தம் 3.

4 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ராஹூகணன் கோதமன்; வடமொழிச் சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அக்கினி.

(வேறு.)

1. உன்மனங் களிப்பா னங்கி யெவ்வகை புறுவா மூன்மாட்
டுன்சுகத் தமத்தை யீயு மொண்மறை யெதுவாம்? யாகத்
துன்வலி கடப்போன் யாவன்? உனக்கென வெவ்வுள்ளத்தோ
டுன்னரு மவியை யீவோ மிவை யுரைப்பரிய வன்றே.

(இ-ள்.) அக்கினியே! உன்மனம் திருப்தியடையும்படி, எம்மாலி ரி உன்னிடத்தில் வருவோம்? உனக்கு உத்தமமான சுகத்தைத்தரும் மந்திரம் எதுவாகும்? யாகத்தினிடத்து உனது வல்லமையைக் கடப்பவன் யார்? உனக்காகவேண்டிய அவிப்பொருள்களை எந்த புத்தியோடு தருவோம்? இவைசொல்ல முடியாதவையாம்—(எ-று.) உன்னைத்திருப்திசெய்யும் வருகையும், உனக்குச் சுகத்தைத்தரும் மந்திரமும் உன்பலத்தைக்கடப்பவனும் உனக்கு அவிதரும் சற்புத்தியும் இல்லையாதலின் சொல்லுதற்கு முடியாதவையென்றார். இவையுரைப்பரியவன்றே' என்னும் வாக்கியம் அன்வயத்தாற், கொண்டது. வடமொழி மூலத்திலில்லை.

2. அங்கிநீ வருக வீண்டுத் தங்குக தூத னாக;
வெங்களை நடத்த வன்மை; துன்புறு, மெங்கு மார்ந்த
மங்குலும் புவியுங் காக்க; மகத்துவ நன்மை முற்றுந்
தங்குளம் பெறுவான் றேவர் தங்களை பூசிப்பாயே.

(இ-ள்.) அக்கினியே! வருவாயாக. இந்த யகஞ்சுத்தில் ஹோதாவாக அமர்வாயாக. எங்களுக்கு முன்சென்று எங்களை நடத்துவாயாக. ராக்ஷஸர்களால் ஹிம்சிக்க முடியாதவனே! எங்கும் பரந்த வானம்பூமிகளை (ரோதஸீயை)ப்பாதுகாப்பாயாக. மகத்துவம்பொருந்திய நன்மை முழுதும் நிறைந்த அவர்களது நன்மனத்தைப் பெறத் தேவர்களைப் பூஜிப்பாயாக—(எ-று.)

3. அக்கினி, யாக்கர் யாரு மழிகுவா னெரிக்கல்; யாகம்
புக்கிடர்ப் படுபவர் நின்றும் புரக்கல்; பின்னரி யிரண்டிற்
றக்க நற்சோமநாதன் றன்னையுந் தருக; தான
மிக்கவற் கதிசயகாரம் மிகப புரிகு வோமே.

(இ-ள்.) அக்கினியே! எல்லா ராக்ஷஸர்களையும் அழியும்படி சுட்டெரிப்பாயாக இடைஞ்சல் செய்பவர்களினின்றும் எங்களது யாகங்களை

மண்டலம் 1. சூக்தம் 77.

காப்பாயாக. நின் இரண்டு குதிரைகளோடுஞ் சோமபதியாகிய இந்திரனைக் கொண்டுவருவாயாக. தானத்தில் சிறந்தவனுக்கு (அழகிய பலன்களோத்தருப வனுகிய இந்திரனுக்கு) யாங்கள் அதிதிசற்காரஞ் செய்வோம்—(எ-று.) சோமவானதன் (சோமத்துக்குப்பதி) தானமிக்கவன் இவ்விரண்டுசொற் றொடர்களும் இந்திரனைக்குறித்து நின்றன. அதிதிசற்காரஞ் செய்தல் விருந்தினரை உபசரித்தல். அரி—குதிரை.

4. மகத் தரும் வாக்காற் போற்றிச் சுடர்வளர் முகத்தின் வன்னி!
யிகத்துற வழைப்பே னீயு மிவட்ப்ல தேவ ரோடு
மகதினி லமர்க; பூசைக் கருக, போதா வோதாவா
யுகப்புறல் உதவுவோர்ப் பொன், றேற்றுவோ,யறிவீவாயே.

(இ-ள்.) ஜ்வாலையே முகமாகவுடைய அக்கினியே! பிரஜைகளைத் தரும் வல்லமை பொருந்திய ஸ்தோத்திரங்களால் உன்னைப்போற்றிசெய்து இங்கு வரும்படி யழைப்பேன். நீயும் இங்கு பல (பித்) தேவர்களோடு யாகத் தலத்தில் அமர்வாயாக. பூஜிக்கத் தருந்தவனே! நீ போதாவினது வேலையையும், ஹோதாவினது வேலையையும் உகப்பாயாக (விரும்புவாயாக.) வசுவை அல்லது செல்வத்தை விசேஷமாகத் தருபவனே! எல்லாவற்றையும் சிருஷ்டிப்பவனே! எங்களுக்கு அறிவை யூட்டுவாயாக—(எ-று.) போதா பரிசுத்தம் செய்பவன் மண். 1 சூக். 15 செய். 2 பார்க்க. ஹோதா, ஓதா. தேவர்களை யழைப்பவன் யாகப்பிராஹ்மணர் 16 பேர்களில் இவர்கள் சேர்ந்தவர்கள். மகவுத்தரும், மகத்தரு மென்றுமது.

5. கவிகளிற் கவியே தேவ ருணவொடு முனர்வு சான்ற
புவிமுதன் மதுக்களுக்காத் தேவரைப் பூசித்தாற்போ
லிவ ணிசத்தர வோதாவாய்க் களியினை சுருக்கை யேந்தி
நிவமுறு மங்கி யின்று நேடியே சுரர்ப் பூசிப்பாய்.

(இ-ள்.) கவிகளில் (மேதாவிகளில் அல்லது தீர்க்கதரிசிகளில்) சிறந்த கவியே! அவிப்பொருள்களோடு மேதாவிகளாகிய ஆதிமதுக்களுக் காகத் தேவர்களை பூசித்தது போல, இன்னும், அக்கினியே! ஸத்தியதர மான ஹோதாவாய் ஸந்தோஷத்தை யூட்டும் நெய்த்துடுவையைக் கையிலேந் தித் தேவர்களைப் பூஜிப்பாயாக—(எ-று.) மதுக்கள் மனம் ஞானம் என் னும் பகுதியடியாகப் பிறந்தது; மனிதருக்கு மூல புருஷர்கள்.

வருக்கம் 24.

77. மண்டலம் 1 அநுவாகம் 13 சூக்தம் 4.

5 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ராஹூகணன் கோதமன்; வடமொழிச்சந்தம்: திருஷ்டுப்; தேவதை: அக்கினி.

1. மரணமே யெம்பான் மன்னுந் தேவருக் குணவை யீவோன்,
மரணமில் ரிதவா னெஞ்தா வுத்தம யாக காத்தா,
தருண நல்லங்கி, யன்னற் கெத்தகை யவி யளிப்பாம?
அரணமாத் தேவர்ப் போற்றுந் தேசவற் கெப்ப வீவோய்?

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

(இ-ள்.) மரணதர்மத்தோடுகூடிய எம்மிடத்தும் பொருந்தின் தேவர்களுக்கு அவியுணவைத் தருபவனும், மரணதர்மமில்லாத சுதந்தியவாளனும், ஹோதாவும் உத்தமயாககர்த்தாவும் ஆகிய அக்கினிக்கு எம்மதிரி (தருந்த) அவிப்பொருள்களோ யளிக்கப்போகிறோம்? தேவர்களைப் போற்றி வணங்கும் தேஜோவாளுகிய அவனுக்கு எத்தகைய ஸ்தோத்திரப் பாடல்களைச் சொல்லப்போகிறோம்?—(எ-று.) ஹோதா ஹோமஞ்செய்வோன்.

2. தகப்புரி மனிதனுக்காத் தேவரைத் தருபோ தன்னு
னுகப்புற வவரை யோர்ந்தே மனத்தினுல் வணங்கு வோனே,
மகத்தினிற் சுகத்தமத்தை மருவுவித் தன்மை நோக்கி
னிகத்துத் தெய்வங்க ளீட்டு மங்கியைத் துதித்துச சேர்க்கல்

(இ-ள்.) தக்ககாரியங்களைச் செய்யும் மனிதனுகிய யஜமானனுக்காகத்தேவரைக்கூட்டிக்கொண்டு வரும்போது அவ்யாககர்த்தா ஸந்தோஷப்படும்வண்ணம் அத்தேவரைத் தெரிந்து மனதினுல் வணங்குவோனும், யாகத்தில் உத்தம ஸுகத்தை யுண்டுபண்ணுவோனும், யதார்த்தத்தைப் பார்ப்பவனும், இங்கு தேவர்களைக்கொண்டுவருபவனுமாகிய அக்கினியை ஸ்தோத்திரஞ்செய்து எதிர்முகப்படுத்துவீர்களாக—(எ-று.) சுகத்தமம்=உத்தமசுகம், தரம் தமம் என்னும் சொற்கள் மத்தியம, உத்தம (comparative and superlative) அளவுகளையுணர்த்தும், தீவிரம், தீவிரதரம் தீவிரதமம் என் பதுபோல்.

3. காரிய கர்த்தாச் சாது காலனு மவனே யாவான்;
ஸரிய னண்ப னென்ன் வற்புதப் பொரு ளினைப்பான்;
சீரிய லகத்தே தேவ சேவையைச் செய்வோர், முன்னர்க்
கூரிய லவனே மேதத் தழைபபரான் மூதன்மை கூர்ந்தே.

(இ-று.) அவனே (அக்கினியே) காரியத்துக்குகர்த்தாவாம்; சாதுவுமாம் எல்லாவற்றையும் உபஸம்ஹாரஞ்செய்யும் காலஜுமாவான். மித்திரனைப்போல் அவன் அளவுகடந்த செல்வத்தைத்தருவான். தங்கள் இரகத்தில் தேவயஜனம் செய்யும் பிரஜைகள் அவனை முதலில் மூட்டி, 'மூதலில் ஸ்தோத்திரங்களே யேற்கவருவாயாக என்று' அழைப்பார்கள்—(எ-று.) உபஸம்ஹாரஞ் செய்தல், அழித்தல், சாது, ஸாது(dhu), ஸாத(dh)யிதா, காரியங்களை யுற்பத்திசெய்பவனென்பார் சாயணர்.

4. நரோத்தம னரர்க்க ணென்னர் நடுங்குற வண்பானவ்கி
கரோத்தம வவியை யெங்கடோத்திரநதலைக் கைமேற்குவ்;
உரோத்தமச் செல்வ முண்டி பூட்டிறு மகக்கர்த்தாக்கள்
வரோத்தம மறையோர்க் கொண்டு மகஞ்செய்வோர்
துதியு மேற்கல்.

(இ-ள்.) மாந்தர்களிடத்து உத்தமமான நேதாவும், பலகர்மத்தைக் கொள்ளும்படி அவர்களை யுண்பவனும் (அழிப்பவனும்) ஆன அக்கினி என்கள் கரங்களிலுள்ள உத்தம அவிப்பொருள்களையும் எங்களது ஸ்தோத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளட்டும். பலம்பொருந்திய உத்தமமான செல்வத்தை யுண்டையவர்களும், அவியுணவையூட்டும் யஜமானர்களும், நிரேஷ்டமான

மண்டலம் 1. சூக்தம் 78.

ரித்விஜர்களோக்கொண்டு யாகஞ்செய்விப்பவர்களுமான யாககர்த்தாக்களின் ஸ்தோத்திரத்தையும் (அவ்வக்கினி) எற்கட்டும் அல்லது விரும்பட்டும் —(எ-று.)

5. எக்கிய மிழைப்போன் சாத வேதஸ னங்கி மேற்சொல்
பொக்கமில் வகையேகோதமக் குடிப பனவர் போற்றச்
சொக்க மெய்ஞ்ஞின னவர்க்குச் சோதிபு முணவு மீந்தான்;
மிக்கவெஞ் சேனை யோர்ந்து வேண்டு தீராக்கதைகச்
சேர்பபான்.

(இ-ள்.) யாகவானும், ஜாதவேதஸனுமான அக்கினி, மேலேசொன்ன பெரும்மையில்லாத விதமாகக்கோதமவம்சத்திலுதித்தரிஷிகள்ஸ்தோத்ரஞ் செய்யப், பிரகாசத்தை (ஸோமத்தை யென்பார் சாயணர்) யுண்டாக்கினான். அக்கோதமர்க்கு அந்தப்பிரகாசம் பொருந்திய சோமத்தையும் அன்னமான வுணவையும் தந்தனன். எங்களது சேவையையுணர்ந்து யாங்கள் விரும்பும் ஒக்கத்தை (புஷ்டியை) எங்களுக்குத்தருவான் (எ-று.) ஜாதவேதஸன். மண். 1. சூக். 44 செய். 1. நோக்குக. சொக்கம்=வெளுப்பு, ஈண்டு ஸோமம் என்பார் சாயணர். ஒக்கம். வாழ்வு, புஷ்டி.

வருக்கம் 25.

78. மண்டலம் 1: அநுவாகம் 3, சூக்தம் 5.

5 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி கோதமன்; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: அக்கினி.

1. மன்னு தூர திருட்டி யெங்கியோய்!
பன்னிரும் பிணைக் கோதமர் தேவதஸ!
உன்னினேய யா மடிக்கடி யுன்னி யே
அனனு மூன்னெளி தீதான்றப் புகழுவாம்.

(இ-ன்) விசேஷமாக எல்லாவற்றையும், பார்க்கத்தக்க தூரதிருஷ்டியாயிருக்கவேனே! ஜாதவேதஸனே! கோதமர் உனக்காகப் பண்பாடினர்கள். அத்தகைய வுன்னை அடிக்கடி நினைத்து உன்னொளியைத்தோற்றமும் புகழ் ஸ்தோத்திரங்களைக்கூறுவோம். (எ-று.) கோதமன் பாடினான் என்பது மரியாதைப் பன்மையாகவந்ததென்பார் சாயணர். கோதமராகிய நாம் பணி னைப்பாடிப்புகழுவோம் என்று ஒரேவாக்கியமாகக்கொள்வார் மேனாட்டா சிரியர். இச் சூக்தத்தின் பின்னிரண்டடிகள் எல்லாப் பாட்டுகளுக்கும் ஒன்றே.

பொன் விரும்பும் புனிதனங் கோதமன்
மன்ன வுன்னைத் துதித்து வனங்கினன்;
உன்னினேயா மடிக்கடி யுன்னியே
அன்னு மூன்னெளி தீதான்றப் புகழுவாம்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

(இ-ள்.) தனகர்மியாகிய கோதமன் உன்னை ஸ்தோத்திரங்களால் துதித்து வணங்கினன். அத்தகைய உன்னையே யாங்களடிக்கடி நினைத்து உனது கீர்த்தியைத்தோற்றும் புகழ்களைக் கூறுவோம்—(எ-று.)

3. பொன்னளித்துப் புகழ்பெறு முத்தம
னுன்னை யங்கிர னெத்து விளிப்பமால்;
உன்னையே யா மடிக்கடி யுன்னியே
துன்னு முன்னெளி தோன்றப் புகழுவாம்.

(இ-ள்.) (உணடிச்) செல்வத்தை யுத்தமமாக வளிப்பவனாகிய வுன்னை, (அக்கினியே!) அங்கிரஸனைப்போலத்துதித்துக் கூறுவோம்—(எ-று.)

4. மனுவுந் தாசனை யோட்டி மடிப்பவன்
பின் விருத்திரற் கொல்லும் பெரியவன்
உன்னையே யா மடிக்கடி யுன்னியே
துன்னு முன்னெளி தோன்றப் புகழுவாம்.

(இ-ள்.) சுஷ்ணுக்களை ஓட்டிக்கொல்பவனும் விருத்திரஹந்தாவுமாகிய உன்னையே யாங்கள் அடிக்கடி நினைத்து, உனது கீர்த்தியைத்தோற்றும் புகழ்மொழிகளைக் கூறுவோம்—(எ-று.) விருத்திரஹந்தா, விருத்திரனைக் கொல்லுபவன். இதனால் இந்திரனையும் அக்கினியையும் ஒன்றுபடுத்தினர்.

5. பனு மங்கியைத் தேன்றுளி வார்த்தையாற்
பின் னிராகூகனார் துதி பேணினும்;
உன்னையே யா மடிக்கடி யுன்னியே
துன்னு முன்னெளி தோன்றப் புகழுவாம்.

(இ-ள்.) ராஹூகணனாகிய (ராஹூகணன் புத்திரனாகிய) யாம் (கோதமன் என்றபடி) அகினியின்பொருட்டுத் தேன்றுளிக்கும் இனிய வசனங்களால் ஸ்தோத்திரம் செய்தோம். உன்னையே யாங்கள் அடிக்கடி நினைத்து உனது கீர்த்திதோன்றும் வண்ணம் புகழுவோம்—(எ-று.) ராஹூகணன் தத்திதப்பிரத்யயம். ராஹூகணனென்றது மரியாதைப்பன்மை.

வருக்கப் 26.

79. மண்டலம் 1. அநுவாகம் 13. சூக்தம் 6.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷ்டி கோதமன்; வடமொழிச்சந்தம்: 1-3 த்ருஷ்டுப், 4-6, உஷ்ணி, 7-12 காயத்ரி; தேவதை: அக்கினி.

1. இரணிய கேச முள்ளர், னெழிலியைச் சலிப்பிப்பான், வல்
விரைகதி வாயு போல்வான், மேகநீ ரிழியு மற்று
நிரைபெறு சோதித தூய னிலையிழி மழையை யோர்வான்;
தரைபுகழ்க் கரும மெய்ம்மைத் தையல்போன் றறியா வைகல்.

(இ-ள்.) பொன்மயமாகவிளங்கும் (சிவந்தசோதியாகிய) கேசத்தோடு கூடியவனும், மேகத்தைத்ருவுக்கிவிடுபவனும், வல்விரைவிற் செல்லும்வாயுவைப்போல ஓடும் (தொடி மின்னலாகிய) சோதியுள்ளவனும், மேகத்தி

மண்டலம் 1. சூக்தம் 79.

லிருந்து ஜலம் கொட்டுவதற்காகச் சுத்தமான சோதியோடு கூடியவனுமான அக்கினி, மழைபெய்யுந் தன்மையையுணர்வான். கீர்த்திபொருந்திய கர்மங்களைச்செய்யும் ஸத்தியவதிகளாகிய ஸ்திரீகளைப்போல உஷஸுக்கள் அம்மழைபெய்யுந்தன்மையை யறியமாட்டா—(எ-று.) இது வைகலு(உஷஸு)க்குநிந்தையாகாது; நிந்தாரூபமான ஸ்துதியாம். என்? பேதைமையென்பது மாதர்க்கணிகலமானதுபற்றி. மேலும் அக்கினியின் ஞானத்தையுயர்த்தவந்ததேயன்றிவைகலையிழித்துக் கூறவந்ததல்ல வாதலினென்பார் சாயணர். இச்செய்யுள் வித்யுத் (மின்னல்) தாகிய அக்கினியைப் புகழ்ந்தது.

2. கொன்பெறு மருதரோடு கருநிறக் கொண்மூ வார்க்க
வுண்கதிர்ச் சிறைக ளென்று நீரொழுகுற வடிப்ப;
பின்பிவட் சுகத்தை யூட்டி மன்னுறு பேனத் தண்ணீர்
நன்னய மழையின் வீழ்வ; நடுக்குற வொலிப்ப மேகம்.

(இ-ள்.) அழகியமருத்துக்களோடு கூடி உன்னுடையகதிர்களாகிய கிரணகன், என்றும் கறுப்புநிறமுள்ள மேகமானது சப்திக்க, அம்மேகம் மழையைப்பெய்யும்படி அடிக்கும். அப்பொழுது ஸுககாரியாகிக் காந்தியும் குளிரையும் பொருந்திய தண்ணீர் மழையாகக் கீழ்விழும். மேகம் பல்லும் நடுங்கும்படி சப்திக்கும்—(எ-று.) பேனம், நுரை.

3. இவன் றண்ணீர்ச் சாரந் தன்னு லுலகை மேலெடுத்து நேரா
யிவணு றுத்தமப் பாதைக்க ணடத்தியே விழையுங் காலைத்
தவறுரு வகை மேகத்தின் கருப்பையைச் சார் துவக்கை
யிவர்வர் மித்திரன் வருண னரியமா மருதர் கூடி.

(இ-ள்.) இவ்வக்கினி தண்ணீரின்சாரத்தினுல் உலகை வளம் பெறச்செய்து அவ்வுலகத்தவரை (ஸ்காபாஞதி) யுத்தமமான வழிகளில் நடக்கும்படி செய்யும்பொழுது, மித்திரனும், வருணனும், அரியமாவும், மருத்துக்களுங்கூடி மேகக்கருப்பத்தின் மேற்புரையைக் கிழித்து விடுவார்கள். (மழை பெய்விப்பார்கள்)—(எ-று.) மித்திரன் பகற்கும் வருணன் இரவுக்கும் அபிமானி தேவதைகளாம். இவர் உலகைகாத்து, ரிதத்தைக் காப்பவர்; உண்மைக்கும் ஒளிக்கும் நாயகர்கள். அர்யமா அல்லது அர்யமான் துவாதச ஆதித்யர்களில் ஒருவன். சகல மாலை ஸந்திகளைக்காப்பவன். அதனுல் மித்திரவருணர்களோடு சேர்த்து வணங்கப் பெறுவான். மருத்துக்களைப்பற்றி மண். 1. சூக், 14. செய். 3. பார்க்க. 'மழையின்றி மாநிலத்தார்கில்லை.' 'சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்குமீண்டு.' என்பவை கருதத்தக்கன.

(வேறு.)

4. வலியின் மகனே! மலியா முதல்வ!
நலிவில் பிறங்கி நலமோர் பவனே!
தலமா ருணவைத் தருநல் லெரியே!
வலமார் புகழை மருவித் திடலே.

(இ-ள்.) பலத்தின் புத்திரனே! நிறைந்த பசுக்களுக்குத்தலைவனே! ஜ்ரதேவஸனே! உண்டிப்பொருள்களைத்தரும் ஈசானனுகிய அக்கினியே!

அஷ்டகம் 1. அத்தியாயம் 5.

பலம்நின்றக்த கீர்த்தியைத்தருவாயாக—(எ-து.) சாயணர் ச்தயம் என்பதிற் குப் புகழையென்னுது உணவையென்பார்.

5. ஒளி யிர்தனவா னுறுதிப் பொருளோன்
நளினக்கவி நன்னய வேத்தரியோன்
அளிகொள் பலவாகந வங்கி யெமக்
கினியில் பொரு ளென்ன மெடுத்தெதிக.

(இ-ன்.) பிரகாசிக்கும் இந்தனங்களோடுகூடியவனும், உறுதியைத் தரும் செல்வத்தோடுகூடியவனும், கவியும் (மேதாவி அல்லதுக்ராந்தர்சி யும்,) நல்லஸ்துதிகளால் எத்துதற்குத்தக்கவனும், (பலரும்போற்றப்) பல முகங்களோடுகூடியவனுமான அக்கினி, குற்றமற்ற பலபொருள்களோடே கூடிய அன்னத்தைத்தரும் வண்ணம் எரியட்டும்.—(எ-து.) இந்தனம், ஸமித்து முதலிய விறகுகள். கவியென்பதும் Hebrew வில் Prophet என்ற பொருள்படுசொல்லும் ஒரு பொருளன.

6. இரவும் பகலுந் தனியே யெரிக;
தாமில் பகைவர் தமையோட்டுகவே;
நிரைகூர்ம் பல்லி னிறையு மெரியே!
யிருள் கூர் நிசிதர்ச் சுடல்வெவ் வேறே.

(இ-ள்.) தீட்சண்யமான பல்வரிசைகளோடு நிறைந்த அக்கினியே இரவிலும், பகலிலும் ஒப்பற்று எரிவாயாக. ராக்ஷஸாதி பகைவர்களையோட் டுவாயாக. அவ்விராட்சதர்களைத்தனித்தனியே சுட்டெரிப்பாயாக—(எ-து.) நிக்ம ஜ்வ, கூரியபல்லோடு கூடியன் என்பது பொருள். அக்கினிச் சுவாலைகள் கூர்த்துத்தெரிவதால் அக்கினிக்கு வந்தபெயர்.

வருக்கம் 27.

(வேறு.)

7. எக்கருமங்க டம்மிலு மேத்தறு
மக்கினி யுனைக் காயத்திரி யறைந்
தொக்க யாங்க ளுவப்பிற் றுதிக்கும்போ
தக்கணமே யுதவி யளிக்கவே.

(இ-ள்) எல்லாக்கருமங்களிலும் துதிக்கப்படுபவனே! அக்கினியே உன்னைக் காயத்திரிச்சந்தஸாலான ரூக்குகளால் யாங்கள் துதிக்கும்போது நீ உனது உதவிகளால் எங்களைக்காப்பாற்றுவாயாக—(எ-து.)

8. இன்மை நீக்கு மிமையவரிப் பொன்னினை
நின்மை யாளர் செருவிற் றொடாதகை
நன்மை மிக்கதை நாடியெங்கட் கங்கி
வன்மை சேர மகிழ்ந்தளி யென்றுமே.

(இ-ள்.) தரித்திரத்தை நீக்கும் மஹிமைபொருந்திய தனத்தைத், தீமை செய்பவர்களாகிய பகைவர்கள் எந்தயுத்தத்திலும் தொட முடியாததை,

மண்டலம் 1. சூக்தம் 80.

வரேண்யமானதை, அக்கினியே, நீ தேடி யெங்களுக்குப் பலம்பொருந்தும் படியளிப்பாயாக—(எ-று)

9. ஆயு ஷோக்கிட வெங்களோ மோம்பலோ
டேயு மின்பமு மெவ்வ்ரு ஞானமு
மீயு நற்றன மக்கினி பெங்களுக்
காயுண் முற்றும்வாழ் வேவாங்க வளிக்கவே.

(இ-ள்.) அக்கினியே! எங்களுக்கு ஆயுள்விருத்தியாகும்வண்ணம் எங்களிப்பாதுகாத்துச் சுகத்தையும், நல்ல ஞானத்தையும் தரும் தனத்தை, எங்களுடைய ஆயுட்காலமுழுவதும் வாழ்வு சிறந்துநிற்கும் விதமாக வளிப்பாயாக—(எ-று.)

10. செல்வ நாடிஞ் செறிமனக் கோதம!
சல்வளக் கொழுந் தேயு வங்கிப்பொருட்
டொல்லுந் தூய்மை யுபர்தண வாசதஞ்
சொல்லும பண்ணைத் தொடுத்துத் தருகவே.

(இ-ள்.) செல்வத்தை விரும்பும் மனநிறைந்த கோதமனே! ஒளியிருந்த கொழுந்துகளோடுகூடிய அக்கினியின்பொருட்டு அக்கினியின் உயர்ந்த குணங்களையெடுத்துரைக்கும் சுத்தமான்வாசகங்களாற் சொல்லும்பண்களைப் பாடித்தருவாயாக—(எ-று.) திக்மசோச்சிஷ: கொழுந்து விட்டெரியும் சோதியோடுகூடியவன்.

11. சேய்மை யண்மை செறிந்தெமை வாட்டத்தி
னேய்மை செய்திடு மொயய பகைஞர்கள்
வாயமையாக நலிவுறில்; எங்களைத்
தூய்மை யங்கி சுகமுற வோம்பலே.

(இ-ள்.) தூரத்திலும் சமீபத்திலுமிருந்து எங்களை ஹிம்சிக்கும் சத்துருக்கள் உண்மையாகவே நாசத்தையடையட்டும். அக்கினியே! எங்களுக்குச்சுகமுண்டாகும்படி எங்களைவளர்ப்பாயாக—(எ-று.)

12. ஆயிரக்கணை, னங்கி, யரக்கரைப்,
பாய பார்வை பரந்தவை, னீளுட்டுவான்;
தூயதேவரைக் கூட்டுந் துலைவனுய்
ஏயு மெம்மறை ஓய வோவா ஓபா வுவான

(இ-ள்.) ஸஹஸ்ராக்ஷனும், ஒரேபார்வையில் எல்லாவற்றையும் பார்க்கக்கூடியவனுமான அக்கினி ராக்ஷஸர்களை யழுதலத்தினின்றும் ஓட்டிவிடுவான். எம்மை உத்தங்களை யேற்குமவ்வக்கினி தேவாதாவாய்(தேவர்களைக்கூட்டிக்கொண்டுவருபவனுய்)த் தேவர்களைத்தூதிக்கிருன்—(எ-று.)

வருக்கம் 28.

80. மண்டலம் 1 அநுவாகம் 13. சூக்தம் 7.

16 திருக்குக்தவ் கொண்டது.

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

(வேறு.)

1. உத்தம வலியோய்! சர்ப மூயர்த்தவ வீன முறையோன்,
மத்தநற் சோம முண்டிவ் வகையுனக் கீர்த்தி தோன்ற
வைத்தன; னீயு முன்ன வலியிரு லகினை யென்று
மித்தரை யிடர்ப்படுத்தா தெகென விறையி னேட்டிச்
சுத்த மாக்கினே புவியைச் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) உத்தமமான பலவானே! வச்சிரியே! பிரஹ்மஹத்தி (மறை சளை) க்கூறுவோனை பிராஹ்மணன் மதத்தைத்தரும் சோமத்தைக்குடித்து இம்மாதிரியாக உனது கீர்த்திவிளங்கும்படி உன்னைச்சிறப்பித்தான். நீயும் உன்வலிமையினால் 'பூமியைத் தொந்தரவுசெய்யாதபடி இவ்வாயாக. என்று விருத்திரனே அகியை) விரட்டிவிட்டு, உனது சொந்தத்தலைமையினை யெல்லாருக்கும் பிரகடன விளம்பரப் படுத்திக்கொண்டு பூமியைச் சுத்தப்படுத்தினை—(எ-று.) அர்ச்சித்தல் ஈண்டு பிரகடனம் செய்தல் அல்லது விளம்பரஞ்செய்தல். அகி, விருத்திரன்.

2. பெருக்கெடுத்தொழுகுஞ் சோமம் பெருமதம் விளைக்குஞ்சாறு
செருக்கொடு சேனஞ் சந்த சுதையினே மாந்த மத்தம்
வருத்திய, தசனி வாய்ந்தோய்; அந்தர நீர்க்கண் ணின்றும்
விருத்திரன்றனை வெருட்டி வெகுண்டிடர் செய்யே லென்று
திருத்தினே கொன்று யுன்றன் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) வச்சிரத்தோடு கூடியவனே! பெருக்கெடுத்து ஒழுகுவதும் மதத்தைவிளைவிப்பதும், சேன(புருத்து)வுருவோடிருந்த காயத்திரி கொண்டு வந்து கொடுத்ததுமான சோமச்சுதை உனக்குக்களிப்பை யூட்டிற்று. அந்த நிட்சத்திலுனை நீரிலிருந்தும் விருத்திரனே நீ துரத்திக்கொன்றாய் உன்னுடைய தலைமையை யாவர்க்கும் விளம்பரப்படுத்திக்கொண்டு—(எ-று.) 'அக்கினியோமர்களே! உங்களுள அக்கினியை மாதரிச்வான் விண்ணின்றும் கொண்டுவந்தான். சோமனைச் சேனப்பட்கியுருவத்தோடு கூடிய காயத்திரி பெரும்லையின் மேலுள்ள ஸ்வர்க்கத்திலிருந்து பலாத்காரமாகக்கொண்டுவந்தான்.' என்பது மன் 1. சூக். 93. செய் 6-ல் சொல்லப்படுகிறது. சேணம், சியேந: சம்ஸ்கிருதத்தில், புகழத்தக்க வேகத்தோடுகூடியவன் என்பது பொருள். அதாவது கருடனும்.

3. மூக்குறச் சிறப்பிற் செல்க; மூட்டுக வொன்னார் தம்மை
நீக்கினே படைத் தன்னாரும் நிலையழிந் தேதமாறு
சந்திசெய் தெதிர்க்க வன்றன் சம்பமு மடங்கா வாற்றற்;
நிந்திர, வண்மையும் பாண்மை யிரிப்பதாம்; எழிலி வாட்டிச்
சுந்தர நீரைக் கொள்க சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) இந்திரனே! நேராகச்செல்லுக; சிறப்புப்பொருந்தும்படி பகைவர்களை முன்னிடுக. அவர்கள்நிலைகெட்டழியுமாறு அவர்களைச் சந்தி செய்து எதிர்ப்பாயாக. உனது வச்சிராயுதம் அடங்காத வல்லமையுள்ளது. உனது பலமும் ஆண்மையுள்ள புருஷர்களையடக்க வல்லது. விருத்திரனுடைய மேகத்தை வாட்டி நீரைப்பெறுவாயாக, உன்னுடைய சொந்தத்தலைமையை விளம்பரப்படுத்தி—(எ-று.)

மண்டலம் 1 சூக்தம் 80.

4. பூமியின் மேலும் வேர்தே பொடித்தனை யக்தரத்தும்
நாமற வழித்தாய் நன்னீர் விருத்திரன் றன்னை நாடிக்;
காமுறு சிவ நேரப்புங் கடிபெய துதகங், கூடி
யேமுறு மாதர் சூழ வியைத்ததைக் கீழ்நோக்குற்றுச்
சோமனின் றெழுகுவிப்பாய் சுயவின தமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) இந்திரனே! விருத்திரனை நீ பூமியின்மேலும் கொன்றனை ஆகாயத்திலும் கொன்றனை. பிராணிகளைப்பாதுகாக்கும் தண்ணீர் (கூட்டமாகக்களிக்கும்) மருத்துக்களோடு கூடியதை ஆகாயத்திலின்று விழும்படி செய்வாயாக, உனது சொந்தமேன்மையை என்னிப்பிரகட்னஞ் செய்து —(எ-று.) கடிபெயதுதகம்—மழை நீர் அந்நீர் மருத்துக்களோடு கூடியது. சோமம், ஆகாயம். வேந்தன் என்னுஞ்சொல் இந்நூல் முழுவதும் இந்திரன் என்னும் பொருளிலேயே வரும்.

5. கோபங் கொண்டவனும் வேந்தன் கொதித் தெதிரியின்மேற் பாய்ந்தே
யாபங்க ணெஞ நிக்கு மகன்று கீழொழுகு மாறு
தாபங்கொ ணடுக்கஞ் சாலத் தாக்கிய விருத்திரன்றன்
பாபங்கொ னதுவி னேங்கி வச்சிரப் படையினன்ஞன்
சோபங்கொண் டழியக் கொன்ருன் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) கோபங்கொண்டவிந்திரன், மழைநீர் நாலாபக்கங்களிலுஞ் சிதறிக்கீழ்விழும்படி, நடுக்கத்திற்பொருந்திய விருத்திரனது தாடையில் தனது வச்சிராயுதத்தால் அவனழியும்படியடித்துக் கொன்ருன், தனது சொத்தப் பெருமை யெல்லார்க்குந் தெரியும்படி செய்து—(எ-று.) ஆபம், நீர்; வேந்தன், இந்திரன் அது, ஹது, கதுப்பு, தாடை.

வருக்கம் 29.

6. கணுக்க ணூறுள்ள தண்டம் வச்சிரங் கையிற் ருங்கி
யணுக்களாப் பொடிக்கின்ருலல் விருத்திரன் கனத் தடித்தே;
வணக்குறு போற்றி கூறு மாற்றத்திற் கழி மகிழ்ச்சி
யினக்குற நின்ற வேந்த னியைக்கிருன் ரோழர்க் காகச்
சுணக்குறு வன மார்க்கத்தைச் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) இந்திரன் நூறுகணுக்களோடுகூடிய ஆயுதமாகிய வச்சிரத்தினால் விருத்திரனது கன்னத்திலடித்து அவனைத்துகள்படித்துகிருன். பின்னும் அவன் வணக்கத்தோடு கூடிய ஸ்தோதாக்கள் கூறும் ஸ்துதிகளில் மிகவும் மகிழ்ந்து தனக்குச் சமானமானதோழர்களெனச் சொல்லப்படும் அத்தஸ்தோதாக்களுக்கு வேண்டிய அன்னம்கிடைக்கும் வழியைப் இச்சிக்கிருன், (தேடிச்சேர்க்கிருன் என்றபடி) தனது சொந்தத்தலைமையைப் பிரகடனஞ்செய்து—(எ-று.) கனம் கன்னமென்பதன் இடைக்குறை. அனம் அற்றே அன்னமென்பதன் இடைக்குறையாம். போற்றி ஸ்தோத்திரஞ்செய்பவன். இச்சொல் மலையாளத்தில் போத்தியெனவழங்கும். சுணக்கம், வாட்டம், குறைவு. சுணக்குறுமார்க்கம் குறையாதவழி. வச்சிராயுதம் நூறுகணுக்களுள்ளதென்பது இதனாற் போதரும்.

7. மேக வாகனனும் வேந்தே குலிச வெம்படையா யுன்றன்.
சேகுறு நிறமை யொன்னுச் செகுக்கலா வன்மைத் தாமால்;
ஏகமா மாயை சான்றே யுலகினுக் கிடுக்க ணூட்ட

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

வேகு மம்மிருகந் தன்னே யெண்ணு முன்மாயை தன்னுற்
சோக மார்ந்துற முடித்தாய் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) மேகவாகனனுகிய இந்திரனே! வச்சிராயுதத்தையுடையவனே! உனது வீரியமானது பகைவராலழிக்க முடியாததாம் (அந்த வீரியத்தைக் கொண்டேதான்), மாயைமிகுந்து உலகத்துக்கு உபத்திரவத்தைச் செய்யுமந்த மிருகரூபத்தோடு தோன்றிய விருதாசுரனே உனது மாயையினுல் கொன்முய் உனது சொந்த மேன்மையைப் பிரகடனஞ் செய்தா—(எ-று).

8. இந்திர வுன்னு லேவும் வச்சிரம் பலவா யோங்கி
யந்தரத் தடைபட்டுள்ள வாறுகள் பதிற்றொன்பானுஞ்
சிந்துற வடித்த; வுன்றன் வீரியஞ் செயிகொணுதால்;
முந்துறு முன்கை யாற்றல் மொழியுறுந் தன்மை சாராச்
சுந்தரப் பெருமைத் தைய சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) இந்திரனே! உன்னுல் வீசப்படும் வச்சிராயுதங்கள் பலவாகி றைந்து அந்தரத்தில் அடைபட்டுள்ள தொண்ணூறு நதிகளையும் மழையாகக்கொட்டும்படியடித்தன. உனது வீரியமானது மகத்தானது அல்லது பிறர்சாற் சயிக்கமுடியாதது. உனது கைகளின் வல்லமை சொல்லமுடியாதாம், உனது சொந்தமேன்மையைப் பிரகடனஞ் செய்தா—எ-று.)

9. ஆயிரம் பேர்க ளொன்று யலோர் தருச்சிக்கின்றுரால்;
மேயபே ரிருபதின்மர் வேண்டி யெக்காலும் போற்றைப்
பாய பேரொலியி னுச்சார்; பகர்ந்தனர் பதிற்றுப் பத்துக்
காயன விருடிமார்க ளடிக்கடி; யிதரற்குந்
தூய நன்மறை தூக்கிற்றுற் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) ஆயிரம்பேர் இந்திரனிடத்து ஒன்றுகக் கூடியருச்சிக்கின்றுர்கள். யாகத்திற் பொருந்திய இருபது பேரும் எல்லாவிடத்தும் சூழ்ந்து ஸ்தோத்திரஞ் செய்தனர். அடிக்கடி நூறு (நூற்றுக்கணக்கான) ரிஷிகள் அவனுடைய புகழைக் கூறினர்கள். இந்திரனுக்காகப் பிரஜ்மங்கள் (மந்திரங்கள், அவியுணவென்பார் சாயணர்) தூகைப்பட்டன அவனது சொந்த மேன்மையைப் பிரகடனஞ் செய்தா—(எ-று.) 20 பேர் 16 ரித்விஜர்களும், யஜமானனும் அவன் பத்தினியும், ஸதஸ்யனும், சமிதாவுமாக இருபதின்மராம். ஸதஸ்யன் பிழைதிருத்துவோன். சமிதா அக்கினிபோலும்; தூக்கிற்று செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது.

10. விருத்திரன் பலத்தை வேந்தன் வெட்டினுன்; படைக்கலத்தை
யருத்தெழுந் தண்பணடையா லொழித்தனன்; அவனவ் வாண்மை
பெருந்த தன்மையதாற் பேசின்; விருத்திரன் றன்னைச் சால
வருந்தியே கொன்றுன்; அன்னுன் வலியினுற் றகைத்த நீரைத்
தரத்தியே கட்டவிழ்த்தான் சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) விருத்திரனுடைய பலத்தைத் (தனதுபலத்தினுல்) இந்திரனழித்தான். அவனது ஆயுதத்தைத்தனது ஆயுதத்தாலொழித்தான். அவ்விருத்திரனுடைய புஂஸ்த்வம் (ஆண்மை) மகத்தானது. விருத்திரனைக் கொன்று அவன் அடைத்து வைத்திருந்த நீரையவிழ்த்துவிட்டான் தனது சொந்தமேன்மையைப் பிரகடனஞ் செய்தா—(எ-று.) அவன் ஆறன் ருருகை.

மண்டலம் 1 சூக்தம் 80.

வருக்கம் 30.

11. பொச்சமில் பெருமை சார்ந்த புவியொடு வா னிரண்டு
மச்சமுற் றுனது கோப மாற்றலா தஞ்சி நின்ற வையை
வச்சிரப் படையோய்! சூழ்ந்த மருத்துவர் தூணைகொண்டெள்ளோய்!
நச்சுறு மிந்திரா நீ நண்ணு முன்வலியாற் பாம்பைத்
துச்சமாய்க் கொன்ற போதுன்சுய விறைமையை யச்சித்தே.

(இ-ள்.) வச்சிராயுதந்தரித்தவனே! மருத்துக்களுடைய துணைவாய்ந்து அவர்களால் சூழப்பட்டவனே! இந்திரனே! நீ உன்று சொந்த ஆதிபத்தியத்தைப் பிரகடனஞ் செய்து உனது பலத்தினால் விருத்திரனியபாம்பைக் கொன்றபொழுது, மகத்துவத்திற் சிறந்த வானம் பூமிகள் உனது கோபத்தைக்கண்டு பயந்து நடுக்கமுற்றன—(எ-து.)

12. கடகட வென வசைத்து விருத்திரற் கலக்குஞ் காலு
மிடியி னிந்திரன் முழக்க மிழைந்த வப்போது முள்ள
நடுநடுங்கில; னவன்ற னன்னைய வயத்தை லாளா
கொடிவலிக் குலிசங் கூர்க ளாயிரங் கொண்டு வெட்டத்
துடிதுடித்தன னதியுஞ் சுய விறைமையை யச்சித்தே.

(இ-ள்.) இந்திரன் விருத்திரனைக் கடகடவென அசைத்தாட்டினபோதும் இடிபோலப்பெருமுழக்கஞ் செய்தபோதும் விருத்திரன் பயப்படவில்லை. இரும்பினாலான அவனிந்திரனது வச்சிராயுதம் அவனிந்திரனதுசொந்த ஆதிபத்தியத்தைப்பிரகடனஞ்செய்து ஆயிரங்கூர்கொண்டு அவனை (விருத்திரனை) வெட்டிற்று. (அப்பொழுது நடுங்கினான்)—(எ-து.) 'துடிதுடித்தன னதியும்' என்றது வடமொழி மூலத்திலில்லை.

13. அசனியை யுருப்படுத்தி, யணிமுரட் குலிச மென்னும்
வசையி லாயுதமே யாக வனைந்து பின் னெதிர்த்தோர்க் கொல்லும்
பசையிலா வலியைக் கூடப் பரந்திட வமைத்த போது
நசையி னுன்வலி நாகத்தே வி ருத்திரன்றனை யலிக்கச்
சுச வியாபக மெய்திற்றச் சுய விறைமையை யாச்சித்தே.

(இ-ள்.) இடியை யுருப்படுத்தி வலிமைபொருந்திய வச்சிராயுதமாகச் செய்து, பின்னர், எதிர்த்தவர்களைக்கொல்லும் அளியாகிய விருத்திரனையும்பரந்து நிற்கும்படி செய்தபோது, உனது பலமானது ஆகாயத்தினிடத்திலிருத்திரனை கொல்லச் சுயவியாபகத்தை யடைந்தது உனது சொந்த ஆதிபத்தியத்தைப் பிரகடனஞ்செய்து—(எ-து.) அதிமஹ ஆதர்யதுவஷ்டா ரம்ஸன்பார் சாயனர். பிரகடனஞ் செய்து அடைந்தது என்க.

14. அத்திரிப் பல்டையைத் தாங்கி யணிபெறு மிந்திரா வுன்
சத்த மிக்கோங்குஞ் சிங்க நாதங் கேட் டசரத்தோடு
தத்து சங்கமங்கள் சார்ந்த விவ்வுல கதிர்ந்த தையய;
ஒத்த மீப்பயத்தி னுன்றன் கோபத்தாற் றவட்டா கூடத்
தொத்து கம்பனத்தை யுற்றுன் சுய விறைமையை யச்சித்தே.

(இ-ள்.) அத்திரிப்பல்ட (வச்சிராயுதம்) (தரித்தவனே! இந்திரனே! உனது விம்ஹ நாதத்தைக்கேட்டு ஸ்தாவர ஜங்கமங்களிரண்டும் நடுங்கின. உனது கோபத்தாற்பயப்பட்டு (வச்சிராயுதத்தை யுருப்படுத்தின) த்வஷ்டா கூடமிகவும் நடுங்கினன் உனது சொந்த ஆதிபத்தியத்தைப் பிரகடனஞ்

அஷ்டகம் 1 அத்தியாயம் 5.

செய்து—(எ-து.) கம்பணத்தைத்தொத்துற்றன் எனக்கூட்டுக. துவஷ்டாவச்சிரத்தைச் செய்தவனென்றதை. மண். 1. சூக். 32, செய். 2-ல் பார்க்க.

15. வீரியந் தன்னி னெங்கும் வியாபன்ஞ் செய்யும் வேந்த
னேர வேறொருவன் றன்னை யெமமதி தன்னி னேடி
போரலம்; தூர தேசத் துறைப்வ ரறிவார் யாரே?
சாருறு மவற்கு வண்மை சம்பத்தும் விளங்கத் தேவர்
தூரியச்செய் லுமிட்டார்சுயவிறைமையையர்ச்சித்தே.

(இ-ள்.) தனது வீரியத்தினால் எங்கும். வியாபிக்கும் இந்திரனைப் போல வேறொருவனை யெமது புத்தியினுற்றேடியறிகிலம். தூரதேசத்திலிருப்பவர்களில் யாரறிவார்கள்? (ஒருவரும் அறியமாட்டார்கள் என்றபடி) அவனுக்குப் பலமும் செல்வமும் விளங்கும் வண்ணம் வீரியம் பொருந்திய படைத் தொழிலையும் (அதாவது போர்க்கன்மத்தையு மென்றபடி) தேவர்களித்தனர் அவனது சொந்த ஆதிபத்தியத்தைப் பிரகடனஞ்செய்து-(எ-து.) தூரியம், ஆயுதப்பொது, தூரியச் செயல் ஆயுதங்களோடி செய்யும் போர்க்கன்மம்.

16. யாவர்க்குந் தந்தை யென்னு மனு, வதர்வ்ண, னவன்றன்
பாவக மகன் றத்யச்ச னெனு மிவர் பழகக மாக
மேவுறவச் செய்த கன்ம மொன்றல வவற்றிற், பண்டு
மேவுறுவதுபோற் போற்று முண்டியும் பிற வெலாமுந்
தூவிய லரிக் ஞையைந்த சுய விறைமையை யர்ச்சித்தே.

(இ-ள்.) பண்டைக்காலத்து (விஸ்ஷ்டர் முதலியோர் செய்த) கர்மங்களில் கூறப்பட்ட மறையும் கொடுக்கப்பட்ட அவியும் இந்திரனையடைந்ததுபோல, எல்லாருக்கும் பிதாவாகிய மனுவும், அதர்வணனும், அவனது பரிசுத்தமாகிய புத்திரனுகிய தத்தியச்சனும் என்னு மிவர்கள் செய்த கர்மங்கள் பலவற்றினும் சொல்லப்பட்ட போற்றுக்களும் (ஸ்தோத்திரங்களும்) தரப்பட்ட அவிப்பொருள்களும் அரி (இந்திரனை) யையடைந்தன அவனது சொந்த ஆதிபத்தியத்தைப் பிரகடனஞ்செய்து—(எ-து.) அதர்வணன் ஒரு ரிஷி இவன் முதன்முதல் அரணிகடைந்து அக்கினியைபெற்றுத்தேவர்களுக்கு ஸோமமும், ஸ்தோத்திரங்களும் அளித்தவன். அவனது புத்திரன் தத்யச்சன்; இவனுக்குத் தகீசி (ch) யென்று ஒரு பேருமுண்டு இவனது விருத்தாந்தம் மண் 1. சூக். 84 செய் 13ல் சொல்லப்படும். சுயவிறைமையை யர்ச்சித்தே' என்ற சொற்றொடரைப்பாட்டுக்களில் வாய்ப்பக்கூட்டுக. அரி, இந்திரன்.

வருக்கம் 31.

ஆகச்செய்யுள் 863.

இவ்வத்தியாயத்தில் 185 இருக்குக்களாயினும் 65 முதல் 70 வரையிலுமுள்ள சூக்தங்களில் இரண்டு சூக்தங்களுக்கு ஒருசெய்யுள்வீதமேற்பட்டதால் இவ்வத்தியாயத்திற் செய்யுட்கள் நூற்றைம்பத்தைந்தேயாயின

5-வது அத்தியாயம் முற்றும்.

மண்டலம் 1. சூக்தம் 81.

6–வது அத்தியாயம்.

—:ஸ்ரை:—

இவ்வத்தியாயத்தில் 32 வருக்கமும், 14 சூக்தமும், 163 இருக்குக்களு முள்ளன.

81. மண்டலம். 1. அநுவாகம் 13. சூக்தம் 8.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ராஹூகணன் கோதமன்; வடமொழிச்சந்தம்: பங்தி; தேவதை இந்திரன்.

1. விருத்திரற் கொல்லுவோனு மிந்திரன் மதத்தை மேவி
விருத்திசார் வலியை யேற்று, மகத்தீன விளக்கு மாந்தர்,
பெருகதிடச் செய்தா; ரன்னன் றன்னீயே பெருத்த போரில்
வருத்திய சிற்றுறழ்வில் வருகெனக் கூவுவோம் யாம்;
உருத்தெழு சங்கிராமத் துவ னைமைப் புரக்க னன்கே.

(இ-ன்.) விருத்திர ஹந்தாவாகிய இந்திரன் மதங்கொண்டு வளரும் பலத்தைப் பெற்று மகத்துவமடையும்படி, யாகமாற்றும் ரித்விஜர்கள் செய்தார்கள். அவனேயெரிய யுத்தத்திலும் சிறு பூசலிலும் யாங்கள் துணைக் கழைப்போம். யுத்தத்தில் அவன் நம்மை நன்முகப் பாதுகாக்கட்டும்–(எ-று) உறழ்வு சண்டை அல்லது பூசல்.

2. ஒருவனே யெனும் வீர வொரு பெருஞ் சேனை யொப்பாய்
பரதனந் தன்னை யென்றும் பகைவர்நின் றெடுத் தீவாயால்;
உரமிலா னெனினு முன்னைத் துதிப்பவன்றன் பலத்தின்
விரவுற விடுப்பாய்; சோம வெக்கியன் விழையும் பொன்னைத்
தரமுற வளிப்பா; யுன்றன் முன மட்சயப் பொருளே.

(இ-ள்.) நீ யொருவனே யாகிலும் ஒரு பெரிய சேனைய யொத்து நிற்பாய். பிறரது செல்வத்தைப் பகைவர்களிடத்தினின்றும் பறித்துத்தருவாய். வலிமையில்லாதவனுயினும் உன்னைத் துதிப்பவனைப் பலவானுகவர்க்குவாய். சோமபிஷவஞ்செய்யும் யஜமானன் விரும்பும் செல்வத்தை நன்முகக் கொடுப்பாய். உன்து தானமும் மிகப்பெரியதாம் அல்லது அட்சயமானதாம் —(எ-று.) அட்சயம், குறைவற்றது.

3. எழுந்த போர் தம்மில் யாவ னெதிரியை வெல்வா னன்னற்
கிழிந்துரச் செல்வம் யாவு மிசைந்திடும்; பகைவர் கர்வு
மழிந்திட வீட்டும் பாய்மா வீரண்டையுந் தேரிற் பூட்டல்;
கழிந்திடச் செய்வாய் யாரைக்? கழிதன மியார்க் களிப்பாய்?
கொழுந்தன மிந்திரா நீ கூட்டுக வெமக்கு மின்றே.

(இ-ள்.) (இவ்விடத்து இது சொல்லத்தக்கது. குருஸ்ரிஞ்சயர்கள் என்னும் அரசர்களுடைய புரோகிதனுய் ரஹூகணன் புத்திரனுகிய கோதமனிருந்தான். அந்த ராஜாக்கள் பிறரோடுயுத்தஞ்செய்தபோது அந்தக் கோதமரிஷி இந்த ஸூக்தத்தினுல் இந்திரனைப்போற்றி தன்னவர்களுக்கு வெற்

அஷ்டகம் 1. அத்தியாயம் 6.

றியைப்பிரார்த்தித்தான் என்பது. வாஜஸநேயியில் தந்தை மகன் இருவரும் புரோஹிதர்களாகவிருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.) எற்பட்ட சண்டையில் சத்துருவை ஜயிப்பவனுக்குச்செல்வம் கிடைக்கும். இந்திரனே! பகைவர்களது கர்வத்தையடக்கும் குதிரைகளிரண்டையும் உனது தேரிற் பூட்டுவாயாக யாரை நீ யுத்தத்திற்கொல்லப்போகிறாய்? யாருக்குமிக்க செல்வத்தை யளிப்பாய்? எங்களுக்கு நல்ல செல்வத்தைக் கூட்டுவாயாக— (எ-று.)

4. புத்தியாற் பெரியன் சோமம் பொருந்தி யொன்னலர்க்குப் பீம
மெதகவே விளைத்து வன்மை வீங்கினன்; மாண்ட தோற்ற
மொத்தவ னரியோன் முடையுறு வலியுடையோன் செல்வ
மெத்துவான் சேர்த்த கைக ளிரண்டினு மயத்தா லான
வுதமவச்சிரத்தை யுயர்த்தியே நிறுத்தினனே.

(இ-ள்.) ஞானத்தினாற் பெரியவனாகிய இந்திரன், சோமபானஞ் செய்து சத்துருக்களுக்குப் பயத்தையுண்டுபண்ணி வலிமையிற் பெருத்தான். பார்வைக் கழகானவனும், கனப்புவன்மை யுடையவனும், ஹரீயென்னும் இரண்டு குதிரைகளோடு கூடியவனுமானவன் செல்வத்தைப் பெறுமாறு சேர்த்த இரண்டு கைகளாலும் இரும்பினாலான வச்சிரத்தைத் தூக்கிப்பிடித்தான்— (எ-று.) ஹரீ தவிவசனம. பிங்கலவர்ணமுள்ள குதிரைகளாம்.

5. புவிநிறை பொருள்க டம்மை யந்தரந்தினைத் தன்றேரின்
சகியினு னிறைத்தான்; வானிற் சருவியே யிலங்கு மீன
யவதியிற் கட்டி வைத்தான்; அரி யுனைப்போன் றுதித்தார்
பவிடியத் தூனியிகன் றுற்பவிப்பவர் தாமும் யாரே?
தவகிலத்தை யெலலாந் தாங்க விச்சிப்பாய் நீயே.

(இ-ள்.) பூமியில் நிறையும் பொருள்களையும், அந்தரிட்சத்தையும், (இந்திரன்) தனது சொந்த தேஜஸால் நிரப்புகிறான். ஆகாயத்தில் நட்சத்திரங்களை அவ்வவற்றின் ஸ்தானங்களில் நிறுத்திவைத்தான். இந்திரனே! உன்னைப்போல் இதற்கு முன்னுதித்தவர்களும், இனியுன்னைப்போலுற்பவிக்கநிற்பவர்களும்யார்? (ஒருவருமில்லையென்றபடி.) எல்லாச்சகங்களையும் நீ தாங்க விச்சிக்கிறாய்—(எ-று.) அரி, இந்திரன் அண்மைவிளி. படர்க்கை முன்னிலையர்கமாறியது. பவிஷ்யம், பவிடியம், எதிர்காலம்.

வருக்கம் 1.

6. தாசுடன் றனக்கு மர்த்திய போனகந் தன்னை மிக்க
வாசினிற் றருஞ் சுவரமி யாகிய விந்திரன்றன்
பேசரு முண்டி யெங்கட் களித்துடன் பிறங்கல்; செல்வ
மேசலில வகை பருக்கல; உன திருநிதி கணக்கிற்
பேசுற வமையா துன்சீர்ச் செல்வத்துப் பெறுக பங்கே.

(இ-ள்.) தாசருக்கு மனுஷ்ய போஜனத்தைத்தரும் ஸ்வரமிபாகிய இந்திரன் எங்களுக்கு உணவுப் பொருள்களைத்தரட்டும் (பின்வருபவை பிரத்தியக்ஷமாகிறதும்) (இந்திரனே!) நீ செல்வத்தை எங்களுக்குப் பங்கிட்டுத்

மண்டலம் 1. சூக்தம் 81

தருவாயாக. உனது செல்வம் கணக்கிலமையாது. உனது செல்வத்தில் யாங்களும் எகதேசத்தையடையட்டும்—(எ-று.)

7. மதங்கொண்டு களித்த காலந் தோறுமவ் வந்தருமகத்தோன்
இதங்கொண்டு பசுக்கூட்டத்தை யெங்களுக் களிப்பான்
மெய்யே
சதங்கொண்ட வகையிற் சார்ந்து மிருத்திடுக் கனத்தை
நன்கே
வதங்கொண்ட கரமிரண்டால் வாரி யேன்றெடுக்கல்; எந்தம்
விதங்கொண்ட மதி கூர்ப்பிக்கல்; வேண்டிய தனத்தை யீகல்.

(இ-ள்.) ஸோமபானத்தால் மதத்தையடைந்த காலமெல்லாம் கர்மவானுகிய இந்திரன் எங்களுக்கு உண்மையாகவே பசுக்கிரைகளைத் தான்ஞ் செய்வான். தாற்றுக்கணக்கான செல்வத்தொகுதியை இந்திரனே கைகளினால் எடுப்பாயாக. எங்களது புத்தியைக் கூர்மைப்படுத்துவாயாக. எங்களுக்கு வேண்டிய செல்வத்தை தருவாயாக—(எ-று.)

8. சூர யாம் பலத்தைவேண்டிச் சொத்தினை வேண்டிச் செய்யு
மாரமிழ்தச சுதைக்க ணமைந்து தோழமையி னுண்டு
சீரிய மதத்தை யெய்தல்; நிறபபுற வெகு தனத்தின்
காரக னீயேயென்று கருதினே முன்மாட டெந்தம்
பேரவா வுரைத்தோங் கண்டாய் பெருந்துணை யெமக்கே
யாகல்.

(இ-ள்.) சௌரியம் பொருந்திய இந்திரனே பலத்தையும் செல்வத்தையும் இச்சித்துப் பிழிந்த ஸோமத்தின்கண் வந்து எங்களது தோழனுயர்ந்து அதனைக் குடித்து மதத்தை யெய்துவாயாக. நீயே வெகு தனகாரகனென்று எண்ணியுன்மாட்டு எமது ஆசையையெல்லா முரைத்தோம். எங்களுக்குத் தனத்தையளித்து ஒத்தாசை செய்வாயாக—(எ-று.) மதம் உற்சாகம் மண். 1 சூக். 4 செய். 2 நோக்குக.

9. இந்திர வுன திம்மாரி சேற்றமாம் பொருள் வளத்தைத்
தந்திடு மவற்றை யெல்லா முனக்கெனத் தருகா நிறபார்;
சுந்தரச் சுவாமி யாகுந் சுவைக்க வாற்றுதார் செல்வ
முந்துற வுணர்ந்து பினபு மொய்ம்பினுற பிடுங்கி யெங்க
ளந்தரத் தமைத் துனக்குச சபல் மாக்கிட வளிப்பாப்.

(இ-ள்.) இந்திரனே! உன்னுடைய இந்தியாக வான்களாகிய மனிதர்கள் வளம்பொருந்திய பொருள்களையெல்லாம் உனக்கே அவிரூபமாகத்தருவார்கள். எல்லாவற்றிற்கும் ஸ்வாமியாகிய நீயாகஞ் செய்யாதார் படைத்து வீணுக்குகின்ற செல்வத்தையெல்லா மறிகிறுய். அறிந்து அவ்வயாஜிகளின் செல்வத்தை (உனது பலத்தினுற் பிடுங்கி) யெங்களுக்குத் தருவாயாக (யாங்கள் உனக்குப் பயன்படும்படி செய்யும்பொருட்டு). (எ-று.) அயாஜிகள், யாகஞ்செய்யாதார். உனக்கு ஸபலமாக்கிட என்ற இடைப்பிறவரல் அன்வயத்தாற் கொண்டது வடமொழி மூலத்திலில்லை. அம்மாதிரியேமெய்ம்பினுற் பிடுங்கி

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

யென்பதும் அன்வயத்தாற்கொண்டது.

வருகம் 2.

82. மண்டலம் 1. அநுவாகம் 13. சூக்தம் 9.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி கோதமன்; வடமொழிச்சந்தம்: 1—5 பங்தி, 6 ஜகதி; தேவதை இந்திரன்.

1. முன்பெம்ம யளிகை வெம்பா முந்துறச் செவிசாய்த் தாற்போ
லின்பி னெம்பண்ணை யின்றுநீ கேட்க; சீர் மகவான், மாரு
யன்பிலா துறையல்; எம்மை மெய்த்துதி வசன ராக்கிப்
பொன்பெறு மிச்சை கூட்டிப் புரிப்பி னமைத்தாய் வேந்தே,
யுன்பரி யிரண்டை யுன்றேர்ப் பூட்டுக வுடனே மன்னே.

(இ-ள்.) மகவானே! (தனவானை இந்திரனே) பூர்வத்தில் எங்களோக் காப்பாற்றுமாறு எமது ஸ்துதிகளைக் கேட்டதுபோல் இன்றும் கேட்பாயாக. அதற்குநேர்விரோதமாக இப்பொழுது எங்களிடத்து அன்பில்லாமலிருந்துவிடாதே. இந்திரனே! எங்களைப்பிரியாதிருப்பவனான நீதோடு கூடியஸ்தோத்தாக்களாகச் செய்து பொருளிச்சையையு மூட்டி விட்டு ஸ்தோத்தஞ்செய்து படைத்திடுவாய். உன் குதிரைகளிரண்டையும் உனது தேரில பூட்டுவாயாக—(எ-று.)

2. அன்ன நீயளித்த வற்றை பாரவுண் டின்படைத்தார்
துன்னு சொற் றேய்கிலார் மெய்க்கமபித்த தொளி மீக்கொண்டு
மன்னிய விப்பிரர்க ணூதனோத்தம மறையா
னன்னயத் தூனத் துதித்து நாடினு ரதனால் வேந்தே
யுன்பரி யிரண்டை யுன்றேர்ப் பூட்டுக வுடனே மன்னே.

(இ-ள்.) நீ யளித்த அன்னத்தை வயிறுரப் புசித்து, இன்பத்தையெய்தி வாயினாற் சொல்லமுடியாதவர்களாய்த் தமது சரீரம் கமபிக்க மேதாவிகள் ஞானத்தோடு கூடியவர்களாய் நூதனமும் உத்தமமுமான மந்திரத்தை அல்லது ஸ்தோத்திரத்தை மனத்தினாற் கருதிப்பாடித்துதித்தார்கள். இந்திரனே! உன் குதிரைகளிரண்டையும் உனது தேரிற் பூட்டுவாயாக—(எ-று.)

கொன்பெறு மகவா னுன்றன் கூரருட் கடைக்கணடி

3. மன்பதை யாங்க ளுன்னே வணங்கியே துதிக்கின்றுமா
துன்னுமத் துதிகொள் நீ போற்றுரைப்பவர்க் களிப்பான், மெய்யே,
துன்னு பேர்நிதிகொ டோரிற்றேய்ப்பது நேர்வுக, வேந்தே,
யுன்பரி யிரண்டை யுன்றேர்ப் பூட்டுக வுடனே மன்னே.

(இ-ள்.) பெருமை பொருந்திய மகவானே! உன்னுடைய அநுக்கிரகப்பார்வையை விரும்பி உன்னேப்பிரார்த்தனைகளாகிய யாங்கள் துதிக்கின்றோம். அத்தகைத்துதிகளையேற்கும் நீ ஸ்தோத்திரஞ்செய்யும் பிறருக்கும் அநுக்கிரகஞ்செய்யும் வண்ணம, மிகுந்த செல்வத்தால் நிறைந்த உனது தேரின்மேலேறிக்கொண்டு உண்மையாகவே (அவசியம்) வருவாயாக. இந்திரனே! உன் குதிரைகளிரண்டையும் உனது தேரிற் பூட்டுவாயாக—(எ-று.)மெய்யே வருக எனக் கூட்டுக.

மண்டலம் 1. சூக்தம் 82.

4. தன்னுறு வோர்கட் கார்த்தி சார்த்தி யரக்குழுவை யீண்டு
மன்னுறக் கூட்டி யாரி யோஜனங்'கலந்த ஸ்தஷரத்
துன்னுறு சோம பூர்ண பத்திர நினைப்பிப்ப ஃதை
மின்னுறு மிந்திரா நீ மெய்ம்மையி னேறல்; வேந்தே
யுன்பரி யிரண்டை யுன்றேர்ப் பூட்டுக வுடனே மன்னே.

(இ-ள்.) இந்திரனே! தன்னையடைவோர்க்கு இச்சைகளையளிப்பதும் பசுக்கூட்டத்தைத்தருவதும், ஹாரியோஜநத்தோடுகூடியதும், சோமம் நி, றைந்த பாத்திரத்தை (இந்திரனுக்கு) நினைப்பூட்டுவதுமான தேரில் உண் மையாகவே ஏறிநிற்பாயாக. இந்திரனே உன் குதிரைகளிரண்டையும் உன துதேரிற் பூட்டுவாயாக—(எ-று.) ஹாரியோஜநம் பிங்கலநிறமுள்ள குதிரை களைத்தன்னிடத்துப் பூட்டப்பெற்றதென்பார் மேனூட்டாசிரியர். ஆனால் ஹாரியோஜநம் 'ஏதத் ஸம்க்ஞகம் தா(ர்h)'ஞ மிச்சிதம்' என்பார் சாயணர். அப்பெயருள்ள தானியம் அல்லது பொரிகலந்தது என்று பொருள்படுகி றது. அற்றேல் பொரி அல்லது சாதங்கலந்த ஸோமமெனக் கூட்டவேண் டும். அதனால் மன்னுறக் கூட்டுந் தேரையாரி யோஜநங்கலந்து' என இரண் டாம் அடியையமாற்றிப் படிக்க. ஆங்குழு, பசுக்கூட்டம்.

5. உன்னிய நூறு கன்ம முடைய நல்லதிப வுன்றன்
கொன்னுறு தேரிற் றட்சிணத்தி னேர் பரியைக் கூட்டல்;
மன்னுறு மிடப்பாகத் தேர் மாவினைத் தூக்கல்; நேசப்
பன்னிவாய்ச் செல்க சோமம் பருகிய களியின்; வேந்தே
யுன்பரி யிரண்டை யுன்றேர்ப் பூட்டுக வுடனே மன்னே.

(இ-ள். சதக்கிருதுவே! உனது (பெருமைபொருந்திய) தேரின் வலது பக்கத்தில் ஒரு குதிரையைச் சேர்ப்பாயாக. இடது பக்கத்தில் ஒரு குதிரை யைக்கட்டுவாயாக. சோமங்குடித்த மதத்தோடு உனது பத்தினியிடத்துப் போவாயாக. இந்திரனே! உன் குதிரைகளிரண்டையும் உனது தேரிற் பூட்டுவாயாக—(எ-று.) பின்னடிகளால் இந்திரனைத்தனது கிரகத்துக்கு அனுப்புவது சொல்லப்படுகிறது.

(வேறு.)

6. பிரமமதாற்குசை நீண்ட வுன்னிருமாவினைத்தேரிற் பிறங்குவித்தேன்;
வாமருவுனிலநோக்கிச் செல்லுக; வாருன்கரத்தேமருவிற்றுலோ;
தரமதத்தைத்தந்து விரைவுளக்களிப்பூட்டுஞ் சுதைகள் சந்தோடத்தை
விரவுவித்த; வச்சிரத்தோய்! பன்னியொடு செழித்து மதமேவனன்கே

(இ-ன்.) (இந்திரனே!) ஸ்தோத்திரரூபமான மந்திரத்தால் நீண்ட பிடரிமயிரோடு கூடிய உனது இரண்டு குதிரைகளையும் தேரிற் பூட்டி னேன். உனது 'உத்திருஷ்டமான வீட்டை நோக்கிச்செல்லுக. உன் இரண்டு கைகளாலும் வாரைப்பிடித்துக்கொள்ளுக. உள்ள உற்சாகத்தைக் கொடுத்து வேகமாக மதத்தைத்தரும் சோமதுளிகள் உனக்கு ஸந்தோ ஷத்தை யுண்டுபண்ணின. வச்சிராயுதத்தை யுடையவனே! (ஸந்தோஷ சி த்தனுப்) பத்தினியோடு புஷ்டியை யடைந்தவனுய்க்களிப்பாயாக—(எ-று.)

வருக்கம் 3.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

83 மண்டலம் 1 அநுவாகம் 13 சூக்தம் 10.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதி காதமன்; வடமொழிச்சந்தம்: ஜகதி; தேவதை: இந்திரன்.

1. இந்திர வுன்னுதவியினனினிகாக்கப்படுமனிதனிண்டுபாய்மா
வந்துறு மில்லுடன்பசுவைமுன்படைவான்; அவனுக்கேவளமார்
செல்வந்
தந்துபரிபூரணனுயன்னனேயாக்குவையாற்றெளிவுசார்ந்து
சுந்தரமாய்ப்பலதிசையும்பாய்ந்துகடனிறைவிக்குந்தோயம்
போன்றே.

(இ-ள்) இந்திரனே! உன்னுடைய உதவிகளினால் காக்கப்படும் மனிதன் இவ்விடத்துக குதிரையோடு கூடிய கிரகத்தையும், பசுவையும் (எல்லா யஜமானர்களுக்கும்) முன்பதாகவே யடைவான். அவ்யஜமானனுக்கே மிக்க செல்வத்தையளித்து அவனைப்பரிபூரணனுயாகசுவாய், தெளிவானநீரோடு கூடிய ஆறுகள் அழகாகப் பலதிக்கிலும் பாய்ந்து சமுத்திரத்தைப் பூரணமாக்குவதுபோல—(எ-று.) தண்ணீரே விசிஷ்ட ஞான ஹேது பூதமென்பார் சாயணர். ஆனால் தெளிந்து செல்வன என்று மொழிபெயர்த்தது, மேனாட்டாசிரியர்உரையை யொட்டி யென்க.

2. ஓதாவின் கல்சுவயின் வாணெழுகு நீரெனவே யுவந்துதேவர்
மீதாவினின்று ணனிகீழ்நோக்கி, யிரிகதிர்கள் வீழ்வபோலத்
நீதாகா விச்சோமமெமக்கெனவே பிழிந்ததெனத் தேர்ந்து, சோம
வாதாரா முன்னேற்றித் தேவர்விழைவிடம், வரரி, னன்பிற்சூழ்வார்.

(இ-ள்.) ஹோதாவினது ஸோமபாத்திரத்தினிடம் விண்ணிலோடும் நீரைப்போல ஆகாயத்திற்செல்லும் தேவர்கள்மகிழ்ந்து, சூரியனுடைய பரந்த கதிர்கள் கீழ்நோக்கி வீழ்ந்து பார்ப்பதுபோல அச்சோம பாத்திரத்தைப்பார்த்து, இச்சோமம் தங்களுக்காகவே பிழியப்படுவதென்பதைத் தெரிந்து, சோமத்துக்கு ஆதாரமான அக்கலசத்தை (உத்தாவேதிக்குமுன்) கொண்டுவந்து, தேவர்கள் விரும்புமதனிடத்து அன்புடன்சூழ்ந்து நிற்பார், கன்னிகையைச் சூழ்ந்து நிற்கும் வரர்களைப்போல—(எ-று.) தேவர்கள் ஆகாயத்திற் செல்வதை வானின்மேலோடும் ஜலத்துக்கும் அவர்கள் பார்ப்பதைச்சூரியகிரணவொளி வீழ்வதற்கும் ஒப்பிட்டார். சோமவாதார மென்றது சோமத்தைத் தாங்கும்பாத்திரத்தை; தேவர் விழைவென்றதும் அதனையே. இடம் ஏழனுருபு. மாலையிட நிற்கும் கன்னிகை தனக்கு மாலையிடுவாள் என்று எப்படிஒவ்வொரு வரனும் அவளைச்சூழ்ந்து நிற்பானே அப்படியே ஒவ்வொரு தேவதையும் இந்தச் சோமம் தனக்குத்தனக்கென்று அச்சோமப் பாத்திரத்தைச் சூழ்ந்து சேவிக்கும். இந்த ரிக்குக்கே மற்றொரு பொருளுண்டு. அதுவருமாறு:— "(இந்திரனே!) விண்ணிழியும் நீர் பள்ளத்தாக்குகளில் கீழ்நோக்கி ஓடுவதுபோலத் தேவர்கள் உன்னுடைய ஸ்தோத்திரத்தச் செய்பவர்களாய் ஹோதாவினிடத்திற்குச் செல்லுவார்கள். சென்று கீழ்நோக்குற்றுப் பரந்த சூரியகிரணங்களைப் போலப்பார்க்கிறார்கள். ஸ்தோத்ரப் பிரியனுகிய வுன்னைப்புகழ்ந்துதேவர்களை மனதினினைக்குமிவனைக், கன்னிகையை வரர்கள் சூழ்ந்துகொள்ளுவதுபோலச் சூழ்ந்து சேவிக்கிறார்கள்." என்பதாம்.

மண்டலம் 1. சூக்தம் 83.

3. நெய்யோடிங்குணவிரண்டுங்கலந்தோதத்தகும் வசனஞேடிச்சோ
டாய்ப்
பெய்யோமத்துடவையிஞற்சொரியோமப்பூசகனும்பெரிதும்போரி
லெய்யாதுகின்விரதஞருலையாதேயாற்றிநின்றெய்துவான்சீர்;
மெய்யாகச் சுதைபிழியுமகற்குயர்ந்தசத்தியுமேமேவுமாதோ.

(இ-ள்.) நெய்யும் சாதமுங் கலந்து, ஓசத்தகும் சஸ்திர வசனங் களைத்தேடி இரட்டையாய் ஆவுதிசெய்யும் சுருக்கோடு கூடிய ஹோமவான் யுத்தகாலத்திலும் சத்துருக்களைச் செயித்து, உன்னுடைய கர்மங்களைத் தவ ருமற்செய்து சிறப்புப்பெறுவான். உண்மையாகவே ஸோமாபிஷவஞ்செய் யும் யஜமானனிடத்து விசேஷமான வல்லமைகள் பொருந்தி நிற்கும்— (எ-று.) இரட்டையாய் என்றது நெய்யையுஞ் சாதத்தையுஞ்சேர்த்து என்ற படி. ஓமத்துடவை, சுருக்கு. ஸோமாபிஷவம் செய்தல், ஸோமம்பிழிதல்.

4. அக்கிரஸர்முதன்மூதனெய்கலந்தவனஞ்சம்பாதித்ததற்குப்பின்னர்த்
தங்குமொளியங்கியொடுசற்கருமந்தொடங்கிமகஞ்சாதிததாராற்
பங்கமிலாப்பசுவோடுகுதிரைகளுங்கானடையும்பரந்து சார்ந்த
தங்கதனம்பணியுணவாய்வைத்திருந்தயாவை
யுமங்ஙார்தோய்ந்தாரே.

(இ-ள்.) அங்கிரஸர்கள் முதன்முதல் நெய்கலந்த வன்னத்தைச் சம்பாதித்துப்பிறகு ஒளிவீசுகின்ற அக்கினியோடு சற்கர்மத்துக்கு ஆரம் பித்து, யாகத்தைச்செய்தார்கள். (அதன் பயனைப்) பணியென்னும் அசுரன் தனது போகார்த்தம் அடைத்துவைத்திருந்த பசு குதிரைமுதலிய கால் ந டைகள் நிறைந்த செல்வத்தை யந்த வங்கிரஸர்களாகிய மனிதர்கள் அடைந் தார்கள்—(எ-று.)

5. அதர்வானுமுதன்முதலில்யாகமிழைத்தருநெறிகளமைத்தான்பின்னர்க்
கதிர்வானததங்நெறியின்விரதமதைக்காப்பாற்றுங்காந்தனென்றூ
ழெதிர்வாஞன்; அவ்வதர்வான்பசுப்பெற்றூன்; உசனுகாவியன்
சகாவாய்
வதிவாஞன்; நியமனத்துத்தோன்றமிர்தந்தனேவேண்டிமகஞ்செய்
வோமே.

(இ-ள்.) பசுக்களுக்காக அதர்வான் என்னும் ரிஷி முதன்முதல் யாகத்தைச் செய்து பாதைகளே யேற்படுத்தினுன். பின்பு ஆகாயத்தில் அப் பாதையில் விரதங்களையெல்லாம் பாதுகாக்கும் காந்தனுகிய சூரியரூபமான இந்திரன் எதிர்ப்பட்டான். அந்த அதர்வான் (பணியென்னு மசுரனபகரித்து வைத்திருந்த) பசுக்களையடைந்தான். அப்போது கவியின்து புத்திரன் உச னன் அசுரையடக்கு நிமித்தம் அவ்விந்திரனுக்குத் தோழனுனன். அசுரர் களை யடக்கத்தோன்றிய அமிர்தமாகிய அவ்விந்திரனை விரும்பி யாம்யாகஞ் செய்வோம்—(எ-று.) அதர்வான் மண். 1 சூக் 30 செய். 16ல்காண்க. உச னுகாவியனை மண். 1 சூக் 61 செய் 10ற்பார்க்க. அமிர்தமென்றது ஈண்டு இந்திரனை.

6 மகலகாரியத்துக்காத்தருப்பையினைக்கத்தரித்துமருவுமன்றுன்,
தங்கமறையோன்றுதியைவான்பாவும்வணமுரைக்கச்சொல்லும்போது,
மங்கமுறுமுபலமுமேசாறிறக்கமறையொலிபோலதிருங்காலும்,
வங்கையுரநிந்திரன்மெய்யாகவவண்வந்துமுகமலர்ந்தார்ப்பானே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

(இ-ள்.) மங்கல காரியத்துக்காகத் தர்ப்பைகளைக்கத்தரித்து வைக்கும்போதும், ஹோதாவானவன் உயர்ந்த ஸ்தோத்திரத்தை யுரக்கச்சொல்லும் போதும், ஸோமாபிஷவஞ் செய்யும்போது கல்லானது சாறிறகுவதற்கு வேதமந்திரங்கள் கோஷிப்பதுபோல, உரக்கச்சத்தமிடும்போதும், இந்திரன் பகைமைகொள்ளாது அவ்விடத்து வந்து உண்மையாகவே முகமலர்ச்சியோடு சந்தோஷத்தைக்குறிக்கும் சப்தத்தைச்செய்வான்—(எ-று.)

வருக்கம் 4.

84. மண்டலம் 1. அநுவாகம் 13. சூக்தம் 11.

20 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி கோதமன்; வடமொழிச்சந்தம்: 1-6 அநுஷ்டுப், 7-9 உஷ்ணி, 10-12 பங்தி, 13-15 காயத்திரி, 16-18 த்ருஷ்டுப், 19ப்ரஹதி, 20 ஸதோப்ரஹதி; தேவதை: இந்திரன்.

(வேறு)

1. சோம மிந்திர வுனக்கெனத் தூவைத் தெடுத்தனரா
லேம நல்வலி யேய்ந்தவ, வேதிலர்த் தெறுவோய்!
சேம மாகவந் தெய்துக வைந்திர வலி;வி
யோமந் தன்னெளி கொண்டு சூரிய னுரப்பலினே.

(இ-ள்.) இந்திரனே! உனக்காகச் சோமம் பிழிந்தெடுத்தனர். உத்தமமான வலிமைபொருந்தியவனே! சத்துருக்களையடக்குபவனே! நீ வந்து உனது ஐந்திர பலத்தைப் பூரிப்பாயாக, வியோமத்தை (ஆகாசத்தை)த்தனது ஒளியினுற் சூரியன்நிரப்புவதுபோல—(எ-று.) வயோமம், ஆகாயம்.

2. யாவராலு மிக கடக்கொணு வலியி னிந்திரனீத்
தாவு வெம்பரி யிரண்டுமே சுமந்து தந்தனவால
மேவு நலிருடி யர்த் துதி கேட்கவு, நரர்க
ளோவிலா துஞற் றுயர்மகத் துறுகவு மன்றே.

(இ-ள்.) ரிஷிகள் செய்யும் ஸ்தோத்திரங்களைக் கேட்கவும், இதரமனிதர்கள் எப்பொழுதும் (எங்கெங்கும்) செய்யும் யாகத்தினிடத்து வரவும், ஒருவராலும் அடக்கமுடியாத வலிமையையுடைய இந்திரனைக் கதியோடு கூடிய அவனுடைய குதிரைகளிரண்டும் சுமந்துகொண்டு வந்தன-(எ-று.)

3. விருதிரன்றனைக் கொல்லுவோய்! விரும்பி யேறுகதே
ருருத்தியோடு மெம்மறைகளா லார்த்தபோ தனது
குரத்தரிகளைச்; சோமக்கல் பிறங்கு நற்குரலின்
வருத்துக வுனை யுன்மனக் கவனத்தைக் கவர்ந்தே.

(இ-ள்.) விருத்திரனைக் கொல்லுபவனே! யாங்கள் எங்களது மந்திரங்களால் உனது குதிரைகளிரண்டையும் உன்தேரிற் பூட்டியபோது அத்தேரில் ஏறுவாயாக. சோமாபிஷவஞ்செய்யும் கல்லானது உரத்த சப்தத்தைச்செய்து உனது கவனத்தையிழுத்து உன்னையிங்கு கூட்டிக்கொண்டு வரட்.

மண்டலம் 1. சூக்தம் 84.

டும்—(எ-று.) அரிகள் குதிரைகள். வருத்தக வருவிக்க என்னும் பொருட்டு. விருத்திரன் என்பதற்குப் பொதுவாகச் சத்துருக்களெனபார் சாயணர்.

4. உத்தமச்சுதை மரணத்தை யுடைப்பது, மதத்தை.
மெத்த வீவதா மிதனை யிந்திர.விழைந்தார்கல்;
ஒத்த நல்வித் யாகந்தோய் சாலையி னுவந்து
சுத்த வெண்சுதைத் தாரை யுன்னிடம் வரும்தாமே.

(இ-ள்.) மகா சிறப்புப்பொருந்தியதும், மாணமில்லாமற் செய்வதும், மதத்தைத்தருவதுமான இச்சோமத்தைவிரும்பிக் குடிப்பாயாக. நல்லொழுங்குகளோடு கூடிய யாக சாலையில், வெண்மையான ஹோமதாரைகள் உன்னைநோக்கித்தாமேவருகின்றன—(எ-று.)

5. இந்திரற்கென விக்கண மருச்சனை யியற்ற;
தந்து வாய்ந்த வுக்தங்களைச் சாற்றுக; சுதையி
னிந்துவால் மத மேற்றுக; வுத்தமத் தியைந்த
நந்து பேர்வலி யினன்றனை நமற்கரித்திடவே.

(இ-ள்.) (இருத்விஜர்களே!) இந்திரனுக்காக வேண்டியிப்பொழுது பூஜை செய்யுங்கள். நூல்களிற்சொல்லப்பட்ட மந்திரங்களை அவன் பொருட்டுச் சொல்லுவீர்களாக. சோமத்துளிகளால் அவனுக்கு மதத்தை யூட்டுவீர்களாக. கீர்த்தி மிக்க சிறப்புப்பொருந்திய அப்பலவானுக்கு நமஸ்காரஞ் செய்வீர்களாக—(எ-று.) நமற்கரித்தல், நமஸ்காரஞ் செய்தல்.

வருக்கம் 5.

6. மன்னும் பிங்கல மாவினை, யிந்திர, பூட்டித்
துன்னுந் தேரவன் சிறந்தவ னுன்னினு மிலையால்;
உன் னரும்பலங் கொண்டவ னுன்னுதற் குளனோ?
பின்னு முன்பரி யொத்த நற்பரியுளோ னிலையே.

(இ-ள்.) இந்திரனே! இரண்டு பிங்கலமாக்களையும் பூட்டியுள்ள தேரோடு கூடிய வுன்னைக்காட்டிலுஞ் சிறந்த தேருடையவன் வேறொருவனுமில்லை. உனது அரியபலத்தை யொத்த பலமடைந்தவனும் மற்றொருவனில்லை. உனது குதிரைகளை யொத்த குதிரைகளோடு கூடியவனும் இன்னொருவனில்லை—(எ-று.)

(வேறு.)

7. தனியே வசுவைத் தரதா சுடனுக்,
கினிமை பெறவே, மரண மியைவோற்
குனியீ குபவ னுயிரிந் திரன்மெய்த்
துனிதீர் வலியோன் றுகடீ றிறையே.

(இ-ள்.) தரம் பொருந்திய மர்த்தியனுகிய தாசுஷனுக்கு (அவியளிப்பவனுக்கு)த்தனியாகவே பொன்னைத்தருபவனுகிய இந்திரன், பிறரால் ஜயிக்கமுடியாத பலம்பொருந்தியவனும் குற்றமற்ற ஸ்வாமியுமாம்—(எ-று.)

8. மாணத் தறுவோன் மகமில் லவனைத்

அஷ்டகம்1. அத்தியாயம் 6.

திரணத் துறுநாய்க் குடைதேப்ப் பதுபோற்
சரணத் தினினென்று சதித் திடுவான்?
அரணத் தெமபண் ணரியென் றணைவான்?

(இ-ள்.) மரணமுள்ளவனும், யாசஞ் செய்யாதவனுமாகிய அவனை அற்பமாகிய நாய்க்குடையைத் தேய்ப்பதுபோலக் காலால் எப்பொழுது தேய்ப்பான்? எமது தேங்களை இந்திரன் எப்பொழுது கேட்பான்?—(எ-று.) அஹிச் சத்ரம், நாய்க்குடை; வடமொழிப் பதத்துக்குப் பாம்புக்குடையென்றுபொருள்.

9. பல்லோர் குழவப் பருகுஞ் சுதையை
யில்லோ னெவனே யியைபிற் றருவான்
நல்லோ னவனுக் கெனவுக் கிரமா
மல்லே பெறுவான் மகவா னுடனே.

(இ.ள்.) பல்லோர் கூடி நிற்க எந்த யஜமானன் ஸோமம் பிழிந்து இந்திரனுக்காக அளிக்கிறானே அந்த யஜமானனுகாக வேண்டி இந்திரன் உக்கிரமான வலியையடைவான்—எ-று.) மகவான், இந்திரன். உனக்காக என்று வடமொழி மூலத்தில் முன்னிலை படர்க்கை மய்க்கமாகவுள்ளது. அதை உரையில் இந்திரனுக்காக வெனமாற்றியுள்ளார் சாயணர்.

(வேறு.)

10. இவ்வகைப்பரந்துநின்றவிரதமார்சுவைச்சோமத்தைச்
செவ்விதினிருந்திரற்காசெறித்தபோதுயர்வெள்ளாக்கள்
கவ்வுறுகளிப்பிறகானைக்கடையழகுறவுலாவும்;
திவ்வியவலியினன்னன்குடித்தபினவையுமாந்தி
யொவ்வுறும்பாலினுக்களுயரியாட்சிபார்த்தே.

(இ-ள்.) இம்மாதிரியாக (வெல்லா யக்ஞங்களிலும்) பரந்து நின்ற ரஸம் நிறைந்த சோமத்தை இந்திரனுக்காக யஜமானர்கள் நிறைத்தபோது வெண்மையானபசுக்கள், ஸந்தோஷத்தோடு இச்சைகளையளிப்பவனுகிய அவ்விந்திரனென்னுங் காளையோடு அழகு பெறவுலாவும். அவ்விந்திரன்ஸோமத்தைக் குடித்தபின் தாமும் குடித்துப்பால்மடியோடு கூடிய அப்பசுக்கள் இந்திரனுடைய தலைமையை நோக்கி, மதத்தையடையும்—(எ-று.) ஒவ்வுறு மதமொவ்வுறும், மதத்தையையும் என்க.

வருக்கம். 6.

11. சித்திர நிறங்களேய்ந்து சீரினன்னவன் றெழுகை
யொத்திட விழையு மாக்க ளுவப்பினிந்திரற்கு வாய்ந்த
சுத்த வெண் சோமத்தோடு தோய்த்திடுந் தத்தம் பாலை
நத்து மிந்திரன்ற னன்பு நலமுறு மவை சம்பத்தை
யொத்துரூர் தம்மே லோச்சு முயரவ ளுட்சி பார்த்தே.

மண்டலம் 1. சூக்தம் 84.

(இ-ள்.) பலவர்ணங்களோடு கூடி அவ்விந்திரனுடைய ஸ்பர்சத்தை விரும்பும் பசுக்கள் அவ்விந்திரனுக்காகப் பொருந்திய சோமத்திற் றமது பாலையும் கலந்துவிடும். அவ்விந்திரனுக்குகந்த தேனுக்கள் (பசுக்கள்) அவனுடைய ஏகாதிபத்தியத்தை நோக்கி யவனுடைய வச்சிராயுதத்தைச் சத்துருக்களின் மேலெறியும் (அதாவது இந்திரன் வச்சிராயுதத்தையெறி யும் வண்ணம் பால்கலந்த ஸோமத்தால் அவனுக்கு மதத்தையூட்டும் என்ற படி)—(எ-று.) சம்பம் வச்சிராயுதம். அவற்றின் பால்கலந்துள்ள சோமத் தைக்குடிக்கவே இந்திரனுக்கு மதம்பெருக, அவன் வச்சிராயுதத்தைப் பகை வர் மீது ஒச்சுகிறான். அதனை பசுக்களின் தொழிலாகவே யுபசரித்தார். ஒத்து ரூர், பகைவர். பசுக்கள் இந்திரன் தங்களைத் தொடவேண்டுமென்று விரும்பு வதால் 'அன்னவன் றிருகைகளைத்திட விழையுமாக்கள்' என்றார்.

12. அறிவினின்மிக்கவாக்களவன்வலிகருதித்தம்பா
லுறும்பயங்கொண்டுபூசித்துறுதிசார்பற்பலனன்பாந்,
தெறும்வலிப்பகைவர்தம்மைச்செருப்பனவற்றைப்,பூர்வஞ்
செருநர்கள்பட்டபாட்டைச்சித்தத்திற்கொணரும்வண்ணஞ்
நிறுவுற நினைக்கு மன்னுனிமிரச் சாட்சி பார்த்தே.

(இ-ள்.) நல்ல ஞானத்தோடு கூடிய அப்பசுக்கள் அவனுடைய பலத்தை யெண்ணித் தம்மிடத்திலுள்ள பயலினால் (பாலினால்) அவனைப் பூஜித்து, உறுதியைப் பெறக் கூடியவையும், சத்துருக்களை யழிப்பவையுமா கிய அவனுடைய பல விரதங்களையும் அவனுடைய ஏகாதிபத்தியத்தையெண் ணி நிலைப்பிக்கும், பழையகாலத்தில் அவனுடைய விரோதிகள் பட்ட உபத் திரவத்தை யடிக்கடி நினைப்பூட்டுமாறு—(எ-று.) பயம், பயஸ். பசுக்கள் இந்திரனுடைய விரதங்களை நிறுத்துவதற்குக் காரணம் அவனுடைய ஏகாதி பத்தியமும், அவனது பகைவர்கள் முற்காலத்தில் பட்ட அவஸ்தையை யடிக்கடி நினைப்பூட்டுவதுமாம்.

(வேறு.)

13. மேவலர்களால் வெல்லற் கரியவன்
ஓவில் நல்வலி வேந்தன் றதீசியின்
மாவினென்ற தலைமன் னெனும்பிரற்
பாவுமொன்பது தொண்ணூ றகிகொன்றான்.

(இ-ள்.) சத்துருக்களால் வெல்லமுடியாத வலிமை பொருந்திய இந்திரன் ததீசியின் குதிரைத்தலையெனும்பினால் எண்ணூற்றுப்பத்து விருத் திரக்கூட்டங்களாகிய அசுரர்களையுங் கொன்றான்—(எ-று.) இவ்விடத்துப் பின்வரும் சாட்யாயனிக்கதை கருதத்தக்கது. "அதர்வணனுக்குத் ததீசி அல் லது ததியச்சன் என்று ஒருபுத்திரனிருந்தான். அவனுக்குத் இந்திரன் ஒரு காலத்துப் பிரவர்க்கிய வித்தை, மதுவித்தை, என்று இரண்டு வித்தைகளைக் கற்றுக்கொடுத்து அவற்றைப் பிறருக்குச் சொல்லிக்கொடுத்தால் தலைவெடித் துப்போகும் என்று ஆக்ஞாபித்திருந்தான். ஆனால் அசுவினிகள் அவனிடத் தில் வந்து அவ்வித்தையைக்கேட்டார்கள். அவனுண்மையைக் கூற அசு வினிகள் அவன் தலையை வெட்டிக் குதிரைத்தலையொன்றை அவனுக்குப்

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

பொருத்தி அவ்வித்தையைக்கற்றுக் கொண்டார்கள். பிறகு அத்ததீசியைப் பார்த்த அசுரர்களுக்குக்கர்வம் அதிகமாயிற்று. என் இந்திரனுடைய ஆணைக்கு விரோதமான காரியஞ் செய்தும் அவன் சாகாமலிருந்ததைக்கண்டு அவர்கள் கர்விஷ்டர்களானார்கள். அப்பொழுது பூமியும் ஸ்வர்க்கமும் அசுரர்களால் நிரம்பிவிட்டன. அவர்களைச் சயிக்கும் ஆற்றல் இந்திரனுக்கில்லாமற் போகவே அவன் ததீசியைத்தேடிப்பூலோகத்துக்கு வந்தான். இவன் அதற்குள் ஸ்வர்க்கம்புகுந்தவிட்டான். இந்திரன் ததீசியைக்கண்டு அக்குதிரைத் தலையைக் கேட்கவும் அதனைப் பூலோகத்திற் போட்டுவிட்டதாகத் ததீசி சொல்லிவிட்டான். உடனே இந்திரன் தனது ஆட்களைக்கொண்டுதேடச்சொன்னபோது குருட்சேத்திரத்தின்பக்கத்திற் சர்யணுவதியென்னும் ஸரஸ்லொடிக்கொண்டிருந்தவிடத்தில் அக்குதிரைத்தலைகிடைத்தது. அத்தலையெலும்பினுல் 810 விருத்திரர்களையும்கொன்றான்." என்பது. 810 என்னுந் தொகைக்குச் சாயணர்காரணங்கூறுவர் அதுவருமாறு:-"ஸ்வர்க்க, அந்தரம், பூமியென மூன்று உலகங்களிலும், பூத பலிஷ்ய வர்த்தமான மென மூன்றுகாலங்களிலும் உற்சாகம் முதலிய மூன்று சக்திகளோடும், ஸத்துவ, ரஜஸ், தமஸென்னு மூன்று குணங்களோடும் கூடி, நான்குதரம் மூன்றைப் பெருக்கினுல்வரும் எண்பத் தொன்மை இந்திர. அக்கினி, யம, நிர்ருதி, வருண, வாயு, குபேர, ஈசான்ய ஆகாச, பாதாளங்களாகிய பத்துத்திக்கினுல்பெருக்க 810 ஆவதைக்கவனிக்க. இம்மாதிரி 3 லோகங்களிலும் மூன்று காலங்களிலும் மூன்று சக்திகளோடும் மூன்று குணங்களோடும், பத்துத்திக்கிலும் ஸஞ்சரிக்கும் அசுரர்களே 810 விருத்திரர்களாம்."

14. பரியின் வெந்தலை பண்டுவிரும்பியே
கிரியி னுப்பட் கிளர்ந்தவன் மூர்த்தனி
சரியணுவதி சார்ந்த தலத்தினிற்
றெரியக் கண்டனன் றேடிய விந்திரன்.

(இ-ள்.) ததீசியின் குதிரைத்தலையை விரும்பித்தேடிய விந்திரன், மலைகளுக்கு மத்தியில் சரியணுவதியென்னும் ஸரவின் பக்கத்தில் அது கிடக்கக் கண்டான்-(எ-று.) கண்டதும் எடுத்துரித்து அதன் எலும்பினுல் விருத்திரனைக்கொன்றான் எனமுடிக்கவென்பார் சாயணர். சரியணுவதி குருட்சேத்திரத்துக்கு அருகிலுள்ள ஊற்று என்று மேலே சொன்னர். குருட்சேத்திரம் டில்லிக்குப் பக்கத்திலுள்ளது. இப்போது பானிப்பட்டு என்னும் பேரோடு விளங்கும்.

14. அன்றியங்கு மதிமண்டலத் தணைந்
தொன்றி யலவி னெளித்துத்து வட்டுவி
னின்றபே ரொளிநீடிப், பரிதியிற்
றுன்று நற்கதிர், தோய்வதைக் கண்டமேல்.

(இ-ள்.) அப்பொழுது, அங்குள்ள சந்திரமண்டலத்திற் றுவட்டாவின் கதிரொளி யிரவிலொளிந்து, நிலாக்கற்றையாகப்பிரதிபலித்து நிற்பதைச் சூரியனுடைய கிரணங்கள் கண்டன—(எ-று.) துவட்டாவென்பது சூரியனுக்கு மற்றொருபெயர் ஜலமயமாயுள்ள சந்திரபிம்பத்தில் சூரியவொளி பிரதி பலிக்கிறது. இந்திரனே சூரியனென அபின்னமாகக்கொண்டு சூரிய

கிரணங்கள் கண்டதை இந்திரன்கண்டான் என்று உபசரித்தலும் ஒன்று. அதாவது அக்குதிரைத்தலையைத் தேடித்திரிந்த வன்றுதான், துவட்டாவல்லது சூரியனுடையஒளி சந்திரனுடைய பிம்பத்துக்குள் புகுந்து பிரதிபலிக்கிற விஷயத்தைச் சூரிய கிரண ரூபமாயுள்ள இந்திரன்கண்டானென்க. அதுபௌர்ணமி தினம்போலும். அதனால் காலையில் சூரியகிரணங்களின் ஒளியேங்குவதையும் சந்திரனுடைய ஒளி மழுங்குவதையுங் கண்ட கவிக்குச சூரியனதொளிதான் இரவிற் சந்திரனிற் பிரதிபலிதததுத் தோன்றுகின்றது என்ற வுண்மை மனத்திலுதித்தது போலும்.

வருக்கம் 7.

16. வீரிய கன்ம முள்ள, தேசுள, வெகுளிற் முங்கற்
கியாரெனு மரிய, வம்பு கட்டிய முகத்தி னேய்ந்த
நேரல ரூர மிதிப்ப, நெடுஞ்சுக மீவ, தேரீர்த்
தேருறு மாலையின்று பூட்டுறு மகத்தோன் வாழ்வான்.

(இ-ள்.) வீரியகர்மத்தோடு கூடியவையும், காந்தியுள்ளவையும், ஒருவராலுந் தாங்கமுடியாத கோபத்தோடு கூடியவையும், சத்துருக்களை குத்துவதற்காக முகத்தில் அம்புகட்டியுள்ளவையும், பகைவருடைய நெஞ்சிற் கால்வைப்பவையும், தமது பட்சத்தாருக்கு நிலைத்த சுகத்தைத்தருபவையுமான, தேரிழுக்குங்குதிரைகளை இன்று (இப்பொழுது அல்லது இந்தக்கர்மத்திலென்றபடி.) நகத்தடியிற் பூட்டும் யக்ஞகர்த்தா வாழ்வையடைவான்—(எ-று.) வெகுளின்யாரேனுந் தாங்கற்கு அரிய எனக்கூட்டுக. இவவிருக்கைவேறொருவகையாகவும் மொழிபெயர்க்கலாம். அது வருமாறு:

எக்கியகர்மமுள்ள,வெல்லுள,வானியெய்தா
முக்கியமறைகள்,வாயான்மொழியுறப்பெறுவ,சித்தம்
புக்கொளியளிப்ப,வின்பம்பொருத்துவ,விவற்றையெந்த
வெக்கியன்புணர்த்துவாளேவவனிவண்வாழ்வான்மற்றே.

(இ-ள்.) எந்தயாக நிர்வாஹகன், தனது யக்ஞத்தில், (உரைபெறும் மந்திரங்களால் பிரதிபாதிக்கப்படும்) கர்மங்களோடு கூடியவையும், ஒளி பொருந்தியவையும், கேட்டையடையாதவையும், வாயினலுச்சரிக்கப்படுபவையும், இதயத்தை விளக்குபவையும், சுகத்தைத்தருபவையும், ஆகியமந்திரங்களை, யக்ஞத்திற் பொருத்துவாளே அவனே உயிரோடிருப்பான் (மற்றவர்கள் மரிப்பார்கள்)—(எ-று:) ஆனி ஹானி. கேடு. ஆனியெய்தாவென்றது ஓதுவாரென்று முள்ளபடியால். காः என்ற வடமொழிபதத்திற்கு மேற்பாட்டிற் குதிரையென்று உரை கூறினவர் ஈண்டு மந்திரங்களாகிய வாக்கு விசேஷங்கள் என்றுபொருள் கூறினர்.

17. ஓடுவோன்யாவன்? துன்பமுறுபவன்யாவன்? உள்ளத்
தோடுமச்சத்திசேன்யாவன்? உடனருகுறையும்வேந்தைத்
தேடியேயறிவோன்யாவன்? சந்ததி,யிபந்,தனங்க,
ணடியதது,சனங்க,ணல்கென விழைவோன் யாரே?

(இ-ள்.) (அதுக்கிரகிக்கும் இந்திரனிடத்தில் வந்தபின் சத்துருக்களுக்குப்பயந்து) ஓடுபவன்யார்? (ஒருவருமில்லையென்றபடி) துன்பப்படு

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

வோன்யார்! மனத்திற்பயப்படுவோன் யார்? சமீபத்திலிருந்து (எங்களைக் காப்பாற்றும் ரட்சகனாக) ஒங்கும் இந்திரனைத்தேடியறிபவன் யார்? சந்ததியும், யானையும், தனமும், சரீரமும், ஜனங்களுமாகிய இவற்றை விரும்புவோன் யார்?—(எ-று.) எங்களைத் தவிர வேறொருவருமில்லையென்றும், இந்திரனே கேட்காமலிவற்றை யளிக்கிறனென்றும் கூட்டியுரைக்கவென் பார் சாயணர்.

18. நெய்யவிசொரிந்தாவனிமிசெரிவளர்த்துப்போற்றிப்
பெய்துடப்பெடுத்துக்காலம்பிறழுறுதேத்துகின்றீரன்?
அப்பெனத்தேவர்பொன்னையாருக்கென்றெடுத்துசசேர்வர்?
செய்யுநன்மகதனேதான்றேவற்குகந்தவன்றெரிந்தான்யாசே?

(இ-ள்.) சருக்கிஞல் நெய்யாகிய அவியையூற்றி அக்கினி வளர்த்துக் காலந்தோறும் தவறுமல் ஸ்தோத்திரஞ் செய்பவன் யார்? தேவர்கள் எந்த யஜமானனுக்காக (கேட்கப்பெறும்சிறந்த) திரவியத்தை விரைவாகக்கொண்டுவருவார்கள்? யக்ஞத்தைப்பெற்றவனும் தேவனுக்குகந்தவனுமான எந்த யஜமானன் (இந்திரனை) யறிந்தவனுவான் (கண்கூடாகத்தெரிந்தவனும்)?—(எ-று.) ஐயனல் விரைவுக்குறிப்பு: அய் போலி.

(வேறு.)

19. ஐய வலியி னுத்தமனே! யழகார் தேவ மர்த்தியனைச்
செய்யவருளிற்றுதிப்பவனையாசீர்வதித்துச்சேர்குவையாற்;
பெய்யுமகவானுன்னெழியப்பிறங்குநன்மைபுரிபவரை
யெய்யேன்;இந்திராவுனக்கெனிழிலசார்வசனம்புகலுவனே.

(இ-ள்.) உத்தமபலவானே! தேவனே! உன்னைத்துதிக்கும் மர்த்தியனுகிய யஜமானனை ஆசீர்வதிப்பாய். மகவானே! (தனவானுன விந்திரனே!) உன்னைக்காட்டிலும் நன்மைசெய்பவர்களை யானறியேன். இந்திரனே உன் பொருட்டு என் அழகிய ஸ்துதிவசனங்களைக் கூறுவேன்—(எ-று.)

(வேறு.)

20. உனதருஞ்செல்வக்கொடைகளு, மூறுதியுஞற்றிடுமீசனே,
யென்றும்
பினருனதருமைசார்துணைதாமும்பேர்த்திடல்,மானவர்க்
கருள்வோய்!
நினதருமறையைநேடுறுமெமக்குநீள்பொருள்யாவையுந்
தேடித்
துனவிடாயெல்லாவிடத்துநின்றெடுத்துத்தோய்ந்தெமதிடத்
துரைன்குறவே.

(இ-ள்.) மனிதர்களுக்கு இதஞ்செய்பவனே! எங்களுக்கு உறுதியைத் தருஞ் செல்வத்தைத்தருமீசனே! நீ தரும் அரியசெல்வங்களும், உனது அருமை பொருந்திய உதவிகளும் எம்மையடையாதபடி மாற்றிவிட்டதிருப்பாயாக. (எம்மை யடையச் செய்வாயாக.) எல்லாவிடத்திலிருந்தும் பொருள்களையெடுத்து எம்மிடத்து நன்றுகப்பொருந்தும்படி சேர்ப்பாயாக —(எ-று.)

மண்டலம் 1 சூக்தம். 85

வருக்கம் 8.

85. மண்டலம் 1. அநுவாகம் 14. சூக்தம் 1.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி கோதமன்; வடமொழிச்சந்தம்: ஜகதி; 5, 12 த்ருஷ்டுப்; தேவதை: மருத்துக்கள்.

(வேறு.)

1. உருத்திரன்றன்புத்திரர்களுபர்வேகஞ்சிறந்தோர்க
ளுறுநிசான்று
திரத்தமையுஞ் செயல்புரிவோர் மாருதர்கள்வழியதனிற்
றெரிவைமார்போற்
றரத்தலங்காரம்புனைவோருரோதசியையோக்கமொடுந்
தளிர்க்கவிட்டார்;
உரத்தமையவ்வீரர்மலைபொடிப்பவர்கள்யாகமதிலோகை
கொள்வார்.

(இ-ள்.) உருத்திரனுடைய புத்திரர்களும், வேகமானகதியோடு கூடியவர்களும், உத்கிருஷ்டமான செய்கைகளைப்புரிபவர்களும், வழியிற் செல்லும்போது மாதர்களைப்போலத் தமது அங்கங்களையலங்கரித்துக்கொள்பவர்களுமான மருத்துக்கள் உரோதஸியை (பூமிவானங்களை) ச்செழித்தோங்கும்படி செய்தனர். பலம் பொருந்திய அவயீர்ச்கள், மலைகளையுடைத்துப் பொடிசெய்பவர்கள், யக்ஞத்தினிடத்து (ஸோமங்குடித்து) மதத்தையடைவார்கள்—(எ-று.) மருத்துக்கள் ருத்திரன் அல்லது மகர் தேவனுக்கும் பிருச்நியாகியதாய்க்கும் புத்திரர்களாம். ஜாக ஜ்ஞ்யபாவம் உபசாரார்த்தம் என்க. ஸ்த என்பதற்கு வேகமாய்ச் செல்லக்கூடியவர் என்றுர் சாயணர். அந்திய காலத்திலெல்லாரையுமழவைப்பவன் ருத்திரன்.

2. அபிடேகம்பெற்றவர்கள்பெருமகிமைதனையடைந்தேயழகுதோன்ற
நபமோங்குந்தஞ்சதனநாட்டினராலுருத்திரன்றனலத்தமைந்தர்;
சுகமாகவருச்சிப்பாருச்சிக்கத்தகுவோனை;தோய்ந்தவீர
நிபமார்குமைந்நிரியம்பிருசினிசேயவரூட்டிங்கியேற்றுரே.

(இ.ள்.) ருத்திர புத்திரர்களாகிய அவர்கள் தேவர்களாலபிஷேகஞ் செய்யப்பெற்று மிக்கமகிமையையடைந்து உத்கிருஷ்டமாக ஆகாயத்தினிடத்துத்தமது கிரகத்தை நாட்டினர்கள். அருச்சிக்கத்தக்கவனுகிய இந்திரனை யருச்சிப்பார்கள். வீரத்துக்கு உவமையாரும் இந்திரவலிமையை அவ்விந்திரனுக்குப் பிருச்நியின் மக்களாகிய மருத்துக்கள் ஊட்டித் தனத்தையடைந்து தாங்கினார்கள்—(எ று.) பிருச்நிநாகாரூபமாயுள்ள பூமி. நபம், ஆகாயம். நிபம், ஒப்பு. சதனம், வீடு. இந்திரியம், இந்திரசம்பந்தமானது, வீரமென்றபடி. அருச்சிக்கத்தகுவோன் இந்திரன். மருத்துக்கள் 'ப்ரஹ்ரபகவோஜஸ்வி வீரயஸ்வ' முதலிய வாக்கியங்களிலுலிந்திரனுக்குப் பலத்தையூட்டுகிறார்கள்.

3. கோவினதுபுத்திரர்களணிகளிலுலவயவங்கள் கூரப்பூட்டி
மேவுமகாந்நியினவளர்த்திடும்போதிங்கலங்காரம்விளங்கவேற்றே

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

யோவறுமெய்யொளிபெருகத்தரிப்பார்களான்ஞர்களுடையவாட்டித்
தாவுறுதன்நெறியெல்லாம்வளந்தருநெய்யொழுகும்வண்ஞ்சமைப்
பாரன்றே.

(இ-ள்.) கோ (பசு) ரூபமாயுள்ள பூமியினது புத்திரர்களாகிய மருத்துக்கள் ஆபரணங்களாற்றமது அவயவங்கள் நிறையும்படி பூட்டி வெளுப்பான காந்தியை வளர்க்கும்போது ஒளிவீசும் அலங்காரங்களே யேற்றுத் தமது சரீரத்தின் தேசஸ் விருத்தியாகும்படி அவற்றைத்தரிப்பார்கள். பின்னும் அவர்களேபகைவர்தோற்றுஓடும்படி ஹிம்விந்துத்தாங்கள்போகும்வழியிலெல்லாம் வளம்பொருந்திய நெய்யானது (சாரம்பொதிந்த மழை நீரானது) விழும் வண்ணஞ்செய்வார்கள்—(எ-று.) அவர்போனவழியில் மழை பெய்யும் என்றபடி. நெய்யென்றது சாரம்பொதிந்த மழை நீரை.

4. நன்மகத்தீர்!படையொளிர்வீர்!மாருதர்காள்!மஞ்ஞைவேகநடையிற்
சான்ற
பொன்பெறுபுள்ளியின்மானையுந்தேரிலழகுபெறப்பூட்டுமக்காற்
கொன்பெறுவிண்ணிழிமழையைப்பெய்விக்குநீங்கணிலகுலேயா
தேயுந்
குன்றெனினுமுமதுரத்தானிலேபோற்துகடிக்கமுறக்குயிற்றுவீரே.

(இ-ள்.) நல்லயக்ஞத்தோடு கூடியவர்களே! ஆயுதாலங்கிருதர்களே! மருத்துக்களே! மஞ்ஞைவேகமாக நடக்கும் திராணியுள்ளவையும் அழகிய வெண்புள்ளியோடு கூடியவையுமான மான்களை உமது தேரிலழகாகப் பூட்டும்போது வானிலிருந்து விழும் மழைத்துளிகளை விழும்படி செய்யும் நீங்கள் நிலைகுலையாதுள்ள பொருப்பாயினும் அதனையசைத்து நடுங்குறச் செய்வீர்கள்—(எ-று.) (வேறு.)

5. ஞள்ளரு மூதக, மன்ன மியைக்க, வானிழியத் தூண்டிப்
புள்ளி மான் றம்மை யுந்தேர்ப் பூட்டவு மருதீர் செம்மை
யுள்ளிய மின்னிற் ரூரை யெல்லென வொழுகித்தோலை
யெள்ள நற் பூமி முற்று மெழில்பெற நனைக்குமன்றே.

(இ-ள்.) மருத்துக்களே! உணவுப்பொருள்களைத் தரும்வண்ணம் மழை நீரைவானி (மேகத்தி)னின்று மிழியுமாறு தூண்டியுமது புள்ளியோடு கூடியமான்களை யுமது தேரிற் பூட்டியவுடனே சிவந்த மின்னினின்றும் மழைத்தாரையானது விரைவாக வீழ்ந்து தோலை நனைப்பதுபோலப் பூமியை நனைத்து விடுகின்றது—(எ-று.)

(வேறு)

6. மாருதர்காளும்வேகவெம்பரிகள்விரைகதியின்மருவியும்மை
யேருறவேயிவட்டருக; தனக்கரத்திற்சிறப்புறீவேயையக;வேதி
சாருறுமெம்மிலம்பெரிதாம்;அதிற்சாருஞ்சுசையதனிற்சற்றே
தங்கல்;
நேருமதுரச்சோம வன்னமதை மாந்திமதநேர்கவின்றே.

(இ-ள்.) மருத்துக்களே! உமது வேகம் பொருந்திய குதிரைகள் (அதாவது ஈண்டு மான்கள்) வேகமான நடையோடுபொருந்தி யும்மையிங்கே கொண்டுவருக. நீங்களும் எங்களுக்குத்தாரவென்றுகைகளிற்பொருள்

களேயேந்திக்கொண்டு வருக. வேதிகை சார்ந்த எமது யக்ஞகிரஹம் விஸ்தாரமாகவமைக்கப்பட்டுள்ளது. அதனிடத்தேயுள்ள தருப்பையிலமர்வீர்களாக. யாங்கள் தரும் மதுரமான ஸோமலட்சணவன்னத்தையுண்டு மதங்கொள்வீர்களாக—(எ-று.)

வருக்கம் 9.

7. சுயபலத்தால்விருத்தியடைந்தவர்களதுகமநிற்றேய்ந்திடம்பாடியலுறத்தஞ்சதனமதையமைத்தார்கள்; விண்டுவுமேமத்தமேய்ந்துபயிலுவதாயிச்சையளிப்பதைக்காத்திங்கோம்புங்காற் பட்சிபோலவயலின்விரைந்தன்புடனேதருப்பையினிலழகாகவமர்கமாதோ.

(இ-ள்.) தமது ஸ்வபலத்திஞ்லோங்கினவர்களாய் மருத்துக்கள் ஸ்வர்க்கத்திற் சென்று விசாலமான வீட்டைத்தமக்கெனச்செய்து கொண்டார்கள். விஷ்ணு மதத்தோடு கூடியதும் இச்சையையளிப்புதுமான யக்ஞத்தை அல்லது ஸோமத்தை ரக்ஷிக்கும்போது அம்மருத்துக்கள் பட்சிகளேப்போலப்பக்கத்தில் விரைவாகவந்து பிரியத்தோடு தருப்பையின் மேலமரட்டும்—(எ-று.) மேஞட்டாசிரியர் ரட்சித்தபோது அமர்ந்தார்கள் என்பார். ஆனல் சாயணர் உப்விசந்து என்ற உரை கூறியுள்ளார்.

8. போர்புரியக்களிக்கின்றருரரென்விரைருபவர்போற்றுகீர்த்தியேர்விழையும்புருடரென்யுத்தமநிற்பொருதனரால்; எப்படைப்புங்கூர்நடுக்கின்மருதரின்முன்விதிர்விதிர்க்கும்; அந்நாருங்,கோனேயென்னப்,
பார்வயிற்றமுக்கிரத்தோற்றத்தெவரும்பார்க்கவொணுப்படிவமுமூர்

(இ-ள்.) சௌரியத்தோடு கூடிய யுத்தவீரர்களேப்போல விரைவாகச் செல்லும் மருத்துக்கள் கீர்த்தியை விரும்பும் புருஷர்களேப்போல (விருத்திராதியரோடு செய்த யுத்தத்தில்) சண்டையிட்டனர். எல்லாச் சிருஷ்டிவர்க்கங்களும் அம்மருத்துக்களின் வரவைக்கண்டு நடுங்கும். அந்த நரர்கள் (நேதாக்கள் அல்லது சேனுபதிகள்) தமது உக்கிரமான தோற்றத்தினுல், ராஜாவைப்போல ஒருவராலும் ஏறெடுத்துப்பார்க்க முடியாதபடிவத்தோ (உருவத்தோடு) டிருக்கிறார்கள்—(எ-று.)

9. செய்திறமைத்துவட்டாவும்பொன்மயத்தினுயிரவெண்செறிந்தகூர்கனெய்தியவச்சிரமதனேவேலைப்பாடுறவிழைத்தவிறையின், வேந்தன்மொய்திறகன்மம்புரிவானதையேற்றுவிருத்திரனேமுடித்தான்;
ஆன்ஞ
னெய்தினடைத்திருந்தமுகிற்சலமுழுதும்பெய்வித்தாஞடியின்மன்னே.

(இ-ள்.) காரியஞ் செய்வதிற் சிறந்த துவஷ்டா, பொன்மயமானதும், ஆயிரமென்னும் கூர்கள் பொருந்தியதுமான வச்சிராயுதத்தை வேலைப்பாடோடி கூடச்செய்த வுடனே, இந்திரன் வலிமை மிகுந்த போர்க்கன்மத்தைச்செய்வதற்காக அதனைக் கையிலேற்று விருத்திரனைக் கொன்ருன்; அவ்விருத்திரனடைத்துவைத்திருந்த மேகநீர்முழுவதையும் விரைவிற்கீழ் நோக்கியோடும்படி செய்தான்—(எ-று.) ஆயிரவெண் செறிந்த கூர்கள் என்றது. ஆயிரக்கணக்கான கூர்மைகள் என்றபடி. ஏவந்தன் இந்நூலில் எப்போதும் இந்திரனுக்கே மறுபெயராக வரும்.

அஷ்டகம்1. அத்தியாயம் 6.

10. அம்மருதரொருகூபந்தனேவலியான்மேற்றாக்கியதஞ்ஞட்டத்தை
யம்மதடுக்கும்மலையையும்பிளந்தார்;நற்கொடையோரடுத்தநூறு
செம்முகரம்பியாழதனேவாசித்தார்;சோமமதைச்சிறந்தமாந்தி
யிம்மெனவேதுதிப்பவருக்கீகவெனவெகுதனங்களிழைத்தாரன்றே.

(இ-ள்.) அந்த மருத்துக்கள் ஒரு கூபத்தைத்தமது வலிமையினால் மேற்றாக்கி அதனுட்டத்தைத்தடுத்தெதிர்ப்படும் மலையையும் பிளந்தார்கள்; நல்லதானத்தோடு கூடிய அம்மருத்துக்கள் நூறு தந்தி கொண்ட வீணையையெடுத்து வாசித்தார்கள். ஸோமத்தைக் குடித்துக்களிகொண்டு ஸ்தோதாக்களுக்காக அநேக செல்வங்களைச் சிருஷ்டித்தார்கள்-(எ-று.) ஈண்டு இக்கதை சொல்லப்படுகிறது. ஒரு நாள் இம்மறைகண்ட ரிஷியாகிய கோதமன் நீர் வேட்கையினால் வருந்தி மருத்துக்களையாசித்தான். அப்பொழுது அம்மருத்துக்கள் தூரத்திலிருந்த ஒரு கூபத்தை மேற்றாக்கி அதன் தண்ணீரை ஓடும்படி செய்து கோதமனது ஆச்ரமத்துக்குப் பக்கத்தில் ஒரு தொட்டிகட்டி அத்தொட்டியில் விழுவித்து அவ்விருடியைத் திருப்திப்பித்தினர்களென்பது.

11. பற்பலவாமொளிவாய்ந்தோரக்கூபந்தனையிருடிபக்கல்சாய்வாய்
முறபடவேகொண்டூர்த்துக்கண்டதொருதொட்டியினின்முற்றப்
பூரித்
தெற்படுமிவ்வகைத்துனையிற்கோதமனும்விப்பிரன்கணேய்ந்து
சீர்சால்
சொற்படவாயுளையோம்புந்தண்ணீராலவனுளைதோய்வித்தாரே.

(இ-ள்.) சித்திரம்போல் நாளுவிதமான ஒளியோடு கூடிய மருத்துக்கள் அக் கூபத்தை அவ்விருடியிருக்கும் திசையை நோக்கி வக்கிரமாகக் கொண்டுவந்து அங்கே கட்டிய தொட்டியிலூற்றி நிறைத்து, இவ்வகையுதவியோடும் கோதமனிடத்து வந்து, ஆயுள் விருத்தியைச் செய்யும் அத்தண்ணீரால் அவனது ஆசையை நிறைவேற்றினர்கள்—(எ-று.)

(வேறு.)

12. மருதர்காள்! உம் முத்தாது மருவிய புகலிடங்கள்,
விரதிகட் களிப்பா னேன்ற வீடுகள், தாசுடற்குத்
தருபவை தமை யெமக்குச் சார்த்துக; அருத்தி யீவீர்!
பெருவலிச் சுதரி னண்மை பெருகுறு தனமு மீகல்.

(இ-ள்.) மருத்துக்களே! மூன்றுதாதுக்களிலும் (ஸ்வர்க்கம், அந்தரம் பூமியென்னும் மூன்று இடங்களிலும் என்றபடி) பொருந்திய உமது புகலிடங்களும், உம்மை ஸ்தோத்திரஞ் செய்யும் வீரதிகளுக்குத் தருவதற்காக ஸம்பாதிக்கப்பெற்ற வீடுகளும், தாசுவானகிய யக்ஞகர்த்தாவுக்குக் கொடுப்பவைகளுமானவற்றை யெமக்குத்தருவீர்களாக. இசசையை யளிப்பவர்களே! வீரியம்பொருந்திய புத்திரர்களோடு கூடிய செல்வத்தையும் தருவீர்களாக—(எ-று.) முத்தாது வென்றது பூமிமுதலிய மூன்றிடங்களை யென்பார் சாயணர். மூன்றுமிடங்கென்பார் மேனுட்டாசிரியர்.

வருக்கம். 10

மண்டலம் 1. சூக்தம் 86.

86. மண்டலம். 1. அநுவாகம் 14. சூக்தம் 2.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கெ. கோதமன்; வடமொழிச் சந்தம்: காயத்ரி; தேவதை: மருத்துக்கள்.

(வேறு.)

1. பேரொளிவான் பிறங்கு மருத்தீரே,
யாரகத்தடைந் தின்புடன் சோமத்தைச்
சீரின் மாந்துவீ ரன்னவ னுத்தம
வேரிற் காவல ரெய்தி நிலைப்பனே.

(இ-ள்.) சிறந்த ஒளியோடும் அந்தரத்தில் விளங்கும் மருத்துக்களே! எந்த யஜமானனது கிரஹத்தில் வந்து ஸ்ந்தோஷத்தோடு ஸோமபானஞ் செய்வீர்களோ வந்த யஜமானன் உத்தமமான காப்பாளர்களோடு கூடியவனுவான்—(எ-று.)

2. மகத்தை யோம்பு மருதீர் துதியுடன்
மகத்த மரு மறையவன் போற்றையும்,
அகத்துள வவி யாற்றலர் கூற்றையு,
மிகத்து நுஞ்செவி யேற்பீர் கடிதினே.

(இ-ள்.) மகத்தை (யாகத்தை)த்தாங்குகின்ற மருத்துக்களே! ஸ்தோத்திரங்களோடு யாகத்திலவியைத்தரும் மேதாவியாகிய விப்பிரனது வணக்கமொழிகளையும், அவித்ராது ஸ்தோத்திரம் மாத்திரஞ்செய்வோனது வார்த்தைகளையும் (துதிமொழிகளையும்) விரைவிற் கேட்பீர்களாக—(எ-று)

3. இன்னும் யாரகத் தெய்து மவியினர்,
துன்னும் விப்பிரக் கூட்டந் துதைவுற
மன்னுவிப்ப ரம்மானவ ரெநிரை
தன்னு கோட்டத்துத் தோய்பவ் ரவனே.

(இ-ள்.) இன்னும், எந்த யஜமானனுடைய வீட்டில் அவியுணவோடு கூடிய ரித்விஜர்கள் விப்பிரர்களாகிய மருத்துக்கூட்டம் நெருங்கிவரும்படி செய்வார்களோ, அந்த யஜமானன் பசுக் கூட்ட நிறைந்த கொட்டிலுக்குள் செல்லும் பெருமை பெற்றவனுவான். (அதாவது) நிறையப் பசுக்களையடைவான்—(எ-று.) கோஷ்டம், பசுக்கொட்டில்.

4. எக்கியத் தினத் தெய்துந் தருப்பையின்
மிக்க வீர ரவர்கள் விழைமகத்
துக்த மனனர் களிக்க வுறை பெருந்;
தக்க சோமத்தின் சாறுமபிழி வுறும.

(இ-ள்.) யக்ஞதினத்தன்று தருப்பையிற் சிறந்த வீரர்களாகிய மருத்துக்கள் விரும்புகின்ற யாகத்தில் உக்தம் (ஸ்தோத்திரங்கள்) அவர்கள் மதத்தைப் பெறுமாறு சொல்லப்பெறும். சோமச்சுதையும் பிழியப்பெறும்—(எ-று.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

5. ஒன்னலர்க ளெல்லாரையு மோட்டுவோர்
மன்னு மிம்மகன் மந்திரங் கேட்டிடல்;
துன்னு மம்மறை தூண்டு மகத்தனு
மன்ன மன்னு ளளிக்க வடைகவே.

(இ-ள்.) சத்துருக்களெல்லாரையும் துரத்துவோர்களாகிய மருத்துக்கள் இந்த யாககர்த்தாவின் மந்திரத்துக்குச் செவிகொடுக்கட்டும். அந்த மந்திரத்தைக் கூறும் யாககர்த்தாவும், அம்மருத்துக்கள் அன்னப்பொருள்களைத்தர, அவற்றை புசிக்கட்டும்—(எ-று.) ஸுஷ்ரம் என்பதற்கு மகத்தனெனப் பொருள்கொள்ளாது சூரியனெனப்பொருள்கொண்டு, இஷ: என்பதற்கும் பலமெனவெடுத்து மேனட்டாசிரியர். 'சூரியனெட்டும் பலமவனுக்குக் உண்டாகட்டும்.' என மொழிபெயர்ப்பர்.

வருக்கம் 11.

6. மருதர்காள்; முன்வயங்கிய பற்பல
சரிதுக்களிற் சர்வமுங் கண்ட வீம்
உரமுறுந் துணையுற் றவி யீதுவேம்;
தரமுற வின் றளிப்பதுந் தாங்கலே.

(இ-ள்.) மருத்துக்களே! முன்பு விளங்கிய பல கூதிர் காலங்களிலெல்லாம் சர்வக்ஞர்களான உமது வலிமை பொருந்திய உதவிகளையடைந்து உமக்கு அவியளித்திருக்கிறோம்,) அதனால் இன்று தரும் அவியையும் ஏற்பீகளாக—(எ-று.) 'தரமுறவின்றளிப்பதுந்தாங்கலே.' என்றது வடமொழி மூலத்திலில்லை. அங்ஙயத்தாற்கொண்டது. சரிது கூதிர்காலம் பெரும் பாழுதாறனுள் ஒன்று. கூதிர்காலமென்று இலக்கணையால் வருஷத்தைச் சுட்டிக்காட்டினர்.

7. பூசி யோத்தம பூதர் மருதர்காள்!
ஆசையத்தோடெவன் றருமன்னத்தை
யேச்சற வெடுத் தேற்றுப் பிறங்குவீர்
வாய்சச ந்நினி மர்த்திய னன்னனே!

(இ-ள்.) நன்றாக வணங்கற்குரியவர்களாகிய மருத்துக்களே! எவனுடைய அவியன்னத்தை நீங்கள் ஏற்பீர்களோ அவன சோபனத்தோடு கூடிய மனிதனும்—(எ-று.) மர்த்தியன், மரணதர்மம் வாய்ந்தவன், மனிதன் என்றபடி.

8. உண்மை நல்வழி யுற்ற நரர்களே;
திண்மை யாகத் துதித்து வியர்க்குமெய்
யொண்மையோ டுமையுற்று விரும்புவோர்
கெண்மை சார விருத்துக வீச்சையே.

(இ-ள்.) உண்மையான நல்வலிமையோடு கூடிய நார்களே! (நேதாக்களாகிய மருத்துக்களே! உம்மை நன்றாகத்துதித்து அத்துதியின் சிரமத்தினால் வியர்க்கின்ற சரீரத்தோடு உம்மையடைந்து விரும்பும் ஸ்தோதாவுக்கு அவனுடைய ஆசைகள் எளிதாகக் கிடைக்கும்படி செய்வீர்களாக—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 87.

வித என்று வடமொழி மூலத்திலிருப்பினும் லம்பயத, ப்ரயச்சதவெனப் பொருள் கூறுவார் சாயணர்.

9. சத்தியப் பலஞ் சார்ந்தவர்காளும
துத்தமப் புகழோங்கு மகிமையைப்
பெறவெளிருக; மின்னிற் பிறங்கிடு
மற்றதனு லகக்கரை வாட்டவே.

(இ-ள்.) உண்மையான (பிறராற்கடக்கமுடியாத) பலத்தோடு கூடிய வர்களே (மருத்துக்களே!) உம்முடைய உத்தமமான மாகாத்மியத்தோடு பிரகாசிப்பீர்களாக. மின்னலைப்போற் பிரகாசிக்கும் அம்மகிமையினுல் (எங்களுக்குத்துன்பத்தைத்தரும்) ராக்ஷஸர்களே வாட்டுவீர்களாக——(எ-று.)

10. குகை யிருளைக் குலைத்து மடித்திட;
வகையின் யாவையு முண்டு மகிழ்ந்திடுந்
தகையில் வெய்யனைச் சாடி விரட்டுக
தகையிற் சார்த்துக யாம் விழைசோதியே.

(இ-ள்.) (மருத்துக்களே!) குகையில் வசிக்கும் இருட்டினை யெங்கள் கண்ணெதிரிற்படாதபடி நாசப்படுத்துவீர்களாக. எல்லாப் பொருள்களையு முண்டுமகிழும் ராக்ஷஸர்களை யடித்தோட்டுவீர்களாக. யாங்கள் விரும்பு மொளியைத் தருவீர்களாக—(எ-று) சரீராந்தத்தில் எமது மனக்குகையிற் புகுமஞ்ஞானமாகிய விருட்டையோட்டிப், புருஷார்த்தத்தையாங்கள் அடையாதபடி யுண்டொழிக்கும் காமக்குரோதாதி ராக்ஷஸர்களைத் துரத்திப் பரத்துவஸாட்சாத்காரமாகிய ஜோதிஸைத்தருவீர்களாகவென்பது தொனிக்கும் பொருளாம்.

வருக்கம் 12.

87. மண்டலம் 1. அநுவாகம் 14. சூக்தம் 3.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி கோதமன்; வடமொழிச் சந்தம்: ஜகதி; தேவதை: மருத்துக்கள்.

1. வயிரிகளைமடிப்பவர்கள்,வலிமிகுந்தோர்,பல்லாரவாரவெற்றித்
தயிரியசாலிகள்,சிறந்தோர்,போற்றுறுவோர்,கணமுற்றோர்,சாரும்
யாகத்
தியலுறும்பூஜோத்தமராகரோத்தமர்கடம்முடலினியலுங்கோலம்
பயிலணியினபந்தோன்றுஞ்சூரியன்றன்சிலகதிரிற்பரந்தார்மன்னே.

((இ-ள்.) சத்துருக்களைக்கொல்லுவோரும், மிக்கவலிமையோடு கூடியவரும், பலஜயகோஷங்களைச் செய்யும் தயிரியசாலிகளும், ஸ்வோத்கிருஷ்டரும், மூன்றும் ஸவனத்தில் ஸ்துதிபெறுபவரும்,ரோத்தமர்களும்(உத்தமநேதாக்களும்,) ஆகிய மருத்துக்கள் தங்களது சரீரங்களிற்கட்டப்பெற்ற அழகு பொருந்திய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாய் ஆகாயத்தினிடத்தே சூரியனுடைய சில கிரணங்கள் காணப்படுவதுபோலக் காணப்படுகிறார்கள்—(எ-று. மருத்துக்கள் முதலிற் சிலரே ஒன்றிரண்டு சூரிய கிரணங்களைப்போலக்காணப்படுகிறார்கள் என்று பொருள் விரிப்பர் மோட் சமூலர் (Max muller).

DEPARTMENT OF MANUSCRIPTS
APR 1910

அதிகாரம்1. அத்தியாயம் 6.

2. மாருதர்காணபமதனிற்குருவியிக்கும்வகைமுகிலவயானும்போல்
வேருறவேவிரைந்திடுக்கும்காலஞ்சிலவானுமமெழில்வண்டுதிரிற்
முரைகளாயுதிர்த்திவெய்யாத்திலுறிமைப்பேசற்றுஞ்சால்புள்
ளோலுக்
காருமழைநீர்தனைத்தேறலெனத்தெளிக்கதையமைப்பீரன்றே.

(இ ள்.) மருத்துக்களே! ஆகாயத்து மேகங்கள் தாங்கொண்ட நீரைக் கொட்டும் வண்ணம், பட்சிகளைப்போல விரைவாக அவற்றின்கண் விரைந்தடுக்கும்போது சிலமேகங்கள். உமது தேரின்மேல் மழைதாரைகளைப் பெய்யும். அதனால் உம்மை ஸ்தோத்திரஞ் செய்யும் யஜமானனுக்கு (ஸாரபுஷ்டியுள்ள) மழை நீர் மதுவைப்போல ஸ்வச்சமானத்தைத் தருவீர்கள்—(ஏ-று.) கருவுயிர்த்தல் ஈண்டுதாங்கொண்ட நீரைக்கொட்டுதலைக குறித்து நின்றது. வடமொழியிலுள்ளக்ருதம் என்னும் சப்தத்துக்கு விருஷ்டியுதகம் அல்லது மழை நீரென்பார் சாயணர். ஏன்? அந்நீர் நெய்யைப்போல ஸாரபுஷ்டியோடு கூடியதன் நிமித்தமென்க. யானம், பறவை. வான், மேகம்.

3. நன்மைசெய மாருதர்கடந்தேரில்மான்பரியைநலக்கப்பூட்டித்
நின்மையமலியசையக்கடவும்போதவனி,பதிதைதந்தமாதின்,
வன்மையறத்துள்ளுறுமால்; விளையாட்டினெழுமவர்வான்கூர்
கையிற்
கன்னெங்குஞ்செய்லாளர்தம்மாற்றலினைக்காட்டிக்களிகொள்
வாரே.

(இ-ள்.) மருத்துக்கள் (மழைதருவதாகிய) சுபகாரியத்துக்காகத் தமது தேரில் மானுகிய குதிரையைப்பூட்டித், நீமையானதுநீங்கும் வண்ணம் மலைகளெங்கும் விதம்விதமாகத் தமது தேரை யோட்டிக்கொண்டு போகும்போது பூமியானது, கனவேஷ யிழந்தவள் (அரசனுடைய உபத்திரவம் முதலியவற்றிற்குப்) பயப்படுவதுபோலப் பலமற்று நடுக்கங்கொள்ளும். கிரீடதாரிகளும் சலனஸ்வபாவமுள்ளவர்களும், ஆயுதத்தோடு விளையாடுபவர்களும், மலை நடுங்கும்படியான செய்கையோடுகூடியவர்களும், ஆன மருத்துக்கள் தமது வல்லமையைப் பிரகடனஞ் செய்து ஸ்தோஷிப்பார்கள்—(எ-று.) வான்ஈண்டு பொதுவாத ஆயுதத்தைக்குறித்தது. கல், மலை.

4. சயசலனமுள்ளவர்கள்,வெண்புள்ளிமான்பரியோர்,தோய்ந்த
வன்மை
ந்யமுளவர்,கட்டிளமைவரயந்தவர்கள்,சத்தியர்கணுறைஞ்செல்வ
ம்யமளிப்போர்,நிந்தையிலார்,மழையியைப்போரின்கூட்டமெங்கள்
யாவும்
வயமாக்கு மீசானர்யாம்புரிய் மறைக்கருமமநித்துக் காக்க.

(இ-ள்.) பிறராற்றாண்டப்படாமல் தாமே செலிப்பவர்களும், வெண்மையான புள்ளிகளோடு கூடிய மானைக் குதிரையாக வுடையவர்களும், அஸாதாரணமான பலத்தோடு கூடியவர்களும், எப்பொழுதும் இளமை வாய்ந்தவர்களும், சத்தியர்களும், விரும்பும் பலதன்தையும தருபவர்களும், பழிப்பில்லாதவர்களும், மழையைக் கூட்டுவிப்பவர்களுமான மருத்துக்கூட்

மண்டலம் 1 சூக்தம் 87.

டத்தார், எல்லாப்புவனங்களுக்கும் ஈசானர்கள், யாங்கள் செய்யும் மந்திரங்களோடு கூடிய கன்மத்தைக்காக்கட்டும்-(எ-று.) மகி, பூமி. கூட்டத்தாராகிய ஈசானரென்க.

5. எம்பிதாவழிமுன்னேருபதேசத்துறுமொழியையியம்புகின்றேமட்;
இம்பரெந்நாத்துதிக்குஞ்சோமங்கண்;டெக்கியப்பேரெய்நதாரன்னர்,
நம்பிரானிந்திரனுமகிழுதலோர்தமைவதைக்கநாடுமன்று,
தம்பிரான்றுதிகூறித்துணைநின்றேயவனருகிற்றழைத்தபோதே

(இ-ள்.) எமது பிதாவாகிய ரஹூகணன் வழியில் வந்தமுன்னேர்கள் சொன்னதைப் பாரம்பரியமாகக்கேட்ட விருத்தாந்தத்தை யாங்கள் சொல்லுகின்றேம். ஸோமத்தைப் பிழியுங்கர்மத்தில் ஸோமத்தைக் கண்டவுடனே எங்களது நாக்கு ஸ்தோத்திரங்களைக் கூறுகிறும். (நம்பிரானுகிய) இந்திரன் விருத்திரன் முதலியோரை வதைக்கவிரும்பியவக்காலத்தில் (பிரஹரபகவோஜஹிவீரயஸ்வ முதலிய) துதிகளைக்கூறி அவனுக்குத் துணையாக நின்று அவனது பக்கத்தில் நிறைந்தபோதுதான்; யாகத்துக்குரிய பேர்களாகிய, ஈதிருக், அங்பாதிருக், தாதிருக், பிரதிதிருக், மித:, ஸம்மித: ஸபரா என்னும் நாம்ங்களைப் பெற்றனர்—(எ-று.) இவ்வேழு பேர்களும் தைத்தீரீயஸம்ஹிதை 4-6-5. லுள்ளன. இவற்றை மண், 1. சூக். 72. செய். 3-ன் உரையிற்பிழைபடக்காட்டியுள்ளது.

6. பானுகிரணங்களொடுமவ்ருதகமுயிர்போற்றப்பரிதொழுக்கித்,
தேனெழுகுந்துதியோடுமிருத்துவிகரளியவியைச்சிறக்கவுண்டு
ஞானமொழியொடுகூடிவிசைகதியோர்,பயமில்லோர்,நாடுந்தங்க
ளீனமிலாமருத்துவ்ருல்லுயர்பதத்தையிறையதனினெய்திஞரே.

(இ-ன்.) சூரியகிரணங்களோடும் அவர் (மருத்துக்கள்) மழை நீரைப் பிராணிகளை வளர்க்க விரும்பிப்பெய்வித்து, நலஸ்துதி வசனங்களோடு ரித்விஜர்கள் தரும் அவியுணவைச் சாப்பிட்டு ஞானமொழிகளோடு கூடி, வேகமானகதியுள்ளவர்களாயும், பயமற்றவர்களாயும், தம்முடைய உத்கிருஷ்டமான மருத்துக்கள் என்னும் பதவியை விரைவாக அடைந்தனர்—(எ-று.) தாம்பெற்ற மருத்துவபதவியை நிலைநிறுத்திக்கொண்டனரென்பார் மோட்கூமூலர்: இப்பதவி இவருக்கு வந்தவகையை மண். 1 சூக். 72 செய். 3ற் பார்க்க.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

88. மண்டலம் 1. அநுவாகம் 14. சூக்தம் 4.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதி காதமன்: வடமொழிச்சந்தம்: 1ம் 6ம் பிரஸ்தார பங்தி, (அநுசீர்க்கழி நெடில் ஓரடிமேல் வைப்பு;) 2 4 த்ருஷ்டுப் 5 விராட் ரூபா (அநுசீர்க்கழி நெடில்); தேவதை: மருத்துக்கள்.

(வேறு.)

1. மின்னெளி வீசுஞ் சோதி விசைகதி கொண்டு வால
முன்னெ ணும் படைக டாங்கி முரணெதிம் பரியிற் பாய்ந்து
கொன்னுநுங் தேர்க்க ணேறிக் குறுகுக மருதீ ரிங்ஙண்
மன்னுறு மெம்மகத்தே; மாயையிற் சிறந்தீ ரோக்கத்
துன்னுறு மன்னத்தோடு புள்ளெனத் தோய்வீர் வல்லே.

(இ-ள்.) மருத்துக்களே! மின்னலைப்போல வீசுஞ் சோதியோடும், வேகத்தோடும், ஈட்டிமுதலிய ஆயுதங்களோடும், பலத்தோடு கூடிக், குதிரைகளால் இழுக்கப்படும் பெருமை பொருந்திய தேரின்மேலேறி, எமது யாகத்தைநோக்கி வருவீர்களாக. நல்ல மாயை (ஞானம் அல்லது கர்மம்) யோடு கூடியவர்களே! புஷ்டியோடு கூடிய உணவுப்பொருளுடனே பட்சியைப்போலவிரைவாக வருவீர்களாக—(எ-று.) வாலம் ஈட்டி, நண்டு சாயணர் மருத்துக்களுக்குச் சப்தார்த்தம் சூறுகிறார். (1.) மிதம் நிருமிதம். அந்தரிட்சம் குவந்தி சப்தம் குர்வந்தி.) அதாவது நிருமிக்கப்பட்ட அந்தரிட்சத்தை யடைந்து அங்கே சப்தம் செய்பவர்கள்: (2.) அல்லது (மிதம் ஸ்வைர் நிர்மிதம் மேக(gh)ம் ப்ராப்ய வித்யுதாத்மநாரோச்சமாந:) அந்தரத்தில் நிருமிக்கப்பட்ட மேகத்தையடைந்து அங்கே மின்னலாகப் பிரகாசிப்பவர்கள்: (3.) அல்லது (மகத்யந்தரிட்சே. த்ரவந்தி) பெரிய அந்தரிட்சத்தில் செல்லுபவர்கள்: (4.) எத்தேவ கணங்கள்? மத்திமஸ்தானத்தில் காசிப்ண் புத்திரர் 7 கணங்களாகச் சேர்ந்த 49 பேர்கள் என்று சொல்லப்படுவோர்களோ அவர்களும்.

"தக்கனணிவயிற் றுதித்தாரைம்பதின்மர்தடங்கொங்கைத்தையலாருள்
தொக்கபதின்மூவரையக்காசிபனும்புணர்ந்தான்; அத்தோகைமாருன்
மிக்கவதிதிப்பெயராண்முப்பத்துமுக்கோடிவிண்ணோர்தாள்;
மைக்கருங்கட்டிதியென்பாளதனிராட்டியசுரர்தமையிறவாய்த்தாள்."

என்னும் பாட்டு கருதத்தக்கது. (கம்பரா-சடாயுகாண்படலம் செய் 25.)

வேறு.)

2. செம்மை பிங்கல மிரண்டுஞ் செறிந்த மாப்புனைந்த தேரி,
லிம்மையிற் றுதிமுழக்கு மெக்கியன் சுபத்தை யேய,
வம்மையே வருவார்; தங்க மன்ன சித்திரன் குவிசஞ்
செம்மிய கையன்; தேர்க்கால் செறிசுவட் டலைத்தார் பூவை.

(இ-ள்.) இவ்வுலகத்தை ஸ்தோத்திரஞ் செய்யும் யாகவான் நன்மையையடையும் வண்ணம், சிவப்புப்பிங்கலம் இரண்டுங்கலந்த வர்ணமுள்ள குதிரைகளைக் கட்டிய தேரின்மேலேறிக்கொண்டு மருத்துக்கள் வருவார்கள்.

மண்டலம் 1 சூக்தம் 88.

வச்சிராயுத்தைக்கையிலேந்தியவன் காந்தியோடு கூடிய ஸ்வர்ணம்போலப் பார்ப்பதற்கழகிய ஒளிபொருந்தும் தோற்றத்தையுடையவன். அம்மருத்துக்கள் தங்களுடைய தேர்க்காற் சுவடுகளால் பூமியை வருத்தினர்கள்—(எ-று.) குலிசஞ் செம்மிய கையனென்பது இந்திரனே யென்பார் மேனூட்டாசிரியர். ஆனால் ஸ்வதி (Dh.) நி: என்பதற்கு வச்சிராயுதம் என்று பொருள் கூறிப், பின்னர் அது சத்துருக்களைக் கண்டிக்குமாயுதத்தைக்குறிக்குமெனக்கொண்டு அத்தகைய யுதத்தோடு கூடிய மருத்துக் கூட்டம் ஸ்வர்ணத்தைப்போற் பார்ப்பதற்கழகாகவிருக்கும் என அவ்வொருமை வினைக்கேற்பப்பொருண்முடிபு கூறுவர் சாயணர். எப்படியேனும் கொள்ளுக.

3. மருதர்காள்செல்வமுன்னியாயுதமருவுமமெய்;
தருநிறைவனத்தைப்போலத்தம்மகமுயருமாறு
நிறுவினர்;நற்சீரூற்றத்தீர்நலம்பெறுசோமங்கூட்டப்
பெருகுதனமகதுதோர்பிறக்கினர்கல்லைத்தானே.

(இ-ள்.) மருத்துக்களே! உங்களது சரீரத்தில் ஆயுதமானது செல்வந் தருவதற்காகப் பொருந்தியுள்ளது. அம்மருத்துக்கள் விருட்சங்கள் நிறைந்த வனத்தைப்போல யஜமானர்களைக்கொண்டு யாகத்தை யோங்குவிக்கிறார்கள். நல்ல பிறப்போடு கூடியவர்களே! (மருத்துக்களே!) உங்களுக்கு ஸோமாபிஷவஞ் செய்வதற்காகச் செல்வவான்களாகிய யக்ஞகர்த்தாக்கள் சோமம்பிழியுங்கல்லை விளங்கவிட்டார்கள் (அதாவது ஸோமம் பிழிகிறார்கள்)—(எ-று.)

4. நீர்விரும்புமிசைசூழ்நெடுமேகம்,லுதகம்வாய்ந்த,
வேர்பெறவளர்ந்துசீரையையைத்திடுங்கருமஞ்செய்த;
பேர்பெறுமவ்வருக்கப்பிரமத்தைக்கோதமர்கள்
சீர்பெறசெய்துதாகந்தீர்ணெறெடுத்தார்மேக்கே.

(இ-ள்.) (தாகத்தோடிருந்த கோதமர்களால் துதிக்கப் பட்ட மருத்துக்கள் அகஸ்தியருக்காகத் தேசாந்தரத்திலிருந்த கூபத்தை மேலே தூக்கிக்கொண்டு வந்தளித்தார்கள். அதைக்கண்ட ரிஷி சொல்லுகிறான்.) (கோதமர்களே!) தண்ணீர் விரும்பமுள்ள உம்மைச் சூழ்ந்து எப்போதும் ஜலஸம்ருத்தியுள்ள பகல்கள் வந்து தண்ணீரைத்தரும் அக்கினிஷ்டோமாதி கர்மத்தைச்செய்தன. பெயர்பெற்ற இவ்வர்க்கங்களோடு கூடிய பிரஹ்மத்தை (அவியுணவை)க் கோதமர்கள் தந்து தாகத்தைத்தீர்க்கும் கூபத்தண்ணீரை மேலே தூக்கினர்கள்—(எ-று.) முதலிரண்டடிகளால் கோதமரது பகல்கள் ஜலத்தைத்தரும் மந்திரங்களோடு கூடிய கர்மங்களைச் செய்து கழிந்தனவென்று கூறிப், பின்னர் அம்மந்திரத்தோடு கூடிய யக்ஞமே ஜலத்தைத் தந்தனவெனச் சிறப்பித்தார். வர்க்காரியமென்பது மழைபெய்யச்செய்யும் கர்மமென்றும் அக்கர்மஞ்செய்யின் மழைபெய்யுமென்றும் மோட்சமூலர் கூறுவர்.

5. தீதில்பொன்னுருவின்மீதுவிரிதமாசெறிந்தயக்கொம்
பேதிசார்வராறுமென்னவமையவனெனிர்ந்தபோது
கோதமனுமக்காப்பாடிக்குயிற்றியவித்தூணப்போல
யாதொருமறையுமுன்னர்யாருமேயறிந்திலாரே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

(இ-ள்.) குற்றமற்ற பொற்சக்கரத்தின்மீது, இரும்பைப்போன்ற தந்தமாகிய வாயுதத்தோடு கூடிய காட்டுப்பன்றிகளைப்போல நீங்கள் பல விதமாக வந்து கோதமனுக்கெதிரில் தோன்றியபோது அக்கோதமன் உங்களை ஸ்தோத்திரித்த இம்மறையைப்போலச் சிறந்தது வேறொன்றுமில்லை-(எ-று.) எதி ஆயுதப்பொது, கொம்பாகிய வேதியென்க.

6. மருத்தர்காளெம்போற்றும்மைவளம்பெறத்தாங்கு;மூர்த்த
மருங்குழுவொத்தார்தமமையழகினிற்றுதித்து;மெங்கள்
கரங்களிற்பலவித்தத்தவெண்டியைக்கவித்தவிற்றைப்
புரந்த,திங்கிருத்துவுக்குப்புகலொய்ம்மொழியு மும்மை.

(இ-ள்.) மருத்துக்களே! எங்களது ஸ்தோத்திரம் உம்மை நன்று கச்சுமக்கும்; உம்மையொத்த கூட்டத்தாரையும் ஜநிக்கும். எங்களதுகைகளில் பலவிதமான வுணவைத்தந்த விப்பொழுது ரித்விஜர்கள் கூறும் உருக்கமான (அல்லது அநாயாஸமான) வார்த்தைகளும் உம்மைப் புகழ்ந்தது—(எ-று.) நொய்மையென்பதற்கு வடமொழியில் விருதாவென்றுள்ளது. அதற்குச் சாயணர் அநாயாஸேன என்று உரை கூறுவர்.

89 மண்டலம் 1 அநுவாகம் 14 சூக்தம் 5.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி கோதமன்; வடமொழிச்சந்தம்: 1–5, 7. ஜகதி, 6 விராட்ஸ்தானம் (அறுசீர்க்கழி நெடில்) 8-10 தருஷ்டுப்; தேவதை விச்வதேவர்கள்.

1. பயன்றருகல்யாணகுணமாமக்ங்,ளசுரர்களாற்பாடில்லாத,
வியன்றபகையெதிர்க்காிய,வெதிர்த்தாரைவெற்றிகொளுமிவை,பலீ
திக்கும்
பயின்றெமிடத்தோங்குகவாற்,றினந்தோறுந்தேவர்களெப்பலனுமீ
வோர்
குயின்றெமதுகாவலராயெந்நாளுமெஞ்சதனங்கூடுமாறே.

(இ-ள்.) தினந்தோறும் எல்லாப்பயன்களையும் தரும் (விச்வ) தேவர்கள் எங்களுடைய ரட்சகர்களாய் எப்பொழுது மெமது யக்ஞக்ரியத்துக்கு வரும் வண்ணம், அசுரர்களால் உபத்ரவிக்க முடியாதவையும், சுத்துருக்களாற்றடுக்கமுடியாதவையும், பகைவரை ஜயிப்பவையும், தக்க பலன்களைத்தரும் கல்யாணகுணங்களோடு கூடியவையுமான (அக்நிஷ்டோமாதி) யாகங்கள் எல்லாத்திக்கிலிருந்தும் வந்து அவவிடத்து வளர்ந்தோங்கட்டும்—(எ-று.) விச்வதேவர்களென அதிகாரத்தாற் கொள்க.

2. சுபம்புரியுந்தேவர்களினனுக்ரகமதியெம்பாற்றோய்க;நேர்மைத்
தபம்புரியவ்யஜமானர்க்களிற்றேவக்கொடைகளெமைச்சார்க;
வென்றும்
விபம்பெறயாமத்தேவர்நட்பளிக்குங்கருமமதைநேடிக்கொள்க;
வபுவதனிற்சிவன்மிகவோங்கிடவேதேவர்களும்வளர்க்கவின்றே.

(இ-ள்.) சுபத்தைச் செய்யும் (விச்வ) தேவர்களி னநுக்ரஹபுத்தியெம்மிடத்துப் பொருந்துக. ஸத்தியமும் தபோவநுஷ்டானங்களு

மண்டலம் 1 சூக்தம் 89.

மூன்ன யக்ஞகர்த்தாக்களுக்குத் தரும் தேவக்கொடைகள் எப்பொழுதும் எங்களுச் சார்ந்து நிற்கட்டும். பிறர்க்குச் சுட்டாக நிற்கும் வண்ணம் யாங்கள் அத்தேவர்களது சிநேகத்தைத்தருங் கருமத்தைத்தேடி யடைவோமாக. எமது சரீரத்தில் ஆத்மாவோங்கிச் சீவிகருமாறு தேவர்கள் எங்களாயுளை விருத்திசெய்வார்களாக—(எ-று.) வபு, உடல்.

3. பகஞ்டுமித்திரனையநிதியினத்தட்சனையும்பகர்மருத்துத்
தொகையோடமரியமணன்வருணனுடுசோமனையுஞ்சோடா
வெண்ணும்
வகைத்தேவரசுவினிகடங்களையும்பழமறையால்வருகவென்பாம்;
சுகமீகல்சோபனநன்னிதியியைந்தசரச்சுவதிதோய்ந்தெமக்கே.

(இ-ள்.) பகன், மித்திரன், அதிதி, தக்ஷன், மருத்துக்கூட்டங்கள் அரியமணன் அல்லது அரியமான், வருணன், ஸோமன், இரட்டைத்தேவர்களாகிய அச்வினிகள் ஆகிய வெல்லாததேவர்களையும் பிரசஸ்தமான மந்திரங்களாற் கூவியழைப்போம். சோபன தன்த்தோடு கூடியவளான ஸரஸ்வதி எங்களுக்குச்சுகத்தையளிக்கட்டும்—(எ-று.) பகன் துவாதச ஆதித்தியர்களிற்சிறந்தவன். மித்திரன் (ப்ரமீதே ஸ்த்ராயகம்) உண்மையறிவைப் பாதுகாப்பவன்; பதல்பிமானி தேவதை. அதிதி (அகண்டநீயாம் அதீனும் வா தேவமாதாம்) பூரணமானவள், கஷ்டந்தராதவன், தேவத்தாய். தட்சன் எல்லா ஜகத்தையு நிருமிப்பதிற் சமர்த்தன், பிரஜைகளுக்குப் பதி, அல்லது பிராணரூபமாய் எல்லாப்பிராணிகளுக்குள்ளும் பரந்து நிற்கும் ஹிரண்யகர்ப்பன். 'ப்ராணோவைதக்ஷ' வென்பது சுருதி (தைத்திரீயஸம்ஹிதை 2-5-2) அஸ்ருதம், சோஷணரகிதம், எப்போதும் ஒரு ரூபத்தோடிரியும் மருத்துக்கூட்டமென்பார் சாயணர். அர்யமணன் மந்தேஹர் முதலிய அரிகளையடக்குவோன், சூரியன். (மந்தேஹர் சூரியனது தேரைத்தடுப்பவர்களாக வெண்ணப்படுமசுரர்கள்.) அதனற்றான் அர்யமான் அல்லது அர்யமணன் காலை மாலைஸந்திகளுக்கு அதிதேவதையாகக் கருதப்படுகிறான். இவனே ஸூர்யனென்று (அஸௌவாதித்யோர்யமா) தைத்திரீய ஸம்ஹிதை (2-4-4) கூறும். வருணன் பாவகாரிகளை யவர்களது பாபங்களால் ஆவரணஞ் செய்பவன் அல்லது மூடுபவன். ராத்திரி யபிமானி தேவதையென்று தைத்திரீய ப்ராஹ்மணம் (1-7-9.) கூறும். ஸோமன் தன்னை இரண்டு கூறுபடுத்திப்பூமியிற் கொடி (ஸோமலதை) யாகவும், விண்ணில் சந்திரனது ஆத்மாவாகிய தேவதையாகவு முள்ளவன். அச்வினிகள் எல்லாவிடத்தும் வியாபிப்பவர்கள்: இவர்கள் த்யாவா ப்ருதிவிகள் (வானம் பூமியிரண்டும்,) என்று சிலரும், அஹோ ராத்ரிகள் (பகலிரவு) என்றும் சிலரும், சூரிய சந்திரர்களென்று சிலரும், புண்ணியஞ் செய்யும் ராஜாக்களிருவரென்று சிலருஞ் சொல்லுவார்கள். சிலவற்றை ரஸத்தாலும் சிலவற்றை ஜோதிஸாலும் நிரப்புவேர்.

4. வாயுதரல்சுகமளிக்குமம்மருந்தைப்;புவித்தாயுமகிழ்ந்தஃதீகல்;
எயுமெமதரும்பிதாவாம்வானுமேய்க்கலதை;யிறகுஞ்சோம
மாயுமகப்பயனதனைக்கூட்டுவிக்குங்கல்லிரண்டுமணைக்கலஃதைத்;
தோயுமறிவசுவினிகாணேய்தீர்கருமஞ்சத்செய்விக்கட்டோய்த்திடரே.

(இ-ள்.) சுகத்தைத்தரும் அந்த பேஷஜத்தை (மருந்தை) வாயு கொண்டுவரட்டும். பூமியர்தியதாயும் அதனைக்கொண்டுவரட்டும். எமது பிதா

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

வாகிய வானமும் அதனைத்தாங்கட்டும். ஸோமஸுதை பிழிந்து யாகபலனுகி யசுகத்தையளிக்கும் இரண்டு கற்களும் அதனையிங்குசேர்க்கட்டும். அறிவுமிக்க அச்வினிகளே! எங்களது நோயைத் தீர்க்க வல்ல அதனை நீங்களுங் கேட்டு வைப்பீர்களாக—(எ-று.) பிதாத்யௌ: என்பதே தியௌஷ் பிதா (Jupiter) வாயிற்றென்பார் மேலுட்டாசிரியர். (Griffith.)

5. ஈசானன், ருவரசங்கமவுலகின்பதியாவா, னெழில்சார்கன்ம
வாசாரத்தாற்றிருத்திசெயத்தக்கோ, னவன்றன்னைத்துணைக்கழைக்
போம்;
தேசாருமெம்பொன்னைப்பெருக்கிவளர்த்தழிவுபெரும்சிறப்பிற்
பூடன்
வேசாறியாங்கேட்டையடையாதநல்வகையேவிழைந்துகாக்க.

(இ-ள்.) ஈசானனும் (ஈசுரியவானும்) தாவாசங்கம வுலகங்களுக்குப்பதியும், அழகியகன்மத்தாற்றிருப்திப்படுத்தத்தக்கவனுமாகிய வவனை (இந்திரனையென்பார்; சயணர்) நமக்குக்காவலாக வழைப்போம். எமதுதனமெல்லாம் வளரும்படிகாத்து ஒருவராலும் அழிக்கமுடியாத அல்லது இம்சிக்கமுடியாத சிறப்போடுகூடிய பூஷன் யாங்கள் துக்கத்தையும் கேட்டையும் அடையாதபடி யெங்களைக் காப்பானுக—(எ-று.) பூஷன், பூடன். சூரியாபிமானி தேவதை, செல்வமளிப்பவன்.

வருக்கம் 15.

(வேறு)

6. அழிவிலாத் தன்மை யெங்கட் களிக்க மீத்துதி யேய் வேந்தன்;
அழிவிலாத் தன்மை யெங்கட் களிக்க வெப்பொருள் சார் பூடன்;
அழிவிலாத் தன்மை யெங்கட் களிக்க வாரழியாத தார்க்யன்;
அழிவிலாத் தன்மை யெங்கட் களிக்க மாமறைக்கர்த்தாவே.

(இ-ள்.) மிகுந்த துதியைப் பொருந்திய இந்திரன் எங்களுக்கு அழிவின்மையைத்தரட்டும். எல்லாப்பொருளுகளையுமடைந்துள்ள பூஷன் எங்களுக்கு அழிவின்மையைத்தரட்டும். அழியாத தேர்ச்சக்கரவட்டைக்கால் களையுடைய தார்க்ஷ்யன் (கருடன்) எங்களுக்கு அழிவின்மையைத்தரட்டும். பிரஹஸ்பதி யெங்களுக்கு அழிவின்மையைத்தரட்டும்—(எ-று.) தார்க்ஷ்யன், திருட்சன் மகன் கருடன். மாமறைக்கர்த்தா வென்றது பிரஹஸ்பதியை. எப்பொருள் உம்மைத் தொகை.

(வேறு.)

7. மான்பரியோங், பிருசினித்தாய்பெற்றவர்கள், சுபந்தருவோர், மருதர்,
யாகத்
தேன்றுறுவோ, ரக்கினியேதங்காவாயடைந்தவர்க, ளென்றே
போலக்
கான்றவொளிக்கண்ணுடையோர், யாவுமுணர்மதியுடையோர், காப்
பான்வேண்டித்
தோன்றுகவெல்லாத்தேவர்தாமுமிவணின்றெமக்குச்சுகமீபாக்கே.

(இ-ள்.) புள்ளி மானுகிய வாஹனத்தையுடையவரும், பிருசினிமாதாவின்மக்களும், சுபகாரகர்களும், யாகத்தைநோக்கி வருபவர்களும், அக்கி

மண்டலம் 1 சூக்தம். 89.

னியைத்தமது நாவாகக்கொண்டவர்களும், (அல்லது அக்கினித் துவாரா அவிப்பொருளேயேற்பவர்களும்) சூரியனைப்போல வொளிகாலுங் கண்ணுடி கூடியவரும், எல்லாவற்றையுமறியும் புத்தியையுடையவர்களுமான மருத்துக்களாகிய விச்வதேவர்கள் எங்களையிவ்விடத்துக்காத்து எங்களுக்குச் சுகத்தையளிக்கவாட்டும்—(எ-று.) என்று, சூரியன்.

(வேறு.)

8. வணங்குதற் சூரியீ ரெங்கள் காது மங்கலச்சொல் கேட்க;
அணங்குறு தேவர்கா ளெங்கண் ணழகமைந்த நோக்க;
இணங்குறு திடவங்கத்தி னுடலியைக் தும்மை யாங்கள்
வணங்கியே தேவ னீத்த வாயுளைப் பெறுக மாதோ.

(இ-ள்.) யக்ஞத்திற் போற்றத்தக்கவர்களே! எங்களுடைய காது மங்கலமான வார்த்தைகளைக் கேட்கட்டும். பெருமைபொருந்திய தேவர்கள் எங்களது கண்கள் அழகுபொருந்திய காட்சியைப் பார்க்கட்டும். உறுதியமைந்த சரசரணுதியவயவங்களோடு கூடிய யாங்கள் உம்மைத்துதித்துத் தேவநிர்மிதமான பூரண வாயுட்காலத்தை யடையட்டும்—(எ-று.) தேவநிர்மிதம் பிரஹ்மாவால் ஸ்தாபிக்கப்பட்டது. பூரண வாயுளென்றது 112 அல்லது 120 வயதாம் என்பார் சாயணர். இது ஜோதிஷமதம். ஆனல் அடுத்த செய்யுளில் நூறு என்றே கூறப்படுகிறது; 'யேதநூற் பிராய நூறு' என்னும் பிறரும்.

9. தேவர்காளெம்மெய்கெட்டுச்சரையினைச்சோ நூறு
தாவரு கூதிராகுங்; தடைபெறவிடையின மீதை
யோவுறச்செய்யீர்; உண்ணுமுதற்குளெம்மகார்கடாமே.
மேவுறுபிதாக்களாகுமேன்மையையடைவாரன்றே.

(இ-ள்.) (விச்வ) தேவர்களே! எமது சரீரங் கிழத்தன்மையை யடைந்துகெட நூறு சரற்காலங்களாம் (அல்லது வருஷமாம்). நடுவில் அதனைக் குறைத்துவிடாதீர்கள். அதற்குள் எமது புத்திரரும் பிதாக்களாகிவிடுவார்கள்-(எ-று.) புத்திரர் பிதாக்களாவரென்றதற்குத் தாங்களே குழந்தைகளைப் பெற்று விடுவார்களென்றும், தாங்கள் வயது சென்ற எங்களைப்போலிக்கத் தொடங்கி விடுவார்களென்றும், இருவகையாகப்பொருள்கொள்ளலாம்.

10. அதிதியே வானு மந்தரிட்சமு மதிதியேயாம்;
அதிதியே தாயாந், தந்தை புத்திரன் முனுமாகும்;
அதிதியே தேவரெல்லா, மைவகைச் சனங்க டாமும்;
அதிதியே பிறப்பின் மூலம், அதிதியே பிறப்புமென்ப.

(இ.ள்.) அதிதியே விண்ணும். அதிதியே (விண்ணுக்கும் புவிக்குமிடையிலுள்ள) அந்தரிட்சமாம். அதிதியே தாய்; அதிதியே தந்தை; அதிதியே புத்திரனுமாம். அதிதியேவிச்வதேவர்களாம். அதிதியே ஐந்துவகையான ஜனங்களாம். அதிதியே பிறப்புக்குக் காரணமாம். அதிதியே பிறப்பென்றும் சொல்லுவார்கள்—(எ-று.) ஐவகைச் சனங்கள், கந்தர்வர், பிதிர்க்கள், தேவர்கள், அசுரர்கள், ராட்சஸர்கள் என்பவர்களாம். நான்குவருணத்தவரும் நிஷாதருமென்றும் சொல்லுப. தேவர், மனிதர், கந்தர்வர், அல்லது அப்ஸரஸ், ஸர்ப்பர் அல்லது நாகர், பிதிர்களள் யென்பார் யாஸ்கர்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

வருக்கம் 16.

90. மண்டலம் 1. அநுவாகம் 14. சூக்தம் 6.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷிகோதமன்; வடமொழிச்சந்தம்: காயத்ரி, 9 அநுஷ்டுப்; தேவதை: விச்வ தேவர்கள்.

(வேறு.)

1. வருணன் மித்திரன் மற்றிவ ரெங்களுக்
குரிய தான முணர்ந்தனர் நேர்நெறி
மருவுவித்திடல் தேவர் மகிழ்வுறும்
அரியமாவு மணைத்திட லன்னதே.

(இ-ள்.) வருணனும், மித்திரனும் எங்களுக்குத்தகுந்த உத்தமமான விடத்தையறிந்தவர்களாய் எங்களை நேரான பாதையிற் சேர்க்கட்டும். இந்திராதி தேவர்கள் பிரீதிகொள்ளும் அரியமாவு மக்நெறியிலேயே எம்மைச் சேர்க்கட்டும்-(எ-று.) பகலபிமானி தேவதையாகிய மித்திரனும், இரவபிமானிதேவதையாகிய வருணனும், காலைமாலை ஸந்திகளுக்கபிமானி தேவதையாகிய அரியமாவும் எங்களுக்குரித்தான நற்பதவியை யறிந்து எங்களை யப்பதவிக்குச் செல்லும் நேர்மை நெறியிற் சேர்க்கட்டும் என்க. மித்திரன், வருணன், அரியமாவென்னும் பதப்பொருள்களை மண். 1 சூக். 89 செய். 3 ன் உரையிற் காண்க.

2. செல்வ மேய்த்துச் சிறக்கு மவர்மயக்
கில்லவராய் மகத்துவத் தேசினுற்
நல்வளத்தி னெந்நாளுங் கருதியே
பல்வகைய விரதமும் பாலிப்பார்.

(இ-ள்.) செல்வத்தையளித்துச் சிறப்புப்பெறு மவ் விசுவதேவர்கள் மயக்கமில்லாதவராய் அல்லது நல்ல ஞானத்தோடு கூடியவர்களாய்த் தங்களுடைய மகத்துவம்பொருந்திய தேஜஸினால் எல்லாநாட்களிலும் விரதங்களைக்காப்பார்கள்—(எ-று.) விரதம் என்றதற்கு ஜகதீர்வாஹக ரூபமாயுள்ள தங்கள் தங்கள் கர்மங்களென்று உரை கூறுவார் சாயணர்.

3. பகைவர் தங்களை நாசப் படுத்துவோர்
தகைமை சாரு மமரர் மரணத்தின்
வகைபொருந்திய மர்த்தியரா மெமக்
கிகவயிற் சுக மீத்துச் சிறக்கவே.

(இ-ள்.) பகைவர்களை நாசப் படுத்துவோர்களும் அமிருதத் தன்மை வாய்ந்தவர்களுமாகிய விச்வதேவர்கள் மரணதர்மம்பொருந்திய (அதுஷ்டாதாக்களாகிய) எங்களுக்கு இவ்வுலகத்துச்சுகத்தைத்தரட்டும்—(எ-று.)

4. வந்தனீயராம் பூடன் மருகரு
மிந்திரனும் பகனு மெமபாத்தையே

மண்டலம் 1. சூக்தம் 90.

நந்து தீமை நெறியிற் பிரிக்க,யா
முந்து மாறு துறக்கப் பலனீயே.

(இ-ள்) வந்திக்கத்தக்கவர்களாகிய பூஷன், மருத்துக்கள், இந்திரன், பகன்என்னுமிவர்கள், யாங்கள் ஸ்வர்க்காதி பலன்களையடையுமாறு, எங்களது பாதைகளைத் தீமைசெறிந்த வழிகளினின்றும் விலக்கிக் காக்க—(எ-று.)

5. மன்னும் போஷக, வாவுறு விண்டுவே!
இன்னு மிவ்வழி யேகு மருகரே!
துன்னுவிப்பீர் பசுவெங் தொழிலகத்;
துன்னு மாக்கத்தை யூட்டுக வெங்கட்கே.

(இ-ள்.) பூஷனே! (போஷக தேவதையே!) வியாபிக்கும் தன்மை பொருந்திய விஷ்ணுவே! இன்னுமவ்வழியில் வரும் (மருத்துக்களே!) எமது (ஆப்தோர்யாமமென்னும்) கர்மத்திற் பசுக் கூட்டங்களைச் சேர்ப்பீர்களாக. எங்களுக்கு வாழ்வை யளிப்பீர்களாக—(எ-று) ஆப்தோர்யாமமென்றது ஸோம யக்ஞங்கள் ஏழனுள் ஒன்று. இவ்யக்ஞத்தைச் செய்பவர் பசுப் பெறுவர் என்பது வேதத் துணிபு.

வருக்கம் 17.

6. ஓழுங்கின் யாக முளுற்று மவனுக்கு
வழங்கு சிந்துவும் வாயுக்களு மிவண்
வழங்க வின்ப மதுவினை; யோடதி
வழங் கினிப்பினின் வைக வெமக்குமே.

(இ-ள்.) ஒழுங்காக யாகஞ் செய்வோனுக்கு வின்துக்களும் (நதி அல்லது ஸமுத்திர அபிமான தேவதைகளும்) வாயுக்களும் இன்பமதுவாகிய கர்ம பலத்தை யளிக்கட்டும். ஓஷதிகள் எங்களுக்கு மாதுரியத்தைத்தந்து சிறக்கட்டும்—(எ-று.)

7. மதுவணைந் தெமக்கேய்க நிசியுமே;
மதுவணைந் தெமக்கேய்க பகல்களும்;
மதுவணைந் தெமக் கேய்க புவியுலகு;
மதுவணைந் தெமக் கேய்க விட்டந்தையே.

(இ-ள்.) எங்களுக்கு இரவு மாதுரிய பலதாதாவாயிருக்கட்டும். பகற் காலங்களும் எங்களுக்கு இனிய பலன்களைத்தரட்டும். பூவுலகமும் எங்களுக்கு மாதுர்யமான விசேஷ பலன்களையளிப்பதாயிருக்கட்டும்: விண்ணுலகிய பிதாவும் எங்களுக்கு மதுரம் வாய்ந்தவனுயிருக்கட்டும்—(எ-று.) மூலத்திலுள்ள உஷஸ் என்னும் பதத்துக்குப் பகல் என்னும் பொருள் இலக்கணையாற் கொண்டது. பார்த்திவம்ராஜம் (Terrestrial Atmosphere.) என்பதற்குப் புவியுலகென்றது 'லோகா ரஜாம்ஸ்யுச்யந்த' என்ற யாஸ்கர் வசனத்தை யாதாரமாகக்கொண்டு. விண்ணுலகிய தந்தை விட்டநதை, விருஷ்டியை முக்கியமாகக் கொண்டு எல்லாவற்றையும் பரிபாலிப்பதால் (த்யௌ:) வானம் பிதாவெனப் பெற்றது.

அஷ்டகம் 1. அத்தியாயம் 6.

8. மது வமைந்தவ னுகல் வனப்பதி;
மது வமைந்தவ னுகல் நபப்பதி;
மது வமைந்த பயத்தோ டெமக்கென
மது வமைந்தன வாகல் பசுக்களே.

(இ-ள்.) (யூபாபிமானி தேவதையாய் வனத்தைக் காக்கும்) வனஸ் பதி யெங்களுக்கு இனிமைபொருந்தியவனுயிருக்கட்டும். நபப்பதியாகிய சூ ரியனும் இனிமைபொருந்தியவனுயிருக்கட்டும். இனிமை வாய்ந்த பாலோ டு பசுக்களும் எங்களுக்கு இனிமை, செய்வனவாயிருக்கட்டும்—(எ-று). நபம், ஆகாயம். பயம், பயஸ், பால்.

(மேலது.)

9. எமக்கு மித்திரன் சுகந்தரல்; வருணனுஞ் சுகத்தை
யெமக்களித்திடல்; அரியமாச் சுகத்தினையைக்கல்;
யெமக்கரி விருகற்பதி யிடரினை விலக்கல்
எமக்கு நற்சுகம் பேரடி விண்டுவு மெடுக்கல்.

(இ-ள்.) மித்திரன் எமக்குச் சுகத்தை யளிக்கட்டும். வருணன் எங் களுக்குச் சுகத்தைத் தரட்டும். ஆரியமா வெங்களுக்குச் சுகத்தையீயட்டும். அரி (இந்திரன்), பிரஹஸ்பதி, இவர்கள் துன்பதனை விலக்கிச சுகத்தைவ ழங்கட்டும். பெரிய அடியோடு கூடியவிஷ்ணு எங்களுக்குச் சுகத்தைக்கொ டுக்கட்டும்—(எ-று.) பேரடி யென்றது வாமனனுய் மூவுலகளந்த பெருமை யை முன்னிட்டு. "இங்கே விஷ்ணு திருமாலன்று; சூரியனே, காலை, நண் பகல், பிற்பகல் என்னும் மூப்பொழுதினும் வான் கடந்து செல்லு நிலையில் விஷ்ணு வென்னும் பெயரோடு பொலிகின்றன் என்று சொல்லப்பட்டி ருக்கின்றது" என்பார் 'பண்டைக்காலத்தமிழரும் ஆரியரும்' என்னும் நூ லி ஞரியர். விருகற்பதி, பிரஹஸ்பதி. மித்திரன் வருணன், அர்யமா விவர்களைப்பற்றி மண். 1 சூக். 89 செய். 3ன் உரையை நோக்குக.

வருக்கம் 18.

91. மண்டலம் 1 அநுவாகம் 14 சூக்தம் 7.

23 இருக்குக்கள் கொண்டது.

1. சோமனீ யறிவின் மிக்காய்; தோயு நேர்நெறியி னெம்மை
யேமுற நடத்துவாயால்; எங்கண் மூதாதை யோர்கள்
காமுறு தீர ருன்றன் கருதுறு துணைகொண், டிந்தோ!
தாமுறு மாதனத்தைச் சார்ந்தனர் தேவர் மாட்டே.

(இ-ள்.) ஸோமனே! நீ யறிவின் மிகுந்தவன், எம்மை நேரியநெ றியில் நடத்துவாய். இந்துவே! (ஸோமத்துளியே!) எங்கள் முன்னோராகிய தீரர்கள் உனது உதவினுலேயே தேவர்களிடத்திலிருந்து ரத்நங்களோ யல்ல தரமணீய தனங்களோப் பெற்றனர்—(எ-று.) இந்தோவென்றது வட் மொழிப்போக்காகக் கூறியது. எம்மூதாதையர் பெற்றூர், இப்பொழுதுயா மும் பெறுகவென வவாய்நிலையாற் கொள்ளுக.

2. சோமநீமகஞ்செய்வோரிற்சொல்பெறுமகத்தோன்; மொய்ம்பி
னுழுறுவோரினன்மொய்ம்புற்றவன்; நடையெலாம்பெற்

மண்டலம் 1. சூக்தம் 91.

தேறமுறுவள்ளறம்மினெழில்பெறுவள்ளல்;மாந்தர்
கார்முகவண்ணலைகாய்;சீர்காண்பொருள்பொருளினெல்லாம்.

(இ-ள்.) ஸோமனே! நீ யாககர்த்தாக்களில் நல்லபாககர்த்தா. பலத்திற் பேர்பெற்றவர்களில் சிறந்த பலவான். செல்வத்தையெல்லாம் பெற்ற தாதாக்களிற் சிறந்த வள்ளலாம். யாகஞ்செய்யும் மனிதர்களுக்குப் பலனைப் பார்க்குங் கண்ணுமாய். எல்லாப்பொருள்களிலும் சிறப்புப்பொருந்திய அன்னப்பொருளாம்—(எ-று.)

3. எந்தலே! வருணனீதி யுன்னரு நோன்பே; சோம!
எங்கு முண்ணெனி கம்பீரத் தேய்ந்த பேரெழிலிற்று; அன்பு
தோய்ந்த மித்திரனிற் ஸாய்மை தூதைந்துளாய்; சோமனே! நீ
வாய்ந்ததனையும் வளர்ப்பா யரியமான் மானத் தேகின்.

(இ-ன்.) பிரமஜ்ஞானிகளுக்கு ஸ்வாமியாகிய ஸோமனே! வருணன் செய்யும் யாகாதி விரதங்கள் உன் விரதங்களேயாம். உன்னுடைய காந்தியானது கம்பீரமும் மிருதுத்வமுமாய் விளங்கிற்று. அன்போடு கூடிய மித்திரனைப் போலப் பரிசுத்தமானவன் நீ; ஸோமனே, அர்யமாவினைப் போலத் தேஜஸோடு கூடி நீ யெல்லாவற்றையும் வளர்ப்பாய்—(எ-று.) ஸோமன் சந்திராபிமானி தேவதை. சந்திர கிரணங்களால் பயிர் முற்றுவது உலகமறிந்த விஷயம். ஈண்டு மித்திரன், வருணன், அர்யமா, ஸோமன் நால்வரையும் ஒருமிக்க வுரைத்தார்.

4. எந்தலாஞ் சோம வுன்மாட்டெய்து பேரொளி வானத்தி
லெந்தாறு புவியி லெண்ணும் பருப்பதமதனி லேஞ்சிர்
காந்தியோடநியி னிரிற் கலந்தன; வவையா லோடுஞ்
சாந்தியிற் குணமனத்தி னேற்க யாந்தரும் பலியே.

(இ-ள்.) மன்னனாகிய ஸோமனே! உன்னிடத்துத் தோன்றும் பெரிய காந்திகள் வானத்திலும், பூமியிலும், பர்வதங்களிலும், நீராவைத்தீர்க்கும் ஓஷதிகளிலும், நீரிலும் கலந்தன. இவையெல்லாக்காந்திகளோடுங்கோபமற்றவனுப் நன்மனத்தோடு கூடியவனுப் வந்து யாங்கள் தரும்பலியையேற்பாயாக—(எ-று.) ஸோமனென்பதன் பொருளோ மண். 1 சூக். 89 செய். 3ல் நோக்குக.

(வேறு.)

5. சோம! நீ சற்புருடரி னற்பதி,
தாம மன்னன், விருத்திரன் றன்னை நீ
நாம மின்றி நலிப்பவன்; மங்கல
நேம னன்மமு நீயெனக் கூறுவாம்.

(இ-ள்.) ஸோமனே! நீ ஸத்புருஷர்களுக்குப் பதியாவாய். ராஜனுமாவாய். விருத்திரவதஞ் செய்பவனு நீயே. மங்கல காரியங்களும் நீயே—(எ-று.) ஸோமங்குடித்து இந்திரன் செய்வதை ஸோமத்தின் செய்கையாகவே கூறினர். ஸோமத்தினல் யாகங்கள் நடைபெறுவதனல் ஸோம மே யாக மென்றார்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

6. சோம யா பரணத்தினைத் தோய்வுறு
தேம மாக வுலகி லிருப்பது
காமுறு நற்று தியிற் களித்திடும்
வாம கானப்பதி யுன் வசததே.

(இ-ள்.) ஸோமனே! யாங்கள் மரணத்தை யடையாமல் இவ்வுலகத்திற் சீவித்திருப்பது, ஸ்தோத்திரப் பிரியனும் வனஸ்பதியுமாகிய வுன்னாலேயே—(எ-று.)

7. வயது சென்றவன் வாணிப ஞயினு
நய விரதஞ், சோம நடத்துவோர்
குயருரும் போகத்தை யூட்டிந நிறைமையிற்
செயிரறும் பொன் சிறகக வழங்குவாய்.

(இ-ள்.) ஸோமனே! யக்ஞஞ் செய்பவன் வயதுசென்றவனுயினும், வாலிபனுயினும், அவனுடைய உபயோகங்களுக்கு வேண்டிய பொன்னைச் சிறப்புப்பெறத்தருவாய்—(எ-று.)

8. எம்வயிற் றுய சேய்ப்பவனின்று மெப்
பம்பு திக்கும் பரந்திரட் சிக்கவே;
எமபெரு மிறைச சோம வுணையொத்தோர்
தந்துணையினர் தம்மை யழிக்கலே.

(இ-ள்.) எமது ராஜாவாகிய ஸோமனே! எம்மிடத்துத் துயரை விளைப்பவனிடத்திலிருந்தும் எம்மை எல்லாப்பக்கத்தினின்றும் வந்து காப்பாற்றுவாயாக. உன்னைப்போன்ற தோழர்களது துணையைப்பெற்ற புருஷரை நாசப்படுத்தாதொழிக—(எ-று)

9. தாசுடர்க்குச் சுகந்தரு தன்மையிற்
பேசு மத்துணை கொண்டு பிறங்கெமை
யாசிற்சோம வுணைந்தவ் வுதவியி
னேசுரு தியைபின் னெமை யோம்புக.

(இ-ள்.) ஸோமனே அவியளிக்கும் யஜமானனுக்குச் சுகத்தைத் தரும் உதவிகளோடு எம்மிடத்து வந்து அவ்வுதவிகளா லெம்மைப் பாதுகாப்பாயாக—(எ-று.)

10. யாமியற்றுமிவ் வெம் மகந் தன்னையும்
யாமியம்புமிவ் வெம்வச னத்தையும்
சோம! வேற்றெமைத் தோய்ந்திட லண்மையின்;
ஓம வெக்கிய மோங்க வளர்க்கலே.

(இ-ள்.) ஸோமனே! யாங்கள் செய்யுமிந்த யாகத்தையும், யாங்கள் சொல்லுமிந்த ஸ்துதிவசனங்களையும், நீயேற்றுச் சமீபத்தில் வருவாயாக. எங்கள் யாக கார்யங்கள் ஓங்கி வளரும்படி செய்வாயாக—(எ-று.)

11. சோம சொல்வலி தோய்ந்தவர், யாங்களுந்
தாமுஞ் சொல்லிற் றயக்கி புனதரு

மண்டலம் 1. சூக்தம் 91.

நாமந்தன்னை நலத்த வுயர்த்துவோம்;
ஏம மீபவ வெங்கண் வருகவே.

(இ-ள்.) ஸோமனே! ஸ்துதி லட்சண வசனங்களை யறிந்தயாங்கள் ஸ்துதி லட்சண கீதங்களால் அல்லது மாலைகளால் உன்னை விருத்திசெய்வோம். சோபன ஸுகத்தைத்தரும் அத்தகைய நீ எம்மிடத்து வருவாயாக—(எ-று.) தாமம், மாலை, ஈண்டு சொன்மாலை.

12. செல்வ மீத்துச் சிறப்பிப்பவ, வணங்
கல்ல னீக்கி யருநிதி சேர்ப்பவ,
பல்கு சம்பத் தினைப் பருப்பிப்பவ,
நல்லுளத்து நண்பாகுக, சோமனே!

(இ-ள்.) செல்வத்தையளித்து வளர்ப்பவனும், நோய்த் துன்பத்தை நீச்சி (ஸ்தோதாக்களுக்கு)ச்செல்பத்தைத் தருபவனும், ஸம்பத்தை விருத்தி பண்ணுபவனுமான ஸோமனே! எங்களுக்கு நன்மனத்தோடு கூடிய தோழனாக விருப்பாயாக—(எ-று.) அணங்கு, நோய்.

13. ஆக்க டட்டையை யார்ந்து களித்தலின்
நீக்கமில் தனதில்லினின் மர்த்திய
னேக்கமோ டிறலின் னெம்மனத்தினிற்
றேக்கு மின்பிற் சிறந்துறல், சோமனே!

(இ.ள்.) பசுக்கள் தட்டையுணவைத்தின்று ஸந்தோஷிப்பது போலவும், ஸ்வக்கிரஹத்தில் மரண தர்மத்தோடு கூடிய மனிதன் தனது புத்திர பிருத்தியாதி செல்வங்களுடனே தங்கிச் சுகப்படுவதுபோலவும், ஸோமனே, நீ எங்களது இதயத்திற் தங்கி ரமிப்பாயாக—(எ-று.) எங்களிடத்திலேயேயிருந்து எங்களுக்கே ஸந்தோஷமூட்டுகவென்று, பசு வண்டி, கிரஹ ஸுகம் என்னும் இரண்டு உவமைகளினாலுங் கூறினர். தட்டை பசுவுணவு.

14. தேவ சோம சிறந்தவுன் றோழமை
மேவு மர்த்தியன் வேண்டிக் துதிப்பவன்
ரூவி லன்னவன் றன்னைக், களிபெறு
மோவி லாற்றனீ யொன்றி யருளுவாய்.

(இ-ள்.) தேவனே! ஸோமனே! உனது நட்பினைப் பெற்ற மரண தர்மமுள்ள ஸ்தோதாவைக் கவியும், ஸ்வகாரிய ஸமர்த்தனுமாகிய நீ யடைந்து அதுக்கிரகிக்கிறாய்—(எ-று.) கவி, க்ராந்ததர்சி.

15. சோம வெம்வசை நீக்கிப் புரக்கவே
தீமைப் பாவங்கள் சேரா தெமக்கென்றுஞ்
சேம மீக; சுகத்தைச் சிறபபினீர்
தேம நண்பி னியைந்திதஞ் செய்கவே.

(இ-ள்.) ஸோமனே! எமது நிந்தனைகளை நீக்கிக் காப்பாயாக. எங்களால் செய்யப்பெறும் பாபங்களெங்களை யடையாதபடி காத்து, எங்களுக்கு

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

கோமத்தைத் தருவாயாக. சுகத்தை யெங்களுக்குத்தந்து எங்களோடு நட்புக் கூடி யெங்களுக்கு ஹிதஞ் செய்வாயாக—(எ-று.)

வருக்கம். 21.

16. ஓங்க சோம! வுறுக வெத்திக்கினும்
ஷீங்கு முன்னுடை நற்றிற வீரியம்;
தாங்கு நல்வலி யன்னந் தயங்குற
வீங்கு நீகொணர்ந் தெங்கட் களிகவே.

(இ-ள்.) ஸோமனே! நீ வளருவாயாக. எல்லாப் பக்கத்திலும் உன்னுடைய வீரியமானது வந்து தங்கட்டும். வலிமையைத்தரும் அன்னத்தை யெங்கட்குக் கொண்டுவந்து தருவாயாக—(எ-று.)

(வேறு.)

17. மத்தம் பெறு முத்தம சோம, வெலா
வுத்தம் பெறு மங்கழு வோங்குக; எஞ்
சித்தம் விழை யுத்தம கீர்த்தியினை
நித்தம் வளர் நண்பி னிலைத்துறவே.

(இ-ள்.) மதோத்தம ஸோமனே! எல்லா யுக்தமான (லதா) அங்கங்களும் ஓங்கட்டும். எமது சித்தம் விரும்பும் கீர்த்தியை (அல்லது சாயணரு ரைப்படி அன்னத்தை) எப்பொழுதும் வளர்க்கும் சினேகிதனுக நீ எங்களுக் கிருப்பாயாக—(எ-று.) உத்தம், யுக்த மென்பதன் சிதைவு.

(வேறு.)

18. பகைவரை வாட்டும் வீரம், பலத்தொடு சாரந் தோய்ந்து
வகைபெறு முண்டி, யுன்கண் மருவியே கூடி நிற்க;
தகைபெறு மமரமெம்மைச் சார்ந்திட வோங்கிச், சோம,
நகைபெறு வானிற் கீர்த்தி யுத்தம நடையிற் ருங்காய்.

(இ-ள்.) ஸோமனே! சத்துருக்களைக் கொல்லும் வீரமும், பலமும் ஸாரமுந் தோய்ந்த அவியுணவும் உன்னிடத்துக் கலந்து நிற்கட்டும். மரணமில்லாத தன்மையானது எம்மைச் சாரும்படியாக ஒளிபொருந்திய ஆகாயத்தில் நல்ல கீர்த்தியைத் தாங்குவாயாக—(எ-று.) மேற் பாட்டிலதை ரூபமான ஸோமனையும் இப்பாட்டு சந்திர ரூபமான ஸோமனையும் அறித்தன. வீரம் உண்டி எண்ணும்மைதொக்கன.

19. வான்முத விடத்து வைகுன் றேசினைச் சோம யாகம்
வான்பெற வியற்று வோரும் வணங்குவார்; அத்தே செந்த
மேன்படு மகத்தே சூழ்க; வெறுக்கை தந்தக மோட்டிக்கா
ருன்கெடா தளித்து வீர்ந்த தயகுவோய் வரலெம்மில்லே.

(இ-ள்.) ஸோமனே! வான்முதலிய விடங்களில் தங்கும் உனது தேஜஸை யாகஞ் செய்பவர்கள் வணங்குவார்கள். அந்தத் தேஜஸானது எம்முடைய உயர்ந்த யாகத்தினிடத்தும் வந்து பொருந்தட்டும். செல்வத்தை

மண்டலம் 1 சூக்தம் 91.

யளித்து எங்கள் பாபங்களையோட்டி எங்கள் (கால்) சந்ததிகெடாதபடி வீரர்களை (புத்திரர்களை)ப்பாதுகாப்பவனே, எமதுயக்ஞத்துக்கு வருவாயாக —(எ-று.) வடமொழியில் அவீரஹாவென்றுள்ளது. அதாவது வீரர்களைக் கொலலாதவனே அல்லது வீரர்களைப்பாதுகாப்பவனே யென்பது பொருள். வீரர் வீர்யோத்பன்னர், புத்திரர்.

20. அவிதரு மகத்தோற் காக்கு, மருங்கதி யசுவங், கற்று,
அவிதரு கருமத் தன்றி யிடுள்ளிகந் ததத்தொழிற்க
ணவியினிற் சகல கல்வி பார்வினிற் சீர்த்தி யோங்கிக்
கவலறு பிதாகேட் டின்பங் காணும் வீரனைச் சோமன்னே.

(இ-ள்.) ஸோமனுனவன், அவியுணவை யளித்து யாகஞ்செய்யும் எங்கள் யஜமானனுக்கு, வேகத்திற் சிறந்த குதிரையையும், கன்றோடு கூடிய கறவைப் பசுவையும், யாககர்மத்திலும், உலக நடையிலும், வீட்டு வேலைகளிலும் அவிதரும் தர்ச பூர்ண மாஸாதி கர்மங்களிலும், சகல வித்யாபூரணத்திலும், புகழ்பெற்றுப் பிதா கேட்டாநந்திக்கும்படியான வீரன் அல்லது புத்திரனையும், தருவான்—(எ-று) ஸோமன், அசுவம், கற்று, வீரனை மகத்தோற்கு ஆக்கும் எனப் பொருண்முடிபு கூறுக.

வருக்கம். 22.

21. போரினிற்புறங்கொடாதாய், வெற்றியைப்பொருத்து
வோய், தண்
ணீரோடுறக்கமீவோய், திறலினைநிறுத்துவோய், நற்
பேருளமகத்தோ, யில்லநலத்தினைப்பெற்றோய், கீர்த்தி
யேருளோய், சயத்தோய், சோம, வுன்னிடமதங்கொள்
வாமே.

(இ-ள்.) யுத்தத்திற் சத்துருக்களாற் றுரத்த முடியாதவனும், ஜயத்தையுண்டு பண்ணுபவனும், (மழைத்) தண்ணீரையும் ஸ்வர்க்கத்தையும் தருபவனும், வலிமையைக் காப்பவனும், கீர்த்திபொருந்திய யாகத்தை யுடையவனும், நல்ல வீட்டினை யடைந்தவனும், புகழ் பெற்றவனும், வெற்றியாளனுமாகிய ஸோமனே! உன்னிடத்து நாங்கள் களிப்பை யடையட்டும்—(எ-று.) ஓடி உம்மைப் பொருளது.

22. சோம, விவ்வோடதிக்கள் யாவையுந், தோயந்தன்னை
டேம வாக்குழுவு, மேய்த்து விரித்தணபரந்து தோன்றுஞ்
சேம வந்தரத்தை; யங்ஙன் செறிந்த பேரிருளை யுன்ற
னுமை வெஞ்சோதிதன்னு னெரித்து நீ வீட்டினையே.

(இ-ள்.) ஸோமனே இப்பூமியிலுற்பவிக்கும் எல்லாச் செடிகளையும் தண்ணீரையும், பசுக்கூட்டத்தையும் கூட்டுவித்துப், பரந்து விளங்கும் அந்தரத்தை விசாலமானதாகச் செய்தாய். அவ்விடத்து நிறைந்த பெரிய இருட்டினை உனது பெரிய சோதியினுற் கெடுத்தழித்தனை—(எ-று.) ஓ—நி ஓஷதி, மருத்துச் செடி, பொதுவாகச் செடியையும் குறிக்கும்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

23. வலனுறு சோம தேவ மருவுமுன் றெய்வச் சித்தத்
தலைவறுபொன்னெமக்கிங்கூட்டுவொன்பொருதல்;ஈர்சார்
வழியினுக் கீச னுன்னை யொருவரு மறிக்கா தேய்க;
மலையுறு போரி லெம்மை மதித்துறு மிடரை நீக்காய்.

(இ-ள்.) பலம்பெருந்திய ஸோமஞுகிய தேவனே! உனது தெய்வத் தன்மைபொருந்திய (அல்லது ஒளிபொருந்திய) புத்தியினுல், கெடாத பொன்னை யெமக்களிக்கும்வண்ணம் யுத்தஞ் செய்வாயாக. இருதிறத் தாரது வலிமைக்கும் நீயே ரசனும்; உன்னை யொருவரும் தடுக்காதிருக் கட்டும். யுத்தத்தில் எங்களுக்கு நேரும் இடர்களை நீக்குவாயாக—(எ-று.) ஈர்சார், உபயகட்சி, இருதிறத்தார்.

வருக்கம் 23.

92. மண்டலம் 1 அநுவாகம் 14 சூக்தம் 8.

18 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷ்டி கோதமன், வடமொழிச்சந்தம்: 1-4 ஜகதி, 5-12 த்ருஷ்டுப் 13-18 உஷ்ணி; தேவதை: 1-15 உஷஸ், 16-18 அசுவினிகள்.

(வேறு.)

1. இவ்வைகற் றேவதைக டங்கொடியை யுயர்த்தினவா
லென்ற பூர்வ
செவ்வியுறு திக்கினிற் பேர்பாதியினைத் தம்மொளியாற
செறித்த; வீரர்
கவ்வையுறு தடர்ப்பவர்த மாயுதத்தைத் தீட்டுதலிற் காந்தி
தன்னு
லெவ்வமற வுலகளிக்குந் தாய்ப் பசுக்கள் செவ்வொளியி
னேயாநிற்குமே

(இ-ள்.) இங்கே தோன்றும் விடியற்காலதேவதைகளாகிய உஷஸுக்கள் தமது (இருட்டையோட்டும்) கொடிகளையுயர்த்தின. கிழக்குத்திக்கிற் பாதிப்பாகத்தைத்தமது ஒளியினுல் நிறைத்தன. பகைவரையடக்கும் வீரர்கள் தங்கள் (வாள்முதலிய) ஆயுதங்களைத் தீட்டுவதுபோலத் தமது பிரகாசத்தால் உலகத்தையளிக்கும் தாய்ப் பசுக்கள் (செவ்வானங்கள்) தமது சிவந்த சோதியோடு பொருந்தி வருகின்றன—(எ-று.) இவ்வகைய உஷஸுக்கள் நம்மைக் காக்கட்டும் எனக் கூட்டுக. வைகல்கள் எனப் பன்மைப்படுத்திக் கூறியது உபசாரவழக்கென்பார் யாஸ்கர். செவ்வானங்கள் அங்கு மிங்கு மசைவது வீரர்கள் சட்டங்களிற் கத்திகளைத்தீட்டுவதுபோலுள்ளது என்ற உவமை வியக்கத்தக்கது.

2. செவ்வொளிகள்சுயமாகமிகவெளிதினுதித்தனவாற்;றேரின்,
வெண்மை
யெவ்வுறுநல்லாக்களினைத்தரினெளிதாகப்பூட்டுறு

மண்டலம் 1. சூக்தம் 92.

மவற்றை
யெவ்வமறத்தகைத்தேதிமுன்போலவுயிர்களுக்குத்
தெளிவையேற்றிக்
கவ்வுதமதோள்வியோடுசூரியன்றன்சோதியினிற்கலந்த
வன்றே.

(இ-ள்.) சிவந்த ஒளிகள்தாமாகவே அநாயாஸமாகத் தோன்றின. வெண்மையான பசுக்கள் (ஈண்டு கதிர்க்கற்றைகள்) தோல் நன்றாகப் பூட்டிக் கொள்ளுமவற்றைத் தமது தேரிற் கட்டி யேறி முன் (கழிந்தபகல்களைப்) போலப் பிராணிகளுக்கு ஞானத்தையளித்துத் தமதுகாந்தியோடு சூரியனுடைய தேஜஸிற்கலந்து கொண்டன—(எ-று.)

3. நாரியர்கடம்மொளியிலெருங்கியைந்துதூரதலத்தின்றுநாடி
யேரிய லுபதேசந்தனையருச்சித்தொளிபரபபு,
மெண்ணும் வீரர்
தாரிய லுந்தோள்வலியாற்றுவுதலின்;அனிகருமந்தன்னை
யாற்றிச்
சாரமுறுஞ்சுதைபிழிந்துமகஞ்செய்வோர்க்
கெப்பொருளுந்தயக்குமன்றே.

(இ-ள்.) நாரியர்களாகிய உஷஸுக்கள் தமது பிரகாசத்தால் ஸமானமாக ஒன்று கூடித் தூர தேசத்திலிருந்து வந்து அழகு பொருந்திய ஆகாயப் பிரதேசத்தை யர்ச்சித்துத் தோள் வலியிற் சிறந்த காலைகள் (தமது ஆயுதங்களோடு) எல்லாவிடங்களிலும் தாவுவதுபோல, வொளியைப் பரப்புவார்கள். அழகிய கர்மத்தைச் செய்து ஸாரமுள்ள ஸோமரதைப் பிழிந்து யாகஞ் செய்பவனுக்கு எல்லாப்பொருள்களையும் தருவார்கள்—(எ-று.) பரப்பும், தயக்கும், நிர்மாணமயக்கம். நாரியர் நரரை விருத்தி செய்வோர்.

4. நடமாதர்மானப்பல்லுருவவுடைதரித்திருளோடியோட்டித்
தடமடியைப்பசுசுரக்குந்தன்மையினிற்றன்னுரத்தைத்திறந்துகாட்டி
யிடமகலெல்லாப்புவனத்திலுஞ்சோதிவிரிததாக்களியையுங்
கோட்டத்
திடைநின்றுதாமாதவெளிப்படலி,னுஷதோன்றியிருள்சீப்பாளே.

(இ-ள்.) நடனஞ்செய்யும் மாதரைப் போலப் பலநிறமான உடையைத்தரித்து இருளோயோட்டி, விசாலமான மடியைப் பசு சுரந்து காட்டுவதுபோலத் தனது மார்பைத் திறந்துகாட்டி, இடமகன்ற எல்லா வுலகங்களிலும் தனது ஜோதியை விரித்துப், பசுக்கள் கொட்டிலிலிருந்து தாமே வெளிப்படுவதுபோல உஷஸ் வெளித்தோன்றி இருட்டைச் சேதிப்பாள் —(எ-று.) ந்ருதூரிவ என்பதற்கு 'ந்ரூம் ஸ்தூவத்திரிக்தீ கரோதி நருதூ: நாபித:' என்றும் ஒருபொருள் கூறுவர். மயிர் வினைஞனைப்போல இருட்டை வபனஞ் செய்து என்பது பொருள்.

5. கிழக்கினிற்செறியன்னுடன்கிளரொளியாருங்கண்டார்;
பழக்குறச்சர்வதிக்கும்பரந்துபேரிருள்சீக்கின்றூள்;

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

பழிச்சுறு மகயூபத்திற் பளிச்சென நபத்திற்றன்றே
சழுத்துவாள்; வான்பெண்கோலக்கிரணவெல்சேவித்தாளே.

(இ-ள்.) கிழக்குப்பக்கத்தில் நிறைந்த் அவளது (உஷஸினது) காந்தியை யெல்லாரும் பார்த்தார்கள். பின்பு எல்லாப்பக்கத்திலும் பரந்து உலகைமூடியுள்ள இருட்டையோட்டுகின்றாள். ஸ்தோத்திரம் செய்கின்ற யாகத்திலுள்ள கட்டுத்தறியைப்போலப் பளபளவென மின்னும்படி தனது காந்தியை யாகாசத்திற் சேர்ப்பாள். விண்ணின் புத்திரியாகிய உஷஸ் சித்திரபானுவாகிய சூரியனைச் சேவித்தாள்—(எ-று.) பட்டையோடு கூடி நன்றாகச் சீவப்பட்ட யூபஸ்தம்பத்திற்கு மெய்முதலியவற்றையூற்றி அத்வர்யுக்கள் அழகுபடுத்துவதுபோல உஷஸ் தனது அழகிய ரூபத்தால் ஆகாயத்தை யழகுபடுத்துகின்றாள் எனத்தொழிலுவமையாகக் கொள்க.

வருக்கம் 24.

6. கடந்தன மிவ்விருட்டி னெல்லையக்; காணும்வைகல்
மடந்தனை யகற்றி மன்னு முயிர்களை மீட்டுயர்த்தாள்;
இடந்தரு சீரை யேய்வான் வதிகரன் மலர்ச்சி யெய்திச்
சுடரொடு மனங்களிக்கத் துகளிரு ளருந்திஞளே.

(இ-ள்.) இந்த இருட்டினது எல்லையைக் கடந்தனம். மேலெழுந்து தோன்றும் வைகல் (விடியற்காலாபிமானி தேவதை) எல்லாப்பிராணிகளின் அஞ்ஞான அந்தகாரத்தையுமோட்டி அவற்றை யெழுப்பினாள். கீர்த்தியடையுமபடி, ஜனங்களை வசியம்பண்ணுவதிற் சாமார்த்தியமுள்ளோனது கைமுகத்தைப்போலப்பிரகாசத்தையடைந்து, நல்ல காந்தியோடு,(கண்டோர்) மனங்களிக்கும் வண்ணம் குற்றம் பொருந்திய இருட்டைத்தின்றொழித்தாள்—(எ-று.)

7. வான்மக ளொளியின் வாய்ந்தா ளுண்மையை மருவுவோரை
யேன்றிவ ணடத்துவாளை யேத்திஞர் கோதமக்கா
ரேன்றிஞேர் துதியா; லன்னந் தோற்றுவா, யுஷையே, மக்கள்
சான்று நன்மா வா வோங்கி யடிமைகள் சார்ந்த தீரின்.

(இ-ள்.) விண்ணின் புத்திரியும், ஒளிநிறைந்தவளும், உண்மையுள்ளவர்களை நடத்துபவளுமாகிய உஷஸையைக் கோதமக் குடியிலுதித்தவர்கள் ஸ்தோத்திரங்களால் ஏத்தினார்கள். உஷஸ்தேவியே! புத்திர பௌத்திரர்களோடுசிறந்து, குதிரைகளும் பசுக்களும் நிறைந்து, வேலைக்காரர்கள் மிருந்த சிறப்போடு கூடிய அன்னத்தை (போகத்தை) த்தருவாயாக—(எ-று.)

8. பொன்னெறி மொளிசிறந்து நல்வினைப் போற்றுகக்கு
நன்னய வுஷையே, வன்ன நண்ணிய பெருந்தனத்தை,
மன்னுறு கீர்த்தி மக்கள் மாவொடு மேவ வாளர்
துன்னுறு மதனை, நீயும் விளக்கு வித்ததனைத், தோய்வாம்.

(இ-ள்.) பொன்னெறி பிரகாசம் பொருந்தி ஸத்கர்மங்களோடு கூடிய ஸ்தோத்திரத்தைக்கேட்டுக் களிகொள்ளும் உஷஸே! உணவுப்பொருள்களோடும், கீர்த்தியோடும், புத்திரர்களோடும், குதிரைகளோடும் வேலைக்காரர்களோடும் கூடிய பெரிய செல்வம் உன்னால் பிரகாசம் பெறத்தரப் பெற்றதை யாங்கள் அடைவோமாக—(எ-று.)

மண்டலம் 1 சூக்தம் 92.

9. தேவி யிப்புவன் மெல்லா நோக்கி, மேற்காகும் திக்கிற்
பாவு தன் னெளியாற் பற்ப லிடமெலாம் பரந்து பூமி
மேவிய சீ வனெல்லாந் தொழிலுற விழிப்பித் தெண்ணுந்
தூவிய லவற்றெலாங்கட் டேர்ந்த வாக் குணர்ந்தா ளன்றே.

(இ-ள்.) (உஷஸாகிய) தேவி இப்புவனங்களையெல்லாம் நோக்கி, மேற்குப்பக்கத்திற் பரந்த தனது ஒளியினால் பலவிடங்களிலும் வியாபித்து, (பூமியின் கணுள்ள) எல்லாப் பிராணிக் கூட்டங்களுந் தத்தந்தொழிலைச் செய்யுமாறு அவற்றை யெழுப்பி, அவையெல்லாம் மனத்தில் நினைத்துப் பேசும் வாக்கை யறிந்தாள்—(எ-று.) இக்காரணத்திற்றான் 'உஷஸ் ஸூக்ரிதா வதி' என்று பெயர் பெற்றாள். அதாவது, உஷஸ்பிரியஸூக்த வாக்கோடு கூடியவள் என்று சொல்லப் பெற்றாள் என்ப. உஷஸ் வாக்கை யறிந்தாள் என்பதற்கு, உஷஸ் காலத்திற் றான் பிராணிக் கூட்டங்கள் இரவு கழிந்த பின்னர்ச் சப்தஞ் செய்யத்தொடங்குகின்றன வென்பது பொருள். 'பூமிமேவிய' என்னும் அடை வடமொழி மூலத்திலில்லை.

10. பழமை வாய்ந்தவளாந் தேவி பழகுறு மொரே நிறத்தி
னெழுவளே மீட்டு மீட்டு மெண்ணித்தன் காந்தியோடுங்;
கெழுமுறு மாணத் தோர்த மாயுளைக் கிழப்படுப்பா
ளழகிய பறவைப் பட்ச மரிந்து கொல்மறத்திபோன்றே.

(இ-ள்.) பழமையாகவந்து கொண்டிருக்குந் தேவியாகிய உஷஸாதோறும் ஒரேரூப நிறங்களுடன் (சூரியோதயத்துக்குமுன்) எழுவாள். வேடஸ்திரீ பறவையின் சிறகுகளை நறுக்கி ஹிம்ஸிப்பது போல (உலகத்திலுள்ள) மர்த்தியர்களது ஆயுளைக்கிழப்படித்துவாள்—(எ-று.) விஜ: இவ ஆமிஞ்ஜி' என்னும் வாக்கியம், மண். 2 சூக். 12 செய் 5ல் மறுமுறையும்வருகிறது.

வருக்கம் 25.

11. வானுறு தமஞ் சதிப்பாள், வயங்குயி ருணர்த்தித் தானை
யீன மார்ந் தொளிக்கு மல்லை யேகுவித், துகங்கள் மாந்த
ரூனமில் வகைபடைத்த வுவற்றினை யுடைத்துச் சாரன்
ரூனுகர் காந்தை தன்கண் கொண்டெளி சார்த்துவாளே.

(இ-ள்.) இருளையழிக்கும் ஜாரனுகிய சூரியனது காந்தையும், வானத்தின் கணுள்ள இருளை யொழிப்பவளுமாகிய உஷஸ் எல்லாப்பிராணிகளையுந் துயிலுணர்த்தி, தானுகவே யொளிர்ந்து கொள்ளுகிற இருட்டையோட்டி, மனிதர்கள் ஏற்படுத்தியுள்ள (கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும்) காலநிர்மாணங்களைப் போவதும் வருவதுமாக ஹிம்ஸித்தும், தனது செந்தப்பிரகாசத்தினால் விளங்குவாள்.—(எ-று.) யுகம் காலவளவை. ஸ்வஸாரம் என்னும் வடமெழிப்பதத்திற்கு உடன்பிறப்பு என்றபொருள் கூறுவர்மேனுட்டாசிரியர். இரவும் உஷஸும் உடன் பிறப்புக்களாம். ஆனால் சாயணரோ 'ஸ்வயமேவஸரந்தீம் நிசாம்' தானே போகும்நிசியை யென்பார். சாரன், ஜாரன் ராத்ரே: ஜாயிது: ஸூர்யன். இரவை மறையும்படி செய்பவன் அதாவது சூரியன் என்பார் சாயணர். அவனுக்குகந்த யுவதிஉஷஸாம்.

12. சித்திர வொளிசார் செல்வி பசுக்களிற் றிரிந்தகன்று,
தத்துநீர் கீழ்நோக் குற்றுச் சார்வதின் வெகுசார் சென்றே,

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

யுத்தமத் தெய்வ னோன்பை யுலகத்திடாள் காத்தாதித்தன்
மெத்திய கிரணத்தோடு மேன்மையின் விளங்குவாளே.

(இ-ள்.) சித்திரகாந்தியோடுகூடிய செல்வியாகிய உஷை, பசுக்கள் காட்டில் பலவிடங்களிலுந்திரிவது போலப்பரக்கத்திரிந்து, ஜலம் பள்ளமான விடங்களிற்செல்லுவது போல வெகுதூரம்போய், தெய்வவிரதங்களாகியதர் சபூர்ண மாசாதிகளோப்பாதுகாத்துச் சூரியனுடையகிரணங்களோடு கலந்துவிளங்குவாள்—(எ-று.) இத்தேவ விரதங்கள் பகலிற் செய்யப்படுவனவன்றி இரவிலல்லவென்பது பொருள்.

(வேறு.)

13. செல்வஞ்செறி நல்லுஷை யெம்மகருக்
கெல்வந்திடு மம்மகளின் மகருக்
கில்கொண்ட சிறப்பினை யீத்துதவுஞ்
செல்வந் தருவாய் திகழ் கேழுளதே.

(இ-ள்.) (அவியுண்வாகிய) செல்வநிறைந்த உஷையே! எங்களது புத்திரருக்கும் அப்புத்திரர்களது புத்திரர்களுக்கும் வீடுமுதலியவற்றை யமைத்துப்பராமரிக்கும் அழகிய வொளிபெருந்திய செல்வத்தைத் தருவாயாக—(எ-று.) எல்வந்திடுமென்றது எதுகைநோக்கிச்சேர்த்தது.

14. மாவும் பசுவும் வசனத் தெழிலும்
மேவும் முஷையே, மிளிர்வோய், பொருளைப்
பாவுந் தொழிலைப் புரியும் மெமது
தாவில் திசையிற் றம மோட்டுகவே.

(இ-ள்.) (எங்களுக்குக்கொடுக்கும்) பசுக்களோடும், குதிரைகளோடும் கூடியவளே, பிரியஸ்துதியவாக்கோடு கூடியவளே! விபாவரியே (ஒளியோடு மிளிர்பவளே)! உஷையே! செல்வத்தைப்பரப்புங்கர்மங்களைச் செய்யும் எமது திசைக்கணுள்ள இருட்டையோட்டுவாயாக—(எ-று.)

15. அவிசார் பொருள்க ளணைவோ யுஷையே!
சவிசா ருணைச் சடிலந் தனையே
புவிவாய் புனைக; பொருள் சோபனமேய்
குவை யாவையு மின்று கொடுத்தருள்க.

(இ-ள்.) வாஜிதேவதியே! (அவிக்குரிய வுணவுப்பொருள்களையடைந்தவளே!) உஷையே! விளக்கம்பொருந்திய அருணநிறமுள்ள குதிரைகளைத்தேரிற்பூட்டுக. சௌபாக்கிய நிறைந்த பொருட்குவைகள் யாவற்றையும் இன்றுகொண்டுவந்து தருவாயாக—(எ-று.) சடிலம், குதிரை. சவி ஒளி. அருணம், சிவப்பு.

16. பகை வெல்லுறுவீர், பரியும் மனமொத்
துகையும் மும்மத, ருப ரச்சுவினீர்,
தகைசால் தனமும் பசுவுந் தழுவும்
வகைசே சௌமந்ல் லகமே மருவீர்.

மண்டலம் 1 சூக்தம் 93.

(இ-ள்-.) (இதுமுதல் 3 இருக்குக்களால் உஷஸோடு கூடச்செல்லும் புத்தியோடுகூடிய அசுவினிகளைத்துதிக்கிறார்.) பகைவர்களை ஜெயிப்பவர்களே! அச்வினிகளே! ஸமானமானமனதோடு கூடியவர்களாய் உங்களது தேரைச்செலுத்துங்கள். சிறந்தபொன்னும், பசுவும் நிறைந்தவெமது கிரஹத்தைநோக்கிவாருங்கள்-(எ-று.) பரியும், விரும்புகின்ற; விரும்புகின்ற உள்ளமொத்தவர்களர் யென்க.

17. வானின் ஞெளியை மனிதர்க் கெனவே
தானுந் நிறுவிப் புகழ் சன்னுறுவீ
ரேனும் முறுதிப் பொருளீந் திவணே
யூனம் மறவெம் முறலச சுவினீர்.

(இ-ள்.) அசுவினிகளே! விண்ணினது ஒளியை மனிதர்களின் பொருட்டு நிலவவிட்டுப்பெருமைபெறுவீர்களாயினும், எங்களுக்கு உறுதிப் பொருள்களை (அவியுணவுகளை) யளித்துஎம்மை யடைவீர்களாக—(எ-று.) வடமொழி ரிக்குக்குச்சாயணர், 'அசுவினிகளே! நீங்களிருவரும் ஆகாசத்தில், புகழத்தக்கசோதியை எங்களால் அறியப்பட்ட விதமாகச் செய்தீர்கள். (அதனுற்றான் ஒளிஉங்களிடத்து உண்டானது.) நீங்களிருவரும் எங்களுக்காகப்பலத்தைத்தரும் அன்னத்தைக் கொண்டு வருவீர்களாக.' என மொழிபெயர்ப்பர்.--(எ-று.) அசுவினிகள் சூரியசந்திரரென்றும் பகலிரவுகளென்றும், தியாவாபிருதிவிகளென்றும் எண்ணப்படுவர்—யாஸ்கர். மண்.1, சூக்-89. செய்யுள்-3, நோக்குக.

18. வைகுஞ் சுக காரணர் பொற் குயவோர்
வைகா தரியை வதை செய்பவரை
வைகல் லெழுவீ ரிரு தேவரையு
மைதிற் றருவீர் சுதை யுண்டிடவே.

(இ-ள்.) விடியற்காலத்தி லெழுபவர்களே! சரீர ஆரோக்யத்தையுண்டு பண்ணுபவர்களும், பொன்மயமான தேரோடு கூடியவர்களும், சத்துருக்களை வதைப்பவர்களுமாகிய இரண்டு தேவர்களையும் சோமம் குடிப்பதற்காக இங்கு அழகாகக் கொண்டு வருவீர்களாக—(எ-று.) வைகல் லெழுவீரென்றது அசுவங்களை யென்பார் சாயணர். ஆஞல் காலையிலெழும் அத்வர்யுமுதலிய ரித்விஜர்களே யென்பதும் பொருந்து மென்பார் மேஞட்டாசிரியர். அரி, பகைவர். குயவு, தேர். கடைசிவரி யினவெதுகை.

வருக்கம் 27.

93 மண்டலம் 1 அநுவாகம் 14 சூக்தம் 9.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி:-ஷை கோதமன்; வடமொழிச்சந்தம், 1-3 அநுஷ்டுப், 4-7 த்ருஷ்டுப், 8 திருஷ்டுப்பும் ஜகதியும், 9-11 காயத்திரி, 12 த்ருஷ்டுப்; தேவதை அக்கினியும் ஸோமனும்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

(வேறு.)

1. யானு ரைத்திடுங் கவரவ வினியினை யெதிர் கேட்
டனமின் மறை யியம்பு மென்வசனத்தை யேற்றே
மேனலந்தரு விழைவினிற் சோம வக்கினிகாள்!
தானுறுஞ் சுகந் தாசுட னணையவே தயக்கிர்.

(இ-ள்.) இச்சைகளை வர்ஷிக்கும் அக்கினி ஸோமர்களே! யான் சொல்லுங் கவரவமான கூவினிகளை யெதிர் கேட்டு, மந்திரரூபமான ஸூக்தங்களைச் சொல்லும் எனது வசனத்தையேற்றுக்கொண்டு தாசுஷனுக்குச் சுகத்தை யளியுங்கள்—(எ-று.) தாசுஷன் யாகஞ்செய்பவன். அக்கினி ஸோமர் இணைத்தெய்வங்களென்றதை மண். 1 சூக். 17 செய் 1ற் பார்க்க. வ்ருஷணுவென்பதற்கு வன்மை மிகுந்தோ ரென்பார் மேலுட்டாசிரியர்.

2. யாருமை யிந்து வக்கினி யிருவர்கா ளீண்டு
பேருறும் வசனத்தினுற் பிறங்குறத் தந்திபோன்
ஏருற வவனுக்கு நல வீரி யத்தீதாடி
சீருறவளர் பசுவினை மாவொடுஞ் செறிப்பீர்.

(இ-ள்.) சோம வக்கினிகளே! உண்மைச்சிறந்த வசனங்களால் தந்திப்பவனுக்கு நல்லவீரியத்தையும், பசுக்களையும் குதிரைகளையுந்தருவீர்களாக—(எ-று.) இந்து, ஸோமன்.

3. நெய்சொரிந் தெவன் புரோடச நிறுவி யாவுதியைப்
பெய்பவ, னவ, னக்கினி சோமர்காள், பிறங்கும்
வெய்ய சந்ததி வீரியத் தியன்றவர் தம்ம ம
மையி லாயுட் காலமெலா மேலுறப் பெறவே.

(இ-ள்.) அக்கினி ஸோமர்களே! எவ்யஜமானன் நெய்யைச் சொரிந்து புரோடாசத்தை யளித்து ஆவுதி செய்கின்றானே அவன் விரும்பத்தக்க வீரியமிருந்த புத்திரர்களைக் குற்றமற்ற தனது ஆயுட்காலமெல்லாம் பெறட்டும்—(எ-று.)

(வேறு.)

4. தக்க நற்பசு வன்னத்தைப் பணிவையி னபகரித்த
வக்கினி சோமர் காளும் வீரிய மதிணை யாங்கள்
மிக்குணர்வு; மெந்தெய்வஞ் சூழ் பிருசய னெச்சத்தைப்
பக்குறக் கொன்று பல்லோர்க்கீகை சாதியைக்கண்டீரே.

(இ-ள்.) அக்கினி ஸோமர்களே! பணியென்னும் அசுரனிடத்திலிருந்து நீங்கள் பசுக்களாகிய அவனது உணவை யபகரித்ததிறமை எங்களாலறியக்கிடந்தது. எல்லாப்பக்தங்களிலும் சூழ்ந்த, பிருசயன் அல்லது. துவட்டாவென்னு மசுரனது புத்திரனுகிய விருத்திரனைப் பிளந்து கொன்று பலருக்கும் ஒரே சோதியையமைத்தீர்—(எ-று.) பணி பசுக்கூட்டங்களை யடைத்து வைத்திருந்த கதையை மண். 1 சூக். 6 செய். 5ற் காண்க. (Brisaya) ப்ருஸய: துவட்டாவுக்கு ஒருபெயர். என்? (ப்ரஸயதி ஸர்வம் வேஷ்டயதி)

மண்டலம் 1 சூக்தம் 93.

எல்லாவற்றையுஞ் சுற்றிக்கொள்ளுவதால். சேஷம், எச்சம், பிள்ளையென்ற பொருளில் வந்தது.

5. தொழிலினிற் சமான மானீ ரக்கினி சோமர்கா ணீ
செழிலினி ளுகாயத்தே யிருத்தினீ சொளிசார் மீளைப்;
பழிபினின் வசைசார் பாபம் பற்றிய நின்றும் யாறு
கழிதர விடுவித்தீரா லக்கினி சோமர்கா ணீர்.

(இ-ள்.) ஒத்த கர்மத்தோடு கூடிய அக்கினி ஸோமர்களே! ஒளி பொருந்திய நட்சத்திரமுதலியவற்றை ஆகாயத்திலமைத்தீர்கள். ஆறுகள் தாங்களடைந்த பழியும் அவதூறான பாபங்களும் கழியுமாறு, அக்கினி ஸோமர்காள், அவ்வாறுகளே அவற்றினின்றும் விடுவித்தீர்கள் அல்லது நீங்கச்செய்தீர்கள்-(எ-று.) இந்திரன் விருத்திரவதஞ் செய்ததனாற் பெற்ற பிரஹ்மஹத்தி தோஷத்தைப் பூமி, மரம், ஸ்திரீ, நீர் இவற்றிற் பரவச்செய்தான். அவற்றின் சுத்தியை அக்கினி ஸோமர்கள் செய்தார்களென்பார். மேலும் இந்திரனாற் கொல்லப்பெற்ற விருத்திரன் ஆறுகளில் விழுந்தான். அவனது சவம் விழுந்த காரணத்தால் ஆறுகள் வரம்புகடந்து துஷ்டதனஞ் செய்தன. அதனால் நதிகளடைந்ததோஷத்தை அக்கினிஸோமர்கள் நீக்கினார்களென்பது. தற்காலத்தும் ஆடிமாதம் முதன் மூன்று தேதிகளில் நதிக்குத் தீட்டென்று கர்விரியில் ஸ்நானஞ் செய்வதை நிறுத்திவைப்போருமுண்டு. அவ்வழக்கம் இச்செய்யுளை யாதாரமாக வுடையது போலும்.

6. உங்களி லொருவன் றன்னை யுயர்ந்த மாதரிச்சுவானன்
றங்கும் விண்ணிடத்தினின்று தந்தனன்; மற்றையோனைப்
பொங்கரினின்றுமீர்த்தான்சேனனும்;மறையாற்பொங்கி
யங்கண் மாதல மமைத்திர் யாகத்துக் கங்கி சோமீர்.

(இ-ள்.) அக்கினிஸோமர்களே! உங்களில் ஒருவனாகிய அக்கினியை மாதரிச்வான் முதல்முதல் விண்ணிலிருந்து (பிருகுவுக்காக) க்கொண்டு வந்தான். மற்றொருவனாகியஸோமனை (கொடிரூபமாகவிருந்தவனை) (மேரு) மலை யுச்சியின்கண்ணிருந்து சேனப் (பருந்து)பட்சிரூபமாகவிருந்தகாயத்திரிகொண்டுவந்தாள். நீங்களிருவரும் ஸ்தோத்திரஞ்செய்யப்படும் மந்திரங்களால் வளர்ச்சியை யடைந்து (இதரதேவர்களது) யாககாரியங்களுக்காகப் பரந்த உலகத்தைச்சிருஷ்டித்தீர்கள்—(எ-று) மாதரிச்வான் அக்கினியைத் தந்த கதையை மண் 1 சூக் 60 செய் 1ல் நோக்குக. சேனஞ் சோமந் தந்ததைமேல் மண். 1 சூக். 80 செய். 2லும் காட்டினார்.

வருக்கம் 28.

7. அக்கினி சோமர்காள் யா மளித்திடு மவியை யுண்பீர்;
மிக்க வள்ளன்மை யுள்ளீர், மேவு மஃதேதற்றுத் துட்டி
புக்கபிற் சிறந்த காவல பொருந்திய சுகத்தைச் சேர்ப்பீர்;
தக்க நன்மகத்தோற் கென்று சமனமூந் தெளிவு மீவீர்.

(இ-ள்.) அக்கினி ஸோமர்களே! யாங்கள்தரும் (ஓமத்துக்காக ஆஹவநீய ஸமீபத்தில் வந்துள்ள இந்த) அவியுணவையுண்ணுங்கள். வண்மையிற்சிறந்தவர்களே! அதனையேற்றுத்திருப்தியடைந்து எங்களுக்கு நல்ல காவலோடு கூடிய சுகத்தையளிப்பீர்களாக. யாகஞ்செய்பவனுக்கு ரோகசமன

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

த்தையும் பயனிவாரணத்தையும் தருவீர்களாக—(எ-று.) துட்டி, துஷ்டி, ஸந்துஷ்டி, திருப்தி. வடமொழியில் சமனம் யாவனம் என இரண்டு சொற்க ளுண்டு. அவற்றுள் முன்னையது ரோக சாந்தியையும் பின்னையது பயத் தெளிவையும் குறிக்கும். சமனஞ்ச ரோகாணும் யாவனஞ்ச பயாநாம்'. என் பது யாஸ்கர் வசனம்.

(வேறு.)

8. யா, ரங்கிரோமர்கா, ளிங் கெய்திய தேவ பத்தி
கூர், ஆண்புரோடாசத்தைக்கொடித்தவிசொரிவோர், னன்னன்
ரூரணியிலிற்றுமகந்தனைக்காத்துப்பாபமதைச்சாராதோட்டி
யேருறவவ்யஜமானன்றனக்குரனிபெருஞ்சுகத்தையீ
வீரே.

(இ.-ள்.) அக்கினி ஸோமர்களே! எந்தயாககர்த்தா தெய்வபக்தி யோடு சரு புரோடாசங்களைத்தந்து அவியைச்சொரிபவரை அந்தயஜமா னன்செய்யும் யாகத்தைக்காப்பாற்றி அவனுடையபாபங்களை யோட்டுவது மல்லாமல் அவனுக்கு மிகுந்த சுகத்தையு மளிப்பீர்கள்—(எ-று.) இச்செய் யுள் இருசந்தமுள்ளதாக எழுதப்பட்டுள்ளது. என்? வடமொழியிலும் த் ருஷ்டுப் ஜகதியென இருசந்தங்களோடு கூடியிருப்பதாலென்க. சருவெ ன்பது சமைத்தவுணவு, அதனை யுண் என்றார். புரோடசம் மாவைக்கிண்டி நீரூற்றிப்பிசைந்து குதிரைக்குளம்புவடிவமாகக் கூர்மப்படுத்தியது.

(வேறு.)

9. அங்கிசோமி, ரிணையழைப் பெய்துவீர்!
தங்கு மொதத தனத்தினி, தொதுதி
யங்க மாக வுவந்திடிர்; தேவர்நாத்
தங்குவீர் சிறப்பாகத் தயங்கியே.

(இ-ள்.) அக்கினிஸோமர்களே! ஸமானமாக வழைக்கப்படுபவர்க ளே! செல்வத்திலொத்தபெருமை வாய்ந்தவர்களே! எங்களது ஸ்தோத்தி ரங்களினிடத்து ஸந்தோஷிப்பீர்களாக. தேவர்களுக்குமத்தியில் சிறப்பாகத் தயங்கி யமர்வீர்களாக—(எ-று.) நா, மத்தி, நாப்பண்.

10 அங்கி சோமனி, ராச்சியங் கொண்டுமக்
கிங்கவியை யியைத்திடும் யாகவா
னங்க மாக வருநிதி யெய்துறப்
பொங்கொளியிற் புரிந்து வயங்குவீர்.

(இ-ள்.) அக்கினிஸோமர்களே! நெய்கொண்டு உமக்குஅவியைத் தரும் யாககர்த்தா பெரிய செல்வத்தை யடையுமாறு ஒளிகாலுவீர்களாக—(எ-று.)

11. அங்கி சோமனி, ரா ரிவ்வெமதவி
தங்க விட்டதைத் தாங்கி, மகிழ்வினைத்
துங்க மாகத் துதைந்து குழுவியே
யெங்க ளண்மை யியைய வருகுவீர்.

மண்டலம் 1 சூக்தம். 94.

(இ-ள்.) அக்கினி ஸோமர்களே! நிறைந்த இந்த எங்களதவிப்பொருளையேற்று மகிழ்ந்து கூடி எங்களருகின் வருவீர்களாக—(எ-று.)

12. அக்கினி சோமர்கா, ளெ மசுவத்தை யோம்பீர்; ஆக்கள் மிக்க நல் லவிப்பொருள்கள் மிளிருற வளர்க; வெங்கட் கொக்க விம்மகத்தோனுகு முறுத்துக வ்வியை; யாஞ்செய் தக்க வீம்மகதத்தைச் செல்வச சித்தியிற் றயக்குவீ ரே.

(இ-ள்) அக்கினி ஸோமர்களே! எங்களது குதிரைகளைப் பரிபாலிப்பீர்களாக. பசுக்கள் பால்முதலிய அவிப்பொருள்களிற் சிறந்து வளரட்டும். எங்களுக்கும் இவ்யாகர்தாவுக்கும் பலத்தையூட்டுவீர்களாக. யாங்கள் செய்யும் இந்த யாகத்தைச் செல்வப் பயன்றருவதாகச் செய்வீர்களாக—(எ-று) சாயணர் எங்களுக்கும் யாககர்த்தாவுக்கும் என உம்மைத்தொகையாக்கொள்ளாது யாகஞ் செய்பவர்களாகிய வெங்களுக்கு என உரை கூறுவர். இந்நூலாசிரியர் மேஞ்ட்டாசிரியருரையைப் பின்பற்றியெழுதியது இச்செய்யுள்.

வருக்கம் 29.

94. மண்டலம் 1 அநுவாகம் 15 சூக்தம் 1.

16 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆங்கிரஸன் புத்திரன் குத்ஸன்; வட்மொழிச் சந்தம்: 1-14 ஜகதி, 15, 16 த்ருஷ்டுப்; தேவதை: அக்நி; இச்சூக்தம் உபயோகப்படும் இஷ்டிகளில் மித்ரன், வருணன், அதிதி, விஷ்ணு, பிருதுவி, தியாவாவென்னும் ஆறு தேவதைகளுங் கூடவரும். ஆஞல் இசசூக்தத்துக்கு அதிதேவதையது வெண்ணல் அக்கினியே.

1. வணக்குரியன் ஜாதவேதஸனுக்கா விம்மறையை மனத்தினுண்ணி
யிணக்குறுவாந்தோதனைத் தச்சனுறுத்துதனோர; விதனைப்போற்று
மணத்தொழிலில் யாங்கணனி சிரத்தையொடு தெளிவுள்ளோம்;
வனருமங்கீ!
யுணக்குமுரு தெமையெடுப்பாய் வாய்ப்பினுனதரு நட்பையுவந்த
பின்பே.

(இ ள்.) வணங்குதற்குரியவனும், ஜாதவேதஸனுமாகிய அக்கினிக்காக இந்தச் சூக்தரூபமான மந்திரத்தை மனத்தினுல் நினைத்துத், தச்சன் தேரையுருப்படுத்துவதுபோல உருப்படுத்திச் சேர்ப்போம். இவ்வக்கினியை ஸ்தோத்திரஞ் செய்யும் மங்கலகாரியத்தில் சிரத்தையும் புத்தித்தெளிவுமுடையோம். அக்கினியே! உனது நட்பைப்பெற்ற பின்னர் யாங்கள் கெட்டுப்போகாதபடி எங்களைக்காப்பாயாக—(எ-று.) ஜாதவேதஸன் என்னும் பதத்தின் பொருளை மண். 1. சூக். 44. செய். 1-ற் பார்க்க.

2. எவ்யஜமானனுக்கென நீயவிசுமப்பாயம்மகத்தோ ணெணமுடிப்
பான்,
தெவ்வரிலாதுறைகுவான், வீரியஞ்சார்தனமதனைச் சிறக்கத்தாங்கி,
யெவ்வமற வோங்குவா, னின்மையவன்றனைச சாரா; தேய்ந்தவங்கீ!
கவ்வையுரு தெமையெடுப்பாய் வாய்ப்பினுனதருநட்பைக்கண்ட
பின்பே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

(இ-ள்.) எந்த யாககர்த்தாவுக்காக நீ அவிப்பொருளை மேற்பார்வை அந்த யாக கர்த்தா தனது எண்ணத்தைச் சாதித்துக்கொள்ளுவான்; பகைவரில்லாது வாழ்வான்; வீரியம் பொருந்திய தனத்தைப் பெறுவான்; பெற்றுக்குறைவின்றி யோங்கிவாழ்வான். அவனைத் தரித்திரமடையாது. அக்கினியே! உன்னுடைய நட்பைப்பெற்றபின்னர் யாங்கள் கெட்டுப்போகாதபடி யெங்களைக்காப்பாயாக—(எ-று.)

3. உனை மூட்டுஞ்சுத்தி யெமக்கியைக; வெமதெண்ணமெலா முடனே பூர்த்தி
வனைக; வுனதிடத்தே பகைவர்களு மவிப்பொருளை மதித்துண்
டின்புர்;
பினை நீயுமதிதி சுரர்த்தருக, விவைவிரும்புகின்றோம், பிறங்குமகனி,
யினைதலுரு தெமையெடுப்பாய் வாய்ப்பினுனதருட்பையையைந்த
பின்பே.

(இ-ள்.) உன்னை மூட்டுஞ் சக்தி யெங்களுக்குண்டாகட்டும்; எங்களெண்ணங்களை யெல்லாம உடனே பூர்த்தி செய்வாயாக; உன்னிடத்திலேயே எல்லாத்தேவர்களும் அவிப்பொருளைப் புசிக்கிறார்கள். பின்பு நீ அதிதிபுத்திரர்களாகிய ஆதித்தியர்களை அல்லது தேவர்களைக் கூட்டிக்கொண்டுவருவாயாக; இவையெல்லாம் யாகங்கள் உன்மாட்டு விரும்புங்காரியங்களாம். அக்கினியே! மற்றவை முன்போல—(எ-று.) 'மிக்கவதிதிப் பெயரான் முப்பத்துமுக்கோடிவிண்ணோர்த்தா' வென்பது கருதத்தக்கது.

4. தமித்தின்றிப் பர்வணங்களோறுனக்கு நினைப்பூட்டச்சார்ந்துயாகச்
சமித்துகளொளிவளர்க்கத்தேவை,மவிப்பொருளுஞ்சம்பாதிப்போம்
நிமித்தகாரணஸ்வ ரூபாடதிக ணிலை தொழிலை நிறுத்தா; யங்கி!
துமித்திடா தெமையெடுப்பாய் வாய்ப்பினுனதருட்பைத்தோய்ந்த
பின்பே.

(இ-ள்.) நிறையுவா குறையுவாக்காலங்களோறும் உனக்கு ஞாபகமூட்டும்படி பொருந்தி 21 விதமானமரச்சமித்துக்களையும் அக்கினிகாரியங்களுக்காகத் தேடுவேம். அத்தர்சபூர்ணமாஸாதிகர்மங்களில் வேண்டியகருரோடாசமாகிய அவிப் பொருள்களையும் சம்பாதிப்போம். ஜீவனுதாரமாயுள்ள ஓஷதிகளை நிலைப்பிப்பாயாக. அக்கினியே! மற்றவைமுன் போல-(எ-று.) பர்வணம் ஒருபட்சம். பர்வணங்களோறும் பூர்வபட்ச அமரபட்சங்களோறும் அநுமதி ஒவ்வொரு அமாவாசை பௌர்ணமியிலும். அதைவற்புறுத்த வேதமதிதந்றி பென்ற அடை சொற்றது. ஒரு அமாவாசையோடாவது அல்லது ஒரு பௌர்ணமியோடாவது நின்று விடாமல் என்றபடி. சமித்துக்கானமரங்கள் இருபத்தொன்றென்பார் சாயணர். சரு அன்னமும், புரோடாசம அல்லது புரோடாசம் இன்னமாவுமாம்.

5. அவன்கிரணமாத்தர்களைக்காப்பதனிற்செல்கின்றவன்றிப்பின்னர்த்
துவயதாதாவிரண்டுகாலுயிர்க்கடமைக்கதிராற்றுதைத்துகாக்கும்;
கவமயமாயிருள்கீதெல்லாநேரற்றமுகையினீயுயர்ந்தாய்;அங்கி!
யமமடையாதெமையெடுப்பாயுவப்பினுனதருட்பையடைந்த
பின்பே.

(இ-ள்.) அவ்வக்கினியினது கதிர்கள் மனிதர்களைக் காப்பாற்றுவதிற் செல்லுகின்றன. அவ்வாறும், இரண்டு பிராணிகளையும், நான்காற்பிர

மண்டலம் 1 சூக்தம் 94.

ணிகளையு நெருங்கிக்காப்பாற்றும். புதிதாக விருளையோட்டியெல்லாப் பொருள்களையும் கண்ணுக்குத் தோற்றுவிக்கும் (உஷஸ்) விடியலினைக்காட்டிலும் நீ பெரியவன். அக்கினியே! எனையவைமுன்போல—(எ-று.) அக்கினி இரவு முழுவதும் இருட்டினை யோட்டி நிற்க. உஷஸ் விடியற்காலத்தில் மாத்திரமே அவ்விருட்டையோட்டுவதால் அக்கினி உஷஸ் னுயர்ந்த தென் பார் சாயணர்.

வருக்கம் 30.

6. அத்துவரனேயன்றிமுக்கியமாயோதாவுமாவாய்;யாக
மெத்தியவம்மறையோர்க்குத்தொழினமுறையைத்தெரிவிப்பாய்,
மேவும்போதா;
வொத்தகுடிப்புரோகிதனே,யாவுமுணர்தீர,நிறைவுறுத்து மங்கீ,
சொத்தையுருதெமையெடுப்பாய்வாய்ப்பினுனதருநட்பைத்தோய்ந்த
பின்பே.

(இ-ள்.) அக்கினியே! நீ அத்வர்யுவாம்; முக்கியமான ஹோதாவாம்; யாகப்பிராஹ்மணர்களுக்குச் செய்யும் முறையையும் காலத்தையுங்கற்பிக்கும் பிரசாஸ்தாவாம்; (யாகசாலையைச் சுத்தஞ்செய்து சாமக்கினியையைச் சேகரித்து வைக்கும் போதாவுமாம்; தொல்குடியில் வந்தபுரோகிதனே அல்லது பிரஹ்மாவே! எல்லாவற்றையு மறிந்ததீரனே! (எற்றக்குறைவில்லாமல் யாகத்தைப்)பரிபூரணமாக்குபவனே! உன்து சினேகிதத்தைப் பெற்றபின்பு எங்களுக்கு அருங்கேடு வராமற் காப்பாயாக-(எ-று.) இவ்விருக்கில் அக்கினியே யாகப் பிராஹ்மணர் பதினறுவருமாம் என்றுகூறினர். அவராவார், அத்வர்யு; ஹோதா; பிரஹ்மா, ஆக்ஞீத்ரன், உத்காதா, பிராஹ்மணாச்சமஸ், அச்சாவாக, ப்ரஸ்தோதா, பிரசாஸ்தா, முதலியோர். உத்காதா ஸாமவேதமும், ஹோதா ரிக்வேதமும்,அத்வர்யு யஜுர்வேதமும் தெரிந்து சொல்லுபவ ரென்று மேல் மண். 1 சூக். 7 செய் 1ற் சொன்னார். ரண்டு அத்வர்யு யாகப் பொருள்களையளிக்கும் கர்த்தாவென்றும், பிரசாஸ்தா மித்திராவருணர்க ளென்றும், புரோஹிதன் பிரஹ்மா அல்லது பிரஹஸ்பதி தேவர்களுக்கிருப்பது போலிருந்து யாககார்யத்தை நீடித்துவோனென்றும் சாயணர் விசேஷவுரை கூறுவர். சொத்தை, அருங்கேடு.

7 அழகமருமங்கம்வாய்ந்தெத்திசையுஞ்சமமாகவார்கின்றுய்நீ
பழகுமொளியருகினிற்போன்மிக்கொளிர்வாயதி தூரம்பரந்துநின்றும்
கழியிருளினிரவெனினுந்தேவநனிகாந்தியொடுகாண்பாயங்கீ;
யிழிவுபெருதெமையெடுப்பாய்வாய்ப்பினுனதருநட்பையேய்ந்த
பின்பே.

(இ-ள்.) அக்கினியே! அழகுபொருந்திய அவயவங்களோடு எல்லாப் புக்கத்திலுஞ் சமமாக நீ நிறைந்து நிற்கின்றாய். தூரதேசத்திலிருந்தும் ஸமீபத்திலிருப்பது போலப் பிரகாசிக்கிறாய். மிக்க இருணிறைந்த இரவிலும், தேவனே, மிகுந்த வொளியோடு பார்க்கிறாய். உனது நட்பை ஊன்றியமாகப்பெற்ற பின்பு எம்மைக் கெடுக்காதெடுப்பாயாக—(எ-று.)

8. சோமரிடவம்புரியுமவன்றேரேமுன்னிற்க;தோயுமெந்தம்
ஓமாதிசயமுரைப்பண்,தேவர்காள்,தீயோரையொறுத்துவெல்க;
வரமாதிறிறையெமதுமொழிகேட்டுப்பொலிவுபெறவளர்ப்பீர்;
அங்கீ.

அஷ்டகம் 1 அத்தியாயம் 6.

நோமேயாதெமைதெடுப்பாய்வாய்ப்பினனதருநட்பைத்தோய்ந்த
பின்பே.

(இ-ள்.) (அக்கினியை யவயவமாக வுடைய ஸுக) தேவர்களே! ஸோமம்பிழியும் யஜமானனது தேரே மற்றெல்லாருடைய தேரைகாட்டிலும் முன்னணியில் நிற்கட்டும். எமது புகழ்த்தோத்திரங்கள் பாபபுத்தியுள்ளவர்களைத் தண்டித்துச் சயங்கொள்ளட்டும். அழகு முகலிய நிறைந்த எமது வசனங்களைக்கேட்டு அவற்றை யோங்கச் செய்வீர்களாக. (ஸர்வ தேவர்களுக்கு மாதாரமாயுள்ள) அக்கினியே! உனது நட்பைப் பெற்றபின்பு எமக்குத் தோஷம் நேராதபடி காப்பாயாக—(எ-று.)

9. உனது படைக்கலங்களினுற்றீமொழியுந்தினைவுமுற்றுர்தம்மை
மனதுகுளிரக்கொல்க; வரக்க, ரருகொடு தூரமருவியோரை
யவ்வுமுறையாற்றல்; துதிப்போர்க்குமகவன்னதியையமைக்கல்;
அங்கி!
யினையலுறுதெமையெடுப்பாய்வாய்ப்பினனதருநட்பையியைந்த
பின்பே

(இ-ள்.) அக்கினியே! உனது ஆயுதங்களாற் றீமொழியும் தீ நினைப்பு முள்ளவர்களைக் கொல்லுக. தூரத்திலும் சமீபத்திலுமுள்ள ராக்ஷஸர்களையு மம்மாதிரியே கொல்லுக. ஸ்தோத்திரஞ்செய்பவனுக்கு யாகத்துக்குவேண்டிய நல்லமார்க்கத்தை யேற்படுத்துவாயாக. உன்துணைகத்தையடைந்தபின்பு எங்களுக்குக் கேடுவராதபடி காப்பாயாக—(எ-று.)

10. செவ்வொளியிற்பிறங்குமிருசுதிரைகளுத்தேரதனிற்சிறக்கச்சேர்த்த
வவ்வமயங்காண்டவுன்னுதமிடபமுழக்கடுத்துநிற்குங;
கவ்வுபுகைக்கேதனத்திற்கானகத்துப்பரந்திவாய்கடிதின்; அங்கி!
கவ்வையுறுதெமையெடுப்பாய்வாய்ப்பினனதருநட்பைக்கண்ட
பின்பே

(இ-ள்.) அக்கினியே! சிவந்தவொளியோடு கூடிய குதிரைகளிரண்டையும் உனது தேரில் நீ பூட்டிய அச்சமயத்தில் வாயு தூண்டாநிற்க உனது சப்தம் எருதின் முக்காரம்போற் கேட்கும். தூம கேதுவோடு காட்டினிடத்தேநீ பரந்து செல்லுவாய். உனது நண்பைப்பெற்றபின்பு எங்களுக்குப் பழிநேராதபடிகாப்பாயாக—(எ-று.). புகைக்கேதனமென்றது, புகையுள்ளகாரணத்தால் நெருப்புண்டென்று அறியப்படுவதால் அக்கினிக்குத் தூமம் கேது (கொடி அல்லது நினைப்பூட்டுவது) ஆயிற்று.

வருக்கம் 31.

11. உன்முழக்கிற்பறவைகளுநடுங்குமாற்; றுரும்புநீயுண்ணும்போது
நின்பொறிகணெடுந்தூரம்பரந்துவிழும்; பின்னாநெறி, நினக்கும்,
நின்னை
மன்சுமக்குந்தேரினுக்குஞ்செலற்கெளிதாவாய்ந்திடுமே; மகிழுமங்கி,
துன்பமுறுதெமையெடுப்பாய்வாய்ப்பினனதருநட்பைத்தோய்ந்த
பின்பே.

(இ-ள்.) அக்கினியே! (மேற்பாட்டிற் சொல்லப்பட்ட விதமாக நீகாட்டிற்குள் அழைந்து) காம்பீர்யமான முழக்கத்தைச் செய்வதைக் கேட்டுப் பறந்து செல்

மண்டலம் 1. சூக்தம் 94.

லக்கூடிய பட்சிகளெல்லாம் நடுக்கமடையும் (பட்சிகளே நடுங்குமென்றால் ஓரய் முதலிய பிராணிகளின் நடுக்கத்தைச் சொல்லவே வேண்டிய தில்லையென்பார்சாயணர்). அக்காட்டிலுள்ள தருமபுகளை யுண்ணும போது உனது பொறிகள் பரந்து வெகுதூரத்திற் போய்விழும். அதற்குப்பின் அக்காட்டு வெறியானது உனக்கும், உன்னைச் சுமந்து செல்லும் தேருக்குஞ், செல்லுவதற்கு மிக எளிதாகவமையும். உனதுகட்டளையடைந்தபின்பு எங்களுக்குத் தீன்பம் நேராதபடி யெங்களைக் காப்பாயாக — (எ-று.)

12. மித்திரனேவருணனேயுமிவன்ருங்குமாற்றலொடுமேவினிற்க;
தத்துறவேலிற்செலுங்காண்மருதர்சினமற்புதமாச்சாரும்;எஞ்சட்
கொத்தசுகமளிக்கல்;அவர்மனமெம்பாற்றிரும்புநெறியுறுத்தாய்;
அங்கி!
சொத்தையுறுதெமையெடுப்பாய்வாய்ப்பினனதருநட்பைத்தோய்ந்த
பின்பே.

(இ-ள்.) (அக்கினியைத்துதிக்றும்) இவன் மித்திரா வருணர்களின்ரூரணையையும் பெறட்டும. (அதாவது பகல பிமானிதேவதை யாகிய மித்திரனும் இரவபிமானி தேவதையாகிய வருணனும் இவ்வகினியை வணங்குவோனைக் காக்கட்டும் என்றபடி) மருத்துக்கள் கீழ்நோக்கிச் செல்லும் போது அவர்களுடைய கோபமானது அற்புதமாய் (தாங்கமுடியாததாய்) அமைந்து கிடக்கும். அக்கினியே! எங்களுக்குச்சுகத்தையளிப்பாயாக. அவர்களுடைய (மருத்துக்களுடைய) மனம் எம்பாற்றிரும்பும்படியான மார்க்கத்தையமைப்பாயாக. உனது கட்டளையடைந்தபின்பு எங்களுக்கு அருங்கேடு நேராதபடி காப்பாயாக - (எ-று.)

13. தேவர்களிற்றேவனீ;யாவருக்கும்பெருமைமிகுசிநேகிதன்னீ;
மேவுவசுக்களில்வசுநீ;யாகமதிற்சோபனத்தின்மேவுவாய்நீ;
தாவுமுனதிடமகலுத்தமப்புகலிற்றங்கவெமைத்தயக்காய்;அங்கி!
யோவலுறுதெமையெடுப்பாய்வாய்ப்பினனதருநட்பையுவந்தபின்
பே.

(இ-று. அக்கினியே! நீ தேவர்களிற்சிறந்த தேவனும் (ஒளிபொருந்தியவனும என்றபடி.) எல்லாருகும் மகிமைபொருந்திய சிநேகிதனும் ஆயாம். செல்வங்களிற் சிறந்த செல்வமும் நீ. யாகத்தலத்திற் சோபனத்தோடு வந்து வீற்றிருப்பாய். உனது விஸ்தீரணமான பாதுகாவலமைந்த யாகத்தலத்தில் யாங்கள் தங்குமாறுசெய்க. உனது கட்டளைப்பெற்றபின்னர் யாங்கள் கேட்டையடையாதபடி யெங்களைக்காப்பாயாக—(எ-று.)

14. உன்னகத்தேவளர்க்கப்பட்டுயர்சோமவாவுதியோடுறைந்தீயு
மன்னுசுகோத்தமமளிப்பான்போற்றடைந்துகீர்த்தியொடு
மருவுவாய்; பி
ன்னுன்னுகின்றதாசுடனுக்குயர்ந்தமணிநிதியளிப்பாய்;ஒங்குமங்கி
கின்னமுறுதெமையெடுப்பாய்வாய்ப்பினனதருநட்புக்கிடைத்த
பின்பே.

(இ-ள்.) உன்னுடைய ஸ்வஸ்தானமாகிய (உத்தர வேதியில்) வளர்க்கப்பட்டு, ஸோம ஆஹுதியைப்பெற்று நீயும் உத்தமச் சுகத்தையளிக்குமாறு ரித்விஜர்களால் ஸ்தோத்திரம்செய்யப் பெறுகிறாய். பின்னர் அவியளிக்கும்

அஷ்டகம் 1. அத்தியாயம் 6.

யஜமானனுகிய தாசுஷனுக்கு ரமணீயமான கர்மபலத்தையும், செல்வத்தையும் தருவாய். அக்கினியே! உன்னுடைய அரிய நட்பையடைந்தபின்பு எங்களுக்குத் துன்பம் நேராதபடி காப்பாயாக—(எ-று.) மணியென்பதற்கு ரத்நம என்பது வடமொழிப்பதம். இதற்குச் சாயணர் ரமணீய கர்மபலம் என்று உரைகூறுவர்.

15. எகணும்பரம்தோய்,நன்மையேய்பொருள்படைத்தோய் யார்க்குத்
தகுறை முழுச்சுபத்தித் ருபகணீர்த்தன்மை
யிகுற வைப்பா யாவற் கெழில்வலி யூட்டுவாய், அச்
சிகலி னரன் சிறப்பான்; நிகழ்க யா முன்றனத்தே.

(இ-ள்.) எல்லாவிடத்தும் பரந்தவனே! நன்மைசிறந்த பொருள் களைப்படைத்தவனே! எவனுக்கு முழுச்சுபமும் பொருந்தும் வண்ணம் தாபங்களை நீக்கிக் குணம். நிறைவிப்பாயோ, எவனுக்குச் சிறந்த பலத்தை சேர்ப்பாயோ அந்தமனிதன் சிறந்து தோன்றுவான். யாகங்கள் நீயளித்த செல்வத்தோடு விளங்குக—(எ-று.)

16. பாவுறு குணங்கண் முன்பு பகர்ந்தவை பரந்த வங்கி
தேவ, சௌபாக்கியதையத் தோந்திங் கெமாயு ளோம்பல்;
தாவரு புவியும் வானுஞ் சிந்துவு மதிதி தானு
மேவு மித்திர வருணர் தாமுமெம்மதனைக் காக்க.

(இ-ள்.) மேற்சொல்லிய குணவிசேஷங்கள் பரந்த அக்கினிதேவனே!,சௌபாக்கியத்தை யறிந்து எங்களது ஜீவிய காலத்தை இந்தக்கர்மத்தினிடத்து விருத்தி செய்வாயாக. பிருதுவியும், வானமும், சிந்துவும் அதிதியும், மித்திரனும் வருணனும், எம்முடைய அவ்வாயுளைக்காகட்டும்—(எ-று.) மித்திரன், வருணன், அதிதி இவற்றின் பொருளை மண். 1 சூக். 89 செய். 3ற்காண்க. சிந்து, 'ஸ்யந்தனசீலா உதகாத்மா தேவதா' ஓடும் சிறப்புவாய்ந்த நீரபிமானி தேவதை.. பிருதுவி, 'ப்ரதிதா பூ தேவதா' விரிந்த அல்லது பெருமைசிறந்த பூமியபிமானி தேவதை. இனி 101வது சூக்தம் வரையில் இப்பாட்டின் பின்னரண்டடிகள், இரண்டு சூக்தமொழிந்த ஏனைய சூக்தங்களுக்கெல்லாம் கடையடிகளாகவரும்.

வருக்கம் 32.

ஆகசசெய்யுள் 1026.

6-வது அத்தியாயம் முற்றும்.

——:0:——

பிழை திருத்தம்.

99–வது பக்கத்தில் 'ராஜேந்திரலால் மித்ரா.....' வென்பதை 'லாலா ஹரான்ஸ் ராஜ்செய்த வேத வியாக்கியான மென்ற உபந்யாஸத்தைப்பார்க்க' எனமாற்றிப்படிக்க.

255 'சமிதா அக்னிபோலும்' என்பதை, 'சமிதா யாகப்பசுவை வெட்டுபவன். முன்பு தேவர்கள்யாகஞ் செய்தபோது பிராஹ்மணர்களே இவ்வேலைசெய்து வந்தார்கள். தற்காலம் இதைசசெய்பவன்குயவன் என்க' மாற்றிப்படிக்க.

மண்டலம் 1. சூக்தம் 95.

7-வது அத்தியாயம்.

——:0:——

இவ்வத்தியாயத்தில் 38 வருக்கமும், 18 சூக்தமும் 172 இருக்குக்கு மூமுள்ளன்.

95. மண்டலம் 1. அநுவாகம் 15. சூக்தம் 2.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆங்கிரஸன் புத்திரன் குத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அகினி.

1. மூவணுருவமைந்தோர்மூற்றிருவர்வெவ்வேறுமெல்லே
யுறமுறச்செல்வோர்வற்சனொருவனேவளர்ப்பாரூட்டி;
பொருவுசெங்கிறத்தொருவன்பொருந்தியேயவியைக்கொள்வான்;
மருவுவெண்ணிறத்துத்தேசின்மற்றவன்றேரன்றுவானே.

(இ-ள்.) மூற்றவும் மாறுபட்ட வுருவத்தோடு கூடிய இருவர் ஒருவர்க்கொருவர் விரோதமான நடையையுடையவர்களாகிய பகலும் இரவும் தனித்தனி ஒரு குழந்தையை பயூட்டிவளர்ப்பார்கள். அக்குழந்தைகளில் 'ஒருவன் செங்கிறத்தையடைந்து அவியை யேற்பான். மற்றொருவன் வெண்மையானசோதியோடு ஆகாயத்திற்றேரன்றுவான்-(எ-று.) முற்றமூவணுருவமைந்தோரென்றது சுக்கிலகிருஷ்ணவர்ணங்களையடைந்துள்ளதால். 'வெவ்வேறுமெல்லையுற முறச்செல்வோர்' என்றது இரவு முடிந்த காலத்துப்பகலும் பகல் முடிந்த காலத்து இரவுந்தோன்றுவதால். இரவெல்லாம், கருப்பத்திற் சுமந்திறைந்து கிடைப்பதுபோற் கிடந்துவிடியற் காலத்திலுதிப்பதால் சூரியன் இரவின் புத்திரனும். அச்சூரியனுக்குக் காலையில் ஆவுதி செய்வார்கள். பகலில் அக்கினியினது ஒளிமழுங்கி நிற்க இரவு அதற்கு வெளிச்சத்தைத் தருவதால் அகினி இரவின் புத்திரன் என்றார். சாயங்காலஞ் செய்யும் ஆவுதி அக்கினி கார்யமாம்--சாயணர். ஒருவன் அக்கினி; மற்றவன் சூரியன்.

2. தன்னொளிபரந்துமாசந்தந்நடுவிளங்கிக்கூர்த்த
மின்னொளிச்சுவாலைகூடிப்பல்லிடமிளிருமித்தீ
தன்னேயத்துவட்டாவீன்றதருணியர்பதின்மருக்கந்
தன்னமுங்குறையார்தந்தார்;நரர்தமதகஞ்சேர்ததாரே.

(இ-ள்.) தனது பிரகாசம் நாலாபக்கத்திலும் பரவ, மனிதருக்கு மத்தியில் விளங்கிக் கூர்மையான சுவாலையோடு கூடிப், பலவிடங்களிலும் பிரகாசிக்கும் இந்தவக்கினியை நித்தியவௌவனம் வாய்ந்துகொஞ்சமும் சோம்பலில்லாதவர்களான துவஷ்டாவின் பெண்கள்பதின்மரும் (அரணிகடைந்து) தந்தார்கள். மனிதர்கள் அதனைத்தங்கள் தங்கள் கிரஹங்களுக்கு எடுத்துக் கொண்டுபோனார்கள்—(எ-று.) தருணியரென்றது பத்துவிரல் களையும்; மேல் மண். 1 சூக். 71 செய். 1-ல் ஓரிடத்துதித்த நேசவுடன்வயிறென்றது மிவரையே. அ, பண்டறிசுட்டு. இவ்விருக்குக்கு வேறொரு பொருளுமுண்டு. 'எல்லாப் பூதங்களிடத்தும் ஜாடரரூபமாய் பிரிந்திருப்பதும், கூர்மையான தேஜோமுகத்தோடு கூடியதும், ஸ்வயமான கீர்த்தியைத் தோற்றுவதும்,

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

எல்லாவிடங்களிலும் பிரகாசிப்பதும் அல்லது பலர்க்கு முபயோகமாவதும், ஆனமின்னலாகிய அக்கினியைத், தமது காரியங்களால் ஜகத்தைப் போஷிப்பதில் ஆலஸ்யமில்லாதவர்களும், நித்யதருணிகளும் அதாவது ஜராமரணமற்றவரும், ஆகிய இந்திராதி பத்தூத்திசைகள் (மண். 1 சூக் 84 செய் 13 பார்க்க.) மேகங்களின் அகட்டிற் செல்லும் ஒளிக்குமத்தியில் வாயுவிலிருந்து தோற்றின—(எ-று.) ஈண்டு துவஷ்டு: ஒளியென்றபொருளிலும் தசவென்பது பத்துத்திசைகள் என்னும் பொருளிலும் வந்தன.

3. தோன்றியவிடங்கண்மூன்றைத்தோத்திரஞ்செய்வார்;ரங்கி
தோன்றியமூன்றிலொன்றுசலதியாந்தோயமொன்றரு
மேன்றவிண்ணென்றுமிங்ஙனியைநதுபுவிக்கட்பூர்வத்
தான்றரசெய்திக்காலவொழுங்கிறமைத்ததன்றே.

(இ-ள்.) அக்கினி யுற்பத்தியான மூன்றிடங்களையும் ஸ்தோத்திரம் செய்வார்கள். அவற்றிலொன்று சமுத்திரமாம். மற்றொன்று (மேக) நீராம். ஆகாயம் மூன்றுவதாம். இவ்வாகாயத்திற் பொருந்தியது கீழைத்திசைக்கண் பெருமையடைந்து பூமியின்கண் ஆறுபெரும்பொழுதுகளாகிய காலவொழுங்கினையு மமைத்தது—(எ-று.) மூன்றிடங்கள் ஸமுத்திரம் மேகம், விண்ணென்பன. ஸமுத்திரத்தில் வடவைத்தீயாகவும், மேக நீர்க்கண் மின்னற்தீயாகவும், ஆகாசத்தில் ஸூர்யனுகவும் அக்கினியுற்பவித்ததென்க. இவற்றுள் காலதேச வர்த்தமானங்களாற் கட்டுப்படாமல் அகண்டமாயிருந்த உலகம் ஸூர்யகதியால் திக்குக்காலங்களே யடைந்தது என்றார். இளவேனில் வஸந்த, முதுவேனில் (கிரீஷ்ம), கார் (வர்ஷ), கூதிர் (சரத்), முன்பனி (சிசிர), பின்பனி (ஹேமந்த), எனப்பெரும்பெர்முதுகள் (ருதுக்கள்) ஆறும். இவற்றையே ஒழுங்கின் ஆறு என்றார்.

4. மறைந்தவிவ்வுண்மையும்முண்மதித்துணர்ந்தவர்கள்யாரே?
சிறந்திடுமவியாற்றாய்மார்சேர்த்தனன்றனயன்;பல்லோர்
நிறந்தருபகட்டிலுற்றோனினுணின்றுதோன்றி
யறந்தருமவிபெற்றனனேந்தனன்,கவிமகானே.

(இ-ள்.) மறைந்து கிடந்த இவ்வுண்மையை (ரித்விஜர்களே!) உம் முன்மதித்தறிந்தவர்கள் யார்? (ஒருவருமில்லை யென்றபடி) அவி அன்னத்தினுல், மேகத்தின் புத்திரஸ்தானத்தில் மின்னல்ரூபமாக விருந்த விவ்வக்கினி தாய்முறையிலுள்ள மழைநீரைப்பெற்றான். கவியும் மகானுமாகிய இவவக்கினி மேகம், ஸமுத்திரம், உஷஸ் என்னும் பல்லோர் வயிற்றிலும், மின்னல், வடவை, சூரியன், என்னும் உருவங்களோடிருந்து வெளிப்பட்டுநல்ல ஆஹுதிகளையடைந்து தண்ணீருக்குள்ளிருந்து வெளிப்படுகிறான்—(எ-று.) தனயன் அக்கினியும், தாய்மார் மேகமும், கடலும் வானமுமாம். அக்கினிக்கு ஆஹுதிசெய்வதாற் சூரியன் நிலைபெறுகிறான். சூரியனுல் மழைபெய்கிறது. மழையினுல் அன்னம் விருத்தியாகிறது. அன்னத்தாற் பிரஜைகளோங்குகிறார்கள் அதாவது யாககாரியங்கள் நிறைவேறுகின்றன என்பது ஸ்மிருதி.

அக்னெள்ப்ராஸ்தாஹுதிஸ்ஸம்யக்ஆதித்யமுபதிஷ்டதே|
ஆதித்யாஜ்ஜாயதேவ்ருஷ்டிர்வ்ருஷ்டேரன்னம்ததஃப்ரஜா||.

மண்டலம் 1 சூக்தம் 95.

5. வளைந்துறுஞ் செல் குறங்கில் வாலுற மேலுைக் குற்றுத்
திளைந்த தன்கீர்த்தி சார்ந்து திகழுறச் சுடரைக் காண்டு
வளர்ந்தனன்; இருவ ரச்சங் கொண்டன, ரொளிவளர்தீக்
கிளர்ந்தபோ தவனை நோக்கிச் சேவித்தார் கேசரிக்கே.

(இ-ள்.) குடில கதியோடு கூடிய மேகரீனது மடியில் (மின்னல் ரூபமாக) அழகுறமேலுைக்கி யொளிர்ந்து, தனது சொந்தக்கீர்த்தியை யடைந்து, நல்ல சுடரை வீசிக்கொண்டு(அக்கினி) வளர்ந்தான். (வானம் பூமிகள்) இருவரும் பயந்தார்கள். சோதியினின்றும் பிறந்தோங்கிய அக்கினி தோற்றியபோது அவனைப்பார்த்து அவவக்கினியாகிய சிங்கத்தைச்சேவித்தார்கள்-(எ-று.) 'ஹிம்ஹம் ஸஹஸிலம் அபிபவஸிலம்' பொறுக்க வல்லது அல்லது ஜயிக்கவல்லது என்பதுபொருள். சுண்டு அக்கினியைக்குறித்து நின்றது. துவஷ்டு: என்னும் மூலபதத்தை மேஞட்டாசிரியர் துவஷ்டாவெனக் கொண்டு, அவனால் சிருஷ்டிக்கப்பட்ட வானம் பூமிகளையென்று சேர்ப்பார். ஆனால் சாயணர் தீப்தாத் என்று ஒளி அல்லது சோதியினின்றும் என்று பொருள்கொண்டு ஒளியினின்று பிறந்த அக்கினியெனக் கூட்டுவார். பாட்டிற் பின்னுரையே கூறியுள்ளார். இருவர் என்பதற்கு பகலிரவுகளென்றும், அரணிகளிரண்டுமென்றும், பொருள் கொள்ளுவது முண்டு. இதுயாஸ்கர் மதம். கேசரிக்கு வேற்றுமை மயக்கம்.

வருக்கம் 1.

6. உருவ வங்கனைமார் மான விருவருஞ் சேவித்துற்றார்,
பரிவொடு முழங்கு மாவிற் பரிந்தவ னருகு சேர்ந்தார்;
மருவியோர் வலத்தி லேந்தி வகைபெறு மலி யளிக்கும்
பெருமை வா யவனு மொய்ம்பிற் பிறங்கினோர் பதி யாளுனே.

(இ-ள்.) அழகிய ஸ்திரீகளிருவர் சாமரையோடு அரசனைச்சேவிப் பதுபோல திரியாவாபிருதுவிகளிருவரும் (அல்லது பகலிரவுகளும், அரணிக் கட்டைகளிரண்டும்) அக்கினியைச் சேவித்தார்கள். கன்றினிடத்தினுள்ள ஆசையோடு சப்திக்கும் பசுக்களைப்போல அவனது சமீபத்தில் வந்தடைந்தார்கள். (ஆறவநீயத்தின்) வலப்பக்கத்திற் பொருந்திய ரித்விஜர்கள் சருபுரோடாசம் முதலிய அவிப்பொருள்களைத்தரும் பெருமையையடைந்த அவவக்கினியும் பலவான்களுக்கெல்லாம் நாயகனுனன்—(எ-று.) சருபுரோடாசங்களைப்பற்றி மண். 1 சூக். 93 செய். 8ம் காண்க.

7. சவிதுவே யெனக்காங்கண் மேலுறச் சார்த்தி நீட்டிக்
குவலயம் வானிரண்டிற் கூடிய தனது தேசை
யுவப்புற நடுக்கை யிவோ ரேட்டிப் பினைவற்றுஞ் சாரா
நிவப்புற வேற்றித் தாய்மா ரின்று புத்துடை மீர்ப்பானே.

(இ-ள்.) எல்லாருக்கும் நடுக்கத்தைத் தரும் அக்கினி, ஸவிதா (சூரியன்) வைப்போலத்தனது கிரணமாகிய காங்களை மேலே நீட்டிப், பூமிவானங்களிற் கூடியதனது ஒளியைப் பரவவிட்டு, எல்லாவற்றையுமடைந்து அவற்றிற் கொளிதரும் ஸாரத்தை வெளிப்படுத்தி, தனது தாய்மார்களாகிய மழை நீரிலிருந்து புதிய உடையை வெளிக்கொணர்வான்—(எ-று.) ஸவிதா, சவிதுவென வந்தது. சூரியோதத்துக்குமுன் சூரியனுக்குஸவிதா வென்பார்: 'ஸர்வஸ்யப்ரேரக:' எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துபவன் அல்லது நடத்

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

ஆவோன் என்பது பொருள். தாய்மார் நின்றும் புத்துடையீர்த்தலாவது, மேகநீர் அக்கினிக்குத்தாய்மாரின் நிலையாயுள்ளது; அதனிடத்திலிருந்தும் புதிதாய் உலகத்தைக்கவ்விக்கொள்ளும் சோதியாகிய வஸ்திரத்தை வெளிப்படுத்தலாம். சாரா, சார்ந்து.

8. அந்தரத் தகவு மேகத்தொடு தடித்தென வலர்ந்து
கந்தி, நேர்க்கரிய சோதி நாட்டு மக்காலே, ஞான
மந்துறு கவி நீர்மூல வந்தரத்தினைத் தன்றேசான்
மூன் தலங்கரிப்பான்; தேவயாஜ முற்று மாங்கே.

(இ-ள்.) அந்தரிட்சத்திற் செல்லும் மேகத்தில் மின்னலாக விளங்கிப் பார்க்கமுடியாத சோதியை அங்கே நிலைநிறுத்தும்போது ஞானம் பொருந்திய கவியாகிய அக்கினி தண்ணீருக்கு மூலமான அவ்வந்தரத்தைத் தனது தேஜஸினால் அலங்கரிப்படுத்துவான். அவ்விடத்து அத்தேவனால் விரிக்கப் பெற்ற ஒளி எங்களது சுதையோடுகூடக்கலந்து விளங்கும் (அதாவது தேவ யஜ்ஞம் அங்கே நடக்கும்)—(எ-று.) அந்துதல், சேர்தல், திரைசச்சொல்.

9. மகத்துவம் வாய்ந்த வுன்றே சொன்னலர்த் தெறுத்தொளிர்வ
தகத்து நீர்கொண்டகன்ற வந்தர வெளியி னேயும்;
மிகச் சுடர்தா யா மூட்டிவிட்ட வக்கினியே! யாரு
மகைக்கலாத் துணைச் சுபாவ வழகினே டெம்மைக் காக்க.

(இ-ள்.) பகைவரைவாட்டிவிளக்குவதான மகத்துவம் பொருந்திய உனதொளி, தன்னிடத்து நீரைக்கொண்டு பரந்த வந்தரவெளியிற் பரவும். நன்றாகக் கொழுந்துவிட்டெரியும்படி யாங்கள் மூட்டிவிட்ட அக்கினியே! ஒருவராலும் வருத்தமுடியாத பாதுகாப்பமைந்த தன்மைவாய்ந்த அழகோடு எங்களை ரட்சிப்பாயாக—(எ-று.)

10. அந்தரத் தொழுகு மூர்மி யார்ந்தநீ ரோட்டெடுப்பான்
சுந்தரமாக வாற்றிப் புவியின்கண் வெளங் துதைப்பான்;
அந்தமா யகட்டி னெல்லா வனப்பொரு ளமைப்பதன் றி
விந்தையி னவ முளைக்கண் மேவி நன்கியங்குவானே.

(இ-ள்.) (அக்கினி) அந்தரிட்சத்திற் செல்லும் அலைமிகுந்த நீரைப் பிரவாஹமாகச் செல்லவிட்டுப் பூமியில் வெள்ளத்தை நிறைவிப்பான். தனது அகட்டில் (வயிற்றில் அல்லது உள்ளிடத்தில்) எல்லாவுணவுப் பொருள்களையும் அமைப்பதோடு புதிதாகத்தோன்றும் பயிர் முளைகளுக்குள்ளும் சென்று சலிப்பான்—(எ-று.)

11. பாவக, சமித்தாலோங்கிப் பரந்த தீ ரன்ன மீவா
னேவற் வெமக்கொளிர்ந்திங் கோங்குவாய்; எமதிப் போற்றைத்
தாவரு புவியும் வானுஞ் சிந்துவ மதிதி தானு
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) பாவகனே! (பரிசோதகனே!) நீ ஸமித்தினால் வளர்க்கப் பெற்று எங்களுக்குக் கீர்த்திபெருகிய அன்னப் பொருள்களையளிப்பதற் காகப் பிரகாசத்தோடு விளங்குவாயாக. எம்முடைய இந்தப் பிரார்த்தனையைப் பூமி, வானம் விந்து, அதிதி, மித்ரன், வருணன் என்னுமிவர்கள் விரும்பிக் காக்கட்டும்—(எ-று.)

மண்டலம் 1. சூக்தம் 96.

வருக்கம. 2.

96. மண்டலம் 1. அநுவாகம் 15. சூக்தம் 3.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி குத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: செல்வக்காரணனான அக்கினி.

1. *வலியினன் முறுக வாங்கிக் கடைந்திட வள்ர்வோன் வல்லே*
மலிதரு ஞானமெல்லாம் பழமைபோல் வகித்தான் மெய்யே;
சலிலமும் வாக்கு நட்பிற் றயக்கின வவனைச்; செல்வ
நலமளி தீயைத் தேவர் நாடி யாதரித்தா ரன்றே.

(இ-ள்.) பலத்தினால் (அரணிகளைக்) கடைந்தவுடன் ரூன்றும் அக்கினி தான் உதித்தவுடன் எல்லா ஞானத்தையும் பழமையாயடைந்தது போல விரைவில் உண்மையாகவே தயங்கினான். மேகநீரும், வாக்கும் அவனைச்சிநேகமாகப் பெற்றன. தனந்தருபவனாகிய அக்கினியை (இந்திராதி) தேவர்கள் நாடியாதரித்தார்கள்—(எ-று.) 'ஞானமெல்லாம்' என்பதற்குப்பதிலாகக் 'காவ்யமெல்லாம்' என்றுபடிப்பதும் ஒன்று., அதற்குக் கவியினது எல்லாக் கர்மங்களையுமென்று உரைகூறி இவ்வகினி முன்பே யறிந்தது போல உற்பத்தியானவுடனேயே தனது அவிவகிக்குந் தொழிலைச்சேர்ந்தான் என விரிப்பார் சாயணர் 'தி(dh) ஷணு' வென்பதற்குமாத்யமிகா வாக்கு என்பர். சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யெனவாக்கு நான்காம். தேவ சப்தத்துக்கு ரித்விஜர் என்றுபொருள் கொண்டு ரித்விஜர்கள் கார்ஹபத்யாதிரூபத்திற்ரூங்கினர்கள் என்பதும் ஒன்று.

2. *கலையுண ராயு முன்னுட் கவிபுகன்றிட மனுவின்*
குலமுறு மக்களாரூ மிவர்த்தமைக் குலவ விட்டான்;
தலநிறை யொளியால் வானை நீரினைச் சமைத்தான்; செல்வ
நலமளி தீயைத் தேவர் நாடி யாதரித்தா ரன்றே.

(இ-ள்.) கலைகளை யுணர்ந்து ஸ்தோத்திரஞ் செய்யும் ஆயுவின் அல்லது மனுவின் (குணநிறைந்த) கவிகளைக்கேட்டு, (அக்கினி) மனுவழியினுதித்த இம்மனிதரைப் பிறப்பித்தான். விஸ்தாரமாகப் பரவும் தனது ஒளி (கண்) யினால் வானத்தையும் நீரையும் (அல்லது அந்தரத்தையும்) சிருஷ்டித்தான். செல்வ நலத்தை யளிக்கும் அக்கினியைத் தேவர்கள் (அல்லது ரித்விஜர்கள்) விரும்பிவளர்த்தார்கள்—(எ-று.) ஆயு மனுவென்றது சாயணரை. அக்கினி தோன்ரு யெழுவாய். அக்கினி குலவவிட்டானெனக.

3. *சுலவெரி வளர்ப்பீர் தேவ முக்கியன் யாகந் தோய்ப்பான்*
பலிபெறுபவன் றுதிக்கட் சிறப்புறுபவ னல் லுண்டி
மலிமக னுயிர்கடாங்கும் வள்ளலைப் போற்றீர்; செல்வ
நலமளி தீயைத் தேவர் நாடி யாதரித்தாரன்றே.

(இ-ள்.) அக்கினியைச் சூழ்ந்து வளர்ப்பவர்களே! தேவர்களில் முதன்மை வாய்ந்தவனும், (தர்சபூரணமாஸமாதிய) யக்ஞங்களை நிறைவேற்றுபவனும், யாகபலியை (அவிப்பொருள்களை) யேற்பவனும், ஸ்தோத்திரங்களாற் பெருமைபெற அலங்கரிக்கப்படுபவனும், உணவின் புத்திரனும், நல்ல

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

தான கர்த்தாவுமாகிய வக்கினியை ஸ்தோத்திரஞ் செய்வீர்களாக. செல்வகாரணனான அக்கினியைத் தேவர்கள் நாடி வளர்த்தார்கள்—(எ-று.) அக்கினியுணவினுற் புதிதாக வுண்டாக்கப் பட்டு ஜடராக்கினியாக வளர்க்கப்படுவதால் உணவின் புத்திரனென்னுர்.

4. பலவிதப் பொருள் வளர்த்தோன், பலரையுங் காப்போன், சோதித்
தலமெனுந் துறக்க மீவோன், தாணிவான் பெற்றோ, னெங்கான
மூளைக்கென மாதரிச்சுவான் வழிதெரிந்தான்; செல்வ
நலமளி தீயைத் தேவர் நாடி யாதரித்தா ரன்றே.

(இ-ள்.) பலவிதமான சிரேஷ்டமான பொருள்களின் புஷ்டியையடைந்துள்ளவனும், பலரையும் ரகஷிப்பவனும், (யாகஞ்செய்வித்து) சோதித்தலமாகிய ஸ்வர்க்கத்தை (யாககர்த்தாவுக்குத்) தருபவனும், வானம் பூமிகளைத் தோற்றியவனும் மாதரிச்வானும் (எல்லாவற்றிற்குந் தாயெனத்தகும் அந்தரிட்சத்தில் நடப்பவனும்) ஆகிய அக்கினி எங்கள் புத்திரனுக்கு (அநுஷ்டான மார்க்கத்தை) யுண்டு பண்ணினன். செல்வகாரணனான அக்கினியைத்தேவர்கள். விரும்பிப் போற்றினர்கள்—(எ-று.) மாதரிச்வான் மண். 1. சூக். 31 செய். 3 நோக்குக. ஈண்டு அச்சொல் அக்கினியையே குறித்து நின்றது. மேனட்டாசிரியர் 'எங்கான்மூளைக்' கென்னுது 'தன் காண்மூளைக்' கென்பார். அவர் உரைப்படி மாதரிச்வான் முதல் முதல் அக்கினியைப்பிருகுவுக்காக கொண்டுவந்து கொடுத்தவனைக் குறிப்பதால். மண். 1 சூக். 60 செய். 1ல் பார்க்க.

5. உலவுறு பகலிராக்க ளொன்றன் வண்ணத்தை மற்றொன்
றிலையென லாக்கி யோர்சேயினுக் கவியூட்டுங் கூடி;
மலியொளி வீசுமஃது வான்புவி யிடையே; செல்வ
நலமளி தீயைத் தேவர் நாடி யாதரித்தா ரன்றே.

(இ-ள்.) மாறிமாறி யுலாவும் பகலிரவுகள் ஒன்றினது நிறத்தை மற்றொன்று மாற்றி இரண்டுமாசப்(பகலின் புத்திரனுகிய)ஒரு குழந்தைக்கு அவியுணவை யூட்டும். அக்குழந்தையாகிய வக்கினி வானம் பூமிகளுக்கிடையே மிக்க வொளியை வீசும். செல்வகாரணனான அக்கினியைத் தேவர்கள் விரும்பிப்போற்றினர்கள்—(எ-று.) குழந்தை அக்கினியைக் குறித்து நின்றது. மண். 1 சூக். 95 செய் 1 நோக்குக.

வருக்கம் 3.

6. மஹிதன மூலஞ் செல்வக் களஞ்சிய, மகத்தின் கேது,
நிலைதரு தாதியாளன்ற னினைப்பினைச் சாதிப்போனைக்,
கலவுறு மமரத் தன்மை காத்திடுந் தொழிலர் செல்வ
நலமளி தீயைத் தேவர் நாடி யாதரித்தா ரன்றே.

(இ-ள்.) நிறைந்ததனத்துக்கு மூலாதாரமான்வனும், செல்வக்களஞ்சியமும் யாகத்தின் கொடியும் (அல்லது யாகத்தை ஞாபக மூட்டுபவனும்) ஸ்தோத்தாவினது எண்ணங்களை நிறைவேற்றுபவனும், செல்வ காரணனுமான அக்கினியை, மரணமின்மையைக் காத்து நிற்கும் தேவர்கள் விரும்பி வளர்த்தார்கள்—(எ-று.)

மண்டலம் 1 சூக்தம் 97.

7. பழமையு மின்றும்பு தி யுறைவிடம், பரிந்து வில்லாக்
தலமதி லுதித்தவற்றோடு நீக்க நின் றிடமைவைக்கும்,
அலகிலா தெய்த்தவற்றோ டேய்வவுங் காப்போன், செல்வ
நலமளி தியைத், தேவர் நாடி யாதரித்தான்றே.

(இ-ள்.) புராதன காலத்திலும் இப்பொழுதுஞ் செல்வ முறையு மிடமும், முன்பே பிறந்தவற்றிற்கும் இனிப்பிறக்க நிற்பவற்றிற்கும் வீடு போன்றவனும், கணக்கில்லாத வஸ்துக்கள் எற்கெனவே யுள்ளவற்றிற்கும் இனியேற்பட நிற்பவற்றிற்கும் ரட்சகனுமான செல்வகாரண அக்கினியைத் தேவர்கள் விரும்பிப்போற்றினர்கள்—(எ-று.)

8. செல்வத்தைத் தருவோ னெங்கட் சேர்க்க சங்கமச் செல்வத்தைச்;
செல்வத்தைத் தருவோ னெங்கட் சேர்க்க தாவரச் சிறப்பைச்;
செல்வத்தைத் தருவோன் வீரத் தநயசோ டன்னஞ் சேர்க்க;
செல்வத்தைத் தருவோன் நீர்க்கு வாயுலாத் தரவெமக்கே.

(இ-ள்.) செல்வத்தைத்தரு மக்கினி எம்மிடத்து ஜங்கமச் செல்வத் தையும், ஸ்தாவரப்பெருமையையும், புத்திரரோடு கூடிய உணவுப்பொருள்க ளையும், நீர்க்குவாயுவையும் தருவானுக—(எ-று.)

9. பாவக! சமித்தா லோங்குப் பரந்தீ ரன்ன மீவா
னேவற வெமக்கொளிர்ந்திங் கோங்குவாய்; எம்திப் போற்றைத்
தாவரு புவியும் வானுஞ் சிந்துவு மதிதி தானும்
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) எல்லாவற்றையும் பரிசோதிப்பவனுகிய வக்கினியே! ஸ மித்தினுல் வளர்ந்து மிகச் சிறப்புப் பொருந்திய அன்னத்தைத்தரவேண்டி எங்களுக்கு ஒளியை வீசி யிவ்விடத்துச் சிறப்பாயாக. எங்களுடைய இந்தப் பிரார்த்தனையைப் பூமி, வானம், ஸிந்து, அதிதி, மித்திரன், வருணன் என் னுமிவர்கள் விரும்பிக் காப்பாற்றுவாராக—(எ-று.) சரவஸே என்பதற்கு அன்னமென்னுஞ் சீர்த்தியின்பொருட்டென்பார் மேனுட்டாசிரியர்.

வருக்கம் 4.

97. மண்டலம் 1 அநுவாகம் 15 சூக்தம் 4.

8 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதி குத்ஸன்; வடமொழிச்சந்தம்: காயத்ரி; தேவதை: அக்கினி.

(வேறு)

1. எங்கள் பாபத்தை யெங்கணின் றோட்டியே
பொங்கு நற்றன மெல்லாப் பொழுதினுங்
தங்கு மாறு விளங்குக, வக்கினி,
யெங்கள் பாபத்தை யெங்கணின் றோட்டவே.

(இ-ள்.) அக்கினியே! எங்களுடைய பாபங்களே யெங்களிடத்தி னின்றும் போகுமாறுசெய்து, விசேஷ தனம் எல்லாக் காலத்திலும் எங்களி டத்துவந்து அடையுமாறு பிரகாசிப்பாயாக. எங்களது பாபங்களே யெங்களி டத்தினின்றும் (அக்கினியின் ஒளி) ஓட்டட்டும்—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

2. துங்க வாழ்வொடு தேயற்ற நல்லிலு
மங்க நன்னெறி யும்பெறு மார்த்தியின
மங்கலில் மகமாற்றி வணங்குவோம்;
எங்கள் பாபதை யெங்கணின் றோட்டவே.

(இ-ள்.) பரிசுத்தமாகிய செல்வத்தையும் நல்ல வீட்டையும், சன்) மார்க்கத்தையும்பெறு மிச்சையோடு (அக்கினியை) அவிப்பொருளைத் தந்து வணங்குகிறோம். எங்களது பாபங்களை யெங்களிடத்தினின்றும் (அக்கினி யின் ஒளி) ஓட்டட்டும்—(எ-று.)

3. துங்க மாமறை தேயுத்தம ஞக
வங்க மாயிவன் மன்னுக; சூரிக
ளெங்கட் சேர்ந்தவ ரென்றும் புகழ்பெறல்;
எங்கள் பாபத்தை யெங்கணின் றோட்டவே.

(இ-ள்.) இக்குத்ஸரிஷி உத்தம ஸ்தோதாவாய்ப் பொருந்தட்டும். எம்மிடத்துள்ள ஸூரிகள் (வித்வாம்ஸர்கள் அல்லது ஸ்தோதாக்கள்), எப் பொழுதும் கீர்த்தியையடையட்டும். மற்றது முன்போலவே—(எ-று.) ஸூரிகள் ஈண்டு ஸ்தோத்திரஞ் செய்பவர். இவன்; இக்குத்ஸரிஷி.

4. அங்கி யென்றைக்கு ன் சூரிக ளார்தரு
துங்க மக்களைத் தேயற்ற ரன்றைக்கு
னெங்குலமுந் தழைத்திதழி லெய்துக;
எங்கள் பாபத்தை யெங்கணின் றோட்டவே.

(இ-ள்.) அக்கினியே என்றைக்கு உனது ஸ்தோதாக்கள் புத்திர பௌத் திரர்களைப் பெறுவார்களோ அன்றைக்கே யுன்னை யடுத்த எமது குலமும் புத்திர பௌத்திரர்களோடு தழைத்து விளங்குக. மற்றது முன்போல— (எ-று.)

5. எங்கணும் பரந் தேதிலரைத் தேறு
மங்கியின் கிரணம் பல வாசையின்
மங்குறாது வளர்ந்திடு போதினி
லெங்கள் பாபத்தை யெங்கணின் றோட்டவே.

(இ-ள்.) எல்லாவிடத்திலும் விரிந்து சத்துருக்களைக் கொல்லும் அக்கினியின் கிரணங்கள் பலதிக்கிலும் சென்று பிரகாசிக்கும்போது (அவ னது ஒளி) எங்களுடைய பாபச் செய்கைகளை யெங்களிடத்தினின்றும் ஓட் டட்டும்—(எ-று.) ஆசை, திக்கு.

6. எங்கு நோக்கு முகத்தை யியைந்தவ,
வங்க மாகவெத் திக்கினுங் கூடியே
யெங்க ளொன்னலர் நின்றெமைக் காக்க நீ;
யெங்கள் பாபத்தை யெங்கணின் றோட்டவே.

(இ-ள்.) எல்லாப்பக்கத்திலும் பார்க்கும் முகத்தோடு கூடியவக்கினியே! எல்லாப்பக்கத்திலும் பொருந்தி, எங்கள் பகைவர் எம்மையணுக வொட்டா தபடி காப்பாயாக. எங்கள் பாபங்களை எங்களிடத்திலிருந்தும் ஓட்டுக-(எ-று.)

மண்டலம் 1 சூக்தம். 98.

7. எங்கு நோக்கு முகத்தை யியைந்தவ,
வங்க மென்னவே வாலிதி னெங்கட்குப்
பங்கமின்றிப் பகையைக் கடத்துக;
எங்கள் பாபத்தை யெங்கணின் மேற்ட்டவே.

(இ-ள்.) எல்லாப்பக்கங்களினும் பார்க்கக்கூடிய முகத்தோடு கூடிய வக்கினியே! நாவாய் நீரைக்கடந்து அக்கரை சேர்ப்பதுபோல எங்களுடைய சத்துருக்களை யாங்கள் கடந்துசெல்லுமாறு செய்க. எங்களது பாபங்களை யெங்கணின் றுமோட்டுக—(எ-று.)

8. எங்கள் சேமத்தை யெண்ணி நதியினிற்
றங்கும் வங்கந் தனிலெமைத் தூக்கியே
கங்கு சேர்த்தல் கடுப்பக் கடத்துவாய்;
எங்கள் பாபததை யெங்கணின் மேற்ட்டவே.

(இ-ள்.) (மேற் செய்யுளிற் சொன்னதையே மீண்டுங் கூறி யுறுதிப் படுத்துகிறார்) (அக்கினியே!) எங்களுடைய க்ஷேமத்தை யுத்தேசித்துக் கப்பலிற் றூக்கி ஆற்றைக்கடந்து அக்கரை சேர்ப்பதுபோல எங்களைச் சத்துருக்களில்லாதவிடத்திற் கொண்டுபோய்ச் சேர்ப்பாயாக. மற்றது முன்போல —(எ-று.)

வருக்கம் 5.

98. மண்டலம் 1 அநுவாகம் 15 சூக்தம் 5.

3 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி குத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அக்கினி.

(வேறு.)

1. விச்சுவ நரர்க்கு நாத னன்மகம் பெறுக யாங்கள்;
விச்சுவ புவனம் போற்றும் வேந்தனன்னவனே; யிங்கு
விச்சுவந்தனை நோக்குற்றான் மேலுறப் பிறந்தபோதே;
விச்சுவ நரர்க்குநாத னிகல்வன் விண்மணியி லுளேடே.

(இ ள்.) வைச்வாநரனுடைய நன்மனத்தை (அநுக்கிரஹ புத்தியை) யாங்கள் அடைக. எல்லாப்புவனங்களிலுமுள்ள பிராணிக் கூட்டங்களால் வணங்கப்பெற்று அவ்வைச்வாநரன் அவற்றிற்குராஜாவாகிறான். இரண்டு அரணிகளின்றும் தோன்றிய தட்சணமே எல்லாச்சுகத்தையும் நன்றாகப் பார்க்கிறான். அவ்வைச்வாநரன் சூரியனோடு போட்டியாகவெழுவான்-(எ-று.) வேந்தன் ஈண்டு ராஜாவென்னும் பொருளிலேயே வந்தது.சூரியனுடைய கிரணங்கள் கீழ்நோக்கி வரும்போது அக்கினியின் கிரணங்கள் மேலேக்கிச் சென்று அவற்றைச் சந்திப்பதைக்கண்டு ரிஷிகள் அக்கினி சூரியனோடு இகல்வதாக (போட்டி போடுவதாக) ச்சொன்னார்களென்பார் சாயணர். இக்கருத்து தைத்திரீயப் பிராஹ்மணம். 2—1—2 லும் சொல்லப்பட்டிருக்கிறது. யாஸ்கரும் இப்படியே நிருக்த்தில் கூறியிருக்கிறார் 'அமுதோதாமுஷ்யரச்மய: ப்ராதுர்பவந்தீதோஸ்யார்ச்சிஷஸ் தயோர் பாஸோ: ஸம் ஸங்கம் த்ருஷ்டவைவம்வக்ஷயத், விண்மணி-சூரியன்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

2. வர்னிடத்துறுவான் பூமி மருவியே யுறைவா னங்கி
யீனமி லோடதிக்கண் யாவற்றும் புகுந்தா; னெங்குந்
தானுறு வலியாற் றங்கும் வைச்சுவா நரனு மங்கி
யூன மொன்னலருறுத்தா தோம்புக வெமை யல்லெல்லே.

(இ-ள்.) வானத்திற் றங்குபவனும், பூமியினிடத்து வந்து தங்குபவனுமாகிய அக்கினி, எல்லா ஓஷதிகளிடத்திலும் வந்து புகுந்தான்; தனது அஸாதாரண சக்தியினால் எங்கு நிறைபவனுகிய வைச்வாநராக்கினி பகலிலும் இரவிலும் சத்துருக்கள் எங்களையிம்சிக்காதபடி காக்கட்டும்—(எ-று.) வைசவாநரன், எல்லா நரர்களுக்கும் நேதா அல்லது ஸ்வாமி அதாவது அக்கினியென்பது பொருள்.

3. மேவுக வுன்றிவ வுண்மை; வைச்சுவாநர வெம்மாடே
யோவறு தனமிருநூதோ ருறைக சூழ்ந்; தெமதிப் போற்றைத்
தாவரு புவியும் வானுஞ்சிந்துவு மதிதிதானு
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) உன்னுடைய அது (பாதுகாப்பு) கர்மபலனேத்தருவதாகப் பொருந்தட்டும். வைச்வாநரனே! எம்மிடத்துத், தனகாமிகளாயுள்ள தனமிரு புத்திரர்கள் சூழ்ந்துறையட்டும். எங்களுடைய ஸ்தோத்திரத்தைப் பூமியும், வானமும், வரிக்துவும், அதிதியும், மித்திரனும், வருணனும் விரும்பிக்காக்கட்டும்—(எ-று.) இச்சூக்தம் சாதுர்மாஸ்யாரம்பத்தில் வைச்வாநரனையும் பர்ஜன்யனையும் துதிக்க உபயோகப்படுத்துவது.

வருக்கம் 6.

99. மண்டலம் 1 அநுவாகம் 15 சூக்தம் 6.

1 இருக்குக் கொண்டது.

ரிஷி:-மரீசி புத்திரன் கசியபன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப் தேவதை: அக்கினி.

1. சாதவேதனுக்குச் சோமச் சாற்றினைப் பிழிவோம்; ஒன்னர்
தீதுறு நிதியை யன்னுன் றீய்க்க; வெந்துயரை முற்றும்
மோதுற வீட்டியெம்மை மோசிக்க வங்கி, நாவாய்
ஓதுற நதிகடப்பித் துக்கரை விடுத்த லொத்தே.

(இ-ள்.) ஜாத வேதஸனுக்காக ஸோமாபிஷவஞ் செய்வோம். பகைவரது தனத்தை யவன் சுட்டு நாசமாக்கட்டும். நாவாய் ஆற்றைக்கடந்து இக்கரையிற் சேர்ப்பது போல அக்கினி எங்களது துக்கத்தைக்கெடுத்து அதினின்றும் எம்மை விடுவிக்கட்டும்—(எ-று.) ஜாத வேதஸன் என்னும் பதத்தின் பொருளை, மண். 1 சூக். 44 செய். 1ல் பார்க்க.

வருக்கம் 7.

100. மண்டலம் 1. அநுவாகம் 15. சூக்தம் 7.

19 இருக்குக்கள் கொண்டது.

ரிஷிகள்; வ்ருஷாகிரன் என்னும் ராஜரிஷியின் புத்திரர் ஐவர் வார்ஷாகிரர். அவர் ரிஜ்ராச்வன், அம்பரீஷன், ஸஹதேவன், யமானன் ஸுராதஸன் என்பவராம்.

மண்டலம் 1. சூக்தம் 100.

வடமொழிச்சந்தம்: திருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

இச்சூக்தம் தசராத்திரத்தில் 6வது பகலில் மருத்துக்களோடு கூடிய இந்திரனைத் துதிப்பதற் குபயோகப்படுவது.

1. அருத்தியையளிப்போன், வீரமார்ந்துசோர்த்தம்மாற்சூழ்ந்தோன்,
பெருத்தகண்மகிமைவாய்ந்தோன், பிருதுவிவானவண்ணல்,
பொருத்துவோனீரை, நண்ணும்போரினிலழைக்கற்போன்
மருத்துவரிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா னிற்க.

(இ-ள்.) இச்சையை யளிப்பவனும், வீரர்களாற் சூழப்பட்டவனும், மகிமை வாய்ந்தவனும், பூமிவானங்களுக்கு ஈசுவரனும், நீரைத்தருபவனும், புத்தத்தில் ஸ்தோத்தாக்களாலழைக்கப்படுபவனும்; மருத்துக்களாற் சூழப்பட்டவனுமாகிய விந்திரன் எங்களை ரட்சிக்கட்டும்—(எ-று.)

2. பரிதியிற், கிட்டலாகாப் பாதையை யடைந்தோ, னெவ்வெவ்
செருவினுந் தன்னே டேகுஞ் சினேகிதர் கூடி வண்மைக்
குரிய வுத்தமன், வறப்போ, னெறுத் தங்கொள்ளுஞ் சீலன்,
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா னிற்க.

(இ-ள்.) சூரியனைப்போல, நெருங்க முடியாத பாதையோடு கூடியவனும், எல்லாயுத்தத்திலும் தன்னோடு கூடச்செல்லும் சினேகிதர்களோடு கூடியவனும், தனது உத்தமதான சீலனும், (அசுரர்களை) வறப்பவனும் (வாட்டியவர்களை வறட்டுபவனும்), விருத்திர னுந்தாவும், மருத்துக்களோடு கூடியவனுமான இந்திரன் எமக்குத் துணையாக நிற்கட்டும்—(எ-று.)

3. முரணெடு பிறர்தடாத் தன் முன்புறு திரண, மென்றின்,
றாமுறு நீர்பிலிற்றச் சாருவோன், பகைகடந்தோன்,
ஊமுறு மாண்மை தன்னு லொன்னலர்தமை யொறுப்போன்,
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா னிற்க.

(இ-ள்.) பிறராற்றடுக்கமுடியாத தனது பலம் பொருந்திய திரணங்கள் வானத்திலுற்ற நீரைக் கொட்டிவிக்கும் வண்ணம் சூரியனைப்போல, வருபவனும், பகையைக்கடந்தவனும், தனது பும்ஸத்துவத்தால் சத்துருக்களை வெல்லுபவனும், மருத்துக்களோடு கூடியவனுமாகிய இந்திரன் எங்கட்குத் துணையாகவிருக்கட்டும்— (எ-று.) என்றின்—சூரியனைப்போல்.

4. தாத்துறு வங்கிராக்க டம்மிலுத்தமன், பேர்வள்ள
லருத்தியை யளிப்போர் தம்மி, லன்பரி லன்பன், போற்றற்
குரித்துளோர் தமி லுயர்ந்தோ, னெனுவார் தம்மின் மூத்தோன்,
மருத்துவரிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா னிற்க.

(இ-ள்.) அவ்விந்திரன், கடையிற் சிறந்தவர்களாகிய அங்கிரஸர்களிலுத்தமனும், இச்சைகளையளிப்பதில் வள்ளலும், அன்பர்களிலன்பனும் பூஜிக்கத்தக்கவர்களில் உயர்ந்தவனும், ஸ்தோத்தாக்களிற் பெருமை வாய்ந்தவனுமானவன். மருத்துக்களோடு கூடிய இந்திரன் எமக்குத் துணைசெய்யட்டும்—(எ-று.) அங்கநந்ன கச்சந்ன இத்யங்கிரஸோ கந்தார: என்பார் சாயணர்.

5. உருத்திரர், சுதரைப்போல, வற்றாதல் வலியோன், போரி
லருத்தெழு பகைவர் தம்மை யொறுப்பவ, னுடன்வசிக்கும்

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

கிருத்திய ரோடுமன்னங் கிளர்த்திடு மழை பெய்விப்பான்;
மருத்துவ ரிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள்.) அவ்விந்திரன், உருத்திர புத்திரர்களாகிய மருத்துக்கள் தனது குழாதைகளைப்போலத் துணைசெய்யும் பெருவலிமையையுடையவன்; யுத்தத்திற் சத்துருக்களையடக்குபவன்; சமானமான வீடுகளில் வசிக்கும் (கிருதகிருத்தியர்களாகிய) மருத்துக்களோடு கூடி உணவுப்பொருள்களைத்தரும் மழையைப்பெய்விப்பான். அம்மருத்துக்களோடு சேர்ந்துள்ள இந்திரன் எங்களுக்கு உதவிசெய்யட்டும்-(எ-று.) மருத்துக்கள் உருத்திரபுத்திரர்களென்பதை மண். 1 சூக். 14 செய். 3ற்பார்க்க. ஸஹேளிபி: என்பது மூலபதம்; உடன்வசிக்குங் கிருத்தியர்க ளென்றுரை செய்யுளில். அச்சொற்றொடருக்கு மருத்துக்களென்பதே பொருள். ச்ரவஸ்யானி கீர்த்திக்குரிய தொழில்களென்பர் மேனுட்டாசிரியர். அற்றேல், 'கிருத்தியரோடு கீர்த்தி கிளர்த்திடு தொழிலையாற்றும்;' எனப்பாடபேதமாகக் கொள்க.

வருக்கம் 8.

6. கருவத்தை யடக்குவோ, னற்கண்ணியர்பதி, யுத்தத்தில்
மருவிய கருத்தா, வன்றிப் பலருமே வணங்கு நாதன்,
நிறுவுக வென்றா ழின்று நேடு மெம்புருடரோடு;
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள.) (சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களுக்காக அவர்களோடு யுத்தத்துக்குச் செலலும் ரிஜிராச்வான் முதலியவர்கள் இந்த ஸூக்தத்தைத்தான் நித்தார்கள்.) அவனிந்திரன்கர்வமுள்ள கோபிஷ்டர்களை யடக்குவோன்; கண்ணியர்களுக்கு ஸ்வாமி; யுத்தத்திற்குக கர்த்தாவாம்; அன்றியும் பலயகுகர்த்தாக்களாலு மழைகப்படுபவன்; அவன் இன்றைக்கு எங்கள் வீரர்களுகுச் சூரியவெளிச்சத்தைத் தரட்டும் (எமது சத்துருகள் இருட்டிலு ழலட்டும் என்றபடி.) மருத்துகளோடு கூடிய விந்திரன் எமதுதுணையாக நிற்கட்டும்— (எ-று.)

7. மருவண் துணைகள் வீரப்போரினின் மலர்ச்சி யீந்தார்;
தெரிதரு மவனைச் சேமக் காவலாச் சேர்த்தார் மண்ணோர்;
கருதுறு பலன்றேர் கன்மம் யாவைக்கு மவனே யீசனை;
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள்.) அவனுடைய உதவிகளாகிய மருத்துக்கள் வீரம்பொருந்தியயுத்தத்தில் 'ப்ரஹர ப்ரவோஜஹிவீரயஸ்வ' ஆதிய வசனங்களை அவன் பொருட்டுக்கூறி அவனைச் சந்தோஷப்படுத்துகிறார்கள். பூமியிலுள்ள மனிதர்கள் அவனைத்தமக்கு ரகூஷணையோடு கூடித் தனத்தைப் ப்ரதுகாப்பவனுகச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். பலனைத்தரும் கர்மங்களுக்கெலாம் ஒரேநாயகனுகஅல்லது ஈசனுக வவனேயாகிறான். மருத்துக்களோடு கூடிய இந்திரன் எங்களைக்காத்து உதவிசெய்யட்டும—(எ-று.) துணைகள் மருத்துக்கள் என்பது சாயணருரையிற் கண்டது.

8. நரர்களும் வீரன்றன்னை நன்னிதி யோடு காவ
தெரிதர வயக்கு மாறு சேர்த்துவார்; பார்வை யாக்கு
மிருளிஞ்சு சோதி தன்னை யேயுற வவன் விடித்தான்;
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

மண்டலம் 1 சூக்தம் 100.

(இ-ள்.) ஸ்தோத்தாக்களாகிய மனிதர்களும், செல்வத்தையும் பாதுகாப்பையும் தங்களுக்குத்தரும் வண்ணம், வீரனுகிய இந்திரனையடைவார்கள்.. பார்வையை மறைக்கும் இருட்டிலும் நல்லவெளிச்சந்தோன்றும்படி அவன் செய்தான். மருத்துக்களோடு கூடிய அவவிந்திரன் எமக்குத்துணைசெய்யட்டும்—(எ-று.) சித்தவியாமோகத்தைத்தரும் இருட்டிலும் சித்தத்தெளிவாகிய ஒளியையளித்தானென்றும், சத்துரு பீடை நேர்கின்ற ஸங்கிராமமாகிய இருட்டிலும் விஜய லட்சணமாகிய வெளியை யளித்தானென்றும் கொள்ளலாம். யாத்தல் கட்டுதல் ஈண்டி மறைத்தல். வீரனென்றது இந்திரனை.

9. உரமுறு பகைவ ரேனு மொடுக்குவா னிடக்கரத்தாற்;
நரவஷி யீந்தவற்றைத் தட்சிணக் கரத்தா லேற்பான்;
வரமுறு கீர்த்தி போற்று பவனுக்கும் வளமளிப்பான்;
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள்.) வலிமைபொருந்திய சத்துருக்களையும் அவவிந்திரன் இடதுகையாலடக்குவான். யஜமானர்கள் தரும் அவிப்பொருள்களையெல்லாம் வலதுகர மொன்றினுலேயே வாங்கிக்கொள்வான்.. (ஏழமையால் யாகஞ் செய்யமுடியாமல்) ஸ்தோத்திர மாத்திரங்கூறுமவனுக்கும் செல்வத்தைத் தருவான். மற்றது முன்போல—(எ-று.)

10. நரர்களி னீட்டத்தோடு நற்பய னீவான்; வல்லே
யுருளுறு தேர்களோடு மொளிருவான் மாந்தர் யார்க்கும்;
கருதலர் தம்மை யாண்மைக் கலியினு லடக்குவானுல்;
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள்.) நரர்களாகிய மருத்துக்களுடைய கூட்டத்தோடு வந்து நல்ல பலன்களைத்தருவான்; வேகமாக வுருண்டோடுந் தேர்களோடு எல்லா மனிதர்களது கண்ணிலும்படுவான். சத்துருக்களைத்தனது பலத்தினுலடக்குவான். மருதரோடு கூடிய அவ்விந்திரன் நம்மை சட்சிக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 9.

11. உறவினரோடு மல்லா வேதிலரோடும் போர்க்குப்
புருகுதன் வெற்றி யீர்சார்ப் புத்திர பவுத்திரர்க்குந்
தரவெனச் செல்லும் போது சயந தங்கிய வனுவான்
மருதரை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள்.) (புருஹூதன்) பலரானு மழைக்கப்படுபவனுகிய விந்திரன் மருத்துக்களோடு கூடப்பந்துக்களோடும் பந்துக்களல்லாதவரோடும் உபயவிதமான புருஷர்களது புத்திர பவுத்திரர்களுக்கும் வெற்றியைத்தருவதற்காக யுத்தத்திற்குச்செல்லும்போது அவனே ஜயம் பெற்றவனுகிறான். (வேறென்னசொல்வது? உத்தமஸ் தோதாக்களாகிய வெங்களுக்கும் அவனேஜயந்தருபவனுகட்டும்.) மருத்துக்களோடு கூடிய விந்திரன் எமக்குத் துணைசெய்யட்டும்-(எ-று.) மேனட்டாசிரியர் 'அபாம்' என்பதற்குத் தண்ணீரையெனப்பொருள் கொண்டு தண்ணீரையும், புத்திரபவுத்திரர்களையும் தரு

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

வதற்காக யுத்தத்துக்குச் செல்லும்போது என்பார். ஆனால், சாயணர், 'தேவஷா முபயவி தாநாமபாம் இந்த்ரம் ப்ராப்துவதாம் புருஷாணும்' என்று பொருள் கூறுவர். பந்துகள் பந்துத்துவமில்லாதவர்களென்னு மிருவகைப்பட்டு இந்திரனையடையும் புருஷர்களது புத்திர பௌத்திராகளுக்கு மென்பது பொருள். வடமொழியில் மீஹ்ளாவென்றுள்ளது. மீஹ்ளா, தனம். அதற்குக்காரணமான யுத்தத்தைக்குறித்ததென்பர் சாயணர்.

12. தரித்தவன் குலிசந், தாசர் தமைக்கொலும் பீம, னுக்ரன்,
கருத்தி னூற்றுவர் துணிபோ, குயிரங்கலியணர்ந்தான்,
பெருத்தவன், சோம மென்ன வலியின, னேவர்பேணி
மருத்தது வரிணைந்த வேதன் மருவி யெந்துணையா நிறக.

(இ-ள்.) (ஒருவராலும் தாங்கமுடியாத) வச்சிராயுதத்தைத் தாங்கியுள்ளவனும், தஸ்யுக்களைக்கொல்லுபவனும், பயங்கரமானவனும், உக்ரனும், நூற்றுவராற் கருதித்துணிக்கப்படுபவனும், ஆயிரங்கலைகளை யுணர்ந்தவனும், மஹானும், ஸோமத்தைப்போல வலிமையுள்ளவனும், ஐந்துவகைப்பட்ட ஜனங்களையும் ரட்சிப்பவனும், மருத்துக்களோடுகூடியுள்ளவனுமாகிய இந்திரன் எங்களுக்குத் துணைசெய்க—(எ-து.) ரிப்வா வென்பதற்கு 'உருபாஸமாணமஹீன்வா' வென்பார் சாயணர். ஒளிபொருந்தியவன் அல்லது மஹானென்றுங் கூறலாம் என்பது பொருள். வேகை ஜனங்கள் நான்குவருணத்தாரும் நிஷாதரும்; அல்லது கந்தருவர், அப்ஸரஸ், தேவர் அசுரர் ராட்சஸர் என்னு மைவருமாவாரென்பார் சாயணர். தர்வசர் யதுக்கள் அநுக்கள், த்ருஹ்யுக்கள், புருக்கள் என்னும் ஐந்து ஆரியர் குடியேற்ற வகுப்பைக் குறிக்குமென்பார் மேஞ்ட்டாசிரியர். மண் 1 சூக். 7 செய். 9 பார்க்க. நூறு, ஆயிரமென்னுமெண்கள் மிகுதியைக் குறித்து நின்றன.

13. தருபவன்வானினீரைத், தாங்குவோரெனியையென்றின்,
உருமுவினுதனன்புக்கிரியையன, மிகதத்தன்சம்பத்
திரங்குவிபவனென்னுரை, யிவனுறுதன்தானங்கள்;
மருதசை யிணைந்த வேதந்தன் மருவி யெந்துணையா நிறக.

(இ-ள்.) மழைநீரைத்தருபவனும், சூரியனைப்போலப் பிரகாசமுள்ளவனும், கர்ச்சனைக்கு நாதனும், லோகாதுகிரஹக்கிரியைகளோடு கூடியவனும், தனது வச்சிராயுதத்தாற் சத்துருக்களையடிப்பவனுமாகிய விவ்விந்திரனைத் தனங்களும் தானங்களும் வந்தடையும். மருத்துக்களோடு கூடி இந்திரன் எமக்குத் துணையாக நிற்கட்டும்—(எ-து.)

14. உரைபெறு வலிக்கு மான, மோங்குசோதசி யெப்பாலும்
புரையற வென்றுஞ் சூழ்வான்; போற்று மெஞ்செய்கை மாட்டு
விரைவுற வாமோதித்தெந் தீவினை வீட்ட லன்னுன்;
மருதசை யிணைந்த வேந்தன் மருவி யெந்துணையா நிற்க.

(இ-ள்.) பலராலும் புகழ்ந்துரைக்கப்படும் பலத்துக்கு அவன் அளவுகோலாம் (அல்லது உவமையாவான்). சோதஸீ அல்லது வானும் பூமிகளின் எல்லாப்பக்கத்திலும் எப்போதுஞ் சூழுவான். அவன் எந்

மண்டலம் 1. சூக்தம் 100.

களது யர்கர்மத்திற் சந்தோஷத்தையெய்தி யெங்களது பாபங்களைத் தூர நீக்கட்டும். மற்றது முன்போல—(எ-று.)

15. கரையறு தெய்வத் தனைமை கண்டவன் வலியி னெல்லை
யிறையள வடைந்தா னிவ்வுல தீதவர் பார்த்தியற் நீருமே;
அரிதெனுமவன சான்மை வான்புகியினைக் கடக்கும்;
மருதரை யிணைந்த வேகதன் மருவி யொருதனாபா நிற்க.

(இ-ள்) கணக்கில்லாத வண்மைமுதலிய தெய்வத்தன்மைநிறைந்த அவ்விந்திரன்து சாமர்த்தியத்தின் எல்லையை வஸுவாதிய தேவர்களும் மனுஷ்யரும் நீரும் அடைந்ததில்லை. சத்துருக்களையடக்கும் அருமைவாய்ந்த வவனதாண்டன்மை வானம் பூமியிரண்டுகளும் மேற்போனதாம். மற்றது முன்போல—(எ-று.)

வருக்கம் 10.

16. கருமையுஞ் செம்மை தானுங் கலந்தது, நீளுருப்பிற்
றிருவுறு மணியிற் சொர்கத் துறைவது, ரிஜிராச்வற்கு
மருவுறு தனத்தைச சேர்க்குரு தேர்ந்துத மனனி யிர்க்கும்
பரி, களிப்பளிப்ப, தேர நின்றதா னரர் சேனைக்கண்.

(இ-ள்.) கறுப்பும் சிவப்பும் கலந்ததும், நீர்க்காவயவங்களோடு கூடியதும், கலணை முதலிய குதிரையணிகளைத் தரித்ததும், விண்ணுலக வாசியும், ரிஜ்ராச்வனுக்கு வேண்டிய செல்வதைச் சேர்க்கும் (இந்திரனமர்ந்துள்ள) தேரின் நுகத்தடியிற் கட்டப்பட்டு அத்தேரையிழுப்பதுமான குதிரை (அல்லதுசாயணருரைப்படி குதிரைப்பந்தி) காலாட்சேனைகளுக்கு மத்தியில் ஆஹவாதத்தை யளிப்பதாய் நிற்கக் காணப்பட்டது—(எ-று.) அக்குதிரைப்பந்தியோடு கூடிய இந்திரன் யுத்தத்தில் அதுக்கிரஹஞ் செய்யட்டும் எனக்கூட்டுக வென்பார் சாயணர். இச்செய்யுளிற் கூறப்படும் விசேஷணங்களோ ஆறுகுதிரைகளின் பேராமென்று லட்விக்கென்பவர் கூறுவர். வெற்றி பெற்ற பின்னர் இதுமுதல் நான்கு செயயுட்களும் சேர்க்கப்பட்டனபோலுமென்பார் மேஞட்டாசிரியர்.

17. இச்சையை யளிக்கும் வேந்தே யெழில் விருஷாகிரன்றன்
மெச்சுறு பரிகள், ரிஜ்ராசவானனுமப் பக்கன் மேவு
முச்சித வடபரீஷ்ண் சகதேவன் சுராதான் ரூமு
மிசசுதி நீயுவக்க வியமபிஞர் பயமாஞேடே.

(இ-ள்.) இச்சைக்கோவர்ஷிக்கும் இந்திரனே! விருஷாகிரன் புத்திரர்கள் ரிஜ்ராச்வானனும் அவன்பக்கத்திலுள்ள அம்பரீஷன், ஸஹதேவன், ஸ்ராதான் பயமானன்என்னு மிவர்களும் இந்தஸ்தோத்திரத்தை யுனக்கு ஸந்தோஷமுண்டாகும்படி கூறினர்கள்—(எ-று.) இவவர்ஷாகிரர்கள் இம்மறையைக் கண்டவர்கள். அவர்கள் பெயர்கள் காரணப்பெயர்களாகத் தோன்றுகின்றன. சாயணர் அவற்றிற்குரை கூறுவர். ரிஜ்ராச்வன் வேகமான குதிரைகளோடு கூடியவன். ஸஹதேவன், தேவர்களோடு வர்த்திப்பவன். பயமானன் பயமில்லாதவன். ஸ்ராதன், நல்லதன்த்தோடு கூடியவன் அம்பரீஷன் சப்தத்தோடு செல்பவன் என்பதாம். சுதி, சுருதி, மந்திரம்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

18. புருகுத னிவர்களோடு புனிதறை தாசர் சிம்பு
விருவர்த்த தொகையை யாயுதத்தி னெய்து கொன்றான்;
பொருவறு வெண்ணிறத்த புலவு நோடு பண்பின்
மருவிய குலிசன், றந்தான் மன், கதிர், நீர் மூன்றும்மே.

(இ-ள்.) புருஹூதனுகிய விந்திரன் இம்மருத்துக்களோடு கூடிப் பூமியில் நிறைந்திருந்த தஸ்யுக்கூட்டத்தையும், சிம்யுக்களையும் தனது ஆயுதத்தினால் அடித்துக்கொன்றான். வெண்மையான நிறத்தோடு கூடிய நண்பாகளாகிய மருத்துக்களோடு பொருந்திய வச்சிராயுதந்தரித்த அவ்விந்திரன். (சதுருக்கனுடைய) பூமியையும், (விருத்திரனால் மறைக்கப்பட்டிருந்த) சூரியனையும், (அவனால் கட்டிவைக்கப்பட்டிருந்த) மழை நீரையும் எமக்களித்தான்-(எ-று.) தஸ்யுக்கள் வெட்கமற்ற கள்வரென்றும், சிம்யுக்கள் கொல்லும் மறவர்கள் அல்லது ராட்சஸர்கள் என்றும் பொருள். இவர்கள் ஆரியரோடெதிர்த்த இந்நாட்டுப் பூர்வகுடிகளென்பார் மேஞட்டாசிரியர் வெண்மை நிறத்தைச் சுட்டியது கருநிறமுள்ள பூர்வகுடிகளினின்றும் வெண்ணிற ஆரியர்களைத் தோற்றுவிக்கப்போலுமென்பார் மேஞட்டாசிரியர்.

19. தேவர்தம மேவுக தின்று பெமவயிற் சேர்த்து பேசல்;
நாவ மீடி யின்றிச் செலவு தாங்கயாம்; எமதிப்போற்றைத்
தாவரு புவியும் வானுஞ் சிறவு மதிதி தானு
மேவுமித்திர வருணா தமமொடு விளைந்து காக்க.

(இ-ள்.) (தேவ ராஜாவாகிய) இந்திரன் எப்போதும் எமது சார்பாக்வே பரிந்து பேசட்டும். கஷ்டமில்லாதபடி யாங்கள் செல்வச்தையடையட்டும். எங்களுடைய இப்பிரார்த்தனையைப் பூமி, வானம், வியாழன், அதிதி, மித்திரன், வருணன் ஆகிய இவர்கள் விரும்பிக்காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 11.

101. மண்டலம் 1 அநுவாகம் 15 சூக்தம் 8.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: அங்கிரஸன் புத்திரன் குத்ஸன்; வடமொழிச் சந்தம்: 1-7 ஜகதி, 8-11 தருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. பிணைந்தரிஜிச்வானேடுகிருட்டினன்றன்கருவறுத்துப்பிறங்கி
யோனுக்
கிணைந்தவவிப்பொருளோடுமேத்துமறைஞனிபாடரின்பாச்
பாற்கே;
திணிந்தவலக்காக்குலிச, னிச்சையளிப்பவ, னெம்மைச்சேர்ந்து.
காவ
லணைந்தமருத்துவனேயெமதருந்துணைவனுகவெனவழைப்போ
மன்றே.

(இ-ள்) ரிஜிச்வான் என்னும் ராஜரிஷியைத் தோழனுகக்கொண்டு, கிருஷ்ணன் என்னும் அசுரனது பத்தினியின் கருப்பத்திலுள்ள சிசுக்கூட்டச் சாரும்படி கொன்று, இன்பதத்தை நிறைப்பவனுகிய இந்திரனுக்கு அவிப்பொருளாயளித்து (ரித்விஜர்களே!) ஸ்தோத்திரங்களைப் பாடுவீர்களாக. வல

மண்டலம் 1 சூக்தம் 101.

துகரத்தில் வச்சிராயுதத்தைத் தாங்கினவனும், அபீஷ்டங்களை யளிப்பவனும், மருத்துக்களைத் துணைக்காவலர்களாகப்பெற்றவனுமான அவ்விந்திரனே யெமதருந் துணைவனுகக் கூவுவோம்-(எ-று.) கிருஷ்ணன், கருப்புநிறமுள்ள ஓசுரன். அவனது வம்சமே யில்லாமற் செய்தானென்பார் கருவறுத்தென்றார். ரிஜிச்வான் (மண். 1 சூக். 51 செய் 5 பார்க்க) ஒரு ராஜரிஷி. இந்திர பக்தி மிக்கவன், இந்திரனால் காப்பாற்றப்பட்டவன்.

2. துணிந்தமனக்கோபமதின்வியம்ஸன்சம்பானிவரைத்துணித்துக்
கொன்றோன்,
பிணைந்தவிரதம்பொய்த்தபிப்புருவைச்சேதித்தோன்,பெரும்வற்று
ணிந்தமகன்சுட்டிணன்மூலத்தோடறவொழித்தோ,னிந்திரன்,சீ-
ரணைந்தமருத்துவனெமதருந்துணைவனுகவெனவழைப்போ
மன்றே.

(இ-ள்.) பொங்கிவரும் கோபத்தினால் (தோள் போனவனான) வியம்ஸனையும் (அல்லது விருத்திரனையுமென்பார் சாயணர்) சம்பராசுரனையும் கொன்றவனும், விரதானுஷ்டானமில்லாத(கர்மவிரோதியாகிய) பிப்புருவைக்கொன்றவனும், தான் கொஞ்சமும் வற்றாமல் (எல்லாப்பொருள்களையும் வற்றடிப்பவனுகிய) சுட்டிணனையும், ஸமூல மாகஹதஞ் செய்தவனுமாகிய இந்திரனை, மருத்துவரைத்துணையாகக் கொண்டவனை, யாங்கள் எங்களுக்குத்துணைசெய்ய வழைப்போம்—(எ-று.) இவ்வசுரர்களைப்பற்றி மண் 1 சூக். 51 செய். 5ல் பார்க்க.

3. இணைந்தவான்புவியெவன்றனுரப்பெருக்கைத்தோற்றுபவை,
யெவன்றனேன்பைத்
துணிந்துவருணன்சூனுஞ்சூரியனுங்கடக்கரியர்,தோயம்வாய்ந்து
புணர்ந்தபலநதிகளுமெவ்விந்திரன்றனுணைவழிபோக்கு,மச்சீ-
ரணைந்தமருத்துவனெமதருந்துணைவனுகவெனவழைப்போ
மன்றே.

(இ-ள்.) பூமியும் வானமும் எவன்பலத்தைத்தோற்றுவிக்கின்றனவோ, எவனது விரதங்களைக்கடவாது வருணனும் சூரியனும் ஒழுகுகிறார்களோ, எந்த இந்திரனது ஆக்ஞைப்படி நதிஜலங்கள் ஓடுகின்றனவோ, மருத்துவரைத்துணையாகக்கொண்ட அந்த இந்திரன் எங்களுக்கு உதவியாகவேண்டுமென்று அவனையழைப்போம்—(எ-று.)

5. புணர்ந்தவுரக்குதிரைகளுக்காக்களுக்குப்பதி,தனதுபோக்கோ,னென்
றும்
பணிந்தாற்றுங்கன்மங்களெவற்றிடத்துந்திரமாகப்பாரித்தோன்,
போற்
றணைந்துவரான்,வலியனெனுமகமாற்றுன்றனைவதைப்போ,ணணி
சால்வேந்த
னணைந்தம்ருத்துவனெமதருந்துணைவனுகவெனவழைப்பாமன்றே.

(இ-ள்.) பலம் பொருந்திய குதிரைகளுக்கும் பசுக்களுக்கு நாயகனும், (ஸ்வதந்திரனும்) தன்போக்கேபோக்காக வுள்ளவனும், எப்பொழுதும் வணங்கிச் செய்கின்றயாககர்மங்களெல்லாவற்றிலும் ஸ்திரமாக வந்து நிலைப்பவனும், ஸ்தோத்திரங்களாலடையப்படாதவனும், யாகஞ் செய்யாத

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

வன் வலிமையடையவனுகிய மவனைக்கொல்லுபவனும், மருத்துவர்களைத் துணையாகப்பெற்றவனுமாகிய இந்திரனை எங்களுக்குத் துணைசெய்யும்படி யழைப்போம்—(எ-று.) போற்றணைந்து வரான் என்பதற்கு ஆரித: எ று வடமொழியிலுள்ளது. அதற்கு ப்ரத்யருத: ஸ்தோதாரம் என்று யாஸ்கரும், 'ஸ்துதிபி: ப்ராப்தோ நபவதி' என்று காபணரும் உரை கூறுவர். வெறும் ஸ்தோத்திரத்திற்கு மாத்திரம் வராதவன், யாககார்யங்கள் செய்தாற் ரூன் வருபவன் என்று பொருன் கொள்ளவேண்டும்.

5. தனக்கிடம்தோறுயிர்த்தொழுகும்பிராணிகளானிறையுலகப்பதியா
சார்ந்தோன்,
கொணர்ந்தவனுக்களைமுதலிற் பிராமணற்காக்கண்டெடுத்துக்
குவலயத்தே,
யணங்குறத்தாசக்கூட்டத்தாரைக் கீழழுத்தியவ,னரிசீர்சான்றே
யணைந்தமருத்துவனெமதருந்துணைவனுகவெனவழைப்பர்மன்றே.

(இ-ள்:) இடம்விட்டுப் பெயர்ந்து எல்லாவிடங்களிலும் சுவாஸம் விட்டுக்கொண்டு செல்லும் பிராணிகள் நிறைந்த உலகத்து நாயகனும், அங்கிரனென்னும் பிராஹ்மணனுக்காகப் பணியென்னு மசுரனுலடைத்துவைக்கப் பட்ட பசுக்களை எல்லாத்தேவர்களுக்கும் முதலிற் கண்டுபிடித்துக்கொடுத்தவனும், தஸ்யுக்களைத் துன்பமுறும்படி யடித்துக் கீழ்ப்படுத்தியவனும், இந்திரனும், மருத்துக்களைத் துணையாக்கிக்கொண்டவனுமாகிய வவனெமக்குத்துணையாகவனவழைப்போம்-(எ-று.) உலகமுழுதும் பரந்த பிராணிக்கூட்டங்களுக்கு அரசனென்றுஞ் சொல்லலாம். பணியொளித்தபசுக்களை மீட்ட கதையை மண். 1 சூக். 6 செய். 5 பார்க்க.

6. தினிந்தவலிச்சூர்களாற்பயமடித்தகோழையாற்சிறக்கக்கூவி
மணந்தழைக்கப்பெறுபவன், வெற்றியையெய்தோர்புறங்காட்டும்
வலியிவாள
ரிணைந்தழைக்குமிந்திர,னெல்லாப்புவனத்தவருங்னியேத்துஞ்சீரி
னணைந்தமருத்துவனெமதருந்துணைவனுகவெனவழைப்பாமன்றே.

(இ-ள்.) பலம் பொருந்திய சூரர்களால் யுத்தத்துக்கும் பயமடைந்த கோழையர்களாற் துணைக்கு மழைக்கப்பெறுபவனும், ஜயமடைந்தவனும் தோற்றோடுபவனுமாகிய இருவரும் அழைக்க நிற்பவனும், எல்லாவுலகத்தவர்களும் ஒன்றுக ஸ்தோத்திரஞ் செய்யும் சிறப்புப்பொருந்திய விந்திரனும் மருத்துக்களைத்துணையாக வடைந்தவனுமானவனை எமகுத்துணை செய்ய வழைப்போம்—(எ-று.)

வருக்கம். 12.

7. பணிந்தொழுகு முருத்திரர்கள் பாவுதலத் தொளியோடும் பரிந்து
செல்வான்;
அணங்குமகல்வெளியதனிலுருத்திரரோடோர்க்க முறவணைவாள்
வல்லே;
வணங்குசைசார்மறை, யரியைச் சிறந்து புகழ்ந் தவன்கீர்த்திவாய்ப்பக்
கூறும்;
அணைந்தமருத்துவனெமதருத்துணைவனுக வெனவழைப்பாமன்றே.

மண்டலம் 1. சூக்தம் 101.

(இ ள்.) (சூரியரூபமாய்ப் பிரகாசிக்குமிந்திரன்) ருத்திரபுத்திரர்களாகிய மருத்துக்கள் உலவுமிடத்து விரும்பிச்செல்லுவான். இடம் பரந்த அந்தரிட்சத்தில் அவ்வருத்திர புத்திரர்களோடு (ரோதஸீயாகிய) மாதும் (அல்லது சாயணருரைப்படி மத்திமைவாக்கும்) விஸ்தாரமாகப் பரந்து விரைவாகச் செல்லுவாள். வணக்கம் பொருந்திய மொழிகளோடு கூடியஸ்துதியும், இந்திரனைப் புகழ்ந்து அவனது கீர்த்தியைப்பரக்கக் கூறும் மருத்துவர்களோடு கூடிய அதிதிந்திரனை எமக்குத் துணையாகுமாறழைப்போம்—(எ-று.) அம்மாது ரோதஸீயென்னும் ருத்திரன் மனைவியென்பார் லுட்விக் (Ludwig). ஆனால் சாயணர் அதுமாத்யமிகாவாக்கென்றும் இது இந்திரஸ்துதியினிடையில் வந்த மருத்துவர் புகழ்ச்சி யென்றும் சொல்லுவார். முதலடிக்குச் சாயணர், ஆத்யாத்மிகப்பிராண ரூபமாயுள்ள மருத்துக்கள் செல்லுமிடமெல்லாம், அல்லது இறந்துபோனவர்களுக்காக அழும்பிராணிக் கூட்டங்களிடத்தெல்லாம், சூரியாத்மாவாய்ப் பிரகாசிக்கும் இந்திரன் செல்லுவானெனப் பொருள் கூறுவர்.

(வேறு.)

8. மருத்துவ ரிணைந்தோ யுண்மைத் தனநிறை வள்ளலே நீ,
வருத்துயர் மாடகூதனும் வரமிலாக் கூடிற்றணனுந்
தாத்துளங் களிதருபோதுந் தழைக்க வெம்மகத்தின்
கண்ணே ;
யருத்தியோ டுன்னன் புக்கென் றவியினை யிழைத்திட்டோமே.

(இ-ள்.) மருத்துவர்களோடு கூடியவனே! ஸத்தியதன நிறைந்த வள்ளலே! உத்கிருஷ்டமான மாளிகையிலேனும் அற்பக்குடிசையிலேனும் திருப்தியோடு ஸந்தோஷங்கொண்ட போது எமதுயக்ஞத்தை நோக்கிவருவாயாக. உனது அன்பைப்பெற நிமித்தமே யாங்கள் அவிப்பொருளைத் தயார்செய்தோம்.—(எ-று)

9 நல்வலி யிந்திரா, வுன்றன்னையே நாடிச் சோமம்
பல்குற வடிக்காதின்றேம்; மறைவளர்ப்பவ, பலியை
நல் கினம்; மாவியைந்தோய், மருத்துவர் கணத்தோ டுண்டிப்
புல்லுக குசை; மகிழ்ச்சி பொருந்துக வெம்மகத்தே.

(இ-ள்.) நல்லவலிமை பொருந்திய விந்திரனே! உனக்காகவே ஸோமம் பிழிந்தோம். மறைகளால்வளர்க்கப்பெறுபவனே! எமது அவிப்பலியை உனக்களித்தோம். குதிரையோடு கூடியவனே! மருத்துவர் கூட்டத்தோடு தருப்பையிலமர்க. எங்களது யக்ஞத்தில் மகிழ்ச்சியை யடைவாயாக—(எ-று)

10. உன்னரிமாவி னுன்கு மகிழ்ச்சியை யுறுக வேந்தே;
உன்னிரு தாடைதம்மை யுதட்டினை நனி யங்காக்க;
துன்னு சிங்கார கன்னந் தோய்ந்தவ வுனை மர்ச்சேர்க்க;
மன்னி யெம்மவியை யேற்றெம் மாட்டுநீ மகிழ்க வீண்டே.

(இ-ள்.) இந்திரனே! உனது இரண்டுபிங்கலவர்ணமுள்ள குதிரைகளிடத்துத் திருப்தியடைவாயாக. ஸோமங்குடிப்பதற்காக உனது இருதாடைகளையும் உதட்டையும் (அல்லது சாயணருரைப்படி நாக்கையும்) நன்

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

ரூகத்திறப்பாயாக. அழகிய கதுப்புவாய்ந்தவனே! உன்னைக் குதிரைகள் சுமந்துகொண்டுவருக. எமது அவியுணவையேற்று எம்மிடத்து மகிழ்ச்சி கொள்ளுக—(எ-று.)

11. பரவுறுவோன் மருத்தோ டொன்னலர்த் தெறுவோன் காவ
லோவுறு வெமக்கு வேந்த னனந்தரல்; எமநிப் போற்றைத்
தாவரு புவியும் வானுஞ் சிந்துவு மதிதி தானு
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) மருத்துக்களோடு சேர்த்துத் துதிக்கப்படுபவனும், சத்துருக்களையோட்டுபவனுமாகிய இந்திரனது பாதுகாப்பிலுள்ள வெமக்கு அவ்விந்திரனுல் உணவுப் பொருள் கிடைக்கட்டும். எங்களது இப்பிரார்த்தனையைப் பூமி, வானம், விந்து, அதிதி, மித்திரன், வருணன் என்னுமிவர்கள் விரும்பிக் காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 13.

102. மண்டலம் 1. அநுவாகம் 15. சூக்தம் 9.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: அங்கிரஸன் புத்திரன் குத்ஸன்; வடமொழிச்சந்தம்: ஜகதி, 11, த்ருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. மகத்துவனே யிப்பெரிய மறையுனக்குத் தேர்ந்தளித்தேன்; மன்னு
முன்ற
னகத்தறிவும் யான்புரியுமத்துதியிற் றிருத்தியினையடைந்த தன்றே;
பகைத்தவரையுட்னெறுக்கும் வலியுடைய விந்திரன்கட்பண்பிற்
றேவ
வகைக்கருமம் புரிவோரு முற்சவத்திற் பொருட்பிறப்பின் மகிழ்ந்
தார் மாதோ.

(இ-ள்.) மகானே! பெரியமந்திரமொன்று உனக்காகத்தேடி யளித்தேன். உனது புத்தியும் அந்தஸ்துதியில் திருப்தியடைந்தது. சத்துருக்களையடக்கும் வலிமைபொருந்திய விந்திரனிடத்துத, தேவயாஜநஞ் செய்யும் ரித்விஜர்கள் உத்ஸவத்துக்காகவும், செல்வந்தோற்றுவதற்காகவும், ஸந்தோஷத்தையடைந்தார்கள்—(எ-று.)

2. நதியேழுமவன் கீர்த்திதனைப்பரக்கச் சுமந்தொழுகும்; நாடுமன்னு
நிவபுவைவான் பூமியந்தரமும் வயக்கிடுமால்; நோன்பாற்றும்யா
மந்தியன்பினைநேர்ந்திட்வமனைபொருளை நோக்குறவு மாகாயத்தே
கதிமாறிச் சூரிய சந்திரர்களுதயாததமனங் காட்டும் வேந்தே.

இ-ள்.) கங்கை முதலிய நதிகளேழும் அவனது கீர்த்தியை விஸ்தாரகாகச்சுமந்துக்கொண்டொழுகும். அவனது புகழ்நிறைந்த சரீரத்தை வானம், பூமி, யந்தரம் என்னுமிவை (சூரியரூபமாகத்) தாங்கும். இந்திரனே! விரதங்களை யநுஷ்டிக்கும், யாங்கள் சிரத்தையோடமரவும், பதார்த்தங்களைப் பார்க்கவும் ஆகாயத்தில் சூரிய சந்திரர்கள் மாறி மாறி உதயத்தையும், அஸ்தமனத்தையும் அடைவார்கள்—(எ-று.) நதியேழு, மண். 1. சூக் 32. செய். 12. பார்க்க. விருத்திரனைக்கொன்றதனுல் ஏற்பட்ட மழை ஜலத்தால் ஆறு

மண்டலம் 1 சூக்தம். 102.

கள் நிரம்பியோடுவதால் நதி யேழுமவன் பெருமையைக் காட்டுமென்றார். இந்திரனே ஸூர்யசந்திரரூபமாகவிருந்து பிரதாசிக்கிறானென்பது கருத்து. நுதி, புகழ். ஒன்றுதிக்க ஒன்றத்தமிக்குமென்க.

3. பல்கலாட்டும் போரதனில் யாந்துதிக்கும் வெற்றித்தேர், பலர்துதிப்
பேய்,
மகவானே! தனலாபம்பெறவெமக்கத்தேரினையே மருவுவிக்க;
தக்வாயெம்மனம் போற்றுமிந்திரனே, தக்கசுகஞ் சார்ந்தகாவல்,
மகவானே, யுனையடுத்து நேசிக்கு மெமக்கியையமதிக்கொள்வாயே.

(இ-ள்.) மகவானே! பலர் துதிக்க நிற்பவனே! பகைவரையடக்கு கின்ற யுத்தத்தில் யாங்கள் முறைப்படித்துதிக்கிற வெற்றிபொருந்திய தேரையே, எங்களுக்குப் பொருள் லாபம் ஏற்படும்வண்ணம் தூண்டி யெங்கண் சேர்ப்பாயாக. எங்களது மனம் சிறப்போடுந்துதிக்கு மிந்திரனே! தனவானே! உன்னையடுத்து நேசிக்கும் எங்களுக்குச் சுகம் பொருந்திய பாதுகாப்பை யமைப்பாயாக—(எ-று.) மகவான் தனவான் என்னும் பொருட்டு.

4. உன்துணையிலேங்கியயாமொன்னரைத்தெறுக;வெமதுயர்பக்கத்தே
துன்றியடிக்கடியெப்போரினிலுமெமக்குதவிதரல்;தோயும்வேந்தே,
யொன்றுதனஞ்சுகமாகவெமக்குறுகல்வகையதனையுடனே
யாற்றுய்;
கன்றியவெம்பகைவரதுவீரியத்தைமகவானேகடிகுவாயே.

(இ-ள்.) உனது துணையையடைந்த யாங்கள் சத்துருக்களை ஜயிக்கட்டும். எங்களது பக்கத்திலேயே நீ பொருந்திநின்று எல்லா யுத்தத்திலும் எங்களுக்கடிக்கடி யுதவி செய்வாயாக. இந்திரனே! பொருந்துகின்றதனம் எங்களுக்குச்சுகமாகக்கிடைக்கக்கூடிய வண்ணம் செய்வாயாக. எங்களோடு பகைத்த வீரர்களது ஆண்மையை, மகவானே, கெடுப்பாயாக—(எ-று.)

5. தனம்யாவுந்தரித்தவனே,யுனைப்போற்றுமிம்மனிதர்சார்ந்துன்
றன்னை
யெனையோம்பலெனையோம்பலென்றுபலவிதமாகவேத்தாநிற்பர்;
மனவேதமியையாதவுனதுறுதி,வெற்றியினைமாண்பினீயும்;
தனதானமெங்களுக்கேதருந்தேரை,யிந்திரனே,தாவுவாயே.

(இ-ள்.) தனங்களைத் தாங்கி நிற்பவனே! உன்னைவணங்கும் இம்மனிதர்கள் உன்னைச்சார்ந்து பலவாறுகத்துதிப்பார்கள். வியாகுலத்தையடையாதவுனது மன வுறுதி உண்மையாகவே ஜயத்தைத்தரும். இந்திரனே! செல்வக்கொடையை யெங்களுக்கே செய்யும் தேர்மேல் நீ யேறுவாயாக-(எ-று.) மன ஏதம் என்றது வியாகுலத்தை.

வருக்கம் 14.

6. பசுவணைக்குமவன்கரங்கள்; அமிதவறிவியைந்தவனும்;பகர்
கிரேட்டன்;
வசதிபெறக்கருமந்தோறுதவிகளை நூறுபெறவயக்கி,யுத்த
மசதிபெறுதெழுப்புவன்;றன்போக்கரியேதனியாண்மையணைந்
தோன்கொற்ற
மிசையுமெலாவுயிர்களினும்;ஆதலிற்பொன்விழைபவர்பல்
லேத்தெதிப்பார்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

(இ-ள்) அவனது கரங்கள் பசுக்களைத்தரும்; அவன் அளவில்லாத ஞானத்தையுடையவன்; சிரேஷ்டனுமாம் (அதாவது சத்துருக்களைக்கட்டுபவனும்.) கருமங்கள் தோறும் நூறு (பல) வுதவிகளைச் செய்வான். யுத்தத்தையுண்டுபண்ணுவான். ஸ்வதந்திரனுள்ள விந்திரனே எல்லாப்பிராணிகளிலும் பலவான். அதனால் தனகாமிகள் அவனைப் பலவானாகத்துதிப்பார்கள் —(எ-று.) சாயணர் 'இந்திரனே! யுன் கரங்கள்' என்று தொடங்கி மறுபடியும் அதனைப் படர்க்கையாக மாற்றியுரை கூறுவார். தன்போக்கு என்றது ஸ்வதந்திரத்தை. மேலுட்டாசிரியர் 'அமிதவற்றியைந்தவனே' மென்னுது 'அமிதவலி வாய்ந்தவனே' மென்பார்: க்ரது ஞானம் கர்மம். என்னும் இரண்டு பொருளும் படும். அரி; இந்திரன்.

7. மகவானேபோற்றுவோர்நனந்தலையுன்சீர்த்தனமும்வளர்ந்துநூறாய்
மிகவாரும்; நூற்றுக்குமேலோங்கியாயிரமாம்;வேண்டியாஞ்சொல்
தகவாரும்பெருந்துதிகளளவுபடாதுன்பெருமைசார்த்திநின்ற;
இகலாரும்பகைப்புரங்கள்பொடிப்பவனே,விருத்திரையிகுப்பாய்
நீயே.

(இ-ள்.) தன நிறைந்தவனே! ஸ்தோதாக்களுக்குமத்தியில், உனது கீர்த்தியைத்தோற்றுவிக்கும் செல்வம் நூற்றுக்கணக்காக வளர்ந்தோங்கும். நூற்றுக்குமேலும் போய் ஆயிரக்கணக்காகப்பெருகும். யாங்கள் விரும்பிகூறுகின்ற பெரிய ஸ்துதிவசனங்கள் உன்பெருமையை யளந்தறியமுடியாதபடி தயக்கின. சத்துருக்களுடைய கோட்டைகளை யழிப்பவனே! விருத்திரர்களை நீயழிப்பாய்—(எ-று.) ச்ரவ: கீர்த்தி, அன்னம் அல்லது தனம் என இரண்டுபொருளுள்ளது. தி (dh) கூறுண வென்பதற்கு ஸ்துதி லகூறுணவாக்கென்று ஸாயணர் உரைகூறுவார். ஆனால் மேலுட்டாசிரியர் அதற்கு ஸோமபாத்திரம் எனஉரைக்கொண்டு 'மகத்தாகிய ஸோமபாத்திரமானது உனது ஆற்றலை யளவுபடாதபடி விருத்திசெய்து விட்டது.' என்றுமொழிபெயர்ப்பார். விருத்திரர்களென்றது விருத்திரன், சுஷ்ணன், நமுசி, பிப்புரு சம்பரன், உரண்ன், முதலியவர்களை. மண். 1சூக். 54, செய். 5 நோக்குக.

8. கரபதிநீமுப்புரிபோல்வலிக்கெல்லாமெதிரளவாய்நாட்டத்தக்காய்;
தரமுயருமுப்பூமிதேசுயருமுச்சுடர்கடாங்கள்நிற்பாய்;
வரமுயரும்புவனங்கள்யாவற்றுமோம்பிமுரண்வளரநின்றாய்;
அரி,யுனதுபிறவிகடையெனச்சகாதனமாகீ வரியற்றாயே.

(இ-ள்.) கரபதியே! மூன்று புரியமைந்த கயிற்றைப்போல நீவலிமைக்கெல்லாம் எதிரளவாகப் பொருந்தியவன். வான், அந்தரம், பூமி என்னும் மூன்றிடங்களையும்; சூரியன், மின்னல், அக்கினி யென்னும் மூன்று சுடர்களையும் வளர்த்துப் பலத்திற் பெருக்கமடைகிறாய். இந்திரனே! நீ பூர்வகாலந்தொட்டு, உனக்குப் பிறவிக்குணமென்னும்படி, சத்துருக்களற்றவன் —(எ-று.) போதாயன சூத்திரம் முதலத்தியாயத்தில் 'த்ரிதாது பஞ்சதா துவாசுல்பம் கரோதி' மூன்றுபுரி அல்லது 5 புரிகளால் கயிறு செய்கிறான், என்று சொல்லப்படுகிறது. மூப்புரி கயிற்றுக் குறுதிதரும். மூப்பூமி, விண், அந்தரம், பூமியென்பன. மூச்சுடர் விண்ணிற் சூரியனும் அந்தரத்தில் மின்னலும், பூமியின் ஆஹவ நீயம்முதலிய அக்கினியுமென்பார் ஸாயணர். முதலாவது இந்திரனையும் இரண்டாவது அரிசத்துருவையும் குறித்தன.

மண்டலம் 1 சூக்தம் 103.

9. தேவர்களந்தலை யுனைமுற்கூவுகிறோம்;யுத்தமதிற்சேர்ந்துநீயே
யாவலொடுபகைவர்களையடக்குகிறாய்; அவரியுமுணர்ந்துபோற்றி
மேவுதுதியோரெமக்குப்பகைவாட்டுஞ்னமகார்விழைக போரிற்-
பாவுபலத்தடைகளையும்பறித்தெரியும்வண்மெந்தேர்ப்பரிக்கமாதோ.

(இ-ள்.) தேவர்களுக்கு மத்தியில் உன்னைமுன்னுலழைக்கிறோம் யுத்தத்தில் நீயேவந்து எமது சத்துருக்களையடக்குபவனுகிறாய். அந்தஇந்திரனும் ஸ்துதிப்பவர்களாகிய எங்களுக்குச் சத்துருக்களை வெல்லும் திறமை வாய்ந்த ஞானம் பொருந்திய புத்திரர்களைத்தாட்டும். எங்களது தேரை, யெதிரிடுந் தடைகளைக்கடந்து செல்லத்தக்கதாகச் செய்யட்டும்—(எ-று.) அவரியும் என்றதுமுதல் பரோக்ஷப் படுத்திக் கூறினர். அதனால் முன்னிலைபடர்க்கையாக மாறியது.

10. ப்பகைவர்தமைவெல்லுகிறோயவர்பொருளையெமக்களிக்கப் பரியா
நின்றாய்;
மகவானே!தொடுத்தபோரற்பமெனும்பெரிதேனுமருவுமுன்றன்
வகைசாருந்துணையினையாந்தோத்திரத்தாலுரப்பிப்போஞ்;சாரும்-
வேந்தே!
யகமாரயுத்தமதிலழைக்கும்போதுவந்தூக்கமருள்செய்வாயே.

(இ-ள்.) நீ சத்துருக்களை ஜயிக்கிறாய். அவர்பொருளை மறைத்துவைக்காமல் எங்களுக்கே விசேஷமாகக் கொடுக்கிறாய். மகவானே! சிறுபூசலாயினும் பெரும்போராயினும் உனது சிறந்த துணையினை யாங்கள் எங்களது ஸ்தோத்திரங்களால் உக்கிரம் பெறச்செய்வோம். இந்திரனே! யுத்தத்திலுன்னை யழைக்கும்போது வந்து எங்களுக்கு ஊக்கத்தை (வெற்றிபொருந்துமாறு) அருளுவாயாக—(எ-று.) மூலத்தில் 'நருசோதித்' என்றுள்ளது அதற்கு ஒளித்துவைக்கமாட்டாய் என்பது பொருள். எங்களுக்குக்கொடுப்பாய் என்பது அன்வயத்தாற் கூட்டியது.

11. தேவர்தம் வேந்த னென்று மெம்வயிற் சேர்ந்துபேசல்;
தாவமே யின்றிச் செல்வந் தாங்கயாம்; எமதிப் போற்றைத்
தாவரு புவியும்வானுஞ் சிந்துவு மதிதி தானு
மேவுமித்திரவருணர்தம்மொடு விழைந்துகாக்க.

(இ-ள்.) இந்திரன் எல்லாக்காலத்திலும் எமது சார்பாகவே பரிந்து பேசட்டும். யாங்கள் கஷ்டமின்றிக் (கெட்டவழியிற் சொல்லாது) செல்வத்தைப்பெறட்டும். எங்களது இந்தப் பிரார்த்தனையை பூமி, வானம், ஸிந்து, அதிதி, மித்திரன், வருணன் என்னுமிவர்கள் காக்கட்டும்—(எ-று.) இச் செய்யுள்முன் 100ம் சூக்தத்தின் கடைச்செய்யுளாகவும் வந்துளது.

வருக்கம் 15.

103. மண்டலம் 1. அநுவாகம் 15 சூக்தம் 10.

8 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷெ ஜுத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. உன்பரமேந்திர மொய்ம்புயர்த்திஞர் கவிகள் தூரத்
தின்புறப்பொருவான் முன்னர்; இரும்புவி யொன்றும் வானங்
சொன்பெற வொன்றுங்கண்டஃ; கூடுமின்னவை யொன்றேடொன்
றன்புறக் கொடிகள் போரிலடுத்தெதிர் கூடல்போன்றே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

(இ-ள்) (இந்திரனே!) உனது இந்திர வலிமையைக் கவிகள் தூர மாக யுததப்பிரதேசத்தை நோக்கிச்செல்லத்தாங்கினர்கள். உனது தேஜஸ் வில் ஒன்றாகிய அக்கினியைப் பூமியும், மற்றொன்றாகிய சூரியனை வானமும் தாங்கின. இவ்விரண்டு தேஜஸ்களும் யுத்தத்தில் கொடிகள் ஒன்றோடொன்று ஸந்திப்பதுபோல ஸந்திக்கின்றன—(எ-று.) Benfey என்பவர் 'இந்திரனது வலிமை இரண்டு கூறுக்கப்பட்டு ஒன்று அவன் யுத்தத்தில் வெற்றியடைவதற்காக ஹோமகாரியங்களாலும் ஸோமாகுதியினாலும் கவிகளால் தாங்கப்படுகிறது' என்று விரித்துக் கூறுவர். 'அக்கினியும், ஸூர்யனும் இந்திரனுடைய ஜோதிகளாம். அக்கினி பூமியிலும், சூரியன் ஆகாயத்திலும் காணப்படும். பகலில் அக்கினியின் ஒளி ஸூர்யனிற் கலக்கிறது. இரவிற் சூரியனதொளி அக்கினியோடு கலக்கிறது' என்பார் சாயணர். தைத்திரீயப்ராஹ்மணத்திலும் (2-1-2.) இப்படியே சொல்லப்படுகிறது.

2. தரணியைப் பீடையின்றித் தாங்கியே விரித்தமைத்தான்;
வரமுறு குலிசத்தாலே வாட்டி நீரோடுவித்தான்;
தரமறுமகியைச் சத்திகொண்டடித் துரௌகிணன்முன்
விரைவினீறெய்தவிட்டு வியம்ஸனே மகவான் கொன்றான்.

(இ-ள்.) (இந்திரன்) பூமியை அசுரர்களது உபத்திரவமில்லாமற்றாங்கினன். பின்பு அதை விஸ்தாரமுள்ளதாகச் செய்தான். தனது வச்சிராயுதத்தினால் வாட்டி மேகநீரை யோடச்செய்தான். அந்தரத்தோடும் அதியை அல்லது மேகத்தைத் தனது சக்தியினால் அடித்துக்கொன்று ரோஹிணன் (இந்திர நீலநிறமுள்ள மேகம்) மூடிவையடையும்படி செய்தான் (தோள்போனவனை) வியம்ஸ (விருத்திர)னையும் மகவான் (தனவானுகிய விந்திரன்) கொன்றான்—(எ-று.) அஹி, மேகம். ரோஹிணன் ஓரசுரன். என்பார் சாயணர். அது இந்திர நீலநிறமுள்ள மேகத்தைக்குறிக்குமென்பார் மேனாட்டாசிரியர். வியம்ஸன். மண் 1. சூக். 101. செய். 2 பார்க்க.

3, அசனியாயுதந்தரித்தோனகத்தொடாதரத்திற் றூச்சர்
வசமுறுபுரங்கள் போர்த்து வாலிதிற்றிரிந்தானேய;
இசைவறுகுலிச, ஞானீ, தாசர்மாட்டெறிகவேலை,
நசையிறுரியர் பலத்தைக் கீர்த்தியை நடத்தல் வேண்டே.

(இ-ள்.) அசனி (இடி) யாகிய வாயுதத்தைத் தரித்தவனுகிய விந்திரன் தனது பலத்தினால் ஆதரத்தோடும் தஸ்யுக்களின் கோட்டைகளைப் பிளந்து நானுபக்கங்களிலுந்திரிந்தான். வச்சிராயுதந்தரித்தவனே! (ஸ்துதிகளின் கருத்தையறியும்) ஞானியே! தஸ்யுக்களின்மேல் உனது ஆயுதத்தை யெறிவாயாக. இந்திரனே! வித்வான்களாகிய ஆரியர்களின் பலத்தையும் கீர்த்தியையும் விருத்தி செய்வாயாக—(எ-று.) ஐய! அசை. நடத்தல்-நடக்கச் செய்வாயாக. அல்லது விருத்தி செய்வாயாக என்பது பொருள். அகத்தெரிடு-பலத்தினால்.

4. பகையடைக்கதனைச் சொல்வோற் சாமனைப்பரித்து, மாந்தர்
வகைபெறக்காணுகங்களாக்கினான் மகவான்; அஃதை
யகிமுதற்றூச்சர்க்கொல்வானதித்துற விடுத்தான் சூறு,
தகைபெறுகுலிச னென்னுர்ச்சாடுஞ் சீர்த்தரித்தவன்றே,

மண்டலம் 1. சூக்தம் 103.

(இ-ள்.) சத்துருக்களை யடக்கும் அவ்வைந்திரவலியைத், தனது நிறமையைப் புகழ்ந்து கூறும் யஜமானனுக்குபயோக மாகுமென்று மகவான் (தனவானுகிய விந்திரன்) தாங்கி, மனிதர்களாற் காணப்படும் அஹோராதந்திர அளவால் எற்பட்ட திருதயுகம், திரேதாயுகம் முதலியயுகங் களை யேற்படுத்தினன். சத்துருக்களைத் தூண்டுபவனும், வச்சிரியுமான விந்திரன் பகைவர்களை வாட்டும் வீர்த்தியைத தரித்த அப்போதே விருத்திரன் முதலிய தஸ்யுக்களைக் கொல்லும் வண்ணம், அவ்வலிமையை எங்களது யக்ஞக்ரஹ ஸமீபத்தில் வரவிடுத்தான்—(எ-று.) ஸுதுः சத்ரூணும் ப்ரேரயிதः இந்த்ரः என்று பொருள் கூறுவர் சாயணர். தஸ்யுக்களைக்கொல்லத்துணியும் இந்திரன் தன் புகழைக் கூறும் ஸ்தோதாவின் புத்திரன் போலவாய்விட்டான்.' என்பது கருத்து என்பார் (Ludwig) லுட்விக் கென்பவர்.

5. அவன் பெருஞ் செல்வமோங்கியிணைந்திடுமதனை நோக்க;
அவன் பெரு வீரியத்தை யைந்திரவலியைப் போற்றல்;
அவன் பசுக்கண்டா, னன்றிப் பரிகளையவனே கண்டான்;
அவன் செடிக்காடுகண்டான், நீர்த்தழுமவன் கண்டானே.

(இ-ள்.) ரித்விஜர்களே! அவ்விந்திரனது வீரியமாகிய செல்வம் விரிவாகவளர்ந்தோங்குவதைப் பாருங்கள். அவனது பெரிய வீரியமாகிய இந்திரவலிமைக்கு மரியாதை செய்யுங்கள். அவனே, பசுக்கள் ரதிரைகள் ஓஷதிகள், வனங்கள், தீர்த்தங்கள் முதலியவற்றைக் கண்டவனும்—(எ-று.) எந்த வீரியத்தினால் பசு முதலியவற்றைக் கண்டானோ அந்த வீரியமாகிய செல்வத்தை நீங்கள் கண்டு போற்றுங்கள் என விணைமுடிவு செய்வார் சாயணர். வநாநி என்பதற்குக் காடுகள் என்னாது (வநீயாநிதநாநி) அழகமைந்த செல்வங்கள் என்று உரை கூறுவார் அவரே.

வருக்கம் 16.

6. பலவித வீரச்செய்கை புரிய காளைக், குண்மை
வலிபெறு மவனுக், காண்மைவாய்ந்தவனுக்குச், சோமங்
குலவுற வாற்றுவோம்; அச்சுர னுவலின் மகத்தி
னலமிலார் பொருள் கொண்டேகு மாறலைக் கள்வ னேர்ந்தே.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
283	9	திருத்துவக்	திருத்துவிக்
285	7	தூணைக்கழைக்	தூணைக்கழைப்
291	9	நயவிரதஞ்	நயவிர தத்தைச்
293	13	வோங்குக;	மோங்குக;
311	22	சிசிர),பின்புனி (ஹேமந்த)	பின்புனி (ஹேமந்த), (சிசிர),
320	13	சிநேசிதர்	சிநேகிதர்
323	8	கலையணர்ந்தோன்	கலையுணர்ந்தோன்,

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

(இ-ர்.) பலவிதமான வீரச்செய்கைகள் பொருந்த விருஷபமும், ஸத்தியமாயுள்ள வலிமை பொருந்தியவனும், ஆண்டன்மை வாய்ந்தவனுமாகிய விந்திரனுக்காக ஸோமம் பிழிந்து தருவோம். அந்தச்சூரனுகிய விந்திரன் வழிப்பறி செய்யுந்திருடனைப் போல யாகஞ்செய்யாதவனது பொருளை யாவலோடு பறித்துக்கொண்டுபோவான்-(எ-று.) ஆண்டன்மைவாய்ந்தவனென்னுது மழையைப் பெய்விப்பவனுக்கென்று கூறுவது மொன்று.

7. இந்திர, மத்தத்தேய்ந்த வகியினை வச்சிரத்தின்
மூன்றுறத் துயிலுணர்த்தம் மொய்ம்புறு செய்கை நன்றே;
அந்தி லுன்னிடத் துவப்பை யணைந்தனர் தேவமாதர்
நந்தினர் களித்தார் நாகர் யாவரு மருந்தரோடே.

(இ-ள்.) இந்திரனே! மதோன்மத்தில் மூழ்கியிருந்த விருத்திரனை (அகிண்ய) உனது குலிசத்தால் எழுப்பிய அந்தப் பலம்பொருந்திய செய்கையானது பிரக்கியாதி பெற்றது. தேவபத்தினிகளும், தேவர்களும், மருத்துக்களும் உன்னிடத்து ஸந்தோஷத்தை யடைந்தார்கள்—(எ-று:) வய: என்பதற்கு கமநசீலா: மருத: வேகமாகச் செல்லுவோர்களாகிய மருத்துக்களென்பார் சாயணர்.

8. சாவுறக் குயவன் சுண்ணன் பிப்புரு வகியைச் சாடிக்
காவல் சம்பரனூர் காய்ந்தா யிந்திர; வெமதிப் போற்றைத்
தாவரு புவியும் வானுஞ் சிந்துவு மதிதி தானு
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) இந்திரனே! குயவன், சுஷ்ணன், பிப்ரு, விந்திரன் இந்நால்வரையுங் கொன்று சம்பரனுடைய நகரங்களையு மழித்தாய். இந்த எங்களது பிரார்த்தனையைப் பூமி, வானம், விந்து, அதிதி, மித்திரர், வருணர் இவர்கள் காக்கட்டும்—(எ-று.) சம்பரன் புரத்தையும் முக்கியமான நால்வரசுரையும்மழித்ததால் மற்றைய அசுரர்களுடைய கோட்டைகளையு மழித்தாயென் வினைத்தாற் கொள்ளுகவென்பார் சாயணர். சம்பரன் முதலியோரை மண்.1 சூக். 51 செய். 5, 6 பார்க்க.

வருக்கம் 17.

104. மண்டலம் 1. அநுவாகம் 15 சூக்தம் 11.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷிகுத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: இந்திரன்.

1. 'இந்திர, நீயுறைவான் வேதியேய்ந்தது; கனைத்துக்
கந்துகம் விரைவ தொத்துக் கடிதினீண் டேய்த்தமர்க;
எந்தமைக் காக்குமாறு பகலி ராக்களின் மகத்தே
சந்தமோ டுன்னையிங்கு தரும்ப ரித்தளையை நீக்கல்.

(இ-ள்.) இந்திரனே! நீ தங்குவதற்கென்று வேதியானது அமைக்கப்பட்டது. கனைத்துக்கொண்டு குதிரை வேகமாய் வருவதைப்போல நீ யிங்குவந்து உட்காருவாயாக. எங்களைக்காக்கும் வண்ணம் இரவும் பகலும் உன்னை யாககாலத்தை கொண்டுவரும் (தேரிற் கட்டப்பட்ட) குதிரைகளின் கடிவாளங்களைத் தளர்த்திவிடுவாயாக—(எ-று.)

மண்டலம் 1 சூக்தம் 104.

2. அங்கரருதவிக்காகவிந்திரனிடத்தணைந்தார்;
அன்னவர் நெறிக்கண்ணனடைகவ்வலிரைலிற்;றேவர்,
துண்ணியதாசன்கோபந்துடைக;வெந்தமக்கென்றன்னோ
மன்னியவனிட்டமாற்றுமவனையெகுயத்தேயெய்க்க.

(இ-ள்.) யாக நடத்தும் அவ் யஜமானர்கள் உதவிவேண்டி யிந்திரனைச் சேர்கின்றார். அவ்விந்திரனும் விரைவில் அவர்களுடைய அதுஷ்டான மார்க்கத்தை யடையட்டும். தேவர்கள் எல்லாரும் எதிர்த்துயுத்தத்திற்கு வரும் தாஸனுடைய கோபத்தையழிக்கட்டும். எங்களுக்கென்று அத்தேவர்களை அநிஷ்ட நிவாரணகர்த்தாவாகிய அவவிந்திரனோ யகஞத்திற்குக் கூட்டிக்கொண்டு வரட்டும்—(எ-று.)

3. பிறர் தனம்பெரிது மோர்ந்த குயவன்கைக் கொள்வான் றனே;
யறன னந்தலை யுறைந்தவ் வறலினைப் பேனத் தாதடி
முறையிலா தபகரிப்பான்; முழுகுவர் பாலினாலுன்
பிரியைகள்; அவர் களாழம் பிறங்கிய நிபையின் மூழ்க.

(இ-ள்.) பிறருடைய தனத்தை நன்கறிந்த குயவனென்னு மசுரன் அத்தனங்களைத் தானே கைக்கொள்வான். தன்னீருக்குள் வசித்து அத்தன்னீரையவன் நுரையோடும் அபகரித்துக்கொள்ளுவார. அவனது பத்தினிகளிருவரும் அவ் வளநிறைந்த (பாலில்) மழை நீரில் ஸ்நானஞ்செய்வார்கள். இப்படி அநியாயஞ்செய்யும் குயவனும் அவன்மனைவியருமாகிய விவர்கள் ஆழமிருந்த நிபையென்னும் ஆற்றில மூழ்கியிறக்கட்டும்—(எ று.) குயவன் மேல் மண். 1 சூக். 103 செய். 8ல் கூறப்பட்டவன். ஓசுரன் என்பார் சாயணர் .ஆரியரோடு யுத்தஞ் செய்த ஒரு அநாரியமரசனது பெயராயிருக்கலாம் என்பார் மேஸ்டர்நிர்யர் (Grimm). பேனமுறையுமறல் என்றது மழைநீரைக்குறிக்குமென்பார் (Benfey) பென்வேயென்பவர். 'தனக்கில்லாத பொருளை யடைய விரும்பும் ஆரியனுக்குத்தனது சௌசயகளுகந வேண்டிய தண்ணீர் கிட்டாதபோது பகைவனது மனைவியர் தமது செல்வச்செருக்கைத் தோற்றுவிக்கப் பாலிற் குளித்திருக்கிறாகள்'. என்பது கருத்தென்பார் லட்வி என்பவர். பால், வளநிறைந்த மழைநீரைக் குறிக்கும். மண். 1 சூக். 64 செய் 5 பார்க்க. சிபா, சிபை, ஓ நதியின் பெயரென்பார் சாயணர்.

4. நீர்நடுவுறைந்துசேர்ந்தோனிலயமுந்தெரியாதாங்கும்;
பூர்த்தியின்னேன்தநீர்ககட்பூரித்துச்சூரனுள்வான்;
ஆர்ந்தநீர்வீரபன்னிகுலிகிபுமஞ்சவும்புஞ்
சார்தருமுவப்பைபூட்டித்தாங்கும்பாறம்நீர்க்கண்ணே.

(இ-ள்.) தண்ணீருக்கு மத்தியிலுறைந்து சேர்ந்தவனுகிய குயவனென்னு மசுரனுடைய காவல பொருந்திய இடம் ஒருவருகுகும் தெரியாதுகிடந்தது. பூர்த்தியாயுள்ள நீரில் அச்சூரனுகிய குயவன வளர்ந்து அரசாளுகிறான் (அல்லது தனது சௌரியத்தினால் உலகப்பிரசித்தியையெயதுகிறான்.) வீரபத்னி (ஸரஸ்வதிபோலும்) அஞ்சவி, குலிகி- என்னும் மூன்று ஆறுகளும் அவனுக்கு ஸந்தோஷத்தைவிளைத்துத்தமது நீரிற் பாலொழுகும் பெருமையைத்தாங்கும்—(எ-று.) நாபி யென்னும் வடமொழிப் பதத்துக்கு ஸமஸ்த மாவஸ்தானமென்பார் சாயணர்.காவலிடமென்றார் உரையில். சூரன் ஈண்டு குயவனைக்குறித்தது. குயவன் மேல் 3ம் செய்யுளில் நோக்குக. வீரபத்னி ஸரஸ்வதி நதியைக்குறிகருமென்றது மேல் மண். 6 சூக். 49

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

செய். 6ல் அச்சொல் ஸரஸ்வதியின் அடையாக வருவதால். அஞ்சவி நேராக அல்லது விரைவாக ஓடுவது என்பது பொருள். குலிசி குலத்தை விருத்திக் குக்கொண்டுவருவது. இம்மூன்றும் நதிப்பெயர்களாம். அவை குயவனது பெருமையைத் தோற்றுவிப்பன. பால் ஸாரம் பொதிந்த நீர்.

5. தாசன் றன் சுவடுகண்டு தக்கண மவனில்லத்தை
யாசிலைத் தொழுவ மெய்துங் கணக்கென வடைந்தான்; பின்னர்ப்
பேசுறு மகவானே யெந் துன்பினைப்பேர்ப்பாய்; வேசை
நேசனு நிதியை வீசு நிலைமையி னெமைத் தள்ளற்க.

(இ-ள்.) அத்தஸ்யுவாகிய குயவனுடைய அடிச்சுவடுகள் காணப்பட்ட மார்க்கத்தைக் கண்டதும், கன்றுள்ள கொட்டிலை யறிந்த பசு நேராக அக்கொட்டிலுக்குப் போவதுபோல் அவனது வீட்டிற்குச் சென்றான். பிற்பாடு; இந்திரனே; அவனால் நேரும் எங்கள் கஷ்டத்தை நீக்குவாயாக. வேசி காந்தன் பணத்தை வாரி வீசுவதுபோல எம்மைப்புறம்பாகத்தள்ளிவிடற்க-(எ-று.) இந்திரன் அடைந்தானென்கொள்ளல் வேண்டும். படர்க்கை முன்னிலையாகமாறியது.

வருக்கம். 18.

6. அன்ன விந்திரனே யெங்கட் காதவ ளெளியி, னீரிற்,
றன்னமும் பாவமில்லாத் தன்மையிற், சீவப் பேற்றின்,
மன்னுறப் பங்கமைக்க; வெளிவராச் சந்தானத்தைப்
பின்னமே யுறுத்திடாயுன் பெருமுரா ணம்பிதேமே.

(இ-ள்.) அத்தகைய விந்திரனே! நீ எங்களுக்குரிய வெளிச்சத்திலும், தண்ணீரிலும், பாவமின்மையிலும், கீர்த்தியிலும் பங்கு தருவாயாக. இன்னும் பிறக்காதிருக்கு எமது புத்திரர்களைக் கெடுத்துவிடற்க. உனது பெரிய ஐந்திர வலிமையை நம்பியுள்ளோம்—(எ-று.) ஸாயணர் சீவப்பேறுகியபாவமில்லாத தன்மையிற் பங்களிக்கவெனக் கூட்டுவர். ஆனல்மேஞட்டரசிரியர் அவற்றை உம்மைத்தொகையாகக் கொள்வர். சீவப்பேறு, கீர்த்தி. 'தோன்றிற் புகழொடு தோன்றுக'. வென்றார் பிறரும். உன்பெருமுரா ணென்றது ஐந்திர வலிமையை.

7. உணர்ந்தனென்; யாங்களுன் மாட்டன்புற துதியிழைத்தோம்;
புணர்ந்திடு பெருந் தனத்திற் பொருத்துக, மகானே, வள்ளரல்!
தணந்திடுநிதி யில்லத்திற் றயக்கிட லெமைப்; பசிக்குக்
கொணர்ந்திடு மன்னபானங் கூட்டுக, புருகூதனனே!

(இ-ள்.) (இந்திரனே!) உன் மனதை யறிந்து கொண்டேன். உன் பலத்தைத் தோற்றுவிக்கும் புகழ் வசனங்கள் எங்களால் ஆசையோடுஞ் செய்யப்பட்டன. மகானே! இச்சையை யளிப்பவனே! எங்களை மிருந்த செல்வத்தில் வைப்பாயாக. செல்வம் குறைந்து கொண்டுவரும் வீட்டில் எங்களை வைக்காதொழிக. புருஹூதனே! பசிக்கு அன்னபானங்களை எங்களுக்குத் தருக—(எ-று.) நிதி தணந்திடு மில்லமென்க.

8. வதைக்கவித்திரவெந்தமைக்;கைவிடலெம்மை;வாழ்வைப்
புதைக்கலெம்போனகத்தைப்;பொருளுளோய்,சத்திமா,னை
முதித்திடாச் சந்தானத்தையொழித்திடல்;ஆதானத்தே
மதித்துநும்பாத்திரங்கடம்மையுமுடைத்திடாயே.

மண்டலம் 1. சூக்தம் 105.

(இ-ள்.) இந்திரனே! எங்களைக் கொல்லாதொழிக. எம்மைக்கைவிடற்க; எமது வாழ்வையும் போஜன வஸ்துக்களையு மில்லாமற்செய்யற்க. மகவானே! சக்கிரனே! கர்ப்பத்திலுள்ள எங்களுடைய் சிசுக்களை யழித்து விடாதே. அக்கினி யாதானத்தினுள்ள ஸ்ருவம் முதலிய பாத்திர உபகரணங்களை உடைத்துவிடற்க—(எ-று.) இனித் தோன்ற நிற்கும் ஸ்தானங்களைத் தரிக்கும் பாத்திரங்களாகிய மாதரைச் சிதைக்காதொழிக வென்று மேலுட்டாசிரியர் பொருள்கூறுவார். அற்றேல் 'அவரைத்தாங்கு, மதிப்புறு பாத்திரங்கள் மரித்திடா தாற்றுவாயே.' எனப் படபேதமாகக் கொள்க.

9. வருகவெம்மாட்டுச்;சோமமகிழ்பவனென்றுருன்னு;
மருவுமிச்சுதையமத்தம்வளர்ந்திடப்பருகல்;உன்றன்
பெருமுறப்பகட்டிற்பேசுமதனையூற்றல்;கூவிற்
சருவியெம்போற்றைக்கேட்க,தந்தையேயென்ன,மாதோ.

(இ-ள்.) எம்மிடத்து வருவாயாக. உன்னைச் சோமங்குடித்து மகிழ்பவனென்று பூர்வீகர்கள் சொன்னார்கள். இந்த ஸோமத்தை மதம்பெருகுமாறு குடிப்பாயாக. பெரிய அவயவத்தோடு கூடிய உனது விசாலமான வயிற்றில் இச்சோமத்தை பூற்றுவாயாக. யாங்கள் அழைக்கும்போது, எங்களருகேவந்து பிதா தன்புத்திரனது வார்த்தையைக்கேட்பது போலக் கேட்பாயாக—(எ-று.)

வருக்கம் 19.

105. மண்டலம் 1. அநுவாகம் 15. சூக்தம் 12.

19 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆப்த்யன் த்ரிதன் (குத்ஸன் என்றும் கொள்ளலா மென்பர் மேலுட்டாசிரியர். ஏன்? குத்ஸனும் த்ருதனும் இருவரும் கிணற்றில் விழுந்ததாகச்சொல்லப்படுவதால்: த்ரிதன் நினைக்கக் குத்ஸன் அவன் நினைப்பையெடுத்தோதினனென்பதும் ஒன்று.)

தைத்திரீய பிராஹ்மணத்தில் அபனுக்கு ஏகதன், த்விதன், த்ருதன், என்னும் 3 புத்திரர்கள் பிறந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. "ஒருநாள் இம்மூவரும் நீர் வேட்கையால் ஊரெங்குஞ் சுற்றி ஒரு கூபத்தைக்கண்டார்கள். அப்போது த்ருதன் கிணற்றுக்குள்ளிறங்கித் தான் நீரருந்திய பின்னர் மற்றைய ஸஹோதரர்களுக்குங் கொண்டுவந்து கொடுத்தான். அவர்கள் அந்நீரையருந்திவிட்டு அவனைக் கிணற்றிலேயே போட்டு மூடிவிட்டு அவன் சொத்தையெடுத்துக்கொண்டு விட்டார்கள். பிறகு இரவிற் சந்திரனது கிரணம் கிணற்றில் விழுந்ததைக்கண்டு, குறைகூறித் துக்கித்தான்.' என்பது சாட்யாயன கதை. அபன் ஒரு ரிஷி.

வடமொழிச்சந்தம். பங்தி, 8 மகாப்ராஹதி, யவமத்யா (இரண்டு காய்ச்சீர்வரும் அறுசீர்க்கழிநெடில் ஓரடி மேல்வைப்பு.), 19த்ருஷ்டுப்.

தேவதை: விச்வதேவர்கள் (இது பொதுப்படக் கூறியது.) விவரித்துக் கூறின். 1 விச்வதேவர்கள், 2 ரோதஸீ, 3 விச்வதேவர்கள், 4 அக்கினி ரோதஸிக்கள், 5,6,7 விச்வ தேவர்கள், 8 இந்திரரோதஸிக்கள், 9 சூரிய கிரணமும் ரோதஸிக்களும், 10 விச்வதேவர்கள், 11 சூரிய கிரணமும் ரோத

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

ஸிக்களும், 13,14 அக்கினியும் ரோதஸிக்களும், 15 வருணனும் ரோதஸிக்களும், 16,17 விச்வதேவர்கள். 18 ரோதஸிக்கள், 19 விச்வதேவர்களாம். இதுமுதல் மூன்று சூக்தங்கள் விச்வதேவர்களைக்குறித்துப் பாடியதாம்.

(வேறு.)

1. அந்தர வட்டத் தோடு மணிகதிர்ச் சிறகாலாருஞ்
சந்திர கிரணம் வானிற் றனியுற வுலவும் வல்லே;
சந்திர மயமா நேமி சார்கிர ணங்காள்! உந்தஞ்
சுந்தரப் பதத்தை யெங்கண் டோய்ந் தறியா மனின்ற;
நந்துவான் புவிகா ளென்ற னிஃது நீருணாற் பாற்றே.

(இ-ள்.) அந்தரிட்சத்தின் மத்தியிலோடும் சூரியனது கதிர்களால் நிறைந்த சந்திரனது கிரணங்கள் ஆகாசத்திற் றனியாகவேகமாகவுலாவும். பொன்மயமான சக்கரத்தைச் சார்ந்த கிரணங்களே! நீர் உற்பவிக்கும் அழகிய ஸ்தானத்தை யெங்களது கண்கள் (கிணற்றில் விழுந்தகாரணத்தினால்) அறியவில்லை. பூமிவானங்களே! என்னோவிரும்பி என்னுடைய இந்தத் துக்கத்தை யுணர்ந்து எனது இந்த ஸ்தோத்திரத்தைக் கேட்டு, எங்களை இந்தக் கூபத்தினின் றெடுப்பீர்களாக—(எ-று.).கதிர்ச் சிறகு ஸூர்யரச்மிகள். சந்திரமயமாநேமி ஹிரண்யநேமி பொன்மயமான சக்கரம். சுந்தரப்பத மென்றது அவையுற்பத்தியாகும் ஸ்தானத்தை. நான்காமடி மூலத்திலுள்ள படியே மொழிபெயர்த்தது. வித்தம்மே அஸ்யரோதஸீ யென்பதற்கு பூமிவானங்களே! என்னுடைய இது உங்களால் அறியத்தக்கது, என்பது சரியான பொருள். உரையிற்கூறிய விரிவெல்லாஞ் சாயணருரையிற் கண்டது.

2. ஆர்த்திசார்மாந்தர்வேண்டுமத்தத்தைப்பெறுவார்மெய்யே;
சீர்க்கணவன்றன்சார்பிற்சேர்ந்தொழுகுவளில்லாளும்;
நீர்த்திருவரும்பிணைந்துநீதிசாரன்பின்மூழ்கி
யார்த்தபண்டியிற்சாரத்தையேத்துநன்மகாரையீவார்;
கூர்த்தவான்புவிகாளென்றுனிஃதுநீருணாற்பாற்றே.

(இ-ள்.) உண்மையாகவே தனக்காமிகளாயுள்ள மாந்தர் தாங்கள் விரும்பிய செல்வத்தை யடைவார்கள் (எனக்குக் கிடைப்பதில்லை என்றபடி.) மனைவி தன்னது புருஷனைப் பின்பற்றி நடப்பாள். இருவரும் அன்போடு கூடி வீரியமாகிய ரஸத்தைக் கார்ப்பாதானஞ் செய்து சற்புத்திரனைப்பெறுவார்கள் (எனக்கு அத்தகைய புத்திரன் கிடைப்பது துர்ல்லபமென்றபடி) வானம் பூமிகளே என்னுடைய இத்துக்கம் உங்களாலறியத்தக்கது—(எ-று.) நீர்த்து, நீர்மை கொண்டு, நீர்மையோடொழுகி என்றபடி.பண்டி, வயிறு கருப்பாசயம்.

3. தேவர்காள்,வானத்தும்பர்சிறக்குமவ்வெளியென்றைக்கும்
தாவுமப்பதத்தினின் றுங்கீழுறாதமைக;சோம
மாவலிற்பருகுந்தன்மையடைந்தவெங்கட்குநன்மை
மேவுறவியற்றுமைந்தர்விடாததத்தையுண்பெண்ணல்;
தூவியலுரோதஸீயென்றுயாமீதுணாற்பாற்றே.

(இ-ள்.) தேவர்களே! விண்ணிற்கு மேற்சிறக்கு மந்தப்பிரகாசம் எப்பொழுதும் அப்பதத்தினின்றுங் கீழிறங்காத வண்ணமியையட்டும். ஸோமங்குடிக்கும் எங்களுக்கு, நன்மைபுரியும் புத்திரர்களது சோகத்தை யேற்படுத்.

மண்டலம் 1 சூக்தம் 105.

தாதீர்கள். பூமிவானங்களே! எனது இத்தத்துக்கத்தை யுணர்வீர்களாக-(எ-று) ஒளியென்றது மேஞட்டாசிரியர் உரைபற்றி யுரைத்தது. ஸாயணர் எங்கள்பிதா, பிதாமஹ, ப்ரபிதாமஹ ரூபமாயுள்ள ஸந்தானம் என்பார். மேஞட்டாசிரியர் ஒளியென்றது, பிதிர்க்கள் நட்சத்திரங்களாக மாறுகிறார்களாதலினென்க. மேல் 9-ம் செய்யுளை நோக்குக. எங்களுக்குப் புத்திரரில்லாததால் எங்கள் பிதிர்க்கள் ஸ்தான ப்ரஷ்டர்களாகாமலிருக்கக்கடவது வென்பது கருத்து என்பார் ஸாயணர். தைரேயப் பிராஹ்மணத்தில் புத்திரர்களால் உலகங்களைப் பெறுகிறான் புத்திரனில்லாதவனுக்கு இவ்வுலகு மில்லை, என்று சொல்லப்படுகிறது புத்ரேலோகாஸ் ஜயதி நாபுத்ராஸ்ய லோகோஸ்தி; விடாதம், விஷாதம்.

4. எக்கிபத்தி ரைமேய்ப்தேதவனேவினவுவ்யான்
முக்கிய தூதனன்னொழிகவித்தரமாக;
எக்கடைபோயிற்றுன்றனெழிலுறுபூர்வநேமம்?
இக்கணமதனைப்போற்றுநூதனகாரியாவன்?
மிக்கசிருரோதவீயென்வேதனைப்பாற்றே.

(இ-ள்.) யக்ஞத்தினிடத்து முற்பட்ட (இளமை வாய்ந்த) தேவனை அக்கினியை யான் கேட்பேன். தேவர்களது முக்கிய தூதனாகிய அவன் விஸ்தாரமாக எனக்குப் பதிற்சொல்லட்டும். (அக்கினியே!) பூர்வகாலத்திலிருந்துவரும் உன்து நியமங்கள் எங்கேபோயின? இப்போது அவற்றைச் செய்யும் புதியவன் யார்? வானம் பூமிகளே! எனது துன்பத்தை யுணர்வீர்களாக-(எ-று.) அக்நிர் தேவானாமவமம் 'என்பது தைத்திரீயப்பிராஹ்மணம். எக்கியச்சிறுமையேய்ந்ததேதவனேஎன்றுங்கூறலாம்.

5. தேவர்காள்,முத்தானத்துஞ்செம்மையிலொழுகீர்;அன்ன,
பாவமென்றூழின்சோதிபரந்ததால்விளங்காதிற்கும்;
மேவியவெமதுபோற்றினுண்மைபொய்ம்மைகளுமெங்கே?
தாவில்சீர்ப்பழமையாகயான்றருமகந்தானெங்கே?
தூவியலுரோதவீயென்றுயரமீதுணரற்பாற்றே.

(இ-ள்.) தேவர்களே! பூமி, வான், அந்தரம் என்னு மூன்றிடங்களிலும்வன்மை நடப்பீர்களாக. அவை சூரிய வெளிச்சத்தால் பிரகாசமாகத் தெரிகின்றன. அவற்றை யாங்கள் புகழும் ஸ்தோத்திரங்களின் உண்மையும் (அவற்றைத் துவேஷித்தலாகிய) பொய்மையும் எங்கேபோயின? இன்னும் பழமையாக யாங்கள் செய்யும் யாகங்கள் எங்கே? வானம் பூமிகளே! எனது துன்பத்தை யுணர்வீர்களாக—(எ-று.)

வருக்கம் 20.

6. சத்தியநடைக்குத்தக்கபயனளியுமதுமாண்பு
மெத்திசை போயிற்று? அன்பையெவருணர்றனெக்கண்
தத்தியதெங்ஙன்? சீர்சாலரியமான்முரியெங்கே?
சத்துருதம்மையென்றுஞ்சயித்தியாந்தயங்கனன்றே;
ஒத்தகல்லுரோதவீயென்றுன்பமீதுணரற்பாற்றே.

(இ-ள்.) (தேவர்களே!) ஸத்தியமான நடைக்குத்தக்க பலனைத் தரும் மேலது பெருமை யெங்கேபோயிற்று? வருணனது அனைபை யளிக்கும் பாவையெங்கேபோயிற்று? அர்யமான் செல்லும் வழி யெது? யாங்கள் (எங்களுக்குத் தீங்கை யிழைத்த அல்லது எங்களைக் கிண்றில் தள்ளி மூடின)

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

சத்துருக்களே ஜயித்துவிளங்கட்டும். வானம் பூமிகளே! எனது துன்பத்தை யுணர்வீர்களாக—(எ-று) 'பாப புண்யஙகளும் நியாய வரசும் உலகத்தி னின்றும் போயினவா உமது பகதன் இவ்வளவு கஷ்டத்தையடைய?" என்பது கருத்தென்பா லுட்விக.

7. பூருவ காலந்தன்னிற் சுதை பிழிந் தெடுத்தபோ தை
நேருறப் பல போற்றுக்கணேடியே யுரைத்தோன் யானே;
தீரும வாதை சாந்த கவலைக ளென்னைத் தேடிச்,
சாருநீர் வேட்கை மானே விருகத்திற், றின்று சாரும்;
எருழு முரோதவி யெனிடும்பை யீதுணரப் பாற்றே.

(இ-ள்) பண்டைக் காலத்து ஸோமம்பிழிந்தபோது பலதுதிகளையும் தேடியுரைத்தவன் நானே (வேறெருவருமில்லை. ஆதலால் என்னை என் கைவிட்டு விட்டீர்கள் என்று கேட்டபடி.) காட்டில் ர்ர்வேட்கையோடு அலையும்மானை ஓநாய் பிடித்துத் தின்னுவதுபோல வென்னைகவலைகள் தின்கின்றன. பூமிவானங்களே! என்து துன்பத்தை யுணர்வீர்களாக—(எ-று) வருகம, கோநாய், ஓநாய், காட்டுநாய். தமிழில் விருக மெனலாயிற்று.

(வேறு.)

8. கூபப் பித்தி யென்பக்கல் குறுகி யெல்லாத் திகினிலு
மாபத் துக்குள் ளாக்கினவா லடையுஞ் சக்களத்திகளின்;
யூப்க் கிரியை நூறுள்ளோய்! யோசனைகள், மூஞ்சூறு
சோபத் தறிநூ றின்னுதலிற், றுதிக்கு மென்னைப் பட்சிக்கும்;
தாபத் தணையா வான்புவியென் சங்கடத்தை யுணருகவே.

(இ-ள்.) இக்கிணற்றின் சுவர்கள் எனது பக்கத்தில் நாலுதிக்குக்களிலுஞ் சூழ்ந்து சக்களத்திகளிருவர் ஒரு புருஷனை யிப்பிப்பது போல என்னை யிம்சித்தன. சதக்கிருதுவே! மூஞ்சூறு கஞ்சி தோய்ந்த சேடனது நூறிலக்கின்பதுபோல் பலவிதயோசனைகள் என்னைத் துதிக்கும் என்மனத்தைத் தின்னுகின்றன. வானம் பூமிகளே! எனது கஷ்டமுணரத்தக்கது—(எ-று.) 'மூஷிகாசிச்ந' வென்பதற்கு சேடனது கஞ்சி தோய்ந்தநூலை எலிகள் தினனுவதுபோல என்று ஸாயணர் உரை கூறியது யாஸ்கர் மதத்தையொட்டி. ஆனால் சிச்ந சப்தம் வீர்யேந்திரியத்தைக்குறிக்கும், ரண்டு வாலுக்கு உபசாரமாகக் கொள்ளத்தக்கது. எலிகள் வாலை எண்ணெய் முதலியவற்றிற் றோய்த்து நக்குவதுபோல வெனப்பொருள் கொள்ளலும் ஒன்று என்பார் அவர். மேஞட்டாசிரியர் யாஸ்கர் மதத்தையே பின்பற்றி அப்பொருள் வலிந்து கொணடதாகும என்பார். (Ludwig) லுட்விக்கென்பார் மரச்சிவலிங்கங்களைக் குறிக்குமென்று கூறுவர். இவ்வுவமை மறுபடியும் மண். 10 சூக், 33 செய் 3ல் வருகிறது.

(வேறு)

9. கிரணங்க ளேழு மோங்கிக் கிளருறு தலத்தெ னில்லம்
வாமுறு குடும்பந் தாழும் வளமுறப் பொருந்தி நிற்கும்;
திரித னுப்தியனே யீது தெரிந்தவ; னுடன் விழுந்தாற்
குருகிய துதியுரைத்தா னுறைலா நீங்க வென்றே;
பெருகிய வுரோதவி யென்பிழை யீதுணரப் பாற்றே.

மண்டலம் 1. சூக்தம் 105.

(இ-ள்.) சூரியனது ஏழு கிரணங்களும் விளங்கு மிடத்தில் என்னு மீடும் என் முன்னோரது குடும்பமும் பொருந்தி யுள்ளன. இவ்வுண்மை யை ஆப்தியனுகிய திரிதனே யறிந்தவன். அறிந்து தன்னுடுகூடக்கிணற் றில் விழுந்தவனுக்காகக் கஷ்ட நிவாரணார்த்தம் இத்துதியைக் கூறினன். பூமி வானங்களே! என்னுடைய இக்கஷ்டத்தை யுணர்வீர்களாக—(எ-று.) திரி தன், அஞ்ஞானத்தைத்திரஸ்கரித்தவன்; அவனது முன்னோர் நட்சத்திர ரூப மாகவிண்ணிடத்தில் விளங்குகிறார்கள். அபன் புத்திரன் ஆப்தியன்; அவன் தி ரிதனே. 3வது 4-வது வரிகளில் தன்னையே படர்க்கைப் படுத்திக் கூறினன். வடமொழியில் ஜாமித்வாய என்றுள்ளது சகோதரற்கா' வென்று மாற்றிப் படித்தலுமொன்று. ஆனல் உடன் விழுந்தோற் கென்றது ஸாயணர் உரையி யிற் கண்டது 'ஜமதி கச்சதி இதி ஜாமி:' 'ஜமதிர்கதிகர்மா' யாஸ்கர். கூடக் கிணற்றில் விழந்தவனுகிய குத்ஸனையுங் கருதிப் போலும் அவ்வகைத்துரைத் தது.

10. பெருமைசார்வானிஞப்பட்பிறங்குமுன்னதத்தலத்தே
மருவுறுமைவர்,மாந்தர்விழைவுண்வருடிப்போர்க,
ள்ருளொடுமென்திப்போற்றைத்தேவர்பாலினைந்துதர்ங்கி
வீரைவொடுமர்ப்பித்தீண்டுமீளுகதிருத்திசார்ந்தே;
யுருவவான்புவிகாளென்றனுறுகணீ துணரற்பாற்றே.

(இ-ள்.) பெருமை பொருந்திய வான மத்தியில் உயர்ந்தவிடத்தி லுள்ள மனிதர் விரும்பியவற்றைத்தரும் ஐந்து ஜோதிஸ்களும் என்னுடைய இந்தஸ்தோத்திரத்தை ஒன்றுகூடிச்சுமந்துகொண்டுபோயளித்து திருப்தி யோடு திரும்பி வரட்டும். வானம் பூமிகளே! எனது துன்பத்தை யுணர்வீர்க ளாக—(எ-று.) ஐவர், ஐந்து ஒளிகளேக்குறித்தது. பூமியில் அக்கினியும் விண்ணிற் சூரியனும், அந்தரத்தில் வாயு, சந்திரன், நட்சத்திரங்களுமாக, ஐந்து. இந்திரன், அக்கினி வருணன், அர்யமான், ஆதித்யன் என்னும் ஐவ ரையும் குறிக்குமென்பார் ஸாயணர்.

வருக்கம் 21.

11. அழகியசிறகுவாய்ந்தவைவையெங்கும்பரவிவானம்
பழகுறுமையந்தன்னிற்பரந்துநின்றன;வம்மார்க்கம்
தழுவியகாட்டுநாயைத்தடாநதிநீரைத்தாண்டி
யொழுகியதனேப்பின்சென்றோடுவான்விலக்காநிற்கும்;
கிழமையாருரோதவஸியென்கேத்மீ துணரற்பாற்றே.

(இ-ள்.) அழகிய சிறகோடு கூடியவை (அதாவது சூரிய கிரணங் கள் என்றபடி) எல்லாவிடத்தும் வியாபித்து வானத்தின் மையத்தில் பரந் துள்ளன. அந்த மார்க்கத்தில் ஆற்றைக்கடந்து வந்த காட்டுநாயைத்திரும்பி யோடும்படிசெய்தன. வானம் பூமிகாள்! என் துன்பத்தைக் கருதுங்கள்— (எ-று.) அழகிய சிறகோடு கூடியவை சூரியகிரணங்களென்பார் சாயணர், நட்சத்திரங்களென்பார் மேலோட்டாசிரியர். அவரே, காட்டுநாயென்றது இ ருட்டு அல்லது சந்திர கிரஹணம் என்பார். திரிதன் கிணற்றில் விழுவதற்கு முன்பு அவனேத்தின்ன ஒரு கோநாய் ஆற்றைக்கடந்து வந்ததென் றும் சூரியவெளிச்சத்தைக்கண்டதும் அதுதிரும்பிப் போயிற்றென்றும் ஸா யணர் ஒருகதை சொல்லுவார். ஆனல் யாஸ்கரது மதம் அதுவல்ல அந்தரிட் ச மார்க்கத்தில் 12 கிரணங்களோடு கூடிய சூரியனது பாதையில் குறுக்கி

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

இம் சந்திரனே அச்சூரிய கிரணங்கள் ஒளி மழுக்குகின்றன வென்பது. அப: நீரென்னுது அந்தரிட்ச மென்றெடுத்து வருகம் சந்திரமஸம், அதாவதுசந் திரனேயென்று பொருட் படுத்துவர் அவர்.

12. தேவர்காணவ தாகக்குயிற்றியேறக்குமிவ்வும்
பாவுஷோதும்போற்றப்பலர்துதியுற்றிவாய்ந்த,
தேவறவொழுகுஞ்சிந்துவுதகத்தையோயாதுந்தும்;
மேவியசூரன்றன்மெய்ககதிர்களைவிரியாநிற்பான்;
தூவியலுரோதவலியென்றுயரமீதுணரற்பாற்றே.

(இ-ள்.) தேவர்களே! புதிதாகச் செய்துசிறப்பைப் பெறும் உமது கீர்த்தியைத்தேற்றும் இத்துதி பல ரிக்ஷிஜர்களால் துதிக்கத்தக்க வுறு தியைப்பொருந்தியது. தடையில்லாம லொழுகும் ஆறு அடிக்கடி நீரைச்சு மந்துகொண்டு செல்லும். சூரியனும் தனது ஸ்தூல கிரணங்களை விரிப் பான். பூமிவாணகளே! என் துயரம் உணரற்பாலது—(எ-று.) நிதம், எண் டு, உதகம் அல்லது நீரைக்குறிக்குமென்றும் ஸாயணர். ஆனல் அதன் உண் மைப் பொருள் இயற்கை யொழுங்கு என்பதாம். பகலிரவுகள் மாறிமாறி வருவதும், சூரியன் தனது வீதியிற் செல்லுவதும், மழை காலத்திற் பெய்வ தும், அம்மழையினல் ஆறுகள் பொய்க்கா தொழுகுவதும, ஆகிய இவற்றை யெல்லாம் அது பிண்டமாய்க்குறிக்கும். இக்கடையாய ஆற்றின் செய்கைக் கும் அச்சொல் உபயோகப்படுவதற்றுன் நிதம் நீரைக்குறித்ததுபோலும் என் பார் (Wallis) வாலிஸ் என்பவர் தமது ரிக்வேத அண்ட சாஸ்திரம் (Cosmology of the Rig-Veda, P. 93) என்னும் நூலில்.

13. அங்கியே,தேவரோடுமணைந்தவன்னுறவுமெதத்
பொங்குபுகழிற்றருமாற்;பெலிவுறநீயுமெஙக
ளங்கதல்லெக்கியத்தே,துகளறுஞானம்வாய்ந்தோய்!
தங்குக,மனுமகத்தின்றேவரைவணஙகியேத்தல்;
மங்கலில்புவிவானென்றன்மம்மரீதுணரற்பாற்றே.

(இ-ள்.) அக்கினியே! தேவர்களோடும் பொருந்திய உனது பந்துத் தவம் மிகப்பிரசித்தி பெற்றது. நிறைந்த ஞானத்தோடு கூடியவனே! மறுவி னது யாகத்திற் றங்கினதுபோல் எங்கள் யாகத்தினிடத்துத் தங்கித் தேவர் களைப் பூஜிப்பாயாக. பூமி வானங்களே! என் துன்பத்தையுணர்வீர்களாக —(எ-று.)

13. கனியறிவார்ந்தோன்றேவர்நாப்பணேர்தேவனுனேன்
மனிதன்போலோதாவாக்மருவியீண்டமர்ந்ஞானம்
புனையுமுத்தமனுமங்கிபொருத்துகதேவர்மாட்டிங்
கினிதின்யாமளிக்கும்தேவுதரவியத்தினேயிறையின்;
வனமுறுபுவிவானென்றன்வருத்தமீதுணரற்பாற்றே.

(இ-ள்.) மிக்க வறிவு நிறைநதவனும் தேவர்களுக்கிடையில் ஒரு தேவனும், மனிதனைப்போல ஹோதாவாக இவ்விடத்துத்தங்கிய சிறந்த ஞா னவானுமாகிய அக்கினி, யாங்கள் தரும் அவிப்பொருள்களை சாஸ்திர மரி யாதைப்படி விரைவில் தேவர்களிடத்துச் சேர்ககட்டும். புவி வானங்களே! என் வருத்தத்தை யுணர்வீர்களாக—(எ-று.)

15. அனிட்டத்தைநீக்குந்தேவன்வருணனுங்காவல்சார்ந்தான்;
அனிட்டமில்லாதுமார்க்கமணைப்பவன்றனையிரப்பாம்;

மண்டலம் 1. சூக்தம் 105.

இனிக்குமிம்மறையோனுள்ளத்தெழுந்துதியுரையாகின்றன்;
புனிற்றுறுதுநியைவாய்ந்தோன்பொருந்துகமகத்தின்மெய்யே;
சனித்தவான்புவிகாளென்றன்றுபமீ துணாற்பாற்றே.

(இ-ள்) (அனிஷ்ட நிவாரணஞ் செய்யும் தேவனுகிய) வருணன் எங்களைக் காக்குந்தொழிலைக் கைக்கொண்டான். மார்க்கத்தில் நேருந் துன்பங்களை நிவர்த்திக்கும் அவ்வருணனைப் பலன்றரும்படியாசிப்போம். இந்த ஒதுவான் தனது இதயத்திலெழுந்த இனியஸ்தோத்திரத்தைக் கூறினன். புதியதுதியை யடைந்தவனுகிய வருணன் எமது ரிதத்தில்(யக்ஞத்தில்)பொருந்துக. பூமிவானங்களே, எனது கஷ்டத்தை யுணர்வீர்களாக—(எ-று.)

வருக்கம் 22.

16. தேவர்காளீண்டுதோற்றிச்சிறப்புறகிருமித்தோக்க
மேவியகதிரோன்மார்க்கந்தன்னைநீக்களுமேமிறி
யாவலிற்கடக்கவல்லீரில்லிரே!மர்த்தியர்காள்!
பாவுறுமதனையுங்கள்பார்வையாலுணரீர்;மற்றுத்
தூவியலுரோதவீயென்றுய்ரமீ துணாற்பாற்றே.

(இ-ள்.) தேவர்களே! இங்கே யாவருங்காண நன்முக வமைக்கப்பட்டுப் பெருமை பொருந்திய சூரியனது பாதையை நீங்களும் தாண்டிச் செல்லமாட்டீர்கள் (ஏன்? பரிவிராஜகர்கள் ஸூர்யத்துவாரா பிராஹ்மலோகத்துக்குப் போகிறார்களென்ற சுருதி யுண்மையால்.அதுவேயன்றித் தேவர்கள் வாழ்வுக்கு அதுவழியுமாவதாலென்க.) -மரணதர்மத்தோடு கூடியவர்களே! அச்சூரியனை உங்கள் கண்ணினுற் காணமாட்டீர்கள்.(மந்திரதிருஷ்டாவாகியஎனக்குத்தெரிகிறது பாபிகளாகிய உங்களுக்குத் தெரியவில்லையென்று துக்கித்தபடி.) வானம் பூமிகளே! எனது கஷ்டத்தை யறிவீர்களாக-(எ-று.)தேவர் வாழ்வுக்குச் சூரியன் வழியென்றதை ஸாயணர் விளக்குகிறார். ஸூர்யனால் வளர்தமாகிய ரிதுக்களேற்படுகின்றன. ரிதுகாலங்களில் யக்ஞங்கள் நடைபெறுகின்றன.யாகங்களால் ஸத்துக்களுக்கு ஜீவன மேற்படுகின்றது. அதனால் தேவர்களும் அதனை அதிக்கிரமித்து நடப்பதில்லையென்றபடி.(Benfey.) பென்வே யென்பவர் ஸூர்ய பந்தாவென்றது மேற்பன்னிரண்டாவது செய்யுளிற் கூறப்பட்ட சத்திய நெறி அல்லது இயற்கை யொழுங்கைக் குறிக்குமென்பார்.

17. கிணற்றில் வீழ்ந்தவதிப்பட்டதிரிதனுமுதவிகேட்டுப்
பணித்தனன்றுதியைத்தேவர்பால்;அவனிழைத்தபோற்றைக்
கணித்தனன்றேவவாசான்கண்ணுறுமவன்றன்பாபக்
துணித்தவன்றன்னைத்தூய்மைதுலங்குறவிடுவித்தற்குப்;
பிணைத்தவான்புவிகாளென்றன்பீடையீதுணாற்பாற்றே.

(இ-ள்.) கிணற்றில் விழுந்த திரிதன் உதவியைநாடித் தேவரைத்துதித்தான். அவன் பாவத்தைச் சேதித்து அவனைவிடுதலைசெய்வதற்காக அவன் ஸ்தோத்திரத்தைத் தேவாட்சகனுகிய பிரஹஸ்பதி கேட்டான். வானம் பூமிகளே! என் பீடையை யறிந்து விலக்குவீர்களாக—(எ-று.)

18. செந்திறந்தன்னைவாய்ந்த சீரிலோர்விருகமோர்நாள்
மன்னியவெனதுபாதைமாட்டியான்படரும்போது
தன்னியோர்முறையென்றன்னைக்கண்டது;சவேஜையுற்றுப்

T.100

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

பின்னுறவஞ்சாயுத்தச்சன்புரையப்பின்மறைந்து சென்ற,
துன்னும் வான்புவிகாளென்றனுறுகணீதுணாரற்பாற்றே.

(இ-ள்.) செந்நிறமுள்ள கோஹாயொன்று ஒருநாள் என் வழியில் வந்து என்னைச் சந்தித்தது. முதுகுவலியெடுத்த தச்சன் பின்னல் வளைந்து கொடுப்பதுபோலத் திரும்பிசசென்று மறைந்தது. வானம் பூமிகளே! என் துன்பத்தை யுணருவீர்களாக—(எ-று.) இவ்விருக்குக்கு வேறொருபொருளுமுண்டு. அதுவருமாறு.

இடமகலுலகைத்தோற்றமெய்துறவிளக்கிமாதந்
திடமுறவாக்குஞ்சீதன்வானெறிசெல்லுமீனைத்
தடையறக்கண்டான்,பின்னரவற்றொடுசென்றான்,கூபத்
திடையுறுமென்பாலெய்தவெண்ணில,னென்னேயென்னே!
யிடையுறுமுரோதவஹ்யென்விழுமமீதுணாரற்பூற்றே.

(இ-ள்.) பெரிய உலகத்தைப் பிரகாசிப்பிக்கும் மாஸகிருத்தாகிய சந்திரன், வானத்திற்செல்லும் நட்சத்திரங்களைக்கண்டு அவற்றோடுகூடச் சென்றான். கிணற்றில் விழுந்த வெண்ணிடத்துவரவெண்ணவில்லை. இது என்ன அதியாயம்! வானம் பூமிகளே! என் துன்பத்தையறிந்து அதனைநீக்குவகள்-(எ று) ஈண்டு, மாஸகிருத்தென பிரிக்காது மாஸகிருத் என்று ஒரு சொல்லாயெடுத்துப் பட்ச, மாஸ, ரிது, அயனதிகாலங்களுக்கு ஆதாரமாயுள்ள விருகம் அல்லது சந்திரனென்றார் யாஸ்கர். விருகம், விவருத ஜ்யோதிஷ்கோவா, விருருதஜ் யோதிஷ்கோவா, விக்ராந்த ஜ்யோதிஷ்கோவா வென்பார். சாகல்யத்திலும் மாஸ கிருத்தென இரண்டு பதங்களாகவே பிரித்துள்ளது. அதன்படி, 'நட்சனது புத்திரிகளாகிய நட்சத்திரங்கள் அடிக்கடியென்னைப்பார்க்கின்றன. அது தெரிந்தும் அந்த நட்சத்திரங்களிலேடேயே சொல்லுகிறான். என்னைக்கிணற்றினின்று தூக்கிவிடவருவதில்லை. இது அநுசிதம் என்பது பொருள்.

19. கூவியலிப்போற்றுல்யாங்கோபதிதுணையின்வீரர்
யாவருமினையிப்போரில்வெல்லுவாம்;எமதிப்போற்றைத்
தாவருபுவியும்வானுஞ்சிந்துவுமதிதிதானு
மேவுமித்திரவருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ள்.) சப்தத்தோடு கோஷிக்கு மித்தோத்திரத்தை, யிந்திரனைத் துணையாகக் கொண்டவர்களும் வீரர்களாகிய புத்திர பௌத்திரர்களோடு கூடியவருமாகிய யாஙகள் கூறிச் சத்துருக்களை ஜயிப்போம். எமது இவ்வேண்டுகோளைப் பூமி, வானம், விந்து, அதிதி, மித்திரன், வருணன் என்னுமிவர்கள் காக்கட்டும்—(எ-று.) கோபதி, இந்திரன்.

வருக்கம் 23.

106 மண்டலம் 1. அநுவாகம் 16. சூக்தம் 1.

7 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி குத்ஸன்; வட்மொழிச் சந்தம்: ஜகதி, 7 திருஷ்டுப்; தேவதை; விச்வதேவர்கள்.

மண்டலம் 1 சூக்தம். 106.

1. இந்திரனேமித்திரனேவருணனெடுமக்கினியைபீட்டஞ்சார்ந்த
சுந்தரமாருதாதிதியிவர்களேயாந்தூணேபுரியத்தோய்ந்தழைப்பாம்;
உந்துறுமேடவலுறையும்பாதையினிற்றேரதனேயோட்டலொப்ப
நந்தமதுபாவமெலாநற்கொண்டசால்வசுக்கணமிணுடியோட்டல்.

(இ-ள்.) இந்திரனேயும், மித்திரனேயும், வருணனேயும், அக்கினியையும், மருத்துக் கூட்டத்தையும், யாங்கள் உதவிசெய்யுமாறு கூவுவோம். மேடும் பள்ளமுமாயுள்ள பாதையினின்றும் (தேர்ப்பாகர்கள்) தேரை யோட்டிச்செல்லுவதுபோல நமது பாபங்களே யெல்லாம், நல்ஞானத்தோடு கூடிய வஸுக்கள் (செல்வங்கிறைந்த தேவர்கள்) நம்மைவிட்டுப் போகும்படி யோட்டி விடட்டும்—(எ-று.). வஸுக்கள் ஈண்டு பொதுவாகத் தேவர்களைக் குறித்து நின்றது. மித்திரன் முதலியோர் வரலாற்றை மண்1. சூக் 88 செய்1. மண். 1. 89. செய். 3. இவற்றிற் பார்க்க.

2. அந்தமுறுமதிதியினதரும்புதல்வீர்,யாம்வாழ்வையடையச்சார்வான்
முந்துறுவீர்;தேவர்கான்போரினில்யாம்வெற்றியுறச்சுகத்தைமூட்டீர்;
உந்துறுமேடவலுறையும்பாதையினிற்றேரதனேயோட்டலொப்ப
நந்தமதுபாவமெலாநற்கொண்டசால்வசுக்கணமிணுடியோட்டல்

(இ-ள்.) அழகிய அதிதி புத்திரர்களே! (ஆதித்யர்களே!) யாங்கள் வாழ்வைப்பெறுமாறு முதற்கண் வருவீர்களாக. தேவர்காள்! யுத்தத்தில் எங்களுக்குச் சுகத்தை யளிப்பீர்களாக. பின்னிரண்டடியின் பொருள் மேற்பாட்டைப் போலவே—(எ-று.).வசுக்கள் நம்மின் நாடி யோட்டல்எனப் பிரிக்க.

3. சந்தமுறத்துதிக்கவருந்தந்தையருமெமைக்காக்க,சார்ந்தேதவர்
சந்ததியென்றெண்ணுமிருதேவியர்வான்புவிகள்ரிதஞ்சாதிப்போரும்;
உந்துறுமேடவலுறையும்பாதையினிற்றேரதனேயோட்டலொப்ப
நந்தமதுபாவமெலாநற்கொண்டசால்வசுக்கணமிணுடியோட்டல்.

(இ-ள்.) சுகமாகத் துதிக்கத்தக்கவர்களாகிய எங்களுடைய தந்தையர் (அக்கினிமுதலிய தேவர்கள்)எம்மைக்காக்கட்டும்.எல்லாத்தேவர்களுக்கும்புத்திரஸ்தானத்திலிருந்து ஒழுங்கு அல்லது ஸத்தியத்தை வளர்ப்பவர்களாகிய வானம் பூமிகளும் எம்மைக் காக்கட்டும். மற்றது முன்போல—(எ-று.)

4. நந்தமனந்தனேப்பெருக்குநராசம்ஸன்றன்னையிவணும்வீரர்க்
கந்தமுறுநாயகளும்பூடனேயுந்தோத்திரத்தோடணைந்திரப்பாம்;
உந்துறுமேடவலுறையும்பாதையினிற்றேரதனேயோட்டலொப்ப
நந்தமதுபாவமெலாநற்கொண்டசால்வசுக்கணமிணுடியோட்டல்.

(இ-ள்.) மிகுந்த அன்னப்பொருள்களே (அல்லது மேனட்டாசிரியருரைப்படி வலிமையை) வளர்க்கும் நராசம்ஸன் என்னும் தேவனுகிய, அகினியையும், வீரர்களுக்கு நாயகனுகிய பூஷனேயும் நாம் ஸ்தோத்திரத்தோடு நெருங்கியாசிப்போமாக. எனையது முன்போலவே—(எ-று) நராசம்ஸன். நரர்களால் துதிக்கப்படுபவன் அகினி. மண். 1. சூக் 13 செய் 3. பார்க்க. பூஷன்மண். 1. சூக். 14. செய். 3. பார்க்க.

5. மந்திரியே!யெக்காலுமெங்களுக்குச்சுகநெறியைமருவுவிப்பாய்;
சிந்தைபயனிவாரணியுநோய்மருந்தும்வேண்டியுனைச்சேர்ந்திரப்பாம்;
உந்துறுமேடவலுறையும்பாதையினிற்றேரதனேயோட்டலொப்ப
நந்தமதுபாவமெலாநற்கொண்டசால்வசுக்கணமிணுடியோட்டல்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

(இ-ள்.) பிரஹஸ்பதியே! எப்பொழுதும் எங்களுக்குச் சுகத்தைத்தரும் மார்க்கத்தைச் சேர்ப்பாயாக. உன்னை யமித்துப் பய நிவாரணத்தையும் ரோக சமனத்தையுந் தருவாயாக வெனயாசிப்போம். மற்றது முன்போல— (எ-று.) சமநஞ்ச ரோகாணும் யாவனஞ்ச பய்யாநாம், என்பது யாஸ்கர்வசனம் மந்திரி பிரஹஸ்பதியின்பெயர். அவல், புள்ளம்.

6 இந்திரனே,விருத்திரனைக்கொல்பவனே,கருமமெலாமெணிக்காப்பானே
யந்திலுறுகூவலிஞ்ஞற்சென்னுமிருடிதுணையழைத்திரந்தான்;
உந்துறுமேடவுறையும்பாதையினிற்றோதனையோட்டலெய்ப்ப
நந்தமதுபாவமெலாநற்கொடைசால்வசுக்கணமினுடியோட்டல்.

(இ-ள்.) கிணற்றில் விழுந்தருத்ஸரிஷி, வித்திரஹந்தாவும், சசீபதியுமான விந்திரனே யுதவி செய்யுமாறு வேண்டினனன். மற்றது முன்போல —(எ-று.) விருத்திரஹந்தா விருத்திரனை அல்லது சத்துருவைக்கொல்லுபவன். சச்சீபதி யென்றதற்கு எல்லாக்கர்ம்ங்களையும் பரிபாலிப்பவனென்றும், இந்திராணியின் புருஷனென்றும் இரண்டு பொருளுண்டு. பின்பொருளைக் கொள்ளின் 'இந்திரனே, விருத்திரனைக்கொல்பவனைச் சசிதேவி யெண்ணுங்கோனே' எனமுதலடியைப்படிக்க. குத்ஸன் கூபத்தில் விழுந்தவனென்பது மேற் சூக்தத்திற் சொல்லப்பட்டது.

7. தேவியாமதிதியெம்மைத்தேவரோடென்றுங்காக்க;
காவற்றேவெமைவிழிப்பிற்காத்திடல்;எமதிப்போற்றைத்
தாவருபுவியும்வானுஞ்சிந்துவுமதிதிகாணும்
மேவுமித்திரவருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ள்) தானமுதலியகுணங்களிற் சிறந்த தேவியாகிய அதிதி எங்களைத் தேவர்களோடு எப்பொழுதுங் காக்கட்டும். காவற் றேவருகிய ஸவிதாவெங்களை ஜாகரூகனுயிருந்து காக்கட்டும். எங்களுடைய இந்தஸ்தோத்திரத்தைப் பூமி, வானம், ஸிந்து, அதிதி, மித்திரன், வருணன் என்னுமிவர்கள் காக்கட்டும் —(எ-று.) தேவஸ்த்ராதா, காவற்றேவு, எல்லாரையும் ரட்சிப்பவன், ஸவிதா—ஸாயணர்.

வருக்கம் 24.

107. மண்டலம். 1. அநுவாகம். 16. சூக்தம். 2.

3 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷிகுத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்;தேவதை:விச்வதேவர்கள்

1. எக்வியந்தேவரீயுஞ்சுகத்தனைப்பெறுக;வெம்மாட்
டெக்குறுசுகத்தை,யாதித்தியர்களே,யியைக்க;வுந்த
மிக்கநற்கடாட்சமெங்கண்மேவுக;வின்மைசார்ந்தோன்
பக்கலுந்தனத்தையீயும்பண்பினுத்தமர்தீராகலு.

(இ-ள்.) எங்களுடைய யக்ஞம் தேவர்கள் தருஞ்சுகத்தை யடையட்டும். ஆதித்தியர்களே! எங்களுக்குச் சுகத்தையளிப்பீர்களாக. உம்முடைய நிறந்த கடாட்சமெங்களிடத்துப்பொருந்தட்டும். தரித்திரனுக்குக்கூடத் தனத்தையைக்கு முத்தமர்களாக நீங்க ளாகக்கடவீர்கள்—(எ-று.) அம்மஹோச்சித் என்பதற்கு பாபிகளுக்குக் கூட அல்லது கஷ்டப்படுபவர்களுக்குக் கூட வென்று பொருள் கொள்ளினுந்தகும்.

மண்டலம் 1. சூக்தம் 108.

2. அங்கிரர்பர்டுஞ்சாமத்ததிட்டிதமடைந்ததேவர்
தங்குறுதுணையோடொன்றுச்சார்ந்தெங்கண்வருக;வெந்தன்
பொங்குதன்னுமமொய்ம்பின்,மருத்துவர்தங்கூட்டத்தி,
னங்கமாத்தஞ்சமீக,வதிதியுந்தேவரோடே.

(ள்-இ) ஆங்கீரஸர்கள் பாடும் ஸாமகானத்தைப் பெற்றதேவர்கள் தமது உதவிகளோடு ஒன்றுகக்கூடி எம்மிடத்து வருக. இந்திரன் சத்துருக்களை யடக்கும் தனது வலிமையோடும், மருத்துவர்களுடைய கூட்டத்தோடும் எங்களுக்கு அடைக்கலத்தைத் தரட்டும். அதிதியும் தன் புத்திரர்களாகிய தேவர்களோடு எங்களுக்கு அடைக்கலந்தரட்டும்—(எ-று.) மருத்துக்கள் ஏழெழுவராம், மண். 1 சூக். 88 செய். 1 பார்க்க. மொய்ம்பின்; மொய்ம்பெறு; கூட்டத்தின் கூட்டத்தோடு என்க. அதிதியுந் தேவரோடே யீகவென்க.

3. பாவுறு முண்டி யங்கி வருண னிந்திரன் சவிதா
வாவலி னரியமானு மளித்திடல்; எமதிப் போற்றைத்
தாவறு புவியும் வானுஞ் சிந்துவு மதிதி தானு
மேவு மித்திரர் வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) யாங்கள் யாசிக்கும் அன்னப்பொருள்களை, அக்கினி, வருணன், இந்திரன், ஸவிதா, அர்யமான் இவர்கள் தரட்டும். எங்களது இந்த ஸ்தோத்திரத்தைப் பூமியும், வானமும், ஸிந்துவும், அதிதியும், மித்திரனும், வருணனுங் காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 25.

108. மண்டலம் 1. அநுவாகம் 16. சூக்தம் 3.

13 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: டீ சூத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: இந்திராக்கினிகளிருவரும்.

1. சித்திரவொளிசார்தேரிற்றிகழுறுபுவனமுற்றுங்
தத்தியேசுழற்றுநோக்குந்தன்னைமவாய்ந்ததனிலேறி
யொத்திவணீணையீ,ருன்னுமங்கியிந்திரர்காள்,சோம
வத்துவார்சுதையையீண்டுபிழிந்தொழுகுவதைமாந்தீர்.

(இ-ள்.) இந்திராக்கினிகளே! சித்திரகாந்தியொருங்கியதும், எல்லாப்புவனங்களையும் பார்க்கும் பெருமைபொருந்தியதுமான தேரிலேறி இங்கு வருவீர்களாக. ஸோமம்பிழிந்துள்ளதைக் குடிப்பீர்களாக—(எ-று!)

2. இப் புவனங்கள் யாவுமெத்தகை விசாலமாயு
மொப்புறு கெம்பீரத்து முற்றுள, விந்திராங்கீ,
யப்பெரும் பரப் பாழத்திற் சோமமு மமைந்துநிற்க
செப்புறுநீவிருள்ளத் திருத்தியிற் பருகவெண்ணே.

(இ-ள்.) இந்திராக்கினிகளே! இப்புவனங்களெல்லாம் எவ்வளவு விசாலமாயும் கம்பீரத்தோடுமுள்ளனவோ, அவ்வளவு விசாலமாயும் ஆழமாயும் இந்தஸோமமு மமைந்திருக்கட்டும், நீங்கள் மனத்திருப்தியோடு பருகுமின்—(எ-று.) கபீரம் காம்பீர்யோபேதம் என்பதற்கு ஆழ்ந்துள்ளதும் மேனுட்டாசிரியருரை கூறுவர். இந்திராங்கீ தீர்க்கஸந்தி.

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

3 இந்திராக்கினிகாணீங்களியினையந்துமங்கலநாமத்தை
முந்துறவடைந்தீர்; கூடிமுயன்றனிரதியைக்கொன்றீர்;
வந்தனையளிக்குமேலீர்.மருவியீண்டமர்ந்துசோம
மந்தில்பேராற்றலூட்டுந்தகையதைக்குடிப்பீரன்றே.

(இ-ள்.) இந்திராக்கினிகளே! நீங்களிருவருஞ்சேர்ந்து கல்யாண நாமத்தை யடைந்தீர்கள். இருவருஞ் சேர்ந்து முயற்சிசெய்து விருத்திரனு கிய பாம்பைக் கொன்றீர்கள். பிரார்த்தித்த பொருள்களைத்தரும் பெரியவர்க ளே! இங்குவந்தமர்ந்து பெரிய வல்லமையை யூட்டும்பெருமை வாய்ந்த ஸோ மத்தைக் குடிப்பீர்களாக—(எ-று.)

4. சுருக்கிரண்டெடுத்துத் தூயதருப்பையையிரித்துத்தீயைப்
பொருத்திநற்சமித்தைமூட்டும்பொழுதினிலழகுபெற்றீர்;
உரத்துறுசோமஞ்சூழ ஆற்றியதிழுக்கவேகி
யருத்தியையளிக்குமெண்ணத்தமைகவிந்திரவங்கீயே.

(இ-ள்.) (அத்வர்யுவும் பிரதிப்ராஸ்தாதாக்களுமாகிய விருவர்) இரண் டு சுருக்கிலுலும் நெய்யை எடுத்துப் பரிசுத்தமான தர்ப்பையை விரித்துத தீயைப் போற்றிச் சமித்துக்களை மூட்டும்போது கவர்வத்தையடைந்தார்கள். சுற்றிலும் ஊற்றப்பட்ட வலிமையைத்தரும் ஸோமமானது உங்களை ஆகர் ஷிக்க, இந்திராக்கினிகளே, எங்களது இச்சைகளையளிக்கும் எண்ணத்தினை மைக—(எ று.) அழகு பெற்றீர் என்பது மூலத்திலில்லை, அத்வர்யு, பிரதிப் ராஸ்தாதர் வென்னு மிருவரு மென்றது ஸாயணருரையிற்கண்டது அவர்கள் யாகப்பிராமணர்கள் 16 பேரிற் சேர்ந்தவர்கள். அத்வர்யு, ஹோதா, பிரஹ் மா, ஆக்ஞீத்ரன், உத்காதா, பிரதிப்ராஸ்தாதா, நேதா, போதா, ஸுப்ரஹ் மண்ய, க்ராவஸ்தா, பிராஹ்மணாச்சம்ஸ, அச்சாவாக, ப்ரஸ்தோதா, ப்ர சாஸ்தா முதலியோர் பதினறுவர். மேல் மண். 1 சூக். 95 செய். 6 பார்க்க

5. வீரியச்செய்கை கட்டா, மிருவலி யிந்திராங்கீ,
பாரெலா முலவுந் தோற்றம் படைத்த தற்காக, வண்மை
யேரியை யுங்கணட்புப் பண்டுதொட்டொளிர்வதற்காத்,
தாரினிற் சமைத்குஞ் சோமச் சுதையினைப் பருகுவீரே.

(இ-ள்.) மிக்கவலிமைபொருந்திய இந்திராக்கினிகளே! வீரியகி ருத்தியங்களைச் செய்ததற்காகவும், உலகமெல்லா வற்றிலுமுள்ள சிருஷ்டிக ளைப் படைத்ததற்காகவும், வள்ளன்மைபொருந்திய உங்களுடைய சிநேகம் பண்டைக்காலத்திலிருந்து விளங்குவதற்காகவும், பூமியில் எல்லாராலும் பிழி யப்படும் ஸோமத்தைக் குடிப்பீர்களாக—(எ-று) இந்திராக்கினிகளே எல் லா ஜகத்சிருஷ்டிகளையும் செய்கிறார்கள், இந்திரன் ஸூர்ய ரூபமாகவிருந்து மழையைப்பெய்விக்கிறான். மழையினால் எல்லாப்பிராணிகளுமுண்டாகின் றன வென்க.

வருக்கம் 26.

6. முதன்முதலும்மைத்தேர்ந்தபொழுதினின்மொழிந்தாற்போலச்
சுதைப்பொருட்டசுரரோடுதொடர்ந்துபோராடவேண்டித்
ததைந்தது; இச்சதக்கியத்தைத்தாங்களுமுணர்ந்துவந்து
துதைந்தசோமப்பெருக்கைத்தோய்ந்துவாய்மடுத்திடீரே.

மண்டலம் 1 சூக்தம் 108.

(இ-ள்.) (இந்திராக்கினிகளே!) யான் முதன்முதலும்மை யக்ஞத் துக்காகத் தேர்ந்தபோது சொன்னதுபோலவே ஸோமத்தின் பொருட்டு அ சுரர்களோடு தொடர்ந்து போராடவேண்டி வந்தது. இவ்வுண்மையை நீங களுமறிந்து இவ்விடத்து நிறைந்துள்ள சோமவெள்ளத்தைக்குடிப்பீர்களாக —(எ-று.)

7. இந்திராக்கினிகா,ளுந்தஞ்சுயகிரகத்திலேனு,
மந்தமார்மறையோனன்றியசுஞ்டேனுங்,தூயீர்,
மூன்றுறுகளிப்பிணைந்துழுகினுமங்ஙனின்று
வந்தருள்புரிவீர்சோமச்சுதையீனமாந்துவீரே.

(இ-ள்.) பரிசுத்தமான இந்திராக்கினிகளே! உம்முடைய ஸ்வக்கிரகங் களிலாதல், அல்லது வேறொரு பிராஹ்மண யஜமானன் வீட்டிலாதல், அல் லது ஒருசுந்திரிய அர்சுனுடாதல் நீங்கள் உள்ளக்களிப்போடு அமர்ந்து கொண்டிருந்தாலும், யான் கூப்பிடும்போது வருவீர்களாக. வந்து, பிழிந் துள்ள ஸோமத்தைப் பருகுவீர்களாக—(எ-று.)

8. யதுக்கள்துர்வசர்களோடுபூருக்களநுக்களோடு
வதியினுந்துருகியரோடுறையினுமிந்திராங்கி!
துதியினரிச்சைதோய்ப்பீர்!தோயுமவ்விடத்தினின்று
மதிவிரைவோடுவந்தீண்டமிழ்தினேப்பருகுவீரே.

(இ-ள்.) யதுக்கள், துர்வசர்கள், பூருக்கள், அநுக்கள், த்ருஹ்யுக்கள் என்னும் ஐந்துவகை மாந்தர்களிடத்துறையினும், இந்திராகினிகளே! ஸ் தோதாக்களினுடைய இச்சைகளை வர்ஷிப்பவர்களே! நீங்களுள்ள அவ்வி டத்தினின்றும் விரைவாக வந்து இங்குள்ள சோமத்தைப் பருகுவீர்களாக— (எ-று) யதுக்கள் துர்வசர்கள், பூருக்கள், அநுக்கள், த்ருஹ்யுக்கள், இவர் யயாதியின்வம்சத்தின்றான, யது, துர்வசன், பூரு, அநு, த்ருஹ்யு என்னும் ஐவரையும் வழிக்கொண்டவர்கள் என்பார் மேலுட்டாசிரியர். மண் 1 சூக். 7 செய். 9. பார்க்க. ஆனால் ஸாயணரோ யதுக்கள் யமம் வாய்ந்தஅஹிம் ஸ கர்களென்றும், துர்வசர்கள் நீசுகிழைக்கும் மாந்தர்களென்றும்,த்ருஹ்யுக்கள் பிறருக்குத் துரோகஞ்செய்யும்நினைப்புள்ளவர்களென்றும், அநுக்கள் ஞான மும் அநுஷ்டானமு முள்ளவர்களென்றும், பூருக்கள் திருப்திநிறைந்த இ தரஸ்தோதாக்களென்றும் பொருள்கூறுவர்.

9. பிதுவியாமடிக்கண்ணும்பெருகுமத்தியத்திலேனு
மதிபரமோச்சத்தேனுமணையினுமிந்திராங்கி!
துதியினரிச்சைதோய்ப்பீர்!தோயுமவ்விடத்தினின்று
மதிவிரைவோடுவந்தீண்டமிழ்தினேப்பருகுவீரே.

(இ-ள்.) தாழ்ந்ததலமாகிய பூமியிலேனும் மத்தியதலமாகிய அந்தரிட்சத் திலேனும் பரமோச்சஸ்தலமாகிய விண்ணிலேனும் எங்கிருந்தாலும்ஸ்தோதா க்களின் இச்சையை யளிக்கும் இந்திராக்கினிகளே! அங்கிருந்து வேகமாக வந்து ஸோமத்தைப் பருகுவீர்களாக—(எ-று.) மூலத்தில் பிருதிவ்யாம் என்பது மத்தியநிலத் தீபகமாகவுள்ளது. அங்கேபிருதுவி யென்பதற்கு ஸ்தலம்என்பது பொருள். தாழ்ந்த ஸ்தலமாகிய பூமியிலாவது, மத்தியஸ்தல மாகிய அந்தரிட் சத்திலாவது பரமோச்சஸ்தலமாகியவிண்ணிலாவது என் று அந்வயிக்க. அதித்தபாட்டில் பூமி இப்பொருளில்வந்துள்ளது. பிருதுவி, பிதுவியென மருவியது.

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

10. அதிபரமாச்சபூமியாயினுமிவணினும்
கனவுகேட்டலத்திலேனுங்கலக்கினு,மித்திராங்கி!
துதியினரிச்சைதோய்ப்பீர்!தோயுமவ்விடத்தினின்று
மதிவிரைவோடுவந்தீண்டமிழ்தினேப்பருகுவீரே.

(இள்) முன்போலவே.—(எ-று.)மேற்பாட்டிற் சொன்ன முறையமாற்றித்துதித்தது. ரண்டு பூமி இடம், ஸ்தலம் என்னும் பொருளில் வந்தது.

11. வதிவதாகாயத்தேதனுமண்டலத்தேதனுமன்றிக்
குகாத்தினிரிற்பூண்டிற்சூலவினு,மித்திராங்கி;
துதியினரிச்சைதோய்ப்பீர்!தோயுமவ்விடத்தினின்று
மதிவிரைவோடெந்தீண்டமிழ்தினேப்பருகுவீரே.

(இ ள்.), காமாபிவர்ஷகர்களே! இத்திராக்கினிகளே! நீங்கள் வானத்திலிருப்பினும் பூமியிலிருப்பினும், மலை, நீர், பூண்டு இவற்றிற் கலந்திருப்பினும் அங்கிருந்து விரைவாக வந்து இங்குள்ள ஸோமத்தைப் பருகுவீர்களாக—(எ-று.) மண்தலம் எனப்பிரிக்க.

12. ஆதவனுச்சிநண்ணுமப்பொழுதவியன்னத்தைத்
காதலினுண்டிவீர்களிக்கினு,மித்திராங்கி!
மாதுதியினர்தமிச்சைவழங்குவீர்!அங்ஙனின்று
மாதாத்தோடுமீண்டுற்றமிழ்தினேப்பருகுவீரே.

(இ-ள்.) இச்சையை யளிப்பவர்களே! இத்திராக்கினிகளே! சூரியன் உச்சிக்குவரும் மத்தியானகாலத்தில் நீங்கள் அவியுணவையுண்டு ஸந்தோஷித்திருப்பினும், அங்கிருந்து ஆசையோடுமிங்குவந்து ஸோமத்தைக் குடிப்பீர்களாக—(எ-று.) அவியுணவையுண்டு களிக்கினு மென்னுது உங்களது ஸ்வதேஜஸோடு விளங்கினும் என்றும் மூலத்திற்கு ஒருபொருள் கூறுவதுண்டு.

13. ரவகையெஞ்சோமத்தைமாந்தியே,மித்திராங்கி!
பாவுபல்பொருளோயீந்துபரித்திடீர்;எமதிப்போற்றைத்
தாவருபுவியும்வானுஞ்சிந்துவுநிதிதானு
மேவுமித்திரவருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ள்.) இவ்வகையாக, இத்திராக்கினிகளே, எங்களது ஸோமத்தைக் குடித்துப் பலபொருள்களோயுத்தந்து பாதுகாப்பீர்களாக. எங்களுடைய இத்ததியைப், பூமி, வானம், விஷ்து, அதிதி, மித்திரன், வருணன் என்னும் இவர்கள் காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 27.

109. மண்டலம் 1. அநுவாகம் 16 சூக்தம் 4.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷ. குத்ஸன்; வடமொழிச் சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: இந்திராக்கினிகள்.

1. வாழ்வினேவிழைந்தயானென்மனத்தினுன்ஞாதியேனுந்
தாழ்விலாப்பந்துவேனுந்தயங்கிடச்சூழ்ந்தேன்;உம்மின்

மண்டலம் 1. சூக்தம் 109.

வாழ்வளி மதியோர்வேறுமன்னில,ரிந்திராங்கீ,
கூழ்விழைந்துருகிப்போற்றைக்குயிற்றினேனும்பொருட்டே.

(இ ள்.) வாழ்வையடைய விரும்பிய யான் ஞாநியாவது இதர ஸம்மான பந்துக்களாவது கிடைக்கட்டுமென்று எண்ணினேன். (நீங்கள் ஞாநிகளும் பந்துக்களுமானீர்கள் என்றபடி.) உம்மைக்காட்டிலும் வாழ்வைத்தரும் நன்மதியுள்ளவர்கள் எனக்கு வேறொருவருமில்லை. இந்திராக்கினிகளே! அன்னத்தை விரும்பி யுருகுகின்ற இந்தஸ்தோத்திரத்தை யுமக்குத் திருப்தியுண்டாகும்படி செய்தேன்—(எ-று.) உருகு இப்போற்றையெனப் பிரிக்க.

2. கல்விகேள்வியிற்குறைந்தகடையனுமனுளன்றன்னின்,
நல்விவாகத்திருந்துகடையளிபிராதாதன்னிற்,
செல்வமிக்கீவீரென்றுகேட்டுளேன்;உமக்குச்சோமம்
பல்குதானத்தோமத்தைப்பயிற்றினே,னிந்திராங்கீ.

(இ-ள்.) கல்வி கேள்விகளிற் குறைவான (ரூபமில்லாத) குணக்கடையனாகிய மனுளன் பெண்ணுக்குப் பரிசம் நிறையக்கொடுப்பதைக்காட்டிலும், விவாக காலத்திலிருந்து (சகோதரியின் திருப்திக்காகச்) சகோதரனுக்கு தனம் யதேஷ்டமாகக் கொடுத்துக்கொண்டு வருவதைக் காட்டிலும், நீங்கள் வெகு செல்வமளிப்பவர்களென்று கேட்டுள்ளேன். இந்திராக்கினிகளே! உங்களுக்கு ஸோமத்தோடு கூடிய ஒரு புது ஸ்தோமத்தை யியற்றியுள்ளேன்—(எ-று.) பெண்ணுக்குத் தகுந்த வரனல்லாதவன் பெண்வீட்டாருக்குமிக்கப்பொன் தருவதும், சகோதரன் சகோதரிக்குத் தனமளிப்பதும் மரபு. நடை, பொன், ஏணடு, ஸ்திரீதனமாயிற்று.

3. தாம்பினேத்தறியோம்;முன்னோர்சத்தியுமுவர்தமல்லுந்
தாம்பெறுவமிசப்பேற்றைத்தடையறப்பெறுவானில்லாள்
ஓம்புறுமவர்யாசித்தார்,பகையுணரிந்திராங்கீ,
தாம்பலவுரைக்கும்போற்றிற்சுகமுறவருகிருந்தே.

(இ-ள்.) பகைவர்களே யறியும் அல்லது வருத்தும் இந்திராக்கினிகளே! யாங்கள் எங்கள் வம்சாவளியாகிய கயிற்றை யறுத்து விடமாட்டோம். எங்கள் முன்னோரது பலமும், (உவர்தம்) இவ்விந்திராக்கினிகளின் பலமும் பொருந்திய வம்சப்பேற்றையடைவதற்காகப், (விருஷணம்:) புத்திரர்களைப் பெற்றத்தக்க மனைவியோடு கூடிய யஜமானர்கள், தாங்கள் சொல்லும் ஸ்தோத்திரங்களால் உங்களுக்குச் சுகமுண்டாகும்படி பக்கத்திலிருந்து யாசித்தார்கள்—(எ-று.) பின்னிரண்டடிகளை வேறுமாதிரி படித்தலும் ஒன்று. அது வருமாறு: 'ஓம்புறுமவர் யாசித்தாருயாதிசவனத்தோலி, னேம்பலிற் பினிறுஞ் சோமக் கற்சினருகிருந்தே.' இவ்வுரைப்படியே மேனட்டாசிரியர் மொழிபெயர்த்துள்ளார், அற்றேல் 'யஜமானர்கள் ஸோமம் பிழியும் தோலிற் சுத்தத்தோடு சப்திக்கும் ஸோமக்கல்லிரண்டிற்கும் அருகினின்று யாசித்தார்கள்.' எனக. தாம்பு சந்ததியென்பார் ஸாயணர். நெடுநாளாகச் செய்துவந்த யக்ஞகர்மங்கள் என்பார் மேனட்டாசிரியர். விருஷணம்:, ஸேக்தாரம் புத்ரோத்பாதன ஸமர்த்தாம்:, ஸபதநீத்நா இத்யர்த்த:, புத்ரர்களைப்பெற்றவல்லவர், பத்நியோடு கூடியவரென்பது பொருள். நிஷ்ருஷ்ணி, மந்த்ரம், அதிஷ்டவணசர்மம் என்னும் இரண்டு பொருளும் படும். உவர்தம் மல் என்றது இந்திராக்கினிகளின் வன்மை யென்க.

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

4. உம்மிருவருக்குமத்தழூட்டுவா,னிந்திராங்கீ,
செம்முறுதெய்வவின்பச்சருமஞ்சோமஞ்சிறக்க
வம்மையிறுற்றும்;வாசிச்சுபக்கரக்கோலவத்தத்
திம்மெனவருவீர்நீரினினிமையையிதற்கூட்டீரே.

(இ-ள்.) இந்திராக்கினிகளே! உங்களிருவருக்கும் மதத்தையூட்டும் வண்ணம், தெய்வவின்பத்தோடு கூடிய சோமம்பிழியுந்தோல் ஸோமத்தை யிறக்கும். சுநிரையோடும், சுபம்பொருந்திய முன்கைகளோடும், அழகிய மேற்கையோடும், நீங்கள் விரைவின் வருவீர்களாக. தண்ணீரினது மாதுர்யத்தை இச்சோமத்துக் கூட்டுவீர்களாக—(எ-று.) மேலுட்டாசிரியர், தடைசியடியினுரையில், அசுவினிகளே! யென வேறொரு விளியை வருவித்து ஸோமம் பிழியும் அசுவினிகளே யெனக் கூட்டுகவென்பார். அவ்விருவருமே அத்வர்யுவும் பிரதிப்பிரஸ்தாதாவுமாக விருந்து காரியங்களை நடத்துபவர்களாக மதிக்கப்படுபவர்களாதலாலென்க. மண். 1 சூக். 108 செய். 1 பார்க்க.

5. விருத்திரற்செற்றப்பொன்னேவிபசனஞ்செய்தகாலை
யுருத்தபேராற்றலுற்றீரென்றபேச்சொன்றுகேட்டேன்;
திருத்தியநோக்கீரிந்திராங்கிகள்,சேர்ந்திவவெக்ஞ
வருத்தியிற்றருப்பைமீதார்ந்தமிழ்தினிற்களிகொள்வீரே.

(இ-ள்.) விருத்திராசுரனைக்கொன்று தனத்தைப் பக்தர்களுக்குப் பங்கு செய்தளித்தபோது 'இந்திராக்கினிகள் மிகப்பலம்பொருந்தியவர்கள்' என்ற பேச்சொன்று கேள்வியுற்றேன் நல்ல பார்வையோடு கூடியவர்களே! இந்திராக்கினிகளே! இங்குவந்து இந்த யக்ஞத்தினிடத்துப் பிரியங்கொண்டு தருப்பை மீதமர்ந்து யாங்கள் தரும் ஸோமத்திற் சந்தோஷிப்பீர்களாக—(எ-று.) விபசனம், (Vibhajanam.) பங்குபோடுதல்.

வருக்கம் 28.

6. ஆகவந்தன்னிற்காவற்கழைக்கும்போ,நிந்திராங்கீ,
சேருமனிதர்தம்மிற்றீவிரமார்ந்து,வானம்
பூதலமிவற்றின்மேலாய்ப்பூதரநிகடம்மின்
வாகுறவுயர்ந்துமற்றைப்புவனங்களினுமோங்குற்றீர்.

(இ-ள்.) யுத்தத்தில் உம்மைத் துணைக்கழைக்கும்போது, இந்திராக்கினிகளே, நீங்கள் வலிமைபொருந்திய மனிதரிலுந் தீவிரங்கொண்டவர்களாய், வானம் பூமியிவைகளைக்காட்டிலும் பெரியவர்களாய், மலைநதியிவற்றின் ஆற்றலையுங்கடந்து இதர எல்லாப்புவனங்களிலுமுள்ள பிராணிக் கூட்டங்களின் வலிமைக்கும் மேற்போனவர்களானீர்கள்—(எ-று.)

7. வச்சிரவாகுகொண்டீர்மாழையைத்தாங்கிவந்தே
யுச்சிதமாகவீவீரும்துணைகொண்டளிப்பீர்;
நச்சியெம்பிதிரர்கூடிநற்கதிபெற்ற ஞாயி
றிச்சமயத்தெங்கண்ணுமிலங்குகவிந்திராங்கீ!

(இ-ள்.) வச்சிரத்தைக் கையிலேந்தியவர்களே! தனத்தைத் தாங்கிக் கொண்டுவந்து எங்களுக்குத்தருவீராக. எமக்குத் துணைசெய்து எம்மைக்காப்பாற்றுவீராக. எமது பிதிர்கள் சென்று நற்கதி யடைந்தவழியாகிய சூரியனது கதிர்கள், இந்திராக்கினிகளே, இப்பொழுது எங்கள் கண்ணிலும்

மண்டலம் 1 சூக்தம் 110.

படட்டும்—(எ-று.) மாந்தர் சூரியனைப் பேதித்துகொண்டு அர்ச்சிராதி மார்க்கத்துவாரா பிரஹ்மலோகத்தை யடைகிறார்களென்று சாந்தோக்கிய உபநிடதம் கூறும். அர்ச்சிராதி மார்க்கம் என்றும், தூமாதிமார்க்கமென்றும், இரண்டுமார்க்கங்களுண்டு. அவற்றுள் ஒன்று ஒளியுள்ளது. மற்றொன்று இருணிறைந்தது. உத்தராயனம் சுக்கில பட்சம் முதலிய காலங்களில் இறப்பவர்கள் அர்ச்சிராதி மார்க்க வழியாகச் செல்லுகிறார்கள் என்றும், தட்சிணையனம், அபரபட்சம் முதலிய காலங்களிலிறப்பவர்கள் தூமாதி மார்க்கமாக இருட்டு நிறைந்த வழியிற் செல்லுகிறார்களென்றும் கூறுப.

8. மேவலர்ப்புரம்பொடிப்பீர்,வீசுக,குலிசக்கையீர்,
காவல்செய்வீரெஞ்ஞாட்பி, னிந்திராங்கி;யெம்போற்றைத்
தாவருபுவியும்வானுஞ்சிந்துவுமதிதாணு
மேவுமித்திரர்வருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ள்.) சத்துருக்களின் கோட்டைகளை யழிப்பவர்களே! வச்சிராயுதத்தைக் கையிற்றரிக்கியவர்களே! இந்திராக்கினிகளே! பொன்னைக் கொடுப்பீர்களாக. எங்களது யுத்தத்தில் எங்களைக்காப்பீர்களாக. எமது துதியைப் பூமி, வானம், விந்து, அதிதி, மித்திரன், வருணன் என்னுமிவர்கள் காக்கட்டும்—(எ-று.) வீசுக, கொடுக்க, தானஞ்செய்க என்பது பொருள்.

வருக்கம் 29.

110. மண்டலம் 1. அநுவாகம் 16. சூக்தம் 5.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷ குத்ஸன்; வடமொழிச் சந்தம்: ஜகதி, 8,9, த்ருஷ்டுப்; தேவதை: ரிபுக்கள்.

1. முன்பென்னலாற்றப்பட்டனைதொழிலின்பொழுது(ம்)முயங்கினனெல்;
அன்புசிறந்தொழுகுமெனதருந்துதியுமமதுபுகழார்த்திற்றன்றே;
இன்பினெலாத்தேவருக்கென்றிக்கடலுமிரிபுவர்கா,ணீண்டிநின்ற
இன்பமுறச்சுவாகாவென்றளிசோமமுண்டுகளியெய்துவீரே.

(இ-ள்.) முன்பு என்னுற் செய்யப்பட்ட அக்கினிஷ்டோமாதி கருமங்களையே மீண்டும் செய்யத் தொடங்கினேன். அன்புமிக்க எனது அரியஸ்தோத்திரமும் உங்களது புகழை நிறைவித்தது. ரிபுக்களே! எல்லாத தேவருக்காகவும் (விசுவதேவருக்காகவென்றபடி) சமுத்திரமென்னத்தக்க இந்தச் ஸோம ரஸம் கூடிற்று. ஸ்வாஹாவென்று கூட்டியளிக்கும் அச்சோமத்தைக் குடித்து ஸந்தோஷத்தை யடைவீர்களாக—(எ-று.) கடல், ஸமுத்திரம் என்று வடமொழிமூலத்திலுள்ளது ஸமுந்தஸீலோயம் ஸோமரஸ: என்பார் ஸாயணர். கசியக்கூடியதாகிய இந்தஸோமச்சாறு என்பது பொருள். இரிபுவர்கள், ரிபுக்களே! ரிபுக்கள் மூவர்; ரிபு, விப்வான், வாஜன் என்பவர். இவர்கள் ஆங்கிரஸகோத்திரத்து ஸுதன்வனது புத்திரர்கள். (குத்ஸனும் ஆங்கிரஸகோத்திரத்தானே.) மண்.1. சூக்.20.செய்.1. நோக்குக.

2. பக்குவஞானம்பொருந்திப்பண்டிருந்தென்னிலையினைப்பார்வி
ஞர்ந்து

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

மிக்குறுபல்போகமதையிச்சித்துத்தபோவனத்தின்மிகத்திரிந்த
வக்கணத்துச்,சுதன்வனதுபுத்திரர்கா,ணெடுந்தூரமாடியோடிச்
சிக்கெனத்தாசுடன்சவித்துப்புவிக்கிரகந்தனைத்தேடிச்சேர்ந்திட்டீரே.

(இ-ள்.) ஸுதன்வனுடைய புத்திரர்களாகியரிபுக்களே! பக்குவஞ்ஞானத்தைப்பொருந்திப் பழையகாலத்திலிருந்து என்னுடைய ஆங்கிரஸவம்சத்தில் வந்தபந்துக்களே யுணர்ந்து, அவர்களளிக்கும்போக்கியங்களே விரும்பித் தபோவனத்தில் உங்களிச்சைப்படித் திரிந்துகொண்டிருந்த அக்காலத்தில் நெடுந்தூரம் நடந்து வந்து (அல்லது ஸாயணர் உரைப்படி நன்றாக சம்பாதிக்கபட்ட தபஸோகூடியவர்களாய்ப்)பூமியின் கண்அவியளிக்கும் ஸவிதா அல்லது ஸோமம்பிழியும் யஜமானனது வீட்டைத் தேடியடைந்தீர்கள்-(எ-று) சுத்ஸலும்,ஸுதன்வனும்ஆங்கிரஸ கோத்திரத்தாரென்பது முன்பேசொன்னர்.ஸவிதா ஸோமயாஜகனென்பது ஸாயணர் கூற்று. ஸாயண ருஜீப்படி 'மிகுந்ததவமேணந்திங்கோடி', என்று செய்யுளை மாற்றிப்படிக்க. மண். 1; சூக். 20 செய் 5. நோக்குக.

3. மறைவுபடாரச்சவிதாவையபேட்சித்துவேண்டுகோள்வசுத்தவன்று
றைவுபடாவமராதுதன்மையினேயுங்களுக்குங்கொடுத்தானன்றே;
நிறைவினுறவொன்றுகவசரன்றுன்றூடிப்பதற்குரிருமித்திட்ட
நறையுமப்பாத்திரத்தைநான்குறுப்போடேய்ந்துறுநீர்நாட்டினீரே.

(இ-ள்.) ஒருவராலும் மறைக்கப்படாத ஒளியோடு கூடிய ஸவிதாவை விரும்பிப் பிரார்த்தித்தபோது அவன் குறையாத தேவத்தன்மையை யுங்களுக்குக் கொடுத்தான் (உங்களைத் தேவர்களாக்கினன் என்றபடி.) அசுரனுகிய த்வட்டா ஒன்றாகச்செய்த ஸோமநிறைந்தபாத்திரத்தை நான்கு சமஸத்தோடு கூடியதாகச்செய்தீர்கள்—(எ-று.) அசுரன்,த்வட்டா இவன் ஸோமத்தைதாட்டியும் 3 சமஸங்களும்செய்தவன். சமஸம் மரவை. பெரியபாத்திரத்திலிருந்து மொண்டுஊற்றுவதற்கு உபயோகப்படுவது. மண். 1. சூக். 20. செய் 6. நோக்குக.

4. யாகமதிற்சிரத்தையொடுமிருத்விகராய்க்கருமமியற்றியன்னர்
சோகமறநின்றபோதமர்த்தியராயினர்மரிப்பைத்தோய்ந்துநின்றும்;
மாகமுறுகதிரொளியேயிரிபுவர்கள்சுதன்வனதுமைந்தரோராண்
டேகுவதன்முன்னரேகருமமநிற்கலந்துபுகழெய்தினீரே.

(இ-ள்.) யக்ஞகார்யங்களைச் சிரத்தையோடு ரித்விக்குக் களாயிருந்து நடத்தினபோது அவர்கள் மரணதர்மத்தோடு கூடியவர்களாயிருந்தும் அமர்த்தியர்களானார்கள். ஆகாயத்திலுள்ள சூரியனது வெளிச்சத்துக்குச் சமானமான ஒளியோடு கூடிய ரிபுக்களாகிய சுதன்வனதுபுத்திரர்கள் ஒருவருஷமாவதற்குமுன்பே வஸந்தாதிகாலக்கிரமங்களிற்செய்யும் யக்ஞகர்மங்களுக்கு இன்றியமையாதவர்களாகக் கருதப்பட்டுவிட்டார்கள்—(எ-று.)

5. அருகிருந்தோர்துதிக்கவுறுமிரிபுவர்கள்யாகமதையாற்றவாய்ந்த
வொருகலசந்தனே,யளவுகோலொன்றுற்றேத்திரம்போலுபாயமாக
வரையறுத்தா,ருவமைபெறும்பொருள்வேண்டிப்பிரார்த்தனைகள்வயக்
கித்தேவர்
சரைமரணம் வாயாதார் மத்தியினி லவிச்சீரைச் சாரு மாறே.

மண்டலம் 1 சூக்தம் 110.

(இ-ள்.) சிறந்த செல்வங்களே யெல்லாம் வேண்டிப்பிரார்த்தனை செய்து ஜராமரணமுக்கமில்லாத தேவர்களுக் கிடையில் நாங்களும் ஒருவராய் அவியேற்கும் பெருமையையடையும் வண்ணம், பக்கத்திலுள்ள ரிஷிகள் ஸ்தோத்திரஞ் செய்யத்தக்க ரிபுக்களியாகத்துக்கெனவமைந்த ஒருஸோமபாத்திரத்தை ஒருஅளவுகோலால் வயலையளப்பதுபோலவளந்து விட்டார்கள்.—(எ-து.) நான்காகவளந்தார்கள் என்க. இப்பாத்திரம் சந்திரனைக் குறிக்கும் என்பார் மேனுட்டாசிரியர்.

வருக்கம். 30.

6. அந்தரத்திலுப்பணுறுநரர்களுக்குச்,சுருதியுணர்வாரும்யாங்கள்
சிந்துறுநெய்த்துவையினமானவெமதருமறையைச்சோக்காதிற்
போஞ்
சந்தமுறுமிப்பெரியதந்தையோடுமருகணைந்துதயங்குமன்ன
முந்துசுதைதனையுண்பான்விண்ணுலகெய்திரிபவராமொய்ம்பி
னர்க்கே.

(இ-ள்.) அந்தரிட்சவுலகத்திலுள்ள தேதாக்களும், அழகு பொருந்திய இச்சூரியனுகிய தந்தையின் சமீபத்திலிருந்து விளங்கிச்சோமலட்சணவுணவை யுண்பதற்காக விண்ணுலகை (அல்லது தேவவுலகை) ப்பெற்றவர்களுமான ரிபுக்களின் பொருட்டு, மந்திர யேத்தாக்களாகிய யாங்கள் சுருக்கிலிருந்து ஒழுகும் நெய்யைச்சேர்ப்பதுபோல அரியமந்திரத்தையும் கூறுவோம் —(எ-து.) தந்தையென்றது ஆதித்தியனே அல்லது சூரியனே; என்? அவன் எல்லா வுலகங்களையும் பரிபாலிப்பவனுதலற்பற்றி 'ஆதித்யரச்மயோபி ரிபவ உச்யந்தே; என்று நிருக்த வாக்கியமுள்ளதால் (அதாவது சூரிய கிரணங்களும் ரிபுக்களென்று சொல்லுகிறார்கள் என்பது பொருள்) ரிபுக்கள் சூரியண்டலத்தில் அந்தரிட்சவுலகத்தில் உலாவுவோர்களானார்கள். திவோரோஜம் விண்ணுலகம். முன்பு பார்த்திவம் ரஜம் என வந்தது மண். 1 சூக். 90 செய். 7பார்க்க. ரஜச்சப்தோ லோகவாச்சி' ரஜமென்றால் உலகமென்றர்த்தம் மேல் மண். 6 சூக். 9. செய். 1 பார்க்க. விண்ணுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள ஆகாயத்தைத் திவோரஜம், பார்த்திவம் ரஜம் என இரண்டு கூறுபடுத்தியுள்ளார். Heavenly Atmosphere and Terrestrial Atmosphere.

7. ரிபுக்களேயெங்களுக்குநவவலியாரிந்திரனும்;ரிபுக்களாவார்,
தபுத்தறியாவன்னமொடுசெல்வமதைச்சார்ந்தெமக்குந்தருவார்
பொன்னே;
விபுத்துவமார்தேவர்களே,யுந்துணையினன்னளின்விழையாதெம்
மாட்
டபுத்திரவகாரகராமகமாற்றூர்சேனையினையெடுக்குவோமே.

(இ-ள்.) ஸுதன்வன் புத்திரர்களாகிய ரிபு, விப்வான், வாஜன் என்னும் மூவருமே யெங்களுக்குப் புதியதாமான வலிமை சிறந்த இந்திரன் (பரமேச்வரன் அல்லது ரட்சகன் என்றபடி) ஆவார். ரிபுக்கள் உணவுப் பொருள்களுக்கும் தனத்துக்குங் காரணபூதர்களாவார். அவற்றையே யெங்களுக்குங் கொடுப்பார்கள். தேவர்களே! உமது துணைகொண்டு அநுகூலமான நாளில் எங்களுக்கு உப்த்திரவத்தைத்தரும் அயாஜி (யக்ஞஞ்செய்யாதவர்)

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

கலோக்தெல்லுவோம்—(எ-று) ரிபுக்கள் சூரியகிரணங்களாம் இந்திர னுமென்பதாற் கவி (உருபாதி) ரிபு வென்னும் பதம், உரு பிரகாரிப்பது என்னும் பகுதியடியாகப் பிறந்தவாச்சியசார்த்தத்தை யெண்ணிக்கூறினர் என் பார் நிருக்தக்காரர். தபுத்தறியா விபுத்துவமார், என்பவை எதுகை நோக் கிச் சேர்த்தன.

(வேறு.)

8. சருமத்தினின்று நீங்களோர்முறைபசுவுயிர்ப்பித்
தருமையிற்கன் றின்பக்கலணைத்திட்டீர்தாயைமீட்டும்;
வரமுறுநரர்சான்சீரிற்சுதன்வன்பெற்றிடும்ரிபுக்காள்;
தாமுறும்விசேடகன்மத்தினமைபெற்றேரர்களுமீட்டீர்.

(இ-ள்.) (பூர்வம்ஒருரிஷியின் கற்ரும்மரிக்க அவர் ரிபுக்களைத்துதித் துஸ்தோஷப்படித்தினர், உடனே அதனைப் போலிருந்த வேறொரு பசு வின் தோலைக் கொண்டு அக்கற்ருவை யுருப்படுத்தி யுயிரளித்துக் கன்றின் பக்கத்திற் சேர்த்தார்கள் என்ற ஒருகதை முன்னரண்டடியிற்கூறப்படுகி றது.). யக்ஞத்தின் நேதாக்களே! ஸுதன்வனது புத்திரர்களே! நீங்களொ ருமுறை ஒருபசுவைத் தோலினின்றும் உருப்படுத்திக் கன்றின் பக்கத்திற் ருயாகிய வதனைச் சேர்த்தீர்கள். சிறந்த உமது விசேஷகன்மத்தில் மாதா பிதாக்களுக்கு மறுபடியும் யௌவனத்தை யுண்டுபண்ணினீர்கள்—(எ-று.) தாமுறு உம்விசேடகன்மத்து எனப்பிரிக்க. மேற்கதை ஸாயணருரையிற் கண்டது. ஆனல் மேனட்டாசிரியர் சரய்ந்த தோல்வறண்டுகிரிந்த பூமியா யிருக்கலாமென்றும், பசுவென்றது மழைபெய்தபிறகு செழிப்படைந்த பூ மியென்றும், தாயும் அதுவே யென்றும் கன்றென்றது சரற்சால ஸஸ்ய னென்றும், பெற்ரேரென்றது பூமிவானங்களே யென்றும் அன்வயப்படுத் திக் கூறுவர்.

9. மேவியபோரிற்காக்கமீளியின்,ரிபுசார்வேந்தே;
பாவுசித்திரப்பொனீந்துபண்புறல்;எமதிப்போற்றைத்
தாவருபுவியும்வானுஞ்சிந்துவும்மித்திதானு
மேவுமித்திரவருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ன்.) ரிபுக்களோடு கூடிய விந்திரனே! ஏற்பட்டயுத்தத்தில் வ விமையை யளித்து எங்களைக் காப்பாயாக. சித்திர மயமானதனத்தைய ளித்துச் சிறப்பை யெய்துக. எமது இந்தஸ் தோத்திரத்தைப் பூமி வானம், விந்து, அதிதி, மித்திரன், வருணன் இவர்கள் விரும்பிக்காக்கட்டும்—(எ-று) மீளியின் என்னுது உண்டியின் என்பார் ஸாயணர், அவரே, போரில்,உனது குதிரைகளின் உதவியைக் கொண்டு எங்களைக் காப்பாயாக வென்றும் உரை கூறுவர். இந்திரஸ் துதியும் வந்ததற்குக்காரணம் மண். 1. சூக். 20. செய். 5. நோக்குக.

வருக்கம். 31

111. மண்டலம் 1. அநுவாகம் 16. சூக்தம் 6.

5 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஸ்தி சுத்ஸன்; வடமொழிச் சந்தம்: ஜகதி, 5 த்ருஷ்டுப்; தேவைத: இந்திரன்.

மண்டலம் 1 சூக்தம் 111.

(வேறு.)

1. தொழின்மாண்பின்ரிபுக்களெளிதினுருடோதனைச்சுவைக்கச்செய்
தார்;
எழில்பெறப்பொன்பலகூட்டியிந்திரனைச்சுமந்துவரவிழைத்தார்
மாவைக்;
கிழமாரும்பெற்ரோர்கன்யவ்வனத்தைமீண்டுமுறக்ளைர்த்திட்
டாராற்;
சூழகினங்கன்றதனருகேதாய்ப்பசுவுங்கூடும்வகைகுயிற்றினரே.

(இ-ள்.) காரியங்களைச் சிறப்புப்பெறச் செய்யும் ரிப்புக்கள் இலகுவாக உருண்டோடத்தக்க தேரினைச் செய்தார்கள். பல்வகைய செல்வத்தையும் இந்திரனைத் தூக்கிக்கொண்டு வரும் அரிக (குதிரைக)ளிரண்டையும் சிருஷ்டித்தார்கள். கிழத்தன்மைபெருந்திய மாதாபிதாக்களை மீண்டும்யௌவன முள்ளவர்களாகச் செய்தார்கள். இளங்கன்றினருகிற்ரூய்ப்பசுவைக் கூடும்படி செய்தார்கள்—(எ-று.) பெற்ரோர், கன்று, தாய்ப்பசு இவற்றின் பொருளை மண். 1. சூக். 110 செய் 8. ல்பார்க்க.

2. எம்மகத்தின்பொருட்டுமிகச்சிறந்தொளிரும்வீரிய்த்தையென்றுந்
தோற்றல்;
எம்மரியகன்மமதில்வலியுறையச்சுதரொடுசோதெமக்கியைக்கல்;
பொம்மலுறுவீரமகரசம்பிரசையோடுசுகம்பொருந்திவாழ
விம்மிதமாரைந்திரியகற்றனத்தையெமக்களிக்கவிழைந்திடீரே.

(இ-ள்.) எமது யக்ஞத்தின் பொருட்டு மிகப்பிரகாசிக்கும் வீரியத்தை (ஜீவசக்தியை) யெங்களுக்குத் தோற்றுவீர்களாக. எமது காரியத்துக்காகவும், பலத்துக்காகவும் சற்புத்திரர்களோடு உணவுப் பொருள்களைச் சேர்ப்பீர்களாக. சோபனம் பொருந்திய வீரர்களாகிய பிரஜைகளோடு யாங்கள் சுகத்தைப் பொருந்தி வாழும்வண்ணம் எங்களுக்கு இந்திரனது செல்வத்தைத் தருவீர்களாக—(எ-று.) வய: வீரிய மென்னுது, ஈறவிர் லட்சண மன்னமென்பார் சாயணர். அற்றேல் 'சிறந்தொளிரு மவியுணவை யென்றுந் தோற்றல்;' எனமாற்றிப்படிக்க.

3. நராகுமிரிபுவர்காள்வாழ்வெமக்குத்தந்திடுக;நாடுந்தேர்க்குந்
தாமாகவாழ்வளிக்கல்;குதிரைகட்குமங்ஙனமேதருகவாழ்வை;
யுரமாரும்போரதனிலுறவினரையல்லாரையுரத்தான்வென்று
திரமாருஞ்சயசீலமெம்நாளுமேலோங்கச்சிறப்பிப்பீரே.

(இ-ள்.) யக்ஞ நேதாக்களாகிய ரிபுக்களே! எங்களுக்கு வாழ்வாகிய செல்வத்தைத்தருவீர்களாக. எங்களுடைய தேருக்கும் வாழ்வை அல்லது வேகமாக ஓடுஞ்சிறப்பை யளிப்பீர்களாக. எங்கள் குதிரைகளுக்கும் வாழ்வைத்தருவீர்களாக. பலம்பொருந்திய போரிற் பந்துக்களையும், அயலாரையும் யுத்தத்திற் சயித்து எல்லா நாட்களிலும் ஸ்திரமான உயர்ச்சிலமானது எங்களுக்கு மேன்மேலும் ஓங்கி வளரும் வண்ணம் எங்களைப்பெருமைப் படுத்துவீர்களாக—(எ-று.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

4. பெருந்தலத்திலுமம்வேந்தையுதவிபுரிகெனவிளிப்பேன்;பிறங்குசோம
மருந்தவெனரிபுக்களையும்வாஜரையுமருதரையுமழையாநிற்பேன்;
பொருந்திருவரசுவினியர்வருணமெடுமித்திரர்க்குப்புகல்வேனானம்
திருந்துபொருள்,ஞானமொடுவெற்றியினையவரெமக்குச்சேர்க்க
வின்றே.

(இ-ள்.) பிரகாசம் பொருந்திய பெரிய ஸ்தானத்திலுள்ள இந்திரனே யுதவி புரிவதற்காகக் கூவுவேன். ஸோமத்தைக்குடிக்க வாருங்களென்று ரிபு, விப்வான், வாஜன் இம்மூவரையும் மருத்துகளையும் அழைப்பேன். இரட்டையர்களாகிய அசுவினிகளையும், மித்திராவருணர்களையும் அவசியமாக ஸோமங்குடிக்க வாருங்களென்று கூவுவேன். அவர்கள் எங்களுக்கு நல்லசெல்வத்தையும், ஞானத்தையும், ஜயத்தையும் இன்றைக்குத தரட்டும்—(எ-று.) ரிபுக்ஷணம் என்பதற்கு ரிபுக்களுக்குத் தலைவனாகிய இந்திரனேயென்றுபொருள் கூறுவார் மேலுட்டாசிரியர். ஆனால உருபாலமாதே. ஸ்தாதே க்ஷியதி நிவஸதி இதிரிபுக்ஷா: என்பார் சாயணர். அதாவது பிரகாசமான பெரிய ஸ்தானத்திலுள்ளவனென்பது பொருள். ஞானம், அவச்யம். ரிபுக்களையும் வாஜரையும் கூற இடையிலுள்ள விப்வானையுமுடனெண்ணியபடி.

(வேறு.)

5. காவல்சார்தனத்தைப்போர்க்கா ரிபுவுடனளிக்க;வாஜ
னுவலிற்பகைவறப்போனளித்திடல்;எமதிப்போற்றைத்
தாவருபுலியும்வானுஞ்சிந்துவுமதிதிகாளு
மேவுமித்திரவருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ள்) ரிபு யுத்தத்தின்பொருட்டு எங்களுக்குமிகுந்த பொன்னைத் தரட்டும். பகைவரை ஜயிப்பவனுகியவாஜன் எங்களைக்காக்கட்டும். எங்களுடைய இத்துதியைப் பூமி, வானம், விந்து, அதிதி, மித்திரன், வருணனென்னுமிவர்கள் காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 32.

112. மண்டலம். 1. அநுவாகம். 16. சூக்தம். 7.

25 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷெ குத்ஸன்; வடமொழிச் சந்தம்: ஜகதி, 24, 25 த்ருஷ்டுப்; தேவதை; 1 தியாவா, பிருதிவி, அக்னி, அசுவினிகள்; 2–25 அசுவினிகள்.

(வேறு.)

1. தலைநினைவையவர்க்கூட்டப்புவிவானைப்போற்றிடுவேன்; சார்ந்துயாகத்
தலையவர்கள்வருபாக்குக்காத்தியொளிர்கினிகளுத்தலையைத்தாழ்ப்
பேன்;
நிலையியபெரும்போரிலுமதரும்பாகம்பெறச்சங்கநேர்ப்பூரித்-
துலகிலவர்த்துணையுடனன்சுவினிகளெமைநோக்கியூர்திகைந்திரே.

மண்டலம் 1 சூக்தம் 112.

(இ ள்.) முதன்முதல் அசுவினிகளைப்பற்றிய நினைப்பை யெங்களுக்குத்தருமாறு பூமிவானங்களைப்போற்றுவேன். அவர்கள்யாகத்தினிடத்து வர ஆறவதியருபமாக விருந்துவினாரு மக்கினியை வணங்குவேன். அசுவினிகளே! நிலைத்தபெரிய போரில் உமதாரியபாகத்தைப் பெறச்சங்கவாத்தியத்தை வர்த்திக்கேடில்லாத உமது உதவியுடன் எம்மைநோக்கியிவ்விடத்து வருவீர்களாக—(எ-று.)

2. மங்கலநற்றுதிபேர்த்திப்பிறர்விழையுந்தன்மையினர், மதித்துத்தோக்கட்
டங்கமுறுமுங்கொடையையெண்ணியறிவாளர்மொழிதுணைப்பத்
தோய்ந்தார்;
அங்கமுறுதேவகாரியமாற்றுமறிவதனையழிற்கூட்டி
யிங்குறுமுந்துணையுடனன்கசுவினிகாளைமைநோக்கியீர்க்கெய்தீரே.

(இ-ள்.) மங்கலமான ஸ்தோத்திரங்களைத்தாங்கிப், பிறரால் விரும்பத்தக்க பெருமைவாய்ந்தஸ்தோதாக்கள், உமது நற்கொடைமைக்கருதி ஞாதாக்களது வார்த்தைகளைப்போல உம்முதலில வந்தமர்ந்தார்கள். தேவகாரியங்களைச்செய்யும் அறிவையெங்களுகுத்தந்து உம்மது துணையோடும், அசுவினிகளே! எம்மிடத்து வருவீர்களாக—(எ று.) நியாயத்தோடு கூடிய வார்த்தைகளை ஸ்தோதாக்கள் தமது அறிவு விசாலிக்கப் பிறர்வாயிற் கேட்டுப்பெறுவதுபோல உமது தேரைப்பெற்று அதில் உம்மை ஸ்துதித்துக்கொண்டு அமர்ந்தார்கள் என்க. ஆனால் மேலுட்டாதிரியர் 'எங்களது அவிப்பலியானது-ஸ்தோத்திரங்களாகிய தேரை யேறி நின்றது' என்று முதற்பகுதிக்கு உரை கூறுவர்.

3. திவ்வியநற்சோமமளிக்கும்வலியினீவிரொலாத்திணையுழற்ற
செவ்வீய நன்மாந்தர்களுக்காணையளியீர்சுகராச்செறிதருன்நீர்;
எவ்வமறமலட்டாவைப்பாற்றரவே,நேநாக்கா,ளிழைக்கும்வண்ண
மொவ்வுறுமுந்துணையுடனன்கசுவினிகாளைமைநோக்கியுங்கெய் நீரே.

(இ-ள்.) திவ்வியமான ஸோமத்தைத்தரும் வலிம்மையோடுகூடிய நீங்கள் எல்லாப்பக்கத்திலுமுள்ள ஸத்புருஷர்களுக்கு ஆக்ஞைகளைத் தரும் ஈசர்களானீர்கள். (சயுவென்னு ரிஷியினுடைய) மலட்டாவைப்பால்தரும் வண்ணம் புரிந்த உமது துணையுடன், அசுவினிகளாகிய நேநாகளே, எம்மிடத்து இங்கு வருவீர்களாக—(எ-று.) சயு ஓர் ரிஷி. அவனது மலட்டுப்பசுவை யசுவிகிகள் பால்தரும் கறவையாகினார்கள் என்றது கதை. மண். 1 சூக. 116 செய். 22 மண். 1 சூக் 117 செய். 20 இவற்றிலும் இவ்விருடியின் பெயர் வருகிறது.

4. சூழ்ந்றடிக்குங்காலினதுதனையனீர்நித்தாயிருவர்தோய்த்துநின்ற
கொழுந்தனலின்வலிகொண்டு,விரைகதியோதமின்விரைவிற்குலவ
விட்டு
வழங்குழுமுவிதயக்ருவறிவினெடுஞானவான்மருவச்செய்த
வொழுங்குலவுந்துணையுடனன்கசுவினிகாளைமைநோக்கியுங்கெய்
நீரே.

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

(இ-ள்.) சுழற்சியாக வீசுங் காற்றின் புத்திரனும், இரண்டுமொதாக் களாகிய அரணிகளாயுடையவனுமான கொழந்துவிட் டெரியும் அக்கினியின் பலத்தைகொண்டு வேகமாகச் செல்லுவோரின் வேகமாக நிலவும்படிசெய்த அதிர்ஷ்டத்தையும், பாக யக்ஞமும், ஸோம யக்ஞமென்னும் 3 வித யக்ஞ மந்திரவறி வோடுங்கூடிய ஞானவானுகிய கட்சீவான் அவற்றை நடத்துவதற்கு உதவி செய்த உம்முடைய உதவிகளுடன், அசுவினிகளே, நீங்கள் இங்கு வருவீர் களாக—(எ-று.) அக்கினி காற்றின் புத்திரனும் அரணித்தாயாரிருவர் கொண்டவனுமாம். ஞானவான் கட்சீவானைக்குறிக்குமென்பார் ஸாயணர்.

5. நேசத்தோடிரேபனைநல்வந்தனைவானெளியையேரேபார்க்கப்
பாசத்தாற்கட்டுண்டுகிணற்றுழ்த்தப்பட்டவரைப்பரிந்துதூககி
நீசத்தாரிருளிறுத்தகண்ணுவனைவெளிக்கொணர்ந்தநியமம்வாய்ந்த
வோசதஸ்துணையுடன்கசுவினிகாளெமைநோக்கியூங்கெய்தீரே.

(இ-ள்.) கயிற்றினாற் கட்டிக்கிணற்றில் வீழ்த்தப்பட்டவர்களாகிய ரேபனையும், வந்தனையும் வானெளியாகிய சூரியனைப்பார்க்கும் வண்ணம் மேலே தூககிவிட்டு, இருட்டில் அடைக்கப்பட்ட கண்ணுவரிஷிக்கும் அவ விதவதியளித்து அவனைவெளிக்கொண்டுவந்த வலிமை தங்கிய உமது துணைகளோடும் அசுவினிகளே, எம்மைநோக்கி வருவீர்களாக—(எ-று) ரேபன் வந்தன் இவர்கள் அசுரர்களால் கிணற்றில் தள்ளி மூடப்பட்டவர் கள். இவர்களை அசுவினிகள் காப்பாற்றினர்களென்பது கதை. கண்ணுவ னும் முகமிக அவஸ்தையே பட்டவன். (Wilson) வில்ஸன் என்பவர், இக்க தைகளையும் மேல்வரும் கதைகளையும் நோக்குமிடத்து பண்டைக்காலத்து ஆரியமதபோதகர்கள் தமது நாகரீகத்தைப் பரவச் செய்தபோது இந்நாட்டுப் பூர்வகுடிகளிடத்து அவர்கள் பட்ட அவஸ்தையை இது குறிக்குமென்பார்.

6. ஆழமுறுகூபமதிலிருந்துன்பாழ்ந்தகனை,யாழ்மூன்நீரிற்
பாழ்படுப்பும்புழியன்றன்னையடுதலிகொபெண்பிற்காத்துச்
சூழுறுதுன்பேகவெனக்கர்க்கந்துவய்யனையுஞ்சுகமாத்தேற்று
மழுரனுத்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கியூங்கெய்தீரே.

(இ-ள்.) ஆழமாகியகிணற்றில் அருங்கேடுற்றுகின்ற அந்தகனென் னும் ராஜரிஷியையும், ஆழமாகிய ஸமுத்திரத்தில் மூழ்கியவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த (தூகிரன்மகனுகிய) புழ்யன்என்னும் ராஜரிஷியையும் கை தூகிவிட்டு, கர்க்கந்து, வய்யன் இவர்களுடைய துன்பத்தையும்நீக்கின உமது துணைகளோடு, அசுவினிகளே, இங்கு எம்மைநோக்கி வருவீர்களாக —(எ-று.) அந்தகன் ஒரு ராஜரிஷி புழ்யன், தூகிரன்மகன், இவனும் ஒரு ராஜரிஷி கர்க்கந்துவைப்பற்றிவேறொன்றும் நமக்குத்தெரியாது. வய் யன் தூர்வீதியின் தகப்பன், இவரிருவர்க்கும் ஆழமான ஆற்றைக்கடக்கும் பாதையையேற்படுத்தினன் இந்திரன் என்பது மண். 1. சூக். 61. செய். 11 ல் சொல்லப்பட்டது.

7. செல்வமொடுபாக்கியமாரில்லமதைச்சுசந்திபெறச்சேர்த்து,வெப்பம்
பல்கியஞர்வினைத்திமைப்பொறியினையத்திரிக்கின்பப்பிணற்றிச்
சொல்பெறவேபுருருத்சன்பிரிசிருவிருவரையுஞ்சுவையிற்சாத்தே
யொல்லுறமுத்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கியூங்கெய்

தீரே

மண்டலம் 1 சூக்தம் 112.

(இ-ள்.) ஸு (ச்) சந்திக்குச் செல்வத்தையும் பாக்கியம் பொருந்திய வீட்டையுந்தந்து, அத்திரிக்கு வெப்பமிகுந்து துன்பத்தைவிளக்கும் பொறியாணது இன்பத்தைத்தரும்படியாகச்செய்து, புருகுத்ஸன், ப்ரிச்நிகு இருவரையும் காப்பாற்றின உமது உதவிகளுடன், அசுவினிகளே, எம்மைநோக்கி இங்கு வருவீர்களாக—(எ-று). புருகுத்ஸன் மண். 1. சூக் 63, செய். 1. பார்க்க. (Suchanti) ஸு (ச்) சந்தி, பிரச்நிகு இவர்களைப்பற்றி வேறென்றும்தெரியாது. அத்திரி மண். 1, சூக், 51, செய். 3, பார்க்க, இவன் எர்க்குழியில்தள்ளப்பட்டவனென்பார் மேனுட்டாசிரியர், நெருப்புப்பொறியில்தள்ளப்பட்டவனென்றும் அவனுக்காக நூறுதுவாரங்களே யேற்படுத்தினனென்றும் மண். 1, சூக். 51, செய். 3-ல் சொல்லப்பெற்றது.

8. இச்சையளிப்பவர்காளுஞ்ஞானமதாற்பராவிருஜன்முடமிறுத்தீர்,
நச்சுமிரிச்சிராசுவன்றன்குருட்டினைநீக்கினிர்;விகுணகண்ணுஞ்சானு
வெச்சமறப்பொருத்தினிரா,லூர்க்குருவிகோளாய்வாயிருந்துமீட்டீர்;
உச்சமுறுந்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கியூக்கெய்தீரே.

(இ-ள்.) இஷ்டப்பட்ட வஸ்துக்களைத்தருபவர்களே! உம்முடைய ஞானத்தினால் பராவருஜனது குருட்டுத்தன்மையை நீக்கினீர்; முழங்கால் கெட்டுப்போயிருந்த ரிஷிக்குக்குறைவுராமல் அம்முழங்காலைச் சரிப்படுத்தினீர்; ஓநாயின்வாய்க்குள் அகப்பட்டுக்கொண்ட (சடகம்) ஊர்க்குருவியை அதனின்றுமீட்டீர். இத்தகைய உம்முடைய துணைகளுடன், அசுவினிகளே, எம்மைநோக்கி இங்குவருவீர்களாக—(எ-று.) வ்ருகம் கோளுயன்று சூரிய னென்றும், வர்த்திகாம் என்பது ஊர்க்குருவியன்று உலூஸ்என்றும் யாஸ்கர்உரைகூறுவார். (Benfey) பென்வேயென்பவர் பராவ்ருஜ்என்பது அஸ்தமய ஸூர்யனைக்குறிக்கு மென்பார்; அதனையே இனிவெளிச்சந்தரப் போவதில்லையாதலால் குருடென்றும், இனிஓட்டம்காணப்படுவதில்லை யாதலால் முடமென்றும்கவிகூறினரென்பார்; ஆனல்பராவ்ருஜனும், ரிஜ்ராச்வனும் ரிஷிகளின் பெயரென்பார் ஸாயணர். ச்ரோணன் விகுணமுழங்காலோடு கூடியஒருரிஷியென்றுதெரிகிறது. ரிஜ்ராச்வன் மண். 1, சூக்.100, செய். 17 நோக்குக. அசுவினிகளின் வாகனமாகிய கழுதையொன்று காட்டுநாயுருவத்தோடுவர அதற்காக நூறுஆடுகள் பலிகொடுத்தவன். அதனால் அவனுடைய தந்தைகுருடாக்கிஇரண்டுகண்ணே அசுவினிகள்தரப்பெற்றான். மண். 1, சூக். 116, செய். 16, காண்க.

9. மதுரமுறுநீர்ப்பெருக்கானதிகளினவற்றுதேவழங்கத்தோய்த்திங்
கெதிர்வுபெறுச்சரையினர்காள்வசிட்டனைக்கூர்மகிழச்சிவினிலிருத்
திக், குற்ச
னதியுதவி, சுருதரியனரியனிவர்மூவர்களுமணையவாற்றி
யுதயமுறுந்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கியூக்கெய்தீரே.

(இ-ள்.) கிழத்தன்மையடையாதவர்களே! அசுவினிகளே! ஆறுகள்மாதுரியமானவெள்ளத்தோடு எப்போதும்வற்றுமலோடவித்து, வவிஷ்டனுக்குமகிழ்ச்சியையளித்து, குத்ஸன், ச்ருதர்யன், நர்யன் என்னும்மூன்று ரிஷிகளுக்கும் மிக்கஉதவியைச்செய்துவிளங்கும்உமது துணையோடெம்மை நோக்கி யிங்குவருவீர்களாக—(எ-று. விந்தும் என்பது மூலத்திலுள்ளப

அஷ்டகம் 1. அத்தியாயம் 7.

தம் அதற்கு 'ஸ்யந்தஸோலாம் நதீம்' என்றுசாயணர் உரைகூறுவர். ஆனல் மேனட்டாசிரியர், 'அசுவினிகள் வெளிச்சத்தை முதன்முதற் கொணர்பவர்களாதலால் தங்கள்வருகையால்அந்தரிட்சமாகிய ஸமுத்திரத்திலுள்ள நீரோட்டங்களே யுயிர்பெறச்செய்வார்கள்', என்பார், வஸிஷ்டனுக்குஊட்டியமகிழ்ச்சித்தகையதோ வென்பதுஅறியக்கிடைத்தில்லே. குத்ஸன் மண் 1, சூக். 51, செய். 6, பார்க்க. சுருதர்யனேப்பற்றி வேறொன்றும் தெரியவில்லே நர்யன் மண். 1. சூக். 54, செய். 6, பார்க்க.

10. சகத்திரப்பொன்றரும்போரிற்றனம்விழைந்துநடைபோனதையல்.
கேலன்
சுகத்தமரும்விசபலைக்குநடையுதவியசுவனதுசுதன்வசன்ரூன்
வகுத்ததுதியினிற்களித்துப்பெரித்துமவன்றனேக்காத்துப்பிறங்கி
நின்ற
வுகத்துலுறுத்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கியுங்கெய்தீ
ரே.

(இ-ள்.) ஆயிரக்கணக்கான் செல்வத்தைத்தரும் யுத்தத்தில் பணவீச்சையாற்றிரிந்து கணைக்காலேயிழந்த கேலனதுபந்துவாகிய விச்பலைக்கு நடக்குஞ் சக்தியையளித்து, அச்வனது புத்திரனுகிய வசனுடையஸ்துதிக் கண்மகிழ்ந்து அவனேப்பாதுகாத்த உமது துணையுடன், அசுவினிகளே, எம்மை நோக்கு யிங்கு வருவீர்களாக— (எ-று.) பூர்வத்தில் கேலனென்று ஒருஅரசன் இருந்தான், அவனுடையபந்து விச்பலை என்னுமாது. கேலன் செய்தயுத்தத்தில் சிதறுண்டு கிடக்கும் செல்வத்தைச்சேர்க்க அவள் போனபோது சத்துருக்கள் அவளது கணைக்காலேதரித்துவிட்டார்கள். உடனே கேலன்வேண்ட அவனதுகுலகுருவாகிய அகஸ்தியர் அசுவினிகளேப்பிரார்த்தித்தார். அவர்கள் அவளுக்காகஇரும்புக்காலொன்றைச்செய்து கொடுத்து அவளேநடக்கும்படி செய்தார்கள் என்பதுகதை. மண். 1. சூக். 116, செய். 15, நோக்குக. மேனட்டாசிரியர் 'அதர்வ்யம்' என்பதற்குப்பொருள்தெரியவில்லேயென்பார். ஆனல் ஸாயணர் தெளிவாகத் 'த (th) ர்வதிர் கதிகர்மா' என்றுஎழுதியிருக்கிறார். அச்வன் புத்திரன்வசன்ஓரிஷி; மண்.8. சூக். 46, 8க்கண்டவன்.

வருக்கம் 34.

11. எத்துணேகொண்டெளசிஜனுந்தீர்க்கசிரவன்வணிகமியற்றுவானுக்
கித்தரையின்மேகமதுசுவைத்தண்ணீர்வருடித்த,தேத்துவாய்ந்த
சித்தமுளன்கட்சீவான்சிறப்புறவெவ்வுதவியினேச்சேர்த்தீ, ரந்த
வுத்தமவந்துணேயுடனன்கசுவினிகாளெமைநோக்கியுங்கெய்தீரே.

(இ-ள்.) எந்தவுதவியைக்கொண்டு (ஜீவனுர்த்தம்) வியாபாரம் செய்துகொண்டிருந்த உசிஜையின் புத்திரனுகிய தீர்க்கச்ரவன் வேண்டிக்கொண்டகாரணத்தால் மேகமானது மாதுர்யமான மழையைப்பெய்ததோ, எந்த வுதவியை ஸ்தோதாவாகிய கட்சீவானனுக்குச் சேர்த்தீர்களோ, அந்த உத்தமமான வுதவியோடு, அசுவினிகளே, எம்மை நோக்கி இங்குவருவீர்களாக —(எ-று.) தீர்க்கதமஸன் பத்தினி உசிக் என்பவளாம். அவளது புத்திரன்

மண்டலம் 1. சூக்தம் 112.

தீர்க்கச்ரவன். மழையில்லாததால் பிழைப்புக்காக வியாபாரஞ் செய்துவந்தான். அவன் வேண்ட மழைபெய்த தென்பது முதலிரண்டடியிற் சொல்லப்பட்டது. கட்சீவான் உசிஜ புத்திரன். இவ்விருவரது வரலாறுகளையும் மண். 1 சூக். 18 செய் 1லும், மண். 1 சூக். 51 செய். 14லும் பார்த்தறிக. உசிக் உசித், உசிஜ் என்பன ஒருமாதின் பெயரையே குறித்து நின்றன. ஆனால் ஔசிஜன் என்பது (Patronymic) பரவணப்பெயரென்பார் மேனட்டாசிரியர். உண்மையில் (Matronymic) தாய்வழிப்பெயரெனத்தெரியவரும்.

12. கரையுடைக்கும்வெள்ளமதோடொழுகுறநன்னதியினையேகடிதிற்
பூரித்,
திருமைபெறப்பரியியையாத்தேரதனைவெற்றிபெறவெடுத்துக்
காத்துத்,
திருமுறுகற்றுக்களினைத்திரிசோகன்கொண்டேகத்திருந்தவாற்றி
யுரைபெறுமுந்துணையுடனன்னசுவினிகாளைமைநோகியுங்கெய்
தீரே.

(இ-ள்.) மழையில்லாமல் வற்றிக் கிடந்த (ரஸாவென்னும்) நதியினைக் கரையுடைக்கும் வெள்ளத்தோடோடவித்துக், குறைவற்ற தேரை வெற்றி பெறும்படி செய்து, அசுரர்களிடத்திலிருந்து விடுபட்டுத் திரும்பிப்போகும் பசுக்களைக் கண்ணுவபுத்திரனான த்ரிசோகன் என்னும் ரிஷி கொண்டு போகும்படிசெய்து பேர்பெற்ற உமது துணைகளுடன், அசுவினிகளே, எம்மைநோக்கியிங்கு வருவீர்களாக—(எ-று.) ரஸா என்னும் வடமொழிப்பதத்துக்கு 'ரஸாநதீ பக்தி ரஸதேச் சப்தகர்மண.' என்று யாஸ்கர் கூறுவர். அதையொட்டி ரஸா நதிகளையென ஸாயணர் உரைகூறுவர். ஆனால் ரஸா என்பது ஒருநதியின்சிறப்புப்பெயரென்றும், ரண்ஹாவென்று அதனை ஜாதுவஷ்டிரமதத்தைச் சேர்ந்த பார்ஸிக்களும் கூறுவார்களென்றும், ஆரியர் பஞ்சாப்புக்கு வந்தபின்பு அதனைமறந்து விட்டதால் அது நதியென்னும் பொதுப்பெயரையடைந்ததென்றும் மோட்சமூலர் கூறுவர். இச்செய்யுளிற்கூறப்பட்ட இதரகதைகளொன்றும் விஸ்தாரமாகத் தெரியவில்லை. கண்ணுவனது புத்திரன் த்ரிசோகனென்பார் ஸாயணர்.

13. சேயுறையும் போதென்றைச் சூழ்ந்துலவிக்காப்பாற்றித்தேசபார
மீயுறைந்த மாந்தாதா தன்னரசுசெலுத்துதற்கு வேண்டுஞ்சத்தி
யாயிடையீந்துயர்பரத்துவாசனெனும்விப்பிரனையடைவிற்காத்தே
யேயுமதுதுணையுடனன்னசுவினிகாளைமைநோக்கியீங்கெய்தீரே.

(இ-ள்.) தூளத்திலிருக்கும்போதுசூரியனைக் (கிரஹணம்பீடிக்காதபடி) அதனைச்சூழ்ந்து உலாவிக்காப்பாற்றி, தேசபாரம்தாங்கிய மாந்தாதா வென்னும் ராஜரிஷி தனதுசெங்கோலைச்செவ்வனே செலுத்துதற்குவேண்டிய பலத்தையவனுக்கு அளித்து, (பிரஹஸ்பதிபுத்திரனான) பரத்வாஜன் என்னும் ரிஷியைக்காப்பாற்றி நிலைத்த உம்முதவிகளுடன், அசுவினிகளே, எம்மைநோக்கியிங்குவருவீர்களாக—(எ-று.) மாந்தாதா யுவனச்வனது புத்திரன். ஒரு ராஜரிஷி, மண். 10, சூக். 134 பார்க்கண்டவன். பரத்வாஜன் ஆறுவதுமண்டலத்துப்பெரும்பான்மையான சூக்தங்களைக்கண்டவன்.

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

14. சம்பரனைவதைத்தவன் றதிதிகளேச்சந்தரிக்குந்தன்மைவாய்ந்து
பம்புநீர்தனிலுலவுந்திவோதாசன்றனைப்பண்பிற்பரிந்துகாத்து
வம்பர்புரம்பேதிக்குங்காலமதிற்றிரசதசியுவினைவாழ்வித்
தும்பருறுந்துணையுடனன்சுவினிகளெமைநோக்கியுங்கெய்தீரே.

(இ-ள்.) சம்பராசுரனைக்கொன்றபோது அதிதிஸ்தகாரத்திற்சிறந்து அசுரர்பீடைக்குப்பயந்து தண்ணீரிற் சுற்றிக்கொண்டிருந்த திவோதாஸனென்னும் ராஜரிஷியைக்காப்பாற்றியும், சத்துருக்களின் கோட்டையையழித்தபோது த்ரஸதஸ்யுவென்னும் ரிஷியைவாழ்வித்தும், மேன்மைபெற்றவுமதுதுணைகளோடு, அசுவினிகளே, வருவீர்களாக—(எ-று.) மேஞட்டாசிரியர் வடமொழி மூலத்திலுள்ள அதிதிக்வம், கசோஜம்என்பவற்றைச்சிறப்புப்பெயர்களாகக்கொள்ளுவார். ஆஞல் ஸாயணர் அவற்றைத் திவோதாஸனுக்கு அடைகளாகவே உரைகூறியுள்ளார். திரசதசியு, த்ரஸதஸ்யு, வெற்றிக்கும், வண்மைக்கும் பேர்போனவன். 'துர்கஹன் புத்திரனுகிய புருகுத்ஸன் சிறைப்பட்டான். அவன்மனைவி ராஜ்யத்தையாளுவதற் கொருவருமில்லாததையுணர்ந்து, எதிர்ச்சையாகக்கூடி வந்துகொண்டிருந்த ஸப்தரிஷிகளைப் பூஜிக்க அவர்கள் இந்திராவருணர்களின் அதுக்கிரகத்தால் த்ரஸதஸ்யுவென்னும் புத்திரனையளுக்களித்தார்கள்.' என்பது மண். 4, சூக். 42, செய். 8-ற் கண்டகதை. புருகுத்ஸன்மேல் 7-வது செய்யுளிற்கூறப்பட்டவன்.

15. சூழ்ந்துள்ளோர் துதித்தேத்து மட்பசையார்வோன் வமிரன்றேயு
மில்லாள்
வாழ்ந்துறுமக்கலியனிவரிருவர்களேக்கவரவங்கண்மலியக்காத்துத்,
தாழ்ந்துவான்குதிரையிலாப்பிருதியினையும்முள்ளச்சிறப்பினெம்பி
பூழ்ந்தலருத்துணையுடனன்சுவினிகளெமைநோக்கியுங்கெய்தீரே.

(இ ன்.) சுற்றிலுமுள்ளவர்கள் புகழ்ந்து துதிக்கும் பெருமை வாய்ந்து மண்ணிலுள்ள ஈரப்பசையைக்குடிப்பவனுகிய (விகஸனன்புத்திரன்)வம்ரனையும், மனைவியின் சுகத்தைப்பெற்ற கலியையும் காப்பாற்றி, குதிரையில்லாமல் தாழ்ந்து நின்ற ப்ருதியென்பவனை உயர்வுபெறச் செய்தகேடில்லாத உபாத உதவிகளுடன், அசுவினிகளே, எம்மை நோக்கியிங்கே வருவீர்களாக—(எ று.) வம்ரன், வம்ரன், விகஸனது புத்திரனென்பார் ஸாயணர். நேஞட்டாசிரியர் உபஸ்துதனென்பதற்குப் பக்கத்திலுள்ளவர்கள் துதிக்கும்பெருமை வாய்ந்தவென்னுது உபஸ்துதனையும் எனச் சிறப்பும் பெயராக்கொள்வர். கலியின் கலியென்ற மூலத்திலுள்ளது. இவன் பெயர் மண். 9. சூக் 39. செய். 8-ல் சொல்லப்படுகிறது. ப்ருதி, பிருதி குதிரையையிழந்த ஒரு ராஜரிஷி. ஊழ்ந்தல் மெலிதல் விகாரம்.

வருக்கம் 35.

16 நேதாக்காள்சயுவோடுமத்திரிக்குவிமோசனத்தைநேடியாற்றித்
தோதாகமனுவென்னுமரசனுக்குமுன்னுள்ளிற்றுணையகித்து
வாதாரும்பகைவர்வயினம்புகளேச்சியுமரச்மிமதிக்கவோட்டி
யோதாருந்துணையுடன்னன்சுவினிகளெமைநோக்கியுங்கெய்தீரே.

மண்டலம் 1 சூக்தம். 112.

(இ-ள்.) நேதாக்களே! அசுவினிகளே! சயுவுக்கு நேர்ந்ததுக்கத்தை யொழித்தும், அத்திரியகப்பட்டுக்கொண்ட நெருப்புப்பொறியைக் குளிரச் செய்தும், மனுவென்னும் ராஜரிஷிக்கு யவமுதலியதானியங்களே யதேஷ்ட மாக விளைவித்து அவன் தரித்திரத்தை யோட்டியும், ஸ்யூமரச்மியென்னும் ரிஷிக்காக அம்பைப்பகைவர்மேலெய்தும், துதிநிறைந்த உமது துணைகளு டன் எம்மை நோக்கி யிங்கு வருவீர்களாக—(எ-று.) சயுவினிடத்திலிருந்த நெஞ்சழிந்த பசுவைக் கன்றுபோடச்செய்து அவனுடைய யாககாரியங்களுக் குப் பால் முதலியவையளித்தார்கள். இச் சூக்தம் 3-வது செய்யுள் நோக் குக. அத்திரி கதையை மண். 1. சூக், 51. செய். 3. பார்க்க. மனுவுக்கு யவமாதிதானியங்களே விதைக்கக்கற்பித்தவனது நாட்டில் இன்மையை நீக்கினரென்று ஸாயணர் உரை கூறுவர். ஸ்யூமரச்மி, ஸ்யூமரச்மி. ஒருரிஷி மண். 10. சூக். 77.78. ஐக் கண்டவன்.

17. யாகதலத்தக்கினியுங்காட்டமதிற்பற்றியபினெரிதல்போலத்
தேகபலத்தோடுறையும் படர்வாவையுத்தமதிற்றிகழ்த்தியாக்கம்
வாகினமர்பெரும்போரிற்சரியாதன்றனம்பெறவேமத்தித்துதூக்கி
யோகையுறுத்துணையுடனன்னசுவினிகாளெமைநோக்கியுங்கெய்தீரே.

(இ-ள்.) யக்ஞக்கிரகத்தில் இந்தனத்தில்பற்றிக்கொண்டபின்னர் அக்கினி பலமாக வெரிவதுபோலப் பலம்பொருந்திய சரீரத்தோடு கூடிய படர்வாவென்னும் ராஜரிஷியை யுத்தத்திற் சிறப்படையச் செய்து, செல்வ நிறைந்த பெரியபோரில் சர்யாதனைக்காப்பாற்றிக்களிக்கும் உமது உதவிக ளுடன், அசுவினிகளே, எம்மைநோக்கி இங்கு வருவீர்களாக (எ-று.) படர்வாவென்பது ஒரு ராஜரிஷியின்பேரன்று. ஜடாஸ்ய என்பதற்குச் சரீரத்தையுடையவென்று பொருள்கொள்வது சரியன்று என்று சில மேனு ட்டையாளர்கள்வாதிப்பர். அவருள் (Ludwig) லுட்விக்கென்பவர், படரு வென்பது ஒரு கோட்டையெனக்கொண்டு, ஜடாளுடைய (புயலினுடைய) பலத்தினால் படருவென்னும் கோட்டையில் நெருப்பை வைத்தும் பிடித் துக்கொள்ளாதபடி செய்த உமது துணைகளோடு அசுவினிகளே வாருங்கள் எனக்கூட்டச்சொல்லுவர். ஆனால் (Griffith) மேனுட்டாசிரியர், ஸாயணர் உரைவலிந்து பொருள் கொள்ளுமாயினும் அதனையே பின்பற்றியுள்ளார். சர்யாதனும், வைவஸ்வத மனுவின் புத்திரனான சர்யாதியும் ஒருவரேயோ வென்று மேனுட்டாசிரியர் ஆசங்கிப்பர். இச்சர்யாதன் பிருகு கோத்திரத்து வந்த ராஜரிஷியான சார்யாதனின் தந்தையாம். மண். 1. சூக், 51. செய். 12. பார்க்க.

18. எதுகொண்டங்கிரசாக்கடம்மனத்தேதுதியெண்ணியேத்தாநிற்பா
தெதுகொண்டுகோத்தனத்தைவெளிப்படுத்தித்தேவர்வயினெய்து
வார்க,
தெதுகொண்டுமனுவென்னுஞ்சூன்யவமாதியையிக்கெளிதாப்
பெற்ற
னுதுகொண்டதுணையுடனன்னசுவினிகாளெமைநோக்கியுங்கெய்தீரே

(இ-ள்.) எந்தவுதவியையெண்ணி அங்கிராவம்சத்தவர்கள் ஸ்தோத்தி ரஞ்செய்து (பணியென்னும் அசுரனுலபகரிக்கப்பட்ட) பசுக்களாகிய செல் வத்தை (மறைமுகில்களை)த் தேவர்களிடத்திருந்து பெறுவார்களோ, எந்த

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

உதவியைக் கொண்டு மனுவென்னும் அரசன் யஜமானிதானியங்களே யெளிதிற் பெற்றுளே அந்த வுதவிகளுடன், அசுவினிகளே, எம்மை நோக்கியிங்குவருவீர்களாக—(எ-று.) இம்மறைகண்ட குத்ஸனும் அங்கிரஸனும் சத்தவனதுபற்றி அங்கிரஸாக்குடியைச் சிறப்பித்துக் கூறினனென்க.

19. பன்னியினவிமதனுக்குப்பரிந்தளித்துச், சிவப்புறப்பண்பார்காந்தி
மன்னியதல்லாக்களினேத்தானமீந், துயர்கைமன்னருகத்
துன்னிபரீச்சுதாசனுக்கு நற்றனத்தைநலமாகத்தோய்த்துவாய்ந்தே
யுன்னியவந்துணையுடனன்கசுவினிகாளைமைநோகியுங்கெய்திரே.

(இ-ள்.) விமதனென்னும் ரிஷிக்கு (புருமித்திரன் மகளாகிய) மனேவியை யளித்துச், செங்கிறம் வாய்ந்த ஒளிபொருந்திய பசுக்களைத் (செங்கிற மேகங்களே யென்றபடி) தானமாகத்தந்து, வள்ளன்மைக்குப் பேர்போந்த (பிஜிவனன் மகனுகிய) ஸுதாஸனுக்கு மிகுந்தசெல்வத்தைச் சேர்த்துப் பெருமை பெற்ற உமது உதவிகளுடன், அசுவினிகளே, எம்மை நோக்கி வருவீர்களாக—(எ-று.) ஸுதேவ்யம் என்னும் வடமொழிப்பதத்துக்கு நற்றனமென்பார் ஸாயணர். ஆனால் மேலுட்டாசிரியர் ஸுதேவியையெனப் பொருள் கூறுவர். அற்றேல் 'நற்றனத்தை' யென்றதிற்குப் பதிலாக 'ச்சுதேவியினை' என்றசீரையமைக்க. ஸுதாஸன் மண். 1. சூக் 47. செய். 6. பார்க்க. விமதன் பெயர் மேல் 116-வது சூக்கத்தில் மீண்டும்வரும்.

20 தாசுடற்குநாடுமுறைச்சுகமதனைத்தந்தருளுந்தன்மைவாய்ந்து
பேசுறுபுச்சியனுக்குமத்திரிகுவென்பாற்கும்பேரருள்செய்,
தாசறுநற்சுகந்தாங்குமன்னமதைரிதத்துப்பற்குச்சார்த்தி, மிக்க
வோசுறுமுந்துணையுடனன்கசுவினிகாளைமைநோகியுங்கெய்திரே.

(இ-ள்.) அவியளிப்பவனுக்குச் சுகத்தையளித்துத், துக்ரபுத்திரனுகிய புஜ்யனுக்கும் அத்திரிகு என்னும் யாகப்பசுவை வெட்டுஞ் சமிதாவுக்கும் அருளோத்தந்து, (உண்மை பேசுவோனுகிய) ரிதஸ்துபனுக்கு நல்லஸுகப்ரதமான உணவைத் தந்து பலமுறும் உமது உதவிகளுடன், அசுவினிகளே, எம்மை நோக்கி வேகமாக வருவீர்களாக—(எ-று.) புச்சியன், புஜ்யன்மேல் 6-வது செய்யுளைப்பார்க்க. அத்திரிகு (Adhrigu) அபன் ஆகிய இருவரும் தேவர்களுடைய சமிதாக்களென்னும் ஹதரேயப்பிராற்மணம். சமிதா யாகப்பசுவை வெட்டுவோன். ஸுபராவென்பதை மேலுட்டாசிரியர் சிறப்புப்பெயராகக்கொள்வர். ஆனால் ஸாயணர் நன்மையாகிய ஸுகத்தைத் தாங்கும் என விசேஷணமாகக்கொண்டு இவரா அன்னமென ஒரு சொல் வருவித்து உரைகூறுவர். ரிதஸ்துப் என்னும் பதத்திற்கு உண்மைபேர் யுச்சரிப்பவன் என்பது பொருள். அது ஒரு ரிஷியின் பெயராயதாக, தமிழில் ரிதத்துபனென்றார். ஓர, ஓஜஸ், மகிமை.

மண்டலம் 1 சூக்தம் 112.

21 செருவதனிற்கிருசானன்றனைக்காத்து, வேகமுடன்செல்லும் வண்ண
மருவிளமையவனுடைய குதிரையினைப்பந்தயத்தேவயக்கித், தேனீ
பிரசமதைத்தன்காரச்சுவையுளதாத்தந்தவற்றைப்பெரிதுங்காத்தே,
யுரசுறுமுத்துணையுடன்கசுவினிகாளெமைநோக்கி யூங்கெய்தீரே.

(இ-ள்.) ஸோமகாவலாகளுள் ஒருவனைக்ருசானுவென்பவனை யுத்தத்திற் காப்பாற்றி, இளமைவாய்ந்தவனுகிய புருகுத்ஸனுடைய குதிரையைப் பந்தயத்திற் ஜயிப்பித்துத், தேனீக்களுக்கு நல்ல தேனைத்தந்து காப்பாற்றிப் பெருக்கமபெறும் உமது தூணைகளுடன் அசுவினிகளே, எம்மை நோக்கியிங்குவருவீர்களாக—(எ-று.) ஹஸ்தன், ஸுஹஸ்தன், க்ருசானு என்பவர் ஸோமத்தைக் காப்பாற்றுவரர்களென்று தைத்திரீய ஸம்ஹிதை (1-2-7) கூறும். பார்ஹீவேதமாகிய அவெஸ்தாவில் இப்பெயர், கெரெசானியென வழங்கும். கிருசானு அமிர்தமாகிய மழைபெய்யாமற் றடுக்கும் ஒரு பூதமாயிருக்கலாமென்பார் மேனுட்டாசிரியர். க்ருடன் ஸோமனைக் கொணர்ந்த கதையைக் கூறும் மறையாகிய மண். 4. சூக். 47. செய். 7-ல் இப்பெயர் மறுபடியும் சொல்லப்படுகிறது. இவனுன் புருகுத்ஸனென்பார் ஸாயணர்.

22. வித்தமொடு கேத்திரமும் பசுக்களுமே பெறுமாறு விழையும் வீரர்
மெத்தியவெம் போரதனி னேதாவைவிரைவுறுத்திமேன்மைசார
வுத்தரியைத்தேரதனைப் பத்திரமாய்க் காப்பாற்றி யொழுகுஞ்சீரி
னெத்துறுமுத்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கி யூங்கெய்தீரே.

(இ-ள்.) செல்வமும், நிலமும், பசுக்களும் பெறும் வண்ணம், போர் வீரர்கள் நிறைந்த யுத்தத்தில் நேதா அல்லது யஜமானனைத்துரிதப்படுத்தியவனது குதிரையையும், தேரையும், பத்திரமாகக் காப்பாற்றி விளங்குகின்ற உம்துணையோடும், அசுவினிகளே, எம்மை நோக்கி யிங்குவருவீர்களாக—(எ-று.) உத்தரி, குதிரை, உத்தரியைத் தேரதனையும்மைத்தொகை. வடமொழியில் தநயஸ்ய என்றுள்ளது. அதற்குப் புத்திரன் என்ற ஸாதாரணப்பொருளே மேனுட்டாசிரியர் கூறுவர். ஆனுல் ஸாயணரோ 'தநய சப்தே தனவாச்சீ என்றராதலின், புத்திரரும்' என்னுது 'வித்தமொடு' என்ருர் செய்யுளில். 'புத்திரரும்' எனக்கொள்ளின் 'பொருந்தும் வீரர்' எனப் படிக்க.

23. நூறுகிருதுக்களுக்குநாயகரே! யர்ச்சுனனிலேன்பிலுற்ற
வீறுபெறுருச்சுனைக்காத்; தெழிலுறவேதுருவீதி,விழை தபீதி
பெறுபேறத் துவசந்தி புருடந்தி யிந்நால்வர்ப்பெரிதுங்காத்த
ஆறுபெருத்துணையுடனன்கசுவினிகாளெமைநோக்கியூங்கெய்தீரே.

(இ-ள்.) பலவிதகர்மங்களுக்கு நாயகரே! அசுவினிகளே! (இந்திரனுடைய மறைபெயரான) அர்ச்சுனனுடைய புத்திரனுன குத்ஸனைக்காப்பாற்றித், தார்வீதி, தபீதி, த்வஸந்தி, புருஷந்தி என்னும் நான்கு ரிஷிகளுகளும் எழிலும் வாழ்வும் பெறுமாறு சாத்தருளிய குற்றமற்ற உமது உதவிகளுடன் எம்மை நோக்கி வருவீர்களாக—(எ-று.) அர்ச்சுனன் இந்திரனுடைய குற்ற நாமம் என்று வாஜஸநேயி கூறும். குத்ஸன் இந்திரனது வாத்தால்

அஷ்டகம் 1 அத்தியாயம் 7.

வந்த புத்திரனைத பற்றி யவனை யிந்திரபுத்தினென்றார். தூர்வீதி மண். 1. சூக் 61. செய். 11. பார்க்க. (Dabhiti) தபீதி இந்திரனுக் குகந்த ஒரு ரிஷி மண். 2. சூக். 15. செய். 9. பார்க்க. துவசந்தி (Dhvasanti) தீவஸந்தி ஒரு ரிஷி. புருடந்தி, புருஷந்தி, ஒரு வள்ளல். மண். 9. சூக். 58. செய். 3 நோக்குக.

(வேறு.)

24. இச்சையையளிப்பீர், மாற்றூர்தமைத்தெறுகீரின்மிக்க
வச்சுவினிர்காளெங்கள்மொழிக்கணேயமைக்கசித்தி;
மெச்சுமோத்தறியுஞானம்வீசுவீரிருட்டீற்றியாமத்
துச்சமாயழைத்தேன்போரினியைக்கவோக்கம்மெமக்கே.

(இ-ள்.) இச்சைப்பட்டவற்றைத் தருபவர்களும் பகைவரையடக்கு வோருமாகிய அச்வினிகளே! எங்கள் வார்த்தைகள் பலிக்கக் கூடியவையா கச் செய்க. எங்களுக்கு வேதார்த்தங்களை யறியும் ஞானத்தைத் தருக. இருட்டான இரவின் கடைச்சாமத்தில் உம்மையழைத்தேன். எங்களை யுத்தத் திற் பெருமைபெற்றவர்களாகச் செய்க—(எ-று.). அசுவினிகளை இரவிற் கடைசிஜாமத்தில் துதித்தழைப்பதுதான்முறை. அத்யூத்யே என்னும் வடமொழிப்பதத்துக்குச் சூநாட்டத்தில் தோல்வியுறும்போது எனப்பொருள்கொள்ளுவார் மேலுட்டாசிரியர். ஆனால் ஸாயணர், த்யோதமானஹிதேப்ரகாசமானஹிதோத்தரே: பச்சிமயாமே! வெளிச்சமில்லாத இரவின் கடையாமத்தில் என்று உரை கூறுவர்.

25. தாவுரத்தனத்தினல்லும்பகலுமெந்தம்மைச்சூழ்ந்து
தூவியலசுவினிக்காளோம்புக; வெமதிப்போற்றைத்
தாவருபுவியும்வானுஞ்சிந்துவுமதிதிதானு
மேவுமித்திரவருணர்தம்மொடுவிழைந்துகாக்க.

(இ-ள்.) துன்பத்தைத்தராத செல்வத்தோடு இரவும் பகலும் எம்மைச் சூழ்ந்து, அசுவினிகளே, ரட்சிப்பீர்களாக. எம்முடைய இந்தஸ்தோத்திரத்தைப் பூமி, முதல் அறுவரும் காக்கட்டும்—(எ-று.) தாவு துன்பம் உறுதியடையாத வென்க.

வருக்கம் 37.

ஆகச் செய்யுள் 1198.

7-வது அத்தியாயம் முற்றும்.

பிழை திருத்தம்.

பக்கம் 289, 91-வது சூக்தத்தில் 23 இருக்குக்கள்கொண்டது என்பதற்கமையில், ரிஷி: ஷை கோதமன்; வடமொழிச்சந்தம்: 1-4 த்ருஷ்டுப், 5-16 காயத்திரி, 17 உஷ்ணி, 18-23 த்ருஷ்டுப்; தேவதை: ஸோமன் என்பதைக் கூட்டுக.

பக்கம் 310 முதலடியில் 38 வருக்கமுமென்பதை 37 வருக்கமும் என மாற்றிப்படிக்க.

8-வது அத்தியாயம்.

மண்டலம் 1 சூக்தம் 113.

இவ்வத்தியாயத்தில் 26 வருக்கமும், 9 சூக்தமும், 135 இருக்குக்களு மூள்ளன.

113. மண்டலம் 1. அநுவாகம் 16. சூக்தம் 8.

20 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆங்கிரஸன் புத்திரன் குத்ஸன்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: உஷஸ். 2-வது இருக்கிற் பாதி இரவுமாம்.

1. சோதியிற் சிறந்த சோதி தோய்ந்த, தீண்டைதின்; யாவுந்
தீதற விளக்குங் காந்தி செறிந் தெலாவிடத்துந் தோன்றிற்;
றேதமி லென் றுதிப்பா னேகிய விரவு, வைக
னீதியி னுதயமாகத் தோற்றுவாய் நிறுவிற் றன்றே.

(இ-ள்.) சோதிகளிற் சிறந்த (உஷஸ்யாகிய) சோதி இங்கு அழகாக வந்தது. எல்லாவற்றையுங் கண்ணுக்குத்தெரிவிக்கும் கிரணங்கள் எல்லாப் பக்கத்திலும் நிறைந்து தோன்றின. குற்றமற்ற சூரியன் உதிப்பதற்காக இடங்கொடுத்து மறைந்த இரவு (அப்படிமறையும்போது) உஷஸுக்கு ஒரு பிறப்பிடத்தை யேற்படுத்திச்சென்றது—(எ-று.) என்று, சூரியன். சோதி உஷஸாம். தோற்றுவாய், பிறப்பிடம்.

2. வெண்மையுந், தபனனுகும் வெளுப்புறு சுதனே டோங்கி
யண்மினு; ளவட்குக் கார்அல் அளித்தனள் தனதிட்தைத்
தண்மையார் அமரத்தன்மை சார்ந்து முன் இராப் பின்வைகல்
ஒண்மைசார் நிறங்கள் மாறி யொழுகுவார் உறவொத் தோரே.

(இ-ன்.) வெண்மையாகிய உஷஸும் ஸூர்யனுகிய பிரகாசம் பொருந்திய புத்திரனுடு வந்தாள். அவளுக்குக் கரிய இரவு தன்னிடத்தை யளித்தாள். குளிர்ச்சியும் மரணமின்மையும் சார்ந்து ஸமானபந்துக்களாகிய இரவும் உஷஸும் தமது நிறங்கள் மாறிமாறி முன்னும் பின்னுமாக ஒழுகுவார்கள்.—(எ-று) உஷஸின் பக்கத்தில் சூரியன், தாயின் பக்கத்துப் புத்திரனிருப்பதுபோலிருப்பதினுல், சூரியனை உஷஸின் புத்திரனென்றார். அன்றித் தாயின் முலேப்பாலாகிய ஸாரத்தையுண்பதுபோலச் சூரியன் உஷஸின் ஸாரத்தை யிழுப்பதனுலும் புத்திரனென்று ரென்பார் ஸாயணர். வெண்மை யீண்டு உஷஸ். அல், இரவு முன் இரவும் பின்வைகலுமாக மாறிமாறி ஒன்றன் நிறத்தை மற்றொன்று பேதித்து ஒழுகும் இவ்விரண்டும் மரணமின்மை வாய்ந்து ஒத்தபந்துக்களாம். ஏன்? காலம் நித்தியமானதுபற்றி.

3. உடன்வயி றொழுகு மார்க்க மொன்றதர் முடிவில்லாதாங்;
திட்முறத் தேவராணை செறிந்துபின் னன்னியான்யத்
துடனுறச் செல்வார்; ஒங்கு முருவினர் விதிதரூப
மடையினு மிரா வைகல்க ளுமொத்தார் நிலார் மோதாரே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

(இ-ள்) சகோதரிகளாகிய இரவும் வைகலும் செல்லும் மார்க்கம் (ஆகாசமாகிய) ஒன்றே. அது எல்லையற்றது. இடமாகத் தேவர்களுடைய ஆக்ஞையை யடைந்து பக்கம் பகலமாகச் சேர்ந்து அவர்கள் செல்வார்கள். நல்ல உருவத்தோடு கூடிய அவ்விரவும் உஷஸும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட ரூபத்தை யடையினும், மனமொத்து, ஒரிடத்து நில்லாமலும் ஒருவரோடொருவர் முட்டிக்கொள்ளாமலும் செல்வார்கள்—(எ-று.) இரவும் உஷஸுமாகிய ஸ்ரேஷ்டரிகள் மாறிமாறிச் செல்வர். வேறுபட்ட வுருவத்தோடியையினும் மனமொத்து, நிற்காமலும் தடைபடாமலும செல்வர் என்க. மோதார் தற்பொருட்டில் வந்தது.

4. இன்பமார் தொனி யெழுப்பு மிவளே யெங்கண்க ணேக்கும்;
கொன்பெறு சித்திரத் தோற்றத் துஷை சகந்திருட்டைக்
கொன்றொளி காலவிட்டாள்; உலகத்தை வெளுப்பித், தாக்க
மின் றெமக் கொளிர்ந்தி யெல்லா வுயிரையு முயிர்ப்பித்தாளே.

(இ-ள்.) இன்பம் நிறைந்த (பிராணிகளின்) தொனிகளை யெழுப்பி விடும் இவ்வுஷஸை எமது கண்கள் பார்க்கும். பெருமைபொருந்திய சித்திரம்போன்றதோற்றத்தையுடைய உஷஸ்ஸுகத்தின் இருட்டைப்போக்கிப் பிரகாசத்தை யுண்பெண்ணினாள். உலகத்தைப் பிரகாசிப்பித்து, எங்களுக்குச் செல்வம் கண்ணுக்குத் தெரியும்படிசெய்து, எல்லாப்புவனங்களிலு முள்ள பிராணிகளை மறுபடியும் உயிர்பெற்றனவென்னும்படி செய்தாள்—(எ-று) விடியற்காலத்தில் பசு பட்சிகள் சத்தஞ்செய்வதால் தொனி யெழுப்புமிவளென்றார். தூங்கி யெழுதல் மறு பிறவிபோலிருப்பதால் உயிர்ப்பித்தாளென்றார். 'உறங்குவதுபோலும் சாக்காடு, உறங்கி விழிப்ப தூபோலும் பிறப்பு', என்பது கருதத்தக்கது.

5. மகோனி மெய் முடக்கித் தூங்கு மனிதரைப் போக மாரத்
தகோதய மகத்தை யாற்றத் தனத்தினைப் பெற வடத்தும்;
சுகோதயத் தூர திட்டி சுல்விட வற்ப நேர்க்கி
னிகோதயத் தூண்டி யெல்லா வுயிரையு முயிர்ப்பித்தாளே.

(இ-ள்.) மகோனி (தனவதி) யாகிய உஷஸ், சரீரத்தை முடக்கிக் கொண்டு தூங்கும் மனிதரை யெழுப்பிப் போகம் அநுபவிக்கச் சிலரையும், யக்ஞம்செய்யச் சிலரையும், செல்வத்தைப் பெறச்சிலரையுமாகத் தூண்டி விடுவாள் பார்க்கமுடியாமலிருந்த மனிதரை வெகு தூரம் பார்க்கும் வண்ணம் செய்து எல்லாப்பிராணிகளையும் மறுபடியும் உயிர்பெற்றார்களென்னும்படி செய்தாள்—(எ-று.) மகோனி, தன்முடையவள், உஷஸின் மற்றொரு பெயர். இருட்டினலற்பநோக்குற்றவரென்க. இகோதயர் இகத்தப் பிறந்துள மனிதரென்க.

வருக்கம் 1.

6. பொன்னியை போருக் கன்றி யன்னத்தைக் கருதி மேன்மை
துன்னிய விட்டிங்காகத் துதைபொரு ளீட்டு மாறு
மன்னிய நாலு ரூப மலிதொழில் கருதிச் செல்வா
னின்னிய வுஷையு மெல்லா வுயிரையும் முயிர்ப்பித்தாளே.

மண்டலம் 1 சூக்தம் 113.

(இ-ள்.) பொன்னைத்தரும் போருக்காகவும், அன்னத்தைப்பெறுதற்கு செய்யும் மேன்மைபொருந்திய அக்கினிஷ்டோமாதி இஷ்டிகளுக்காகவும், செல்வம் சம்பாதிப்பதற்காகவும், பின்னும் பலவிதத்தொழிலை நாடிச்செல்வதற்காகவும், உஷஸானவள் எல்லாப்பிராணிகளையும் எழுப்பினாள்—(எ-று.) இச்சூக்தத்தில் 4, 5, 6 செய்யுட்கள் மாத்திரம் கடையடியொன்றுக வருவதால் இவை பின்னர் இடைப்புகுத்திய செய்யுட்களபோலு மென்பார் மேனுட்டாசிரியர். இவ்விடைப்புகுத்திய காலம் சௌநகருக்குப் பின்னும் காத்தியாயநருக்கு முன்புமாயிருந்திருத்தல் கூடும். எனெனின் வருக்கம் ஏற்பட்டபிறகு இடைப்புகுத்துதல் சாலாது, அவ்வருக்காநுக்கிரமணியளவு படித்தப்பட்டிருத்தலால். மேலும் இப்பாட்டின் தொழின் முறைகளைக் கவனிக்கின் சாதித்தொழிற் பிரிவினைகள் வெளிப்படத்தோன்றுகின்றன. பொருநர், இஷ்டிகர், வணிகர், பணிசெய்வோர் எனத்தொனித்தல் காண்க. ஆதியிற் பொருளே சிறந்து நின்றுளெனவறிக.

7. வான்மகள், யுவதி, காந்தி வளர்ந்திடு மாடை பூண்டு
தோன்றின ளிருளைச் சீத்துத்; துதையுறு புவனமெல்லா
மேன்ற செல்வங்கட் கெல்லா நாயகீ, யுஷை, யின்றீண்டை
யான்றசீர்த் தனத்தோ டெற்றே யல்லினித் தொழுகுவாயே.

(இ-ள்.) விண்ணின் புத்திரியும், தருணியுமாகிய உஷஸ் பிரகாசம் பொருந்திய வஸ்திரத்தைத் தரித்து இருட்டை நீக்கி யுதயமானுள். எல்லாப் புவனங்களிலுமுள்ள செல்வங்களுக்கெல்லாம் நாயகியே உஷையே! இப்பொழுது இவ்விடத்துச் சிறப்புப்பொருந்திய செல்வத்தோடு இருட்டை விலக்கியெழுவாயாக—(எ-று.) இடமாற்றை நோக்குக.

8. கணக்கிலாப் பலவ்வகல்கள் காண நிற்பவின்-மூதன்மை
யிணக்கிய வுஷை முன்சென்ற வைகலி னெறியே யேய்ந்தாள்;
உணக்கமா ருறுப்பிற் றூங்கு மொவ்வொரு சீவதேஎத்
தினக்குறு முணர்ச்சி யெல்லா மெழுப்பிக் காரிருள் சீத்தாளே.

(இ-ள்.) எண்ணிறந்த விடியற்காலங்கள் இனிவருபவற்றிற்கெல்லாம் முதல்வைகலாகிய இவ்வுஷஸ், இதற்குமுன் வந்துபோன விடியற்காலங்களின் நெறியிலேயே பொருந்தித்தோன்றினுள்.(தூக்கத்துக்குமுன் உயிர்த்தன்மையோடு பிராணிகளையக்கிய உஷை) இறந்ததுபோல உணர்வற்றுத் தூக்கத்திலாழ்ந்து கிடக்கு முறுப்புக்களோடு கூடிய ஒவ்வொரு பிராணியின் உடலினையும் உணர்ச்சிபெறச்செய்து இருட்டினை யோட்டினுள்— எ-று.) மேனுட்டாசிரியர் உயிரோடிருக்கும் பிராணிகளை யெழுப்புவாள். இறந்து போனவற்றை யெழுப்பமாட்டாளென்பார்.

9. எரியினைச் சமித்தி னூட்டி யிலங்கு சூரியன்றன் கண்ணும்
தெரியலாப் பொரு டெரித்துத் திகழ்மக மாற்று மாந்தர்க்
குரிமையி னவரை யூக்கி யுயர்சிறப்பன்ற கன்ம
மருவ விட்டனை தேவர்க்கா மதிக்கரு முஷை நீதானே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

(இ-ள்.) உஷஸே! நீ, சமித்திற் நீமூட்டி, மறைந்துகிடந்த பொருள்களை ஸர்யனுடைய வெளிச்சத்தினால் தெரியக்காட்டி, யாகஞ்செய்வோரைத் தொழிலின் முயக்கிச் சிறந்த (மூவித) கர்மங்களையும் தேவர்களுக்காகப் புரிவித்தனை—(எ-று.) மூவித கர்மமென்றார் ஸாயணர் அவிர்யக்ஞும், பாகயக்ஞும், ஸோமயக்ஞங்களை.

10. வைகல்க ளருகே தோன்றி வளர்ந்த வெத்தனை நாளாக?
ஐதி னெவ்வளவு கால மினி யவை யெழும்? இவ்வைகல்
மொய்குறப் பிறமகோனி முன்புற விழைந்து மற்றை
வைகலோ டொளிர்ந்து சித்த வோகையிற் செல்வாளன்றே.

(இ-ள்.) ஆதிகாலந்தொட்டு எத்தனை நாட்களாக இவ்வுஷஸுக்கள் சமீபத்திற் நேர்ந்தி வந்துகொண்டிருக்கின்றன? இனி யெத்தனை காலம் இவ்வுஷஸுக்கள் உதிக்கும்? இன்றுதோன்றிய இவவுஷஸ் பிறமகோனிகளாகிய உஷஸுக்களோடு சேரவிரும்பி இதர விடியற்காலங்கள் கழிந்து போனவையோடுபோய்ச் சேர்வாள்—(எ-று)

வருக்கம். 2.

11. வைகறைத் தோற்றந் தன்னை மகிழ்வொடு முன்பு கண்டார்
பைதலிற் சென்றார்; இன்று பரிவொடு வாழும் யாங்கள்
செய்கையிற் சிறந்த வன்ன செறியொளி நோக்காநிற்பேம்;
மைகுலவா வச்சோதி நோக்குவோர் சார்வார் வல்லே.

(இ-ள்.) உஷஸின் உதயத்தை முன்பு கண்டவர் அநேகர் நூன்பத்திற் கழிந்திறந்தனர். இந்நாள் வாழும் யாங்கள் அச்சிறப்புப்பொருந்திய ஒளியைப் பார்க்கா நிற்போம், குற்றமற்ற அச்சோதியைப்பார்க்கப் பின்னும் பலர் ஜீக்கிரத்தில் உதிப்பார்கள்—(எ-று.) உஷஸின் தோற்றம் பூதபவிஷ்யவர்த்தமான காலங்களிலுமுண்டென்றபடி, மேற் பத்தாஞ் செய்யுளிலுள்ள ஜதின், இச்செய்யுளிலுள்ளபைதலில் இவ்விரண்டும் இனவெதிரைகையாம்.

12. பகையினை யோட்டி, யாகம் பரிந்துநாத், தநற்காத் தோன்றி,
நகையுவப்பளித்தி, நன்மைசா ரொலியெழுப்பித், தேவர்
தகையுற வுண்பான் யாகந் தந்து, மங்கலப்பண் பேய்ந்து,
மிகுமிசை யுஷையே யின்நீண் டொளிபெற விழுங்குவாயே.

(இ-ள்.) பகைவர்களாகிய ராக்ஷஸாதி நிசாசர்களைத்தூரத்தி, யக்ஞத்தை விரும்பிக்காத்து, அவ்யக்ஞத்துக்காகவே வற்பவித்து, ஸந்தோஷத்தைத்தரும்சுகத்தைத்தந்து,(பசுபட்சிமுதலியவற்றின்) இனியசத்தங்களை யெழுப்பி, தேவர்கள் அவிரும்புமியாகங்களைச் செய்வித்து, (எப்பொழுதும்) மங்கலத்தன்மையோடியைந்து கீர்த்திமிகும் உஷாதேவியே இப்பொழுது இவ்விடத்தில் ஒளிபெறப்பிரகாசிப்பாயாக—(எ-று.) 'உஷஸ் உதித்தக்தூர்த்தேவ

மண்டலம் 1 சூக்தம் 113.

கைகள் விலகுகின்றன. புராதனமாய்வரும் ஸநாதன ஏற்பாட்டின்படி உஷஸ்யுதித்து இயற்கையொழுங்குகளைக் கவனித்துப் பாதுகாக்கிறாள். உஷஸ் உதயமாவது தேவகார்யங்களைச் செய்ய மனிதர்களுக்கு ஓர்அடையாளமாம். என்பது கருத்து.

13. நித்தலு முன்னர்த் தேவி யுஷை நிறைந்தொளிர்ந்தாள்; பின்பு
சுத்த நற் பிரகாசத்தை மகோனியு மின்று தோய்த்தாள்;
மற்றுப் பின்றோன்று நாட்க டன்னினு மலர்வ ளற்றே;
யுற்றிடாள் மூப்புச் சாக்கா டொழுகுவாள் சுயதே சோடே.

(இ-ள்.) எப்பொழுதும் முன்காலத்தில் உஷஸாகிய தேவி ஒளிநிறைந்து எழுந்தாள். அதற்குப்பிறகு இப்பொழுதும்(மகோனி) தனவதியாகிய வுஷை பரிசுத்தமான நல்லபிரகாசத்தைத்தந்தாள். இனித்தோன்றும் நாட்களிலும் அப்படியே விளங்குவாள். ஜராமரணதுக்க மில்லாமல் தன் ஸ்வயதேஜஸோடு எப்பொழுதும் நடப்பாள்—(எ-று.)

14. வானுறு திக்கி னெல்லை வயங்கின ளொளியிற்; றேவி,
தானுறுங் கறுத்த மேனி களைந்தன ளுஷைதன் றேசால்;
வானுறு முயி ருணர்ச்சி யுற் றெழுகிடச் சிவந்த
மானுறு தேரி னேறி மருவினு ளீண்டு மாதோ.

(இ-ள்.) (உஷை) ஆகாசத்திற் பரவியுள்ளதிக்கின் எல்லைகளிலெல்லாம் ஒளியோடு விளங்கினுள். ஒளி பொருந்திய அவ்வுஷையாகிய தேவி (இரவினுலேற்பட்ட) கறுப்பு ரூபத்தைத்தன் தேஜஸால் மாற்றினுள். உடலிலுற்ற உயிர்கள் (தூக்கந்தெளிந்து) உணர்ச்சியைப் பெறுமாறு செங்நிற மானகுதிரைகளைக்கட்டிய தேரிலேறி வந்தாள்—(எ-று.) மான் குதிரை.

15. உயிரினை யோம்புஞ் செல்வ மொன்றல வெடுத்து மாந்தர்
செயிரறு முணர்ச்சி பூட்டிச் சிறந்த பேரொளி விரித்தாள்;
பயிறரு முஷையு முன்பு பயின்ற வைகறைகட் கெல்லா
மியறரு முவமை யாகி யினியெழு மவைக்கு மூத்தாள்.

(இ-ள்.) ஜீவன்களை வளர்க்கும் பலவகையான செல்வங்களையும், தாங்கிக்கொண்டு மனிதரது குற்றமற்ற வுணர்ச்சிகளை யவர்களுக்களித்துப் பெரிய காந்தியை வீசினுள். உஷை முன்னுட்களில் விளங்கிய வைகல்களுக்கு மூன்றினவளாய் வளர்ந்தாள்—(எ-று.)

வருக்கம் 3.

16. ஏழுக! நஞ்சி வசுத்தி யேய்ந்தது; தம மொழிந்த,
வழிதரு சோதி யுற்றது; ஓங்கிய வென்றூழ் செல்வான்
வழியினை யமைத்தாள்; மாந்த ராயுளைப் பெருக்கு மன்னள்
தழைதரு மவ்விடத்தே சார்ந்தனஞ் சிறக்க யாமே.

அஷ்டகம் I அத்தியாயம் 8.

(இ ள்.) ஜகங்களே! எழுவீர்களாக. நம்முடைய ஜீவசக்தி சரீரத்தில் (மீண்டும்) பொருந்திற்று. இருட்டொழிந்தது. சூழ்ந்தசெல்லும்ஜோதி வந்தது. ஸ்ரௌத வீதியை (உல்லங்) யமைத்தனள். மக்களது ஆயுளிருந்திசெய்யும் அன்ன தானஞ் சிறக்கு மவ்விடத்தில் யாங்கள் பெருமைபெற வடைந்தோம்—(எ-று.). மாந்தர்காள் எழுகவென்றும், உஷையமைத்தனளென்றும் கூட்டுக.

17. தோத்திர முரைப்போன் வைகற் சோதிப்பாற் போற்றைத் தந்து
மாத்தி ரையாகப் பாடி வழங்குவான்; மகோனி யின் றீண்
டேத்தூவோன் பக்க லுன்ற ளெளியினை யோச்சல்; எம்பாற்
பாத்தளி தனமுஞ் சந்தானங்களும் படைத் திலங்கல்.

(இ-று.) ஸ்தோதா வானவன் உஷவின் மேற் ரூத்திரங்களை வேத மாத்திரைகளின்கணக்காக வமைத்துப்பாடி அவற்றை உச்சரிப்பான்; மகோனியே! (உஷையே!) இப்போது இவ்விடத்து உன்னைப்புகழுவோன் பக்கத்தில் உனது ஒளியை வீசுவாயாக. எங்களுக்குப்பகிர்ந்து கொடுக்கும் செல்வத்தையும் ஸந்தானங்களையும் படைத்துப் பிரகாசிப்பாயாக—(எ-று). தந்து, நூல் ஈண்டு வேதநூலைக்குறித்தது.

18. வீரர்யாவரையு மாக்கடம்மையு மசுவத்தோடு
மேருற வவியைத் தாங்கு மர்த்தியற் கியைக்கும் வைகல்,
சோருறுத் துதிகள் பாடிச் சோமத்தைப் பிழிந்து வாயு
தாருறு கதியிற் சாற்றி முடிப்பவ னிவற்றைச் சார்க.

(இ-ள்.) தாசுஷனுகிய மர்த்தியனுக்கு எல்லாவீரர்களையும், பசுக்களையும், குதிரைகளையும், தரும்வைகல்களாகிய இவற்றை, ஸ்துதிகளைப்பாடி முடிக்கும்போது வாயுவேகமாகமுடிக்கும் ஸோமாபிதேஷ்டாவாகிய யஜமானன் எய்தட்டும்—(எ-று) தாசுஷன் அவியளிப்பவன். ஸோமாபிதேஷ்டா, ஸோமம்பிழிவோன். வைகல்களாகிய விவற்றை, முடிப்பவன் சார்கவென வினை முடிவுசெய்க.

19. தேவர்தந் தாயே, சீர்த்த வதிதியின் முகமே, யாக
மேவு நற்கொடியே, மேன்மை யோங்குற வினங்க ளீண்டே;
தாவுசீ ரெம்மறைக்க ளெளியினைத் தயக்கித் தோன்றல்;
ஓவற வுயர்த்தோ யெம்மை யுயர்த்துக மன்னர்க் கண்ணே.

(இ-ள்.) தேவர்களுக்கு மாதாவே! அதிதியின் (பூமியின்) சிறப்புப்பொருந்தியமுகமே! யாகத்துவசமே அல்லது யாகங்களைப் பூட்டுபவளே! இங்கு மேன்மைபெற வினங்குவாயாக. சீர்பொருந்திய எமது மந்திரங்களின்பொருட்டுப்பிரகாசிப்பாயாக. எல்லாரிலும் உத்கிருஷ்டமானவளே! மனிதர் கூட்டத்தில் எம்மை யுயர்த்துவாயாக—(எ-று.) விளிகளெல்லாம் உஷையைக்குறித்து நின்றன.

20. ஓவறு மகியு மேத்து முடன்கொடு பூசிப்பானுக்
கீவதற் குஷை தரும் பொன் சிறந்த மங்கலமாம்; இஃதைத்
தாவரு புவியும் வானுஞ் சிந்துவு மதிதி தானு
மேவுமித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

மண்டலம் 1 சூக்தம் 114.

(இ-ள்.) குறைவற்ற அவிப்பொருளோடு ஸ்தோத்திரமும் கூறிப் பூஜிப்பவனுக்குத்தருவதற்காக உஷஸ் தாங்கிக்கொண்டிவரும் தனமான மங்கலச்சிற்பப்பெறும். இப்போற்றைப் பூமி முதலிய அறுவரும் காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 2.

114. மண்டலம் 1. அநுவாகம் 16. சூக்தம் 9.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: மேதி குத்ஸன்; வடமொழிச்சந்தம்: ஜகதி, 10, 11 த்ருஷ்டுப்; தேவதை: உருத்திரன்.

(வேறு.)

1. வலியோங்குஞ்சடையானன், றனவீரர் நாய்களு மருவுருத்தற்
கொலியோங்குமிப்புகழ்ப்பாக்களேபீலோ,மிருபாதத் தொழுகுமாந்தர்
நிலையோங்க,நாற்பதத்துப்பிராணிகளுஞ்சுகமோங்கிநிலைக்க, வெம்மூர்த்
தலையோங்குமவரெல்லாந்திடமோங்கிநோய்நீங்கித் தழைக்கு மாறே.

(இ-ள்.) இரண்டுபாதத்தி லெழுகும் மனிதர்கள் விருத்தியடையுமாறும், நாற்கால் பிராணிகளாகிய பசு குதிரை முதலியனவைகள் சுகந்நிலுறுமாறும், எம்மூர்க்கண் ணுள்ளவர்கள் திடம்பெற்று நோய்நீங்கிச் சிறக்குமாறும், வலிமை பெருத்த ஜடாதாரியும், தனவீரர்களாகிய மருத்துக்களுக்குத்தந்தையுமான உருத்திரனை, ஒலிமிகுந்த இந்தஸ்தோத்திரப்பாக்களாற் புகழுவோம்—(எ-று.) ருத்ரன், உருத்திரன். (1) முடிவு காலத்தில் எல்லாவற்றையும் அழவைப்பவன். (2) ஸம்ஸாரமாகிய துக்கத்தை விநாசப்படுத்துபவன். (3) சப்த ரூபத்தால் பிரதிபாதிக்கப்படுபவன். (4) அத்தகாரத்தையழிப்பவன். (5) தேவாசுரயுத்தத்தில் அக்னி ரூபமாயிருந்து தேவர்களுக்காகத் தனத்தைப்பறித்துக்கொண்டுவந்தபோது அழுதவன். என்று மேற்படிபொருள் கூறுவார் ஸாயணர். கபர்த்தி சடாதரன், வீரர் மருத்துக்களென்பார் ஸாயணர்.

2. உருத்திரனே! யெம்மிடத்துச் சுகத்தமர்க; வெமக் குவ்கையுடனேயீக;
உருத்தெழு மத்தனவீரர் நாயகனே, பிரணயத்தோடுனைச் சேவிப்
பேம்;
பெருத்தவெமதாநிபிதாமநுயாகத் தெச்சமனம் பிறங்கெச்சாந்தி
யுரித்துறவேபெற்றன னவவிரண்டு முனதருணைக்காலுறுகயாமே.

(இ-ள்.) ருத்திரனே! எம்மிடத்துச் சுகமாகத் தற்குலாயாக. எங்களுக்கு உவகையை அல்லது சுகத்தைத்தருவாயாக தனவீரர்களாகிய மருத்துக்களின்றந்தையே! வணக்கத்தோடு உன்னை வணங்குவோம். எங்களுடைய ஆதிபிதாவாகிய மதுபெற்ற ரோகசமனம் பயச்சாந்தியாகிய விரண்டையும் யாங்கள் உனதருளால் அடையட்டும்—(எ-று.) ரோகசமனமும் பயச்சாந்தியும் என்பார். சமநஞ் ச்ரோகாணாம் யாவநஞ்ச பயாநாம், என்பது நிருக்தமொழி.

3. வள்ளன்மை யோங்குமுருத்திரனே, நல்வீரர்களா மருத்துள்ளத்,
தள்ளருமு னருண்மனத்தைத் தேவயரஞமதனுலிவையு யாமும்;
கொள்ளாரிய சுகமதையெங்குடிமநித்தித்தருளுகவாற்; குலவும்வெற்றி,
யுள்ளிய லெவவீரர் பெறுமாங்களு முன்மாட்டவியை யுவந்தீ
வோதே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

(இ-ள்) வண்மையிற் சிறந்த ருத்திரனே! தனவீராகிய மருதர்களுக்கு நாதனே! யாங்கள் தேவயஜநகார்யங்களால் உனது அநுக்கிரஹாத்மக புத்தியை யடையட்டும். எங்கள் குடியைமதித்துச் சுகத்தையளிப்பாயாக இம்சையடையாத (அதாவது வெற்றி பொருந்திய) வீராகிய புத்திரரோடு கூடிய யாங்கள் உனக்குச் சருபுரோடாசமாதிய அவிப்பொருள்களைத் தந்தோம்—(எ-று.)

4: எக்கியத்தைமுற்றுவிப்போன்குடிலகதியுள்ளகவியென்றுமெம்மை
முகியமாய்க்காக்கவெனவுருத்திரனேயாசிப்போம்;முற்றும்,தேவ
ருக்கிரமார்குரோதத்தைத்தூரமதிலோட்டுகவெம்முழைகின்று;
அன்னன்
றக்கவருண்மனத்தினேயாமடைபாக்குத்துதியென்றுஞ்சாற்றுவோமே.

(இ-ள்.) யக்ஞத்தை நிறைவேற்றுவிப்பவனும், வக்கிரமானகதியோடு கூடியவனும், கவியுமாகிய உருத்திரன் எம்மைக்காக்கட்டுமென்று இரப்போம். தேவர்களுடைய கோபமானது எம்மை யடையாதபடி அதனையவன் முற்றுந்தூரத்தி லோட்டட்டும். அவனுடைய அநுக்கிரக புத்தியை யடையுமாறு அவனைத்துதிப்போம்—(எ-று.)

5. வாளெளிரும்வராகத்தைச்செங்நிறத்துக்கபர்த்தியினேவள்ருஞ்சோதி
தாளெளிருமுருவத்தைவணக்கத்தோடழைப்பாமாற்;றழைக்குமோயை
யூனமுறத்தீர்க்கும்பல்லோடதியைக்காத்தேதந்துமுமனைக்கட்கு
மானமுறுசுகத்தினேநற்கவசமதையில்லமெலாடுவழங்கமாதோ.

(இ-ள்.) ஆகாயத்திற்றோன்றும் வராஹம்போற் றிடவங்க முள்ளவனும், சிவந்த நிறத்தோடு கூடிய சடையாளனும், சோதியோடு கூடிய யுருவத்தையுடையவனுமாகிய உருத்திரனை வணக்கத்தோடு கூவி யழைப்போம். நோய் தீக்கும் ஔஷதிகளையுடையவன் எங்களுக்குப் பெருமைவாய்ந்த சுகத்தையும், ஆயுதங்களினின்று காக்கும் கவசத்தையும், வீட்டையு மளிக்கட்டும்—(எ று.) வராஹம் என்பதற்கு 'வராஹாகாரம் உத்திருஷ்டபோஜநம் யத்வா வராஹவத் த்ருடாங்கம்' என்பார் ஸாயணர். சிறந்த ஆகாரம் அல்லது பன்றிபோலத் திடமான வுறப்போடு கூடியவன் என்பது பொருள்.

வருக்கம். 5.

6. மருத்துவரின் றந்தையா முருத்திரனேக்குறித்து நனிமதுரஞ் சார்ந்து
பெருத்தவற்றி னினியம்றை யுரைத்தன்மால்; மரிப்பில்லாப் பெரும்
பண்பார்ந்தோய்,
அருத்தியொடு மர்த்தியர்த முண்டியினே யெமக்களிகை; வடைந்த
வெற்கு,
முருத்திகழென் புத்திர பௌத்திரர்களுக்குஞ் சுகமதனே யுவந்தீவாயே.

(இ-ள்.) மருத்துக்கள் நாற்பத்தொன்பதின்மருக்கும் தந்தையாகிய ருத்திரனுக்குறித்து நல்லரஹஸ்யமிகுந்து சிறந்த மந்திரத்தைக் கூறினேம். மரணதர்மமற்றவனே! எங்கட்கு மர்த்திய போஜனத்தை யளிப்பாயாக எனக்கும், எனது புத்திர பௌத்திரர்களுக்கும் சுகத்தைத் தருவாயாக—(எ-று.) மருத்துக்கள் நாற்பத்தொன்பதின்மரின் வரலாற்றைப்பற்றிப் பின்வரும் கதை ய

மண்டலம் 1 சூக்தம் 114.

ஸாயணர் எழுதியிருக்கிறார்:—முன் ஒரு காலத்தில் இந்திரன் அசுரர்களை ஜயித்தான். அப்பொழுது அசுரமாதாவாகிய திதி இந்திரனைக்கொல்லும் வலிமைவாய்ந்த புத்திரனைப்பெறவெண்ணித்தபஸினால் புருஷனை யொத்த கருவைத்தரித்தாள். இவ்விருத்தாந்தத்தை யிந்திரன் அறிந்து வச்சிராயுதத்தைக் கையிற்றாங்கி ஸூக்ஷ்மரூபத்தோடு அவளுடைய வயிற்றுக்குள் நுழைந்து அந்தக் கருவை ஏழாக வெட்டினான். பின்பு ஒவ்வொரு துண்டையும் எவ்வேழாகக்கண்டித்தான். அந்த 49 துண்டுகளும் கருப்பத்தினின்று நழுவிக் கீழ்விழுந்து அழுதன. அந்த ஸமயத்தில் லீலார்த்தமாகப் போய்க்கொண்டிருந்த பார்வதி பரமேச்வரர்கள் இவர்களைக் கண்டார்கள். மஹேசனைப்பார்த்துப் பார்வதி, 'இந்த மாம்ஸத்துண்டங்கள் தனித் தனி பிள்ளைகளாகட்டும். இப்படி நீ செய்தால் எனக்குப் பிரீதியாயிருக்கும்'. என்று சொன்னாள். அம்மஹேச்வரனும் அவர்களை ஸமான ரூபம், ஸமான வயஸ் ஸமான அலங்காரத்தோடு கூடப் புத்திரர்களாகச் செய்து கௌரியினிடத்து 'இவர்கள் உன் புத்திரர்களாக விருக்கட்டு' மென்று கொடுத்தான். அவர்களே நாற்பத்தொன்பது மருத்துக்களாம். இது ஓர் கால்கணிகவழு (Anachronism). பார்வதி பரமேச்வர ஸம்பிக்கை ரிக்வேதகாலத்திலில்லை.

7. மூத்தோனே,யுருத்திரனே,வஸதக்கற்க;வினையோனைமுடிவாக்கற்க;
ஏத்தாருமெய்யதுக்காளையினைக்கொல்லல்;கருவேய்ந்தமாதை
மாய்த்தொழிக்கல்;தந்தையினைச்செகுக்கற்க;தாயினையும்வாட்டிவீட்டல்
சாய்த்துவதைபுரியற்கஃபாருமெமதுலகிலச்சற்றுந்தானே.

(இ-ள்.) ருத்திரனே! வயது முதிர்ந்தவனையும், வயதிற்சிறியவனையும், மத்திமவயதுள்ளவனையும், கருப்பஸ்திரீயையும், தந்தையையும், தாயையும், எமக்குப்பிரியமான எமதுடலையுங் கொல்லாதொழிக— எ-று) உகூந்தம், உகூநிம் என்பவற்றிற்கு முறையே வளரும் சிறுவனையும் வளர்ந்த பெரியவனையும் என்று பொருள் கூறுவர் மேஞ்ட்டர்சிரியர், ஆனல்ஸாயணர் உரையையே இந்நூல்சிரியர் பின்பற்றியுள்ளார்.

8. புத்திரரை, யவர்தமது தந்யர்தமை, மாந்தரெமைப் பொருந்துவோரை,
நத்துமெமதரக்களினை., யசுவமதை, நீ சற்று நலிக்காதேய்க;
தத்துபுகழ் வீரர்களை யுனக்கெழுந்த கோபமதிற் சதித்திடற்க;
கொத்தமரு மவியோடு, முருத்திரனே, யுனையென்றுங் கூவுவோமே.

(இ-ள்.) ருத்திரனே! எமது புத்திரர்களையும், பவுத்திரர்களையும், எம்மைச்சார்ந்த மனிதர்களையும், எம்து பசுக்களையும், குதிரையையும் இம்சிக்காதே. சௌரியம் பொருந்திய வீரர்களை உன்னுடைய கோபத்திற்கொன்று விட்டாதே. அவிகளோடு உன்னையெப்பொழுதுங் கூப்பிடுவோம்—(எ-று.)

9. மாருதர்தந் தந்தையுன்பாற் பசுமேய்ப்பான் மானமறை வகுத்தளித்தோன்;
ஏருலவுஞ் சுகத்தினை நீ யெமக்கமைக்க; நன்மதிசாரெண்ணம்வாய்ந்து
சீருலவுமுத்தமமா முன்னரிய நன்கொடைகள் சிறக்கும்; உன்றன்
கூருதவி தருகவென வெக்காலு முன்றுணைக்கே கூப்புவோமே.

(இ-ள்.) மருத்துக்களின் தந்தையாகிய ருத்திரனே! பசுமேய்ப்பவன் காலையில் எஜமானனிடத்திலிருந்துபெற்ற மாடுகளைச் சாயந்திரம் ஜாக்கிரதையாக வவனிடத்து மீட்டும் ஒப்புவிப்பது போல், யான் உன்னிடத்திலிருந்து (எல்லாம் உன்னு அருளினால்) பெற்றமந்திரங்களை மீண்டும்

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

உனக்கே ஸமர்ப்பித்தேன். நல்ல ஸுகத்தை யெங்களுக்கமைப்பாயாக. நல்ல புத்தியோடு சிறந்த உத்தமமான உனது சுகக்கொடைகள் சிறந்து நிற்கும். உனது துணைக்காகவே நாங்கள் உன்னை வணங்குவோம்—(எ-று)

(வேறு)

10. பகைவரை நலிக்கும் வீர, பசுவினை மாந்தர் தம்மை
மிகைபடக் கொல் படைகள் மேவுக தூரம்; எங்கட்
ககவுக வுன்ற னன்பு மாசியுஞ் சுகமும்; தேவ,
தகவுறு மீரிடத்துத் தஞ்சமும் தர லெம்மக்கே.

(இ-ள்.) சத்துருக்களை வாட்டும் வீரனுமாயிருத்தினை! எங்கள் பசுக்களையும், மாந்தரையுங்கொல்லும் ஆயுதங்கள் எங்களை விட்டு வெகுதூரம் செல்லட்டும். உனது அன்பும், ஆசீர்வாதமும், சுகமும் எங்களையடையட்டும். தேவனே! (வான் பூமி யென்னும்) இரண்டிடங்களிலுமுள்ள உனது புகலிடத்தை எங்கட்களிப்பாயாக—(எ-று.)

11. சேவகன், மருதர் சூழ்ந்த வருத்திரன் றுணையைச் சேரக்
கூவிளி யுரைத்தோங் கேட்க; கூர்ந்திடு மெமதிப் போற்றைத்
தாவரு புவியும் வானுஞ் சிந்துவு மதிதிதானு
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) மருத்துக்களாகிய தனது புத்திரர்களோடு கூடிய வருத்திரனது துணையை விரும்பி யழைத்ததை யவன்கேட்கட்டும். இத்தத் துதியைப் பூமிமுதலிய அறுவருங்காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 6.

115. மண்டலம். 1. அநுவாகம். 16. சூக்தம். 10.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி குத்ஸன்; வடமொழிச் சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: ஸூர்யன்.

(வேறு.)

1. அக்கினி வருணன் மித்ர னுவர்களின் கண்ணுந், தேவர்த்
தொக்க சித்திர வொளியி னுருவமாஞ், சூரன், ரோன்றி
யிக்குவலயம் வா னந்தரிட்சமு நிறைந்த, னேட்ட
மிக்க நல்லுயிர்க்குந் தாவரங்கட்கு மாத்துமாவே.

(இ-ள்.) அக்கினி, வருணன், மித்திரன் என்னு மூவர்களின் கண்ணு வானும், தேவர்களது ஆச்சரியமான தேஜஸெல்லாங் கூடியவுருவமாவானும், ஸ்தாவர ஜங்கம உயிர்களுக்கு ஆத்மா போன்றவனுமான சூரியன் உதித்துப் பூமி, வானம், அந்தரிட்சம் என்னும் இம்மூன்றிடங்களிலும் நிறைந்தான்—(எ று.) ஓட்டமிக்க நல்லுயிரென்றது ஜங்கம வுயிர்களை.

2. எந்திய வவியோர் பன்னி யிணைந்து மங்கல கன்மத்தை
வாய்ந்த நற்பலனுக்காக வய்க்கு மவ்விடத்துச் செல்லுங்
காந்திசா ருஷையாந் தேவிதனைக் கதிரவன், வனப்பிற்
காந்தபிற் காளைசெல்லுங் கணக்கினிற், றொடர்ந்து செல்வான்.

மண்டலம் 1 சூக்தம் 115.

(இ-ன்) கையில் அவிப்பொருளைத் தாங்கிய யஜமானர்கள் தங்கள் பத்தினிகளோடு நல்லபலன் கிடைக்கும் வண்ணம் அக்கினிஹோத்திராதி மங்கல்கர்மங்களைச் செய்யுமிடங்களை நோக்கிச் செல்லும் ஒளிபொருந்திய உஷஸாகிய தேவியினிடத்து, அழகிய ஸ்திரீயின் பின்செல்லும் காளையைப் போலத்தொடர்ந்து செல்லுவான்—(எ-று.) யுகாணி வெகுகாலமாக என்றும், பத்தினியோடு சேர்ந்து இருவராயென்றும், இரண்டுபொருள் கொள்வதுண்டு, அல்லது கல்பை முதலிய உபகரணங்களோடு என்று பொருள் படித்துக் கிருஷியாகிய மங்கலகர்மத்தைப் பலன்பெறச்செய்யும்என்றுகொள்வதும் மற்றொரு வகையாம்.

3. சித்திர நீலவன்னஞ் சிறந்தன, வெற்றி யாரப்பின்
மத்த மோங்குவன, வெந்தம் வணக்கமார் தந்திசுமக்க
வொத்தன, வென்றூழ் மாக்கள் மங்கல முற்று வான்மோட்
டித்தரை யேறி வானம் புவியினை யுடனே சுற்றும்.

(இ-ள்.) அழகிய நீலநிறத்திற் சிறந்தவைகளும், ஜயகோஷத்தோடு மதங்கொண்டவையும், எங்களுடைய வணக்கத்தோடு கூடிய ஸ்துதிகளைச் சுமப்பவையுமான சூரியனுடைய உபய குதிரைகளும் மங்கலப்பண்பையடைந்து விண்ணின் உச்சியிலேறி வானம் பூமிகளைச் சுற்றும்—(எ-று.) 'ஏதக்வா. இத்யேத துபயமச்வ நாம' என்றும் ஏதம் ஏதவ்யம் கந்தவயம் மார்க்கம் கந்தாரோச்வா: ஏதம் சபல வர்ணம் நீலவர்ணம்வா ப்ராப்நுவந்தோ அச்வா:' என்றும் ஸாயணர் உரை கூறுவர். அதாவது ஸூர்யனது இரண்டு குதிரைகளென்றும், மார்க்கத்திற் செல்லும் இரண்டு குதிரைகள் அல்லது நீலவர்ணக்குதிரைகளென்றும் பொருள்.

4. சூரியன் கடவுட்டன்மை மகிமையுஞ் சொல்லற் பாற்றாம்;
பாரியல் கருமநாப்பட் பரந்த தன்கதிர்ச் சுருட்டும்;
பேரியன் மாவைத் தேரினின் றவிழ்த்திட்ட பின்னர்
ஏரிய லியாவின்மீதும் போர்வையை யியைப்பா ளல்லே.

(இ-ள்.) ஸூர்யனது தெய்வத் தன்மையும் மகிமையும் சொல்லுதற்கித்தன்மையனவாம். உலகத்திற் கருமங்கள், நடந்து கொண்டிருக்கும் போதே மத்தியில் தனது கதிர்களை அச்சூரியன் சுருட்டிக்கொள்ளுவான். அவன்தனது குதிரைகளினைத் தேரினின்று மவிழ்த்து விட்டவுடனே, இரவு எல்லா வற்றின்மீதும் தனது இருட்டாகிய போர்வையைப் போட்டு விடும்—(எ-று.)

5. வானத்தின் மடியிற் சூரன் மித்திரா வருணர் பார்க்குந்
தானத்திற் றன்னுருவைத் தயக்குவான்; அவனன்றன் பாய்மா,
மானத்தி, னந்தமெய்தா வவன்வலி சுமந்து, சோதி
தானெங்க ளோர்கால், மற்றோர் சமயங் காரியையத், தாங்கும்.

(இ-ன்.) வானத்தின் சமீபத்திலும், மித்திராவருணர்கள் பார்க்கு மிடத்திலும்சூரியன்தனது ரூபத்தை அல்லது எல்லாவற்றையும் விளக்கும் சோதியைப்பிரகாசிக்கச் செய்வான். அவனது குதிரைகள் பெருமையோடு ஸநாதனமான வவன்வலிமையைத் தாங்கிப் பகலாகிய சமயத்தில் அச்சூரியனது சோதிதோன்றும் வண்ணமும், இரவாகிய மற்றொரு சமயத்து இருளானது பொருந்தும் வண்ணமும் அச்சூரியனைச் சுமந்து செல்லுகின்றன—(எ-று.) என்னசொல்வது அவன் மஹிமைதான் யென்று சூரியனைத் துதித்தபடி யென்பார்ஸாயணர்.

அஷ்டகம் 1. அத்தியாயம் 8.

6. தேவர்கா லின்று சூர ஜுதிக்கு மக்காலைச் சேர்ந்த
பாவமும் பழிப்பு நீக்கிப் பரித்திடீ; ரெமதிப் போற்றைத்
தாவரு புவியும் வாஜுஞ் சிந்துவு மதிதிதாஜு
மேவு மித்திர வருணர் தம்மொடு விழைந்து காக்க.

(இ-ள்.) தேவர்களே! (அல்லது ஸாயணருரைப்படி பிரகாசம்பொருந்திய சூரியகிரணங்களே!) இன்றைக்கு ஸூர்யஜுதிக்கும் வேளையிற் எங்களைச் சேர்ந்த பாவம் பழிப்புக்களை நீக்கி யெங்களைப் பரிபாலிப்பீர்களாக. எங்களுடைய இத்திதியைப் பூமி முதலிய அறுவர்களுங்காக்கட்டும்—(எ-று.)

வருக்கம் 7.

116. மண்டலம் 1. அநுவாகம் 17 சூக்தம் 1.

25 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ககூீவான்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அசுவினிகள்.

1. விமதன்றன் மனைந்தக்காளை மேவலர்க் கரியதேரிற்
சுமததவங் தளித்த நாஸத்தியர்ப் பொருட் டென்றுமத்தை,
யமைதரு தருப்பைபோல வொழுங்குற வமைத், தப்போற்றைச்
சயிரண னடித்த மேகச் சாயலி னளப்புவேனே.

(இ-ள்.) சத்துருக்களால் அடையமுடியாத தேரில் விமதன்றன் பார்யையைத் தூக்கிக் கொண்டுவந்தளித்த நாஸத்தியர்களுக்காக (அசுவினிகளுக்காக)த், தருப்பையைபோல் யொழுங்காக வைப்பதுபோல, ஸ்தோமத்தையேற்படுத்தி, அந்தஸ்தோமத்தை வாயுவானது மழைதாங்கிய மேகத்தை அங்கு மிங்கு மனுப்புவது போல அனுப்புவேன்—(எ-று.) சமிரணன்=ஸமீரணன் என்பது இடைகுறைந்து. வாயுவென்றபடி. நாஸத்தியா பொய் புகலாதவர், அசுவினிகளின் பெயர்.

2. வலிச் சிறைத் கதி விரைந்த வாகனங் கொண்டோ, தேவர்
கெலிப்புறத் தூண்டியோ, உம் அத்திரி யமன் கிளர்த்தும்
மலைப்புறு போரி னூற்றுப் பதின்மரைப் பந்தயத்தி
னலித்து; வெற்றி, நாஸத்தியவர்காள், நண்ணிற்றுலோ.

(இ-ள்.) நாஸத்தியர்களே! (அசுவினிகளே!) பலமும், வேகமாகச்செல்லுஞ்சிறகுங்கொண்ட வாகனங்களின் உதவியினாலோ, (இந்திராதி) தேவர்கள் வெற்றிகொள்ளத் தூண்டியதனாலோ, உமது கழுதை, பிராஜாபதியாகிய யமன் கிளப்பிவிட்ட யுத்தத்தில் ஆயிரம்பேரையும் ஜயித்துப் பந்தயத்தில் வெற்றியடைந்தது—(எ-று.) இப்பந்தயத்தைப்பற்றி மண். 1. சூக். 34. செய். 5-ல் விஸ்தாரமாக கூறியிருப்பதைக்காண்க. அத்திரி, கழுதை.

3. துக்ரன் புஜியன் றன்னைத், தொக்கதன் றனத்தை நீத்துத்,
துக்கமோ டிறந்த லோபி தூணைப்ப, மூந்நீரின் விட்டான்
அக்கண மவனை யுந்த மருட்கலத், தசுவினீர்காள்!
எக்குவித் தநகத் தம்பர் விசும்பினூ டெடுத்துச்சென்றீர்.

மண்டலம் 1 சூக்தம் 116.

(இ-ள்.) ஈண்டு ஒரு கதையுண்டு. (துக்கிரன் என்று ஒரு ராஜரிஷி அச்வினிகளுக்குப் பிரியமானவனுயிருந்தான். அவன் தீபாந்தரத்திலிருந்த சத்துருக்கள் தனக்கு வெகு தொந்தரவளித்துக்கொண்டிருந்தவர்களே. ஆகையால் தன் புத்திரனுகிய புஜ்யனைச் சேனையோடும் கப்பலிலனுப்பினன். அக்கப்பல் சமுத்திரத்தில் வெகு தூரஞ் சென்ற பிறகு காற்றுவடிக்கப்பட்டு உடைந்துபோயிற்று. அப்பொழுது அந்த புஜ்யன் சீக்கிரமாக அச்வினிகளை ஸந்தோஷப்படுத்தித் துதித்தான். அவ்வசுவினிகள் அப்புஜ்யனையும் அவனது சேனையோடு தமது கப்பலிலேற்றிக்கொண்டு மூன்று நாள் பகலும் இரவும் பிரயாணஞ்செய்து, அவனது தந்தையாகிய துக்கிரனிடத்துக் கொண்டுபோய் விட்டார்கள் என்பது. இவ்வர்த்தம் இது முதல் மூன்று கவிகளாற் சொல்லப்படுகிறது.) தனது செல்வத்தை விட்டுத் துக்கத்தோடு இறக்கும் லோபியைப்போலத் துக்கிரன் தன் மகன் புஜ்யனைச் சமுத்திரத்தின்மேலனுப்பினன். அசுவினிகளே! அப்பொழுது அப்புஜ்யனையுங்களுடைய கப்பலில் ஏற்றிக்கொண்டு தண்ணீர்க்குமேல் அந்தரமார்க்கத்திற் றாக்கிச்சென்றீர்கள்—(எ-று.) அசுவினிகளது கப்பல்கள் தண்ணீருக்குமேல் அத்தண்ணீரில் நனையாமற் சென்றன என்று, கூறப்படுகிறது. அவற்றிற்குச் சிறகிருந்ததாகவுந்தெரிகிறது.

4. மூன்றிராப் பகல்கண்மூன்று முடுகிய பதங்கங்கண் மேற்
ரூன்றி, மெய்யுரைப்பீர், புஜ்யற் றாக்கித் தண்ணீர்க் கரைத்த
ஞன்ற வாரிதி தீரத்தே யணைத்துத் தேருருள்களூர்று
சான்ற முத்தேரி னூறு சடில மேய்ந்தவிற் றந்தீரே.

(இ-ள்.) நாஸத்தியர்களே! மூன்று இரவுகளும் பகல்களுமாகின்ற கோடு கூடிய நாவாய்களிற் பிரயாணஞ் செய்து, புஜ்யனைத் தூக்கிய நூறு சக்கரங்களும் ஆறுகுதிரைகளுங் கட்டிய மூன்று தேர்களிற்சமமாகச் சொல்லுவந்து நீர்க்கரையர்கிய சமுத்திர தீரத்தில்விடுத்தீர்கள்—(எ-று.)

5. நிலையின்றிப் பற்றுமின்றி யாதரவின்றி நின்ற
சலநிதி மீது வீர பராக்கிரமந் தயங்க
நிலைய நூறு கோலா னெட்டிய நாவாயேற்றி
யிலமருவிட விடுத்தீர் புஜியனை யசுவினீரே.

(இ-ள்.) அசுவினிகளே! நிலையற்று ஆழமாய்ப்பற்றிக்கொள்வதற்குச் சார்தலொன்றுமில்லாமல், ஆதரவுமில்லாமலிருந்த சமுத்திரத்தில் உமது வீர பராக்கிரமமானது விளங்க, நூறுகோலாற்றள்ளப்பட்ட கப்பலில் புஜ்யனையேற்றி அவனது வீடு சேரும்படி செய்தீர்—(எ-று.) (Wilson) வில்ஸன் என்பவர், 'இக்கவிகளில் சொல்லப்படும் சமுத்திர யாத்திரை அவ்வளவு தெல்லியமாக விவரிக்கப்படவில்லை.' வென்பார்.

வருக்கம் 8.

6. கொல்லுறுப் பரியோன் பேது கொள்கெனக் கொடுத்த வெண்மா
மல்லுற வெற்றி யென்றும் வயக்கியது; உங்கள் வண்மை
சொல்லுறு மகிமைத் தாமால்; அசுவினீர், பேது தோய்ந்த
வெல்லுறும் வேக மாவு மெங்களுக்கு விளிக்கற் பாற்றோ.

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

(இ-ள்.) அசுவினிகளே! கொல்லமுடியாத குதிரையோடு, கூடிய (அகாச்வஞ்ஞிய) பேதுவென்னும் ராஜரிஷி பெறும் வண்ணம் நீங்கள் கொடுத்த வெள்ளைக் குதிரை எப்பொழுதும் ஜயத்தையே புரிந்தது. உங்க ளுடைய அந்தக்கொடை கீர்த்திபொருந்தியதும் பெருமைவாய்ந்ததுமாம். பேதுவடைந்த அந்த வேகமார்ந்த வெற்றிக் குதிரையும் எங்களாற் போற்றத் தகுந்தது—(எ-று. 'பேது வென்ற ஒரு ராஜரிஷி அசுவினிகளே ஸந்தோ ஷப்படுத்திஞன் அதிற் நிருப்தியடைந்து அவர்கள் அவனுக்கு ஒரு வெள்ளோக்குதிரையை யளித்தார்கள். அக்குதிரையும் மிகுந்த வெற் றியை யவனுக்களித்தது.' என்பது கதை, அகாச்வனென்பதற்குத் துக்கி டக் குதிரையோடு கூடியவனென்பார் மேனுட்டாசிரியர்.

7. வீரர்காள்! கட்சீவானன் பச்சிரன் மகனுக்காகப்
பேரிய லறிவை யீந்தீர் பெரிதவன் றுதிக்கு மெச்சி;
ஆருநற் சுராவை தூறு கும்பத்தி னமைத்தீர்; உந்தஞ்
சீரிய மாக்குரத்தைச் செப்பு நெய்யி னேய்வித்தே.

(இ-ள்.) வீரர்களாகிய அசுவினிகளே! பஜ்ர கோத்திரத்து (அங்கீரஸ கோத்திரத்துவந்தவனுன ககக்ஷீவானனுக்காகப்போறிவையளித்தீர்கள். அவ னுடைய ஸ்தோத்திரத்துக்கு உவந்து, உமது குதிரையின் காற்குளம்புகளி லிருந்து, ஸோமம்பிழியுந் தோலின் வழியாக ஸோமத்தை யூற்றுவதுபோல ஆற்றி நூறு (பல) குடங்களே (உமது யாகத்தின்பொருட்டு ஸௌத்தாமணி யென்னுங்கர்மஞ் செய்பவர்களுக்காக) நிரப்பினீர்கள்—(எ-று.)பஜ்ரன் ஆங் கிரஸ கோத்திரத்தவனே. ஒருகாலத்துக் காட்சீவான் அறிவு மழுங்கிக் கிடந்தபோது அசுவினிகளே வேண்ட அவர்கள் ஸ்தோத்தரிக்கப்பட்டு அவ னுக்குச்சிறந்த ஞானத்தை யளித்தார்களென்பது கதை. கட்சீவானைப்பற்றி மண். 1. சூக். 51. செய். 13. பார்க்க. காற்குளம்பிலிருந்து ஸோமம் வடிந் தது, ஸோமம் பிழியுந் தோலினின்று வடிவது போலிருந்தது எனக்கொள்க. இதுஉப்தோயமா (குறையுவமை). செய்யுளிற்றேரெலென்னுது நெய்யி னென்றார் நற்காலம் கள்வடிப்பவர்கள் அதனை யுபயோகிப்பது பற்றி.

8. கொழுந்துவிட் டெரியுந் தீயின் கொதிப்பினை யிமத்காலாற்றி,
வழங்கினீர் வளஞ்செறிந்து கொழுவிய வண்டி தன்னை;
அழுங்கியே பொறியிற்பட்ட வத்திரிதனைச் சுகத்துக்
செழுங்குடிக் கணங்களோடு, மசுவினீர், சேர்த்தீரன்றே.

(இ-ள்.) அத்திரியகப்பட்டுக்கொண்டிருந்த பொறியிற் கொழுந்துவிட்டெரி யும் அக்கினியின் சூட்டை இமத்தால் (உதகத்தால் அல்லது மழைநீராலென் பார் ஸாயணர்.) மாற்றி யவனுக்கு ஸார புஷ்டியோடு கூடிய ஆகாரத்தை யளித்தீர்கள். மனவருத்தத்தோடு அசாரது யந்திரத்தில் அகப்பட்டுக் கொண்ட அத்ரிரிஷியை, யவனது குடும்பத்தாரோடு (அல்லது இந்திரிய ஸமூகங்களோடென்பார் சாயணர்) அசுவினிகளே! காப்பாற்றிச் சுகத்தி லிருத்தினீர்கள்—(எ-று.) அத்ரிரிஷியை யொருகாலத்து தூற்வாயில் களுள்ள ஒரு பீடாயந்திரக்கிரஹத்தில் அசுரர்கள் அடைத்துத் துஷ்டத்தினி யால் வருத்தினர்கள். அப்பொழுது அவ்விருடியிஞற்றிக்கப்பெற்ற அசு வினிகள் அந்தெருட்டைத் தண்ணீரிலுலாற்றி அப்பொறிக்கண் கலங்காத் இந்

மண்டலம் 1 சூக்தம் 116.

திரியவர்க்கங்களோடிருக்கும்படி செய்தார்கள்.' என்பது கதை. பீடாயந் திரக்கிரஹம் என்றது தீப்பொறியை. துஷ்டாக்கினி யென்பதற்கு இரண்டு பொருளுண்டு. உமியிற் பற்றவைத்த நெருப்பு என்பது ஒன்று. முற்காலத்தில் ஒரு மனிதன்மேல் வைக்கோற் புரிகளைக் கூற்றி நெருப்பு வைக்கும் ஒரு வழக்கம் உண்டு. அதுவும் துஷ்டாக்கினியேயாம். இவற்றில் எவ்வகையேனுங் கொள்க.

9. அடிப்புறந் தலை மேலாகத் தலைப்புறங் கிழக்கு நோக்கப்
பிடித்தனிர் கூபம்; நாஸத்தியர்களே, கோதமன்றன்
குடிச்சனந் தாகந் தீரக் குடிஞைகடாகத்தோடு
மடித்தன வோட்டஞ் சார்ந்த வாயிரந் தனங்களோடே.

(இ-ள்.) நாஸத்தியர்களே! அடிப்புறம் மேலாகவும், மேற்புறம் கீழாகவும் ஒரு கூபத்தைக் (கோதமனுக்காக) தூக்கிப்பிடித்தீர். கோதமவமசத்தவர்கள் தாகந்தீரும் வண்ணம், ஆயிரவகையான செல்வங்களோடும் அக்கூபத்தினின்று நீரோட்டங்கள் பெருக்கெடுத்து ஓடின (எ-று. அக் கூபம் மழை முகிலாக விருக்குமென்பார் மேனாட்டாசிரியர். தண்ணீரில்லாத ஒரு பாலைப்பிரதேசத்தில் கோதமரிஷி தினிந்தபோது அவ்விருடிக்காக வேறிடத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒரு கூபத்தைப் பேர்த்து அவரினிருக்குமிடத்து வரும்படி செய்தார்கள். அக் கூபம் அவர்களது ஸ்நானபாநாதிகளுக்கு உபயோகமாகும்படி தலைகீழாக நிறுத்தினர்கள். மண். 1. சூ. 15. செய். 11 ல் இச்செய்கை மருத்துக்கள் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

10. மெய்யுரைத் தற்புதத்தை யாற்றுவீர்! வயதின் மேம்பட்
டெய்யுறு சியவனன் றேகப் போர்வையைக் கவச மெய்ப்ப
வய்யென வரித்தீர், மக்கள் யாவரு நிராகரித்தும்
மெய்யிளமை யினை மீட்டுக் கன்னியர் பதியாச் செய்தீர்.

(இ-ள்.) நாஸத்தியர்களே! தஸ்ராக்களே! வயது முதிர்ந்து சுகையையும் றிலேக்குஞ் சியவனன் என்னும் ரிஷியின் தேகப்போர்வையைக், கவசத்தை வீரர்கழற்றுவதுபோலக், கழற்றுவித்து, அவனுடைய புத்திர் முதலியோர் அவனைத் தள்ளிவிட்ட காலத்தும் அவனுக்கு மீண்டும் யௌவனத்தையளித்துக் கன்னியர்களின் பதியாகச் செய்தீர்கள்—(எ-று.) தஸ்ரா வென்பதற்கு அற்புதமாற்றுவீர் என்பார் மேனாட்டாசிரியர் ஆனற் பார்க்க அழகாய் விருப்பவர்களே யென்பார் ஸாயணர். பூர்வம் சியவனன் என்னும் ரிஷி மனைநிலைமூப்பினுல் தேகம் மலினப்பட்டுப் புத்திரர் முதலியோராற் றள்ளப்பட்டு அசுவினிகளைத் துதித்தான். அவ்வசுவினிகள் அவனது சுவரத்தன்மையை நீக்கி அவனுக்கு மீண்டும் யௌவனத்தை யளித்தார்கள் என்பது கதை.

வருக்கம். 9.

11. வந்தனன் றுன்ப மோர்ந்து, புதையலே மானக் கூபத்
தந்தினின் றவனைத் தூக்கி புதவிய ஞான்றுஞ் செய்கை
வந்தனைப் புகழ்ச் சிறப்பிற் றுற்ற நன்மதியின் ஞானம்
மூந்துறு நரர்கா ளுண்மை மொழியுறு மசுவினீரே.

(இ-ள்.) வித்வான்ஸர்களே! நரர்களே! ஆரோக்கியத்தின் தேதாக்களே! நாஸத்தியர்களே! அசுவினிகளே! வந்தனன் என்னும் ரிஷியின் துன்பத்தினைக்கண்டு அவனைக் கிணற்றினின்றும் புதையலெடுப்பதுபோலெடுத்து

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

விட்ட உமது செய்கை வந்திக்கவும், புகழவும், தகுந்த சிரேஷ்டத்தோடு கூடியதாம்—(எ-று.) வந்தனன். மண். 1 சூக். 112. செய். 5-ல் நோக்குக.

12. பரிச்சிரங் கொண்டதர்வன் புத்திரன் தத்தியச்சன்
உரித்தென மதுவின் வித்தை யுரைத்தபோ தவன் சிரத்தைப்
பொருத்திய வும்து வீரச் செய்கைப்ப, ரர்கள், மேகம்
வருத்திய மழையிடியின் வழங்குவேன் றனங் கொள்பாக்கே.

(இ-ள்.) ரர்களே! (அசுவினிக்களே!) அதர்வணன் புத்திரனிய தத்தியச்சன் (ததீசி) குதிரைத் தலையைக்கொண்டு மதுவித்தையைச் சொன்ன போது கேட்டு மீண்டும் அவனது சிரத்தைப் பொருத்திய உம்முடைய வீரச் செய்கையை, மேகம் மழைக்கு முன் வரவிடும் இடியைப்போலத் தனலாபார்த்தம் சொல்லுவேன்—(எ-று.) தத்தியச்சன் கதையை மண். 1, சூக். 84 செய் 13 ற்பார்க்க. அத்தலேடு பின் வருவதையும் கூட்டுக. 'இந்திரன் ததீசிக்கு மதுவித்தை ப்ரவர்க்கவித்தை யென்னும் இரண்டையும் உபதேசித்து இவற்றைப் பிறருக்குச்சொன்னல் சிரச்சேதஞ் செய்து விடுவதாகச் சொன்னன். பிற்பாடு அசுவினிகள் ஒருகுதிரையின் தலையைவெட்டி, அவனது தலையையும் வெட்டிப்பத்திரப்படுத்தி, யவனது உடற்குறையிற் குதிரைத் தலையை வைத்தார்கள்; அத்தலையின் உதவியைக்கொண்டு ததீசி அவ்வித்தைகளின் மந்திரங்களையும் ப்ராஹ்மணங்களையும் சொல்ல அசுவினிகள் பெற்றார்கள். உடனே இந்திரன் தெரிந்து அக் குதிரைத் தலையை வெட்டினன். அசுவினிகள் உடனே, ஏற்கனவே பாதுகாத்து வைத்திருந்த அவனது சொந்தத் தலையை மறுபடியும் ஒட்டவைத்தார்கள்' என்று சாட்யாயினவாஜஸனேயிகளிற் சொல்லப்படுகிறது.

13. மெய் யுரைப்பவர்காள்; கைகண்மிகுந்துளீ., ரும்பாற்பத்தி
செய்யும் வத்திரிமதியுஞ் சிறந்த பேர் மகத்துப்பல்கா
லெய்யுரு தெழைத்த காலை யவள்குறைக்கிரங்கிப் பொன்னர்
கையனை யளித்தீ, ராணைகதழ்வற, வசுவீன்மீரே.

(இ-ள். காலத்தியர்களே! வெகு புஜத்தோடு கூடியவர்களே! அசுவினிகளே! உம்மிடத்துப் பத்திபண்ணிய வத்திரிமதியென்னும் ஒரு ராஜரிஷியின் புத்திரி, யக்ஞத்தினிட்டத்துப் பலதாம் உம்மை யழைத்தபோது, குருவினுடைய வசனத்தைச் சீடன் எதிர்பார்த்தத்தோடு கேட்பதுபோல்கேட்டு அவளுடைய குறைவுக்கிரங்கி, அவளுக்கு ஹிரண்யஹஸ்தன்என்னும் புத்திரனைத் தந்தீர்கள்—(எ-று.) நிஸர்க்கஸுண்டேரவத்திரிச்சு என்பதிகண்டு. வத்திரிமதி, பண்டனைப் புருஷனுடையவள். பொன்னர்கையன், ஹிரண்யஹஸ்தன், புத்திரனுடைய நாமம். வத்திரமதியின் பர்த்தாவும்ஸகனென்னும் அதனற் புத்திரனுக்காக அவள் அசுவினிகளை வேண்டினளென்றும் அவனது வேண்டுகோளைக்கேட்டு அவளுக்குஹிரண்யஹஸ்தன் என்னும் புத்திரனை யருளினர்கள் என்றும் கதை.

14. பல்கர முடையீர், மெய்ம்மை பகருவீர், ரர்கள், கோனுய்
மெல்லு மூர்க்குருவி தன்னை விடுவித்தீர்; கவி களிக்கச்
செல்லலை நீக்கிப் பூன்ற பார்வை சேர்ந்திடு மவ்வண்ணம்
மல்லலி னவற்களித்தீர் வழங்கு தண்ணளி யிகுந்தீரே.

மண்டலம் 1 சூக்தம் 116.

(இ-ன்.) பலபுஜங்களோடு கூடியவர்களே! (பலரைப்பரிபாலிப்பவர்களே யென்றும் பொருள் கூறுவர் ஸாயணர்) காஸத்தியர்களே! நரர்களே! காட்டுநாய் வாயிலிருந்து ஊர்க்குருவியை விடுவித்தீர்கள். (ரிஜிராசுவனுகிய) கவி (ரிஷி) களிக்குமாறு, அவன் மாட்டுக் கிருபைகூர்ந்து அவனுக்குப் பூரணமான பார்வையை யளித்தீர்கள்—(எ-று) கவி, (ரிஷி.) இக்கவி ரிஜ்ராச்வன் என்று மேல் மண். 1. சூக். 112. செய். 8-ம் கூறப்பட்டது. இவன் விருஷாகிரன் புத்திரன். இச் சூக்தம் 16 வது செய்யுளிலும் இவன் பெயர் வருகிறது. யாஸ்கர் 'மீண்டும் மீண்டும் வரும் ஒவ்வொரு நாளும்நடக்கின்றன வென்பார். உதயஸைச் சூரியன் வாயினின்று மீட்பி சென்றுபொருள் கொள்ளுவார். மண் 1. சூக். 112. செய். 8. நோக்குக.

15. மறமுறு கேலன் போரின் மாற்றலர் செகுத்துக், கானப்
பறலையின் நிறகு போலப், பறித்த விச்சுபலைக் காற்குத்
திறமொடு மயக்கால் சேர்த்துத் திரப்படுத்தினிர் நிசிக்கண்
மறுதினை நடக்கு ஞாட்பின் மகிழ்வொடு நடைகொண்மாரே.

(இ-ன்.) கேலனுடைய யுத்தத்திற் சத்துருக்கள் பட்சியின் சிறகை வெட்டியதுபோல வெட்டி யெறிந்த விச்பலையின் காலுக்கு இரும்பாலான கணுக்காலைச் சேர்த்து மறுநாள் நடக்கும் போரில் அவள் நடக்கும் வண்ணம் செய்தீர்—(எ-று:) விசபலை, விச்சுபலை இரண்டும் விச்பலையைக் குறிக்கும். இவள் கதையை மண். 1. சூக். 112. செய். 10-ல் நோக்குக.

வருக்கம் 10.

16. காட்டுப் பெண்ணாய்க்கு வேண்டிக் களிப்புடனூறு மேட
மூட்டிய விரிஜ்ராச்வ னெளியினைப் பிதா கெடுத்தான்;
ஈட்டுநல் லற்புதத்தீர், மெய்ம்மைமீர், வைத்தியர்காள்,
பூட்டினீ ரவர்க்குப் பூர்வை, பூரணவிழி தந்தீரே.

(இ-ன்.) காட்டுப் பெண்ணாய்க்கு நூறு ஆடுகள் பலிக்களித்த ரிஜ்ராச்வனுடைய பிதா அவனது கண்ணைக்கெடுத்தான். தஸ்ராக்களே! (அற்புதச் செய்கை செய்பவர்களே!) காஸத்தியர்களே! (தேவ) வைத்தியர்களே! அவ்விரிஜ்ராச்வனுக்குப் பார்வையையளித்தீர்கள்-(எ-று. இக் கதையை மண். 1 சூக். 112. செய். 8-ல் நோக்குக. அக் காட்டு நாய் வேஷம் போட்டு வந்தது அசுவினியின் வாஹனமாகிய கழுதை யென்ப. இரிஜ்ராசுவன், இரிஜ்ராச்வன், ரிஜ்ராச்வன் எல்லாம் ஒரு பெயரையே சுட்டும். 101 ஆடுகொடுத்த தாகவும் அந்நூற்றொன்பதாவது ஆடுரிஜ்ராசுவனே யென்றும் ஒரு கதை யுண்டு. அசுவினிகள் தேவ வைத்தியர்களென்பது தைத்திரிய ஸம்ஹிதை.

17. இலக்கினை யுணர்ந்து முன்ன ரேகுறும் பரிகளோடு
நலக்க முன்னுற்ற வர்தேர் நாடிச் சூரியன் புதல்வி
கலக்கமில் மனத்திற் சார்ந்தாள்; கண்டவர் தேவர் யாரும்
விலக்கல ரொப்ப, காஸத்தியவர்காள், திருவேய்ந்தீரே.

(இ-ன்.) போய்ச்சேர வேண்டிய விடத்தை யுணர்ந்து எல்லாவற்றிற்கும் முன்பாகச் செல்லும் குதிரைகளோடு எல்லாத் தேவர்களுக்கும் முன்னர்வந்த உமது தேரில் சூரியன் புதல்வி யேறிக்கொண்டாள். இக்கதை

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

மற்றெல்லாத் தேவர்களும் ஒத்துக்கொள்ள நீங்கள் (ஆயிரம் இருக்குக்கள் பாடுவதனுற்கிடைக்கும் லாபமாகிய) ஸம்பத்தினை அல்லது (ஸ்திரையாகிய) கர்ப்பத்தைப் பெற்றீர்கள்—(எ-று.) இக் கதையை மேல் 2-ம் செய்யுளிலும் மண். 1. சூக் 34. செய். 5-லும் பார்க்க.

18. அசுவினீர் நீர் பரத்து வாச னுர்ந் தேத்தக் கேட்டுக்
கதிவொடு நிவோதாசன்கட் கடுக, வன்னுன் மனைக்கட்
பிசி நிறைந் தும்து தேரும் பிறங்கிற்றுல்; அத்தேர் முன்னர்
நசையி னேரிடபஞ் சிம்சுமாரமு காட்டினீரே.

(இ-ள்.) அசுவினிகளே! நிவோதாஸனுடைய குலகுருவாகிய பரத்து வாஜன் ஸ்தோத்திரஞ் செய்ய, அந்நிவோதாஸனது வீட்டுக்கு வந்தபோது உமதுதேர் உணவு முதலிய அரும்பொருள்களால் நிறைந்திருந்தது. அத் தேரின் முன் (உமது ஸாமர்த்தியத்தைக் காட்ட ஒன்றுக்கொன்று விரோத மான) காளையையும் சிம்சுமாரம் என்னும் பிராணியையும் பூட்டியிருந்தீர் கள்—(எ-று.) நிவோதாஸன், இவனுக்கு அதிபதிக்வன் என்று மற்றொரு பெயருண்டு. மண். 1. சூக், 51. செய், 6 நோக்குக. இவன் பெயர் மண். 1 சூக் 112. செய் 14 லும் வந்துளது. சிம்சுமாரம் என்றது கடற்பன்றி யென்பார் மேனுட்டாசிரியர். நீர்யானையாக விருத்தலும் கூடும். பிசி, அரும்பொருள்.

19. வலிசெறி தனமும் வீரம் வயங்கிய மக்கள் கூடிப்
பொலிதரு மாயுளும், பொய் புகன் றறியா நீர், தாங்கி
யலர்தரு மூன்ளத் தோடு மவிப் பொருளோடுஞ் சன்னு
நிலைதரு மக்கள் மும்மைச் சவனமு முளோர்ச் சார்ந்தீரே.

(இ-ள்.) நாஸத்தியர்களே! வலிமை பொருந்திய செல்வத்தோடும், வீரம் வாய்ந்த புத்திரர்களோடு விளங்கும் ஆயுளோடும் (அல்லது ஸாயணரு ரைப்படி யன்னத்தோடும்), உள்ள வோகையில் அவிப் பொருள் களோத்தாங்கி மூன்று ஸவனமுஞ் செய்யும் ஜஹ்நு மகா ரிஷி யின் புத்திரர்களை யடைந் தீர்கள்—எ-று.) ஸவனம் யக்ஞம். எண்டு மும்மை காலை, மாலை, உச்சிச் சவனங்களைக் குறித்தது.

20. பகைவர்சூழ் சாருடன்ரு னின்பமா யேரு மாற்றிற்.
சுகமுற நிசியிற் றூக்கிப், பொய்யினைச் சொல்லீர், மூப்புத்
தகையுநீர், அரியைத் தாக்குந் தேரினிற் சார்த்தி மாற்றூர்
வகையுற வேரு வெற்பைத் தாண்டினீர் மதிக்க நீரே.

(இ-ள்.) நாஸத்தியர்களே! முதுமையுறுதவர்களே! எல்லாப்பக்கத்தி லும் பகைவராற் சூழப்பட்ட ஜாஹுஷன் என்னு மரசன் கஷ்ட மில்லாமற் செல்லும் பாதைகளிற் சுகமாக விருட்டிற் செல்லும் வண்ணம் அவனை நடத்திச் சத்துருக்களைப் பேதிக்கும் உங்கள் தேரி லேற்றிப் பகைவர்களால் ஏறமுடியாத மலையைத் தாண்டினீர்கள்—(எ-று.). சாருடன், ஜாஹுஷன்.

வருக்கம் 11.

21. ஆயிரந் தனமிங் கோர்நாள் வசனென்பர், னசுவினீர்காள்,
யேயுறக் காத்தீர்; இச்சை யினையீக்குவீர், வேந்த னேடே

மண்டலம். 1 சூக்தம் 116.

யாயிடைச் சேர்ந்து; துன்ப மார் பிருதுச் சிரவ்
சேயலர் தம்மை யோட்டி யெடுத்தனீ ரவனை மாதோ.

(இ-ள்.) அசுவினிகளே! ஆயிரக்கணக்கான செல்வத்தை ஒருநாள் (அசுவன்மகனுகிய) வசன் என்பவன் பெறும் வண்ணம் அவனையுத்தத்திற் காத்தீர். இச்சையை யளிப்பவர்களே! இந்திரனோடு சேர்ந்து, கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த (கான்வதன்மகனுகிய) ப்ருத்சவன் என்னும் அரசனுடைய பகைவரைக் கெடுத்து அவன் கீர்த்தியைப் பரவச்செய்தீர்—(எ-று) ப்ருதுச்ரவன் கான்வதன்மகனென்றும், அவனது குலகுரு வசனென்றும் மேல் மண். 1. சூக். 112. செய் 10. ல் சொன்னார்.

22. சாகினிசத்கன் ரோன்றல் தாகந் தீர்வுற் றருந்த
வ்ரமுறு நீரை மேக்கு வயக்கினீ ராழ்வ் கிணற்றின்;
உரமெம்மாதிஞ் சயுக் கீளப்பை யோட்டுவா, னுண்மை பேசும்
பெருமையீர் மல்லட்டர் தன்னைப் பர்வுறப் பிறக்கி னீரே.

(இ-ள்.) (Richatka) ரிசீ) சத்தன் புத்திரனுகிய சாஹதேயனது தாகமானது தீரும் வண்ணம் அவன் குடிக்கும்படியான நல்லநீரை யாழமாகியகிணற்றிற்கு மேல்வரச்செய்தீர். நாஸத்தியர்களே! சயுவென்னும் ரிஷியின் கோப் புத்தீர, உமது வல்லமையினால் அவனது மலட்டுப் பசுவைப் பால்கறக்கும் வண்ணஞ் செய்தீர்கள்—(எ-று.) ஆர்ச்சத்கன் என்று மூலத்திலுள்ளது, ரிச்சத்கன் மகன் என்பது பொருள். அவன் பெயர் சரன் என்பதாம். சயு, மண். 1. சூக். 112. செய் 10. நோக்குக.

23. நேரியோன், கண்ணன் ரோன்றல் விசுவ்கன், உந்துணைக்கா
வேரியன் றேத்து வோன்ற னெழில் பெறு சுதன் விண்ணுறு
கூரிய நோக்கிற் ரோன்றக் கொடுத்தனிர், மெய்ப்பைப்பீர்,
தாரினிற் கெட்ட காலி சார்த்தவி, னுமது மொய்ம்பின்.

(இ-று.) நாஸத்தியர்களே! கிருஷ்ணனுடைய புத்திரனும், நேர்மை வாய்ந்தவனுமான விச்வகன் என்னும் ரிஷி உம்மை துணையை விரும்பி யேத்தினபோது, கெட்டமாட்டைத் திருப்பிக்கொண்டு வந்து காட்டுவது போல உமது சக்தியினால் அவனுடைய புத்திரனுகிய விஷ்ணுபுவென்பவனை அவனுக்கு முன் கொண்டுவந்து காட்டியருளினீர்கள்—(எ-று.)

24. கட்டுப்பட் டாழ்ந்து காயப்பட்டு வெம்மையினித் துன்ப
மட்டுப் பட்டோயா ரேபு, னகுவினீர், கூபத்தாழ்ந்தோன்
ஒட்டி யொன்பது நூட் பத்து நிசி புமைத்துதிக்க மொய்ம்பா.
லென்டி மேற் கொணர்ந்தீர் சோமந்துவையர வெடுத்த னேர.

(இ-ள்.) அசுவினிகளே! அசுரற்களாற் கட்டப்பட்டுக் காயத்தோடும் மிருந்த கஷ்டத்தோடுங் கூபத்தில் விழுந்தரேபன் என்னும் ரிஷி ஒன்பது பகலும் பத்து இரவும் ஸ்தோத்ரம் செய்யப் பத்தா நூட் பகலில்; அத்வர்யு வானவன் ஸோம ஸ்தாலியிலிருந்து அகப்பையினால் ஸோமத்தையெடுப்பதைப் போல, அவ்விரேபனைத் தூககி விட்டீர்கள்—(எ-று.) ரேபன் ஒருநாள் சாயந்திரம் விழுந்தானென்றும் பத்தா நாள் விடியலிலெடுக்கப்பட்டதால் 10 இரவும் 9 பகலும் துதித்தானென்றும் தெரிகிறது. மண். 1 சூக். 112 செய். 5 பார்க்க.

அஷ்டகம் 1. அத்தியாயம் 8.

25. உம்பல கருமந் தம்மை யுரைத்தனெ னசுவினீர்காள்,
செம்முறு பசுவும் வீரர் தாமுமே செறிந்து வேந்தாய்ப்
பொம்மலி னுறுக; பார்வை பொருந்தியே தீர்க்க வாயுள்
விம்முற, வீடுபோல, வயதினை யெய்த யானே.

(இ-ள்.) அசுவினிகளே! உம்முடைய புராதன காரியங்களை யெல்லாம் சொன்னேன். பசுக்களையும் வீரர்களையும் பெற்று யான் இத்தேயத்துக்கு (இவ்விடத்துக்கு)ப்பதியாக விருக்கட்டும். சத்துருபீடையில்லாமல் வீட்டிற் சுகமாக விருப்பதுபோல, நல்ல பார்வையோடு கூடித் தீர்க்காயுள் பொருந்திய பூரண வயதை (100 வருஷ கால வள்வினை) யான் பெறட்டும்-(எ-று.) இதனால் வேண்டுகோளெய்ணர்த்திற்று. பீடையும் பகையுமின்றியிருக்கும் வீட்டினிற் றங்குவதுபோல, இந்திரிய வுணர்ச்சி கெடாமல் தீர்க்காயுளோடு கூடிய பிழைத்தன்மையை யானடையட்டும் என்க. பார்வையைச் சொன்னதனால் இனத்தினால் மற்ற இந்திரிய வுணர்ச்சிகளையும் கொள்க வென்பார் ஸாயணர்.

வருக்கம் 12.

117. மண்டலம் 1. அநுவாகம் 17 சூக்தம் 2.

25 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கக்ஷீவான்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அசுவினிகள்.

1. புராதன வோதா வும்மைப் புதுமதுச் சோமந் தன்னுற்
றாதரத் தினிது மத்தந் தழைப்பிக்க வழைத்தான்; மெய்யீர்!
சாதனத் தேன்ற தெங்கள் கொடை; மறைவருத்துச் சார்ந்த;
ராசியி னன்ன மொய்ம்போ டீட்டுக வசுவினீரே.

(இ-ள்.) ஸ்துத்தியர்களே! அசுவினிகளே! புராதனமாயுள்ள உமது தோத்தா வானவன் உம்மைச் சோமத்தினால் மதர்ப்பிக்கக் கூவினன். எங்களுடைய ஸோமலட்சண அவியாகிய கொடை தருப்பை யாகிய ஆஸனத்தில் வைக்கப்பட்டது. மந்திரங்கள் ரித்விக்குக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. (அத்தர்த்துதிக்கிறார்கள் என்றபடி.) வலிமையும் அன்னமுந்தருவீர்களாக—(எ-று.) வடமொழிக் கண் இவ்வினைகள் நிகழ் காலத்திலுள்ளன சாதனம், சாதனம், தருப்பாஸன மென்க.

2. மனத்தினும் வேகஞ் சார்ந்த நற்பரி வயங்கப் பெற்றுச்
சனத்தினை நேகும் உம் அச்சையத்தில், அசுவினீர்காள்,
வனப்புறு மியாகவில்லம் தேடியே வரும் நரர்காள்,
இனிப்புற வெமதகத்தும் எகுவீர் அதன்மேலுற்றே.

(இ-ள்.) அசுவினிகளே! யக்ஞக்கிரஹங்களை நாடி வரும் நரர்களே! மனத்தினும் வேகமாகச் செல்லும் குதிரைகளோடுகூடி யக்ஞஞ் செய்யும் யஜமானர்களிடத்துப் போகும் அத்தேரின் மேலுற்று எம்முடைய யக்ஞக் கிரஹத்தினிடத்தும் வருவீர்களாக—(சு-று.)

3. பகைவரை வாட்டித் தாசர் மாயையம் படரை யோட்டி
வகைபெறு மைங்குடியோர் மதித்துரை யத்திரியைத்
தகை பெறக் கிளைகளோடுந் தாங்கினீர், நரர்காள், பரப்பத்
தகை யுறு பொலியினின்று, மிச்சையைத் தருகுவீரே!

மண்டலம் 1 சூக்தம் 117.

(இ ன்.) நேதாக்களே! இச்சைகளை யுளிப்பவர்களே! (அசுவினிகளே யென்றபடி) சத்துருக்களை இம்சித்து தஸ்யுக்களின் மாலயகளாகிய துன் பங்களை முன்னுணர்ந்து ஓட்டி, இந்து பெருங்குடியிறுதித்தவர்களும் சிறப் பித்துக் கூறுகின்ற அத்திரி ரிஷியை அவனது சுற்றத்தாரோடும் பாபரூப மான நீப்பொறியிலிருந்து விடுவித்துக் காப்பாற்றினீர்கள்—(எ-று.) இம் பெருங்குடிகளை மண். 1. சூக். 7. செய் 9ற் பார்க்க. மண். 1. சூக். 108 செய். 8 ம் நோக்குக. அத்திரி கதையை மண். 1. சூக் 116. செய். 8.நோக் குக. அத்திரி இந்து பெருங்குடியாளர்க்கும் இதஞ் செய்பவ னென்க.

4. இச்சையை யளிக்கும் வீர வசுவினீர் நீயர் நீரி
லெச்சமா ரவயவத்தோ டிடும்பையை யெய்த, மாவின்,
விச்சையின் முழுக்கி விட்ட ரேபஞ மிருடி மேன்மை
நச்சுறக் காத்தீர்; உந்தம் பழஞ் செய னலிவுறுதே.

(இ-ள்.) இச்சைகளைத்தரும் நேதாக்களாகிய வசுவினிகளே! நீயர் களாகிய அசுரர்கள் கட்டுப்பட்ட அங்கங்களோடு துன்பப்படும்படி, தண்ணீ ரிற் குதிரையை முழுக்குவதுபோலக், கிணற்றில் முழுக்கிவிட்ட ரேப னென்னும் ரிஷி மேன்மை பெறும் வண்ணம் அவனைக்காப்பாற்றினீர். உம் முடைய பழைமையாகிய இவ்வீரச் செயல்கள் என்றும் அழிவுபெறுவாம் —(எ-று.) ரேபன். மண். 1 சூக். 112. செய். 5. மண். 1, சூக். 116. செய். 24 நோக்குக. மாவின், தொழிலுவமை. குதிரையைக் குளிப்பாட்டும் போது முழுக்குவது போல வென்பார் மேனுட்டாசிரியர்.

5. பூமியி னகட்டிற் றூங்கும் புருடனி, னிருட்டை யோட்டும்
வாமமா ரென்றி, ஞழத் தோங்கிய பொன்னிற், பார்வைக்
கேமமார் வந்தன்ரு னிருங்கினற் ரூழ்ந்தான் றன்னை,
நீமையி ரேற்றத்தீ ரச்சுவினீயீர், தூக்கிச் சேர்த்தீர்.

(இ-ள்.) அழகிய தோற்றத்தோடு கூடிய வசுவினிகளே! பூமியினுள் ளிடத்துத் தூங்கும் புருஷனேப்போலவும், (கிணற்றில்) இருட்டையோட் டும் அழகிய சூரியனேப்போலவும், ஆழத்திப் புதைந்துகிடைக்கும் ஒளி பொ ருந்திய பொன்னேப்போலவும், அழகிய வந்தான் என்னுங் கினற்றில் விழுந் த ரிஷியை மேலே தூக்கிவிட்டீர்கள்—(எ-று.) தஸ்ரரென்பதற்கு கண் ணுக்கினியவர்களே யென்று ஸாயணரும், அற்புதச் செய்கைகளைப் புரிப வர்களேயென்று மேனுட்டாசிரியரும் உரை கூறுவர். இவ்விருபொருள் களையும் இந்நூலாசிரியர் கலிக்கைசந்ததுபோலக் கையாளுவர். வந்தான். மண். 1. சூக். 116. செய். 11. பார்க்க.

வருக்கம் 13.

6. மெய்புக னார்கள் சூழ்ந்து செல்லுவீர் மாக்குரத்தா
லொய்யென தூறு கும்ப மதுவினை மாந்தர்க்காகப்
பெய்த வஞ்செய்கை, பஜ்ரன் பிறங்கிய மகன் கட்சிவான்
ஐயென வேத்தும் தன்மை யார்ந்ததா லீண்டு மாதோ.

(இ-ள்.) ஸாலத்தியர்களே! நேதாக்களே! சூழ்ந்து செல்பவர்களே! குதிரைக்குளம்பிலிருந்து நூறு கும்ப நிறைய ஸோமத்தை மனிதர்க்காகப் பெய்வித்த உமது செய்கையானது, பஜ்ரன் மகனுகிய கக்ஷீவான் ஸ்தோத்

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

திரஞ்செய்யும் பெருமை வாய்ந்தது—(எ-று.) கட்சிவான் தன்னையே படர்க்கைப்படுத்திக்கொண்டது. இக்கதையை மண். 1. சூக். 116. செய். 7ற் பார்க்க.

7. விசுவகன், கண்ணன் றோன்றல் வேண்டிட, மகன் விண்ணுபு
விசைவுற, நரர்காள், தந்தீர்; வயதிஞூன் மெலிந்து நின்றுள்,
அசுவினீர், தந்தை யில்லத் தமர்ந்த கோஷா வென்பாட்கு
வசமுறு கணவன்றன்னே மதித்தளித் தருளினீரே.

(இ-ள்.) நரர்களே! கிருஷ்ணன் புத்திரனுகிய விச்வகனுக்கு அவனது மகன் விஷ்ணுபுவைத் தந்தீர்கள். வயதினலும் (குட்டநோயினலும்) மெலிவடைந்து தந்தையாகிய கட்சீவான் வீட்டிலேயே யிருந்தபிரஜ்மவாதினியாகிய கோஷா வென்பவளுக்கு (அவளது நோயை நீக்கி) யொருகணவனே யளித்தீர்கள்—(எ-று) விஷ்ணுபு மண். 1. சூக். 116, செய். 23. பார்க்க. கோஷா காட்சீவான் மகளென்றும், குட்டநோயால் வருந்தியவளென்றும், பிரமவர்தினி யென்றும், மூப்படையும் வரையில் தந்தையின்வீட்டிலேயிருந்தாளென்றும் அசுவினிகள் அவளது நோயை நீக்கி அவளுக்கு ஒரு புருஷனையும் சம்பாதித்துத் தந்தார்களென்றும் தெரிகிறது. ஆர்ஷத்தில் மாதர் முதுக்குறைவற்றபின் செய்த மணத்துக்கு இது ஓர் சுட்டாகும்.

8. சியாவனுக் குருசதியைச் சேர்த்தனிர்; பார்வையில்லா
தயாவுறு கண்ணுவற்குத் தேசொளிப் பெருங்க ணீந்தீர்;
தபாநிறை யசுவிஸ் ரிச்செய்கை போற்றுரித்தாம்; இச்சை
யியாதியி னளிப்பீர், நாருடதன் செவி கேட்பித்தீரே.

(இ-ள்.) அசுவினிகளே! இச்சையளிப்பவர்களே! (குஷ்டரோகியாயிருந்த) ச்யாவனுக்கு அவன் நோயை நீக்கி ருசதி யென்னும் பெண்ணையளித்தீர்கள். பார்வையில்லாது வருந்திய கண்ணுவனுக்கு மிக்க ஒளியோடு கூடிய பெரிய கண்ணையளித்தீர் இக்கண்ணளித்த செய்கைபோற்றற்கள். குரியதாம். நருஷதன் புத்திரனுகிய நார்ஷதன்தனது செவிட்டை நீக்கினீர்—(எ-று.) ச்யாவன் மண். 1 சூக். 61 இக்கண்டவன். இவனை அசுரர்கள் மூன்றுதுண்டாக வெட்டினார்களென்றும், அசுவனிகள் அவனை மறுபடியும் உயிர்ப்பித்தார்களென்றும் மேல் 24வது செய்யுளால் தெரிகிறது. நருஷதன் மகனென்றது கண்ணுவனே யெனத்தெரிகிறது. இச்சைகளை வர்ஷிப்பவர்களே! அசுவினிகளே! நருஷத புத்திரன் கண்ணுவன், பொருட்டு உஷஸ் அறியும்படி வீணைவாத்தியத்தை பலமாக வாசித்த அத்தச்செய்கை புகழத்தகுந்தது. எனவேறொரு பொருளுமுண்டு. அசுரர்கள் கண்ணுவ ரிஷியை இருட்டில் நிறுத்தினதாகவும் அங்கு நின்றுகொண்டே அவன் உதவையைக்கண்டதாகவும், கண்டு அசுவினிகள் வீணை வாசிப்பதைக் கேட்பதாகச் சொன்னதாகவும், அவன் வார்த்தையை மெய்ம்மைப்படுத்த உஷஸ் கேட்கும்படி அவர்கள் வீணையை உரக்கவாசித்ததாகவும் ஒரு கதையுண்டு.

9. பேது வெண்பானுக், கச்சு வினியர்காள், பெரிதும் பன்மை
யோதுரு வெடுப்பீர், ஆசி லேடி மக்குதிரை, யன்மை,

மண்டலம் 1 சூக்தம் 117.

நீதறு கீர்த்தி, வெற்றி, செருக்கலா வீரம், பாம்பை
மோதறு பண்பி, னூயிரம் பொனிவது நேர்ந்தீரே.

(இ-ள்.) அசுவினிகளே! வெகு விதமான கர்மங்களைக் கருதி வெகுவிதமான வருவெடுப்பவர்களே! வண்மையும், கீர்த்தியும், ஜயமும், பிறரால் வெல்ல முடியாத வீரமும், பாம்பைக் கொல்லுந் தன்மையும் (அல்லது ஸாயணருரைப்படி வரும் சத்துருக்களைக் கொல்லும் தன்மையும்) பொருந்தியதும், ஆயிரம் பொன் தருவதும், விரைவாகத் தாண்டிச் செல்லக்கூடியதுமான குதிரையைப்பெறுவதற்காகத் தந்தீர்கள் (எ-று) மண் 1 சூத். 116 செய். 6 பார்க்க. பாம்பைக் கொல்லுந் தன்மை யுண்மையை மண். 9 சூத். 88 செய் 4ல் காண்க.

10. வண்மையிற் சிறந்தீ, ருந்தம் வீரியகன்மம் யாவு
முண்மையிற் கீர்த்தி வாய்ந்த, வரோத்சி யாவீர், பண்ணி
னண்மையி னுறைவீர், அச்சுவினி யர்காள், பஜ்ரன்மக்க
ளெண்மையின் விளிக்கும் பண்கேட்,டுண்டி நல்வ்லி யேய்ப்பீரே.

(இ-ள்.) வண்மையிற் சிறந்தவர்களும், வானம் பூமியாக விளங்குவோர்களும், கீர்த்தனங்களுக் கருகிலுறைபவர்களுமான அசுவினிகளே! உம்முடைய வீர்ய காமங்க ளெல்லாம் கீர்த்தி வாய்ந்தவையாம். அங்கீர்ஸ கோத்திரத்துப் பஜ்ரனது சுந்தரியர் உரக்கக் கூவுவது கேட்டு அவர்களுக்கு நல்லவலிமையையும் அன்னத்தையுந்தருவீர்கள்—(எ-று.) அசுவினிகள் த்யாவாப்பிருதுவி யென்று சிலர் சொல்லுவார்கள் என்பது நிருக்தம். மண். 1. சூத். 89 செய். 3. பார்க்க.

வருக்கம் 14.

11. சூனுவின் தூதி விழைந்தே யகத்தியன் பத்தி யோடு
வானுற வரைத்த வேத மறைக்கென் விசுபலேயி
னானுறு முறுப்பை மீந்தீ ருண்மைவா யசுவினிர்காள்!
தேனுறு பாடலோனுக் குண்டியைச் சேர்த்துக் காப்பீர்

(இ-ள்.) அசுவினிகளே! பரத்துவாஜனது சுவை பொருந்திய பாட்டுக்களைக் கேட்டு அவனுக்குஉணவளித்தவர்களே! கும்பஸ்தநுவாகிய அகஸ்தியனது தூதியை விரும்பி யவன் பெருமைபெற வுரைத்த வேதமந்திரங்களைக் கேட்டு விச்பலையின் குறைபட்ட கணைக்காலைப் பொருத்தினீர்கள்.—(எ-று.) சூனு ஈண்டு கும்பஸ்தநு வென்றும், பாடலோன் பரத்துவாஜனென்றும் ஸாயணர் கூறுவர். மகன் தந்தையைப் புகழ்வது போல வென்றபொருள் தொனிப்பதுங் காண்க.

12. சயுவினைக் காப்பீர், அச்சுவினி யர்காள், என்றாழ் பெற்றீர்,
நியமமா ருருத்தி யீவீர், பொன்னிறை கலத்தை நேர
வியலும் பத்தாம் வைகல் புதைத்து ளோன்றினை யெடுத்தீர்,
உயனன் போற்றேற்கச் சென்றீ ருரைத்திடை செங்கெடுத்தீர்?

(இ-ள்.) சயுவினைக்காப்பவர்களே! அசுவினிகளே! ஸுர்யன் பெற்றவர்களே! ஆசைகளை யளிப்பவர்களே! நீங்கள் தங்கம் நிறைந்த கலசத்தை யெடுப்பது போலப், புதைந்து கிடந்த ரேபினைப் பத்தாநாள் விடியற்காலத்தி

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

லெடுத்தீர்கள். உசனஸ் காவ்யனது ஸ்தோத்திரத்தைக் கேட்கச் சென்ற நீர் எவ்விடத்தில் ரேபனைத் தூக்கி விட்டீர்களென்றுரையுங்கள்—(எ-று.) 'உரைத்தி டுரெங்குற்றீரே' என்று மேனூட்டாசிரியர் மொழி பெயர்ப்பார். பத்து நாள்வரையில் தாழ்க்கக்காரண மென்ன வென்பது பொருளென்பார் அவர். உசனஸ்காவ்யன் மண். 1. சூத். 83 செய் 6 நோக்குக. புதைத்து கிடந்தவன் ரேபன். மண் 1. சூத். 112. செய் 5. பார்க்க. திவோதிபாதா வென்பதற்குச் சூரிய புத்திர ரென்பார் ஸாயணர். ஸ்ரீர்யாவினது கண வர்களானது பற்றிப் போலும். முன் உசனன் (உயனன்) உரைக்குந் துறை யைக் கேட்கச் சென்ற அசுவினிகள் வழியில் இணற்றில் வீழ்ந்து கிடந்த ரேபனைப் பார்த்து அவனைத் தூக்கி விட்டார்கள். அவர்கள் சென்ற உச னனது வீட்டைக் கண்ட இச்சூத்த ரிஷியாகிய கட்சீவான் அக்கிணறெங் கேயிருந்த தென்று கேட்ட செய்யுளிது.

13. அசுவினீர், உங்கள் வன்மையார் மருந்தளிக்குங் கன்மத்
திசையுறச் சியவனன்றன் மூப்பினை நீக்கி, மீட்டு
நசையுறு மிளமை தந்தீர்; ஞாயிற்றின் புதல்வி சீர்த்தி
யிசைவுற வுமது தேரி லேறினாள், மெய்ம்மையீரே.

(இ-ள்.) நாஸத்தியர்களே! அசுவினிகளே! உங்களுடைய வீரியமிகுந்த மருந்துகளைப் பிரயோகிக்கும் கர்மத்தினிடத்துக் கீர்த்தி தோன்றச் சியவ னன் என்னும் ரிஷியின் கிழத்தன்மையை நீக்கி மறுபடியும் அவனுக்கு இள மையையளித்தீர்கள். சூரிய புத்திரி யாகிய ஸூர்யா வென்பவள் பெருமை வாய்க்க வுமது தேரி லேறிக் கொண்டாள்—(எ-று.) சியவனன் மண். 1 சூக். 116, செய். 10, பார்க்க. ஸூர்யாவைப் பற்றி மண். 1, சூத். 116, செய். 17 நோக்குக.

14. துக்கத்தை யொழிப்பீர் பூர்வ காலத்துத் துக்கி ரன்றன்
முக்கிய துதியை யேற்ற வண்ணமே, நீரின் மூழ்கித்
துக்கமார் புஜியன் றன்னை வல்கதித் துரகத் தேற்றிப்
பக்கலி னிறுத்த வன்றும் பரிந்து மீண் டெண்ணினீரே.

(இ ள்.) துக்கநி வாரணஞ் செய்யும் அசுவினிகளே! பண்டைக் காலத் தில் (அதாவது புஜ்யன் சமுத்திரத்தில் விழுவதற்குமுன்பு) துக்கிரனுடை ய ஸ்தோத்திரங்களைப் பிரியமாக வேற்றது போலவே, ஆழமாகிய ஸமுத்தி ரத்தில் தன்சேனை யோடு முழுகிய புஜ்யனை வேகமாகச் செல்லும் குதிரை களின் மேலேற்றி யவனுடைய பிதாவின் பக்கத்திற் கொண்டு வந்து விட் டவன்றும், புஜ்யனது பிதாவாகிய துக்கிரனுல் சொல்லப்பட்ட துதிகளையும் மறுபடியும் ஸந்தோஷத்தோடு கைக்கொண்டீர்கள்—(எ-று) ஏற்றவண் ணமே, யெண்ணினீரென்றதனுல் அவர்களுக்குத் துக்கிரனது போற்று பழமைபோல மீண்டுங் கிடைத்ததென வுணர்க. துக்கிர புத்திரனுகிய புஜ் யனது கதையை மண். 1. சூக். 119. செய் 3-ல் பார்க்க. துரகத்தேற்றி யென்றிருப்பினும் துரகம் வாய்ந்த ரதத்திலேற்றியென முன்கதையை யொட்டி உரைகொள்ளுகவென்பார் ஸாயணர். மேல் 120ம். சூக்தம் பார்க்க.

15. மனமென்ச் செல்வீர், இச்சை வருடிப்பீர், அசுவினீர்காள்!
வனதியி ஞழ்ந்துந் துன்ப மன்னுரு தும்மைப் போற்று

மண்டலம் 1 சூக்தம் 117.

மீனிய தெளக்கிரனே நன்கு பூட்டிய தேரிற் றாக்கித்
தனியிலா தெடுத்துத் தந்தை யகத்தினிற் சுகத்திட்டீரே.

(இ-ள்.) மனம்போல வேகமாய்ச் செல்லுபவர்களே! இச்சைகளை வர்ஷிப்பவர்களே! அசுவினிகளே! ஸமுத்திரத்தில் மூழ்கியும் துன்பப்படாது உம்மைத் துதித்த துக்கிர புத்திரனுகிய புஜ்யனை நன்றாகப் பூட்டிய உமது தேரிற்றாக்கி வைத்துக்கொண்டு போய்த் தந்தையினது வீட்டிற் சுகமாக விட்டீர்கள்—(எ-று), தெளக்கிரன் துக்கிரன் மகன் புஜ்யன் (Bhujya).

வருக்கம் 15.

16, காட்டு நாய் வாயினின்றுஞ் சடகத்தைக் கடி தினீரு
மீட்டவன் றதுவு மும்மை வேண்டிற்று, மசுவினீர்காள்!
ஈட்டிய வெற்றித் தேரின் மலைமுடி யேறித் தாண்டி
மாட்டிய விடத்தான் விட்டுவாசன்றன் மகனைக் கொன்றீர்

(இ-ள்.) அசுவினிகளே! கோனாயின் வாயினின்றும் ஊர்க்குருவியை வேகமாக நீர்மீட்ட போது அப் பெண்ணூர்க்குருவியும் உம்மைத்துதித்தது. ஜயத்தை யடைந்த உம்முடையதேரிற் பகைவரால் பீடிக்கப்பட்ட ஜர்ஹூஷனையேற்றிக் கொண்டு, அச்சத்தருக் களாலேறமுடியாத மலையைக்கடந்தீர்கள். பலித கடையுள்ள விஷ்வா(ச்)சன் என்னும் அசுரனது மகனை விதவு கொடுத்துக் கொன்றீர்கள்—(எ-று) வ்ருகம் கோனாபன்று, விவிருதஞ் யோஜிஷ்க: ஸூர்ய: என்றும், வர்த்திகா வர்த்தபே பரதிவஸும் ஆவர்த்தபே இதி வர்த்திகா உஷா: என்றும் கூறி, ஸூர்யனாற் பிடிக்கப்பட்ட உஷஸ், அசுவினிகளே! உம்மைச் சத்த மிட்டழைக்க, நீங்கள், சூரியனே டொன்று யிருந்த வவரை யச்சூரியனின்றும் வேறுபடுத்திச் சூரியோதயத்துக்கு முன்பும் இரவின் கடைப்பாகத்திலும் தோற்றுவித்தீர்கள் என்பது பொருள் என்று ஸாயணர் குறிப்புரை யெழுதுவர். யாஸ்கர் மதம் அது சடகம், ஊர்க்குருவி. மண்1. சூக். 116, செய் 14. பார்க்க. விஷ்வா(ச்)சன் ஓரசுரன்.

17. நூறு மேடங் கோனுய்க்கு நோன்பொடு கொடுத்ததற்கென்
றூறுறப் பிதா வியற்றுங் கண்ணினை னிரிஜ்ராச்வன்
பேறுறு மட்ச மோங்கப் பிறக்கினீர், அசுவினீர்காள்!
மாறுறுச் சோதி மீந்து வளர்த்தனிர் நோக் கந்தற்கே.

(இ-ள்.) கோநாய் (உருவத்தோடு வந்த அசுவினிகளின் வாஹநமாகிய கழுதை) க்கு நூறு ஆடுகளைப் பலிகொடுத்ததற்காகப் பிதா ஊறுபடுத்தின கண்ணினையுடைய நிர்ஜ்ராச்வனது கண் தெரியும்படி செய்தீர்கள். அசுவினிகளே! குருடனுகிய அவனுக்கு எல்லாவற்றையும் பார்க்கும் வண்ணம் ஒளி பொருந்திய கண்ணையளித்தீர்கள்—(எ-று.) நிர்ஜ்ராச்வன் கதையை மண். 1. சூக். 116. செய். 16-ற் பார்க்க.

18. 'அருத்தினை யீவீர், அச்சுவினியர்காள், இரிஜ்ராச்வன்,
பாத்தையை விழையுஞ் சாரன் புரைய, வென்றனக்குப் பல்லை
பொருத்தினு ணூறேடொன்று, நரர்களே,' யென்று கோநாய்
கருத்தினிற் குருட் டெண்ணத் தினைந்த னன்றே!

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

(இ-ள்.) 'இச்சையை யளிப்பவர்களே! அசுவினிகளே! நரர்களே! பரஸ்திரீயை விரும்பும் யௌவனத்தை யடைந்த ஜாரன் அப்பரதாரத்துக் குப்பொன்னே வாரி வீசுவதுபோல எனக்கு தூற்றலுரு ஆகிகளே (ஊரார் நிடத்திருந்து அபகரித்து) நந்தான்.' என்று குருடனுகிய ரிஜ்ராச்வன் ஸந் தோஷிக்க (அதாவது அவன்கண். பார்வையைப் பெறுமாறு) அவ்வோளுய் கதறிற்று—(எ-று.)

19. சுகந்தரு மூந்த மூதி மகிமையிற் சூழ்ந்தசாமால்;
அகந்தனிற் கருதும் பேற்றே லசுவினீர், ஒடிந்தவங்கஞ்
சுகம்பெறப் பொருத்தினீர்; உத்தம்மையே ஞானந் தோய்ந்தா
ளிகந்தனி லழைத்தாள் வந்தீர் பற்பல காவ லேன்றே.

(இ-ள்.) சுகத்தைத்தரும் உமது பாலனம் மகிமை பொருந்தியது. உள் ளத்து நினைத்துக் கூறும் ஸ்தோத்திரங்களே யேற்கும் அசுவினிகளே! கேல னது பாதுகாப்பிலிருந்த விச்பலையின் ஒடிந்த அங்கத்தைச் சரிப்படுத்தினீர்கள் (புரந்தீர்). ஞானம் வாய்ந்தளாகிய கோஷா உம்மைக் கூவப் பலவித வதவித னோடும் அவளிடத்து வந்து அவளாசைகளே நிறைவேற்றினீர்கள்—(எ-று) புரந்தியெனச்சிறப்புப் பெயராகக்கொள்வர் மேலுட்டாசிரியர். அச் சொற் கே ஞானம் வாய்ந்த கோஷா அல்லது விச்பலா வெனுமிருவருளொருவரெ னக்கொளருவர் ஸாயணர். ஆனல் இந்நூலாசிரியர் ஒடிந்த அங்கத்தைச் சுட் டும்போது விச்பலையையும், ஞானம்வாய்ந்தாளென்றபோது, இச் சூக்த ரிஷி யாகிய கட்சீவான் மகன் கோஷாவையுங் தனித்தனிகொண்டுள்ளார். ஸாயணரோ ஸ்ராமம் என்பதற்கு ஒடிந்த அவயவமுள்ள புருஷனது அவய வங்களைப் பொருத்தினீரென்கிறார். அப்புருஷன் பெயரை யெடுத்துரைக்க வில்லை. அவ்வொடிந்த வங்கமுள்ளவன் புருஷனுயின் அவன்சோணை யிருக்கலாம். மண். 1. சூக். 112. செய். 8. நோக்குக. அங்கேச்சோணன் விஷ்ணுமுழங்காலோடிருந்தான் என்று தெரிகிறது. ஊதி, உதவி, பாலனம் என்க.

20. சனுத லொழிந்து வற்றி யிருந்த தேனுவிற் சயவுக்
காணுறு பானிறைத்தீர், அசுவினீர், அழகு வாய்ந்தீர்!
வானுறு மும்து வண்மை கொண்டு நல்விமதனுக்கு
மேனலப் புருமித் ரன்றன் பொன்னிணை மேவுவித்தீர்.

(இ-ள்.) அழகியதோற்றத்தோடு கூடியவர்களே! அசுவினிகளே! சனுத லொழிந்து வற்றிப்போயிருந்த பசுவின் மடியிற் பால் நிறையும்படி சயு வென்னும் ரிஷிக்காகச் செய்தீர்கள். சத்துருக்களோடு சண்டை செய்யச் சக்தியில்லாதிருந்த விமதன் என்னும் ரிஷிக்காக, உங்களுடைய பலமான இருத்தியங்களாற் புருமித்ரன் என்னும் அரசனது குமாரத்தியைத் தூக் கிக்கொண்டு வந்து, அவனுக்கு மனைவியாக்கினீர்கள்—(எ-று.) சயு, மண் 1 சூக். 112. செய். 16. நோக்குக. விமதன். மண். 1. சூக். 116. செய். 22. பார்க்க.

வருக்கம் 16.

21. யவத்தினே, யசுவினீர்காள், கலப்பையா லுழுது வித்தி,
கிவப்புறு தோற்றத்தீர், நன்னிலே மனிசருக்குந் தீப்பை

மண்டலம் 1 சூக்தம் 117.

யுவப்பினிற் சொரிந்து. தாசருலய வச்சிரத்தால் வீட்டிச்
சிவப்புறு சோதி யெங்கு மோங்க வாரியர்க்குச் சேர்த்தீர்.

(இ-ள்.) அசுவினிகளே! அழகு வாய்ந்தவர்களே! யலமாதிய எல்லாத் தானியங்களையுங் கலப்பையாலுழுத நிலத்தில் விதைத்து, மனிதருக்காக உணவுப்பொருளைச் சொரிந்து, தஸ்யுக்கள் கெடும்படி அவர்களை வச்சிராயுதத்தாற்கொன்று, சிவந்த சோதி யெங்கும் பரவும் வண்ணம் ஆரியரைப் பெருமைப்படுத்தினீர்கள்.—(எ-று.) யவம் என்றதனால் இதரதானியங்களையும் இனத்தாற்கொண்டார். தஸ்யு, தாசர், கள்வர் என்றபடி பகுசேன என்றது வடமொழிப் பதம். இதற்குச் சங்வாத்தியத் (trumpet) தால் என்பார் மேனுட்டாசிரியர். ஆனால் ஒளி பொருந்திய வச்சிரத்தினாலென்றுரை கூறுவார் ஸாயணர். 'ஆரியர்களுடைய தேஜஸ் எல்லாருக்கும் தெரியும்படி செய்தீர்கள்.' என்பது கடைசியடியின் கருத்து.

22. அதர்வணன் றத்தியச்சற், கசுவினீர், பரிச்சிரத்தை
யிதமுறக் கொணர்ந்து சேர்த்தீர்; தோற்றஞ்சா லுங்கட்கஃது
ரிதம் உனி மதுத்துவட்டாமறையினைக் கூறிற்று; அன்னன்
பதமுறு சிரம் பரிந்து மற்றதும் பகர்ந்ததன்மே

(இ-ள்.) அசுவினிகளே! அழகிய தோற்றத்தவர்களே! அதர்வணன் புத்திரனாகிய ததீசி (தத்யச்சனு)க்குக் குதிரைத் தலையைப் பொருத்திய போது அது எற்கனவே வாக்குக் கொடுத்திருந்த வண்மையைக் கருதித், துவட்டா விந்திரனிடத்திலிருந்து பெற்ற மந்திரமாகியமதுவித்தையையுபதேசித்தது. பின்னர் அத்தலையையிந்திரன் வெட்டினதால், அசுவினிகள் அவனது சொந்தத் தலையைப் பொருத்திய போது அத்தலை பிரவர்க்க வித்தையையும் உபதேசித்தது—(எ-று) மதுவித்தை துவட்டாவுக்கும் சொந்தமாம், எனினில் அவனும் அதையிந்திரனிடத்திலிருந்து பெற்றிருந்தான். ததீசியின் சொந்தத்தலையை அக்குளிற் சேர்த்தபோது அது ப்ரவர்க்கவித்தையையும் சொல்லிற்று என்பார் ஸாயணர். ததீசியின் கதையை, மன் 1. சூக்தம், 116 செய். 12-ற் பார்க்க. மேனுட்டாசிரியர் மதுவித்தையை யென்னுது இனிய ஸோமத்தை யென்பார்.

23. என்று மும் அருளுள்ளத்தைக், கவிகளே, யெண்ணினேன்யான்;
துன்று மச்சுவினீ ரெல்லாக் கருமத்தும் துணையா நிற்க;
ஒன்றும் பொய்யுரை யாடாதீர், புகழெலா மோங்கு மக்கள்
நன்குசூழ் பெருந்தனத்தை யெனக்கு நீர் நல்குவீரே.

(இ-ள்.) கவிகளே! அசுவினிகளே! நாஸத்தியர்களே! எப்பொழுதும் உமது அறுக்கிரகபுத்தியோடுகூடிய மனத்தினை நான் கருதினேன். எல்லாக் கர்மங்களிலும் உதவி செய்வீர்களாக. தீர்த்தி பரந்த புத்திரர் நிறைந்த செல்வத்தை யெனக்குத் தருவீர்களாக—(எ-று.) கவி, தீர்க்கதர்சி யென்பது பொருள்.

24. கொடைமடஞ் சிறந்தீர், அச்சுவினியரா, நரர்காள்! நீவிர்
நடைபெறப் பொற்கையானை வத்திரிமதிக்கு நல்கி,
யிடையுற மூன்று கூழை யெய்திய சியாவன்றேகந்
தடையுறு துயி ரிலேஞ்சுத் தயக்கினீர், தானஞ் சான்றீர்!

அஷ்டகம். 1. அத்தியாயம். 8.

(இ-ள்) வள்ளன்மையிற் சிறந்த அச்வினிகளே! நரர்களே! நல்ல தானத் தோடு கூடியவர்களே! வத்ரிமதி யென்பாட்டி ஹிரண்யஹஸ்தனென் னும் புத்திரனையளித்து சயாவன் என்னும் ரிஷியை அசுரர்கள் மூன்று துண்டாக வெட்டியபோது அக் கூறுகளைப் பொருத்தி யவனுயிரோடிருக் கும்படி செய்தீர்கள்-(எ-று.) வத்ரிமதீ மண். 1. சூக். 116 செய். 13 பார்க்க. சயாவன். இச் சூக்தம். 8-ம் செய்யுளைப் பார்க்க.

25. பண்டை நீர் செய்த வீர பராக்கிரமம் மிவற்றை
மிண்டிய வாயுருள்ளோர் விளம்பிரு ரவற்றைப் போற்றி
னண்டியே யசுவினீர் யாமறைரு வேம், அருத்தியீவீர்,
மண்டி யெம் வீரமக்கள் சூழுறு மகத்தி லின்றே.

(இ-ள்.) அசுவினிகளே! இச்சையளிப்பவர்களே! பண்டைக் காலத்து நீர் செய்த வீர பராக்கிரமச் செய்கைகளாகிய இவற்றை மனிதர்கள் எடுத்துச் சொன்னர். வீரம் பொருந்திய எமது புத்திரர்கள் சூழ்ந்துள்ள யக்ஞத்தினி டத்துயாங்களும் இப்பொழுது அவற்றைச் சொல்லுவோம்—(எ-று.)

வருக்கம் 17.

118. மண்டலம். 1. அநுவாகம். 17. சூக்தம். 3.

11 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கட்சிவான்; வடமொழிச் சந்தம்: த்ருஷ்டுப்; தேவதை: அசுவினிகள்.

1. சேனம் போற் பறப்ப, தான்ற சுகமெல்லாஞ் செறிந்த, நிச்சை
மானவர்க் களிப்பீர், மாந்தர் மனத்தினின் விரைவ, தெண்ணு
மீனமில் தனம் பொதிந்த, தெய்து மூவாதனத்த,
தேனைக் காற்செலவிற் றுந்தேர் எமையுறல், அசுவினீரே.

(இ-ள.) மனிதரது இச்சைகளையளிப்பவர்களே! அசுவினிகளே! சே னைப்பட்சியை (பருந்தை) ப்போற் பறப்பதும் நல்லசுகத்தைத்தருவதும், மக்க ளது மனத்தினும் வேகமாகச் செல்வதும், குற்றமற்ற செல்வம் வாய்ந்ததும், மூன்று ஆஸனங்களோடு கூடியதும், வாயு வேகமாகச் செல்வதுமான உமது தேர் எம்மை நோக்கி வரட்டும்—(எ-று.) சேனம் என்பதற்குப் புகழ்ந்து பேசும் கதியோடு கூடிய குதிரை யெனப் பொருள் கொள்ளுவது முண்டு. வந்துரம் என்பதற்கு ஸாதிஸ்தானம் என்பார் ஸாயணர். கவியிற் பொது வாக ஆஸனம் என்றார்.

2. மூன்றுருள் மூன்று போக்கு மூன்றெனும் பாகன்றட்டு
மேன்று தீவிரமா யோடுந் தேரினி லெம்மாட் டேற்றுச்,
சான்றவெம் பசுக்களுக்கும் பாலினை வளர்த்துச், சார்ந்த
தோன்றலச்சுவினீர், போற்றித், துரகத்தை யுவப்பிப்பீரே.

(இ-ள்.) அசுவினிகளே! மூன்று சக்கரங்களும், மூவகைச் செலவும், மூன்று ஸாதிஸ்தானங்களுமுள்ள உமது வேகமான தேரின் மேல் ஏறிக் கொண்டு எம்மையடைந்து, உமது பசுக்களுக்குப் பாலை விருத்திசெய்து, எங்களது புத்திரர்களாகிய வீரர்களைப் பாதுகாத்து, எமது குதிரைகளையும் ஸந்தோஷப் படுத்துவீர்களாக—(எ-று.) போக்கு —கதி, செலவு,

மண்டலம். 1 சூக்தம் 118.

3. வல்கதிச் சுலப வோட்டம் வயங்கிய தேரிற் ரோற்றம்
பல்கிய வசுவினீர்காள், பரிந்துரை போற்றைக் கேளீர்;
மல்கிய முன்னே ரும்மை, வழங்கு நற்றுதியோ, ரின்மை
செல்குற விரைவிற் சேர்வீ ரென்றெவ்வா றுரைத்தார் செப்பீர்.

(இ-ன்.) வேக மான கதியும், இலகுவான ஓட்டமும் அமைந்த தேரின்மே லேறி வந்து, அழகிய தோற்றத் ததையுடைய வசுவினிகளே, யாங்கள் ஆதரத்தோடு கூறும் ஸ்தோத்திரங்களைக் கேட்பீர்களாக. புராதனமானஸ் தோதாக்கள் 'எங்களது தரித்திர நீங்க விரைவாக வாருங்கள்.' என்று எவ்வ கையாகத் துதித்தார்க ளென்பதைப் பற்றிச் சொல்லுவீர்களாக—(எ-று.) அத்ரேः என்னும் வடமொழிப் பதத்துக்கு ஆதரம் குர்வத: ஸ்தோதுः என் பார் ஸாயணர். அதாவது அன்பு காட்டும் போற்றுளர் என்பது பொருள். ஆஸுல் ஸோமநசக்குங் கல்லெனைப் பொருள் கொண்டு ஸோமக் கல்லின் சத் தத்தைக் கேளுங்கள் என்பார் மேஞட்டாசிரியர்.

4. மெய்புக லச்வினீர்காள், வேகமார் சிறையிற் சேன,
மெய்ம்மை நீரோட்ட மென்னக், கழுகு வான் வீழ்ந்த தென்ன,
ஹியெனத் தூக்கி வல்லே யலிவயிற் றருப வெம்மாட்
டொய்யெனக் கொணர்க வும்மை யுமதுரற் றேரிலேடே.

(இ-று.) நாஸத்தியர்களே! அசுவினிகளே! நீரோட்டத்தைப் போல வும், கழுகு வானிற் பறப்பது போலவும் விரைவாகத் தூக்கிக்கொண்டு போய் அவியுணவினிடத்தில் விடுபவைகளும், வேகமாகச் செல்லக் கூடிய சிற கோடு கூடியலையுமானசேனப்பட்சிகள் (அல்லது ஸாயணருரைப்படி குதிரைகள்) உங்களை உங்களது தேரோடும் எங்களிடத்து மெதுவாகக் கொண்டுவரட்டும்—(எ-று.)

5. சூரியன் புதல்வி யன்பு தோய்வுறுந் தருணி யுந்தந்
தேரினி, னார்காள், தாவி யேறினுள்; சிறகிற் காந்தி
யேருறு முடலிற் றுள்ளி யேகுறு மாக்க ளும்மைச்
சீருறு மெம்மிலத்திற் சேர்க்க வுந்தே ரிலேடே.

(இ-ன்.) நரர்களே! (அசுவினிகளே!) சூரியனுடைய புத்திரியாகிய அன்புமிகுந்த யுவதி உமது தேரிலேறினுள். சிறகோடும், காந்தி பொருந்திய வுடலோடும், துள்ளிச் செல்லுகின்ற குதிரைகள், உங்களை உங்கள் தேரிலே டும் எமது வீட்டுக்கருகிற் கொண்டுவரட்டும்—(எ-று) ஸூர்யண் புதல்வி மண். 1 சூக். 116 செய். 17 காண்க.

வருக்கம் 18.

6. வந்தனன்றனே யிரேப்ன் றனேயுந், தோற்றஞ் சான்று
வந்தனே யளிப்பீர், மொய்ம்பின் மகிழும் வன்றிற லித்தூக்கி,
வந்தனே புரிந்த துக்கிரன் மதன்றனைக் கரை சேர்த்,
தந்தமா யிளமை மீட்டு மமைத்தனிர் சியவன்றக்கே.

(இ-ன்.) அழகிய தோற்றத்தவர்களே! பிரார்த்திக்கப்பட்ட பொருள் களை யளிப்பவர்களே! வந்தனையும், ரேபனையும் உமது வலிமையினலும், சாமர்த்தியத்தினலும், இணற்றினின்றும் மேற்றூக்கி, ஸ்தோத்திரஞ்

செய்த துஷ்டனது மகன். புஜ்யனே ஸமுத்திரத்தைக் கடந்து கரையிற் கொண்டுவந்து விடித்து, சயவனனுக்கு மறுபடியும் யௌவனத்தையளித் தீர்கள்—(எ-று.) வந்தனன் ரேப்ன் புஜ்யன், சயவனன் இவர்களே மண். 1 சூக். 117 செய் 5, 12, 14, 13 இவற்றில் முறையே பார்க்க.

7. கொதிப்பினற் பீடை யெய்திப் பொறியுறு மத்திரிக்குத்
தூதிப்பரு சுகத்தோ டுண்டி தோய்குவா, னசுவினீர்காள்,
மதிப்புட னருளினீர்;நற்றுதியினின் மகிழ்ந்து பார்வை
விதித்தனிர் மீட்டுங் கண்ணுவன் புலனிழந் தோனுக்கே.

(இ-ள்.) பீடா யந்திரக் கிரஹத்தில் உஷ்ணத்தினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த அத்திரிரிஷிக்குச் சுகமும் உணவும் அளித்தீர்கள். பார்வையிழந்த கண்ணுவனுக்கு நன்முய்க் கண் தெரியும்படி செய்தீர்கள் —(எ-று.) அத்திரி மண். 1 சூக். 51 செய். 3 பார்க்க. கண்ணுவனே பசு ரர்கள் அவனுடைய பிராஹ்மண்யத்தைப் பரீட்சித்தும் பொருட்டு இருட்டு வீட்டிலடைத்து வைத்தார்களென்றும், அவனங்கிருந்தவாறே உஷஸின் உதயத்தைக் கண்டானென்றும், அவ்வுஷஸையறியும்வண்ணம் அவனுடை ய பரீக்ஷிக்காக அவ்வீட்டின்மேற்போய்க்கொண்டிருந்த அசுவினிகள் உரத்த வீணகானஞ் செய்தார்களென்றும், மண். 1 சூக. 117 செய் 8-ற் சொல்லப் பட்டது.

8. முன்புண்மை யிரந்து நின்ற சயுவுடைத் தேனு பாலே
யின்புற வளிக்கச் செய்தீர்; அசுவினீர், கோநாய் வாய்நின்
றன்புடன் குருவி மீட்டீ ரதனுறுகண்ணே யோர்ந்து;
பின்பொருகா லளித்தீர் விசுபலை பிறங்கத்தானே.

(இ-ள்.) முன்பு உங்களை யாசித்து நின்ற சயுவென்னும் ரிஷியினு டைய பசு பால் தரும் வண்ணம் செய்தீர்கள். அசுவினிகளே! காட்டு நாய் வாயினின்றும் குருவியை அதன்றுன்பத்தை யுணர்ந்து மீட்டீர்கள். (அல் லது சூரியனிடத்திலிருந்து உஷஸைப் பிரத்தியேகப்படுத்தினீர்கள்.) விசு பலைக்குக் கணைக்காலளித்தீர்கள்—(எ-று.) சயு, மண். 1 சூக் 112 செய் 18 நோக்குக. குருவி மண். 1 சூக். 116 செய். 14 பார்க்க. விசுபலா மண். 1. சூக். 112 செய் 10 காண்க.

9. கனைகுரற் புரவி, வெண்மை கண்டது, பகை முடிப்ப,
தினைகுவ தகியை, யுக்கிரத்த, தாண்டன்மை யேய்ந்த,
தினமுது முறுப்பு வன்மை யியைந்த, தாயிரம் பொனீந்து
கனமுறு மதனைப் பேதுக்கடை யிட்டீ ரசுவினீரே.

(இ-ள்.) அசுவினிகளே! வெண்மையானதும், பகைவரை முடிப்ப தும், அலையைக் கொல்லுவதும், உக்கிரமானதும், ஆண்டன்மை வாய்ந்த தும், ஆயிரக்கனக்கான பொன்னே யளிப்பதுமான குதிரையைப் பேதுவக் களித்தீர்கள்—(எ-று.) பேது, மண். 1. சூக். 115 செய் 6யும் மண். 1. சூத். 117. செய். 9 யும் பார்க்க. அஹிஹநம் என்ற சப்தத்துக்கு ஆகத்ய ஹந்தாரமித்யஹி: அதிநாசம் ஆகத்யஹந்தாரௌ சத்ரௌ சத்ருஸம்ஹார ஹந்தாரம் என்பார் ஸாயணர். அதற்கு 'வம்தெதிர்த்துக் கொல்ல வெண்ணுஞ் சத்துருக்களைக் கொல்லுவதை' யென்று பொருள். ஆனால் மண். 9. சூக். 88

மண்டலம் 1 சூக்தம் 119.

செய். 4ல் அஹி நாம்நாம் ஹந்தா வென்றிருப்பதைக் கொண்டு மேலுட்டாசிரியர் அஹிஹனம் பாம்பினங்களாகிய பகைவரைக் கொல்லுவ தென்றே பொருள் கூறுவர்.

10. பெருமை சால் பிறப்பி னச்சு வினிரெனு நரீ்கா, ளும்மை
யிருமையுற் றியாமுதவி யிழைத்திட வழைப்போம்; எம்பா
வருமையை யுணர்ந்து வாழ்வை யாம்பெற வெம்முற் செல்வ
நிருமிதத் தேரினேறி வருகுவீர் நிறைவி னன்கே.

(இ-ள்.) பெருமை வாய்ந்த பிறப்பையுடையவர்களே! அச்வினிகளே! நரர்களே! உம்மைத்தனகாமிகளாகிய யாங்கள் துன்பமுற்று உதவி செய்யுமாறு கூவுவோம். எங்களது பாட்டுக்களின் அருமையை யறிந்து யாங்கள் வாழ்வை யடையும்படி, எங்கட்குமுன் உம்முடைய செல்வ நிறைந்த தேரில் ஏறி நன்றாக வருவீர்களாக—(எ-று.)

11. ஒத்த வன்புடையீ, ருண்மை பேசுவீ, ரசுவினீர்காள்!
தத்திய நவீன வன்மைச் சேனத்தின் கதியிற் சாரீர்;
நித்திய முதிக்கும் வைக னிறைந்த பேரவீ சுமந்து
துத்தியஞ் செய்து போற்றே டழைத்தனென் றுதிக்கயானே.

(இ-ள்.) ஸமமான அன்போடு கூடியவர்களே! நாஸத்தியர்களே! அசுவினிகளே! புதிதாக வுண்டான பலத்தோடு கூடிய சேனைப் பட்சியின் (அல்லது உங்கள் தேரையிழுக்கும் குதிரையின்) வேகத் தோடு வருவீர்களாக. நித்தியமும் உதயமாகும் விடியற்காலத்தில், மிகுந்த அவியுணவோடு ஸ்தோத்திரஞ் செய்து வணங்கியும்மை யானழைத்தேன்—(எ-று.) சேனம், பருந்து, அசுவினியர்வாகனம். சிறகுகளோடு கூடிய குதிரைகளென்பது ஸாயணர் மதம். சேனப்பட்சி கூட்டிக் கொண்டு வரக்கூடிய வேகத் தோடு வாருங்களென்பது கருத்து. மேல் மண். 1 சூக். 119 செய். 4 பார்க்க.

வருக்கம். 19.

119. மண்டலம். 1. அநுவாகம். 17. சூக்தம். 4.

10 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ககக்ஷீவான்; வடமொழிச்சந்தம்: ஜகதி; தேவதை: அச்வினிகள்.

(வேறு.)

1. உயிரோடுவாழ்வான்யான்எக்கியத்தைச்சாரவவியோடழைப்பேன்
செயிரேலாப்பலமர்யைமனோவேகந்தனதாதுபரித்து,வன்மை
பயின்மாலைப்பூண்டு,கொடைப்பொருள்சிறந்,தாயிரங்கொடியைப்
பண்பிற்றருங்கி,
நயமோடுஞ்சுகமுடனீத்,தறல்நிறையுந்தேர்தனேநாடித்தானே.

(இ-ள்.) அசுவினிகளே! குற்றமற்ற பல மாயைகளையும் (அல்லது ஆச்சர்யமான செய்கைகளையும்) மனோ வேகத்தையும், தாற்றுக்கணக்கான செல்வத்தையும் தாங்கிப், பலம்பொருந்திய குதிரைகளைப்பூண்டு,கொடைப் பொருள்கள் சிறந்து, ஆயிரம் கொடிகளையேந்திச், சுகத்தை விரைவிற் றந்து, தண்ணீர் நிறையும் தேரை, யிஷ்டஸ்தலத்துக்கு வருமாறு, எனது ஹ்ரு

னத்தின் பொருட்டு, அவிப்பொருள்களோடும் அழைப்பேன்—(எ-று.) சுருஷ்டி வானம், வநிகம் என்னும் பதங்களுக்கு சுகத்தையுடனேயளிப்பதும் நீர் நிறைந்ததும் என்று பொருள்கொள்ளாது, உடனே கீழ்ப்படிவதும் இடமகன்றது மெனப்பொருள் கூறுவர் மேனுட்டாசிரியர். அற்றேல் 'நயமோடு முடனடங்கி யிடமகன்ற தோதனை நாடித்தானே.' எனக்கடைசியடியை மாற்றிப்படிக்க.

2. அத்தேரெனருகிலுறத் துதிசாரென்மதியுயர்வாயணைந்தது; ஆயினைத்திசையுமொன்றுகக்கூடாநின்றனதுதிக்க; என்றியானு மெத்தவினிப்புறவியைக்கூட்டுகிறேன்; துணையினருமேவாநின்றுர் அத்தேரிலூர்ஜாநியாவலினும்மாட்டடைந்தாள், அசுவினீரே.

(இ-ள்) அசுவினிகளே! உம்முடைய அந்தத்தேர் ஸமீபத்தில் வரவே என்னுடைய ஸ்தோத்திர புத்தியானது உயர்வுபெற்றணைந்தது. யோசித்து பார்க்கில் எல்லாத்திக்குகளும் போற்றிசைக்க ஒன்றுகக் கூடுகின்றன. யானும் இனிய அவிப்பொருள்களோச் சேர்க்கிறேன். எனக்கு உதவி செய்யும ரித்விஜர்களும் கூடியுள்ளார். உமது அந்தத் தேரிற்றான் சூர்ய புத்திரியாகிய ஊர்ஜாநி யேறி யும்மையடைந்தாள்—(எ-று.) ஊர்ஜாநி பலத்தை யுருவகப்படுத்திய தென்பார் மேனுட்டாசிரியர். ஆனல் ஸூர்ய புத்திரி யென்பது ஸாயணர் மதம்.

3. அளவேர்டாமகவீரர்தனம்பெறவேபோட்டியொடுமாகவத்தே யொளியோங்குழுமியவக்காலமதி, லசுவினிர்காள், உந்தேர், பூமியுளிதோன்று முண்மையினி, னெக்காலுஞ் சூரிகளுக்குயர்ந்ததான மளியோடுஞ்சுமந், தவற்றையவர்க்களிக்கவெனவாங்கேயமைந்து நின்றே.

(இ-ள்.) அசுவினிகளே! கணக்கில்லாத ஜயசீலர்கள் யக்ஞத்தோடு கூடியவர்கள் செல்வம் பெறுவான் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக் கொண்டு யுத்த பூமியிற் கூடியபோது, உமது தேர் ஸூரிகளுக்கு (ஸ்தோத்காக்களுக்கு) உயர்வாகிய தானத்தைச் செய்யவென்று செல்வத்தைக்கொண்டு வந்து, அப்பொருள்களோ யவர்களுக்குத் தருவதற்காகப் பூமியின்கட் காணப்படும்—(எ-று.)

4. அருத்தியளித்திடுவீர்கா, டாமேவந்தேய்வுற்றவழகார்மாவின், வருத்தமுறநீர்மூழ்கும்புஜ்ஜியனே நாவாயின்மதித்துத்தூக்கிப் பொருத்தினிராற்றங்கையிடம்வெகுதூரமாயிருந்தும்; புரையில்கீர்த்தியிருத்தியதாற், றிவோதாசன்றனக்குநீர்பேருதவியிழைத்தநின்றே.

(இ-ள்.) இச்சைகளே யளிப்பவர்களே! ஒருவர் பூட்டாமற்றூமே வந்து பூட்டிக் கொள்ளும் சுதிரை கட்டியநாவாயின் மேல், நீர்க்குள் ஆழ்ந்து தன் புறம்புற்பனைத் தூக்கி யவனது பிதாவாகிய துக்கிரன்று உறைவிடம் வெகுதூரத்திலிருந்துகொண்டுபோய் விட்டீர்கள். நீங்கள் (சம்பரனைக்கொன்று) திவோதாஸனுக்குச் செய்த்த்துதவி சுற்ற மற்ற கீர்த்தியை யுங்களுக்களித்தது—(எ-று.) வியி: என்பது வடமொழிப் பதம் அதற்கு மாவி னென்னுது புள்ளின் என்பார் மேனுட்டாசிரியர். சுதிரையாயினும் சிறகுண்டை பற்றிப் புள்ளின் என்பதுபோலாமே. மாவின், மாவோடு கூடிய வென்கை

மண்டலம். 1 சூக்தம் 119.

செய்யுளில் ஸமுத்திரத்தைத் தாண்டி நாவாயிலும், ஸமுத்திரக் கரையிலிருந்து துக்கிர னில்லத்துக்குப் போகக் குதிரை வாய்ந்த தேரிலும் கொண்டு போனார்கள் என்று சொல்வது போலத் தெரியும். ஆனால் அசுவினிகளின் ஊர்தி, தண்ணீரிலும் அந்தர மார்க்கத்திலும் பூமியிலும் போக வல்லது. தண்ணீரிற் போகும்போது அதற்குள்ள நூறு துடுப்புக்களும் உபயோகமாகும். பூமியிற் போகும்போது அவ்வூர்தியிற் கட்டியபரிகள் அதனை இழுத்துச்செல்லும். அந்தரத்திற் செல்லும் போது அப்பரிகளே தங்கள் சிறகுகளின் உதவியாற் பறந்து செல்லு மென்க. மண். 1 சூக். 116 செய். 3, 5 பார்க்க. திவோதாஸனைப் பற்றி மண். 1. சூக். 116. செய். 18 பார்க்க.

5. சேர்ப்பஞ்சார்காட்சியுறப்பூட்டியதேர்ப்பரியிரண்டைச்சுவைக்கரே
தாபமிலர்க்குரல்தொண்டு தூண்டவவைமுந்தினவால்,முடிவுசார;
ஏழ்பரியோன்மகள்யுவதிநண்பினவேட்டும்மருகேயேய்ந்தாளும்மைச்
சேர்பையுறுபதிகளெனாயகராய்வரித்திட்டாள்துலங்கமர்தோ.

(இ-ள்.) அழகிய தோற்றத்திற்காக உமது தேரிற் பூட்டிய இரண்டு குதிரைகளையும் நீர் தூண்ட அவை போய்ச்சேர வேண்டிய விடத்தைச் சேர்வதற்காக முந்தின. ஸூர்யபுத்திரியாகியயுவதி உம்முடைய ஸ்நேகத்தைவிரும்பி உம்மை யடைந்தவள் உம்மையே நாயகர்களாக வரித்தாள்—(எ-று.) மணுவானது தோழர்களாக வந்த உம்மை மணுவாளர்கள் ஆக்கிக் கொண்டா னென்பது பொரு ளென்பார் (Ludwig) லுட்விக் என்பவர். அது உண்மையே. முதலில் அவளை ஸோமனுக்குக் கொடுப்பதாகவே யேற்பாடாயிருந்தது, மண். 1 சூக். 34. செய். 5 பார்க்க.

வருக்கம் 20.

6. இரேபனைப்பீடிப்போர்தமுபத்திரவநின்றளித்தீர்;எரியுங்கூட்டிற்
புராதனத்துவருந்தியவத்திரியையிமத்தாற்றணித்துப்புகழிற்
காத்தீர்;
தராதபயசினைத்தருவான்சயுப்பசுவைச்சமைத்திட்டீர்;சார்ந்தவாயுள்
தராதலத்தேமிகப்பெருகவந்தநனுக்குதவியினைத்தந்தாண்டீரே.

(இ-ள்.) (அசுவினிகளே!) ரேபனை யிம்சித்த அசுரர்களது உபத்திரவத்தினின்று அவனைக் காப்பாற்றினீர்கள். அக்கினிப்பொறி யிலகப்பட்டு வருந்திய அத்திரியைப் பனியால் (அல்லது மழைத்தண்ணீரினால்) காத்தீர்கள். சயுவின்துபசு (பயஸை) பாலைத்தரும்படி செய்தீர்கள், வந்தனனுக்கு ஆயுள் வளரும் வண்ணம் உதவி செய்தீர்கள்—(எ-று.) பயசு, (பயஸ்) பால். ரேபன், அத்ரி, சயு, வந்தனன் இவர்களைப் பற்றி, மண். 1. சூக். 112. செய். 5; மண். 1 சூக். 51. செய். 3, மண். 1 சூக். 112 செய் 3, மண். 1 சூக். 119 செய். 11 இவற்றில் முறையே பார்க்க.

7. அழகமர்தோற்றத்தொளிர்வீரருந்திறலிற்றொழில்புரிவீ,ராய்ணீண்டு
பழகியதாற்சரையாரும்வந்தநனைத்தேர்போலப்பழுதுபார்த்துக்
குழகுறவேசெய்தனிர்;கேத்திரத்துறைந்துதிமறையோன்குலவுசண்மந்
றழுவும்வகையமைத்தீர்;எத்தடுப்போற்கும்பேருதவி சார்க சீரே.

(இ-ள்.) அழகிய தோற்றத்தையுடையவர்களே! சாமர்த்தியமான கார்யங்களைச் செய்பவர்களே! வயது முதிர்ந்ததனாற் சிறந்த கன்மையையுடைந்த

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

வந்தனைத், தேரைப் புதிப்பிப்பது போற் புதிப்பித்து, அவன் மீண்டும் இளமை பெறச் செய்தீர்கள். கருப்பத்திலிருந்து துதித்த வாமதேவன் கருப்பஸ்தானத்திலிருந்து வெளிப்படும் வண்ணம் (அதாவது பிறக்கும் வண்ணம்) செய்தீர்கள். உம்மைவணங்கும் யஜமானனுக்கும் உமது உதவிகள் நன்முகப் பொருந்தட்டும்—(எ-று.) ஜன்மம்; சன்மம், பிறப்பு. வந்தனைக் கிணற் றினின்றெடுத்தது மாத்திரமேயன்றி யவனுக்கு மீட்டும் இளமை வருவித் ததாகவும் இச் செய்யுளாற் றெரிகிறது. வாமதேவன் அம்மறையோனென்று ஸாயணர் சொல்லுகிறார். கேத்திரம், க்ஷேத்ரம், ஜாகஸ்தான மென்பார் ஸாயணர்.

8. தந்தைவிடத்தவிற்றூரதேசமதிற்றுன்பார்ந்துதயங்குமன்னன்
முந்துதுதித்திடவவன்மாட்டேகினீர்;நீர்செய்தமொய்ம்பாரூதி
கந்துவானெறியொளியிங்கட்டந்திட்டது;அவனருகேநாடிநின்று
விந்தையுறநீர்செய்ததனேவியப்பையெவ்வுயிர்க்கும்விளாவித்தன்றே.

(இ-ள்.) தந்தை விட்டுவிட்டதாற் றூரதேசமான ஸமுத்திர மத்தியில் விழுந்து துன்பப்படும் அப்புஜ்யன் உம்மைத் துதிக்க அவனிடத்துச் சென்றீர்கள். நீங்கள் செய்தவுதவி விண்ணையடைந்து சித்திர காந்தியோடு இப்பக்கத்தில் வீசிற்று. அவன்து ஸமீபத்தே நின்று நீர் செய்த தூனை யெல்லாவுயிர்களுக்கும் ஆசைப்படத்தக்கதாயிருந்தது—(எ-று.) புஜ்யனை அவன் தந்தை தள்ளி விட்டது மோசக் கருத்தோ டென்பார் மேனுட்டாசிரியர். ஷக்தி, உதவி.

9. மீன்னுமுமை,மதுவாய்ந்தீர்,தேனீயுமதுவிரும்பிப்பெரிதும்பாடிற்;
றின்னுமவுசிஜன்சோமமார்ந்துமதங்கொண்டும்மையெதிர்விளித்தான்;
உன்னுமன்னதீசியினதும்மனத்தோடொன்றுவித்தீரோங்கும்பாய்ம
வின்னலத்தினீரமைத்ததலையுமக்குமன்பின்மதுவியம்பிற்றன்றே.

(இ-று.) மதுவடைந்தவர்களே! பின்னும் தேனீயானது மதுவைவிரும்பி யும்மை ஸ்தோத்திரஞ் செய்தது. உசிஜ புத்திரனுகிய ககூீவான் ஸோமத்தைக் குடித்து மதத்தை யடைந்து உம்மைக் கூவினன். ததீசியைச்சேவித்து அவன் மனமும் உம்மனமும் ஒன்று படச்செய்தீர்கள். அவனுக்கு நீரமைத்த குதிரைத்தலை யுமக்கு அன்போடு மதுவித்தையை யுபதேசித்தது—(எ-று.) தேனீ யென்பதும் கட்சீவானையே குறிக்குமென்பார் மேனுட்டாசிரியர். ததீசி, மண். 1 சூக் 116 செய், 12 பார்க்க.

10. பலர்நயக்குந்தன்மையதாய்ப்,பகைவரினைக்கடப்பதுவாய்ப்,பண்பின்
வெண்மை
நலநயந்துயுத்தமதிலம்புதொடுசயிக்கரிதாய்,நாடுங்கன்மம்
பலநயக்கும்போதெல்லாமுபயோகப்படுஞ்சீர்த்தாய்ப்,பாகசாதன்
வலிநயந்துபகைவரைமேற்கொள்பரியைப்பேதுவுக்குமகிழ்ந்தீத்தீரே.

(இ-ள்.) பலரும் விரும்புந் தன்மையோடு கூடியதாய்ப், பகைவர்களைக் கடந்து செல்வதாய், வெண்மை நிறமுள்ளதாய், யுத்தத்தில் அம்பிஞற் சயிக்கமுடியாததாய், இந்திரனது வலிமையை யொத்த பலம் பொருந்தியதாய்ப், பகைவரைச் சயிப்பதாயுள்ள குதிரையைப் பேதுவுக்களித்தீர்கள்-(எ-று.) பேது, மண். 1 சூக். 117 செய். 9 பார்க்க.

மண்டலம் 1 சூக்தம் 120.

மேற் சூக்தங்களில் அசுவினிகளைப் பற்றிச் சொல்லியவை சிற்சில இயற்கை யாவிர்ப்பவங்களைக் குறிப்பன வென்றும், அவற்றை வெறுங்கதை களாக மாத்திரங் கொள்ளுவது நியாயமல்ல வென்றும் மோட்ச மூலர்மதத் தை யநுஸரித்த (Benfey) பென்வே யென்பவர் கூறுவார். யாஸ்கர் மத மும் அதுவே. ஆனல் மூர் (Muir) என்பவர் அவை பத்தகையவாயின் இத்தனை வேறு பட்ட பெயர்களோடு மாறுபட்ட பலசூணிலைகளில் வர் ணிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும், அதனல் அவ்வக் காலங்களில் அசுவினிகள் செய்ததாகச் சொல்லக் கேட்ட கதைகளைத் தொகுத்து இச்சூக் தங்களை யவ்விருடிகள் எழுதினதேயன்றி வேறில்லையென்றும்சொல்லுவர்.

வருக்கம் 21.

120. மண்டலம். 1 அநுவாகம். 17. சூக்தம் 5.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கட்சீவான்: வடமொழிச் சந்தம்: 1, 10, 11, 12 காயத்ரி, 2 ககுப், 3காவிராஜ், 4 நஷ்டரூபி, 5 தநுசிரா, 6 உஷ்ணி, 7 விஷ்டாரப்ரஹதி, 8 க்ருதி, 9 விராஜ்; தேவதை: யசுவினிகள்.

ககுப் தநுசிரா, உஷ்ணி, க்ருதி இவை கர்தாநுரூபிக் கலிவிருத்தத்தி லும், விஷ்டாரப் ரஹதி-ப்ரஹதி போலும், நஷ்டரூபி கலிநிலைத்துறையி லும், காவிராஜ் விராஜ் இவை மூன்றடித்தாழிசையிலும்,யாக்கப் பட்டுள்ளன.

(வேறு.)

1. எத்தனிது மருளினை யேய்த்திடும்?
ஒத்த வும்மிரு வோரையு, மச்விஸீர்?
நத்தி யின்பனித் தோங்குவின் நாடின்யார்?
சித்த ஞான மிலானெங்ஙன் செய்வனே?

(இ-ள்.) எந்தஸ்தோத்திரமானது உமது அருளைக்கொண்டுவந்து தரும்? அசுவினிகளே! உம்மிருவரையும் விரும்பி உங்களுக்கு ஸந்தோஷ மூட்டுவோன் யார்? உமது மஹிமை யறியாத அஜ்ஞானி யுங்களை யெவ்வி தம் துதித்து வணங்குவான்?—(எ-று.)

(வேறு.)

2. இற்றை சடருமே மெழில் ஞானிகளை
யுற்றே வழி வேண்டுவர்; மற்றையவர்
சற்றே யுணர்ச்சி; பகைதான்டறியீர்,
மற்றை விரைவின் மரணர்க் கருளீர்.

(இ-ள்.) இம்மாதிரியாகவே யறிவில்லாதவர்களும் ஞானிகளாகிய அச்வினிகளையடைந்து அவர்களைப்போற்றும் நெறிகளைக் கற்பிக்கும்படி வேண்டிக்கொள்வார்கள். அசுவினிகளல்லாத இதரர்கள் கொஞ்சமும் அந் நெறிகளை யுணராமாட்டார்கள். பகைவர்களைக் கடக்கமுடியாதவர்களே! வேகமாக மனிதர்களுக்குச் செல்வந்தருவீர்களாக—(எ-று.)

அஷ்டகம் 1. அத்தியாயம் 8.

(வேறு.)

3. மூதறிஞரா முமையா முற்படவே யழைக்கின்றேம்;
மூதறிஞர் நீரெமக்கின் றுயர்துதியை மொழிந்திடுக;
வாதரத்தி னுமைவிரும்பி யர்ச்சித்தே னிப்பொழுதே.

(இ-ள்.) வித்வாம்ஸர்களாகிய உம்மை யாங்கள் முன்னர் அழைக்கின்றேம். வித்வாம்ஸர்களாகிய நீரெமக்குச் சிறந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லிக் கொடுப்பீர்களாக. ஆசையோடு உம்மை இப்பொழுது ஹவியோடும் வணங்கினேன்—(எ-று.).

(வேறு.)

4 பக்குவமதிப் பிறகடவுளரை யான் வினவேன்;
மிக்குயர் வலித்தோற்றத்தீர், விளம்புக வஷட்டோ
டெக்கியத்துறு மற்புதம்; எங்களுக்காக்க,
மிக்க நல்வலிக் கருவமா ரதனின் மேற்றூக்க.

(இ-ள்.) அழகிய தோற்றத்தையுடையவர்களே! பக்குவ ஞானம் பொருந்திய வேறுதேவர்களை யான் கேட்கமாட்டேன் (அவர்கள் உம்மளவு பெருமையற்றவர்களாலென்க) யக்ஞத்தில் 'வஷட்' டென்னும் பிரயோகச்சொல் செய்யும் அற்புதத்தை யுரைப்பீர்களாக. மிகுந்த வலிமைபொருந்தியதும் கர்வமுள்ளதுமான அதனின்று மெம்மையுயர்த்திக் காப்பாற்றுவீர்களாக—(எ-று.) வஷட் என்று செய்யும் ஆஹுதி நன்மையைத்தரும். ஆயினும் அம்மறையை முறை பிறழக் கூறியுபதேசித்தல் வெகுவாகிய கேட்டைத்தரும். ஆகையால் அவ் 'வஷட்' டின் அற்புத சக்தியை யெமக்குணர்த்துவதுடன் அதனால் ஒருவிதக் கேடும் நேராதபடி யெம்மைக்காப்பீர்களாக வென்று கவிபிரார்த்தித்துக் கொண்டபடி யென்பர் மேனுட்டாசிரியர். வஷட்டென்பதற்கு, 'அக்னியாகிய அவன் அவியைத் தேவர்களிடத்துச் சுமந்து செல்லட்டும்.' என்பது பொருள். மண். 1 சூக். 31. செய். 5 நோக்குக.

(வேறு.)

5. கோடன் பிருகு நிகர் சோபையுற
நாடும் மறையைப் பஜிரான் குடியோன்
தேடி யறிவிற் பெரியோன் சிவணப்
பாடு மதுவும் பலரு முகவே.

(இ-ள்.) கோஷாவினது புத்திரனுகிய ஸுஹஸ்த்யன் பிருகுவினது சோபையைப்போன்ற சோபையை யடைவதற்காக விரும்பியோதிய மந்திரதனைப் பஜ்ரன் வம்சத்தவனுகிய கட்சீவான் தேடிக்கண்டுபிடித்து (அன்னமிச்சிக்கும்)வித்வானைப்போலப் பாடுகின்ற மந்திரமானது பலரும் கூடியதாக, விருக்கட்டும்-(எ-று.) கோஷா இம்மறையைக்கண்ட கட்சீவானது புத்தினி, பிரஹ்ம வாதினி. அவளது மகன் பெயர் ஸுஹஸ்த்யன் என்பார் ஸாயணர். மண். 1 சூக். 117 செய். 7 பார்க்க. பஜ்ரன் அங்கிரஸ குலத்தவன். அவன்குலத்தவன் கட்சீவான் என்க.

மண்டலம் 1 சூக்தம் 120.

6. 'காயத்ரூ தங்நடை மந்த முளோன்
காயத்ரிரி கேட் டவனம்பகமீர்
தேய் அச்சுவினீர், சுபவெம்பதியீர்,
எவத்தருவீர் பல?னென் றறைவேன்.

(இ ள்.) 'அசுவினிகளே! சுபப்பதிகளே! (கண்ணிழந்ததனால்) நடையின் வேகம் குறைந்த ரிஜ்ராச்வன் காயத்திரிச் சந்தஸ்ஸான மந்திரத்தாற் றுதித்ததைக்கேட்டு அவனது கண்ணை யீந்தவர்களே! யான் விரும்பியபலன்களையும் தருவீர்களாக,' வென்று நாணுந்துதிப்பேன்-(எ-று) ரிஜ்ராச்வனென்பது ஸாயணருரை.

(வேறு:)

7. பெரிய செல்வந் தருபவர்களர்; பேசு மதனைக் காத்தழிப்பீர்;
அரிய வசுவி னுயகர்காள், நீங்க ளெம்மை நன்கிரட்சித்,
தூரிய வெமது பொருளினிய் வோங்கும் பாப சிந்தையுடன்
நிரியுங் காட்டு நாய்நின் றுஞ்செம்மை யாகக் காப்பீரே.

(இ-ள்.) அசுவினிகளே! மகத்தாகிய செல்வத்தையளிப்பவர்களே! அச்செல்வத்தைக்காப்பவர்களும் அழிப்பவர்களும் நீங்களே! வஸுக்களே! நீங்கள் எங்களை நன்றாக இரட்சிப்பதுடன், பாப சிந்தையோடு எங்கள்சொத்துக்களைத்திருட நினைத்துத்திரியும் ஓநாய் போன்ற திருடன்கையிலகப்பட்டதபடியும் காப்பீர்களாக—(எ-று.) காட்டுநாய் ஓநாய், அது திருடனுக்காக நின்றது என்பார் ஸாயணர்.

(வேறு.)

8. விழையா னெருவன் வயினெம்மை விடீர்;
எழில்கெரண் மடியி லெமதுண் டியினைத்
தழுவுங் கபில தமகன் றீன விட்
டொழுகா தருளீ ரியலா வுழையே.

(இ-ள்,) (அசுவினிகளே!) எம்மை விரும்பாத பகைவனிடத்து எம்மைத்தந்து விடாதீர்கள். எமக்குவேண்டிய வுணவை மடியிற்றருங்கும் பசுக்கள் தங்கள் கன்றுகளை விட்டு எமக்கியலாத (எம்மால் அடையமுடியாத) இடத்திற்போய்விடாதபடி யருளுவீர்களாக—(எ-று.)

(வேறு.)

9. உமைவிரும்புந் துதியாளர் நண்புர்களை யோம்புதற்கென்
றமைவலிநற் றனமதனை யடைவர்; அதை யாமுமுறல்;
எமையவ்வா னருளுகவாற் பசுவாரு மன்னமுமே.

(இ-ள்.) உமை விரும்பும் ஸ்தோதாக்கள் மித்திரர்களைக் (பந்துக்களையென்பார் ஸாயணர்.) காப்பாற்றுவதற்காக வலிமைபொருந்திய செல்வத்தை உம்மிடத்திலிருந்து பெறுவர். அத்தகைய வலிமை பொருந்திய செல்வமுடையவர்களாக எங்களையுஞ் செய்வீர்களாக. பசுக்களோடு கூடிய உணவினை யாங்களடையுமாறு செய்வீர்களாக—(எ-று.) பசுவாருமன்ன மென்பதற்குப் பசுக்கள்தரும் பால்முதலிய உணவுப்பொருள்களென்பார் மேனாட்டாரிரியர்.

(வேறு.)

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

10. வன்புறையுஞ் செயன்மலி யச்வினீர்
கொன்பெறுந்தேர் குதிரையே யில்லது
மன்பெறவே யடைந்தனென்; பூரியும்
பின்பு வேண்டினென் பெற்றேனத் தேரினே.

(இ-ள்.) வலிமைபொருந்திய செயல்கள் மலிந்த அசுவினிகளது பெருமை வாய்ந்த தேர், குதிரை கட்டாது ஓடுவதை யான் (வணங்கி) யடைந்தேன். மிகுந்த கீர்த்தியோடு கூடிய செல்வத்தை விரும்பி அத்தேரினின்றும் அதனைப் பெற்றேன்—(எ-து.) பூரி ப்ரபூதம் ச்ரேய: என்பார் ஸாயணர். மிகுந்த கீர்த்தி அல்லது செல்வமென்றுஞ் சொல்லலாம்.

11. செல்வமோடுறு தேர், எந் தறுவினைப்
பல்கு மாறு புரிக; பலசுக
நல்கு தேரு நல்க்க மனிதர்க்கண்
மல்கு சோமம் பருகத் தருகவே.

(இ-ள்.) செல்வத்தோடுகூடவுறும் (அசுவினிகளது) தேரே! நீ எம்மு சரீரத்தைப் (புத்தி பெளத்திராதி ஸந்தானகளைப்பெறும் வண்ணம்) விஸ்தாரப்படுத்துவாயாக. பலவித ஸுகங்களையும் தருந் தேர், யஜமானர்களிடத்துள்ள ஸோமத்தைக்குடிக்க அசுவினிகளை யவரிடத்துச்கொண்டுவரட்டும்—(எ-து) முன்னிலைப் படர்க்கை மாற்று.

12. வைகல் வேளைக் கனவின் விலகினேன்;
வைகு நற்றனம் வாய்ந்தும் பிறர்க்களித்
துய்குறுதவனி னெழிந்தனென்;
ஐகென வழிவா ருபயருமே.

(இ-ள்) விடியற்காலத்திற் றோன்றும் ஸ்வப்நத்தினின்றும் விலகினேன். பொருள் பெற்றும் அந்தஸ்வப்நமும், இந்த லோபியும் விரைவில் அழிவது நிச்சயம்—(எ-து.) ஸ்வப்நத்திற்கண்ட பொருள் கைகூடாததுபோல அநுபவியாதவனது சொத்தும் விரைவில் அழியும். இவ்விரண்டினுமை சொத்துஞ்சுகமும் எனக்கு உபத்ரவமில்லை யென்றுபொருள். இங்கே ஸ்வப்நமாதிரத்தினால் ஸத்துவமின்மையைப் பிரதிபாதிப்பதிலிருந்து, துஸ்ஸ்வப்நாதிகளுக்கும் பல மில்லை யெனப் போதருதலால், இச்செய்யுள் துஸ்ஸ்வப்ந நாசனீயம் என்பார் ஸாயணர்.

வருக்கம். 23.

121. மண்டலம் 1. அநுவாகம் 18 சூக்தம் 1.

23 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: கட்சீவான்; வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்ஜகதீவதை: விச்வதேவர்கள் அல்லது இந்திரன்.

(வேறு)

1. ஒளிபெறு வள்ள றன்னே யுன்னியங்கிரசன் மக்கள்
அளிபெற வோதும் போற்றை நரராளிப்பவனென் றேற்பான்?
தளியென வினகு மில்லைச் சனத்தினைச் சாரும் போது
தெளிவுறு தறிக்கு வாய்மே லான் றிகழுயன் மகத்தின் மாடே.

மண்டலம் 1 சூக்தம் 121.

(இ-து.) காந்திபொருந்திய தான கர்த்தாவாகிய விந்திரனே யென்ஸ்ரீ அவனது தண்ணளியைப்பெற அங்கிரஸன் வம்சத்து மக்களாகிய யாங்கள் கூறும் ஸ்துதிகளை, மாந்தரை (நேதாக்களை) க்காப்பவனுகிய அவ்விந்திரன் எப்பொழுது ஏற்பான்? யக்ஞக்கிரஹத்திலுள்ள ரித்விஜர்களாகிய ஜனங்களே யடையும் போது துதிக்க அல்லது வணங்கத் தகுந்தவனுகிய அவன் யக்ஞத்தினிடத்து விளங்கிமகிழ்வன்—(எ-து) தளியென விளங்கும் என்னும் அடை வடமொழி மூலத்திலில்லை; யக்ஞக் கிரஹங்களில் தேவ கார்யங்கள் நடப்பதாற் கோயில் போன்று என்று கூறினர் செய்யுளில்.

2. வானுல கவனமைத்தான்; பசுக்களி னேதா, காந்தி
தானுறு மூடலோன் றண்ணீர் சேர்பெற வவற்றின் பின்னர்
மானுற வோட விட்டான், மகத்துவ, னிரவின் பின்னர்,
ஞனுற வடவை கன்றை யியைத்,தொளி கான்றிட்டானே.

(இ-ள்.) அவ்விந்திரன் விண்ணுலகத்தை நிலைப்பித்தான். பணி யென்னு மசுரனுற் கவரப்பட்ட பசுக்களை (அதாவது மழைமுகில்களை)க் கொண்டு வரும் நேதாவாகிய விந்திரன் அப்பசுக்களின் பின் ஓடிவரும் மழைத் தண்ணீரைப் பிராணிகளுக்கு உபயோக மாகும் வண்ணம் பெய்வித்தான். மகாருகிய வவன் பெட்டைக் குதிரையாகிய லீலார்த்தமாக ஒரு பசுக் கன்றை யுற்பவிக்கச செய்து, (தான் எப்பொழுதும் ஸ்வயம் பிரகாசனுயிருந்தும்) இரவிற்குப்பின் (இனத்தினுல் வைகலையுள் ஒக்காளுக வென்பார் ஸாயணர்) ஸூர்ய ரூபமாக நின்று பிரகாசிக்கிருன்—(எ-து.) ஊழிக் கென்பவர் மாதரம் கோ: என்பதை மாதரம்தாம் எனமாற்றி சூரியனுக்கு (சூர்யனுக்கு) ச்சோடி, எல்லாவற்றிக்கும் தாய் நிலையிலுள்ள பூமியாகிய பசு வென்பர்.

3. அங்கிரர்க் கென்றும் பொன்னீர் தருணமாருவதை விளக்கித்
தங்கிய வவன் பழமை சாரழைப்பதனைக் கேட்க;
தவகிடக கொலையிற் சம்பந்தயக்கிஞன்; விண்ணமைத்தான்
துங்கமாரிருகான் மாந்த ரொடு சதுஷ் பதங்களுக் கே.

(இ-ள்.) அங்கிரஸவம்சத்து மனிதர்களுக்கு அறுதினமும் தனத்தையளிப்பவனும், செந நிறமான உதயஸைப்பிரகாசிப்பிப்பவனு மான (அச்சூரியரூபமான) விந்திரன பழமையாக உபயோகிக்கப்பட்ட இப்பொழுது நாங்கள் கூறும் ஆஹ்வானங்களை (அழைப்புக்களை) க்கேட்கட்டும். மேலும் அவ்விந்திரன் தனது ஆயுதமாகிய வசிராயுதம் எப்பொழுதும் கொலை பயின்ற வண்ணமாகவே யிருக்கும்படி செயதான். இரண்டு கால மனிதருக் காகவும்; நாற்கால் பிராணிகளுக்காகவும் விண்ணைக் கீழ் விழாது விடாதபடி நிறுத்தினுன்—(எ-து)

4. இதன் மதங் கொண்டு நீயு முனைத்துதி மகத்திற்காகப்
பதமுற முழங்கும் ஆக்கள் குகை பதிதவற்றைத் தந்தாய்;
கதமுற முவவுலகுங கதித்துயர்ந்தவன், போர் கோரிற்
பதனற மகாரை வாட்டும் பாதையை விலக்குவானே.

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

(இ-ள்.) (இந்திரனே!) இந்த ஸோமத்தைக் குடித்தலால் வரும் உற்சாகத்தால் நீ புன்னைவனங்கும் யக்ஞத்திற்காகப் (பணியென்னு மசுரனுல்) குகைக் கண் அடைத்து வைக்கப்பட்ட பசுக்களே (மழைமேகங்களே) த்திறந்து விட்டாய். மூன்றுலகங்களிலும் உன்னதமான விந்திரன் யுத்தம் நேர்ந்தால் மனிதரையிம்சிக்கும் பாதைகளை விலக்கி விடுவான்—(எ-று.) இடமாற்றை நோக்குக. த்ரிகுப் என்பதற்கு முப்பட்டையாய்க் கூரிய வச்சிராயுதம் என்பார் மேனுட்டாசிரியர். "முக் கூருள்ளது வேகத்தோடு எதிர்த்து வரும்போது, இந்திரன் மனிதனுக்கு இடைஞ்சல் செய்யும் கதவுகளையெல்லாம் பாக்கத்திறகிறுன்." என்று பின்னிரண்டடியை மொழிபெயர்ப்பார் அவர் பசுக்கள் கதையை மண். 1 சூக். 62 செய். 3 பார்க்க.

5. வல்கதிப் பெற்றேர், பூமி வளமுறுத்துபவ ரோங்கும்
பல்சுவையவியாஞ் செல்வப் பான்மை சார்தூயபாலை,
மல்குறச் சுரக்கு மாக்கண் மடியினின் றெழுகும் மீதை,
நல்கியுன் றனைக் குறித்து யமகம் புரிந்த போதே.

(இ-ள்.) வேகமானகதியோடு செல்லும் பெற்றேரும், எல்லா ஜகங்களையும் வளப்படுத்துபவர்களுமாகிய நியாவாப் பிருதுவிகள், பலவித சுவையோடு கூடிய அவியும், செல்வ நிறைந்ததும், பரிசுத்தமானதும், நன்றுகச் சுரக்கும் பசுக்களின் மடியிலிருந்து ஒழுகுவதுமான பாலைத் தந்து உன்னைக் குறித்து யக்ஞநடத்திய போது—(எ-று.) ஈ (இந்திரன்)· மனிதரையிம்சிக்கும் பாதைகளை விலக்கி விடுவா யென மேற்-பாட்டினின்றும் ஒருவாக்கியம் எடுத்துக் கூட்டுக வென்பார் ஸ்ரயணர்.

அநிகிக்க ணுவுதியை யார்ந்தளிக்க வாதித்யன்
தருகிறு, னன்ஞன் றழைத்திடவே———மங்குல்
மழையீந்த, தம்மழைபோல் வான்பயிரோங் கிற்றி ஃதா
விழி வினரர் வந்தனரென் றேத்து. என்னுஞ் செய்யுளின் கருத்தா ணன்டு ப்ரதிபாதிக்கப் பட்டது.

வருக்கம் 24.

6. பிறந்தனு னங்கே யன்ஞன்; பகைவரைப் பேர்க்குஞ் சோமம்
பிறங்குறும் வைக லென்றூழ் பெருகொளி மான வீரித்
திறம் பெற மதம்ளிக்கல், சேர்ந்திடு மவி மிக் கீத்துச்
சிறந்த கல்லிடத்திற் போற்றிற் சுருக்கொடு பொழிவேமுக்கே.

(இ-ள்.) அவ்விந்திரன் அவவிடத்துத் (துதியை விரும்பினவனுய்த்) தோன்றினுன் பகைவரை வாட்டும் ஸோமமானது, உஷஸ் காலத்துக்குப் பின் ஒளிவிட்டுத் தோன்றும் சூரியனது காந்தியைப் போன்ற ஒளியைவீசி, அவிப்பொருள்களை யதேஷ்டமாக வளித்து, ஆஹவனீயமாகிய கல்ல ஸ்தானத்தில் ஸ்தோத்திரங்களோடு சுருக்கினுல் ஆஹுதி செய்யும எங்களுக்கு மதத்தைத் தரட்டும்—(எ-று.)

7. நன் மாத்துண்டாலான விந்தனங் குவிந்த நாளில்
வன்மையி னத்து வாயு பசுவினை வரியாநிற்பன்;
கன்மமார்பகலிற்ருனக்கதிரொளிர்றிகாலை நீயும்
பொன்மயச் சகடங் காட்டுட் போகருவாய் சமித்துக் கென்றே.

மண்டலம் 1 சூக்தம் 121.

(இ-ள்.) நல்லமரக் கட்டைகளாலான விந்தனங்கள் மூட்டப் பட்டிருயு மந்நாளில், ஸுரஞுகிய அத்வர்யு யாகப் பசுவை யூபத்திற் கட்டுவான். இந்திரனே! தர்மம் புரியு நாட்களில் சூரியு ரூபமான நீ பிரகாசிக்கும் போது சமித்துக் கொண்டு வருவதற்காக வண்டியைக் காட்டுக்குட் செல்லு மாறு தூண்டி விடுவாய்—(எ-று.) இச் செய்யுட்கு வேறொரு பொருளுமுண்டு. அதற்குச் செய்யுள் வருமாறு:

சூரியன் கதிரோன் மேகசாலம் பெய்விக்க் விண்ணில்
நேரியன் மகத்துக்காகச் சூரனப் படலஞ் சீப்பான்;
தாரி அற்றியங்குஞ் சாரித் சார்ந்தள பசுவை பீட்ட
வேரினின் விரைகுவாய் நீ யென்ணுமம் மாந்தர்க்கென்றே.

(இ-ள்.) சூரிய கிரணங்களைக்கொண்டு மேகக் கூட்டங்கள் மழையைப் பெய்விக்கும்போது, இம்சிக்கப்படாதவனும் அங்காத்திற் சென்று, சூரனுகிய விந்திரன் யாககார்யங்கள் செலவனே நிறையேறும் பொருட்டு அம்மேகப் புரைகளை கன்குக் கிழிந்து விடுவான். இந்திரனே! செல்வத்திற்கு வழியில்லாத விடங்களிற் றிரியும் பசுகளைத் திரட்டவெண்ணும் மனிதர்களுக்காக நீ விரைவாகச் சென்று அப் பசுக்களைத் திரட்டுவாய் —(எ-று) இவ்விரண்டு செய்யுட்களிலும பின்னிரண்டடிகள் பிரத்தியக்ஷிருதம், அதாவது முன்னிலையாகக் கூறியது.

8. கற் கொண்டு, மத வின்பூட்டும், பாலொடுகலந்தசோமம்,
மூற் கொண்ட காற்றினையும் பாரு வான் பிழிகண்மத்தை
நிற் கொண்ட குடிமா மிச்சங் குடித்திட, நிமிர்ந்த போரோய்,
மற் கொண்ட வெஞ்சீர் வாட்டும் பகைவரை வாட்டு வாயே.

(இ-ள்.) மதத்தையும், மனோரதத்தையு மூட்டுவதும், பசுவின் பால் கலந்து பலத்தை யடைந்தும், காற்றைப் போல வேகமாக உன்னுற் குடிக்கப்படுவது மான லோமம், கற்களால் நசுக்கிப்பிழியப் படும்போது உனது லோமங்குடிக்குங் குதிரைகளிரண்டும், மிச்சத்தைக் குடிக்கட்டும்; போரில் வல்லவனே! எமது செல்வத்தைக் கெடுக்கும் பகைவரை நீ யழிப்பாயாக —(எ-று.)

9. குற்சனுக் குதவியாகச் சுட்டுணன் றனைக் கணக்கி
னற் சரம், புரு கூதன்னே, நாடிச் சூழ்காலை, வானின்
றெற் செறி துவட்டா வீந்த வயக்குலிசத்தை, மாற்றார்
கற் செறி தோளை வாட்டுங் கருவியை வீசினையே.

(இ-ள்.) புருகூதனே! (பலராற் போற்றப்படுபவனே!) குத்ஸன் என்னும் ரிஷிக்கு உதவியாகச் சுஷ்ணன் என்னும் அசுரனைக், கணக்கில்லாத கொலைப் படைகளை நாடி யெடுத்துக் கொண்டு சூழ்ந்த போது, விண்ணின் நின்று துவட்டா கொண்டு வந்த ஒளி பொருந்திய இரும்புவச்சிராயுதமாகிய பகைவரை யடர்க்குங் கருவியை நீ வீசினாய் —(எ-று.) குத்ஸன், மண். 1 சூக். 51 செய். 6 பார்க்க.

அஷ்டகம் 1 அத்தியாயம் 8.

10. அத்திரிப் படையோய்! என்றாழடைபடத் தம மூடாமுன்
பொத்திய மேகத்தின் மேற் பொருக்கெனக் கருவி யோச்சிச்
சுற்றுறச் சுழற்று நீள்ற சுட்டெனன் வலியை நன்கு
பற்றற வானி னின்றும் பறித்தனை யுறுதி வாய்ந்தும்.

(இ-ள்.) வச்சிராயுதந் தாங்கிய இந்திரனே! சூரியன் மறையும் வண்ணம் இருட்டிச் சூழ்ந்து கொண்டிருந்தவன்முன் அச் சூரியனை மூடிய மேகத்தின்மே லுன் வச்சிரத்தை வீசி, அம் மேகத்தைச்சுழ்ந்து நின்ற சுவ்ஷ்ணனது பலத்தை யுறுதி யோடிருந்தவனை யெலாந்தனை—(அ-எ) அதனிரிப் படை, வச்சிராயுதம்.

வருக்கம் 25.

11. மிகுவலிப் பெரிய வானம் புவியிவை யருளேயின்றித்
தகு மிடம் பரந்த, வேந்தே, மதத்தை நின் செயற் கணீந்த;
அகி யெனும் வாராகந் தண்ணீ ராழ்ந்துள தனை வன்மை
மிகு மழுவதனற் றாக்க மேவுற வீழ்த்தினையே.

(இ-ள்.) இந்திரனே! மகத்துவமான வலிமைபொருந்திச், சக்கரம் முல்லாம லெல்லா விடத்திலும் வியாபித் தொழுகும் வானம் பூமிகள் விருத்திரவதஞ் செய்யும் கர்மம் போன்ற கர்மங்களில் உனக்குச் சந்தோஷத்தை யூட்டின. தண்ணீர்க்குள் படுத்துக் கிடக்கும் பெரிய உருவமுள்ள விருத்திரனை வலிமை தங்கிய வச்சிராயுதத்தாலடித்து என்றும் தூக்கத்திலேயே கிடக்கும்படி வீழ்த்தினாய்—(எ-று.) வராஹம், பன்றி, கிட அங்க முள்ளது, ஈண்டு அது அகி அல்லது விருத்திரனைக் குறித்து நின்றது.

12. காற்றெனப் பூண்டு செல்லு மாவை நல் வாகனத்தைப்,
போற்றுமம் மனிதர்க் கின்பம் புரிந்திடும் வேந்தே, யேறல்;
சாற்று கவிய னுசானன்சம்பந்திற்கியோமுன்ன
ராற்றினன் மதத்தி னஃதையகி கொன்று பகையை யோட்ட.

(இ-ள்.) ஸ்தோதாக்களுக்கு இன்பத்தைத் தரு மிந்திரனே! தேரிற் பூட்டிக் கொண்டு வாயு வேகமாகச் செல்லும் குதிரைகளாகிய உனது வாஹநங்களே யேறுவாயாக. கவியின் புத்திரனாகிய உசனன் மதத்தித் சிறந்த வச்சிராயுதத்தையுனக்குத் தருவதற்குமுன் அதனை விருத்திரவதஞ் செய்யக் கூடியதாகவும், சத்துருக்களைக் கடக்கவல்லதாகவுஞ் செய்தான்—(எ-று.) உசனு காவயனைப் பற்றி மண். 1 சூக். 51 செய். 10 ற் பார்க்க.

13. சூரியன் கபில மாவைச் சூரனீ நிறுத்த, வன்று
னேரியல் தேருளே யேதச னிழுத்தான், வேந்தே;
பேரியல் பதிற் றொன்பான நதிகளைக் கடந்து பேரச்
சீரியலாத கன்மப் பிரட்டரைச் சேர்த்தா யன்றே.

(இ-ள்.) இந்திரனே! சூரியனது கபில நிறமுள்ள குதிரைகளைச் சூரியரூபமாக வொழுகும் நீ, ஓடாமல் மேற்குக் கரையில் நிறுத்தியபோது; இரவில் அச் சூரியனது தேருளைகளே யேதசன் என்னும் குதிரையானது இழத்து மறுபடியும் கிழக்குப் பக்கத்திற் கொண்டுவந்து விட்டது. யக்ஞ கன்மஞ் செய்யாதவகார்களைக், கப்பல் செல்லக் கூடிய பெரிய நதிகள்

மண்டலம் 1 சூக்தம் 121.

தொண்ணூற்றைந்தாண்டுத் தூர தேசத்திற் போயிருக்கும்படி செய்தாய் —(எ-று) ஏதசன், ஓர் ரிஷியின் பெயர்க. மண். 1 சூ. 61 செய். 15 ல் வந்துளது, (ஆண்டு ஏதஸன் என்பதை ஏதச னெனத் திருத்திக் கொள்ளுக.) ஈண்டு அது சூரியனே யிரவில் மேற்திசையிருந்து கிழக்கிற் கொண்டு வந்து நிறுத்தும் ஒற்றைக் குதிரையாகச் சொல்லப் படுகிறது. தைத்திரீயலம். ஹிதை 1—6—4 பார்க்க ஏதசோக என்னும் வடமொழிப் பதத்திற்கு ஏதசனும் என்றும் உரை கூறுவர் ஸாயணர். (M. Bergaigne) பெர்கேன் என்பவர் ஏதசன் என்னும் ரிஷிக்குப் பதிலாக அவவிருடியாற்காக்கப் படும் அக்கினியை யாவது, அல்லது ஆஹ்வாநி செய்யப்படும் ஸோமத்தை யாவது கூறலா மென்றும், அந்த ஸோமமே அடிக்கடி குதிரையாகவுருவகிதகப் படுவது வேத மரபென்றும், அதனால் ஏதசன் ரிஷி குதிரை ஆகிய இரண்டையும் குறித்தல் தகுதியேயென்றும், கூறுவர்.

14. இந்திர, வெமை யித்துன்பி னெடுக்க வச்சிரத் தோய்; மேலு
மந்தி லெம் பாப மெல்லா மபகரித்திடுக; தேரி
னத்தறு செல்வம், பாய்மா நலக்கவே கூட்டுமெ ஃதை
யெந்தஞ் சீர், உண்மை, யுண்டி யெண்ணியே யிடுக நன்கே.

(இ-ள்.) வச்சிரியே! இந்திரனே! எம்மை இக்கஷ்டத்தினின்றும் நீக்குக. எமது பாபங்களை யெல்லாம் பரிகரிப்பாயாக. எங்களுடைய கீர்த்தியையும், ஸத்தியவாக்கையும், உணவையும் கருதி எங்களுக்குத தேரோடு கூடிய குதிரைகளாகிய செல்வத்தை நன்றாக வளிப்பாயாக—(எ-று.)

15. வலி யினிற் பெருத் தோ, யுன்றன் வளாருண்மதி யெப்போது
நலிவுறு தெம்மைச் சேர்க; நல்லன மெம்மைச் சூழ்க;
வலியுறு பதி நீ கோக்கள் யாம்பெற மகவா னீக;
பொலிவுறு துதியோர் யாமுஞ் சந்ததி பொருந்தி வாழ்க.

(இ-ள்.) வலிமையிற் பெரிய விந்திரனே! உனது அறுக்கிர புத்தியெப்போதுங் கெடாம லெம்மைச் சேருக. நல்ல அன்னமான்று எம்மைப் பொருந்தட்டும், மகவானே! தனஸ்வாமியாகிய நீ எங்களுக்குப் பசுக்களை யளிப்பாயாக. ஸ்தோதாக்களாகிய யாம் புத்திர பௌத்திராதி ஸந்தானங்களோப்பெற்று வாழ்க—(எ-று.) அர்ய: என்பதற்கு தனஸ்வாமியாகிய நீ யென்பார் ஸாயணர். ஆனல் சத்துரு வினுடைய வென்பார் மேனட்டாரிரியர், அற்றேல், 'நலிவுறு பகைவன் காலி ஈம் பெற மகவானீக;' என மூன்ரு மடியை மாற்றிப் படிக்க. இச் சூக்த தேவதை விச்வ தேவர்கள் அல்லது இந்திர னெனக் குறிக்கப் பட்டிருப்பினும், ரிஷி இந்திரனையே முற்றிலும் துதித்துள்ளார்.

வருக்கம் 26.

ஆகச் செய்யுள். 1333.

8-வது அத்தியாயம் முற்றும்.

முதலஷ்டகம் முற்றிற்று.

அஷ்டகம் 1 அத்தியாயம் 121.

வேதக் கதியென்னு மென்னுளர்வைப் பல்லுரையாம்
போதந் தருதாழி பூட்டிநவ — நீதமெனுங்
கட்டுரையோ டிந்நூலைக் கண்டே னருளாளர்
தொட்டுணரும் தூய்மை சுவைக்க

(இ-ள்.) வேதமேகதியென்றென்னிய வென் புத்தியைப் பலபாவ்யங்களாகிய தாழியிற் செலுத்திக் கடைந்தெடுத்ததாகிய 'நவநீதம்' என்னும் பெயரிய உரையோடு கூடிய இந் நூலைச் சொன்னேன், இதனை யருளாளர்கள் படித்தறியும் வண்ணம்—(எ-று.)

வேதபுருஷாய மங்களம்.

பிழை திருத்தம்.

பக்கம் 191. பாட்டு 6. அடி 2. தழிப்பானனனினும் என்பதை தழிப் பானவையெனினும் எனத் திருத்திக் கொள்க.

பக்கம். 362 வரி 16 பராவருஜனது குருட்டுத்தன்மையை நீக்கினீர் என்பதை, பராவ்ருஜனது மூடத் தன்மையை நீக்கினீர்கள். ரிஜ்ராச் வனது குருட்டுத் தன்மையை நீக்கினீர்கள்; என மாற்றுக.

பக்கம். 382 5வது செய்யுளின் உரை முடிவில், மேல் மண். 1 சூக் 119 செய். 4 பார்க்க எனக் கூட்டுக.

பக்கம். 391. 8வது செய்யுளின் உரையில் 4 வது வரியில், கண்ணை யளித்தீர்கள். இக்கண்ணளித்த செய்கை போற்றற் குரியதாம், ந்ருஷத்தன் புத்ரனாகிய நார்ஷதனது செவிட்டை நீக்கினீர்கள; எனப்படிக்க.

அச் செய்யுளின் உரையின் கடை மூன்றடிகளோ, யைகசண்டறிந்ததாகவும், அசுவினிகள் வீணை வாசிக்கும் அச் சத்தத்தைக் கேட்டே உஷஸின் வரவையறிந்ததாகச் சொன்னதாகவும் ஒருகதை யுண்டு. அசுவினியர்களுப் பூஜை இரவின் கடையாமத்தில் நடைபெறுவது யாவர்க்குந் தெரிந்த விஷயம். அப்பூஜாகாலத்து ஸ்தோத்ரங்களோ நாடி யசுவினிகள் செல்லுவதும் விசதமானது, அவர்களது பாட்டோ அவர்களுக்காக ஸ்தோத்ரங்கள் பாடியபாட்டோ நார்ஷதனுடைய கண்ணுவ ரிஷியின் காதிற்பட அவன் விடியற்காலம் சமீபித்ததையுணர்ந்தான்; என மாற்றிப்படிக்க.

393.வதுபக்கம். 14வது பாட்டு உரையின் கடையடியிலுள்ள 120 சூக்தமென்பதை மண். 1. சூத்தம். 119 செய் 4. பார்க்க வெனத்திருத்திக் கொள்க.

முதலஷ்டக அட்டவணை.

இம்முதலஷ்டகத்தில், மதுச்சந்தஸ் முதலிய 16 ரிஷிகள் பாடியுள்ளார். இதனிடத்துக் காயத்ரி முதலிய 23 சந்தஸ்களும் 121 சூக்தமுமுண்டு. இவவஷ்டகத்திற் பாடல்பெற்ற தேவதைகள் அக்னி முதற் முப்பத்தறுவராம். இருள் இரண்டுதேவதைகள் இந்த்ரா வருணர் முதற் பதின்மராம்.

முதல் அஷ்டக அட்டவணை.

இந்நூலின் கண் வரும் தெய்வப் பெயர் மக்கட் பெயர்களுக்கு ஓர் அகராதி இந்நூலினிறுதியில் வெளிவரும். வடமொழிச் சந்தங்களெல்லாம் எழுத்து வகையாலமைக்கப்படுவன. அம்மாதிரி எழுத்தெண்ணி யமைக்கப்படும் தமிழ்ச் செய்யுள் வகைகள் மிகச் சிலவாதலின் அதனைக்கருதாது வடமொழி இருக்குக்களின் அடிப்பெருமை சிறுமைக்கேற்பத்தமிழ்ச் செய்யுள் வகைகளை யமைத்துள்ளாதோடி அவ்வொழுங்கே நூன் முழுதும் பின்பற்றப் பட்டுள்ளது.

அஷ்டகம்.	சுருக்கம்.	சூக்தம்.	வடமொழிரிக்.	தமிழ்ச்செய்யுள்.
1-வது	37	19	194	194
2-வது	38	13	189	189
3-வது	35	14	173	173
4-வது	29	15	152	152
5-வது	31	19	185	155
6-வது	32	14	163	163
7-வது	37	18	172	172
8-வது	26	9	135	135
ஆக. 8	265	121	1363	1333

முதலஷ்டகத்தின் சூக்த அட்டவணை

முதலத்தியாயம்.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிச்சந்தம்.	தமிழ்ச்செய்.
1	மதுச்சந்தஸ்	அக்கினி	காயத்ரி	கலிவிருத்தம்.
2	,,	வாயு இந்திரவா யுக்கள், மித் திராவருணர்.	,,	,,
3	,,	அசுவினிகள் இந்திரன், விச்வ தேவர்கள், ஸரஸ்வதி.	,,	,,
4	,,	இந்திரன்.	,,	,,
5	,,	,,	,,	,,
6	,,	இந்திரன், மருத்துக்கள்.	,,	,,
7	,,	இந்திரா மருத்துக்கள்.	,,	,,
8	,,	இந்திரன்.	,,	,,
9	,,	,,	,,	,,
10	,,	,,	,,	,,
11	ஜேதா	,,	அநுஷ்டுப்	கலிநிலைத்துறை
		,,	,,	,,

ரிக்வேத ஸம்ஹிதை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை	வடமொழிச்சந்தம்.	தமிழ்ச்செய்.
12	மேதாதிதி.	அக்கினி.	காயத்ரி.	கலிவிருத்தம்.
13	,,	அக்கினியின்பல ரூபங்கள்.	,,	,,
14	,,	விச்வதேவர்கள்	,,	,,
15	,,	ரிதுக்கள் இந்திரன், மருத்துக்கள் துவஷ்டா, அக்கினி, மித்திராவருணர், அசுவினிகள்.	,,	,,
16	,,	இந்திரன்.	,,	,,
17	,,	இந்திரா வருணர்.	காயத்ரி, பாதநிச்ருத்.	,, வேறேர்வகைக் கலி
18	,,	பிரஹ்மணஸ்பதி, இந்திரசோமர் தம்பதி.	காயத்ரி.	கலி விருத்தம்.
19	,,	அக்கினியும் மருத்துக்களும்.	,,	,,

2–வது அத்தியாயம்.

20	,,	ரிபுக்கள்.	,,	,,
21	,,	இந்திராக்கினிகள்.	,,	,,
22	,,	அச்வினிகள், ஸவிதா, அக்கினி, இந்திராணி, வாருணி, அக்கினயி மூவரும் வானம் பூமிகள் பூமி, விஷ்ணு.	,,	,,
23	,,	வாயு, இந்திர வாயுக்கள், மித்திரா வருணர்கள், விச்வதேவர் கள், பூஷன்,	,, புரவஸ்ணி, அநுஷ்டுப் பிரதிஷ்டா.	,, கந்தரனுபூதிக் செய்யள் கலிநிலைத் துறை. கலிவிருத்தம்.

முதலஷ்டக அட்டவணை.

சூக்தம்.	ரிஷி	தேவதை.	வடமொழிச்சந்தம்	தமிழ்செய்.
24	சுநச்சேபன்	வருணன், அகநினி, ஸவிதா.	த்ருஷ்டுப் காயதரி	அறுசீர்க்கழி நெடில், கலிவிருத்தம்.
25	,,	வருணன்	காயத்ரி	கலிவிருத்தம்.
26	,,	அகநினி	,,	,,
27	,,	,,	காயத்ரி த்ருஷ்டுப்	கலிவிருத்தம். அறுசீர்க்கழி நெடில்.
28	,,	இந்திரன், உலகமும் உலகத்தையும்.	அநுஷ்டுப் காயத்ரி	கலிநிலத்துறை கலிவிருத்தம்.
29	,,	இந்திரன்.	பங்தி	அறுசீர்க்கழி நெடில் ஓரடி மேல் வைப்பு
30	,,	இந்திரன், அசுவினிகள், உஷஸ்.	காயத்ரி பாதநிச்ருத் த்ருஷ்டுப்	கலிவிருத்தம். நெடி வேறு. அறுசீர்க்கழி நெடில்.
31	ஹிரண்யஸ் தூபன்.	அக்நி.	ஜகதி, த்ருஷ்டுப்.	4 காய்ச் சீருள்ள அறுசீர்க்கழி நெடில், அறுசீர்க்கழி நெடில்.
32	,,	இந்திரன்,	த்ருஷ்டுப்.	அறுசீர்க்கழி நெடில்.

3-வது அத்தியாயம்.

33	ஹிரண்யஸ் தூபன்	இந்திரன்,	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்.
34	,,	அசுவினிகள்,	ஜகதி த்ருஷ்டுப்	நெடி 4 காய்ச் சீருள்ளது, அறுசீர்க்கழி நெடில்.
35	,,	ஸவிதா, அக்நி, மித்திரா வருணாக்கள். இரவு.	,,	,,
36	கண்வன்.	அகநினி, பூபம்.	ப்ரஹதி ஸ்தோப்ரஹதி.	நெடி 3ம் சீரும் 6ம் சீரும் காய்ச்சீருள்ளது, எழுசீர்க்கழி நெடில்.

ரிக்வேத வம்ஹிதை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிச்சந்தம்.	தமிழ்ச்செய்.
37	கண்வன்.	மருத்துக்கள்.	காயத்ரி.	கலிவிருத்தம்.
38	,,	,,	,,	,,
39	,,	,,	ப்ரஹதி ஸதோப்ரஹதி	சூக். 36 போல.
40	,,	ப்ரஹ்மணஸ்பதி	,,	,,
41	,,	வருணன், மித்ரன் அர்யமான், ஆதித்தியர்கள்	காயத்ரி	கலிவிருத்தம்.
42	,,	பூஷன்.	,,	,,
43	,,	ருத்ரன், மித்ரா வருணர், ஸோமன்.	அநுஷ்டுப்.	கலிநிலைத் துறை.
44	பிரஸ்கண்வன்.	அக்கினி.	ப்ரஹதி, ஸ்தோப்ரஹதி.	3ம் சீரும் 6ம் சீரும் காய்ச்சீருள்ள அறுசீர்க் கழி நெடில், எழுசீர்க்கழி நெடில்.
45	,,	அக்கினி.	அநுஷ்டுப்	கலிநிலைத் துறை.
46	,,	அசுவினிகள்.	காயத்ரி.	கலிவிருத்தம்.

4–வது அத்தியாயம்.

47	பிரஸ்கண்வன்	அசுவினிகள்.	ப்ரஹதி, ஸ்தோப்ரஹதி.	சூக்தம் 44 போல.
48	,,	உஷஸ்	,,	,,
49	,,	,,	அநுஷ்டுப்.	கலிநிலைத் துறை.
50	,,	ஸூர்யன்	காயத்ரி. அநுஷ்டுப்.	கலிவிருத்தம். கலிநிலைத் துறை.
51	ஸ்வ்யன்	இந்திரன்.	ஜகதி, திருஷ்டுப்.	4 காய்ச்சீருள்ள அறுசீர்க்கழி நெடில், அறுசீர்க்கழி நெடில்
52	,,	,,	,,	,,
53	,,	,,	,,	,,

முதலஷ்டக அட்டவணை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிச்சந்தம்	தமிழ்செய்.
54	ஸவ்யன்.	இந்திரன்.	ஜகதி. த்ருஷ்டுப்.	4காய்ச்சிரமுசிர், அறுசீர்க்கழி நெடில்.
55			ஜகதி.	4காய்ச்சீருள்ள அறுசீர்க்கழி நெடில்.
56	,,	,,	,,	,,
57	,,	,,	,,	,,
58	நோதர.	அக்கினி.	ஜகதி, த்ருஷ்டுப்.	4காய்ச்சீருள்ள அறுசீர்க்கழி நெடில், அறுசீர்க்கழி நெடில்.
59	,,	வைச்வாநர அக்கினி	த்ருஷ்டுப். ,,	அறுசீர்க்கழி நெடில்.
60	,,	அகனி	,,	,,
61	,,	இந்திரன்.	,,	,,

5–வது அத்தியாயம்.

62	நோதர	இந்திரன்.	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்
63	,,	,,	,,	,,
64	,,	மருத்துக்கள்	ஜகதி, த்ருஷ்டுப்	4காய்ச்சீருள்ள அறுசீர்க்கழி நெடில், அறுசீர்க்கழி நெடில்.
65	பராசரன்.	அக்கினி	துவிபாதவிராஜ்	கொச்சகக் கலிப்பா.
66	,,	,,	,,	,,
67	,,	,,	,,	,,
68	,,	,,	,,	,,
69	,,	,,	,,	,,
70	,,	,,	,,	,,
71	,,	,,	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்.
72	,,	,,	,,	,,
73	,,	,,	,,	,,
74	கோதமன்	,,	காயத்ரி	கலிவிருத்தம்.
75	,,	,,	,,	,,
76	,,	,,	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்
77	,,	,,	,,	,,
78	,,		காயத்ரி	கலிவிருத்தம்

ரிக்வேத வம்மிதை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிச்சந்தம்.	தமிழ்ச்செய்.
79	கோதமன்.	அக்கினி.	த்ருஷ்டுப் உஷ்ணி காயத்ரி	அறுசீர்க்கழி நெடில், கந்த ரதுபூதிச் செய்யுள், கலி விருத்தம்.
80	,,	இந்திரன்	பங்தி	அறுசீர்க்கழி நெடில் ஓரடி மேல் வைப்பு.

6-வது அத்தியாயம்.

81	கோதமன்,	இந்திரன்	பங்தி	அறுசீர்க்கழி நெடில் ஓரடி மேல் வைப்பு.
82	,,	,,	ஜெடி ஜகதி	ஜெடி 4காய்ச்சீருள் ஓர் அறுசீர்க் கழிநெடில்.
83	,,	,,	,,	,,
84	,,	,,	அநுஷ்டுப், உஷ்ணி, பங்தி சாயத்ரி, த்ருஷ்டுப், ப்ரஹதி, ஸதோப்ரஹதி.	கலிநிலைத் துறை, கந்த ரது பூதிக்கலி, அறுசீர் ஓரடி மேல் வைப்பு, கலிவிருத்தம், அறுசீர்க்கழி நெடில், 2காய்ச்சீருள்ள அறுசீர், எழுசீர்க்கழி நெடில்.
85	,,	மருத்துக்கள்.	ஜகதி, த்ருஷ்டுப்.	4காய்ச்சீருள்ள அறுசீர். அறுசீர்க்கழி நெடில்.
86	,,	,,	காயத்ரி	கலிவிருத்தம்
87	,,	,,	ஜகதி	4 காய்ச்சீருள்ள அறுசீர்.
88	,,	,,	ப்ரஸ்தார பங்தி, விராட் ரூபா, த்ருஷ்டுப்.	அறுசீர்க்கழி நெடில் ஓரடி மேல்வைப்பு. அறுசீர்க்கழி நெடில்.

முதலஷ்டக அட்டவணை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிசப்தம்.	தமிழ்செய். யுடி 1 காய்ச்சிருள்ள அறுசோ, அறுசிர்க்கழி நெடில்.
89	கோதமன்.	விச்வதேவர்கள்.	ஜகதி, விராட்ஸ்தானம், த்ருஷ்டுப்.	
90	,,	,,	காயத்ரி அநுஷ்டுப்	கலிவிருத்தம் அறுசிர்க்கழி நெடில் அறுசிர்க்கழி நெடில், கலிவிருத்தம் கந்தாறு பூநிக்கலி.
91	,,	ஸோமன்	த்ருஷ்டுப் காயத்ரி, உஷ்ணி.	
92	,,	உஷஸ் அசுவினிகள்	ஜகதி, த்ருஷ்டுப், உஷ்ணி.	4காய்ச்சிருள்ள அறுசிர் அறுசிர்க்கழிநெடில் கந்தாறு பூநிக்கலி
93	,,	அக்நிஸோமர்	அநுஷ்டுப், காயத்ரி, த்ருஷ்டுப், ஜகதி.	கலிநிலத்துறை, கலிவிருத்தம், அறுசிர்க்கழி நெடில் 4காய்ச்சிருள்ள அறுசிர்.
94	குத்ஸன்	அக்நி. யித்ரன் வருணன் அதிதி, ரோதஸீ.	ஜகதி த்ருஷ்டுப்.	4 காய்ச்சிருள்ள அறுசிர், அறுசிர்க்கழி நெடில்.

7வது அத்தியாயம்.

95	குத்ஸன்	அக்நி	த்ருஷ்டுப்.	அறுசிர்க்கழி நெடில்.
96	,,	,,	,,	,,
97	,,	,,	காயத்ரி	கலிவிருத்தம் அறுசிர்க்கழி நெடில்.
98	,,	,,	த்ருஷ்டுப்	
99	காச்யபன்.	,,	,,	,,
100	வாச்வாஸ்வர்	இந்த்ரன்	,,	,,
101	குத்ஸன்	,,	த்ருஷ்டுப், ஜகதி.	அறுசிர். 4காய்ச்சிருள்ள அறுசிர்.

ரிக்வேத ஸம்ஹிதை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிசந்தஸ்.	தமிழ்ச்செய்.
102	குத்ஸன்.	இந்திரன்	த்ருஷ்டுப், ஜகதி	101 போல.
103	,,	,,	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்.
104	,,	,,	,,	,,
105	குத்ஸனும், த்ருதன் ஆப்தியனும்.	விச்வ தேவர்கள்	பங்க்தி, மஹாப் ரஸ்தாரபங்க்தி, த்ருஷ்டுப்.	அறுசீர்க்கழி நெடில் ஓரடி மேல வைப்பு. 2காய்ச்சீருள் ள அறுசீர் ஓரடிமேல் வைப்பு, அறு சீர்க்கழி நெ டில்.
106	குத்ஸன்.	,,	ஜகதி, த்ருஷ்டுப்	4காய்ச்சீருள் ள அறுசீ அறுசீர்க்கழி நெடில்.
107	,,	,,	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்.
108	,,	இந்திராக் கினிகள்	,,	,,
109	,,	,,	,,	,,
110	,,	ரிபுக்கள்	த்ருஷ்டுப், ஜகதி	அறுசீர். 4காய்ச்சீருள் ள அறுசீர்.
111	,,	,,	,,	,,
112	,,	ரோதஸி, அச்வினிகள், அக்கினி.	,,	,,

8-வது அத்தியாயம்.

113	குத்ஸன்.	உஷஸ், உஷஸாம் இரவும், குத்ஸன்	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்.
114	,,		ஷ ஜகதி	ஷ 4காய்ச்சீருள்ள அறுசீர்.
115	,,	ஸவர்யன்	த்ருஷ்டுப்	அறுசீர்க்கழி நெடில்.
116	கட்டீவான் அச்வினிகள்		,,	,,
117	,,	,,	,,	,,
118	,,	,,	,,	,,

முதலஷ்டக அட்டவணை.

சூக்தம்.	ரிஷி.	தேவதை.	வடமொழிசந்தம்.	தமிழ்ச்செய்.
119	சூர்ஸன்.	அசுவினிகள்.	ஜகதி	4காய்ச்சிருள்ள அறுசர்.
120	,,	,,	(a) காயத்ரி,	(a) கலிவிரு.
			(b) சுகுப், சதுஷ்பாத், உஷ்ணிக், சுருதி,	(b)கந்தாது பூதிக்கலி,
			(c) விஷ்டார பங்க்தி,	(c)ஓராய்ச்சிருள்ள அறுசீர்,
			(d) நஷ்டரூபி,	(d)கலிநிலத்துறை.
			(e) காவிராஜ், விராஜ்.	(e) மூன்றடிச் சாழிஸை அறுசீர்க்கழிநெடில்
121	,,	விச்வதேவர் அல்லது இந்திரன்.	சுருஷ்டுப்	

முக்கிய குறிப்பு. இவ்விடத்து முதல் மண்டலம் முடியவில்லை யென்பதைக் கவனிக்கவும். முதல் மண்டலத்தில் இன்னும் 70 சூக்தங்கள் மிகுந்துள்ளன.

முற்றிற்று.

செந்தமிழ்.

இருக்குவேத சங்கிதை ORIENTAL MANUSCRIPTS இனந்தாச்சிரமத்து ஸ்ரீமத் சிவத்தியாகாநந்த மிஹரிஷியால் தமிழிற் செய்யுளும் வசனமுமாய் மொழிபெயர்த்தியற்றப்பெற்று 1918-ஆம் ஏப்பிரல் மீ 15திலிருந்து சஞ்சிகை ரூபமாக வெளியிடப்பட்டு வருகிறது. இதன் வருடசந்தா ரூபா 6. வேண்டுவோர் வேதபிரசாரசபை, ஆனந்தாச்சிரமம், சூன்னூர் நீலகிரிஜில்லை என்ற விலாசத்திற் கெழுதிப் பெறலாம்.